339

T 9102

சரசுவதி மகால் வெளியீடு எண். 84.

சரபேந்திர வைத்திய முறைகள்

# பேதிமுறைகளும் அதிசார சிகிச்சையும்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

T
9102

விலை ரூ. 60-00

சரசுவதி மகால் வெளியீடு நெ. 84

# சரபேந்திர வைத்திய முறைகள்

(பேதி முறைகளும், அதிஸார சிகித்ஸையும்)

T. 9102

al. 43019
1991

பதிப்பாசிரியர் : —

Dr. S. வெங்கட்டராஜன், L.I.M. (Regd)

(முன்னாள்) ஆயுர்வேத பண்டிதர், சரசுவதி மகால்

இயக்குநர்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

1990

விலை ரூ. 60-00

It is hoped that this publication will be found useful as its predecessors. Dr. S. Venkatarajan, L. I. M. who has already to his credit the editing of a number of volumes in this series has edited this book with an introduction; and our thanks are due to him for valuable services.

We are grateful to the Government of Madras for their timely grants that have helped us to publish this and other valuable manuscripts.

SARASWATHI MAHAL,
Tanjore.
Dated 23—3—1958.

S. GOPALAN,
*Honorary Secretary,*
T.M.S.S.M. Library Committee.

# முன்னுரை

இவ்வெளியீடு 'சரபேந்திர வைத்திய முறைகள்' என்ற பெயரில் தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தாரால் பிர சுரிக்கப்பட்டுள்ள வைத்திய முறைகளடங்கிய நூல்களில் பதின் மூன்றாவதாகும். இத்தொடரில் தஞ்சை மன்னர் சரபோஜி (1798—1832) யால் தனது தன்வந்திரி மஹால் என்னும் வைத் திய ஆராய்ச்சி நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டுக் கைகண்ட தெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட மருந்து முறைகள் அடங்கியிருக் கின்றன. முறைகளைப் பரிசோதிக்க ஓர் ஆஸ்பத்திரி நிறுவப் பட்டு அதில் நோயாளிகளுக்கு அரண்மனை வைத்தியர்களைக் கொண்டு மருந்துமுறைகள் நிச்சயிக்கப்பட்டுக் கொடுக்கப் பட்டன. நோயாளிகளுக்கு அந்த முறைகளால் ஏற்பட்ட குணா குணங்களை ஆங்கில வைத்தியர்களால் முறையாக எழுதப் பட்டுவந்தன. இந்த நோயாளிகளின் குணாகுண விபரச்சீட்டு களைக்கொண்டு கைகண்டதெனத் தெரிந்தெடுக்கப்பட்ட முறை கள் ஜாப்தா செய்யப்பட்டுத் தமிழ் வித்வான்களால் செய்யுளால் இயற்றப்பட்டன. இவ்விதமாகச் சுமார் 5000 முறைகள் சுமார் 25 வருஷங்களில் தெரிந்தெடுக்கப்பட்டுச் செய்யுளாக எழுதப் பட்டு, நோய்களைப் பொறுத்துப் 18 பாகங்களாக்கிச் சுவடிகளில் எழுதப்பட்டு சரஸ்வதி மஹாலில் காப்பாற்றப்பட்டு வருகின் றன. மேல்நாட்டுக் கலைவிஞ்ஞானங்களிலும் நம்நாட்டுக் கலை விஞ்ஞானங்களிலும் ஒருங்கே தேர்ச்சிபெற்ற மன்னர் சர போஜியால் பல வருஷங்கள் பாடுபட்டு பல லக்ஷக்கணக்கான பொருள் செலவில் கைகண்டதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட இம் முறைகளடங்கிய நூல்களுக்கு நமது நூல்நிலையத்தில் நூல் வெளியீடு ஆரம்பிக்கும்போதே முதலிடம் கொடுக்கப்பட்டது. இதுவரையில் இந்தத்தொடரில் 13 புத்தகங்கள் வெளிவந் துள்ளன. அவைகளை வாங்கி அவைகளிலுள்ள முறைகளைக் கையாண்டவர்களிடமிருந்து நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந் திருக்கின்றன. ஒவ்வொரு கடிதத்திலும் அம்முறைகள் ஆச்சரிய மான குணத்தைக் கொடுத்திருக்கின்றன என்று கண்டிருக் கிறது.

இந்த வெளியீட்டில் பேதிமுறைகளும் அதிசாரம் முதலிய வயிற்றுப்போக்குக்கான சிகிச்சை முறைகளும் அடங்கியிருக்

கின்றன. இந்நூல் இதற்கு முன் இத்தொடரில் வெளி வந்துள்ள நூல்களைப் போலவே யாவர்க்கும் உபயோகப்படும் என்று நம்புகிறோம். இந்நூலை சரஸ்வதி மஹால் வைத்திய வெளியீடுகள் பெரும்பாலானவற்றைப் பதிப்பித்துதவிய டாக்டர் S. வெங்கட்டராஜன் L.I.M. அவர்களே பதிப்பித்துள்ளார். அவரது அரிய சேவைக்கு எமது நன்றி உரித்தாகும். நமது சென்னை அரசாங்கத்தார் அன்புடன் உதவிய நிதியைக்கொண்டு இந்த நூலும் ஏனைய அரிய நூல்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு நாங்கள் என்றும் கடமைப் பட்டுள்ளோம்.

சரஸ்வதி மஹால்
தஞ்சாவூர்
23—3—58

S. கோபாலன்
கவுரவ காரியதரிசி.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | |
| 2. | மருந்து வகைகளின் அட்டவணை | i—xvi |
| 3. | சரபேந்திர வைத்ய முறைகள் | 1—382 |
| 4. | மருந்துகளின் அகராதி | 383—398 |

# முகவுரை

ஆயுர்வேத சாஸ்திரத்தில், மலபந்தம் என்பது ஒரு தனியான ரோகமாகக் கூறப்படவில்லை. ஆனாலும் அது ஜ்வரம், மூலம், குன்மம், தலைவலி, வாந்தி, விக்கல், வயிற்றுவலி முதலான பற்பல ரோகங்களுக்கும் காரணமாகின்றது. ஆகவே மலச்சிக்கலைப் போக்குவதற்கு 'விரேசனம்' என்பது ஒரு சிகித்ஸை முறையாகும்.

இது 'பஞ்ச கர்மங்கள்' என்று கூறப்படும் ஸ்நேஹனம் (எண்ணெய், நெய் முதலான கொழுப்பு வஸ்துக்களின் வெளி, உள் பிரயோகங்கள்), ஸ்வேதனம் (வேதுபிடித்தல்), வமனம் (வாந்தி செய்வித்தல்), விரேசனம் (பேதிக்குச் சாப்பிடுதல்), வஸ்தி (எனிமா எடுத்துக்கொள்ளுதல்) என்பதுள் நான்காவதாகும்: பிரகோபித்த பித்தத்தைப் பரிகரிப்பதில விரேசனம் முதன்மையானது. மலத்தை இளக்கும் சரக்குகளையொன்று சேர்த்து, ''விரேசன கணம்'' என்று ஓரே சுலோகத்தில் கூறியிருப்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். விரேசன முறைகள் பலவும் அஷ்டாங்க ஹ்ருதயம் என்னும் நூலில் ''விரேசன கல்பத்தில்'' நன்றாகக் காணப்படுகின்றன.

அவைகளையொத்த பற்பல முறைகள் இந்நூலில் காணப்படுகின்றன. இந்த நூல் சரபேந்திர வைத்ய முறைகள் நெ. சுவடியிலுள்ளபடி வெளியிடப்பட்டது.

இதிலேயே அதிஸார ரோக சிகித்ஸை முறைகளும் சேர்க்கப்பட்டிருப்பதால், அதிஸாரரோக லக்ஷணங்களையும் காரணங்களையும் ஆயுர்வேத முறைப்படி முதலில் ஆராய்வோம்.

## நோய் வரக்காரணம்

கெட்டுப்போன மாம்ஸம், வெந்தும் வேகாததுமான பதார்த்தங்கள், பிண்ணாக்கு, கிழங்கு வகைகள், சீரணமாகாத வஸ்துக்கள், மதுபானம், காரமான வஸ்துக்களையுபயோகித்தல், அதிகத்தீனி, அதிகமாக எண்ணெய்களை உபயோகித்தல், அதிகநடை, வயிற்றில் கிருமி, இருமல், தும்மல், தூக்கம், அபானவாயு முதலான 14 வித வேகங்களையும் அடக்குதல், பேதியாகும் வஸ்துக்

களையடிக்கடியுபயோகித்தல், முதலானவைகளினால் வாயு தேகத்தில் அதிகரித்து, ஸப்த தாதுக்களையும், ஜடராக்னியையும் கெடுத்து மலப்பையில் சேர்ந்து, கெட்டியான மலத்தைச் சல ரூபமாக்கி அபானத்தின் வழியாக வெளியாக்கும்.

இவைகள் 7 வகைப்படும்

1. வாதாதிஸாரம், 2. பித்தாதிஸாரம், 3. கபாதிஸாரம், 4. திரிதோஷாதிஸாரம், 5. பயாதிஸாரம், 6. துக்காதிஸாரம், 7. ரத்தாதிஸாரம்.

## பூர்வரூபம் (ரோக ஆரம்பத்திலேற்படும் குறிகள்)

மார்பு. குதம், வயிறு ஆகிய இடங்களில் வலி, உடம்பு இளைத்தல், மலபந்தம், வயிறு உப்பிசம், அசீர்ணம் முதலான லக்ஷணங்களையுண்டாக்கும்.

## வாதாதிஸாரம்

அபானத்தில் "பற பற" என்று சப்தத்தையுண்டாக்கிப் பேதியாகி, அதிகமாகவும், கொதிப்பாகவும், நுரையோடும் மலம் வெளியாகும். சீதம் விழும். வாய் உலர்தல், மயிர்கூச்சல், அறிவு தடுமாறல், வயிற்றுப்பொருமல், சூலை, அடிவயிற்று வலி, செரித்தும் செரியாமலும் பேதி, கரு நிறத்துடனும், கெட்ட நாற்றத்துடனும் பேதி முதலான குறிகளுண்டாகும்.

## பித்தாதிஸாரம்

மஞ்சள், கருமை, பச்சை நிறமாகப் பேதியாகும். வயிற்று வலி, ஆசனக்கடுப்பு, தாகம், மூர்ச்சை, வியர்வை, எரிச்சல் முதலான குறிகளும் காணும். தேகம் வெளுப்பதால், தலைவலி, வாந்தி முதலானவைகளும் உண்டாகும்.

## கபாதிஸாரம்

மலம் தடித்து எண்ணெய்ப் பசையுடனும், வெண்மையா கவும், மினு மினுப்பாகவும், நிதானமாகவும் பேதியாகும். வயிற்றுவலி குறைந்தும், ஆசனத்தில் பளுவையும் உண்டாக்கும்.

அதிகமான தூக்கம், சோம்பல், அன்னத்தில் வெறுப்பு, மயிர்கூச்சல், கீழ்வயிறு கனமாதல், இருமல், நீரடைப்பு, தும்மல் முதலான குறிகளும் காணும்.

## திரிதோஷாதிஸாரம்

முற்கூறிய எல்லாக் குறிகளும் காணும், தேகத்தில் காங்கை, தொட்டால் குளிர்ச்சி, கை கால் சில்லிட்டுவிடுதல், எல்லோருடனும் புலம்பல், ஓடுதல், விக்கல், ரத்தச்சீதக்கழிச்சல், தூக்கமின்மை, உடம்பு திமிர்த்துப்போதல் முதலான குறிகளும் உண்டாகும்.

## பயாதிஸாரம், துக்காதிஸாரக்குறிகள்

பயத்தாலும், துக்கத்தாலும், பித்தம் அதிகரித்து வாயுவுடன் கூடி மலப்பையைக்கலக்கிப் பித்தாதிஸாரக் குணங்களையுண்டாக்கும். தண்ணீர் போலப் பேதியாகும்.

## ரத்தாதிஸாரக்குறிகள்

பித்தத்தை யதிகரிக்கச் செய்யும் வஸ்துக்களை உபயோகிப்பதால் பித்தம் ஜாஸ்தியாகி ரத்தம் கெட்டு, அபானத்தின் மூலம் மலத்துடன் அது வெளியாகும்.

தாகம், வயிறுநோய், சரீர எரிச்சல், ஆஸனம் வெளிவரல், முதலான குறிகளும் காணும்.

## சாத்ய அதிஸாரம்

பேதி ஒரே நிறத்துடன் இருந்தால் குணமாக்க முடியும், பஞ்சேந்திரியங்களும் கெடாமல் இருத்தல், முகத்தில் தேஜஸ், போசனத்தில் ஆசை, நாக்கு சிவந்து தண்ணீர் ஊறுதல். உள்ளங்கை, உள்ளங்கால் சிவத்தல், சரியான தூக்கம், நாடி நன்றாக நடத்தல், முதலான குறிகளுடன் இருந்தால் அது சாத்யமானது.

## அசாத்யக்குறிகள்

மலத்தில் மாம்ஸத்துண்டுகள், கரி, மை, எண்ணெய், நெய் நிணநீர் முதலானவைகள் போலப் பேதியாதல், மேலும் அதிகச் சிவப்பு, வேதனையுடன் கூடியபேதி, பலநிறமுள்ளபேதி, மூட்டுகளில் வலி, ஆஸனம் வெளித்தள்ளல் முதலான குறிகளுடன் இருந்தாலும் அந்நோய் சிகித்ஸைக்கு வசமாகாது என்று அறியவும்.

# கிரகணி ரோக லக்ஷணங்கள்

## நோய்வரக் காரணங்கள்

அதிஸாரரோகம் நிவ்ருத்தியாகாமலிருந்து, திரிதோஷங்களும் அதிகரித்துச் சீரணிக்காமல் சுபாவ மலமாகவும், சீதங் கலந்த மலமாகவும், செரித்தும் செரியாமலும் பற்பல நிறமுள்ளதாகவும் மலத்தை வெளிப்படுத்தும். சில சமயத்தில் பேதியாகும். இதனைக் "கிரகணி" எனக் கூறுவர்.

## பூர்வ ரூபம்

சாப்பிடும் ஆகாரங்கள் நேரங்கழித்துச் சீரணமடைதல் புளியேப்பம், வாய்நீரூறல், அரோசகம், உதடு உலரல், பிரமை, ஆயாசம், வயிறுபொருமல், வாந்தி, காதிரைச்சல், குடலிரைச்சல் முதலிய குறிகளேற்படும்.

## வாதக்கிராணி

தாடைவற்றுதல், கண்கள் இருண்டுவிடுதல், காதில் இரைச்சல், விலா, தொடை, பிடரி இவ்விடங்களில் வலி, வேண்டாத வஸ்துக்களில் விருப்பம், தாகம், சீரணமடையும்போது வயிறு உப்பிசமாதல், சாப்பிட்டவுடன் ஆயாசம். மார்பிலும் வயிற்றிலும் வலி, ஆசனக்கடுப்பு, வயிற்றுவேதனை, சீதத்துடன் மலம் சிறுகச் சிறுக வெளியாதல்—இருமல், தேகம் வெளுத்துவிடுதல் முதலான குறிகளுண்டாகும்.

## பித்தக்கிராணி

மலம் மஞ்சளும், சிவப்புமாகவும், சலம் சலமாகவும், வெளியாகும். நாற்றத்துடன் புளித்த ஓக்காளம் வருதல், மார்பிலும் தொண்டையிலும் எரிச்சல், ஏப்பம், வாந்தி அரோசகம், வயிறு வலி, நரம்புத்தளர்ச்சி. சீரணமாகாமல் மலம் ஒழுகுதல், உணர்ச்சியின்மை முதலான குறிகளும் காணும்.

## சுபக்கிராணி

வெகுநேரம் கழித்துச் சீரணமடைதல், வாந்தி, முகத்தில் ஏதோ பூசியதைப் போன்ற உணர்ச்சி, உமிழ்நீர் சுரத்தல்

மார்பில் பார உணர்ச்சி, இருமல், பீனஸம், வயிற்றில் பாரம், உடம்பு கிறுகிறுத்தல், மலத்தில் சீதம் விழல் முதலான குறிகளேற்படும்.

## திரிதோஷக்கிராணி

முன்கூறிய எல்லாக்குறிகளும் ஏற்படும்.

## விஷூசிபூர்வரூபம்

வயிற்றில் இரைச்சல், மடைதிறந்ததுபோல் அடிக்கடி சுத்த ஜலம்போல் பேதி, அப்படியே வாந்தி, 3 தோஷங்களும் ஸப்த தாதுக்களும் கெட்டு விடுதல், ரத்தம் கெட்டுத், தண்ணீரைச் சுமக்கும் குழாய்களைப் பித்தமும் வாதமும் வரளச்செய்வதால் தொண்டை வரட்சி, அதிகதாகம், முதலான குறிகளேற்படும். வியர்வை பிசுபிசுப்பாகும். உடலில் எரிச்சல், பல ஹீனத்வனி, உடம்பு சில்லிடுதல், கண்குழிவிழுதல், மூட்டுகள் விட்டுப் போவதைப்போன்ற உணர்ச்சி, வயிற்றில் ஊசிகளைக் கொண்டு குத்துவதைப்போன்ற வலி, மூர்ச்சை, மயக்கம், பூரளல், முதலான லக்ஷணங்களும் பூர்வரூபங்களாகும்.

## வாதவிஷூசி

வயிற்றுப்பொருமல், நடுக்கல், தேகம் மரத்துப்போய்விடுதல், வயிற்று இரைச்சல், தேகம் கறுத்தல், விழி திறந்தபடியிருத்தல், மனக்கலக்கம், வயிற்றுப்புரட்டல் முதலான குறிகளுண்டாகும்.

## பித்தவிஷூசி

சுரம் பேதி, உள்ளெரிச்சல், தாகம், கைகால் மறத்தல் ஊசிகளினால் குத்துவதைப் போன்ற வலி, தேகம் சூம்பிவிடுதல் மூர்ச்சை, வாந்தி, மயக்கம், பிரலாபம் முதலான குறிகளும் உண்டாகும்.

## சுபவிஷூசி

வாந்தி, தண்ணீர் போலப்பேதி, தேகம் கனத்தல், தாள் பிடிப்பு, உமிழ்நீரை அடிக்கடி துப்புதல், கொறுக்குவலி, புரளல் முதலான லக்ஷணங்கள் ஏற்படும்.

# அதிஸார நிதானம்

## யூகிமுனி வைத்ய சிந்தாமணியிலிருந்து

### உற்பத்தி

மிகக்குளிர்ச்சியான பதார்த்தங்களைச் சாப்பிடுதல், பசுமையான காய்கறிகளையதிகமாக உட்கொள்ளல், அதிக காரவஸ்துக்களின் உபயோகம், அதிகமான அழுகை, வழிநடத்தல், பேதி வஸ்துக்களை யடிக்கடி நிதானமின்றி உபயோகித்தல், அதிகச் சாப்பாடு இவைகளினால் அதிஸாரரோகம் உண்டாகும்.

### வாதாதிஸார லஷணங்கள்

வயிற்றுப்பொருமல், வயிறுபேதி, அடிக்கடி வாயுப்பரிதல், சூடாக, நுரையுடன், கறுப்பு நிறமாக மலம் வெளியாதல், அடிவயிற்றில் பிடுங்கல், உடம்புவலி, வாந்தி, மயக்கம் முதலான குறிகளேற்படும்.

### பித்தாதிஸாரக்குணம்

மலம் சிவப்பு நிறமாக வெளியாகும், தாகம், வயிற்றுவலி அழற்சி, வியர்வை, மூர்ச்சை, நாவறளல், மார்வலி, உடம்பெரிச்சல், வலி முதலானவைகளுண்டாகும்.

### கபாதிஸாரக்குணம்

மலம் வெண்மை நிறத்துடனும் நுரையுடனும் வெளியாகும். சீதம் விழும், இருமல், சுவாசம், அடிவயிற்றில் வலி, அரோசகம், கோழைக்கட்டு, தேகம் வெண்ணிறமாதல், மலம் சிக்கி வெளியாதல், முதலான குறிகளேற்படும்.

### தோஷாதிஸாரக்குணம்

தேகத்தில் எரிச்சல், தொட்டால் குளிர்ச்சி, கை, கால்கள் சில்லிட்டு விடுதல், கண்டபேருடன் புலம்புதல், வாந்தி, இருமல், விக்கல், மூச்சுத்திணறல், எல்லோருடனும் சண்டையிடுதல், சீதரத்தம், நித்திரையின்மை, வியர்வை முதலான குறிகளினால் ''தோஷாதி ஸாரம் என்று தெரிந்துகொள்ளவும்.

### அஸாத்யக் குறிகள்

வயிறுபேதி விளக்கெண்ணெய்போலும், மாமிஸம்போலும்' தேன் போலும், பல வர்ணமாகவும், மிகக்கறுப்பாகவும், சிவந்தும், தேங்காய்த் திருகல் போலும், சீரணமாகாமலும் உண்டாகும்.

விக்கல், வியர்வை, உடலில் வீக்கம், சுரமடித்தல், கண்களில் ரத்தமின்மை, கண்களில் சொருகல், காது கேளாமை, முகத்தில் காந்திக்குறைவு, சரீரத்தில் நடுக்கம், ருசியின்மை, நாடி சக்கரம் போல் சுற்றல், சுகம் துக்கம் இரண்டும் தெரியாமை முதலான குறிகளுடன் பேதியுடன் ஏற்படில் அது அசாத்யமாகும்.

## கிரகணி நிதானம்

### யூகிமுனி வைத்யசிந்தாமணியிலிருந்து

### உற்பத்தி

வயிற்றில் மந்தம் இருக்கையில் மாப்பண்டங்கள், தித்திப்புப் பதார்த்தங்கள், மாமிஸப்பதார்த்தங்கள், வேகாத பண்டங்கள், இவைகளை அளவுமீறி உபயோகித்தல், பாவங்களைச் செய்தல், இவைகளுடன் சிவனடியார்கள் செய்யும் கிரிகைகளைக் கலைப் பதனாலும், சிவன், சுப்ரமண்யர், தேவி, விஷ்ணு முதலான தெய்வங்களைப் பூஜை செய்யாததாலும், சிநேகிதர், பந்துக்கள் உறவினர் முதலானவர்களைப் பசியுடன் இருக்கச்செய்து தான் சாப்பிடுவதனாலும் ''கிரகணீ'' ரோகம் உண்டாகின்றது.

### வாதக்கிராணி

நடுவயிறு உப்பிசம், தீராதபசி, உடம்பு உலர்தல், கழிச்சல், மலம் வாயுவினால் சிதறிச் சிறிது சிறிதாக வெளிவரல், வயிற்றில் கட்டி, கறுப்பு நிறமுள்ள பேதி, பழையவெல்லம் போல மலம் விழல் முதலான குறிகளாகும்.

### பித்தக்கிராணி

நடுவயிறு வலி, நானாவிதமாக வயிறுபேதி, அதிகமான உறக்கம், நரம்புத்தளர்ச்சி, ஊன்தண்ணீர் போல் பேதி, தேகத்

தினுள் நடுக்கம், உணர்ச்சி கெடும், தலையில் பேன் ஊறுவதைப் போன்ற உணர்ச்சி முதலான குறிகளேற்படும்.

சிலேத்மக்கிராணி (மாமிசக்கிராணி)

நாற்றத்துடன் வெளுப்பான பேதி, கை கால்களில் தளர்ச்சி, அடிக்கடி காய்ச்சல், கண்களில் சிவப்பு, நாக்கு, மூக்கு இவைகளில் வறட்சி, அசதி, பேதியில் குடல்போல் மாமிசத்துண்டு கற்வீழல், விக்கல் முதலான குறிகளேற்படில் அது ''சிலேத்மக்கிராணி'' யாகும்.

தொந்தக்கிராணி:-

தாபத்துடன் காய்ச்சல், அதிகவேலைசெய்வதைப்போல் வயிறு இரைச்சல், தலைவலி, நடுக்கல், பால்போல் அடிக்கடி மலம் கழிதல்,வாயுப்பறிதல், வயிற்றில் அழற்சியுடன் எரிச்சல், கைகள், கால்கள், புறங்கால் முதலான இடங்களில் வீக்கம் முதலான குறிகளுண்டாகும்.

உஷ்ணவாயுக்கிராணி:-

மலம் இறுகி வயிறு கனத்து உப்பிசமுண்டாகும். சாப்பாடு செரியாது, புளித்தேப்பம் உண்டாகும். வாயில் நீர் சுரக்கும், கைகால்களில் அசதியுடன் உடம்பு கறுத்து இளைக்கும், 3 நாட்கள் கழித்துப் பேதியாகவாரம்பிக்கும்.

அந்திரவாயுக்கிராணி

பத்தியமாக இருந்தபோதிலும் காரணமேதுமில்லாமல் கழிச்சல் உண்டாகும். புளித்தேப்பம் உண்டாகும், வாந்தி, அருசி, தாகம், தளர்ச்சி, விலாப்பக்கவலி, உடல் வெளுத்துப்போதல், விக்கல், சாப்பிட்ட ஆகாரம் செரியாமை முதலான குறிகள் ''அந்திரவாயுக்கிராணி'' லக்ஷணங்களாம்.

மூலவாயுக்கிராணி

வாயுப்புரளல், அடிவயிற்றில் பொருமலுடன் மலம் வறண்டு வெளியாகும். உடம்பு இளைக்கும். மந்தமுண்டாகும். இரைச்சலேற்படும். அடித்தொண்டையில் குத்துவலி, சரீரம் கிழத்தன்மையடைதல், ஆஸனத்தில் மூலம்போன்று முளை தோன்றுதல்.

குன்மக்கிராணி.

தலைகனக்கும், தூக்கம் அதிகரிக்கும், கண்களில் பீளை சாறும், வயிற்றில் குத்துவலியுண்டாகும், வியர்வையதிகரிக்கும் தலையில் நடுக்கம், உடம்பு உளைச்சல், அழற்சி, வயிறு உப்பிசம், வயிறு இரைச்சல் முதலான குறிகளுண்டாகும். வயிற்றின் ஒரு பக்கத்தில் உருண்டையான கட்டியும் உண்டாகும். எனவே இவைகள் குன்மக்கிராணி லக்ஷணங்களாகும்.

கெர்ப்பக் கிராணி (ஸ்திரீகளுக்குப் பிரத்யேகமாக ஏற்படும் வகை)

வயிறு கடுப்புடன் கழிச்சலேற்படும், கைகால் மரத்து விடும், களைத்துப்போம், கண்கள் மஞ்சளாகும், பற்பல நிறமாக கழிச்சலுண்டாகும், தாகமேற்படும், கெர்ப்பம் அதிகரிக்க அதிகரிக்க வாந்தியும், அழற்சியும் உண்டாகும், பிரசவம் ஆன பின்பும் நிற்காது.

ஒட்டுக்கிராணி.

படுக்கையில் படுத்தால் இதமாயிருக்கும், வலிப்பு ஏற்படும், தேகம் இளைக்கும், வயிற்றுவலி அதிகரிக்கும், மார்பு, விலா, முதுகுவலியேற்படும், சிறுகச்சிறுகக் காலணா அளவாக மலம் கழியும். ஒரே தடவையில் மலம் போகாமல் மலம் சிக்கி வெளியாகும். தொப்புளைச்சுற்றிலும் வளையம்போல் சுருட்டி யிழுக்கும்.

சங்கிரக்கிராணி.

உதரப்பொருமலேற்படும், சாதம் செரியாமல் கழிச்சலேற் படும், அபானத்தில் காங்கையதிகரிக்கும், மலம் எப்போதும் ஒழுகும், வியர்வையும், சுரமும் அனத்தலும் உண்டாகும், வாந்தியேற்படும், மனம் வேதனையடையும், மார்பில் கோழை கட்டும். மயக்கத்துடன் கண்கள் இரண்டும் சுழலும்.

வாதாதிஸார லக்ஷணங்கள்.

வயிறு பொருமி வயிற்று வலியுடன் வாயு சேரும். நீர் இறங்காது, சாப்பாடு சீரணித்துப் பேதியாகும். மஞ்சள் நிற

மாகவோ, கறுநிறமாகவோ மலம் இருக்கும், நாற்றமடிக்கும், நெஞ்சில் புளித்தேப்பம் உண்டாகும்.

### பித்தாதிஸாரம்

மலம் மஞ்சள் நிறமாகி வறண்டுவிடும், நுரைத்தும்போகும், வாயு அதிகரித்து, உடல் இளைத்துக் கைகால்கள் வீங்கும். இலேசாகச் சுரமடிக்கும், உடல் வெண்ணிறமடையும். தலை வலி, வாந்தி இவைகளும் உண்டாகும்.

### கபாதிஸாரம்

மலம் நாறும், உடல் வெளுத்து வயிறுவலி ஏற்படும். மாமிசத்துண்டுகள் மலத்துடன் விழும். அருசி, இருமல், சுவாஸம், மயிர்க்கூச்சல், ஆசனக் கடுப்பு, உடம்பு அரிப்பு இவைகளும் ஏற்படும்.

### திரிதோஷாதிஸரம்

தேகத்துள் எரிச்சல், வெளியில் குளிர்ச்சி, விக்கல், வாந்தி, இருமல், ச்வாசம், வயிறு இரைச்சலுடன் பேதி, வயிற்றுப் பொருமல், இரத்த சீதக்கழிச்சல், நித்திரையின்மை, உடல் நடுக்கம், உடல் வலி, உணர்ச்சியின்மை முதலான குறிகளும் காணும்.

### சுராதிஸாரம்

அதிஸாரம், மூர்ச்சை, உளறல், அடித்தொண்டையில்வலி, வயிற்றுவலியுடன் பேதி, வாந்தி, தாகம், தேகக்கடுப்பு, உஷ்ணத்தால் ஓயாத இருமல், பலநிறமான கழிச்சல் இவைக ளேற்படும்.

### சந்நிபாதாதிஸாரம்

இலேசாகச் சுரம் அடிக்கும், சுவாசம், இருமல், விக்கல் முதலானவைகளேற்படும். நாவரட்சி, அழற்சி, கழிச்சல், உடம்பில் மதமதப்பு, வயிறுவலி, அடிக்கடி மயக்கம், உடம்பு குளிர்ச்சி முதலான குறிகளேற்படும்.

## தோஷாதிஸாரம்

உட்கொள்ளப்படும் தண்ணீர் வயிறு சேர்ந்தவுடன் தண்ணீர் நரம்புகளில் சேர்ந்து அதையழுகப்பண்ணி அபான வாயுவுடன் கூடச்சேர்ந்து மலப்பையில் சேர்ந்து சாப்பிட்ட ஆகாரத்தைச் சீரணிக்காமல் வயிறு இரைந்து நாற்றத்துடன் கழிச்சலேற்படும்.

## விதூமாசீர்ணம்

சாப்பிட்ட ஆகாரம் வாந்தியாகும், புளித்தேப்பம் உண்டாகும். வயிறு உப்பிசம், பேதி, வயிறு இரைச்சல் முதலானவைகளும் காணும். முகம் கறுக்கும், உடல் வாடும், மயக்கம், புத்திமயக்கம், அதிக தாகம் முதலான குறிகளுண்டாகும்.

## தூமாசிர்ணம்

சாப்பிட்ட ஆகாரம் குடலில் தங்காமல் வாந்தியாகும். ஏப்பம், வாயில் எரிச்சல், உதட்டை நாக்கினால் அடிக்கடி தடவுதல், கைகால்கள், உடல் முதலான இடங்களில் எரிச்சல், கழுத்தில் அதிக வியர்வை முதலான குறிகளுண்டாகும். உடம்பு இளைக்கும், அல்லித்தண்டைப்போல் உடல் குளிர்ச்சியாகும்.

## விஸ்போடாசீர்ணம்

குளிர்ச்சி, தலைசுற்றல், கோழை வெளிவறல் முதலான குறிகள் காணும், உடம்பு வெண்ணிறமடையும், கண்கள் கீழ் நோக்கிய பார்வையாகும், வெண்ணிற வாந்தியுண்டாகும். பசியெடுக்கும், நுரைநுரையாகப் பேதியாகும், இருமலுடன் சுவாசம் உண்டாகும், தலைச்சுற்றலுண்டாகும், வைத்யத்திற்கு வசப்படாது.

## இரஸசேஷாசீர்ணம்

சாப்பாடு பிடிக்காமல் வாந்தி, மயக்கம், மூர்ச்சை இவைகளுடன் நாக்கு கறுநிறத்தையடையும், கண்களும், மூக்கும் கறுத்து விடும், உடல் கறுத்து வற்றிவிடும், உணவு உட்செல்லாது, தண்ணீர் அதிகமாகப் பருகுவான், வெளுப்பும் கறுப்புமான பேதி, கண்களும் தலையும் சுழலும், உதறல் எடுக்கும்.

### வாதவிஷூசி

காலையில் பேதி உண்டாகி வாதநாடியதிகரிக்கும், வயிறு இரைந்து ஊதும், மேனி கறுநிறமாகும், கண்கள், (விழிகள்) திறந்திருக்கும், மனது தடுமாறும். இலேசாக சுரம் அடிக்கும், குடல் குமுறிப் புரட்டலாகும்.

### பித்த விஷூசி

பகலில் பித்த நாடியதிகரிக்கும், உடல் பலஹீனமாதல், மூர்ச்சை, விக்கல் முதலான குறிகளும் உண்டாகும். உடலில் நிறம் குன்றாது, வாய் பிதற்றும், வாந்தியுண்டாகும், மயக்க மேற்படும், ஓரிடத்தில் நிலைகொள்ளாமல் புரளுவான் அல்லது பிணம் போல் கிடப்பான்.

### கபவிஷூசி

நாடியடங்கிக் காணும், இரவில் இரண்டு சாமம் நாபிக்குள் உயிர் அடங்கும், கண்விழி மேல் நோக்கிப் பின்னர்த் தாழும், இடைவிடாமல் மோர்த்தண்ணீர் போலப்பேதியாகும், தேகம் வெளுப்பாகும்.

### சாத்யமானவைகள்

வாதக்கிராணி, பித்தக்கிராணி, உஷ்ணவாயுக்கிராணி, அந்திர வாயுக்கிராணி, மூலவாயுக்கிராணி, கெர்ப்பக்கிராணி, ஒட்டுக் கிராணி, பித்தாதிஸாரம், சுராதிஸாரம், விதூமாசீர்ணம், தூமா சீர்ணம் என்பவை.

### அசாத்யமானவைகள்

சிலேத்மக்கிராணி, குன்மக்கிராணி, தொந்தக்கிராணி, சங்கிரக்கிராணி, வாதசிலேத்மாதிஸாரம், திரிதோஷாதிஸாரம், சந்நிபாதாதிஸாரம், தோஷாதிஸாரம், விஸ்போடாசீர்ணம், இரஸசேஷாசீர்ணம், வாதவிஷூசி, பித்தவிஷூசி, கபவிஷூசி, முதலானவை.

# சரபேந்திர வைத்ய முறைகளில்

# காணப்படும் மருந்து வகைகளின்

# அட்டவணை

---

சூரண வகைகள்


1. அதிவிடையாதிச் சூரணம் (கடுப்புக் காய்ச்சலுக்கு) 265
2. (அதிமதுராச்) சூரணம், (சேத்தும வதிஸாரம், பித்தாதிஸாரம், வாதாதிஸாரம், அசீர்ணவதி ஸாரம் முதலியவைகளுக்கு) 359
3. அரளுவாதிச் சூரணம் (அதிஸாரம், கிராணிக்கு) 325
4. அவிபத்திச் சூரணம் (விரேசனத்திற்கு) 197
5. அஷ்ட சூரணம் (கிராணி, குன்மம், பொருமல், களைப்பு, சூலை, சோபத்திற்கு) 130
6. (ஆடுதீண்டாப் பாளையுப்புச்) சூரணம் (கிராணி, குன்மம் வாயுவிற்கு) 168
7. (ஆவாரையிலைச்) சூரணம். (சலக் கழிச்சலுக்கு) 236
8. இந்துப்பாதிச் சூரணம் (கிராணி, அதிஸாரத்திற்கு) 324
9. இந்துப்புச் சூரணம் (உறுப்பிற்கு) 381
10. (இலவம் பிசினிச்) சூரணம் (மூலக்கடுப்பு, வரைக் கடுப்பிற்கு) 295
11. (உப்புச்) சூரணம். (வயிற்றெரிவிற்கும், உளைப் பிற்கும்) 301
12. (ஊமத்தை ஓமச்) சூரணம் (கிருமிக்கு) 71
13. (ஏலாதிச்) சூரணம் (பேதிக்கு) 43
14. ஏலாதிச் சூரணம் (திரிகுணவாயு, மயக்கம், பித்தம், படபடப்பு, தாகம், நாவறட்சி முதலியவை களுக்கு) 349
15. கங்காதரச் சூரணம் (அதிஸாரம், கிராணிக்கு) 98
16. கடுகரோகிணிச் சூரணம் (விரேசனத்திற்கு) 2
17. கடுத்ரய சூரணம் (விரேசனத்திற்கு) 52
18. (கடுக்காய்ச் சூரணம்) (குடல், கிராணி, வாயுவிற்கு) 115

19. (கடுக்காய்ச்) சூரணம் (வயிறுகடுப்பிற்கு) 296
20. கந்தகச் சூரணம் (கிராணிக்கு) 72
21. (கருவேப்பிலைச்) சூரணம் (வாயுவினால் அதிசாரக் கழிச்சலுக்கு) 245
22. (கழற்சிப் பருப்புச்) சூரணம். (பேதிக்கு) 48
23. (கள்ளிப்பால்) சூரணம் (முதலியன) (கிருமிகள் விழ) 63
24. (காட்டுக் கருணைச்) சூரணம். (மூலக் கிராணிக்கு) 151
25. (குடஜாதி) சூரணம், (அதிஸாரம், கிராணிக்கு) 138
26. (கொத்து மல்லியாதிச்) சூரணம், (அதிஸாரக் கடுப்பிற்கு) 316
27. (சகஸ்ரபேதிச்) சூரணம். (ரத்தபித்தத்திற்கு) 140
28. சங்கம் வேர்ச் சூரணம். (சீதக்கழிச்சலுக்கு) 260
29. சாதிக்காயாதிச் சூரணம். (ஸர்வ கிராணிக்கும்) 203
30. (சாதீபலாதிச்) சூரணம். (கிராணி, வெள்ளுடைப் பாய் கழிச்சலுக்கு) 174
31. (சிவதைச் சூரணம்.) (பேதிக்கு) 26
32. (சிவதைச்) சூரணம் (வயிறு கழிய, வாயுவிற்கு) 55
33. சித்தாமுட்டி வேர்ச் சூரணம் (அதிஸாரத்திற்கு) 317
34. சிறு குறட்டைச் சூரணம் (குளிர்ந்த நீர்ப்பேதி) 40
35. சீரகாதி மருந்து (அதிஸாரம், கிராணி. விஷூசிக்கு) 354
36. (சீரகாதித்) தூள் (வயிறு கழிச்சலுக்கு) 204
37. (சீரகாதி) சூரணம் (கடுப்புக் கழிச்சலுக்கு) 265
38. சுக்காதி மருந்து (வயிறு கடுப்பிற்கு) 289
39. (சுண்ட்யாதிச்) சூரணம். (பேதிக்கு) 12
40. (சுண்ட்யாதி) சூரணம் (வாயு, கிராணிக்கு) 171
41. (செங்கல்தூள்) மருந்து, (வயிறு கடுப்பு, கழிச்சலுக்கு) 298
42. (சைந்த வாதி) சூரணம். (வயிறு கழிச்சலுக்கு) 275
43. (சைந்தவாதி) சூரணம் (கிராணி, குன்மம், வயிறு கடுப்பு, சோபம், சூலை, அதிஸாரத்திற்கு) 144
44. சைந்தவாதிச் சூரணம் (அதிஸாரம், அசீர்ண பேதிக்கு) 351
45. (தாடிமாதி) சூரணம். (கிராணி, அதிஸாரத்திற்கு) 201
46. (தாடிமாதி) சூரணம் (கிராணிக்கழிச்சல், கிராணிக் கழிச்சலுடன் கூடிய ஜ்வரம் முதலியவைகளுக்கு) 191

47. திப்பிலி மூலாதி சூரணம் (சுகபேதிக்கு) 19
48. (திப்பில்யாதி) சூரணம் (இரத்தக் கிராணிக்கு) 166
49. திரிகடாதிச் சூரணம் (வேறு) 26
50. திருகடுகாதிச் சூரணம். (பற்பல கிராணிகள் தீர) 172
51. திருகுகள்ளிச் சூரணம் (பேதிக்கு) 38
52. (தென்னம் பாளைச்) சூரணம் (சலக்கழிச்சலுக்கு) 236
53. (நெல்லிமுள்ளியாதிச்) சூரணம் (கிராணி, இரத்தக் கடுப்பு, இரத்தக் கழிச்சலுக்கு மருந்து) 225
54. (நெல்லிமுள்ளி) மருந்து (வயிறு கடுப்பிற்கு) 289
55. (பிராய் வேராதிச்) சூரணம் (வயிற்றுக் கிருமி விழ) 68
56. (பிரண்டைச்) சூரணம் (கிராணிக்கு) 158
57. பிரண்டைச் சூரணம் (கிராணிகள், குன்மம், வாயு விற்கு) 170
58. (பெருமரப்பட்டையாதிச்) சூரணம். (கிராணிக்கு) 78
59. பெருங்காயச் சூரணம். (மகோதரம், குன்மவாயு விழுசிக்கு) 365
60. (பேராமுட்டிப் புண்ணாக்குச்) சூரணம் (சலக்கழிச் சலுக்கு) 234
61. மணி மந்தாதிச் சூரணம் (விரேசனத்திற்கு) 49
62. மாதுலுங்காதிச் சூரணம் (அதிஸாரத்திற்கு) 346
63. (மிளகு) மருந்து (வயிறு கடுப்பிற்கு) 273
64. (மிளகுச்) சூரணம் (கிராணிக் கடுப்பிற்கு) 285
65. (முஸ்தாதிச்) சூரணம் (பித்த அதிஸாரத்திற்கு) 340
66. (முஸ்தாதிச்) சூரணம் (வாத, பித்த, கபக்கிராணிகள், ஆமக்கிராணிகள் முதலானவைகளுக்கு) 73
67. (வசுவாசிச்) சூரணம் (இரத்தக்கழிச்சலுக்கு) 224
68. வத்ஸாதிச் சூரணம் (அதிஸாரம், இரத்தாதிஸாரம். ஆமாதிஸாரத்திற்கு) 326
69. (விடத்தேரிலைச்) மூரணம் (வயிறு கழிச்சலுக்கும், வெள்ளுடைப்புக் கழிச்சலுக்கும்) 310

## கல்கவகைகள்

1. (அத்திப்பிஞ்சுக்) கல்கம் (வயிறு கடுப்பு, கழிச் சலுக்கு) 282
2. அழிஞ்சில் வேர்க் கல்கம் (வயிறு கடுத்து இரத்தம் விழுகிறதற்கு) 304

3. (ஆமையோடு பானா) மருந்து (வயிறு கடுப்பிற்கு) 274

4. (ஆவாரை விரை) மருந்து (வயிறு கழிச்சலுக்கு) 215

5. (ஆவாரை வேர்க்) கல்கம் (வயிறு கழிச்சலுக்கு) 218

6. (இம்புரா வேர்க்) கல்கம் (இரத்தக் கழிச்சலுக்கு) 219

7. (இலந்தைப்பட்டைக்) கல்கம் (இரத்தக் கழிச்சலுக்கு) 207

8. (உப்பிலாங் கொடிக்) கல்கம் (சலக்கழிச்சலுக்கு) 238

9. கடுக்காய் மருந்து (சுவாசகாசம், கிராணி, மூலம், பாண்டு, ஜ்வரம், குன்மம், அருசி, பீலிகை, சூலை, பீனஸம், சூசிகவாயு, அக்கினி மந்தம், உளைவு, புளித்தேப்பம், உதரசல்லியப் பிரமேகம் முதலானவைகளுக்கு) 141

10. (கருவேலங் கொழுந்து) கல்கம் (வயிறு கடுப்பிற்கு) 277

11. (கிலுகிலுப்பைக்) கல்கம் (இரத்தக் கழிச்சலுக்கு) 219

12. (குங்கிலிய) மருந்து (வாயு, வெள்ளுடைப்புக் கழிச்சல் முதலியவைகளுக்கு) 247

13. கோமூத்ர அரீதகீ (விரேசனத்திற்கு) 52

14. (சங்கம் வேர்க்) கல்கம் (கழிச்சலுக்கு) 199

15. (சத்துலன் வேர்க்) கல்கம் (வயிறு கழிச்சலுக்கு) 209

16. (சீரகாதிக்) கல்கம் (விஷூசிக்கு) 362

17. (சீரக) மருந்து (வயிறு கழிச்சலுக்கு) 215

18. சீரகக் கற்கம் (வயிறு கடுப்பிற்கு) 288

19. (சுக்குக்) கல்கம் (சீதம், இரத்தக் கடுப்பு, வயிற்று வலிக்கு) 58

20. (சுக்காதி) மருந்து (வயிறு கடுப்பு, வெள்ளுடைப் பிற்கு) 311

21. (சுக்குக்) கல்கம் (சலக்கழிச்சல், மலக்கழிச்சலுக்கு) 208

22. (சூளுவைக்) கல்கம் (வயிறு கழிச்சலுக்கு) 187

23. செங்கழுநீர்க்) கல்கம் (வயிறு கடுப்பிற்கு) 301

24. (செந்நாயுருவி) மருந்து (வயிறு கழிச்சலுக்கு) 225

25. (துளசிக்) கல்கம் (கழிச்சலுக்கு) 206

26. (நீர்ப்பூலா வேர்க்) கல்கம் (இரத்தக் கடுப்பு, முதலான வயிறு நோய்க்கு) 307

27. (நெருஞ்சிக்காய்க்) கல்கம் வயிற்றிலிருக்கும் புழுவிழ) 66

28. (புரசம் விதைக்) கல்கம் (புழுவிழ) 64

29. புளிச்சைக் கொடிக் கல்கம் (இரத்தக் கழிச்சலுக்கு) 220
30. (புளிநரளையாதிக்) கல்கம், (வயிறு கடுப்பிற்கு) 294
31. (பெருமரப்பட்டை) மருந்து (கிராணி, வெள்ளுடைப் புக் கழிச்சலுக்கு) 158
32. (பேய்ப்பாச்சோத்தி) மருந்து (மூலக்கிராணிக்கு வலம் விடாத பேர்களுக்கு) 146
33. (மாம்பட்டைக்) கல்கம் (இரத்தக் கழிச்சலுக்கு) 206
34. (மாம்பிசினி) மருந்து (வயிறு கடுப்பிற்கு) 290
35. (மான் கொம்பு) மருந்து (18 கிராணிக்கும்) 151
36. (மூக்கரட்டைக்) கல்கம் (விழுசிக்குமேல் ஜ்வரத் திற்கு) 362
37. (விடத்தேரிலைக்) கல்கம் (வயிறு களகளப்பு, இரத் தம் சீதத்திற்கு) 303
38. (வெற்றிலைக் காம்பு) மருந்து (கர்ப்பப் புழுவிழ) 65
39. (வெள்ளைக் காக்கணக்) கல்கம் (பேதிக்கு) 46
40. (வெள்வேலம் பட்டைக்) கல்கம் (வயிறு கடுப்பிற்கு) 251
41. (வேப்பம் பட்டை) மருந்து (கிராணிக் கழிச்சல், வயிறு நோய்க்கு) 153
42. வேலம்பட்டை மருந்து (சகலவித அதிஸாரத்திற்கும்) 335
43. வேளைக் கல்கம் (இரத்தம் விழுகிறதற்கும், வயிற் றின் வியாதிகளுக்கும்) 376

மாத்திரை (இரஸௌஷதங்கள்).

1. (அதிமதுரக் கபாட) மாத்திரை (வயிறு கடுப்பிற்கு) 278
2. ஆனந்த பயிரவ ரஸம் (7 நாட்கள் சென்ற ஜ்வரத் திற்கும், அதிஸாரத்திற்கும், ஜ்வராதி ஸாரத் திற்கும்) 354
3. இச்சாபேதி குளிகை (தண்ணீரில் விரேசனம்) 35
4. இச்சாபேதி (விரேசனத்திற்கு) வேறு 40
5. (இரஸாதி மாத்திரை) (விரேசனத்திற்கு) 11
6. (இரஸாதி) குளிகை (விரேசனத்திற்கு) 36
7. (இரஸாதி) மாத்திரை (கிராணிக்கு) 116
8. (இரஸாதி) மாத்திரை (திரிசுரத்திற்கு) 189
9. (இலிங்க) மாத்திரை (பேதிக்கு) 31
10. (இலுப்பைப்பூ) மாத்திரை (பேதிக்கு) 44
11. இலுப்பைப்பூ மாத்திரை (விரேசனத்திற்கு) 67

12. உன்மந்தாதி உருண்டை (ஆனந்த பயிரவன்) கிராணிக்கு 301
13. கிரகணீ கபாட மாத்திரை (கிராணிக் கழிச்சல், இரத்த பித்தக் கழிச்சலுக்கு) 103
14. கோடி சூழி மாத்திரை, (சங்கரக் கிராணிக்கு) 107
15. (சாதிலிங்காதி) உருண்டை (வயிறு கழிச்சலுக்கு) 221
16. சாதிலிங்க மாத்திரை (வயிறு கடுப்பிற்கு) 292
17. சாதிலிங்க மாத்திரை (சகல கிராணிக்கும்) 76
18. சிந்தாமணி (பேதிக்கு) 23
19. (தாளக) உருண்டை (அன்னம் செரியாமலுக்கும், வயிற்றுப் பொருமலுக்கும்) 376
20. பேதி கஜாங்குசம் (விரேசனத்திற்கு) 21
21. பேதிஜ்வராங்குசம் (மகோதரம், குன்மவாயு, விழுசிக்கு) 34
22. மேகநாத குளிகை (விரேசனத்திற்கு) 32
23. (வாள் அரிதாரக்) குளிகை (விரேசனத்திற்கு) 45
24. வாளரஸாதி மாத்திரை (குளிர்ந்த நீரில் விரேசனம்) 42
25. (வாளரஸக்) குளிகை (விரேசனத்திற்கு) 44
26. (வாள நாபி) மாத்திரை (பேதிக்கு) 20
27. (வாளலிங்க) மாத்திரை (பேதிக்கு) 42

கஷாய வகைகளும் (கறுக்கு வகைகள்)

1. அதிமதுரக் கடாயம் (பித்த அதிஸாரம், உழலை, தாபம், சந்நிபாதம், பயித்தியம், பிரமம் இவற்றிற்கு) 345
2. (அத்திப்பட்டைத்) தயிர் கஷாயம் (வயிறு கழிச்சல், கடுப்பு, இரத்தக் கழிச்சலுக்கு) 223
3. (அத்தியிலைக்) கஷாயம் (அதிஸாரக் கழிச்சலுக்கு) 319
4. அம்மான்பச்சரிசிக் கஷாயம் (வைசூரிமேல் வந்த கடுப்பிற்கு) 315
5. அர்க்காதி கஷாயம் (வயிறு கழிச்சலுக்கு) 50
6. அவுரியிலைக்கறுக்குக் கஷாயம் (தபனம், தாகம், ஜ்வரம். வயிறு உப்பிசம், கழிச்சலுக்கு) 267
7. ஆத்திப்பூ கடாயம் (செரியாமல் கழிச்சலுக்கு) 354
8. (ஆவாரை) ஊறல் (சலக்கழிச்சலுக்கு) 237
9. (ஆவாரைக்) குடிநீர் (வாயுவினால் செரியாமலுக்கு) 374

10. இந்துப்பாதிக் குடிநீர் (விழுசிக்கு) 361
11. (உசீராதிக்) குடிநீர் (அதிஸாரத்திற்கு) 321
12. (உதும்பரக்) கஷாயம் (இரத்த பித்தத்திற்கு) 141
13. உத்தாமணிக் கறுக்கு (படுவன்மேல் விழுசிக்கு) 366
14. (கடுக்காய்க்) குடிநீர் (பேதிக்கு) 12
15. கடுக்காய்ச் சீயக்காய்க் கஷாயம் (மலசலக் கட்டிற்கு) 57
16. (கடுக்காய் மோர்க்) கஷாயம் (வயிறு கழிச்சலுக்கு) 209
17. (கருவேலங்துச்சிக் கடுக்காய்க்) கஷாயம் (பெரு வயிறுக்கு) 257
18. (காட்டு நன்னாரி வேர்க்) கஷாயமும் பூச்சு மருந்தும் (கழிச்சலுக்கு) 211
19. (காய் வேளையாதிக்) கறுக்கு (வயிறு பொருமலுக்கு) 368
20. கிராணிகுல கடாயம் 100
21. (குட்டி விளாக்) கஷாயம் (ஜ்வரத்தில் தாகம், வயிறு உப்பிசம், கழிச்சலுக்கு) 269
22. கூவிளை வேராதிக் கடாயம் (தோஷ வதிஸாரத்திற்கு) 337
23. (கொட்டைப் பாக்குக்) கஷாயம் (பேதிக்கு) 54
24. (கொத்தமல்லியாதிக்) கஷாயம் (ரத்த சீதக் கடுப்பிற்கு) 302
25. கொத்தமல்லியாதிக் குடிநீர் (இரத்த அதிஸாரத்திற்கு) 356
26. (கொத்தமல்லி விதைக்) கஷாயம் (கழிச்சல், வாந்தி, பித்தத்திற்கு) 249
27. சந்தனாதி கஷாயம் (பித்த வதிசாரக் குறிகளுடன்) 343
28. (சாதிப்பத்திரி மோர்க்) கஷாயம் (வயிறு கடுப்பு, பித்தக்கடுப்பு, மேகக்கடுப்புக்கு) 291
29. சாதிப்பத்திரிக் குடிநீர் (ஜ்வராதி ஸாரத்திற்கு) 338
30. (சாதீபலாதி) கஷாயம் (பித்தக்கிராணி, கபக்கிராணி, வாதக்கிராணி, பழங்கிராணி, அதிஸாரத்திற்கு) 72
31. (சிறு அம்மான் பச்சரிசியாதிக்) குடிநீர் (அதிஸாரத்திற்கு) 355
32. சீந்தில் கொடிக் குடிநீர் (ஜ்வராதிஸாரத்திற்கு) 338
33. (சீந்திற்றண்டுக்) கடாயம் (ஜன்னி, ஜ்வரக் கழிச்சலுக்கு) 357
34. (சீரக மோர்க்) கடாயம் (கழிச்சலுக்கு) 197
35. (சுக்காதிக்) கடாயம் (அதிஸாரம், கிராணிக்கு) 360
36. (சுக்காதிக்) குடிநீர் (பித்தவதிஸாரத்திற்கு) 339

37. (சுக்காதிக்) கட்டாயம் பித்தவதிஸார (ஜ்வரத்திற்கு) 343
38. (சுண்ட்யாதிக்) கழுநீர் (பேதிக்கு) 32
39. (சுண்ட்யாதிக்) குடிநீர் (கழிச்சலுக்கு) 208
40. (சேவல் எச்ச இளநீர்க்) கஷாயம் (மலசலக்கட்டுவிட) 57
41. (தாடிமாதி) கஷாயம் (சேத்தும ஜ்வரத்தின்மேல் பேதிக்கு) 352
42. (நறுவலிப்பட்டைக்) கஷாயம் (அதிஸாரத்திற்கு) 320
43. நன்னாரிகோரைக் கஷாயம் (அதிஸாரத்தின் கழிச்சலுக்கு) 272
44. நிர்குண்டிக் கஷாயம் (ஆபத்திற்கு) 56
45. (நிலக்குமிழ்) சீத கஷாயம் (இரத்தம் விழுகிறதற்கு) 381
46. நீலியாதிக் கடாயம் (அன்னஞ் செரியாமை, வயிறு இரைச்சல், பொருமல், ஜ்வரம், அஜீர்ணத்திற்கு) 368
47. (நெல்லிப்பருப்பாதிக்) கஷாயம் (பித்த அதிஸார ஜ்வரத்திற்கு) 342
48. பிரமியவழுக்கைக் கஷாயம் (விரேசனத்திற்கு) 25
49. மாதளை மொட்டாதிக் கஷாயம் (அதிஸாரத்திற்கு) 335
50. மாவீர்க்காதிக் கடாயம் (பித்த அதிஸாரத்திற்கு) 341
51. முத்தக்காசுக் கஷாயம் (அதிஸாரத்திற்கு) 334
52. (முருங்கையீர்க்குக்) கஷாயம் (மலசலக்கட்டிற்கு) 60
53. (முருங்கையீர்க்குக்) கஷாயம் (செரியாமல், சோறு சோறாய்ப் போதல், வாயு, இரைச்சல் பொருமல், கழிச்சலுக்கு) 242
54. முருங்கைப் பட்டைக் குடிநீர் (அதிஸாரத்தின்மேல் வயிற்று வலிக்குக் கஷாயம்) 358
55. (முருங்கைப்பட்டைக் கஷாயம் படுவன்மேல் விழுசிக்கு) 366
56. (முஸ்தாதிக்) கஷாயம் (இரத்த பித்தங்களுக்கு) 139
57. (முஸ்தாதிக்) கஷாயம் (பித்த அதிஸாரத்திற்கு) 346
58. (முள்ளிலவு) கஷாயமும் சூரணமும் (வயிறு கடுப்பினால் இரத்தமும் சீதமும், வெள்ளுடைப்பாகவும் கழிவதற்கு) 269
59. (வளையலுப்புக்) கரைசல் முதலியன 62
60. வில்வாதி கஷாயம் (விஷூசிக்கு) 363
61. (வில்வாதி) கஷாயம் (ஜ்வராதிஸாரத்திற்கு) 165

62. (வில்வ அத்திப்பிஞ்சு) க் கஷாயம் (அதிஸாரத்தால், கிராணியால், மலம் பெருகி, வாயு தடுக்காய், நறுகண் குழிந்து, பல் உடல் தளர்ந்து (கைகால் குளிர்ந்ததாக ஆன சோபக்கழிச்சலுக்கு) 271

63. (வெந்தய)க் கஷாயம் (வாயுவினால், வெள்ளுடைப் பாய், அரைத்த சோறுபோல் வயிறு கழிகிறதற்கு) 244

64. (வெந்தயக்) கறுக்கு (தாகம், ஜ்வரம், வயிறு உப்பிசம், கழிச்சல் இவைகளுக்கு) 268

## ஆகார வகைகள்:

1. அதிமதுரப்பிட்டு (வயிறு கடுப்பிற்கு) 272

2. (ஆவாரைப்) புட்டவியல் (கழிச்சலுக்கு) 200

3. (ஆவாரையரிசிக்) களி (சலக்கழிச்சலுக்கு) 227

4. (ஆவாரம்) பிட்டு (சலக்கழிச்சலுக்கு) 239

5. (ஈரவெங்காய) வதக்கல் (வயிறு கழிச்சலுக்கு) 214

6. (ஈரவெங்காய) வதக்கல் (கிராணி, அதிஸாரம் பலவித கழிச்சலுக்கு) 194

7. (ஓம) வடை (வயிறு கழிச்சலுக்கு) 249

8. (குக்குலொட்டியிலை) அடை (வயிறு கடுப்பு, இரத்தத் திற்கு) 305

9. குறுவைக்களி (சலக்கழிச்சலுக்கு) 226

10. (கோழி முட்டை) மருந்து (கழிச்சலுக்கு) 198

11. (கோரைக் கிழங்குப்) பிட்டு (இரத்தக் கழிச்சலுக்கு) 276

12. சத்திச்சாரணையாதி வடை (செரியாமல் கழிச்சலுக்கு) 372

13. (சிவப்புக் குன்றித்தூள்) பஞ்சாமிர்தம் (வயிறு கழிச் சலுக்கு) 217

14. (சிறு கறுக்காயிலைக்) களி (வயிறு கடுப்பாய், வெள்ளு டைப்பாய்க் கழிகிறதற்கு) 308

15. (சீரகக்) களி (வயிறு கடுப்பு, கழிச்சலுக்கு) 282

16. (சுக்கு) வடை (வயிறு கடுப்பு, கழிச்சலுக்கு) 297

17. (தூதுவேளைச்) சாதம் (திருமேனிப் புழு விழ) 66

18. (நறுந்தாளியிலைக்) களி (வயிறு கடுப்பு,) வெள்ளுடைப் பிற்கு) 310

19. நாரத்தை வளையம் (கிராணிக்கு) 126

20. (பிரண்டை) அடை (மூலக்கிராணிக்கு) 150

21. பிலாவடை (கிராணிக்கு) 113

22. (பூண்டுக்)களி (பெரு வயிறுக்கு) 254

23. (பெருமரப்பட்டைப்) பிட்டும் (கிராணிக்கு) 114

24. (மாதளையிலைத்) தயிர் (உஷ்ணவாயு, வாயு, வயிறி ரைந்து, கழிகிறதற்கு மருந்து) 258
25. (மாதளைப்) புட்டவியல் (வயிறு கடுப்பிற்கு) 274
26. (மிளகுச்) சாதம் வயிறு கடுப்பிற்கு) 280
27. (மிளகுச்) சாதம் (வயிறு கடுப்பிற்கு) 286
28. வாழைப்பூப் புட்டவியல் (இரத்தக், கழிச்சல், மலக் கழிச்சல், அன்னமுண்ணாமல் தண்ணீர் தாகம், நெஞ்சடைப்பிற்கு) 319
29. (விடத்தேரிப்) பிட்டு (கடுப்பு, கழிச்சலுக்கு) 264

## கடுகு வகைகள்:

1. (அகத்தியிலை)க் கடுகு (வாயுக்கழிச்சலுக்கு) 261
2. இலைக்கள்ளிக் கடுகு (பெருவயிறு, அகுவைக்கு) 255
3. (ஈரவெங்காயக்) கடுகு (குன்மம், பொருமல், வயிற்று வலி, வாயுவினால் வயிறு இரைச்சல், முதலியவை களுக்கு) 370
4. (சத்திச்சாறணைக்) கடுகு (அன்னம் செரியாமை, வயிறு இரைச்சலுக்கு) 371
5. (சுக்காதிக் கடுகு (உதர தோஷத்திற்கு) 369
6. தயிர்க் கடுகு (சகல கிராணிக்கும்) 74
7. நுணாக்காய்க் கடுகு கிராணிக்கு 110
8. (வாழைப்பழக்) கடுகு (சலப்பிளவை, சலக்கழிச்சல், நீர், பிணநாற்றம் ஈயெறும்பு மொய்த்தல்) சுண் ணாம்பு நீர் போலிறங்கல் முதலியவைகளுக்கு) 228

## குழம்பு வகைகள்:

1. (அத்திப்பட்டைக்) குழம்பு (வயிறு கடுப்பிற்கு) 296
2. (இஞ்சிக்) குழம்பு (கிராணி, சோகை, பாண்டு, கழிச்சல் நீராமை, குன்மம், வீக்கம் முதலியவைகளுக்கு) 128
3. (இஞ்சிக்) குழம்பு (சோபக் கழிச்சலுக்கு) 252
4. இரஸாதிக் குழம்பு (வலிக்கிராணிக்கு) 183
5. (ஊமத்தைக்) குழம்பு (பேதிக்கு) 9
6. (கள்ளிப்பால்) குழம்பு, (பேதிக்கு) 47
7. (குடஜ) ரஸக்கிரியை (இரத்தக் கிராணிக்கு) 109
8. (வில்வாதிக்) குழம்பு (பெருவயிறு, கிராணி, சுவாச காசம், மூக்கு நீர்ப்பாய்ச்சல், சூலை அதிஸாரம், அசீர்ணம் முதலியவைகளுக்கு) 122

## நெய் வகைகள்:


1. அரீதகீ நெய் (வயிறு நோய்களுக்கு) 377
2. இஞ்சி நெய் (கிராணி, அதிஸார குன்மத்திற்கு) 348
3. கடுகாதிக் கிருதம் (கிராணி, கடுப்புகளுக்கு) 177
4. கண்டங்கத்திரி நெய் (வெள்ளுடைப்பு, வாய் மூக்கி னால் இரத்தம் விழுவதற்கு) 379
5. சுக்காதிக் கிருதம் (இரத்தக் கிராணி, மூலக்கிரா ணிக்கு) 147
6. சுக்காதிக் கிருதம் (கிராணி, வாயுவிற்கு) 176
7. (சுக்காதி) நெய் (அதிஸாரம், கிராணி, சோபத்திற்கு) 329
8. சுக்காதிக் கிருதம் (வயிற்றுவலி, சோகை, பாண்டு, அதிஸாரம் முறுக்குவலி, முதலியவைகளுக்கு) 330
9. (சுண்ட்யாதி) கிருதம் (உதர வியாதி, சூலை, கிரா ணிக்கு) 124
10. (சுண்ட்யாதி)க் கிருதம் (கிராணி, சுவாசகாசம், குன் மத்திற்கு) 153
11. (சைந்தவாதி)க் கிருதம் (தொந்தக்கிராணி, மூலக் கிராணிக்கு) 147
12. தண்ணீர்விட்டாங் கிழங்கு நெய் (வயிற்றிலிருந்தோ, ஆண் குறியிலிருந்தோ இரத்தம் விழுகிறதற்கு) 382
13. புளியாரை நெய் (கிராணிகளுக்கு) 85
14. புளியாரை நெய் (அந்தரக் கிராணிகளுக்கு) வேறு 179
15. வேர்க் கொம்பு நெய் (சகலவித அதிஸாரத்திற்கும்) 335
16. ஜம்பு வல்கலக் கிருதம் (ஸ்திரீகளுக்கு ஏற்படும், பிரதரம், அஸ்திஸ்ராவம், ருதுசூலை, சுக்லமேகம் மலட்டிற்கு) 155
17. ஜம்பு கிருதம் (எலும்புருக்கி, கிராணிகள், பெரும் பாடு, இரத்தபித்தம், அதிஸாரம், வெள்ளுடைப் பிற்கு) 332


## பால் வகைகள்:


1. (ஆட்டுப்பால்) மருந்து (வெள்ளுடைப்பாய், உஷ்ண வாயுவினால் வயிறு கழிகிறதற்கு) 248
2. (ஆவாரையிலைப்) பால் (சலக்கழிச்சல் தீர) 237
3. (இலவம்பட்டைப்) பால் (வயிறு கழிச்சலுக்கு) 222
4. (தென்னம் வேர்ப்) பால் (வயிறு இரைச்சலுக்கு) 367
5. (மிளகுப்) பால் (வாயுக் கழிச்சலுக்கு) 262
6. (வெள்ளாட்டுப்) பால் மருந்து (வயிறு கடுப்பிற்கு) 294

**வடகங்களும் உருண்டைகளும்:**


1. (அரீதகீ) வடகம் (வயிறு கடுப்பிற்கு) 279
2. அழிஞ்சில் உருண்டை (கிராணிக்கு) 78
3. இந்துப்பாதி உருண்டை (கிராணிக் கழிச்சலுக்கு) 193
4. (ஊமத்தை) யுருண்டை (கழிச்சல், அதிஸாரத்திற்கு) 212
5. (ஏலாதி) வடகம் (இரத்தக் கிராணி, உளைவிற்கு) 167
6. ஏலாதி மருந்து (ஜ்வரத்தின்மேல் கழிச்சல், வாந்தி, வயிற்று நோய்க்கு) 262
7. (ஓதியம்) உருண்டை (கழிச்சலுக்கு) 204
8. (கஞ்சா) வடகம் (கிராணிக்கு உருண்டை) 120
9. (கஞ்சா) உருண்டை (சக்கை சக்கையாகப்போகும் கிராணிகளுக்கு) 112
10. கடுகரோகிணியாதி உருண்டை (பேதிக்கு) 39
11. கடுக்காயுருண்டை (வயிறு கடுப்பிற்கு, சீதரத்தத் திற்கு) 292
12. (கட்வாதி) உருண்டை (வயிறு கழிச்சலும், வயிறு கழிச்சலுடன் கூடிய ஜ்வரத்திற்கும்) 188
13. (கட்டுவங்காதி) குளிகை (வயிறு கழிச்சலுக்கு) 214
14. கதலிப்பஞ்சாங்க மாத்திரை (சலக்கழிச்சலுக்கு) 241
15. கத்தரி வடகம் (சலக்கழிச்சலுக்கு) 235
16. (கபாட) உருண்டை (கிராணிகளுக்கு) 118
17. கள்ளிப்பால் வடகம் (விரேசனத்திற்கு) 13
18. (கள்ளிப்பால் திப்பிலி) மாத்திரை (நாக்குப்பூச்சி விழ 64
19. (கையாந்தகரையாதி) உருண்டை (வயிறு கழிச்சலுக்கு) 210
20. (கோஷ்டாதி) மாத்திரை (பேதிக்கு) 48
21. சாதிப்பத்திரி உருண்டை (கிராணி, கடுப்பிற்கு) 160
22. (சாதிப்பத்திரி) உருண்டை (கிராணி, கழிச்சல், சகல வாயுவிற்கும்) 171
23. (சாதீபலாதி) உருண்டை (சகல கிராணிக்கும்) 105
24. (சாதிக்கா) யுருண்டை (வயிறு கடுப்பிற்கு) 286
25. (சாதிக்கா) யுருண்டை (வயிறு கடுப்பிற்கு) வேறு 287
26. சாதிக்காய் மாத்திரை (வயிறு கடுப்பிற்கு) 293
27. சாதிக்காய் உருண்டை (வயிறு கடுப்பினால் இரத்தம் கழிகிறதற்கு) 305
28. சாதிக்காய் மாத்திரை (கடுப்பு, பொருமல், அதிஸாரம், கிராணி, கழிச்சலுக்கு) 353

29. (சாதீபலாதி) வடகம் (வயிறு களகளப்பு, கிராணி, அதிஸாரம், கழிச்சல், வாயு, மூலவாயு, சோறு சோறாய்க் கழிதல் முதலியவைகளுக்கு) 266

30. (சாதீபலாதி) உருண்டை (ரத்தக்கிராணி, ஈன்று கிராணி, முறுக்கு கிராணி, முதலான சகல கிராணிகளுக்கும்) 81

31. (சாதீபலாதி) உருண்டை (சகல கிராணிகளுக்கும்) 105

32. சித்தேல உருண்டை (இரத்தக் கழிச்சலுக்கு) 306

33. (சீரகாதி) உருண்டை (கழிச்சலுடன் ஜ்வரத்திற்கு) 263

34. சுகபேதிக்குருண்டை 16

35. (சுண்ட்யாதி) உருண்டை (சகலக் கிராணிக்கும்) 80

36. (தாடிமாதி) உருண்டை (கிராணிக்கு) 119

37. (தாடிமாதி) உருண்டை (ஸர்வ கிராணிக்கு) 137

38. தாடிமாதி வடகம் (கிராணியினால் சீதமும் இரத்தமும் கழிகிறதற்கு மருந்து) 181

39. (தாடிமாதி) உருண்டை (வயிறு கடுப்பிற்கு) 283

40. (தாடிமாதி) உருண்டை (வைசூரியினால் வந்த கடுப்பிற்கு) 313

41. (தாடிமாதி) உருண்டை (வைசூரியினால் வந்த கடுப்பிற்கு) வேறு 814

42. (தாடிமாதி) உருண்டை (இரத்தமூலம், கிராணி, பாண்டு, பெரும்பாடு. அக்னிமந்தம், சூடு, மேகச் சூலை பயித்தியத்திற்கு) 327

43. (நாயுருவியாதி உருண்டை (வாயுவினால் வயிறு பொருமிக் கழிச்சலுக்கு) 246

44. மரிசாதி உருண்டை (கிராணி, வாயுவிற்கு) 169

45. மாசீபலாதி) உருண்டை (கிராணி, சூசிகவாயு, பாண்டு, மூலம், ரத்தகாசத்திற்கு) 132

46. மதுபுஷ்பா்தி உருண்டை (பேதிக்கு) 24

47. ரஸோன பிஷ்டி (சூதிகா கிராணி, அக்கினிமந்தம், வாயுவிற்கு) 135

48. வடவானல மாத்திரை. (இரத்தாதிஸாரம், பித்த சிலேத்ம அதிஸாரம், அசீர்ணக் கிராணி, மாந்தக் கிராணி, மூலக்கிராணி, முதலானவைகளுக்கு) 86

49. (வாளக்கடுக ரோகிணி) மாத்திரை (பேதிக்கு) 14

50. (வாள சுக்காதி) பேதி உருண்டை 46

51. வாள மாத்திரை (விரேசனத்திற்கு) 10

52. (வாள) மாத்திரை (பேதிக்கு) 15
53. (வாள) மாத்திரை (பேதிக்கு) 18
54. (வாள) மாத்திரை (பேதிக்கு) வேறு 18
55. (வாள) மாத்திரை (பேதிக்கு) 37
56. (வாள) மருந்து (பேதிக்கு) 30
57. விரேசன உருண்டை 8

## இரஸம், கந்தகம் சேர்ந்த சூரண வகைகள்:

1. (இரஸாதி) சூரணம் (சகலகிராணிகளுக்கும்) 101
2. சாதிலிங்காதிச் சூரணம் அல்லது வெட்டுப் பெருமாள் பற்பம் (வயிறு கழிச்சலுக்கு) 186
3. (சாதிலிங்காதி)ச் சூரணம் (வயிறு கழிச்சலுக்கு) 253
4. (வாளரஸ) சூரணம் (விரேசனத்திற்கு) 22

## பற்ப வகைகள்:

1. இரதாதி பற்பம் (கிராணிக்கும், பிரமியத்திற்கும்) 163
2. கந்தக பற்பம் (பேதி, வயிற்றுக்கடுப்பு, அதிஸாரம், கிராணிக்கு) 311
3. நாகபற்பம் (கிராணி முதலானதற்கு 131
4. பலகரை பற்பம் (கிராணிக்கு) 99
5. பித்தளை பற்பம் (குன்மம், மூலம், கிராணி, பாண்டு, உதிரக்கடுப்பு, வாய் நீரூறல், குடல் வாயு, பார்ச்வ வாயு, ஆனந்தவாயு முதலியவைகளுக்கு) 145
6. வங்கபற்பமும் அதற்கு அனுபானச் சூரணமும் (கிராணிக்கு) 117
7. வங்கபஸ்பம் (நீர்க்கழிச்சல், நீரிழிவிற்கு) 232

## தைல வகைகளும், எண்ணெய் வகைகளும்:

1. (ஓதியம் பட்டைத்) தைலம் (இரத்தக் கிராணி, இரத்த பித்தத்திற்கு) 102
2. கந்தகத் தைலம் (கிராணிக்கு) 89
3. கந்தகத் தைலம் (சந்நி, வாதக்கிராணி, சத்திக் குன்மம், வாதகுன்மம், அஷ்டகுன்மம், வாயு, ஜ்வரம் முதலியவைகளுக்கு) 91
4. (கற்றாழம் சாறு) எண்ணெய் (பேதிக்கு) 52

5. (சித்திர மூலத்) தைலம் (வயிற்றிரைச்சல், வயிற்று வலி, சங்கரக் கிராணிக்கு) 68

6. (சித்திர மூலத்) தைலம் (வயிறு இரைச்சல் வயிற்று வலி, சங்கரக் கிராணிக்கு) 68

7. சுகவிரேசனம் 6

8. சுகபேதித் தைலம் 28

9. (சுண்ட்யாதி) தைலம் (பழங்கிராணி, 101 தடவை கழிகிறதற்கும்) 159

10. (செறுப்படி) யெண்ணெய் (பேதிக்கு) 31

11. சோதித்தைலம் (குன்மம், குஷ்டம், கிராணி, பித்தம் முதலானவைகளுக்கு) 96

12. (தயிர்ச் சுண்டி) எண்ணெய் (கிராணிக்கும், அதிஸாரத்திற்கும்) 70

13. (தேங்காய் வெங்காய) எண்ணெய் (சலமலக்கட்டுவிட 62

14. (நறுவிலி) எண்ணெய் இரத்தக் கழிச்சலுக்கு) 220

15. பாக்கெண்ணெய் (விரேசனத்திற்கு) 55

16. (பால் நல்லெண்ணெய்) இரத்தக் கிராணிக்கு 165

17. (பூண்டு) எண்ணெய் (முதலியவை) மலசலக்கட்டுவிட) 56

18. பேய்ப்பாச்சோத்தி) எண்ணெய் (வயிறு கழிச்சலுக்கு) 308

19. (மிளகெண்)ணெய் இரத்தம் விழுதல் நிற்க) 379

20. (முடக்கித்தான்) எண்ணெய் (பேதிக்கு) 14

21. வகையிலைச்சாறெண்ணெய் (சீதக்கழிச்சலுக்கு) 259

22. (வாளரஸாதி) எண்ணெய் (நாபியிற்றடவ) 4

23. விடத்தேரி எண்ணெய் (கழிச்சலுக்கு 195

25. விரேசனத் தைலம் 27

25. வெந்தய எண்ணெய் (பொருமல், செரியாமை முதலியவைகளுக்கு) . 375

பச்சிலை மருந்துகள்:

1. (இஞ்சி) மருந்து முதலியவை (வயிற்றுக் கடுப்பிற்கு) 59

2. (இம்புரா) மருந்து (வயிறு கடுப்பிற்கு) 273

3. (கற்றாழை) மருந்து (சத்தியின்மேல் விழுசி கண்டாலதற்கு) 364

4. (சீதேவிச் செங்கழுநீர்க்) கட்டு மருந்து (உளைப்பிற்கு) 300

5. தென்னம்பாளைச்சாறு) மருந்து (வழும்புதிரத்திற்கு 370

6. (மிதிபாகல் சாறு) மருந்து (விரேசனத்திற்கு) 51

## லேகிய வகைகள்:


1. (சுண்ட்யாதி) லேகியம் (சோபக் கிராணிக்கு) 185
2. (திரிகடு) லேகியம் (கிராணி, கடுப்பிற்கும், சூட்டிற்கும்) 161
3. தெசசாராகினி (சகல கிராணிகளுக்கும்) 92
4. (முடக்கித்தான் கடுகு) லேகியம் (சூசிகவாயு. கிராணிக்கு) 163
5. வாதமடக்கி மருந்து (வயிற்றில் வாயுவினால், குன்மத்தினால், வயிறு கடுப்பு, வயிறு வலி, கழிச்சலுக்கு) 298
6. விரேசன லேகியம் (பேதிக்கு) 29


## சில்லரை மருந்துகள்


1. (ஆவாரையிலைப்) புண்ணாக்கு (வயிறு கழிச்சலுக்கு) 216
2. கல் சுண்ணாம்பு மருந்து (வயிறு கடுப்பு, கழிச்சலுக்கு) 275
3 (சாறடை) வெண்ணெய் (விரேசனத்திற்கு) 7
4. (சிலந்திக்கூடு) தாயத்து (கழிச்சலுக்கு) 250
5. துவளையும் குளிசமும் (வயிறு கடுப்பிற்கு) 291
6. (துத்தாதி) அஞ்ஜனம் (செரியாமை, வயிற்றுக் கழிச்சலுக்கும், சாகிறது, பிழைக்கிறதற்கும்) 250
7. தேத்தான் வெண்ணெய் (வயிறு கழிச்சலுக்கு) 217
8. நாயுருவியுப்புக்) காடி (மலசலக்கட்டுகளுக்கு) 63
9. புஷ்ப விரேசனம் 16
10. புஷ்ப விரேசனம் (வேறு) 17
11. பேய்க்கொமட்டி உப்பு (விரேசனத்திற்கு) 25
12. பேய்ப்பீர்க்கம் விதைப்பூச்சு (சுக விரேசனம்) 41
13. (மீன்) மருந்து (சூதிகாகிராணிக்கு) 134
14. (வாள அழிஞ்சில்) மருந்து (முகர) 6
15. வாள வெண்ணெய் (விரேசனத்திற்கு) 1
16. வாள வெண்ணெய் (பேதிக்கு) 7
17. (வில்வப்பழச்) சதை மருந்து (கழிச்சலுக்கு) 224

ஹரி: ஓம்.

# சரபேந்திர வைத்திய முறைகள்

## (விரேசன முறைகளும், அதிசார சிகிச்சையும்)

### காப்பு

கங்கையைச் சிரசி லணிந்திடுங் கைலைக்
 கடவுளர் பாதமே போற்றும்
மங்கள நற்றஞ்சை விபுசர பேந்திரன்
 மாமுனி வர்கள் மொழிநூலை
யுங்கவ னித்து விரேசனங் கிராணி
 யுடன்கழிச் சல்கடுப் பிரைச்சல்
சங்கையி லாவதி சாரம தகலச்
 சாற்றவைங் கரனுங்காப் பாமே. (க)

### 1. விரேசனத்திற்கு, "வெண்ணெய்"

கற்றாழை மடலுக்குள் நேர்வாளப்
 பருப்பைவைத்துக் கனமாய்ச்சாணி
பற்றிடவே பூசியிர வியிலுலர்த்திச்
 சுட்டதிலெண் பருப்பரைத்துக்
கற்றாவின் பால்படியொன் றிற்கரைத்துப்
 பக்குவமாய்க் காய்ச்சிப்பின்பு
மற்றதனைப் பிறைக்குத்தி மதித்தெடுத்த
 நவனீதம் வாங்கிக்கொண்டே. (உ)

கொண்டவெண்ணெய் தனையெடுத்து நல்லசர்க்
கரையுமதிற் கூடச்சேர்த்தே
யுண்டிடுவா யுதயத்தி லுடன்வயிறு
பேதியதா முட்டினங்கள்
பண்டியிலுற் றிடுமெரிவும் வாயினெரி
வுடனோய்கள் பலவும் பின்வந்
தண்டாது மிளகுநீ ரனமருந்திற்
பத்தியம தாகும்பாரே. (௩)

(இ-ள்)

கற்றாழை மடலுக்குள் சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு [எண்ணிக்கையில் 8] வைத்து அதன்மேல் சாணியைக்கொண்டு கனமாகக் கவசம் செய்யவும். பின்பு இதனை நன்றாக உலர வைத்துப் புடமிடவும். நேர்வாளப் பருப்புகளை யெடுத்து அரைத்துப் பசுவின்பால் ஒரு படியுடன் சேர்த்துப் பக்குவ மாகக்காய்ச்சிப் பிறைகுற்றவும். மறுநாள் இதைக் கடைந்து வெண்ணெயை எடுத்துக்கொள்ளவும். இதனுடன் சரியளவு சீனிச்சர்க்கரை சேர்த்து அதிகாலையில் சாப்பிடவும்.

வயிறு பேதி உண்டாகும். உஷ்ணம், எரிச்சல், வாய் எரிச்சல் முதலான வியாதிகளும் பின்வந்தண்டா.

பத்தியம்:

மிளகுரசம் சேர்த்துச்சாதம் உட்கொள்ளவும்.

## 2. விரேசனம்: ‘‘கடுகுரோகிணிச் சூரணம்’’

கடுகுரோ கணியுரியா வின்பாலு
முரிமுதிர்தேங் காய்நீரூற்றி
யுடைவாயுள் ளடைத்ததின்வாய் மூடியுமேற்
சாணாக மப்பியத்தைக்
கொடிதீயிற் புடம்போட்டு வெடித்திடுதேங்
காய்புதியக் குவிந்தசட்டி
யிடையிட்டுப் பின்னுலர்த்திச் சூரணம
தாகச்செய் தெடுத்திடாயே. (௪)

எடுத்தபொடி மூன்றுபங்கின் மிளகுசுக்குத்
திப்பிலிமூன் றிடித்துநன்றாய்ப்
பொடித்தபொடி யொருபங்கு சேர்த்தரைத்துட்
கொள்வயிறு போகும்வெந்நீர்
குடிக்கினிளநீ ருழக்காவின் பாலொருரி
யின்மூன்றாள் கூட்டியுண்ண
விடரில்லா மற்சுகபே தியதாம்வெந்
நீரனமாற் றியல்புதானே. (ரு)

இயலாக மறுநாள்வெண் டயிர்கட்டித்
தூக்கிமிள கினைவறுத்துக்
கையினாலே பொடிசெய்த தயிரைவிட்டுக்
கடைந்துண்டைக் கனமாய்ச்செய்து
நயமாக வுட்கொள்ளவே தேகசௌக்
கியமிகவு நண்ணுமென்று
வயமாவிற் பவனிவருஞ் சரபமகி
பதியுணர்ந்து வழுத்தும்வாறே. (சா)

(இ-ள்)

கடுகுரோகிணி -½ படி (சின்னபடி)
பசுவின் பல்- ½ ,, ,,

இவ்விரண்டையும் சேர்த்துக் குழம்பாகவரைத்து ஒரு முற்றிய தேங்காயின் கண்களைத்திறந்து, இளநீரைக் கொட்டிவிட்டு அதனுள் அடைத்துவிடவும். பின்பு துவாரத்தைக் குச்சியினாலடைத்துச் சாணியப்பவும். உலர்ந்தபின்பு தீயிற் புடமிடவும். தேங்காய் வெடித்தவுடன், தீயிலிருந்து எடுத்து, ஓட்டையுடைத்துத் தேங்காயை மருந்துடனே ஒரு குவிந்த சட்டியிலிட்டு நன்றாக உலர்த்திச் சூரணம் செய்யவும்.

இச்சூரணத்தில் மூன்று பங்கெடுத்துச் சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றின் பொடி ஒரு பங்கும் சேர்த்து உட்கொள்ளவும். வெந்நீர் வேண்டியமட்டும் கொடுக்கவும்.

இளநீர் ஒரு உழக்கும் பசுவின் பால் ½ படியும் சேர்த்து முன்செய்த பொடியையும் இட்டு உட்கொண்டால் சுகபேதி உண்டாகும். 3 நாட்கள் சாப்பிடவும்.

வெந்நீர்சாதம் சாப்பிடவும். பேதி சாப்பிட்ட மறுநாள் கெட்டியான தயிரை ஒரு துணியில் வைத்துப் பிழிந்து அதனுடன் வறுத்த மிளகுப்பொடியைச் சேர்த்து நன்றாக மத்தித்து உட்கொள்ளவும்.

தேகத்திற்குச் சுகமேற்படும்.

## 3. நாபியிற்றடவ விரேசனம்

இரதமுங்கெந் தகந்தில்லம் விரைவெண்கா
　　ரஞ்சிவந்த வேரண்டத்தின்
பருப்புங்கொன் றையின்வித்தும் வேர்ப்பட்டை
　　நேர்வாளப் பருப்போடொன்றுக்
கிரண்டுவரா கனிடையள வாகக்கொண்டே
　　பொடித்தேயி தையேராசாம்
மரியசதிர் கள்ளிப்பா லாவின்பா
　　லிரண்டிலொன் றி லரைத்திடாயே. (எ)

அரைத்ததனை முற்றியதேங் காய்நீரை
　　யூத்தியதி லடைத்துமூடி
யொருபதினைந் தேதினங்குப் பையிற்புதைத்தே
　　யெடுத்ததன்மே லோட்டைநீக்கி
விரைவாக வேயரைத்து வெண்கலப்பாத்
　　திரத்திலப்பி வெயிலில்வைக்க
வருந்தைல மதைச்சீலை யாற்பிழிந்தோர்
　　பாத்திரத்தில் வைத்துக்கொள்ளே. (அ)

வைத்ததை லந்தனையுந் தியிற்றடவப்
　　பேதியதா மணமிகுந்த
தொத்தலரிப் பூச்செண்டிற் றடவிமுகந்
　　திடப்பேதி துரிதமாகு
மத்தைல மெடுத்தகோது தனையிரண்டுள்
　　ளங்கால ளவிற்பூசச்
சுத்தமுடன் சுகவிரே சனமாம்பின்
　　னிதின்மாற்றுச் சொல்லக்கேளே. (கூ)

சொல்குளிர்ந்த தண்ணீரி லேகுளித்து
மோர்தயிராற் சோறருந்திற்
சொல்லுகின்ற பேதியுமவ் வளவிலே
நின்றுவிடுஞ் சினமிகுந்த
வல்லிபத்தின் றோலுரித்த பெருவிடையூர்ந்
திடுமீசர் மலர்ப்பதத்தை
நல்லறிவா கத்துதிக்குஞ் சரபேந்திரன்
முறையிதனை நண்ணிப்பாரே. (ம)

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, நெல்லிக்காய் கெந்தகம்
தில்லம் விரை
பொரித்த வெங்காரம்
செவ்வாமணக்கம் பருப்பு
கொன்றை விதை
கொன்றை வேர்ப்பட்டை
நேர்வாளப்பருப்பு (சுத்திசெய்தது)

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துச் சூரணஞ்செய்து பசுவின்பாலோ அல்லது சதுரக்கள்ளிப்பாலோ விட்டு ஒரு (சாமம்) நன்றாக அரைக்கவும். ஒரு முற்றிய தேங்காயைக்கொண்டுவந்து அதன் கண்களைத்திறந்து இளநீரை ஊற்றி விட்டு அதனுள்ளே முற்கூறிய விழுதைக் கொஞ்சம் கொஞ்சமாகச் செலுத்தவும். பின்னர் துவாரத்தை ஆப்பினாலடைத்து 15 நாட்கள் குப்பைக்குழியில் புதைக்கவும். பின்னர் ஷ தேங்காயின் ஓட்டைநீக்கிச் சரக்குகளை அம்மியில் வைத்து நன்றாக அரைத்து ஒரு வெண்கலப்பாத்திரத்தில் அடைபோல் மெல்லியதாகத்தட்டி வெயிலில் எண்ணெய் வடியும்வண்ணம் சாய்த்து வைக்கவும். பின்னர் எண்ணெய் சேரச்சேர ஒரு துணியினால் ஒத்திப் பிழிந்து ஒரு பாட்டிலில் பத்திரப்படுத்தவும்.

இந்த எண்ணெயைத் தொப்புளில் தடவ நன்றாகப் பேதியாகும்.

அரளிப் பூச்செண்டில் தடவி முகர்ந்துவரப் பேதி அதிக

மாகும். இத்தயிலத்தின் சக்கையை இரு உள்ளங்கால்களிலும் நன்றாகத்தேய்த்தாலும் சுகமான விரேசனம் உண்டாகும்.

அதிகமாகிவிடில் இதற்கு மாற்று:

குளிர்ந்த ஜலத்தில் குளித்து மோர், தயிர் இவைகள் சேர்த்த சாதம் உட்கொள்ளவும். பேதி நிற்கும்.

## 4. விரேசனம்

கூறியநேர் வாளத்தை யிரண்டழிஞ்சில்
வேர்கூட்டிக் கொண்டரைத்துச்
சீரான வெலும்பிச்சம் பழமீதிற்
றடவியே மோந் தேதான்பார்க்க
நேராக வயிறுபே தியதாயா
ரோக்கியமா நெடிநீர் சூழ்ந்த
பாராளும் வாகையணி சரபேந்திர
னிம்முறையைப் பகர்ந்ததாமே. (மக)

(இ-ள்)

சுத்தி செய்த நேர்வாளத்துடன், சரியளவு அழிஞ்சில் வேர் சேர்த்து நன்ருக அரைத்து எலுமிச்சம்பழத்தில் தடவி முகர்ந்து பார்க்கவும். நன்றாகப் பேதியாகும். தேக சுகமும் உண்டாகும்.

## 5. சுகவிரேசனம்

ஆமணக்கெண் ணெயிற்கடுக்காய்ப் பொடியொடுகற்
ருழையின்சா றதுவுங்கூட்டி
நேமமுறக் கரத்தினுங்கா லினுந்தடவி
மத்திக்க நெடுநா ணின்று
வாதமுத லாயமலக் கட்டும்போம்
சவுக்கியமுண்டாகுமென்று
கோமனுஞ் சரபேந்திரன் குவலயத்தோர்க்
கிம்முறையைக் கூறினுரே. (மஉ)

(இ-ள்)

ஆமணக்கெண்ணெயுடன் கற்றாழைச்சாறு, கடுக்காய்த்தூள் இவைகளை யொன்று கலந்து கால்களிலும் கைகளிலும் நன்றாகத்தேய்க்கவும்.

வெகுநாட்பட்ட மலக்கட்டுகள் நீங்கிச் சௌக்கியமுண்டாகும்.

## 6. விரேசனம்

வெள்ளைச்சா றடைவேரின் றூளதிலா
　　வின்பாலை விட்டுக் காய்ச்சி
மெள்ளவிறக் கிப்பிறைதான் குற்றிமறு
　　நாட்கடைந்த வெண்ணெய்தன்னைக்
கொள்ளவதன் பின்பாக்கெத் தனைதரமுண்
　　டிட்டாலுங் குணமதாக
வுள்ளபடி யவ்வளவ தாம்பேதி
　　யாகுமெய்யீ துண்மைதானே. (௵)

(இ-ள்)

வெள்ளைச்சாறடை வேரைக் கொண்டுவந்து நிழலிலுலர்த்திக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துக்கொண்டு அதனுடன் பசுவின் பாலை விட்டுக் காய்ச்சி இறக்கிப் பிறைக்குத்தவும். மறு நாளைக்கு இதைக் கடைந்து வெண்ணெய் எடுத்து உட்கொண்டு பாக்குத்தூளைப் போட்டுக்கொண்டு மெல்லவும் எவ்வளவு பாக்குச் சாப்பிடுகிறோமோ அவ்வளவு தரம் பேதியாகும். குணமும் உண்டாகும்.

## 7. பேதிக்கு

அறுபதுவா ளக்கொட்டை நஞ்சொடுதோற்
　　போக்கித்தூ ளாகச்செய்து
திறமாகப் பாகப்பா லதைவிட்ட
　　டுப்பினிற்காய்ச் சிப்பிறைகுத் தியதன்பின்பு

மறுனாளிற் கடைந்துயுண் டெத்தனைச்
 தந்தரது வர்க்காயுண்ணக்
குறையின்றி யவ்வளவு தரம்பேதி
 யாகுமெய்க்கும் குணமுண்டாமே. (௰௪)

(இ-ள்)

நேர்வாளக்கொட்டை 60 (எண்ணிக்கையில்) எடுத்து மேல் ஓட்டையும், உள்ளிருக்கும் முளையையும் நீக்கிச் சுத்தி செய்து தூளாக்கிப் பசுவின் பால்விட்டு அடுப்பின் மேலேற்றி நன்றாகக் காய்ச்சவும். பின்பு இதை அடுப்பின் மேலிருந்து இறக்கிக் கை பொறுக்கும் சூட்டில் பிறைகுத்தவும். மறுநாள் தயிராகிய பின்னர் அதைக் கடைந்து வெண்ணெயை எடுத்துக் கொள்ளவும்.

இதனை உட்கொண்டு எவ்வளவு தரம் பாக்குப் போட்டுக் கொள்ளுகிறோமோ அவ்வளவு தடவை கெடுதலின்றிச் சுகமாகப் பேதியாகும். உடம்பும் நன்றாகும். குடல் வாதம் தீரும்.

## 8. விரேசன உருண்டை

கோவின்பால் கற்றாழஞ் சோறுசா
 ணாகமுடன் கோசந்தான்
றீவிரமா யின்னான்கிற் றனித்தனியா
 கச்சுத்தி செய்நேர்வாள
மேவியசாத் திரபேதி வேப்பீர்க்குக்
 கடுக்காயின் மேற்றொலின்னான்
காவலுட னேசமமாய்ச் சேர்த்ததைக்கல்
 வத்தினிலிட் டரைத்திடாயே. (௰௫)

அரைத்ததனைப் பருத்திவிதைப் பிரமாண
 முண்டைபண்ணி யதையெடுத்துத்
திருத்தமுடன் சிமிழதனில் வெத்துதைய
 காலமதிற் செம்மையாகப்

பொருத்தமுள வோருண்டை கொள்ளவிரே
சனமாம்பின் புகலுமாற்று
கருத்தாய்மோ ரனம்பாலன் னமுமிரண்டி
லொன்றுணலாங் கண்டுகொள்ளே. (கசு)

(இ-ள்)

பசுவின் பால், கற்றாழஞ் சோறு, சாணி ஜலம், பசுவின் மூத்திரம் இந்நான்கிலும் தனித்தனியாகப் போட்டுச் சுத்தி செய்த நேர்வாளப்பருப்பு ஒரு பலம் எடுத்துக் கல்வத்திலிட்டு இதனுடன்,

சாத்திர பேதி (கொடுக்காப்புளி)
வேப்பீர்க்கு
கடுக்காய்த்தோல்

இவைகளையும் வகைக்கு 1 பலம் வீதமெடுத்து, நன்றாக அரைக்கவும். நன்கு மெழுகு போலாகும். இதனைப் பருத்தி விதைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாகச் செய்துகொண்டு, விடியற்காலையில் ஒரு உருண்டை உட்கொள்ளவும். நன்றாகப் பேதியாகும். அதிகமாக ஆகிவிடில் பால் சாதமோ, மோர் சாதமோ சாப்பிடவும்.

## 9. பேதிக்கு

ஊமத்தங்காய் தனைத்துவைத்துச் சாறதனிற்
கல்லுப்பை வகையாய்ச் சேர்த்து
வைத்தடுப்பி லேற்றியதைப் பதமாகக்
காய்ச்சியதை வண்சுண்டைக்கா
யெத்தளவா யுண்டைபண்ணி யோருண்டை
வெல்லமதி லுண்ணப்பேதி
சுத்தமுட னாமாற்று மோரனந்தண்
ணீரனமுஞ் சொல்லலாமே. (கஎ)

(இ-ள்)

ஊமத்தங்காயை இடித்துப் பிழிந்த சாற்றுடன் கல்லுப் பைச் சேர்த்துக்கரைத்து அடுப்பின்மேலேற்றிப் பதமாகக்காய்ச் சிவரக் குழம்பு பதமாக ஆகும். அப்போது இதை எடுத்துச் சுண் டைக் காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள் ளவும். வேண்டும்போது இம்மாத்திரையிலொன்றை வெல்லத் தினுள் வைத்து விழுங்கவும்.

நன்றாக மலப்பிரவ்ருத்தியாகும்.

மோர் சாதமோ, தண்ணீர்ச் சாதமோ உட்கொள்ள மலம் தடைப்படும்.

குறிப்பு:— நெ. 68-ம் சுவடியில் மத்தங்காய் என்பதற்கு இராசவல்லி என்று பெயர் என்று காணப்படுகிறது.

## 10. விரேசனத்திற்கு

இரண்டுபல வாளத்தைக் கள்ளிப்பா
   லுழக்கினைவிட் டியல்பதாக
வரைத்ததினெய் யுழக்குவிட்டுக் கலந்துபொரித்
   துக்கடலையளவதாக
வுருட்டியொன் றைவெல்லத் தில்லதுவா
   ழைப்பழத்தி லுட்கொண்டக்கால்
விரைவாய்பே தியதாமற் றனமோருண்
   சந்தனமு மெய்யிற்பூசே. (கஅ)

(இ-ள்)

சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு 2 பலமெடுத்துக் கல் வத்திலிட்டு, சதுரக்கள்ளிப்பால் விட்டு நன்றாகவரைத்து, மறு படியும் பசுவின் நெய் ஒரு உழக்கு சேர்த்து அரைத்துச் சிறிது சூடாக்கவும் (கொத்து) கடலைப் பிரமாணமுள்ள மாத்திரை களாக உருட்டிப் பத்திரப் படுத்தவும்.

இதிலொன்றை வெல்லத்திலோ அல்லது வாழைப் பழத்திலோ வைத்து உட்கொள்ளவும். நன்றாக வயிறு பேதி உண்டாகும்.

மாற்று :

பேதி அதிகமானால் மோர் சாதம் சாப்பிட்டு உடம்பின் மேல் சந்தனம் பூசிக்கொள்ளவும்.

குறிப்பு:— வெந்நீரிலும் உட்கொள்ளலாம்.

## 11. விரேசனத்திற்கு

*இரதமொன்று சாதிலிங்க மூன்றுடநேர்*
*வாளமுமெட் டியல்வெண்கார*
*மிரண்டிவைகள் பங்காக வேயெடுத்துக்*
*கற்றாழை யின்சாற்றாலே*
*யரைத்துமிள களவுண்டை செய்துவா*
*ழைப்பழத்தி லருந்தினாலுந்*
*தாமாக மதுரமுள வெல்லத்தி*
*லுண்ணபேதி தானாம்பாரே.* (கக)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | — | 1 | பங்கு |
| ,, லிங்கம் | — | 3 | ,, |
| ,, நேர்வாளப்பருப்பு | — | 8 | ,, |
| பொரித்த வெங்காரம் | — | 2 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுக் கற்றாழஞ்சாறுவிட்டு நன்றாக வரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டிப் பத்திரப் படுத்தவும். இதிலொரு மாத்திரையெடுத்து வாழைப்பழத்திற்குள் வைத்து விழுங்கவும். அல்லது வெல்லத்தினுள் வைத்தோ உட்கொள்ளவும்.

நன்றாகப்பேதியாகும்.

## 12, பேதிக்குச் சூரணம்

சுக்கிரண்டு கொட்டைப்பாக் கிரண்டுடனிந்
துப்பொன்று துவர்கடுக்காய்
தொக்கவொரு நான்கிவைவ ராகனெடை
யாயெடுத்துச் சூரணித்துப்
பக்குவமாய் வெந்நீர்வைத் ததிற்போட்டோ
ரளவாகப் பருகவேதா
ணக்கணமே சுகமாகப் பேதியதா
மிம்முறையை யறிந்துசெய்யே. (உ௰)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | — | 2 | வராகனெடை |
| கொட்டைப்பாக்கு | | 2 | ,, |
| இந்துப்பு | — | 1 | ,, |
| கடுக்காய்த்தோல் | | 4 | ,, |

இவைகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்யவும். இச்சூரணம் சுமார் ஒரு பலமெடுத்து வெந்நீருடன் அதிகாலையில் உட்கொள்ளவும்.

சுகமாகப் பேதியாகும்.

## 13. பேதிக்குக் குடிநீர்

கடுக்காயெண் பங்குகளிப் பாக்காறு
பங்குநாக ரமீர்பங்கா
யெடுத்திடித்தோர் பாண்டத்தி லிட்டதனிற்
றண்ணீர்விட் டியல்பாய்க் காய்ச்சுங்
குடிநீரை யளவாயுண் டிடவயிறு
பேதியதாங் குளிர்சுரங்கள்
கொடியதா பச்சுரமுந் தீர்ந்துசௌக்
கியமுண்டாங் குறித்துப்பாரே. (உ௧)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| கடுக்காய்த்தோல் | — | 8 | பங்கு |
| களிப்பாக்கு | — | 6 | ,, |
| சுக்கு | — — | 2 | ,, |

இவைகளை இடித்து ஒரு பாத்திரத்திவிட்டு 1½ சேர் சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றாக்கி இறக்கவும். இதை வடிகட்டி உட்கொள்ளவும். நன்றாகப் பேதியாகிக் குளிர் ஜ்வரம் தீரும்.

## 14. விரேசனம்

கள்ளிப்பா லாவின்பால் வகைக்குழக்கா
மெலுமிச்சங் காய்நேர்வெல்லம்
மெள்ளவிம்மூன் றையுங்குழம்பாய்க் காய்ச்சியெடுத்
தேபுளியின் விரைநேராயுட்
கொளப்பேதி யாங்கஞ்சி குடிப்பதுபத்
தியம்வயிற்றுட் கொண்டநோய்க
ளெள்ளியநீ ராம்பன்மகோ தரம்வாயு
விடபாக மேகுந்தானே. (உஉ)

(இ-ள்)

கள்ளிப்பால் — ஒரு உழக்கு
பசுவின்பால் — ,,
வெல்லம் — எலுமிச்சங்காய்ப் பிரமாணம்

இம்மூன்றையும் ஒன்றுகலந்து அடுப்பின்மேலேற்றிக் குழம்பாகக்காய்ச்சி எடுத்துப் புளியங்கொட்டைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாகச்செய்து வைத்துக்கொள்ளவும். இதிலொரு மாத்திரை யெடுத்து உட்கொள்ள நன்றாகப் பேதியாகும்.

கஞ்சி குடிக்கவும்.

வயிறு நோய் நீராம்பல், மகோதரம், வாயு, விஷபாகங்கள் முதலானவை தீரும்.

## 15. பேதிக்கு எண்ணெய்

முடக்கொத்தா னிலைபிடியான் றதில்மிளகு
வராகனிடை மூன்றுஞ்சேர்த்தே

யடைவா வேயரைத்து வில்லைதட்டி
யாமணக்கெண் ணெயதுகாற்சேரி
லுடன்கலந்தோர் பொங்கல்வந்தப் பின்னிறக்கி
வில்லையையு முண்டவ் வெண்ணெய்
குடித்திடவே சுகமாகப் பேதியா
மனுகூலங் கொடுக்குந்தானே. (உரு)

(இ-ள்)

முடக்கொத்தான் இலை — ஒரு பிடி
மிளகு — 3 வராகனிடை

இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து வில்லை தட்டி ஆமணக்கெண்ணெய் காலேயரைக்கால் சேருடன் ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றி ஒரு கொதியான பின்னர் இறக்கி அவ்வில்லையையுண்டு, எண்ணெயையும் உட்கொள்ள வும். சுகமாகப் பேதியாகும்.

## 6. பேதிக்கு மாத்திரை

தயிர்காரை யிலைச்சாறு குமரிமடற்
சாறுபழச் சாறுகாடி
யியலுமிவைகளில் வாளந் தனித்தனியே
புடமிட்டே யெடுத்துநேரா
யுயர்கடுரோ கணிகூட்டிப் பழச்சாற்றா
லரைத்துண்டை யுழுந்தொப்பாகச்
செய்திருண் டையை வாழைப் பழத்தினில்வெல்
லத்திலுண்பே தியதாம்பாரே. (உச)

(இ-ள்)

தயிர்
காரையிலைச்சாறு
கத்தாழை மடற்சாறு
காடி

இவைகளில் தனித்தனியே ஊறவைத்து எரித்த நேர் வாளப் பருப்புடன், சரியளவு கடுகரோகிணி சேர்த்துக் கல் வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறுவிட்டு நன்றாக அரைக்கவும்

உளுந்துப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இதிலொரு மாத்திரையை வாழைப்பழம், வெல்லம் இவைகளில் ஏதேனுமொன்றில் வைத்து விழுங்கவும். நன்றாகப் பேதியாகும்.

குறிப்பு:-அதிகமாகப் பேதியாகவேண்டுமெனில் இளவெந் நீரில் கொடுக்கவும். மோர் சாதம் சாப்பிடவும்.

## 17. பேதிக்கு

கடுக்காயின் பொடிதான்றிக் காயினது
பொடி நெல்லிக் காயின்றூளு
மடைவான சீரகமிந் நான்கும்வகைக்
கோர்பங்க தாகுஞ் சுத்தித்
தெடுத்திடுநேர் வாளமது முப்பங்க
தாயிவைக ளிடித்த ரைத்தே
கடிதாய்வெல் லத்திலுணப் பேதியதா
மாற்றனமோர் கண்டுகொள்ளே. (உரு)

(இ-ள்)

| | |
|---|---|
| கடுக்காய்த்தூள் | —1 பங்கு |
| தான்றித்தூள் | — ,, |
| நெல்லிவற்றல் சூரணம் | — ,, |
| சீரகம் | — ,, |
| சுத்தி செய்த நேர்வாளம் | —3 பங்கு |

இவைகளை இடித்துச் சூரணித்துக் கல்வத்திலிட்டுத் தண்ணீர் விட்டு நன்றாக வரைத்து (மிளகளவுள்ள) மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இதிலொரு மாத்திரையை வெல்லத்தில் பொதிந்து விழுங்கவும். பேதியாகும். அதிகமாகில், மோர் சாதம் சாப்பிடவும்.

## 18. புட்ப விரேசனம்

கொடிக்கால்வே ளையின்விரையைப் பார்த்தெடுத்துக்
கொண்டிடித்துப் பின்புசதிர்கள்ளிப்பால்
விடுத்தரைத்து வெயிலுலர்த்திப் படிக்கித்தானே
விரைந்துபதி னாறுதிர மரைத்துலர்த்தி
யெடுத்ததைக்கொட் டைப்பாக்கி னளவுருட்டி
யெரிதழலின னருக்கிப்போட் டதின்றூமத்தை
பிடித்தமலர்ச் செண்டதனை மோந்துபார்க்கிற்
பிரியமுடன் சுகவிரே சனமாம்பாரே. (உசு)

(இ-ள்)

கொடிக்கால் வேளை விதை வேண்டிய அளவெடுத்துச் சதுரக் கள்ளிப் பால் விட்டு நன்றாக ஊறவைத்து வெயிலில் உலர்த்தவும். இப்படியாகப் பதினாறு தடவை பாவனை செய்து உலர்த்தவும். வேண்டும்போது ஒரு உருண்டையை நன்றாகப் பொடித்துத் தணலிலிட்டுப் புகைத்து ஒரு செண்டில் பிடித்து முகர்ந்துபார்க்கவும். சுகமாக விரேசனமுண்டாகும்.

## 19. சுகபேதிக்குருண்டை

சுத்திசெய்நேர் வாளந்தேங் காய்க்குள் வைத்துத்
தொகையாக வெட்டுனா ளானதன்பின்
னத்தேங்காய் மேலோட்டை நீக்கிக் கல்வ
மதிலிட்டே யரைத்ததைநன் றாகக்குன்றி
யொத்தபிர மாணமதா யுண்டைபண்ணி
யுலர்த்திவைத் துதையந்த னிற்றண்ணீரால்
மத்தித்தே யெடுத்துவலத் தோளிற்பூசி
மனமகிழச் சுகவிரே சனமதாமே. (உஎ)

(இ-ள்)

சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு ஒரு பலமெடுத்து ஒரு முற்றிய தேங்காய்க்குள்ளடைத்து வைக்கவும். 8 நாட்கள் சென்ற பின்னர் அத்தேங்காயை யுடைத்து மேலோட்டை

நீக்கிவிட்டுக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் குன்றியள வுள்ள மாத்திரைகளாக உருட்டி நன்றாக உலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

இதிலொரு மாத்திரையை எடுத்து அதிகாலையில் தண்ணீ ருடன் குழப்பி வலது தோள் பட்டையில் பூசிவிடவும். சுக மாக விரேசனமுண்டாகும்.

## 20. புட்ப விரேசனம்

அழிஞ்சிக்கொட் டையுநாழி வாளநாழி
யாவின்சா ணாகமதில் வேகவைத்து
விழைந்தெடுத்துப் பொடித்ததைநீ ரிற்கரைத்து
விரைவாயா மணக்கெண்ணெய் வடிப்பதைப்போல்
செம்மையுடன் வடித்தலரிச் செண்டிற்பூசித்
திறமாபிற் பனிவைத்து தையந்தன்னிற்
பழுதாவெத் தனைதறமோந் தேதான் பார்க்கப்
பாங்காயவ் வளவுதிறம் பேதியாமே. (உ அ)

(இ-ள்)

அழிஞ்சிக்கொட்டை — 1படி
முளைநீக்கிய வாளப்பருப்பு — 1படி

இவைகளைப் பசுவின் சாணியில் பொதிந்து நன்றாக வேகவைத்துக் கழுவி இடித்துத் தண்ணீருடன் குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்து ஆமணக்கெண்ணெய் வடிப்பது போல் எண்ணெயை வடித்துக்கொள்ளவும். இந்த எண் ணெயை வேண்டும்போது அரளிப் பூச் செண்டில் தடவி இர வில் பனியில் வைத்து அதிகாலையில் முகரவும். எத்தனை திறம் முகர்ந்துபார்க்கிறோமோ அவ்வளவு திறம் மலப்பிரவ்ருத்தி உண்டாகும்.

## 21. பேதிக்கு மாத்திரை

சுக்குசயிந் தவலவணங் கடுகரோகிணி
சுகந்தருதிப் பிலிமிளகு நற்கடுக்காய்ப்
பக்குவமாய்ச் சுத்திசெய்நேர் வாளவித்தும்
பாங்காக வகைக்கொருகா செடையுங்கூட்டி
முக்கியமா மெலுமிச்சம்பழச்சாற் றாலு
முறையாக வரைத்திதனை யுண்டைபண்ணி
யக்கணமே யுதையத்தோ ருண்டையுண்ண
வகமகிழப் பேதியதா மறிந்து செய்யே. (உகூ)

[இ-ள்]

சுக்கு
இந்துப்பு
கடுகரோகிணி
திப்பிலி
மிளகு
கடுக்காய்த் தோல்
சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு

இவைகளை வகைக்கு 1 காசெடை எடுத்துக் கல்வத்திலிட்டு நசுக்கி எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாகவரைத்து மிளகள வுள்ள மாத்திரைகளாக உருட்டிவைத்துக்கொண்டு அதிகாலை யில் ஒரு உருண்டை வெந்நீருடன் விழுங்கவும், நன்கு பேதி யாகும்.

## 22. பேதிக்கு

கடுகரோ கணியும்பைங் குனிக்கடுக்காய்
காரமுள சுக்குமிள கிவைசமஞ்சேர்த்
தெடுத்திந்த நிறைக்குச்சுத் தித்தவாள
மியல்பாகக் கூட்டிநலப் பழச்சாற்றாலே
யடைவாக வரைத்துண்டை செய்துலர்த்தி
யறியசிமிழ் தனில்வைத்து தையந்தன்னிற்
றிடமாயோ ருண்டையுண்ணப் பேதியாகுந்
தேகசவுக் கியமுண்டாந் தெரிந்து செய்யே. (௩0)

(இ-ள்)

கடுகரோகிணி
பைங்குனி கடுக்காய்
சுக்கு
மிளகு

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துச் சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு 4 பலம் சேர்த்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைத்து மிளகளவுள்ள உருண்டைகளாகச்செய்து உலர்த்தவும். இவைகளை ஒரு சிமிழில் பத்திரப்படுத்தி அதிகாலையில் ஒரு உருண்டை வெந்நீருடனே விழுங்கவும்.

நன்றாகப்பேதியாகித் தேகசௌக்கியம் உண்டாகும்.

## 23. சுகபேதிக்கு

திப்பிலிமூ லஞ்சாதிக் காய்கடுக்காய்
திப்பிலிவேர்க் கொம்புகுரோ சானியோமஞ்
செம்புகருஞ் சீரகமுங் கடுகரோகிணி
சேர்த்திவையெட் டுச்சரக்குஞ் சமமாய்க்கொண்டு
வெப்பமுற விளவறுப்பாய் வறுத்திடித்து
மெல்லியதோர் சேலைதனில் வடியுங்கட்டித்
தப்பாம லுதயத்தி லளவாயுண்ண
சௌக்கியமாய்ப் பேதியது தானாம்பாரே. (௩௧)

(இ-ள்)

கண்டத்திப்பிலி
சாதிக்காய்
கடுக்காய்த்தோல்
திப்பிலி
சுக்கு
குராசானி ஓமம்

கருஞ்சீரகம்
கடுகரோகிணி

இவைகளைச் சிறு சிறு துண்டுகளாக்கி இரும்புசட்டியி லிட்டு இளவறுப்பாக வறுத்துக்கொண்டு, நன்றாக இடித்து மெல்லிய துணியில் வஸ்திரகாயஞ்செய்துகொள்ளவும்.

அதிகாலையில் ஒரு (பலமளவெடுத்து) உட்கொண்டு வெந் நீர் பருகவும்.

சுகமாகப் பேதியாகும்.

## 24. பேதிக்கு மருந்து

நேர்வாளப் பருப்பைச்சே லைக்குள்வைத்து
நெகிழாம னருக்கியதி னெண்ணெய்வாங்கிச்
சீராயன் னிறையளவு நாபிதன்னைச்
செம்மையதாய்க் கோசலத்தில் வேகவைத்து
நேர்பெறமுன் னெண்ணெய்தனிற் கலந்தரைத்து
நிறையாய்மாத் திரைசெய்து தரமறிந்து
சுருமுதை யத்திலுணப் பேதியாகுந்
தகுமிளகு நீரனம்பத் தியமதாமே. (கூஉ)

(இ-ள்)

சுத்திசெய்த நேர்வாளப் பருப்பை ஒரு துணியில் வைத்து நன்றாக நசுக்கிப் பிழிய எண்ணெய் வெளியாகும். பின்னர் வாளப் பருப்பிற்குச் சரியளவு சுத்திசெய்த நாபியைக் கூட்டிப் பசுமாட்டு மூத்திரத்தில் வேகவைக்கவும். இவ்வாறு சுத்தி கரித்தபின் இவற்றைக் கல்வத்திலிட்டு முன் எண்ணெயையும் கூட்டி நன்றாக அரைத்து மாத்திரை செய்து வைத்துக்கொள்ள வும். கடுகளவு மாத்திரை செய்தால் போதுமானது.

உடல் பலத்திற்குத் தக்கபடி ஒரு மாத்திரை அதிகாலையில் வெந்நீருடன் விழுங்கவும். நன்கு பேதியாகும். மிளகு ரசம் சேர்த்துச் சாப்பிடவும்.

# 25. விரேசனத்திற்கு உருண்டை "பேதி கஜாங்குசம்"

கோட்டங்கெந் தகம்வெண்கா ரத்தினோடிங்
　　குலிகந்தாம் பிரபற்ப மிவைதானைந்துங்
கூட்டும்சம மிதற்கிரண்டு பங்குவாளங்
　　கொண்டெலும்பிச் சம்பழச்சாற் றாலரைத்து
வாட்டமுற வுலர்த்தியிரண் டானாளத்தை
　　வாங்கிவிரு கங்கிழங்கின் சாற்றின் மத்தித்
தீட்டுகுன்றிப் பிரமாணங் குளிகைபண்ணி
　　யியனற்சிமிழ் தன்னில்வைத்துச் சாற்றக்கேளே.

சாற்றுமுன்செய் யுண்டையொன்று தேனிலாதல்
　　சாரமுள வெல்லத் திலாதல்கூட்டித்
தோற்றுகின்ற வுதயகா லத்தருந்திற்
　　சுகவிரேச னமாகும் சுவாசகாச
மாற்றலுள வந்தப்பயித் தியத்தினோடே
　　யனேகவியாதி களெல்லா மகன்றுபோகும்
மேற்றமுள பேதிகெசாங் குசமதாகு
　　மினிதான மாத்திரையி னியற்கைதானே. (௲௪)

(இ-ள்)

கோஷ்டம்
சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம்
,,　　லிங்கம்
பொரித்த வெங்காரம்
தாமிரபற்பம்

இவைகளைச் சமமெடுத்து எடுத்துக்கொண்டு இதற்கு 2 மடங்கு சுத்திசெய்த நேர்வாளம் சேர்த்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைக்கவும். மறுநாள் மெருகங்கிழங்குச் சாறுவிட்டு நன்றாகவரைத்துக் குன்றிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு உருண்டை யெடுத்துத் தேனிலோ அல்லது வெல்லத்திலோ அதிகாலையில் விழுங்க நன்றாகச் சுகபேதி யாகும்.

சுவாசகாசம், பித்தம் முதலான நோய்கள் தீரும்.

## 26. விரேசனத்திற்கு

இந்துப்பு வெங்கார நெல்லிமுள்ளி
இரதமிள கொடுதான்றிக் காய்கடுக்காய்
கெந்தகஞ்சுக் கிவைசமஞ்சேர்த் தன்னிறைக்கிக்
கிளர்ச்சியாய் சுத்திசெய்நேர் வாளங்கூட்டி
முந்துவகை யுடனரைத்தே வைத்திரண்டு
முனையான பணவெடைநேர் நெயிலருந்தி
சிந்தைமகிழ்ந் திடக்குளிர்ந்த சலமுண்டக்காற்
றிரமாய்ப்பே தியதாம்வெந் நீர்மாற்றாமே. (௩௫)

(இ-ள்)

பொரித்த இந்துப்பு
,, வெங்காரம்
நெல்லிமுள்ளி
சுத்திசெய்த பாதரசம்
மிளகு
தான்றித் தோல்
கடுக்காய்த் தோல்
சுத்தி செய்த நெல்லிக்காய் கெந்தகம்
சுக்கு

இவைகளைச் சமனெடை சேர்த்து இதற்கு சரியெடை சுத்திசெய்த நேர்வாளம் சேர்த்துக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்து வைத்துக்கொள்ளவும். கருமை நிறமுள்ள சூரண மாக இருக்கும். இதில் $6\frac{2}{3}$ குன்றியளவெடுத்து நெய்விட்டுக் குழைத்து உட்கொண்டு குளிர்ந்த தண்ணீர் பருகவும். வெந்நீர் சாப்பிடப் பேதி நிற்கும்.

## 27. பேதிக்கு மாத்திரை (சிந்தாமணி)

பேய்ப்பீர்க்கம் விரைகுறுணி கொத்துமல்லி
பேணியே பலமிரண்டு பசுவின்வெண்ணெய்
வாய்ப்பாயோர் பலம்வாளம் படியீர்காலாய்
வாங்கியிவை யகலிலிட்டு மேலேமூடித்
தூயதாகக் கலசத்துள் வைத்துமூடிச்
சுத்தமுடன் குழியில்வைத் தெருவடுக்கித்
தீயிட்டுப் புடத்தில்வரு தைலத்தோடே
திரிகடுகு கெந்திவங்க பற்பஞ்சேரே. (௩௬)

சேர்வகைக்கு மாடையிடை கலந்தரைத்து
செந்நெலினே ருண்டையது வெல்லத்துண்ணச்
சாரமுள பேதியதாங் கைகால்வெந்நீர்
தான்கழுவின் மிகப்பேதி யாங்குளிர்ந்த
நீராலே கழுவநிற்கு முன்மருந்து
நிறப்பழச்சா றுங்கலந்துந் தியினிற்பூசச்
சீராய்ப்பே தியதாகுங் கருவேற்பட்டைச்
சிறந்தகடா யம்மருந்த விதற்குமாற்றே. (௩௭)

(இ-ள்)

பேய்ப் பீர்க்கம் விதை — ஒரு மரக்கால்
கொத்தமல்லி விதை — 2 பலம்
பசுவின் வெண்ணெய் — 2 பலம்
சுத்திசெய்த நேர்வாளம் — படி (பெரியபடி)

இவைகளை இடித்து ஒரு அகலிலிட்டு நன்றாக மூடி ஒரு துவாரமுள்ள சட்டியில் வைத்து வாய்க்குத் தக்கபடி சில் இட்டுச் சீலை செய்து ஒரு குழிக்குள் வைத்து எரு வடுக்கிப் புடமிட்டுக் குழித்தைலமாக இறக்கிக்கொள்ளவும்.

இத்தைலத்துடன்,

சுக்கு
திப்பிலி
மிளகு
கெந்தக பற்பம்
வங்க பற்பம்

இவைகளை வகைக்கு (1தோலா) கூட்டி நன்றாகவரைத்து நெல்லெடையுள்ள மாத்திரைகளாகத் திரட்டி வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரையெடுத்து வெல்லத்துடன் விழுங்கவும். நன்றாகப் பேதியாகும். கை கால்களை அலம்ப வெந்நீரை உபயோகிக்கவும். குளிர்ந்த நீர்விட்டுக் கழுவினால் பேதி நிற்கும். முன் மருந்தை எலுமிச்சம்பழச் சாறுடன் கலந்து தொப்புளில் தடவ ஒரு சீராகப் பேதியாகும். பேதி அதிகமானால் கருவேலம் பட்டைக் கஷாயம் சாப்பிடவும். சோதனைக்குக் கைகண்டது.

குறிப்பு:-மாடை-1தோலா

## 28. பேதிக்கு உருண்டை (மதுபுஷ்பாதி)

அதிமதுர முந்திரிகைப் பழமிலுப்பை
யதின்பூப்பே ரீஞ்சினுட பழம்வெண்கார
மிதமுறுதிப் பிலியிவைகள் சமமாய்ச் சேர்த்தே
யின்னிறைக்கிச் சுத்திசெய்நேர் வாளங்கூட்டி
முதிர்ந்திடுகற் றாழையின்சாற் றாலரைத்து
முறையாகக் குன்றியெடை யுண்டைபண்ணி
யுதைமதி லனுபான விசேஷந்தன்னி
லுண்டிடவே சுகவிரேச னமாம்பாரே. (௩அ)

(இ-ள்)

அதிமதுரம்
திராக்ஷைப்பழம்
இலுப்பைப்பூ
பேரீச்சம்பழம்
பொரித்த வெங்காரம்
திப்பிலி

இவைகளைச் சமமெடுத்து (வகைக்கு ஒரு பலம்) ஒரு கல்வத்திலிட்டு நன்றாக வரைக்கவும். சுத்திசெய்த நேர்வாளம் 6 பலம் எடுத்து அதையும் கூட்டிச் சோற்றுக் கற்றாழைச் சாறு விட்டு நன்றாகவரைத்துக் குன்றிப்பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

அதிகாலையில் தக்க அனுபானத்துடன் உட்கொள்ளச் சுக பேதியாகும்.

T.9102



## 29. விரேசனத்திற்கு

பிரமியதன் கொழுந்தைநெருப் பதனில்வாட்டிப்
பிழிந்திசா றோர்படியி லீர்கடுக்காய்
வருதூள்சேர்த் தரைப்படியாய்க் காய்ச்சிவாங்கி
வைத்துதயந் தன்னிலளவ வாயருந்தில்
விரைவாகச் சுகவிரேச னமதாகும்
மெய்க்குமா ரோக்கியமா மெய்மையாகத்
தருமமதாய்ச் செங்கோலில் நடத்துகின்ற
சரபபூ பதியுணர்ந்து சாற்றும்வாரே. (௨௯)

(இ-ள்)

பிரமிய வழுக்கைக் கொழுந்தை அனலில் வாட்டிப் பிழிந்த சாறு 1 படியுடன் 2 கடுக்காயின் தூளைச் சேர்த்து அடுப்பின் மேலேற்றி ½ படியாகச் சுண்டக் காய்ச்சவும். இக்கஷாயத்தை அதிகாலையில் உட்கொள்ளவும்.

சுகமாகப் பேதியாகும். உடம்பிற்கும் நல்லது.

மாற்று:—

மோர் சாதம் சாப்பிடவும்.

## 30. விரேசனத்திற்கு

பேயின்கொம் மட்டியதை யிடித்துச்சாறு
பிழிந்திரண்டு படியதிலோர் படியுப்பிட்டுத்
தூய்தான பாண்டத்தி லிட்டுப்பின்பு
துரிதமா யடுப்பேற்றி வறுத்தவுப்பை
நேயமுட னேயெடுத்து வைத்துக்கொண்டு
நிறையான காசெடையொன் றுதயந்தன்னில்
வாய்ப்பாக வுண்டிடவே பேதியாகும்
மருவியிதை மூன்றுநா ளுணவாந்தானே. (௩௰)

(இ-ள்)

பேய்க்கொமட்டிச்சாறு 2 படி எடுத்து அதனுடன் உப்பு ஒரு படியிட்டுக் கரைத்து அடுப்பின் மேலேற்றி நன்றாகக்

கொதிக்கவைக்கவும். கடைசியில் உப்பாகும். இவ்வுப்பைக் காற்றுப்புகாதபடி ஒரு சீசாவில் பத்திரப்படுத்தி அதிகாலை யில் ஒரு காசளவெடுத்து உட்கொள்ளவும். நன்கு பேதியாகும். இவ்வாறு 3 நாட்கள் உண்ணவும்.

## (b) வேறு

தான்றிக்காய் திப்பிலிசுக் குக்கடுக்காய்
சாரமுள மிளகிவைகள் சமமிடித்துத்
தோன்றச்சூ ரணித்துவடிக் கட்டிப்பின்பத்
தூளைவெரு கடியெடுத்தவ் வுப்புமிட்டு
மூன்றுநா ளுணக்கட்டி கரையும்மாற்று
முருங்கையிலைக் கடாயமது கொடுக்கலாகும்
மூன்றுபுகை யிலையோடு புளியைநீக்க
லுரிதான்பத் தியமாமு கந்துசெய்யே. (சக)

(இ-ள்)

தான்றித்தோல்
சுக்கு
மிளகு
திப்பிலி
கடுக்காய்த்தோல்.

இவைகளைச் சமமெடுத்து இடித்துச் சூரணஞ் செய்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, ஒரு வெருகடியளவு சூரணம் எடுத்து அதற்குச் சரியளவு ஷை கொம்மட்டி உப்பும் சேர்த்து 3 நாட்களுக்கு அதிகாலையில் உட்கொள்ளக் கொடுக்கவும். வயிற்றிலுள்ள கட்டிகள் கரையும்.

பேதி அதிகமாகில்:

முருங்கையிலைக் கஷாயம் சாப்பிடவும். புளி புகையிலை இவைகளை நீக்கிவிடவும்.

## 31. பேதிக்குச் சூரணம்

சிவதைவேர் தனிற்காடி விட்டவித்துத்
திரும்பவுமே யாவின்பா லதிலவித்துத்
தவறாமல் வெயிலதனி லுலர்த்திவாங்கித்
தானிடித்த சூரணத்தன் னிறைக்குப்பாதி

துவர்கடுக்காய்த் தூள்கலந்து மிளகுசுக்குச்
சொல்லியதிப் பிலியிவைகள் பொடித்துச்சேர்த்துக்
கவனமா யுதையத்தி லளவாயுண்ணக்
கடிதாக வயிறுபே தியதாம்பாரே. (சஉ)

(இ-ள்)

சிவதை வேரை வேண்டிய அளவெடுத்துக்கொண்டு உள்ளேயிருக்கும் நரம்பை நீக்கி, மேற்பட்டையைக் காடி விட்டு அடுப்பின்மேலேற்றிக் கொதிக்கவைத்து அலம்பியபின் மறுபடியும் பசுவின்பாலில் அவித்துக்கொள்ளவும். பின்பு இவை களை நன்றாக வெயிலில் உலர்த்திக்கெண்டு இடித்துச் சூரணஞ் செய்துகொள்ளவும். பின்னர், கடுக்காய்த்தோல், மிளகு, சுக்கு, திப்பிலி இவைகளைச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து முன்கூறிய சிவதைச் சூரணத்தின் நிறைக்குப் பாதி யளவாகச் சேர்த்து ஒன்று கலந்து கொள்ளவும். இச்சூரணத் தில் மூவிரல்கொள்ளுமளவெடுத்து வெந்நீருடன் உட்கொள்ளச் சுகமாகப் பேதியாகும்.

## 32. விரேசனத் தைலம்

இரதமுங்கெந் தகநேர்வா ளமும்வெட்பாலை
யின்னரிசி வெண்கார மேரண்டத்தின்
விரைகார்போ கரிசிபுர சம்வித்தோடு
விரும்புகடுக் காய்சிவதை வேர்புங்கம்வேர்
உரியபதி னொன்றிவைகா செடையதாக
யொன்றுமுத லொவ்வொன்றா யுயர்த்திக்கொண்டு
வருதுகைகா சிடையறுபத் தாறுங்கூட்டி
வைத்ததனைப் பசுவின்பால் வார்த்தரைத்தே. (சரு)

அரைத்திடுநாள் மூணதன்பின் வெயிலிற்றானு
மைந்துநாள் வைக்கவருந் தைலந்தன்னை
யுரியசிமிழ் தன்னிலடைத் துந்திதன்னி
லுறையவரைப் பணவெடைபூ சிடினுமன்றி

விரைவாக முகர்ந்திடினும் பேதியாகு
மிகுந்துவிரே சனமாகி லிரண்டினிற்கும்
விரை(ச)யாறுஞ் சந்தனம் பூசிடவேநிற்கு
மெய்மையா யிம்முறையை விரும்பிச்செய்யே. (சச)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| சுத்தி செய்த பாதரஸம் | | 1 | காசெடை |
| ,, | நெல்லிக்காய் கெந்தகம் | 2 | ,, |
| ,, | நேர்வாளம் | 3 | ,, |
| வெட்பாலையரிசி | | 4 | ,, |
| பொரித்த வெங்காரம் | | 5 | ,, |
| ஆமணக்கம் விதை | | 6 | ,, |
| கார்போகவரிசி | | 7 | ,, |
| புரசம் வித்து | | 8 | ,, |
| கடுக்காய்த்தோல் | | 9 | ,, |
| சிவதை வேர் | | 10 | ,, |
| புங்கம் வேர் | | 11 | ,, |

முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக வரைத்துக் கஜ்ஜலி செய்து பின்னர் மற்ற சரக்குகளைத் தூள் செய்து கல்வத்திலிட்டுப் பசுவின்பால் விட்டு நன்றாக வரைக்கவும். இவ்வாறு 3 நாட்கள் அரைக்கவும். பின்னரிதனை 5 நாட்கள் கடும் வெயிலில் சாய்த்து வைக்கவும். இதிலிருந்து தைலம் இறங்கும். இத்தைலத்தை ஒரு சிமிழில் பத்திரப்படுத்தி, $\frac{1}{4}$ பணவெடையெடுத்துத் தொப்புளில் பூசவும். அல்லது இத்தைலத்தை முகரவும்.

நன்றாகப் பேதியாகும். 2 முதல் 6 விசை பேதியாகும். சந்தனம் பூச மலம் கட்டும்.

## 33. சுகபேதிக்குத் தைலம்

நேர்வாளப் பருப்புடன்கெந் தகம்வெண்கார
நீரடியின் வித்துசிற்றா மணக்கம்வித்தோ
டோரைந்துஞ் சமமாய்த்தேங் காய்க்குள் வைத்தே
யுடன்வெயிலில் வைக்கவருந் தைலந்தன்னைக்

கூர்மையுள சிமிழதனி லடைத்துக்கொண்டு
குன்றியள வெடுத்துந்தி தன்னிற்பூச
நேர்மையாய்ச் சுகவிரேச னமதாகு
நிசமதாய்க் கைகண்ட முறையிதாமே. (சரு)

(இ-ள்)

சுத்தி செய்த நேர்வாளப் பருப்பு
,, கெந்தகம்
பொரித்த வெங்காரம்
நீரடிமுத்து
ஆமணக்கம் விதை

இவைகளைச் சமமெடுத்து இடித்து ஒரு முற்றிய தேங்காயின் கண்களைத் திறந்து அதனுள் திணித்துக் கடும் வெயிலில் வைக்கத் தைலமிறங்கும். இதனையொரு சிமிழில் பத்திரப்படுத்தவும். இவ்வெண்ணெயில் ஒரு குன்றியளவெடுத்துத் தொப்புளில் பூசவும். சுகவிரேசனம் உண்டாகும்.

## 34. பேதிக்கு (விரேசன லேகியம்)

கள்ளிப்பால் பசுவின்பால் வகைக்காழாக்குக்
கரும்பினது வெல்லமெலு மிச்சங்காய்நே
ருள்ளபடி யிவைமூன்றும் பாண்டத்திட்டே
யுகந்தவடுப் பினிற்பாகு பதமாய்க்காய்ச்சி
மெள்ளவெடுத் தம்மருந்தை நல்பருத்தி
வித்தினள வுண்டதன்மேல் வெந்நீர்கொள்ளத்
தெள்ளியபே தியதாகும் நோயுற்றோர்க்குத்
திறமான மிளகுநீ ரனமுமாமே. (சச)

அனமுடன்மோ ருணலாகும் பிணியினோர்க
ளக்கணங்கா மாலைவிட பாகம்பாண்டு
முனையாக வருந்தாபச் சுரத்தினூடே
முதிர்ந்திடுசீ தச்சுரமுங் கவுசைகெண்டை

தனமான மகோதரநேர் யிவைகளெல்லாங்
கதிரவன்முன் பனிபோலே காணாதோடும்
நினவாக விம்முறைகை கண்டதாகு
நீதிசர பேந்திரனி கழ்த்தும்வாறே. (௩௭).

(இ-ள்)

| | | |
|---|---|---|
| கள்ளிப்பால் | —1 ஆழாக்கு | |
| பசுவின்பால் | —1 ,, | |
| வெல்லம் | —ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் | |

இவைகளை ஒரு பானையிலிட்டு அடுப்பின்மேலேற்றிப் பாகாக்கி இறக்கி வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு பருத்தி வித்தளவு உட்கொண்டு வெந்நீர் சாப்பிடச் சுகபேதியாகும். மிளகு ரஸம் கூட்டவும். மோர் சாதமும் உட்கொள்ளலாம். இதனால் கணைச்சூடு, காமாலை, விஷபாகம், பாண்டு, தாபஜ்வரம், சீதஜ்வரம், கவுசை, கெண்டை, மகோதரம் முதலான ரோகங்களும் தீரும்.

## 35. பேதிக்கு

முற்றியதேங் காய்க்குள்ளே முதிர்ந்தவா ளத்தைவைத்தே
யுற்றதோ ரடுப்பினுள்ளே யோரெட்டுத் தினம்புதைத்து
மற்றைநா ளெடுத்தரைத்து வழித்திளவெந் நீரதன்னில்
சொற்பமாய் கலந்தருந்திற் சுகவிரே சனமதாமே. (௩௮)

(இ-ள்)

ஒரு முற்றிய தேங்காய்க்குள் சுத்தி செய்த நேர்வாளத்தை அரைத்து, அடைத்து, மண் பொதிந்து அடுப்பங்கரையில் புதைத்து, 8 நாட்கள் சென்ற பின்னர் எடுத்துத் தேங்காயை யுடைத்து, ஓட்டை நீக்கிவிட்டு மற்றவைகளை அம்மியின்மேல் வைத்து நன்றாகவரைத்து வழித்து இளம் சூடான வெந்நீருடன் உட்கொள்ளவும். சுமார் ½ சுண்டைக்காயளவு போதுமானது.

குறிப்பு;— சீதம் விழும். சுக விரேசன முண்டாகும், போது மென்றால் மோர் சாதம் சாப்பிடவும்.

## 36. பேதிக்கு மருந்து

மிளகிரு மூன்றுசுக்கு
　　மேமூன்று வாளமொன்று
வளமாஞ்சா திலிங்க மூன்று
　　மற்றிந்த வகை மஞ்சாடி
யளவாகப் பொடித்தா வெண்ணெ
　　யதுகலந் தருந்தித் தண்ணீர்
கொளவிரே சனமாம் வெந்நீர்
　　குடித்திடில் நிற்குந்தானே. (சுகூ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| மிளகு | — 6 | மஞ்சாடி |
| சுக்கு | — 3 | ,, |
| சுத்திசெய்த வாளம் | — 1 | ,, |
| ,, லிங்கம் | — 3 | ,, |

இவைகளை நன்றாகச் சூரணித்து வைத்துக்கொண்டு வெண்ணெயுடன் குழைத்து அருந்தவும். மேலே சுத்தஜலம் சாப்பி நன்கு பேதியாகும். வெந்நீர் உட்கொள்ள மலம் கட்டும்.

குறிப்பு.- 2 குன்றி ஒரு மஞ்சாடி.

## 37. பேதிக்கு எண்ணெய்

செருப்படி யொருசிறங்கை
　　சேர்த்திடித் துப்பிழிந்து
வருநல சாறெடுத்தா
　　மணக்கெண்ணெய் தனிற்கலந்தே
யிரவியி னுதையந்தன்னி
　　லிதையள வாகவாங்கிப்
பருகவே வயிறுபோகும்
　　பார்த்துக்கை கண்டதாமே, (நுய)

(இ-ள்)

(சிறு) செருப்படி- ஒரு சிறங்கை யெடுத்து இடித்துப் பிழிந்த சாற்றுடன் ஆமணக்கெண்ணெய் சேர்த்து (சரியளவு) விடியற்காலையில் பருகவும்.

நன்றாக மலம் கழியும், கைகண்டது.

## 38. பேதிக்கு மருந்து

புழுங்கலி னரிசிநீரிற்
பொடித்துச்சேர்த் துத்தெளிந்து
விழுந்தண் ணீரிறுத்துச்சுக்கு
மிளகுள்ளி வசம்போடோமஞ்
செழுமையாயிம்மருந்தைச்
சேர்த்துப்பச் சையதாய்த்தூள்செய்
தழுந்தவே யரைதண்ணீரி
லருந்திடப் பேதியாமே. (கடு)

புழுங்கலரிசியைக் களைந்த கழுநீரைச் சிறிது நேரம் வைத்திருந்து அதன் மேல் நீரையிறுத்து, அதனுடன் சுக்கு, மிளகு, பூண்டு, வசம்பு, ஓமம் இவைகளைச் சேர்த்திடித்த சூரணத்தை யிட்டு அருந்தவும். நன்கு பேதியாகும்.

## 39. விரேசனம் (மேகநாத குளிகை)

அரிதகி யிரண்டுசுத்தி
யானநேர் வாளமெட்டே
யுரியசாத் திரத்தின்பேதி
யுயர்வெங்கா ரம்வகக்
யரையதாங் கடுகுரேணிகே
யாமணக் கின்பருப்பு
விருப்பமா மிலிங்கத்தேடு
விழலரி சியும்வகைக்கே

வகைகளுக் கொன்றிதெல்லாம்
வராகனெ திடையாய்ச் சேர்த்துத்
தகைபெற வுயர்கற்றாழைச்
சாற்றினா லரைத்தெடுத்துத்
தொகைபெறச் சிறியதாகத்
தோன்றிட வுண்டைபண்ணி
வகையதா யுண்டையொன்று
வாழையின் பழத்திலுண்ணே. (ருங)

உண்ணவே பேதியாகு
முடன்பேதி யதிகமானால்
நண்ணிய வெந்நீர்கொள்ள
நயமதா மதிகமாக
வெண்ணினிற் குளிர்ந்ததண்ணீ
ரியல்பதா யருந்தலாகு
முண்மையாய் மன்னற்கோது
முகந்தாரோக் கியமதாமே. (ருச)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| கடுக்காய்த் தோல் | — 2 | வராகனெடை |
| சுத்திசெய்த நேர்வாளம் | — 8 | ,, |
| சாத்திரபேதி | — $\frac{1}{2}$ | ,, |
| பொரித்த வெங்காரம் | — $\frac{1}{2}$ | ,, |
| கடுகரோகிணி | — 1 | ,, |
| ஆமணக்கம்பருப்பு | — 1 | ,, |
| லிங்கம் (சுத்தி செய்தது) | — 1 | ,, |
| விழலரிசி | — 1 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுச் சோற்றுக்கற்றாழைச் சாறு விட்டு நன்றாகவரைத்துத் தூதுவள்ங்காயளவுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரையை வாழைப்பழத்துடன் சேர்த்து உட்கொள்ளவும்.

பேதி அதிகமாக வேண்டுமானால் குளிர்ந்த ஜலமும், நிற்க வேண்டுமானால் வெந்நீரும் உட்கொள்ளவும்.

## 40. பேதிக்கு மருந்து

இரதங் கெந்தகம் பங்கோ
　　ரிரண்டரி தாரமொன்று
பெருந்திரி கடுகு டன்றிப்
　　பிலிசிவதை யுமும்மூன்று
மிருமூன்று பங்குவாள
　　மீதெலாஞ் சேர்த்தரைத்தே
யொருபண வெடைவெல்லத்தி
　　லுரிமையா யுண்ணலாமே. (ருரு)

உண்டிட தன்றிவாழைப்
　　பழத்தினு முறக்கலந்துட்
கொண்டிடப் பேதியாகுங்
　　கூர்மையாஞ் சுரமுந்தீருங்
கண்டுகொ ளிதற்கு மாற்றுக்
　　கலந்துமோ ரனமருந்தல்
பண்டையோ ருரைத்தநூலைப்
　　பார்த்துணர்ந் திதனைச்செய்யே. (ருசு)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | | — 2 | பலம் |
| ,, | நெல்லிக்காய் கெந்தகம் | — 2 | ,, |
| ,, | தாளகம் | — 1 | ,, |
| சுக்கு | | — 3 | ,, |
| திப்பிலி | | — 6 | ,, |
| மிளகு | | — 3 | ,, |
| சிவதை (சுத்திசெய்தது) | | — 3 | ,, |
| சுத்தி செய்த நேர்வாளம் | | — 6 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டுச் சுத்த ஜலம் விட்டு நன்றாக அரைத்து மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டவும். இதி லொரு உருண்டையை ஒரு பணவெடை வெல்லத்துடன்

உருட்டி விழுங்கவும். அல்லது வாழைப்பழத்துடன் கூட்டிச் சாப்பிடவும்.

நன்றாகப் பேதியாகி ஜ்வரங்களும் தீரும்.

## 41. தண்ணீரில் விரேசனம் (இச்சா பேதி)

சூதமொன் றேகடுக்கா
யேழுமே சுக்குமூன்று
தீதிலா மிளகுநான்கு
திப்பிலி யைந்துவாள
மோதுமேழ் வெங்காரந்தா
னோராறிவ் வகையெல்லாங்
கோதில்கா செடையதாகக்
குணமதாய்க் கூட்டிக்கொள்ளே. (ருள)

கூட்டியிம் மருந்தையெல்லாங்
குழிந்தகல் வத்திலிட்டு
நாட்டமா யிதற்குநேரா
நற்பழ வெல்லஞ்சேர்த்து
நீட்டியே யரைத்துக்குன்றி
நேரதா யுண்டைபண்ணித்
தேட்டமாய்க் குளிர்ந்தநீரிற்
சேர்த்துணப் பேதியாமே. (ருஅ)

(இ-ள்)

| | | | |
|---|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | — | 1 | காசெடை |
| கடுக்காய்த்தோல் | — | 7 | ,, |
| சுக்கு | — | 3 | ,, |
| மிளகு | — | 4 | ,, |
| திப்பிலி | — | 5 | ,, |
| சுத்திசெய்த வாளம் | — | 7 | ,, |
| பொரித்த வெங்காரம் | — | 6 | ,, |

இவைகளை ஒரு குழிந்த கல்வத்திலிட்டு நன்றாகப் பொடியாகும் வரை யரைத்து இதற்குச் சமன் பழய வெல்லம்கூட்டி

மறுபடியும் மெழுகுபோலரைத்துக் குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரை யெடுத்துக் குளிர்ந்த ஜலத்துடன் விழுங்க நன்கு பேதியாகும்.

குறிப்பு:— நெல்லிக்காய் கெந்தகம் 2 காசெடை சேர்க்கவும் என்று காணப்படுகிறது. (68 நெ.)

## 42. விரேசனத்திற்கு உருண்டை

இரதங்கெந் தகம்வெண்கார
மிந்துப்பிவ்வ கைக்கொவ்வொன்று
திரிபலை மூன்றுக்கொன்று
திரிகடுகொ ருமூன்றுக்கொன்
றரியவா ளந்தானாறு
தாம்வராக னெடையதாகத்
திறமுள குமரிச்சாற்றாற்
செம்மையா யரைத்திடாயே. (ருகூ)

அரைத்தெடுத் ததனைக்குன்றி
யளவதா யுண்டைசெய்து
தாமறிந் தோரிரண்டு
தானிஞ்சிச் சாற்றிலாத
லுரியவா ழைப்பழத்தி
லுயர்ந்தவெல் லத்திலாத
லருந்திடப் பேதியாகு
மாமம்போம் வெந்நீருண்ணே. (சூ௰)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | — 1 | வராகனெடை |
| ,, நெல்லிக்காய் கெந்தகம் | — 1 | ,, |
| பொரித்த வெங்காரம் | — 1 | ,, |
| ,, இந்துப்பு | — 1 | ,, |
| கடுக்காய்த் தோல், நெல்லி வற்றல், தான்றித் தோல் | — 1 | ,, |

சுக்கு
திப்பிலி
மிளகு } — 1 வராகனெடை
சுத்திசெய்த நேர்வாளம் — 6 ,,

இவைகளுள் ரஸத்தையும் கெந்தகத்தையும் முதலில் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலிசெய்து பின்பு மற்ற சரக்குகளைச் சேர்த்துச் சோற்றுக்கற்றாழைச் சாறுவிட்டு அரைக்கவும், இவைகளைக் குன்றியளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும். ஒன்றோ அல்லது 2 மாத்திரையோ எடுத்து, இஞ்சிச் சாற்றிலோ அல்லது வாழைப்பழத்திலோ அல்லது வெல்லத்திலோ உட்கொள்ளவும்.

நன்றாகப் பேதியாகும். ஆமம் கழியும். வெந்நீர் சாதம் சாப்பிடவும்.

## 43. விரேசனத்திற்கு

சுத்திசெய் வாளநான்கு
சுக்கிந்துப் புங்கடுக்கா
யொத்தநன் மிளகுநான்கி
னொவ்வொன்று பங்கதாக
வுத்தமச் சம்பீரச்சா
றுடனரைத் துண்டைபண்ணி
சித்திரச் சிமிழில்வைத்துச்
செய்முறை யுரிமைகேளே. (சுக)

உரியதா யனுபானத்தி
லுதையகா லத்திலேதா
னருந்திடிற் பேதியாகு
மாவின்மோ ரன்னமாற்றாம்
வருத்தமாய்க் கட்டுப்பட்ட
வாயுவுந் தீர்ந்துபோகுந்
திருத்தமா யீதுணர்ந்து
செய்துகை கண்டதாமே. (சுஉ)

[இ-ள்]

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த நேர்வாளம் | — 4 | வராகனெடை |
| சுக்கு | — 1 | ,, |
| பொரித்த இந்துப்பு | — 1 | ,, |
| கடுக்காய்த் தோல் | — 1 | ,, |
| மிளகு | — 1 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாக அரைத்துக் குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டவும். இதை நிழலில் உலர்த்தி ஒரு புதிய சிமிழில் பத்திரப்படுத்தவும்.

இதில் ஒரு மாத்திரையெடுத்து விடியற்காலத்தில் தண்ணீருடன் உட்கொள்ள நன்கு பேதியாகும். பேதியதிகமாகில் மோர் சாதம் சாப்பிடவும். வாயு கட்டுகள் தீரும்.

## 44. பேதிக்குச் சூரணம்

திருகுகள்ளி யிநற்பட்டை
　　திறமையா யிடித்துவாங்கி
யரியதோ ராவின்பாலா
　　லவித்ததை யுலர்த்திப்பின்பு
விரைவுடன் சூரணித்து
　　விரும்பியுண் பேதியாகும்
முரியசந் தனமும்பூசி
　　யுண்ணாவின் பால்மாற்றாமே. (சுஙு)

[இ-ள்]

திருகுக்கள்ளியின் பட்டையைப் பசுவின் பால் விட்டு அவித்துக் காயவைக்கவும். உலர்ந்த பின்பு இதையிடித்து வஸ்திரகாயஞ் செய்யவும்.

இதில் மூவிரல்கொள்ளுமளவெடுத்து வெந்நீருடன் உட்கொள்ள நன்கு பேதியாகும். பேதி நிற்கவேண்டுமெனில் உடம்பில் சந்தனம் பூசிக்கொள்ளவும். பசுவின் பால் சாப்பிட்டாலும் மலம் கட்டுப்படும்.

## 45. பேதிக்கு உருண்டை

கடுகுரோ கணியும்வெள்ளைக்
காக்கண வேரிற்பட்டை
கொடியதிப் பிலிவெங்காரங்
கூறிய சிவதைவேரு
நெடியசா றடையின்வேரு
நேர்மிள கிவைசமன்சேர்த்
திடுமதிற் பாதிவாள
மியல்பதாய்க் கூட்டிடாயே. (கூ௧)

இடுபிர மியின்சாற்றாலே
யீதெலா மரைத்தெடுத்தே
துடரியின் பழநேருண்டை
துய்யதாய்ச் செய்துவெந்நீ
ரடவுடன் பழவெல்லத்தி
லரியதோரிஞ்சிச் சாற்றிற்
றிடமுடன் கலந்துணப்பே
தியதாகுஞ் சீதம்போமே. (கூ௨)

(இ-ள்)

கடுகுரோகிணி
வெள்ளைக்காக்கணவேர்ப்பட்டை
திப்பிலி
பொரித்த வெங்காரம்
சுத்திசெய்த சிவதைவேர்
மிளகு
சாறடைவேர்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து நன்றாக வரைத்துக்கொண்டு சுத்திசெய்த வாளம் $3\frac{1}{2}$ பலம் கூட்டிப் பிரமிய வழுக்கைச்சாறு விட்டு நன்றாக வரைத்துத் துடரிப்பழம் சுண்டைக்காய்ப் பிரமாணமுள்ள மாத்திரைகளாகச்செய்து வைத்துக்கொண்டு வெந்நீரிலோ, இஞ்சிச் சாற்றிலோ அல்லது பழய வெல்லத்திலோ சேர்த்து அதிகாலையில் ஒரு மாத்திரை விழுங்க நன்கு பேதியாகும். சீதக்கட்டுகள் விடும்.

## 46. குளிர்ந்த நீரிற் பேதி

சிறுகுறட் டையின்வேர்த்தூளைச்
சேர்த்துமே பழந்தண்ணீரின்
நிறையதா யருந்தியதண்
ணீரடிக் கடியேயுண்ண
முறைமையாய்ப் பேதியாகு
மோரச னத்திலாதற்
றிறமையா வெந்நீராதல்
சேர்த்துண நிற்குந்தானே. (௫௬)

(இ-ள்)

சிறுகுறட்டைவேரைக் கொண்டுவந்து உலர்த்திக் கல்லுரலி லிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும். இதில் (ஒருபலமளவு) தூள் எடுத்து $\frac{7}{8}$ சேர் பழந் தண்ணீருடன் சேர்த்துப் பருகவும். தண்ணீர் அடிக்கடி உட்கொள்ளவும். நன்றாகப் பேதியாகும்.

பேதியதிகமானால் மோர் சாதம் அல்லது வெந்நீர் சாதம் சாப்பிட நிற்கும்.

## 47. விரேசனத்திற்கு மருந்து (இச்சா பேதி)

மிளகுநான் கிரதமொன்று
வெண்கார மூன்றுசுக்கு
வளமுட னைந்துகெந்தி
யிரண்டுநேர் வாளமேழு
யளவதாய்க் கடுக்காய்நான்கோ
டாகுங்கா சிடையிவைக்கே
யுளமகிழ் வெல்லநேரா
யுடன்கலந் தரைத்திடாயே. (௬௭)

அரைத்ததை யுண்டைசெய்தே
யனுபான விசேடந்தன்னி
லருந்திடப் பேதியாகு
மதிகம தாகின்மாற்று

பொருந்திய மோருஞ்சோறும்
புசித்திட வுடனேநிற்குந்
திருந்தவா ராய்ந்துபார்த்துச்
செய்துகை கண்டதாமே. (சுஅ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| மிளகு | — 4 | வராகனெடை |
| சுத்திசெய்த பாதரஸம் | — 1 | ,, |
| ,, கெந்தகம் | — 2 | ,, |
| ,, நேர்வாளம் | — 7 | ,, |
| பொரித்த வெங்காரம் | — 3 | ,, |
| சுக்கு | — 5 | ,, |
| கடுக்காய்த்தோல் | — 4 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு நன்றாகப் பொடியாகும் வண்ணமரைத்து இதற்குச் சரிநிறை வெல்லம் சேர்த்து இடித்து வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு சுண்டைக்காயளவெடுத்து (ப் பாலிலோ அல்லது தண்ணீரிலோ) உட்கொள்ள நன்கு பேதியாகும். அதிகமாய்ப் பேதியானால் மோர்சாதம் சாப்பிடவும், உடனே நிற்கும்.

## 48. சுக விரேசனம்

பேய்ப்பீர்க்கம் விரையை நன்றாய்ப்
பிடித்தரைத் தெண்ணெய் தன்னில்
வாய்ப்பாய்ச்சேர்த் துள்ளங்காலில்
வளர்ந்திடு நாபிதன்னிற்
றூயதாகப் பூசவேதான்
சுகவிரே சனமதாகு
மாய்ந்துமே செய்துகண்ட
வரியநன் முறையிதாமே. (சுகூ)

(இ-ள்)

பேய்ப் பீர்க்கம் விதை ஒருபிடி யெடுத்து நல்லெண்ணெய் விட்டு நன்றாக வரைத்து உள்ளங்கால், தொப்புள் முதலான விடங்களில் பூசவும். சுகவிரேசனமுண்டாகும்.

## 49. குளிர்ந்த தண்ணீரில் விரேசனம்

வாளமிரதங் கெந்தகமா
மணக்கின் பருப்பும வெங்கார
நீளுங்கலுவந் தனிலெல்லாம்
நிறுத்துச் சமமாய்க் கூட்டிவைத்துத்
தூளதாக்கி யரைத்தெடுத்துத்
துய்யநீரிற் பணவெடைகொள்
மீளும்பேதி மிகுந்துவிடில்
வெந்நீ ரனம்பின் மோரனமே. (௭0)

(இ-ள்)

சுத்திசெய்த நேர்வாளம்
,, பாதரஸம்
,, நெல்லிக்காய் கெந்தகம்
கொட்டைமுத்துப் பருப்பு
பொரித்த வெங்காரம்

இவைகளைக் கல்வத்திலிட்டுச்(சமனெடை) நன்றாக வரைத்துச் சூரணித்து வைத்துக்கொள்ளவும். இதில் $3\frac{1}{3}$ குன்றியளவெடுத்துக் குளிர்ந்த நீரில் உட்கொள்ளவும்.

நன்கு பேதியாகும். பேதியதிகமாகில் வெந்நீர் சாதமோ, மோர் சாதமோ சாப்பிடவும்.

## 50. பேதிக்கு

நேர்வாளத்தின் விரையெட்டு
நிலைத்தாமணக்கம் விரைநான்கும்
பேரா மிலிங்க மோரிரண்டும்
பெருக்க விவைபங் காயரைத்துச்
சீராய்க்குன்றி யிடைவெல்லத்திற்
றின்னச்சுகபே தியதாகு
நீர்கொண் டனமு மோரனமு
நேம முறக்கொள் மாற்றாமே. (௭க)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த நேர்வாளம் | — 8 | விதை |
| தோல் நீக்கிய ஆமணக்கம் விதை | — 4 | ,, |
| சுத்தி செய்த லிங்கம் | — 2 | ,, |

இவைகளை நன்றாக அரைத்துச் சரியெடை யெடுத்துப் பழய வெல்லத்துடன் கூட்டி ஒரு குன்றிப் பிரமாணமெடுத்து உட்கொள்ளவும். நன்றாக பேதியாகும். அதிகமாகில் வெந்நீர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிடவும்.

## 51. பேதிக்குச் சூரணம் (விரேசன சூரணம்)

ஏலமிளகு வாய்விளங்க
  மிலவங்கந் திப்பிலிகோரை
மூலநெல்லிப் பருப்புசுக்குமு
  திர்ந்தகடுக் காயிவைசமமாய்ச்
சாலவிடித்த சூரணநற்
  றண்ணீர்தன்னில் பாக்களவு
சீலமுடனே யுண்டிடவே
  திறமாய்ச்சுகபே தியதாமே. (எஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | வாயுவிடங்கம் |
| மிளகு | கிராம்பு |
| திப்பிலி | கோரைக்கிழங்கு |
| நெல்லிவிதைப் பருப்பு | சுக்கு |
| முற்றிய கடுக்காய் | |

இவைகளைச் சமமெடை யெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்கொள்ளவும். இச்சூரணத்தில் ஒரு பாக்கள வெடுத்து சுத்த ஜலத்தில் உட்கொள்ளவும். நன்கு சுகபேதி ஆகும்.

குறிப்பு :-

''68 நெ. சுவடியில் முள்ளிக்காயளவு வெந்நீரில் உட்கொள் ளவும்'' என்று காணப்படுகிறது.

## 52. பேதிக்கு மருந்து

இலுப்பையின்பூற் றானொன்று
மியம்புங்கடுரோ கணியிரண்டு
நலங்கொணேர்வா ளம்மூன்று
நயந்துபங்க தாயெடுத்து
வலுவாய்ப் பழச்சாற் றாலரைத்த
மருந்தைக்குன்றி யெடைவெல்லத்திற்
கலந்தேயுணப்பே தியதாங்கை
கண்டதுமோரன்ன முமாற்றே. (எசு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| இலுப்பைப்பூ | — 1 | பலம் |
| கடுகுரோகணி | — 2 | ,, |
| சுத்திசெய்த நேர்வாளம் | — 3 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு நன்கு அரைத்துக் குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இதிலொரு மாத்திரையெடுத்து வெல்லத்துடன் சேர்த்து விழுங்கவும். நன்கு பேதியாகும். மோர் சாதம் சாப்பிட மலம் கட்டும்.

## 53. விரேசனத்திற்கு

பொரித்திட் டெடுத்த வெங்காரம்
புகலுங்கெந்தி வகைக்கிரண்டா
மிரதமொன்று நேர்வாள
மீரைந்திவை காசெடையாய்த்
திரமாயரைத்துப் பணவெடைநேர்
சிறந்தகுளிர்நீர் தனிலுண்ண
விரைவாய்ச்சுகபே தியதாகும்
வெந்நீ ரனமாற் றாமிதற்கே. (எச)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பொரித்த வெங்காரம் | — 2 | காசெடை |
| சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் | — 2 | ,, |
| ,, பாதரஸம் | — 1 | ,, |
| ,, நேர்வாளம் | —10 | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு நன்றாகவரைத்துச் சூரணஞ் செய்துகொள்ளவும். இதில் 3½ குன்றிப்பிரமாண மெடுத்துக் குளிர்ந்த ஜலத்துடன் உட்கொள்ளவும். நன்கு பேதியாகும். வெந்நீர் சாதம் உட்கொண்டால் மலம் இறுகும்.

## 54. விரேசனத்திற்கு

கடுக்காய் வாள மரிதாரங்
கருகுந்தான்றிக் காயிவைநே
ரெடுத்தே யரைத்தோரளவாக
வியல்பா யுண்ணப் பேதியதா
மிடுக்காய்ப் பேதி மிகவாக
வேண்டிற் கள்ளிப் பாலதனை
விடுத்தே யரைத்துண் டைகள்செய்து
விருப்ப மாயுட் கொள்வாயே. (எரு)

(இ-ள்)

கடுக்காய்த்தோல்
சுத்திசெய்த நேர்வாளம்
,, அரிதாரம்
தான்றிக்காய்த்தோல்

இவைகளை யொன்று சேர்த்து நன்கு சூரணித்து (சமனெடை) வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதில் 3 குன்றி யெடுத்து உட்கொள்ள,

நன்கு பேதியாகும். அதிகம் பேதியாகவேண்டுமெனில் கள்ளிப்பால் விட்டு நன்றாக அரைத்துச் சுண்டைக்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொண்டு உட்கொள்ளவும்.

## 55. பேதிக்கு உருண்டை

சுக்குங்கடுரோ கணிகடுக்காய்
    சொல்லோர்வகைக்குக் காசிரண்டு
மிக்கவாளங் காசைந்து
    மேலாமணக்கெண் ணெயுமுழக்கா
சொக்கவிவையெல்லாமரைத்தே
    யுண்டைசெய்தே யுதையமுணிற்
றக்கசுகபே தியாகுஞ்
    சரீரந்தனக்கா ரோக்கியமே. (எசு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுக்கு | — | $2\frac{1}{2}$ வராகனெடை |
| கடுகுரோகிணி | — | ,, |
| கடுக்காய்த் தோல் | — | ,, |
| சுத்திசெய்த நேர்வாளப் பருப்பு | | $12\frac{1}{2}$ வராகனெடை |

இவைகளை நசுக்கி ஆமணக்கெண்ணெய் $3\frac{3}{4}$ வராகனெடை விட்டு நன்றாகக் கல்வத்திலிட்டு அரைத்து மிளகளவுள்ள உருண்டைகளாகச் செய்துகொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரையெடுத்து அதிகாலையில் உட்கொள்ளச் சுகபேதியாகும். சரீரத்திற்கும் சுகமுண்டாகும்.

## 56. பேதிக்கு மருந்து

வெண்காக் கணத்தின் வேரதனை
    விரைந்தே யொருபாக் களவரைத்து
வெண்கா ரத்தைப் பயறளவே
    தான்பொ ரித்தே யதிற்கலந்தே
யுண்பாய் சுகபே தியதாகு
    முரைக்கும்பேதி யெளிதாகப்
பண்பா யந்த மருந்ததனைப்
    பகர்வெந் நீரோ டுணலாமே. (எஎ)

ஆகு மதனிற் றணிந்துவிட
வாவின்பாலிற் சேர்த்துணலாந்
தாகந்தீருந் தண்ணீரிற்
றானேகுளித்து மோரினுடன்
பாகமான வன்னமுணப்
பாங்கா யிதுகை கண்டமுறை
தேகந்தனக்குச் சௌக்கியமாந்
தீரன் சரபேந் திரன்மொழியே. (எஅ)

(இ-ள்)

வெள்ளைக் காக்கணத்தின்வேர் ஒரு பாக்களவெடுத்து நன்கு அரைத்துப் பொரித்த வெங்காரம் ஒரு பயறளவு சேர்த்து உட்கொள்ளவும். வெந்நீரில் கலக்கிப் பருக நன்கு பேதி யாகும். குறைந்த தடவை பேதியாக வேண்டுமெனில் பசுவின் பால் சேர்த்துச் சாப்பிடவும். பின்னர்த் தண்ணீரில் குளித்து மோர்சாதம் உட்கொள்ளவும். கைகண்ட முறையாம்.

## 57. பேதிக்கு மருந்து

பசுவின்பாலோர் நாழிகள்ளிப்
பாலாழாக்கு நல்லவெல்ல
மிசையும்பலமொன் றிரதமுள்ளி
யிட்டுக்காய்ச்சி யெடுத்ததனை
நிசமா யவரை விரையளவு
நேரா யிளவெந் நீரிலுண
விசையாய்ப் பேதி யாங்குளிர்நீர்
விட்டுக் குளித்துண் மோரனமே. (எக)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பசுவின் பால் | — | ஒரு நாழி |
| கள்ளிப்பால் | — | 1 உழக்கு |
| வெல்லம் | — | 1 பலம் |

இவைகளை ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றிச் சுத்தி செய்த பாதரஸம், பூண்டு இவ்விரண்டையும் வகைக்கு ($\frac{1}{4}$ வராக னெடை) இட்டு நன்றாகக் காய்ச்சி எடுத்து எரிந்தபின் அதைப் பாகு செய்து அவரை விதைப் பிரமாணமுள்ள மாத்திரை

களாக உருட்டி, வெது வெதுப்பான வெந்நீருடன் உட்கொள்ளவும், நன்கு பேதியாகும். அதிகமாகப் பேதியானால் குளிர்ந்த ஜலத்தில் குளித்து மோர் சாதம் சாப்பிடவும்.

## 58. பேதிக்கு

*கழற்காய்ப் பருப்பு மிந்துப்புங்*
*காந்தஞ் செவ்வா லங்கொட்டை*
*மொழியுங் குளவிந் தத்துமஞ்சள்*
*முறையாய் வகைக்குப் பலமென்று*
*செழுமைக் கடுக்காய் பலமைந்து*
*சேர்த்தே வறுத்துப் பொடித்துவெந்நீர்*
*விழைவாய்க் கலந்துண் பேதியதா*
*மிகுந்தால் மோரன்ன முமாற்றே.* (அூ)

(இ-ள்)

*கழற்சிப் பருப்பு*
*இந்துப்பு*
*சுத்திசெய்த காந்தம்*
*செவ்வாலங்கொட்டை*
*குளவிந்த மஞ்சள்*

இவைகளை வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்து, கடுக்காய்த் தோல் 5 பலம் சேர்த்து நன்றாக வறுத்துப் பொடிசெய்து ஒரு மூவிரல் (3½ குன்றி) கொள்ளுமளவு சூரணம் எடுத்து வெந்நீருடன் கலந்து அதிகாலையில் அருந்த நன்கு பேதியாகும்.

பேதியதிகமாக ஆனால் மோர்சாதம் சாப்பிடவும்.

## 59. பேதிக்கு உருண்டை

*கோட்டமேல மதிமதுரங்*
*கூறுஞ்செண்ப கத்தினொடு*
*நாட்டமுடன்சா ணாகமதின்*
*னலமாய்ச் சுத்தித் திருவாளங்*

கூட்டி யிதெல்லாஞ் சமமாகக்
கொண்டே யெலுமிச் சம்பழச்சா
றூட்டியரைத்தே மிளகினள
வுருண்டைசெய்து நிழலுலர்த்தே. (அக)

நிழலிலுலர்த்திச் சிறியவர்க்கு
நேராய்ப் பெரிய மாந்தருக்கு
விழைந்தே யளவாய்க் கொடுத்திடவே
விரைந்து பேதி யாம்வெந்நீர்
பழச்சா றிரண்டுங் கலந்தருந்தப்
பண்பாய்ப்பேதி யதுநிற்குங்
கழியாதிருந்து விடுமாகிற்
காரமிளகு நீரருந்தே. (அஉ)

(இ-ள்)

கோஷ்டம்
ஏலக்காய்
அதிமதுரம்
செண்பகமொட்டு
சாணாகத்தில் வைத்து சுத்திசெய்த நேர்வாளம்

இவைகளைச் சமமெடுத்துக் கல்வத்திலிட்டு நன்றாக நசுக்கி எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாகவரைத்து மிளகளவுள்ள உருண்டைகளாகச் செய்யவும். இவைகளை நிழலில் உலர்த்திச் சிறியவர்களுக்கு ஒரு மாத்திரையும், பெரியவர்களுக்கு 2 மாத்திரையும் குளிர்ந்த ஜலத்துடன் உட்கொள்ளக் கொடுக்கவும். நன்கு பேதியாகவில்லையெனில் மிளகு ரஸம் சேர்க்கவும். அதிகமாகப் பேதியானால் எலுமிச்சம்பழம் பிழிந்த வெந்நீர் உட்கொள்ளவும். பேதி நிற்கும்.

## 60. விரேசனத்திற்கு மணிமந்தாதி சூரணம்

சுக்கைந்து திப்பிலிநான் கோமமூன்று
சுகமுறசீ ரகமிரண்டிந் துப்புமொன்று
தோகவிவை வராகனெடை யளவதாகச்
சூரணித்தச் சூரணத்தி னிறைகடுக்காய்

தக்கபொடி கலந்துவெரு கடிவெந்நீரிற்
றானுதையத் துண்ணமல சுத்தியாகு
மக்கணமே யக்கினிமாந் தியங்கிராணி
யகலுமிதோர் மண்டலுமுண்டறிந்துபாரே. (அரு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுக்கு | — | 5 வராகனெடை |
| திப்பிலி | — | 4 ,, |
| ஓமம் | — | 3 ,, |
| சீரகம் | — | 2 ,, |
| இந்துப்பு | — | 1 ,, |

இவைகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்து இதற்குச் சரி நிறை கடுக்காய் சூரணஞ் சேர்த்துக் கலந்து கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து வெந்நீருடன் அதிகாலையில் உட்கொள்ளவும்.

நன்கு மலப்பிரவ்ருத்தியாகும். அக்கினி மாந்தம், கிராணி முதலானவைகளும் 40 நாட்களுள் தீரும்.

## 61. விரேசனத்திற்குச் சூரணம்(அவிபத்தி சூரணம்)

நாகப்பூ விலவங்கங் கடுக்காயேல
நல்லநெல்லிப் பருப்புதிரி கடுகிந்துப்பு
வாகுவிழ லரிசியும்வாய் விளங்கமிந்த
வகைசமஞ்சேர்ந் திடித்தபொடி யதற்குமுப்பங்
காகநல் சிவதையின்வே ரதனைப்பால்விட்
டவித்துலர்த்தி யிடித்தபொடி யதிற்கலந்து
பாகநிறைக் கிச்சரிசர்க் கரைசேர்த்தேகாற்
பலமருந்த சுகவிரேச னமாம்பாரே. (அசு)

(இ-ள்)

நாகப்பூ
கிராம்பு

கடுக்காய்த் தோல்
ஏலக்காய்
நெல்லிப் பருப்பு
சுக்கு
திப்பிலி
மிளகு
பொரித்த இந்துப்பு
விழலரிசி
வாயுவிடங்கம்

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு, இதற்கு மும்மடங்கு சுத்திசெய்த சிவதை வேர்ச் சூரணம் சேர்க்கவும். சிவதை வேரின் உள் நரம்பை நீக்கி பாலில் அவித்துக் கழுவி உலர்த்தி இடிக்கவும். இச்சூரணத்திற்குச் சரிநிறை வெல்லச் சர்க்கரை சேர்க்கவும்.

வேளைக்கு $\frac{1}{4}$ பலம் வீதம் உட்கொள்ளச் சுகவிரேசனம் ஏற்படும்.

## 62. விரேசனத்திற்கு

மிதிபாக லிலையையிடித் துப்பிழிந்து
விழுகுஞ்சா றதுகாலே யரைக்காற்சேரில்
மதுரமுள வாவின்பா லரைச்சேர்தன்னை
வார்த்தருந்தித் தண்ணீரி லேகுளித்தே
யதிகமுடன் பொரித்தமிள கின்சாறுண்ண
வக்கணமா ரோக்கியமாய்ப் பேதியாகு
நிதியமிகத் தமிழ்க்கவிவல் லோர்களிக்கு
நீதிசர பேந்திரன்சொல் முறையிதாமே. (அறு)

(இ-ள்)

மிதிபாகல் இலையை இடித்துப் பிழிந்த சாறு காலேயரைக் கால் சேருடன் பசுவின் பால் $\frac{1}{2}$ சேர் விட்டுக் கலக்கிப் பருகவும். பின்பு குளிர்ந்த ஜலத்தில் குளித்து மிளகு ரஸம் சேர்த்துச் சாப் பிடவும். நன்கு மலப்பிரவ்ருத்தி உண்டாகும்.

## 63. பேதிக்கு

கற்றாழஞ் சோறதனில் கடுக்காயைந்து
　　கனமாகப் பொடித்ததினி லூறப்போட்டு
மற்றைநா ளுதயத்தி னிற்பிசைந்து
　　வடிக்கட்டுஞ் சாற்றில்விளக் கெண்ணெய்காற்சேர்
பற்றனலிற் காய்ச்சியதில் வார்த்தருந்துப்
　　பண்புடனே வயிறுபேதி யதாமிந்த
நற்றரணி தனைப்புரக்குஞ் சரபபூபன்
　　நயமாக நவின்றமுறை நண்ணிப்பாரே. (அசு)

(இ-ள்)

ஒரு பெரிய கற்றாழை மடலைக் கொண்டுவந்து, அதன் சோற்றை ஒரு ஈயம் பூசின பாத்திரத்திலிட்டு 5 கடுக்காயைச் சூரணித்துப் போடவும். அப்படியே ஊறப்போட்டு மறு நாளுதயத்தில் இதனைப் பிசைந்து வடிகட்டிய சாற்றுடன் அனலில் காய்ச்சிய சுத்தமான ஆமணக்கெண்ணெய் $\frac{1}{4}$ சேர் விட்டு அருந்தவும். நன்றாக வயிறு கழியும்.

## 64. விரேசனத்திற்கு

ஆவின்கோ மயமரைச்சே ரிற்கடுக்கா
　　யைந்திடித்த தூளதினி லூறப்போட்டு
தாவுதைய காலமதி லேபிசைந்து
　　தண்ணீரை வடிக்கட்டி யுள்ளருந்த
மேவுசுக மாகவிரே சனமதாகு
　　மேதினியிற் செய்துடன்கை கண்டதாகும்
பூவிலுறை மாதுவளர் தஞ்சையாளும்
　　பூபதியாஞ் சரபேந்திரன் புகன்றவாறே. (அஎ)

(இ-ள்)

பசுவின் மூத்திரம் $\frac{1}{2}$ சேரில் ஐந்து கடுக்காயின் சூரணத்தைப்போட்டு ஒரு இரவு முழுவதும் ஊறவைக்கவும். மறுநாள் காலை நேரத்தில் இதனைப் பிசைந்து வடிகட்டி அருந்தவும். நன்கு பேதியாகும்.

## 65. விரேசனத்திற்குக் கடுத்திரய சூரணம்

திரிகடுக மிலவங்கம் வாய்விளங்கந்
திப்பிலிமூ லங்கடுக்கா யேலநெல்லின்
பொரிகோட்டஞ் சிறுதேக்கு முசுமுசுக்கை
பொருந்துநல மாகியகோ ரைக்கிழங்கு
வரியகொடி முந்திரிகைப் பழத்தினோடே
யதிமதுரஞ் சித்திரமூ லங்கச்சூரம்
விரையாருந் தாளிசபத் திரிநன்னாரி
வேருடனே பதினேழு வகையுஞ்சேரே. (அஅ)

வகையொன்றுக் கரைவராக னெடைகூட்டி
வளர்ந்திடுவெண் சாரடைவே ரொருபலந்தான்
மிகவதனிற் சேர்த்திடித்தச் சூரணத்தின்
சிவதைக்கூ ரணமுப் பாகஞ்சேர்த்தே
யகமகிழ்ந்த சர்க்கரையுஞ் சமபங்காக
வதிற்கலந்து வெந்நீர்நெய் யிரண்டிலொன்றிற்
றகையுடனே யுண்ணவிரே சனமதாகுஞ்
சகத்திலிது கைகண்ட முறையிதாமே. (அகூ)

(இ-ள்)

சுக்கு
திப்பிலி
மிளகு
இலவங்கப்பட்டை
நெற்பொரி
சிறுதேக்கு
கோரைக்கிழக்கு
அதிமதுரம்
பேரீச்சங்காய்
நன்னாரிவேர்
வாயுவிடங்கம்
கண்டத்திப்பிலி
கடுக்காய்த்தோல்
ஏலக்காய்
உயர்ந்தகோஷ்டம்

முசுமுசுக்கை
கொடிமுந்திரிப்பழம்
சித்திரமூலம்
தாளீசபத்திரி

இவைகளை வகைக்கு ½ வராகனெடை வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதனுடன் மலைநாட்டு வெள்ளைச் சாறணைவேர் சூரணம் 1 பலமும், சுத்தி செய்த சிவதைவேர் சூரணம், இதர சூரணங்களின் மொத்த நிறைக்கு 3 பங்கும் சேர்த்துக்கொள்ளவும். இச்சூரணத்தின் சம நிறை சர்க்கரை கூட்டி ஒரு பழகிய மட்பாண்டத்தில் பத்திரப் படுத்தி வைத்துக்கொள்ளவும். இச்சூரணத்தில் சுமார் 1 பலமள வெடுத்து வெந்நீருடனோ, நெய்யுடனோ உட்கொள்ள நன்கு பேதியாகும். கைகண்டது.

குறிப்பு:—

கடைச்சரக்குகள் வகைக்கு வராகனெடை 5, வெள்ளைச் சாறணைவேர் வராகனெடை 9, இவைகளின் மொத்த நிறைக்கு 3 பங்கு சிவதைச்சூரணம் என்று 68 நெ. சுவடியில் காணப் படுகிறது.

## 66. பேதிக்குக் கடாயம்

கொட்டைப்பாக் குடனிலையா விரைகடுக்காய்
கொண்டிவை கடாயமதாய் வைத்திறக்கி
இட்டமுட னேயுதைய காலந்தன்னி
லெடுத்தேவுட் கொள்வயிறு பேதியாகு
மட்டவிழுந் தாரணிந்து மோகமான
மங்கைய ரைச்சேர்ந்து நூற்படிக்கிக்
கட்டிமுத்த மிட்டணையுஞ் சரபபூபன்
கனமாக வோதுமுறை யிதுதான்பாரே. (கூயி)

(இ-ள்)

கொட்டைப்பாக்கு
ஆவாரை இலை
கடுக்காய்த்தோல்

இவைகளைச் சமமெடுத்து இடித்துச் சுத்த ஜலம் 8 மடங்கு விட்டு, அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றாகுமட்டும் வற்ற வைத்து விடியற்காலத்தில் உட்கொள்ளவும். நன்கு பேதியாகும்.

## 67. வயிறுகழிய வாயுவிற்கு

சுக்கிந்துப் புக்கடுக்காய் நெல்லிமுள்ளி
    தூய்மிளகு திப்பிலியுந் தான்றிக்காயு
மொக்குஞ்சமஞ் சேர்த்திடித்தத் தூளோர்பங்கி
    லுறுசிவதை வேர்தனைப்பால் விட்டவித்துப்
பக்குவமா யுலர்த்தியதைப் பொடித்தெடுத்தீர்
    பங்குமுன்றூ ளதிற்சேர்த்துப் பாங்காய்வைத்துத்
தக்குசுடு நீரதனி லளவதாகத்
    தான்கலந்துண் டிடப்பேதி யாகும்பாரே. (சுக)

(இ-ள்)

சுக்கு
இந்துப்பு
கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல்
மிளகு
திப்பிலி
தான்றித்தோல்

இவைகளைச் சமமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து கொள்ளவும். இச்சூரணத்திற்குச் சமனளவு சுத்திசெய்த சிவதைவேர்ச்சூரணம் (பாலில் அவித்தது) சேர்த்து ஒன்றுகலந்து வைத்துக்கொள்ளவும். சுமார் ஒரு பலமளவெடுத்து வெந்நீருடன் சேர்த்து அதிகாலையில் அருந்தவும். நன்கு பேதியாகும்.

## 68. விசேனத்திற்குப் பாக்கெண்ணெய்

கடுக்காயீ ரைந்துகொட்டைப் பாக்கீரைந்து
    கனமுளநெல் லியினீர்க்கோர் பிடியதாகுங்
கடுகரோ கணியுமரைப் பலமிதெல்லாங்
    கடாயம்வைத் தேரண்டத் தெண்ணெயோர் சேர்

விடுத்திரண்டுங் காய்ச்சிப்பக் குவமறிந்து
மேயிறங்கி யுதையத்தோ றளவதாகக்
குடித்திடவே சுகவிரே சனந்தானாகுங்
குவலயத்திற் கைகண்ட முறையிதாமே. (சுஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| கடுக்காய் | 10 (எண்ணிக்கையில்) |
| கொட்டைப்பாக்கு | 10 ,, |
| நெல்லியின் ஈர்க்கு | ஒரு பிடி |
| கடுகரோகிணி | $\frac{1}{2}$ பலம் |

இவைகளை ஒன்றிரண்டாகவிடித்து எட்டு மடங்கு ஜலம் விட்டு ஒரு பங்காகுமட்டுமெரித்து ஆமணக்கெண்ணெய் 1 சேர் விட்டுப்பக்குவமாகக் காய்ச்சி இறக்கவும்.

விடியற்காலையில் குடலுக்கேற்றபடி $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ அவுன்ஸ் எடுத்துப் பருகவும். சுகவிரேசனம் உண்டாகும்.

## 69. ஆபத்திற்கு

ஐந்திலைநொச் சியினீர்க்கு மூக்கரட்டை
யதனிலைசா றடையிலைவே லிப்பருத்தி
யிந்தவகை யொன்றுக்கோர் பிடியதாக
விரண்டுகடுக் காய்நலசுக் கிரண்டுதேறு
அந்தமுடன் கூட்டியேநாத் தண்ணீர்வார்த்
தடுப்பினில்வைத் துக்காய்ச்சி யுழக்கதாக்கி
சிந்தைமகிழ்ந் திடவிறக்கி யுட்கொண்டக்காற்
சீதக்கட் டுகடீருஞ் சுகமுண்டாமே. (சுரு)

(இ-ள்)

ஐந்திலைநொச்சியின் ஈர்க்கு
மூக்கரட்டை இலை
வெள்ளைச்சாறடை இலை
வேலிப்பருத்தி
இவைகளை வகைக்கு ஒரு பிடி எடுத்து

கடுக்காய் —2 (எண்ணிக்கையில்)
சுக்கு —2 துண்டுகள்

இவைகளையும் ஒன்று சேர்த்து இடித்து ஒரு பாத்திரத்தி லிட்டு அதனுடன் சுத்த ஜலம் சின்னப்படி $\frac{1}{2}$ விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகுமட்டுமெரித்து, உட்கொள்ளவும். சீதக் கட்டுகள் யாவும் தீரும்.

## 70. மல, சலக்கட்டுக்கு மருந்து

கடுக்காயோர் பதினைந்து நல்லசீயக்
காயிரண்டு பலமிவையின் விரையை நீக்கி
எடுத்துக்கோ சலநான்கு படியும் விட்டே
யெடுத்துக்காற் படியளவா யிறக்கிக்கொண்டு
கொடுத்திடுவா யொருகரண்டி வீதந்தானே
கூறாக பலமலக்கட்டதுகடீரு
மருத்தவரைக் காத்தருளுஞ் சரபபூப
னருளியநன் முறையிதனை யறிந்து செய்யே. (கூச)

இ-ள்)

கடுக்காய் —15 (எண்ணிக்கையில்)
சீயக்காய் —2 பலம்

இவைகளின் விதையை நீக்கிவிட்டு யொரு பாத்திரத்தி லிட்டுப் பசு மூத்திரம் பெரியபடி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி $\frac{1}{4}$ படியாகும்வரையெரித்து வடிகட்டிக்கொள்ளவும்.

இக்கஷாயத்தில் ஒரு கரண்டி வீதம் உட்கொள்ளவும். மலக் கட்டுகள், நீர்க்கட்டுகள் முதலானவை தீரும்.

## 71. மல, சலககட்டுவிட மருந்து

செவ்விளநீர் சீவியவித் தேநற்கோழிச்
சேவலினெச் சம்மதனிற் கரைத்துட்கொள்ளக்
கவ்வுமல முஞ்சலமுங் கழன்றுபோகுங்
கைபாக மாகவெள்ளைக் காக்கணத்தின்

னவ்வேரி னுடநான்கு மிளகுங்கூட்டி
யரைத்தெடுத்துக் கொட்டைப்பாக் களவதாகச்
செவ்வையதா யிளவெந்நீர் தனிலருந்தத்
திறமாக மலசலக்கட் டகலுந்தானே. (௬௫)

(இ-ள்)

செவ்விளநீர் கொண்டுவந்து அதைச் சீவி அவித்து (கொதிக்க வைத்து) அதனுடன் சேவல் கோழி எச்சம் (ஒரு குத்தளவு) சிறிது பொடி செய்து போட்டுக்கரைத்துப் பருகவும். மல, சலம் விடும்.

2. வெள்ளைக் காக்கணத்தின் வேருடன், 4 மிளகும் கூட்டி யரைத்து ஒரு கொட்டைப்பாக்களவு எடுத்து வெது வெதுப்பான வெந்நீருடன் உட்கொள்ளவும்.

சலக்கட்டும், மலக்கட்டும் தீரும்.

## 72. சீதம், இரத்தக்கடுப்பு வயிற்றுவலிக்கு

எலுமிச்சம் பழச்சாற்றா லரைத்துச்சுக்கை
யியல்பாக வுண்டைசெய்து காயவைத்து
வலுவான மண்ணகலிற் பூசிமருந்
தைவைத்து மூடிமண்சீ லையுமேசெய்து
நலமாகப் புடம்போட்டே யெடுத்துக்கொண்டு
நயந்தெருமைத் தயிரதைவிட் டரைத்தருந்த
விலகாத சீதமிரத் தக்கடுப்பு
மேல்வயிற்று வலியும்போம் விரும்பிச்செய்யே. (௬௬)

(இ-ள்)

சுக்கையெடுத்துச் சூரணித்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக வரைத்துக் கொட்டைப் பாக்களவுள்ள உருண்டைக ளாக உருட்டிக் காயவைத்துப் பின்பு ஒரு மண்ணகலிற்குள் வைத்து மூடிச் சீலைமண்செய்து புடம் போட்டெடுக்கவும்.

இம்மருந்தை எருமைத் தயிருடனரைத்து உட்கொள்ளச் சீதக்கடுப்பு, இரத்தக்கடுப்பு, வயிற்றுவலி முதலானவை போம்.

குறிப்பு :—

68 நெ. சுவடியில்—''வேர்க்கொம்பு எலுமிச்சம் பழச் சாறு வார்த்து உருட்டி, நடுவில் பால் பெருங்காயம் வைத் துருட்டி மண்ணகலில் சுண்ணாம்பு தடவி யதற்குள் வைத்து மூடிச் சீலைமண் செய்து புடமிட்டுச் சுட்டு எடுத்து எருமைத் தயிரிலரைத்துக்கொள்ளவும், இதற்த வயிற்றின்வலி, சீதம் இரத்தம் நிற்கும்.'' என்று காணப்படுகிறது.

## 73. வயிற்றுக் கடுப்பிற்கு

காயமதிஞ் சியைச்சீவி யுள்ளேவைத்துக்
காரமுள சுண்ணமதிற் பூசிச்சுட்டு
நேயவெரு மைத்தயிரிற் கலந்துண்டாலு
நிறவெலுமிச் சம்பழத்தைச் சிமிழ்போற்செய்து
காயமதை வைத்துமேல் மூடிச்சுண்ணங்
கைபாக மாய்ப்பூசிக் காய்ந்தபின்பு
தீயினிற்சுட் டெடுத்தெருமைத் தயிரைவிட்டுச்
சேர்த்தரைத்துண் டிடினுந்தீர்ந் திடுங்கடுப்பே. (கூ௭)

(இ-ள்)

இஞ்சியைச் சீவி அதன் நடுவில் பெருங்காயம் வைத்துச் சுண்ணாம்பில் பொதிந்து, அடுப்பில் போட்டுச் சுட்டுவிடவும். இதனை எருமைத் தயிர் விட்டு நன்கு அரைத்து உட்கொள் ளவும். கடுப்பு நிற்கும்.

2. எலுமிச்சம்பழத்தைச் சிமிழ்போல் செய்து அதனுள் பெருங்காயத்தை வைத்துச் சுண்ணாம்புக் கவசம் செய்து காய வைத்து நெருப்பிலிட்டுச் சுட்டு எருமைத் தயிர் விட்டு நன்றாக அரைத்துச் சாப்பிட வயிற்றுக்கடுப்பு நிற்கும்.

## 74. மல, சலக்கட்டுவிட மருந்து

பாதித்தேங் காயையரைத் துப்பிழிந்த
பாலொருபாண்டத்திலீ ருள்ளிச்சாறு
மெதுவாயப் பொரித்தவெண் காரமுங்காய்
வேளையின்வே ரைத்திவையெல் லாங்கலந்தே

யாதரவா யுண்டிடினுங் கீரைத்தண்டை
　　யவித்துவெண்கா ரம்பொரித்துக் கரைத்தெடுத்தே
யீதுட்கொண் டிடினுமல சலக்கட்டெல்லா
　　மேகிவிடுங் கைகண்ட முறையிதாமே. (சூஅ)

(இ-ள்)

தேங்காய் மூடியொன்றைத் திருவி அரைத்துப் பிழிந்த சுயமான தேங்காய்ப்பாலை ஒரு பாண்டத்திலிட்டு, வெள்ளைப் பூண்டுச்சாறு சிறிது சேர்த்து பொரித்த வெங்காரமும், காய் வேளை வேரையும் வகைக்கு (சுமார் ஒரு வராகனெடை) நன்கு அரைத்து அதனுடன் குழப்பி உட்கொள்ளவும்.

2. கீரைத்தண்டை நறுக்கி ஒரு பாத்திரத்திலிட்டு அடுப் பின் மேலேற்றி அவித்துப் பொரித்த வெங்காரம் கூட்டி உட் கொள்ளவும். மலக்கட்டுகள், சலக்கட்டுகள் முதலானவை தீரும்.

## 75. மல, சலக்கட்டிற்கு மருந்து

முருங்கையினீர்க் கும்மிளகும் வெதுப்பித்தண்ணீர்
　　முறையாய்விட் டுக்காய்ச்சி யிறுத்துக்கொண்டு
திருந்தியவெண் காரமதைப் பொரித்தெடுத்துச்
　　சேர்த்துண்ணு மிளகைநெரித் தேவறுத்துப்
பொருந்தியதோ ரளவாகத் தண்ணீர் ..ட்டுப்
　　புகலுமடுப் பேற்றியதைக் காய்ச்சிவாங்கி
யருந்திமல சலக்கட்ட கன்றுபோகு
　　மடைவான விம்முறையை யறிந்துசெய்யே. (சூகூ)

(இ-ள்)

முருங்கையீர்க்கு
மிளகு

இவ்விரண்டையும் நசுக்கி ஒரு சட்டியிலிட்டு வெதுப்பி 8 மடங்கு சுத்தஜலம் விட்டு எட்டிலொன்றாகும் வரை எரித்து இறுத்துக்கொண்டு பொரித்த வெங்காரம் சிறிதளவு சேர்த்து உட்கொள்ளவும்.

2. மிளகை நெரித்துச் சட்டியிலிட்டு வறுத்துச் சுத்த ஜலம் 8 மடங்கு சேர்த்து எட்டிலொன்றாக வற்றவைத்துச் சாப்பிடவும். சலக்கட்டு, மலக்கட்டு இவை போம்.

## 76. மல சலக்கட்டு விட

ஆவிவரா மல்முருங்கை யிலையவித்தே
ஆண்குறியில் வேதுகாட் டிடினுமின்னம்
பூவந்திப் பழமரைத் தபானவாயிற்
பொருந்திடவே நன்றாகப் பூசினாலு
மேவுமல சலக்கட்டுந் தீர்ந்து போகும்
மேதினியின் செய்துகண்ட முறையீதென்று
விரவிமலர்ச் சோலைவளர் தஞ்சைநாட்டின்
மன்னனாஞ் சரபேந்திர னருளிதாமே. (ள)

(இ-ள்)

முருங்கையிலையை நன்றாக ஆய்ந்து ஆவி வராமல் சட்டியிலிட்டுச் சிறிது தண்ணீர்விட்டு அவித்து ஒரு துணியிலிட்டு ஆண் குறியில் வேது காட்டவும். (ஒத்தடம் இடவும்).

(2) பூவந்திப்பழத்தை நன்றாக அம்மியின்மேல் வைத்து அரைத்து அபானவாயில் பூசவும். மலக்கட்டுகள், சலக்கட்டுகள் முதலானவை தீரும்.

## 77. மல, சலக்கட்டு விட

வளையிற்காய்ச் சுப்பொடியிற் குளிர்ந்ததண்ணீர்
வார்த்ததனைக் கரைத்தொருபாத் திரத்தில் வைத்த
தெளிவதனை யிறுத்தெடுத்துப் பருகினாலுஞ்
சிறந்திடுநற் கோழிக்கா ரத்தைவாங்கி
யிளவறுத்த தண்ணீர் விட்டுக்காய்ச்சி
யிறக்கியிறுத் தேவெண்கா ரம்பொரித்து
வளமாகச் சேர்த்ததை யருந்தினாலும்
மலசலக்கட் டகன்றுவிடும் மகிழ்ந்துசெய்யே. (ளக)

(இ-ள்)

வளையலுப்பைப் பொடிசெய்து தண்ணீரில் கரைத்து ஒரு பாத்திரத்தில் வடிகட்டிப் பருகவும்.

(2) கோழிக்காரத்தை ஒரு ஓட்டிலிட்டுப் பொரித்து சுத்த ஜலம்விட்டுக் காய்ச்சி இறக்கி அதனுடன் பொரித்த வெண்காரம் சேர்த்துப் பருகவும். மல, சலக்கட்டுகள் நீங்கும்.

## 78. சல, மலக்கட்டுகளுக்கு

தெளிவான வேரண்டத் தெண்ணெய்நல்ல
தேங்காய்பா லீருள்ளிச் சாறுநேராய்
வளமாகக் காய்ச்சிவெண் காரத்தை
வாங்கியன லிற்பொரித்துக் கலந்துண்டாலு
மிளகைநெரித் திளநீரை விட்டுக்காய்ச்சி
வெங்காரம் பொரித்ததிற் சேர்த் தருந்தினாலும்
விளையுமலச் சலக்கட்டின் நோய்கடீரு
மெய்க்குமா ரோக்கியமாம் விரும்பிச்செய்யே. (௱௨)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| ஆமணக்கெண்ணெய் | — 1 | சேர் |
| தேங்காய்ப்பால் | — 1 | ,, |
| வெங்காயச்சாறு | — 1 | ,, |

இவைகளை யொன்றுகூட்டி அடுப்பின் மேலேற்றிப் பதமாகக் காய்ச்சி வடிக்கவும். இதனுடன் பொரித்த வெங்காரம் சிறிது கூட்டி (ச்சுமார் $\frac{1}{2}$ அவுன்சு) ப் பருகவும்.

2. மிளகை நெரித்து ஒரு பாத்திரத்திலிட்டு அதனுடன் இளநீர் 8 மடங்கு விட்டுக் கஷாயம் வைத்து ($\frac{1}{8}$ ஆகும்வரை) பொரித்த வெங்காரம் சேர்த்துப் பருகவும். மலக்கட்டு, நீர்க்கட்டுகள் தீரும். உடம்பு நன்றாக ஆகும்.

## 79. மல, சலகட்டுகளுக்கு

நாயுருவி நீர்முள்ளி யிரண்டுஞ்சுட்ட
நற்சாம்ப லைக்கரைத்துக் காடிதன்னிற்
சாயலுள வீரவெங் காயச்சாறுந்
தேத்தாங்கொட் டையையரைத்த விழுதுங்கூட்டி
நேயமுடன் வெங்காரஞ் சேர்த்துண்டாலு
நெருப்பினிற்சங் கிலைவெங்கா யமுமவித்துத்
தாயமதாய்ப் பிசைந்ததில்வெங் காரஞ்சேர்த்துச்
சொன்னபடி யுண்ணமல சலங்கள் போமே. (௱௩)

(இ-ள்)

நாயுருவி சமூலம் சுட்டசாம்பல்
நீர்முள்ளிச் சாம்பல்

இவ்விரண்டையும் ஒரு சிறங்கையளவெடுத்துக் காடியில் கரைத்து, தேத்தான் கொட்டையை வெங்காயச்சாறு விட்டு நன்றாக அரைத்த விழுதும் கூடச்சேர்த்து, பொரித்த வெங்காரம் ஒரு குத்தளவும் போட்டுப்பருகவும்.

(2) சங்கன் இலை, வெங்காயம் இவ்விரண்டையும் ஒரு சட்டியிலிட்டு வதக்கிப் பிசைந்து வெங்காரம் ஒரு குத்தளவும் கூட்டிச் சாப்பிட மல, சலக்கட்டுகள் தீரும்.

## 80. கிருமிகள் விழ

கள்ளிப்பா லும்புளியி னிலையுஞ்சேர்த்துக்
காய்ச்சியிறக் கிப்பின்பு வெயிலுலர்த்தி
யொள்ளியபாக் களவுண்டை நெய்யிலுண்ண
வொழிந்துவிடுங் கிருமியின்னஞ் சிறியபீளை
தள்ளரிய வேம்பினுட கொழுந்திரண்டு
தனைக்கசக்கி யபானத்தில் வைத்துக்கட்டத்
துள்ளுதிமிற் புழுவீழுஞ் சுகமுண்டாகும்
சுந்தரனாம் சரபேந்திரன் சொன்னவாறே. (௱௪)

(இ-ள்)

கள்ளிப்பாலில் புளியிலையைச் சிறிது உறுவிப்போட்டு தண்ணீர் சேர்த்து அடுப்பின் மேலேற்றிக் கொதிக்கவைத்து, இறக்கி வெயிலில் உலர்த்திவைத்துக் கொள்ளவும். வேண்டும் போது ஒரு பாக்களவெடுத்துச் சூரணித்து நெய்யுடன் குழைத்துச் சாப்பிடக் கிருமிகள் வெளியாகும்.

(2) சிறுபீளை
வேப்பங்கொழுந்து

இவ்விரண்டையும் கசக்கி ஆசனத்துவாரத்தில் வைத்து வரிந்து கட்டவும். திமிர்ப்புழு விழும். சௌக்கியமுண்டாகும்.

## 81. நாக்குப்பூச்சி விழ உருண்டை

திப்பிலியைக் கள்ளிப்பா லினில்மூவேழு
தினமூறப் போட்டரைத்தும் பயறுபோலே
யொப்பாக வுருண்டைசெய்து நிழலுலர்த்தி
யோருண்டை சர்க்கரைதே னிரண்டிலொன்றிற்
றுப்புறவாய்ப் பாலர்களுக் கேகொடுக்கத்
தொடர்ச்சியுள கிருமியெல்லாம் வீழ்ந்துபோகும்
தப்பாது கைகண்ட முறையிதாகுஞ்
சரபபூ பதியுணர்ந்து சாற்றும்வாறே. (ஶ௫)

(இ-ள்)

திப்பிலியைக் கள்ளிப்பாலில் 21 நாட்கள் ஊறவைக்கவும். பின்பு இதனையரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். இதிலொரு மாத்திரை யெடுத்துத் தேனிலோ அல்லது சர்க்கரையிலோ சிறு குழந்தைகளுக்குக் கொடுக்கவும். வயிற்றிலுள்ள கிருமிகள் விழும்.

## 82. புழு விழ மருந்து

காவிக்கல் லதைநீரி லூறப்போட்டுக்
கனபுரசம் வித்துமொன்றி லூறப்போட்டுத்
தாவுமறு நாள்விதையைக் காவித்தண்ணீ
ரைவிட்ட ரைத்துக்கு ழப்பியுண்டால்

மேவுவயிற் றிற்சனித்த புழுக்கூடெல்லாம்
விழுந்துவிடு மிம்முறைகை கண்டதென்று
மாவளருந் தஞ்சையதிற் செங்கோல்கொண்டு
வாழுகின்ற சரபேந்திரன் வசனித்தாரே. (ளசு)

இ-ள்)

காவிக்கல்லை ஒரு குத்தளவெடுத்துச் சுத்த ஜலத்திலூற வைத்து அதனுடன் புரசம்விதை ஒன்றும் போடவும். மறுநாளு தயத்தில் ஷெ விதையைக் காவித் தண்ணீர்விட்டு நன்றாக அரைத் துக் குழப்பி உட்கொள்ளவும். வயிற்றிலிருக்கும் புழுக்கள் கூண்டுடனே விழும்.

## 83. கெர்ப்பப்புழு விழ

அரிவையர்கள் வயிற்றினிலே கர்ப்பந்தன்னை
யணுகவொட்டா மலட்டுப்புழு வதனுக்குத்தா
னுரமான மருந்தொன்று சொல்வேன்கேளு
புத்தியாய் வெத்திலையின் மூக்கினோடே
சரியான மிளகிரண்டுஞ் சிறுநீர்கூட்டித்
தானரைத்து வன்னீரிற் றானேகொள்ளு
உருவுடனே மலட்டுப்புழு செத்துவிழு
முண்மையிது மானுவுரை முறையதாமே (ளஎ)

(இ-ள்)

ஸ்திரீகளுக்குக் கர்ப்பம் தரிக்கவொட்டாமல் செய்யும் மலட்டுப்புழு வயிற்றிலிருந்தால்,

| | |
|---|---|
| வெற்றிலைக்காம்பு | —ஒரு சிறங்கை |
| மிளகு | — ,, |

இவ்விரண்டையும் உலகமறியாப் பிள்ளையின் சிறுநீர் விட்டு நன்றாக அரைத்து உட்கொள்ளவும். மலட்டுப் புழு இறந்து விழும்.

## 84. வயிற்றிலிருக்கும் கிருமி விழ மருந்து

பச்சைநெருஞ் சிக்காயை யரைத்துநன்றாம்
பழமோரி லேகரைத்துக் குடித்தாயானால்
உச்சிதமாய் வயிற்றினிலே வெகுவாய்த்தானே
யுழலுகின்ற கிருமியெல்லாம் வீழ்ந்துபோகு
மச்சமில்லை யொருநாளு மிரண்டுநாட்கொள்
ளழகைநகர் தளையாளு மரசர்கோமான்
பச்சைமால் சரபோசி மகராசேந்திரன்
பார்த்துணர்ந்த முறையதனைப் பரிந்துசெய்யே. (௱அ)

(இ-ள்)

நெருஞ்சிக்காயைப் (பச்சையாக) எடுத்து அம்மியின்மேல் வைத்து அரைத்துப் புளித்தமோரில் குழப்பிச் சாப்பிடவும்.

வயிற்றிலிருக்கும் கிருமிகள் விழும். ஒரு நாள் அல்லது 2 நாட்கள் உட்கொள்ளலாம்.

## 85. திருமேனிப் புழுவிழ மருந்து

பசுவின்பா லினிற்புழுங்க லரிசியுமோர்
படிபோட்டுப் பாதிவெந்து வராபோது
யிசவான தூதுவளை வேர்தனையோ
ரெலுமிச்சங் காயளவு மரைத்துப்போட்டு
வசமான வெந்தபின்பு மிறக்கியேதான்
வைத்துக்கொண்டதைத்தானே திரிபோதுண்ணு
பிசகாமற் திருமேனிப் புழுவதெல்லாம்
பேதித்து விழுமிதுவும் பிசகிடாதே. (௱கூ)

(இ-ள்)

பசுவின் பாலிற் புழுங்கரிசி (சின்னப்படி $\frac{1}{2}$) ஒரு படி போட்டு அடுப்பின்மேலேற்றிப் பாதிவெந்து வரும்போது தூது

வளை வேர் ஒரு எலுமிச்சைப் பிரமாணமெடுத்து நன்றாக அரைத்துச் சேர்த்து நன்றாக வேகவைக்கவும்.

இச்சாதத்தை 3 வேளை உட்கொள்ளவும். திருமேனிப் புழுக்கள் விழும். கீரைப்பூச்சிகளும் விழும்.

## 86. விரேசனத்திற்கு மாத்திரை

தருவிலுறு மிலுப்பையின்பூ பங்குமொன்று
தன்னுடனே கடுகரோ கணியுந்தானும்
சரியாக விரண்டுபங்கு நன்னேர்வாளந்
தனைச்சுத்தி பண்ணினது மூன்றுபங்கும்
முறைமூன்று மெலுமிச்சம் பழச்சாறுவிட்டு
வுற்பனகல் வத்திட்டு மைப்போலாக
வரைநன்றாய்க் குன்றிப்பிர மாணமுண்டை
யதுசெய்து நிழலுணர்த்த லாயுலர்த்தே. (௱௰)

உலர்த்தியதைச் சிமிழதனில் வைத்துக்கொண்டோ
ருண்டைதனை யனுபான விசேஷந்தன்னில்
மலப்பில்லா மற்கொடுக்கப் பேதியாகு
மதற்குமிள கிந்நீருஞ் சோறுங்கொள்ளு
பலத்துவிரே சனமானா லதற்கு மாற்றாம்
பேசாமல் மோரதையுங் கூட்டிக்கொள்ளு
நலத்தஞ்சை விபுசரபேந் திரனுணர்ந்த
நன்றான மாத்திரையை நம்பிச்செய்யே. (௱௧௧)

(இ-ள்)

| | |
|---|---|
| இலுப்பைப்பூ | — ஒரு பங்கு |
| கடுகரோகிணி | — 2 ,, |
| சுத்திசெய்த நேர்வாளம் | — 3 ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்றாக மைபோலரைத்துக் குன்றிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக்கி நிழலில் உலர்த்தவும். நன்கு காய்ந்தபின் இவற்

றைச் சிமிழில் பத்திரப்படுத்தித் தக்க அனுபானத்தில் (வெந்நீர், சர்க்கரை முதலியவை) அதிகாலையில் உட்கொள்ளவும்.

நன்கு பேதியாகும். அன்று மிளகு ரசம் சாப்பிடவும் அதிக மாகப் பேதியாகில் மோர்சாதம் சேர்க்கவும்.

## 87. வயிற்றிற் கிருமி விழ

முன்னமேமுற் றினபிராய்வே ரப்பட்டை
முதிர்வசம்பு சிறுதும்பை மூன்றுந்தானே
நன்னயமாய்ச் சமன்கூட்டி யுலரவைத்து
நன்றாகத் தூள்செய்து வடியுங்கட்டி
அன்னப்பா லுடன்குடிக்க வயிற்றிற்கிருமி
யற்றுப்போஞ் சிவகிருபை யதனாற்றஞ்சை
மன்னவர்மன் னன்சரபோ சேந்திரனுய்ந்த
வைத்யமிது நன்றாக வறிந்துசெய்யே. (௱கஉ.)

(இ-ள்)

முற்றின பிராய்வேர்ப் பட்டை
வசம்பு
சிறுதும்பை

இவைகளைச் சமனெடுத்து நிழலில் உலர்த்திக் கல்லுரலி லிட்டுச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து சுமார் ஒரு பலமள வெடுத்துப் பசுவின்பாலுடன் உட்கொள்ளவும்.

பால்சாதம் மாத்திரம் சாப்பிடவும். வயிற்றிலுள்ள கிருமி கள் விழும்.

## 88. வயிற்றிரைச்சல், வயிற்றுவலி, சங்கிரகக் கிராணி இவைகளுக்குத் தைலம்

நல்லெண்ணெய் படியொன்று யெருமையோட
நற்றயிருங் குறுணிசித்ர மூலஞ்சுக்கு
வல்லசயிந் தவலவணந் திப்பிலிமூலம்
வகைநாலுக் கொவ்வொன்றுக் கிருநான்காகும்

நல்லவரா கனெடையது கூட்டிச் சூரணம்
நலமாகச் செய்துயெண்ணெ யிற்கலந்து
சொல்லுமடுப் பினிலேத்தி யெடுத்துக்கையால்
தொட்டுப்பார் பக்குவங்கண் டிறக்கிடாயே. (௱கரு)

பக்குவமா கும்பதத்தி லிறக்கிக்கொண்டு
பார்கற்க முந்தைல மிரண்டுந்தானே
திக்குமனுக் கோர்கரண்டி யந்திசந்தி
தினங்கொள்ளத் தீரும்வியா தியையுங்கேளு
குக்கிதனி லிரைச்சல்சங் கிரகிராணி
கொடியவயிற் றினிவலியுந் தீரும்பத்திய
மொக்குதயி ருஞ்சோறு முண்ணாயிந்த
வுலகாளும் விபுவுணர்ந்த முறையதாமே. (௱கச)

(இ-ள்)

சுத்தமான நல்லெண்ணெய் —1 படி
எருமைத் தயிர் —1 மரக்கால்

இவற்றை யொன்று கலந்து,

சித்ர மூலம்
இந்துப்பு
சுக்கு
கண்டத்திப்பிலி

இவைகள் வகைக்கு 8 வராகனெடை வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு ஷை எண்ணெய்க் கலவையுடன் சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்து மெழுகு பதத்தில் இறக்கவும்.

கடுகுடனே இத்தைலத்தில் ஒரு கரண்டி யெடுத்துத் தினந் தோறும் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும், வயிற்றின் இரைச்சல், சங்கிரகக் கிராணி, வயிற்றுவலி, முதலானவை தீரும்.

பத்தியம்:-

தயிர்சாதம் உட்கொள்ளவும்.

குறிப்பு:-

68 நெ. சுவடியில் சரக்குகள் வகைக்கு 24 வராகனெடை சூரணம் என்றிருக்கிறது.

# 89. கிராணிக்கும் அதிஸாரத்திற்கும் மருந்து எண்ணெய்

எருமையிட தயிருமரு பத்துநாழி
யினிற்புளித்த தயிருமறு படியதாகு
முரமான எள்ளெண்ணெய் படியொன்றேகா
லுடன்சுக்குப் பலமாறு சயிந்தலவணம்
அரைப்பலந்திப் பிலிமூலம் பலமொன்றேகால்
லரிதாஞ்சித் திரமூலம் பலமுங்காலாம்
இரவிதனி லுலர்த்திப்பொடி செய்துயெண்ணெய்
யிற்கலந்து கலசமதில் வைத்திடாயே. (௱கரு)

வைத்துக்கொண் டேயிரண்டு வேளையுந்தான்
வகையாக வோர்கரண்டி யுண்டாயானா
லத்துப்போங் கிராணியென்னும் நோய்களோடே
அதிசார முதலாகத் தீருந்தீருஞ்
சத்தியுடன் தில்லைதனில் நடனமாடுஞ்
சச்சிதா னந்தர்பத மர்ச்சனைசெய்
சத்திரபதி துளசேந்திர பூபனீன்ற
சரபோசி ராசனரு ளியமருந்தே. (௱கசா)

(இ-ள்)

| | |
|---|---|
| 60 நாழி புளித்த எருமைத் தயிர் | —6படி |
| நல்லெண்ணெய் | — $\frac{1}{4}$ படி ($6\frac{1}{4}$ சேர்) |

இவைகளை யொன்று கலந்து,

| | |
|---|---|
| சுக்கு | — 6 பலம் |
| இந்துப்பு | — $\frac{1}{2}$ ,, |
| திப்பிலிமூலம் | — $\frac{1}{4}$ ,, |
| கொடிவேலிவேர் | — $\frac{1}{4}$ ,, |

இவைகளை உலரவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திர காயஞ் செய்துகொண்டு மேற்கூறிய கலவையில் கலந்து ஒன்றாகக் குழப்பி வைத்துக்கொள்ளவும்.

இத்தயிரைத் தினந்தோறும் இரண்டு வேளை ஒருகரண்டி உட்கொள்ள,

கிராணி
அதிசாரம்
முதலானவை தீரும். கைகண்டது.

## 90. கிருமிக்குச் சூரணம்

கிருமியென்ற புழுவதற்கு முசிதச்சூர்ணங்
கேளுமுன்மத் தம்வித்துப் பலமுமொன்று
முறையசம தாகமது பலமிரண்டு
முக்கியமாய்ச் சேர்த்துச்சட்டி காயவைத்து
உரைப்படியே யிளவறுப்பாய் வறுத்துக்கொண்டு
யுற்றவம்மி யிற்பொடித்து வடியுங்கட்டி
வொருகலச மதில்வைத்துக் கொண்டுதாநீ
வொருகடிப்பிர மாணஞ்சூ ரணத்தைத்தானே. (௱கஎ

சூரணத்தைத் தின்றிளவெந் நீருந்தன்னைத்
துருசாக வொருமிரு முண்ணுபத்யஞ்
சீருளவெள் ளாடுமுய லுப்புகண்ட
சேர்காடைக் குருவியிவை புளியில்லாமல்
காரெருமைத் தயிருமிதற் காகாதாகா
கனத்தசர்வ கிராணியென்ப தெல்லாந்தீரும்
பாரிலுயர் சோழவள நாடன்றஞ்சைப்
பதிசரப பூபதியும் பகர்ந்ததாமே. (௱கஅ)

(இ-ள்)

ஊமத்தை விதை — 1 பலம்
ஓமம் — 2 ”

இவைகளைப் புதுச்சட்டியிலிட்டு இளவறுப்பாக வறுத்துக் கொண்டு அம்மியில் வைத்துப் பொடி செய்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதில் ஒரு மூவிரல் கொள்ளுமள வெடுத்து வெது வெதுப்பான வெந்நீருடன் உட்கொள்ளவும்.

பத்தியம்:—

வெள்ளாடு, முயல் இவைகளின் வற்றல் கூட்டிக்கொள்ளலாம்.

காடைக்குருவி, எருமைத்தயிர், புளி முதலியவைகளை நீக்கவும். சர்வ கிராணிகளும் தீரும்.

## 91. கிராணிக்குக் கெந்தகச் சூரணம்

கெந்தகந்தான் வராகனெடை யுமிரண்டுங்
கெடியான வபினும்வரா கனெடையொன்று
இந்தயிரண் டுமுருக்கி யாறவைத்து
யியல்பாகப் பொடிபண்ணி வைத்துக்கொண்டு
வந்தவர்க்கு மரைப்பணத்தி னெடைதூள்தன்னை
வகையான வனுபான விசேடந்தன்னி
லுந்தினமு மஞ்சுநாட் கொள்ளக்கிராணி
யும்பறக்கு மிம்முறையை யுணர்வாய்ச்செய்யே. (ரகக)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் | -2வராகனெடை |
| அபின் | -1வராகனெடை |

இவ்விரண்டையும் ஒரு ஓட்டிலிட்டு அடுப்பின் மேல் வைத்து எரிந்து விடாமல் உருக்கி ஆறவைத்துப் பொடி செய்து வைத்துக் கொள்ளவும்.

இதில் $1\frac{3}{4}$ குன்றியளவெடுத்துத் தக்க அனுபானத்தில் 5 நாட்கள் உட்கொள்ளவும். கிராணிகள் தீரும்.

## 92. பித்தகிராணி, கபக்கிராணி வாதக்கிராணி பழங்கிராணி, அதிஸாரத்திற்குக் கடாயம்

சாதிக்காய் வெட்பாலை யரிசியுமா
தளம்பூவில வம்பசினா மத்தைவித்து
தீதிலாச் சுக்காறுஞ் சரியாய்க்கூட்டித்
திட்டமுட நறுக்கியிரு நாழிநீர்விட்

டுதிக்காய்ச் சியுமுழக்காய்க் கொள்கிராணி
யூரைவிட்டுப் போகுமதி சாரந்தானு
மாதித்த னங்கிமதி நயனமுள்ள
வாதிசிவ னருளாலிக் கடாயத்தானே. (ாகூ)

(இ-ள்)

சாதிக்காய்
மாதளம்பூ
ஊமத்தை வித்து
வெட்பாலையரிசி
இலவம்பிசின்
சுக்கு

இவைகளைச் சரியள வெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்துச் சுத்த ஜலம் சின்னபடி ஒன்று விட்டு, ஒரு உழக்காகும் வரை சுண்டவைத்து உட்கொள்ளக் கிராணிகள் அதிஸாரம் முதலானவை தீரும்.

## 93. வாத பித்த கபக்கிராணிகள், ஆமக்கிராணி முதலானவைகளுக்குச் சூரணம்

முத்தக்கா சாத்திப்பூ வெள்ளிலோத்திர
முதியபெரு மரப்பட்டை வெட்டிவேரும்
வத்தலச்சுக் கதிவிடைய மாவின்வித்து
வளவில்வப் பழச்சதையு மொக்கத்தானே
நத்துபுளி யங்கொட்டைத் தோல் வெட்பாலை
நல்லரிசி யிலவமரப் பிசினுங்கூட
வொத்தவட் டத்திருப்பி வேர்பன்மூன்று
மொக்கச்சேர் சரியாக வெல்லாந்தானே. (ாஉக)

இவையெல்லா முலர்த்திப்பொடி செய்துகொண்டு
யினியதொரு சீலைவடி கொண்டுதேனில்
நலமான தயிர்நீரி லிளவெந்நீரில்
நல்லபச்சை யரிசிகழு நீரில்தானே

குவலயத்தோர் நோயினுட வலுவறிந்து
கொடும்பித்த வாதசேத் துமக்கிராணி
யவையுடனே யதிசாரம் பழங்கிராணி
ஆமக்கிரா ணியும்போகு மன்பாய்ச்செய்யே. (௱உஉ)

(இ-ள்)

கோரைக்கிழங்கு
வெள்ளிலோத்ரம்
வெட்டிவேர்
அதிவிடயம்
வில்வப்பழச்சதை
வெட்பாலையரிசி
வட்டத்திருப்பிவேர்
ஆத்திப்பூ
பெருமரப்பட்டை
சுக்கு
மாம்பருப்பு
புளியங்கொட்டைத் தோல்
இலவம்பிசின்

இப்பதிமூன்று சரக்குகளையும் உலரவைத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து, இதில் மூவிரல் கொள்ளுமள வெடுத்துத் தேனிலோ, தயிர் நீரிலோ, வெது வெதுப்பான வெந்நீரிலோ, பச்சையரிசிக் கழுநீரிலோ நோய்க்குத் தக்கபடி சாப்பிட,

பித்த, வாத கபம் முதலான சம்பந்தம் உள்ள கிராணிகள், அதிசாரம், நாட்பட்ட கிராணி ஆமக்கிராணி முதலானவை தீரும்.

## 94. சகல கிராணிக்குந் தயிர்கடுகு

இந்துப்புக் கல்லுப்பு வகையிரண்டுக்
கேயரைக்கால் பலமிளகு பலமும் வீச
மந்தத்தைச் சாடுஞ்சுக் கசமதாகம்
வளமான பெருங்காயம் வகைகள்மூன்று

விந்தைக்கா செடையொன்று யபினிரண்டு
விராகனெடை யதிவிடையம் பாக்கின்மாத்திர
மந்தப்பிர காரம்வட்டத் திருப்பிபாக்கி
னளவரைத்த விழுதுசார டையுங்கூட்டே. (௱உ௩)

சாரடையுங் கருவேப்பி னிலைபிரண்டைத்
தண்டுமூன்று மெலுமிச்சங் காய்மாத்திர
மூரிநுணா விலைச்சாறு மிருநாழிவிட்
டுடனரைத்து யெருமையுட தயிர்நானாழி
சேராயிதெல் லாங்கூட்டிக் குழப்பியேதான்
திறமாக யெரிமெழுகு பதத்திலேதான்
வாருநல்லெண் ணெயுழக்க திலேதானே
வளமாகக் கிளறியதை வைத்துக்கொள்ளே (௱உ௪)

வைத்துக்கொள் ளிதுதயிரின் கடுகதாகும்
வகையான வொருபாக்கி னளவுதானே
வுத்திடுகாலையிற்கொள்ளு தயிருமோரி
னுடநாரத் தங்காயு மாகும்நல்ல
கத்தரிக்காய்ப் பிஞ்சுமிள கதைவறுத்துக்
கறிபண்ணிக் கூட்டிக்கொள் கடிய கிராணி
யத்துப்போங் கால்மண்ட லத்திற்றானே
யன்பும்மிகுந் தஞ்சைவிபு வருளதாமே. (௱உ௫)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| இந்துப்பு | — | $\frac{1}{8}$ பலம் |
| கல்லுப்பு | — | $\frac{1}{8}$ ,, |
| மிளகு | — | 1/16 ,, |
| சுக்கு | — | $1\frac{1}{4}$ வராகனெடை |
| ஓமம் | — | ,, |
| பெருங்காயம் | — | ,, |
| அபின் | — | 2 ,, |
| அதிவிடயம் | | கொட்டைப் பாக்களவு |
| வட்டத்திருப்பி | — | ,, ,, |
| சாரடை விழுது | — | ஒரு எலுமிச்சைப் பிரமாணம் |
| கருவேப்பிலை விழுது | — | ,, ,, |
| பிரண்டை விழுது | — | ,, ,, |

இவற்றை யரைத்து ஒன்று கலந்து நுணாவிலைச்சாறு சின்னப்படி ஒன்றும், எருமைத்தயிர் பெரியபடி ஒன்றும் சேர்த்து அடுப்பின் மேலேற்றி நன்றாகச் சாறு வற்றும் வரை எரித்து மெழுகு பதமானவுடன் நல்லெண்ணெய் ஒரு உழக்கு விட்டுக் கிளறி வைத்துக்கொள்ளவும்.

இத்தயிர்க்கடுகில் ஒரு பாக்களவெடுத்து அதிகாலையில் உட்கொள்ளவும். தயிர், மோர், நாரத்தங்காய், கத்தரிப்பிஞ்சுடன் வறுத்தமிளகு சேர்த்துத் தயாரித்த கறி முதலானவைகளை உட்கொள்ளவும். சுமார் 10 நாட்களுள் இவ்வியாதி தீரும்.

## 95. சகல கிராணிக்கும் சாதிலிங்க மாத்திரை

சாதிலிங் கங்கிராம் புடனதிவிடையஞ்
சாரையின் பருப்பு மாசிக்காய்
சாதிக்காய் காசுக் கட்டிவெட் பாலை
தன்னரி சியுமதி மதுரஞ்
சாதிபத் திரியுங் கசகசா வுமா
தளம்பிஞ்சு மக்கிராக் காரஞ்
சாதியு மிரண்டு வேலப்பிசின் விளாவின்
றன்பிசின் கோட்டமதாமே. (௯௨௬)

கோட்டமும்வாலி னுழுவையி னரிசிக்
குணமிகு மிலவினிற் பிசினும்
நாட்டமா மபினோ டிருபது மருந்தும்
நயமுடன் கிராதிகள் பண்ணி
நாட்டுமா தளையி னிலைரசம் விடுத்து
நாளது மூன்றரை மைப்போல்
கூட்டியே பாசிப் பயறது போலக்
குணமுட னுண்டையுஞ் செய்யே. (௯௨௭)

உண்டையுஞ் செய்து நிழலுலர்த் துலர்த்தி
யொருபர ணியிலதை யடைத்து
மொண்டிடு வனுபா னவிசே டத்தி
லோருண்டை யந்தியுஞ் சந்தி

மண்டலங் காலிற் கிராணியென் பதுவு
மகன்றிடு மிரவிமுன் பனிபோல்
தண்டமிழ் வாணர் புகழ்சர பேந்திர
நரபதி யுணருமாத் திரையே. (௱௨-அ)

(இ-ள்)

சுத்திசெய்த லிங்கம்
அதிவிடயம்
மாசிக்காய்
காசுக்கட்டி
அதிமதுரம்
கசகசா
அக்கிராக்காரம்
கருவேலம் பிசின்
கோஷ்டம்
இலவம் பிசின்
கிராம்பு
சாரைப் பருப்பு
சாதிக்காய்
வெட்பாலையரிசி
சாதிப்பத்திரி
மாதுளைப்பிஞ்சின் ஓடு
வெள்வேலம் பிசின்
விளாம் பிசின்
வாலுளுவையரிசி
அபின்

இவைகளைச் சமமெடுத்துத் தூள் செய்து காட்டு மாதளையிலைச்சாறு விட்டு 3 நாட்களுக்கு (மையாகும் வண்ணம்) அரைக்கவும். பின்னர்ப் பாசிப்பயறு அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இவைகளை ஒரு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தி தக்க அனுபானத்திலீந்திடவும். தினமும் 2 வேளை வீதம் 10 நாட்கள் சாப்பிடவும். கிராணிகள் தீரும்.

## 96. கிராணிகளுக்கு உருண்டை

கானழிஞ் சிற்பட் டைப்புரந் தோல்நாற்
கழஞ்சுசுக் கதுவும்நாற் கழஞ்சுந்
தானுநற் சீரகத் துடன்சமதா
கமுந்தனி லொக்கக் கொண்டு
மேனல மாகவரைத்துண்டை செய்து
மேன்மையா விளம்பிடி தின்னு
தானதை மோரிலுங் கொளுகிராணி
தானறு முண்மை யிதாமே. (௱உசு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| அழிஞ்சிற்பட்டையின் மேல் புரணி | — 4 | கழஞ்சு |
| சுக்கு | — 4 | ,, |
| சீரகம் | — 4 | ,, |
| ஓமம் | — 4 | ,, |

இவைகளைத் வண்ணீர் விட்டு நன்றாகவரைத்து உருண்டைகளாகச் செய்து ஒவ்வொன்றாக மோருடன் உட்கொள்ளவும். கிராணிகள் தீரும்.

## 97. கிராணிக்குச் சூரணம்

பெருமரப் பட்டை நன்னாரி வேரிந்துப்
பதுகழற் சிப்பருப் போமம்
கருவேப் பினிலைபொன் முசுட்டைவெந் தயமுங்
காபடினின் கிராம்புட நெல்லிப்
பருப்புகாட் டாத்திப் பூவுடன் லவங்கப்
பட்டைவில் வப்பழஞ் சுக்கு
அரியது மாதளை யோடுஞ்சா திக்கா
யதிவிடை யங்கொத்த மலியே. (௱கூ௰)

மல்லிதிப் பிலிவிலா மிச்சம்வேர் மிளகு
மாசிக்காய் வசம்புசீ ரகமு
நல்லில வம்பிசின் விளாமரப்பிசினு
நவிலும் வேப்பம ரப்பிசினுஞ்

சொல்லிய கடுக்காய் திப்பிலி மூலந்
துவருள காசுக்கட் டியுமே
வல்லவூ மத்தம் விதைபெருங் காயம்
வாசமாங் கோரையின் கிழங்கே. (௱௯௧)

கோரையின் கிழங்கு கிராம்புபோஸ் துக்காய்
குணமுடன் முப்பத்தஞ் சினிலே
கூறுமிந் துப்புத் தவிரமற் றதையுங்
குணமுடன் வறுத்துச்சூ ரணித்துச்
சீரையால் வடிக்கட் டியுமந்தக் கலசத்
தினிலிடை பத்திரப் படுத்தி
சாரமாய் வெருகடித் தூளதைத் தேனிற்
றயிரினுங் கூட்டிநீ கொள்ளே. (௱௯௨)

கூட்டி யிரண்டு வேளையுங் கொள்ளு
குருபரன் பதமதை நினைத்து
நாட்டமாய்ப் பத்து நாடணிற் கிராணி
நழுவிடும் புலிமுனம் மான்போல்
பாட்டினி னிசைகேட் டப்பர்சம் பந்தர்
பலதவ சுந்தரர்க் கருளு
மாட்டர வணியுங் கடவுளைப்பூசித்
தருள் பெரும் விபுவருள் தானே. (௱௯௯)

(இ-ள்)

| | |
|---|---|
| பெருமரப்பட்டை | ஓமம் |
| நன்னாரி வேர் | கருவேப்பிலை |
| இந்துப்பு | வெந்தயம் |
| பொன்முசுட்டை வேர் | நெல்லிப் பருப்பு |
| காட்டுக்கிராம்பு | லவங்கப்பட்டை |
| காட்டாத்திப்பூ | சுக்கு |
| வில்வப்பழச்சதை | சாதிக்காய் |
| மாதுளை ஓடு | கொத்தமல்லி விதை |
| அதிவிடையம் | இலாமிச்சம் வேர் |
| திப்பிலி | மாசிக்காய் |
| மிளகு | சீரகம் |
| வசம்பு | விளாம்பிசின் |

இலவம்பிசின் வேப்பம்பிசின்
கடுக்காய்த் தோல் கண்டத்திப்பிலி
காசுக்கட்டி ஊமத்தம் விதை
பெருங்காயம் கோரைக் கிழங்கு
கிராம்பு போஸ்தக்காய்
சுழற்சிப் பருப்பு

ஷெ சரக்குகளில் இந்துப்பைத் தவிர மற்றெல்லா சரக்குகளையும் இளவறுப்பாக வறுத்துக்கொண்டு பின்னர் எல்லாவற்றையும் நன்றாக இடித்து வஸ்திரகாயஞ் செய்து பத்திரப்படுத்தவும்.

இதில் ஒரு வெருகடித் தூளெடுத்துத் தேனிலோ, தயிரிலோ தினமும் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். 10 நாட்களுள் எவ்வகைக் கிராணிகளும் தீரும்.

## 98. சகல கிராணிகளுக்கும் உருண்டை

சுக்கபின் கஞ்சா வதிவிடை யங்கா
சுக்கட்டி சாதிக்காய் கிராம்பு
பக்குவ வசம தாகமும் கடுக்காய்
பலபெருங் காயமீ ரைந்து
மொக்கவே சரியாய் வெள்ளறு கஞ்சா
றூற்றியே யரைத்து மைப்போல
சக்கிய நாவற் பழமள வுண்டை
தான்செய்து நிழலுலர்த் துலர்த்தே. (௱௩௪)

உலர்த்தியே பத்திரப் படுத்தியேநீயு
மோருண்டை யெருமையின் தயிரில்
மலைப்பிலா துண்ணு யிரண்டுவே ளையுமே
வத்திடுங் கிராணியென் பதெல்லாந்
துலைத்திடு மிதற்கு மெருமையின் றயிருத்
துவருள வாழையின் காயும்
நலத்துடன் கொள்ளு மழகையிற் சரப
நரபதி யுணருண் டையுமே. (௱௩௫)

(இ-ள்)

சுக்கு
அபின்
கஞ்சா
அதிவிடையம்
காசுக்கட்டி
சாதிக்காய்
கிராம்பு
ஓமம்
கடுக்காய்த்தோல்
பெருங்காயம்

இவைகளைச் சமமெடுத்து வெள்ளறுகஞ்சாறு ஊற்றிநன்கு மைபோல் அரைத்து நாகப்பழ அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காயவைக்கவும். இதில் ஒன்றை யெடுத்து எருமைத் தயிரில் உட்கொள்ளவும். தினம் 2 வேளை இவ்வாறு செய்யக் கிராணிகள் தீரும்.

எருமைத் தயிர், வாழைக்கச்சல் இவைகளைச் சேர்த்துக் கொள்ளலாம்.

## 99. இரத்தக்கிராணி, ஈன்றுக்கிராணி, முறுக்குக்கிராணி முதலான சகல கிராணி களுக்கும் உருண்டை

சாதிக்காய் சாதிப்பத் திரிகிராம்பு
தன்னுடனேமூன்று மேயிரண்டு
சேர்திந்த வராக னெடையொன்று யபினுஞ்
சொல்லியே காசெடை யொன்று
மாதளம் பழவோ டிலவநற் பிசினு
மாம்பெரும் பட்டையி னுடனே
கோதிலா வாயிற் பட்டையும் புளியங்
கொட்டையின் றோலுஞ் சீரகமே. (௱௬௬)

சீரகஞ் குடசப் பாலையின் பட்டடை
சிறந்த காசுக்கட்டி யோடே
கூறுமொன் பதுவும் வகைக்குக்கா செடைநால்
கூட்டியே வொதியநற் பட்டை
தேருள சாறு மாவது தேங்கி
நின்றிடுங் குறும்பைச்சா றாதல்
வாறதுநன்றா யரைத்துக்கல் வத்தில்
வளமுள சுண்டையுஞ் செய்யே. (௱௲எ)

உண்டையுஞ் சுண்டைக் காயளவாக
வுருட்டியோர் கலசத்திற் றானே
தண்டிலவங்கப் பட்டைதூள் போட்டே
தன்னுட னுண்டையும் போட்டுக்
கொண்டுவெள் ளாட்டின் பாலிலோ ருண்டை
கொடுத்திடு பித்தக்கி ராணிக்கு
மண்டிய மீன்றுகி ராணிக்கு மெருமை
வளமுள தயிரினி லிடுமே. (௱௲அ)

வளமுள யெருமைத் தயிருமில் லாட்டால்
வறகாலிற் றயிறிலோ ருண்டை
யுளவிலா முறுக்குக் கிராணிக்கு நற்சுக
கதிந்தண்ணீ ரினிலிடு வுப்பும்
புளியது தவிரு பாற்றயிர் நெய்யும்
புசித்திடக் கிராணியு மறுமே
தளிர்நல வளஞ்சூழ் தஞ்சையில் வாழுஞ்
சரபபூ பதியுரை யிதுவே. (௱௲௯)

(இ-ள்)

சாதிக்காய்
கிராம்பு
சாதிப்பத்திரி

இவைகள் வகைக்கு 2 வராகனெடை
அபின் $1\frac{1}{4}$ நிறை வராகனெடை
மாதளம்பழவோடு

பெருமரப்பட்டை

புளியங்கொட்டைத்தோல்

வெட்பாலைப்பட்டை

மாம்பட்டை

இலவம் பிசின்

ஆயில்ய மரப்பட்டை

சீரகம்

காசுக்கட்டி

இவைகள் வகைக்கு 4 வராகனெடை

இவைகளைக் கல்வத்திலிட்டு ஓதியம்பட்டைச் சாறுவிட்டு நன்றாக வரைக்கவும். அல்லது தென்னங் குரும்பைச் சாறு விட்டும் அரைக்கவும். நன்கு மையானபின், சுண்டைக்காயள வுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். ஒரு பாத்திரத்தில் லவங்கப்பட்டைச் சூரணம் போட்டு, அதனுடன் வெள்ளாட்டுப்பால் விட்டு மேற்கூறிய ஒரு மாத்திரையும் சேர்த்துப் பிசைந்து உட்கொள்ளப் பித்தக் கிராணிகள் தீரும்.

எருமைத் தயிருடன் சாப்பிட்டால் ஈன்று கிராணிகள் ஏகும். எருமைத் தயிர் கிடைக்காவிட்டால் வெள்ளாட்டுத் தயிரை உபயோகிக்கவும். முறுக்கிக் கிராணிக்காகில் சுக்கு ஜலத்தில் சாப்பிடவும்.

பத்தியம்:-

உப்பு, புளிப்பு முதலான சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கிவிடவும்.

பசுவின்பால், தயிர், நெய் முதலானவைகளை வேண்டிய அளவு கூட்டிக்கொள்ளவும்.

குறிப்பு:-

68நெ. சுவடியில் மாம்பட்டைக்குப் பதில் அதிவிடயம் காணப்படுகிறது.

## 100. கிராணிக்கு உன்மத்தாதி உருண்டை (ஆனந்த வயிரவன்)

ஆனந்த பைரவமெனுமாத் திரையது
சொல்வேன் கிராணியாம் நோய்க்கு
கானுரை யுன்மத் தம்விரை சாதிக்
காயில வங்கமிங் கலியம்
ஊனமில் சயிந்த லவணமும் நாபி
யொடுசுக்குத் திப்பிலி யெட்டும்
மானதோர் வகையைச் சரியதாய்க்கூட்டி
யரைப்படிச் சாறதிற் றானே. (௱சய)

சாறதி லொருநாள் முழுதரைத் துண்டைத்
தானது செய்குன்றி யளவுஞ்
சாரமாங் குளிகை நிழலுலர்த் துலர்த்தித்
தான்கொடு வந்தியுஞ் சந்தி
கூறுள வனுபா னவிசே டத்தில்
கொடுத்திடக் கிராணி யென்பதுவும்
பாரதி சார மென்பது மாறும்
பண்புள தஞ்சை மானுரையே. (௱சக)

(இ-ள்)

ஊமத்தை வித்து
கிராம்பு
இந்துப்பு
சுக்கு
சாதிக்காய்
சுத்திசெய்த லிங்கம்
,, நாபி
திப்பிலி

இவைகளைச் சமனெடை யெடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு ஒரு நாள் முழுவதும் அரைத்துக் குன்றிப்பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

தக்க அனுபானங்களில் ஒரு குளிகை ஈந்திடக் கிராணிகள், அதிசாரம் முதலானவைகள் நீங்கும்.

# 101. கிராணிகளுக்குப் புளியாரை நெய்

புளியாரைச் சாறும் நாழிநற் றயிர்நீர்
போடதில் நாழிநெய் நாழி
வளமுடன் சிறுமூல கமுடன் செவியம்
வட்டநற் றிரிப்பிமுந் திரிகை
வொளிதருஞ் சீரக மமதி விடைய
முற்றவெட் பாலையின் மொட்டு
வெளியதா மசம தாகங்கூ வளையு
மேமுத்த மோடிது பத்தே. (ரசஉ)

பத்தையுஞ் சரிசேர்த் தரைத்ததிற் கரைத்துப்
பக்குவப் பதத்தினி லிறக்கி
நத்துவ மாகத் துட்டெடை நக்க
நாட்சென்ற கிராணியோ டுதிர
மத்திடும் பருத்த வழும்புக ளெல்லா
மானிடர் கிருபையி னாலே
சத்தியந் தவறாச் சத்திர பதியாஞ்
சரபநற் பார்த்திப னுரையே. (ரசங)

(இ-ள்)

| | |
|---|---|
| புளியாரைச் சாறு | — 1 படி |
| தயிரின் தெளிவுநீர் | — 1 ,, |
| பசுவின் நெய் | — 1 ,, |

இவற்றை யொன்று கலந்து,

திப்பிலி
யானைத் திப்பிலி
சீரகம்
வெட்பாலையரிசி
வில்வம்
வட்டத்திருப்பி
செவ்வியம்
திராக்ஷைப்பழம்
அதிவிடையம்

ஓமம்
கோரைக்கிழங்கு

இவைகளை வகைக்கு (1 பலம்) வீதமெடுத்து ஷ சாறு விட்டு நன்றாக வரைத்துச் சாறுகலந்த நெய்யுடன் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிகட்டிக் கொள்ளவும்.

இதில் ஒரு துட்டளவெடுத்து உட்கொள்ளக் கிராணிகள் தீரும்.

## புளியாரை நெய் (சந்தம் வேறு)

புளியாரைச் சாற்றில் தயிர்தனிநீர் சேர்த்து
வெளியாக நாழிநெய் விட்டு—வொளியாய்
முந்திரிகை வெட்பாலை மோமமோடதி விடையஞ்
சிந்துசிறு மூலகமுஞ் செவ்வியம்—வந்ததொரு
சீரகமும் வட்டத்திருப்பி மச மோதமுங்
கூரமிகு முத்தமொடு கூவிளையும்—சேர
அரைத்துக் கரைத்துவடித் தப்போதே நக்க
உரத்தகிராணி யுதிரம்—பெருந்த
வழும்பிவை போம்.
நீடுபுகழன்னமே நுண்ணிடையா மன்னமே
முன்னோர்கள் சொன்னபடி ஈதென்றே சொல்.

## 102. இரத்தாதிசாரம், பித்த ச்லேத்ம அதிசாரம், அஜீர்ணக்கிராணி, மாந்தக்கிராணி, மூலக்கிராணி முதலானவைகளுக்கு வடவானல மாத்திரை

பாங்குள வடவா னலமா முருண்டை
பகருவேன் சாரணை வேருந்
தீங்கிலா வட்டத் திருப்பிவேப் பிலையுஞ்
செய்யநாய் வேளையு மிஞ்சி

ஓங்கிய புங்கம் பட்டைமுற் றக்கா
சுடன்கொடி வேலிவே ருள்ளி
காங்கைதீ ராயில் பட்டையு டன்முக்
காவேளை வேருடன் றானே. (௱௪௪)

காவினிற் பெருமரப் பட்டையி னுடனே
கருதுமீ ராறுள வகைய்யு
மாவலாய் சமனாய் நறுக்கியோர் பாண்ட
மதனிலே போட்டிடு புளிப்பு
மேவிய மோரும் பதக்குமே யதனில்
விடுத்துநா லொன்றதாய்க் காய்ச்சி
யேவகை யாகப் பிழிந்திருத் துக்கொண்
டேசெயும் வகையதைக் கேளே. (௱௪௫)

வகையதுகேளு பதக்குமோர் தனையும்
வடுப்பிலே வைத்துநா நாழி
துகையதாய்ச் சுண்டி வரும்பொழுது ததிலிந்
துப்பெவட் சாரம்வில் வக்காய்
அகமகிழ் மாதளை யோடுவெட் பாலை
யரிசியு மிலவினிற் பிசினுந்
திகழுங்காட் டாத்திப் பூவுடன் வட்டத்
திருப்பிவேர் காசுக்கட் டியுமே. (௱௪௬)

கட்டியு மசம தாகமாங் கொட்டைக்
கதிலுறு பருப்பதி விடையஞ்
சட்டமா மபினும் வகைபதி மூன்றுஞ்
சரியதாய் நாற்கழஞ் சதுவுந்
திட்டமாய் நிறுத்துத் தயிருவார்த் தரைத்துச்
சேருநல் லெண்ணெயுங் கூட
தெட்டெலாங் கரைத்து யிறுகின பதத்திற்
றுருசுட னிறக்கிவைத் திடுமே. (௱௪௭)

வைத்ததைக் காசு போலுமாத் திரைகள்
வகையதா யுருட்டியே வைத்து
ரத்ததி சார மதற்குமோ ருண்டை
நன்மைய தாம்பருத் திக்கா

யுத்திடு சாற்றிற் கொடுமிகு வாத
முதிரதி சாரமென்ப துக்கு
மொத்திடு சாற்றி விடுமய்ய மென்னு
முதுவதி சாரமென் பதுமே. (௱சஅ)

அய்யதி சார மதுக்கனு பான
மதுவறிந் தேகொடு மிதற்கு
நெய்யும் சீரண கிராணியு மிரத்தம்
நளிர் நுரை மூலகி ராணி
பய்யவே மாந்தக்கி ராணியும் கண்டு
பலன்றரு சிவகிரு பையினால்
வையக மாளுந் துரைசர பேந்திரர்
வழுத்திய கிராணிமாத் திரையே. (௱கசு)

(இ-ள்)

சாறணைவேர்
வேப்பிலை
இஞ்சி
கோரைக்கிழங்கு
பூண்டு
முக்காவேளை
வட்டத்திருப்பி வேர்
நாய்வேளை
புங்கம்பட்டை
கொடிவேலிவேர்
ஆயில்யபட்டை
பெருமரப்பட்டை

இவைகளைச் சமமெடுத்து (10 பலம்) நன்கு இடித்து ஒரு பாண்டத்திலிட்டு புளித்த மோர் 2 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாய்க் காய்ச்சி நன்றாகப் பிழிந்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் 2 மரக்கால் மோர் ஊற்றி அடுப்பின் மேலேற்றி எரித்துச் சின்னபடி ஒன்றாக வற்ற வைத்து அதனுடன்,

இந்துப்பு
வில்வக்காய்
வெட்பாலையரிசி
காட்டாத்திப்பூ
காசுக்கட்டி
மாங்கொட்டைப்பருப்பு
அபின்
யவட்சாரம்
மாதளையோடு
இலவம்பிசின்
வட்டத்திருப்பிவேர்
ஓமம்
அதிவிடையம்

முதலான சரக்குகளை வகைக்கு 4 கழஞ்சு வீதமெடுத்து முற்கூறிய தயிர் கஷாயம் விட்டு நன்றாக அரைத்து நல்லெண்ணெய் ½ படிவிட்டு எல்லாவற்றையும் ஒன்று கலந்து அடுப்பின் மேலேற்றி நன்கு சுண்டவைக்கவும். அது இறுகியபின் காசளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு மாத்திரை உட்கொள்ள அதிஸாரம் தீரும்.

இதனைப் பருத்திக்காய்ச் சாற்றிலீந்திட ரக்தாதிஸாரம் தீரும். வாதாதி ஸாரத்திற்குத் தயிரில் இடவும்.

கபாதிஸாரமானால் அதற்கான அனுபானத்துடன் கொடுக்கவும்.

இம்மருந்தில் தீரும் நோய்கள்:-அஜீர்ணகிராணி, இரத்தக் கிராணி, குளிர், நுரை, இவைகளோடு கூடிய கிராணிகள், மூலக்கிராணிகள், மாந்தக்கிராணிகள்.

## 103. கிராணிக்குத் தைலம் (கெந்தகத் தைலம்)

விந்தையாங் கூத்தன் குதம்பையின் சாற்றை
விடுத்தொரு கல்வம தனிலே
கெந்தகம் பலமொன் றரைத்துமைப் போல
கேளொரு சிறுகல சத்தி

லுந்தட வதையுங் காயவைத் திடுபின்
　　னுலர்த்தியு மிப்படி யேநா
லுந்தரந் தடவிக் காயவிட் டதனி
　　லூசியாற் றுளையிடு வாயே. (௱௫௰)

துளையதிட் டோடு கொண்டதை மூடி
　　தாசுமண் செய்ததை யுலர்த்தி
வளமதா யடியி லொருசிறு கலசம்
　　வைத்தெரு முட்டைச்சா ணுயர
மொளிதரு நெருப்பை யிட்டிடிற் றயில
　　முற்பன மாயிறங் கியதை
அளவுடன் குன்றி மாத்திரந் தேனில்
　　அருந்திடக் கிராணிக ளறுமே. (௱௫௧)

(இ-ள்)

கூத்தன் குதம்பைச்சாற்றை ஒரு கல்வத்தில் ஊற்றி அதில் ஒரு பலம் சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் சேர்த்து நன்றாக அரைக்கவும். பின்னர், இதனை ஒரு கலசத்தில் தடவிக் காய வைக்கவும். மறுநாள் மறுபடியும் ஷெ சாறுவிட்டரைத்துக் கலசத்தில் தடவி உரைக்கவும். இவ்வாறு 4 தடவை தடவித்தடவி உலரவைக்கவும். அப்பால் அப்பானையின் அடியில் துவாரம் இட்டு, ஷெ கலசத்தின் வாய்க்குத் தக்க ஓட்டினாலதைமூடிச் சீலை செய்யவும். நன்றாகக் காய்ந்தபின், பூமியில் ஒரு சிறு குழி செய்து, அதில் ஒரு பீங்கான் கிண்ணியை வைத்து அதன் மேல் கெந்தகந் தடவிய கலசத்தை வைத்து அதைச் சுற்றிலும் எரு முட்டைகளை ஒரு சாணுயரம் அடுக்கிப் புடம் இடவும். அடியில் வைத்திருக்கும் கிண்ணத்தில் ''கெந்தக தைலம்'' இறங்கியிருக்கும்.

இதில் ஒரு குன்றியளவெடுத்து உட்கொள்ளக் கிராணிகள் தீரும்.

குறிப்பு:-

தீ அதிகமானால் கந்தகம் ஆவியாகும். ஆகவே நிதானமாகத்தீயிடல் வேண்டும்.

## 104. சன்னி, வாதக்கிராணி, சத்திகுன்மம், வாத குன்மம், அஷ்டகுன்மம், வாயுஜ்வரம் முதலானதற்குக் கெந்தக தைலம்

கெந்தக மிரண்டு பலமது வேப்பங்
கிடாயம்விட் டரைத்து மைபோல்
சுந்தரக் கைய லகமடை தட்டி
சூரியன் முன்னதை வைத்து
விந்தையா மூன்று நாளதின் பிறகு
வெடுத்தடை மட்டொடு கலசந்
தந்திரமாக வூசியாற் றுவாரந்
தான் செய்து மேலதைமூடே. (௱௫௨)

மூடியே மண்ணின் சீலையுஞ் செய்து
முன்சொலுங் கலசமும் பாதி
நாடியே யழுந்தக் குழியது கெல்லி
நலமுள வொருசிறு கலசந்
தேடியே கீழில் வைத்ததன் மேலே
செப்பிய கலசமும் வைத்து
நீடிய கானெரு முட்டைசா ணுயரம்
நீயடிக் கிப்புடம் போடே. (௱௫௩)

போட்டிடு தைல மிறங்கிடு மதையும்
பொற்புள வெயிலினில் வைத்து
நாட்டமாந் தைலம் நீரதுசுண்டி
நன்மெழு குப்பத மாகுந்
தீட்டிய பரணி தனிலதை யடக்கித்
தேனிலே கொடுத்திடு யிரண்டு
வாட்டமில் குன்றி மாத்திரஞ் சன்னி
வாதமுங் கிராணியும் போமே. (௱௫௪)

போகுமே யிதற்குக் கைப்புடன் புளிப்பும்
புகையிலை தள்ளு நெய்பாலு
மாகுமே சத்தி குன்மமு மகலும்
வாதகுன்மங்களுந் தீரும்

மேகமா யஷ்ட குன்மமு மீளு
　　மிரண்டுவே ளையுங்கொடு பால்நெய்
யாகும்வேண் டியது கூட்டுவாய் வதுவு
　　மகன்றிடுஞ் சுரமெலாம் போமே. (௱௫௫)

(இ-ள்)

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தகம் 2 பலம் எடுத்துக் கல்வத்திலிட்டு வேப்பம்பட்டைக் கஷாயம் 2 படி விட்டு நன்றாக வரைத்து இறுகியபின் ஒரு கையகலமுள்ள அடையாகத் தட்டி வெயிலில் காயவைக்கவும். மூன்று நாட்கள் சென்றபின், ஒரு துவாரமிட்ட கலசத்திற்குள் வைத்துச் சீலைமண் செய்யவும். மேற்சொல்லிய கலசம் பாதி அமுழ்ந்தும்வரை ஒரு குழிவெட்டி அதற்குள் வேறொரு சிறு கலசத்தைத் தைலம் சேரும் வண்ணம் வைத்து அதன்மேல் கந்தகம் இருக்கும் கலசத்தையும் வைத்து ஒருசாணுயரம் எரிமுட்டைகளை யடுக்கிப் புடமிடவும். புடம் ஆறியபின், சிறு கலசத்தில் விழுந்திருக்கும் தைலத்தை வெயிலில் வைக்க அதிலுள்ள நீர் சுண்டி மெழுகு பதமாகும் போது அதனை ஒரு ஜாடியிலிடவும். இரண்டு குன்றி நிறை தினம் 2 வேளை தேனுடன் கொடுக்கவும். சன்னி, வாதக்கிராணிகள் தீரும்.

**பத்தியம்:—**

கைப்பு, புளிச்சுவையுள்ள பண்டங்களையும், புகையிலையையும் நீக்கி நெய், பால் இவைகளை வேண்டிய அளவு உட்கொள்ளக் கொடுக்கவும்.

சத்தி குன்மம், வாத குன்மம், அஷ்டவித குன்மங்கள், ஜ்வரங்கள் முதலானவைகள் நீங்கும்.

## 105. சகல கிராணிகளுக்கும் தெசசாராக்னி

சகலகி ராணிக்குத் தெசசராக் கினியுஞ்
　　சாற்றுவே நொச்சிலி னிலையும்
புகலுங் கலியாண முருக்குட னெருக்கும்
　　பொடுதலை யுடன்கையாந் தகரை

சுகம தாங்குப்பை மேனியும் பிரண்டை
சோதிநீர் மேலினும் நெருப்புந்
தகைபெருஞ் சதிரக் கள்ளிசா ரணையுஞ்
சாற்றிய வகையது பத்தே. (௱நிசு)

பத்தையுந் தன்சா றாகவோர் வகைக்குப்
பாரொரு நாழியும் பிழிந்து
வைத்திடோர் பெரிய சட்டியு மடுப்பில்
வளமதாய்ச் சாறெலா மூற்றி
யத்தன லாலே கொதித்திடும் போது
மற்புத வுள்ளிதோல் போக்கி
நத்துவ மான பருப்பதா யெடுத்து
நாற்பது பலமரைத் திடுமே. (௱நிஎ)

அரைத்ததிற் கரைத்து வாவினிற் பாலு
மீந்திடு மோரிரு நாழி
யுரைத்திடு படிக்கிக் காடியுந் தானே
வோரிரு நாழியும் விட்டு
நொருக்கியே விரையுந் தள்ளியே கடுக்காய்
நூறுசுக் கிருவது பலமாந்
திருத்திய யிந்துப் பிரண்டது பலம்போட்
டேயனல் மூட்டிடு வாயே. (௱நிஅ)

மூட்டியே யேழுநாள் மெள்ளமெள் ளத்தான்
முனிவுட னெரித்துயெட் டானாள்
வாட்டியு மிளங்கொதி யிட்டது வரச்சே
வாமணக் கெண்ணெய துரியும்
நாட்டமாம் பசுவின் னெய்யது முரியும்
நலமுடன் விட்டதிற் கலந்து
தாட்டிக மான மென்பொடி சுக்கு
தன்கரு வேப்பிலை மிளகே. (௱நிக)

வேப்பிலை கொடுவே லியோடு பாடாதி
வேரதி விடையமிந் துப்பு
வாய்ப்புள வசம தாகஞ்சீ ரகமும்
வாய்வறு திப்பிலி யோடே.

தோப்புட னொன்பது வகையும் வகைக்கி
சொற்படி நாற்பல மாகுஞ்
சாப்பிடுங் காய மோர்பலம் பொடிசெய்
தவையதிற் றூவிடு வாயே. (௱௬௰)

தூவியே கிளறிப் பதம்பிச காமற்
றொழுதந்தக் கடவுளை யன்பாய்
நாவினால் நம்பி னேனெனச் சொல்லி
நாடியே யிறக்கிவைத் திட்டு
ஆவியு மடங்கிற் றானியப் புடம்வைத்
தவழைக்கழற் கொடியதின் மாத்திர
மாவலா யுருட்டி யற்புத மாக
வந்தியுங் காலையுங் கொள்ளே. (௱௬௧)

கொண்டிடக் கிராணி யுடனதி சாரங்
குக்கியி னெரிவரி வையர்கள்
கொண்டகெற் பத்தால் வருமதி சாரங்
கொடும்பித்தம் பாண்டுவு மூல
மண்டிய வாய்வு வயிற்றினில் வியாதி
மற்றது மறுமிந்த முறையை
தண்டர ணிக்கோர் தயாபரன் தஞ்சை
சரபபூ பதியுணர் முறையே. (௱௬௨)

(இ-ள்)

நொச்சியிலை
எருக்கிலை
கையாந்தகரை
பிரண்டை
சதுரக்கள்ளி
கல்யாணமுருக்கன் இலை
பொடுதலை
குப்பைமேனி
நீர்மேல் நெருப்பு
சாரணை இலை

இவைகளை இடித்துப் பிழிந்த சாறு வகைக்கு ஒரு நாழி எடுத்து ஒரு சட்டியிலிட்டு அடுப்பின்மேலேற்றிக் கொதிக்க வைக்கவும். அதனுடன் வெள்ளுள்ளிப் பருப்பு 40 பலம் எடுத்து அரைத்துக் குழப்பிப்,

| | |
|---|---|
| பசுவின்பால் | —2 படி |
| மோர் | —2 ,, |
| காடி | —2 ,, |

இவைகளையும் கலந்துகொள்ளவும்,

| | |
|---|---|
| கொட்டை நீக்கிய கடுக்காய் | — 100 |
| சுக்கு | — 20 பலம் |
| இந்துப்பு | — 2 ,, |

இச்சரக்குகளையும் இடித்துப்போட்டு, சிறுகச் சிறுக 7 நாட்கள் எரிக்கவும். 8-வது தினத்தன்று நன்கு கொதிக்கையில்,

| | | |
|---|---|---|
| * ஆமணக்கெண்ணெய் | —½ படியும் (2½ சேர்) | |
| பசுவின் நெய் | —½ ,, | விட்டு |

ஒன்று கலந்து,

சுக்கு
மிளகு
கொடிவேலி வேர்
அதிவிடயம்
ஓமம்
திப்பிலி
கருவேப்பிலை
வேப்பிலை
வட்டத்திருப்பி வேர்
இந்துப்பு
சீரகம்

இவைகளை வகைக்கு — 4 பலம்

பெருங்காயம் — 1 ,,

---

* 68 நெ. சுவடியில் ஆமணக்கெண்ணெய்க்குப் பதில் நல்லெண்ணெய் எடுத்துக்கொள்ளவும் என்று காணப்படுகிறது.

முதலான சரக்குகளை இடித்துச் சூரணம் செய்து, குழப்பிக் கடவுளைத் துதி செய்து, லேகியப் பதத்தில் இறக்கி வைத்துக் கொள்ளவும்.

கடவுளைத் தியானித்த பின்னர், இதைக் கலசத்தில் பத்திரப்படுத்தித் தானியபுடம் இடவும். 25 நாட்கள் சென்றபின் இதைப் பிரித்து சுழற்சிப் பிரமாணம் தினம் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

கிராணி, அதிஸாரம், வயிற்றின் எரிச்சல், கெர்ப்பிணிகளுக்குக் காணும் அதிஸாரம், பித்தம், பாண்டு, மூலம், வாயு ரோகங்கள் முதலான பற்பல ரோக வகைகளும் தீரும்.

## 106. குஷ்டம், குன்மம், கிராணி, பித்தம் முதலானவைகளுக்குச் சோதித் தைலம்

அழிஞ்சில் நீர்வெட்டி முத்துடன் பாவட்
டைக்கடுஞ் செம்புளிச் சத்தோ
செழுமலர் கொன்றை தூதிலு லுப்பை
தேற்றுமக் கொட்டையுங் கடுக்காய்
தொழுக்கட் டைசதிர்க் கள்ளியும் பத்து
சொல்லிய வகையினிற் றானே
அழிஞ்சிலுங் கருஞ்செம் புளிச்சையும் வாயு
சதிர்க்கள்ளி மூன்றே. (௱சுரு)

சதிரக்கள் ளியுடன் மூன்றும் வெவ்வேறே
தனித்தனி விரையது வேறே
விதமுன் யேழும் விரையது வேறொன்றாய்
வெவ்வேறாய் றயிலமதி றக்கி
சதமிள கரணை யுடன்பட மடக்கி
சாற்றுகி ளர்த்திவேர் மூன்றும்
யிதமுள சீந்தி லெலும்பொட்டி யுடனே
யேலுநஞ் சறப்பறித் தானே. (௱சுசு)

நஞ்சறப் பழித்தா னுடனேயிம்மூன்று
நவின்றிடு வகைசமூ லமுமாம்
விஞ்சைய தாகச் சரிசரி கூட்டி
வெவ்வேறாய்த் தைலம திறக்கி
மஞ்சளுங் கடுகு குக்கிலு மோமம்
வாய்விளங் கத்தொடு வகைக
ளஞ்சுமுன் றயில நிறையிலே பாதி
யளவதாய் தயிலம தற்கே. (௱சுரு)

தயிலம திறக்கி யொன்றதாய்க் கலந்து
தானொரு கலசத்தில் வைத்து
இயலுள குப்பை யினிலேமுப் பதுநா
ளேபுதைத் தெடுத்ததைத் தானே
நயமிகுஞ் சோதிற் றயிலமி தன்னை
நக்குவோர் காசெடை தானும்
பயனிதுக் குட்ட வியாதியும் வாயுவும்
பறந்திடுங் குன்மவா தனையே. (௱சுசு)

வாதனை மிகுந்த கிராணியுந் தீரு
மாடிடு பயித்திய பித்தம்
வேதனை செய்யுந் தீட்சரோ கங்கள்
மேவிடிற் கொடாதெயிற் றயிலந்
தாதவிழ் வெற்றி மாலையு மணிந்து
சந்திர வாள்கையி லேந்த
பூதலம் புகழுற் றஞ்சைவாழ் சரப
பூபதி யுணர்தைல மீதே. (௱சுஎ)

(இ-ள்)

அழிஞ்சில் விரை, வேர்
கருஞ்செம்புளிச்சை விரை, வேர்
பாவட்டை விரை, வேர்
மிளகரணை வேர்
நீரடிமுத்து விரை, வேர்
செழுமலர்க்கொன்றை விரை, வேர்
நஞ்சரப்பரிந்தான் வேர், சமூலம்
சதுரக்கள்ளி விரை, வேர்

கிளர்த்திவேர் சமூலம்
தூதிலுலுப்பைவேர், விரை
தொழுக்கட்டைவேர், விரை
கடுக்காய்விரை, வேர்
தேற்றாங்கொட்டை விரை, வேர்
எலும்பொட்டி சமூலம்
படமடக்கி வேர்
சீந்தில் கொடி சமூலம்

வேறே தைலமிறக்கிச் சரியளவு கூட்டவும். அழிஞ்சில் விரை வேறே, வேர் வேறே, கருஞ் செம்புளிச்சை விரை வேறே, வேர் வேறே தைலமிறக்கி இரண்டளவாகக் கூட்டவும். ஆக வகைக்கு எட்டளவு சரியளவாகக் கூட்டி இதில் மஞ்சள், கடுகு, ஓமம், வாய்விடங்கம், குக்கில் இந்த 5 வகையும் வெவ்வேறாகத் தைல மிறக்கி முந்தியளவில் பாதியளவாகக் கூட்டி எல்லாமொன்றாய்க் கலந்து கலசத்தில் வார்த்து ஒரு மாதம் குப்பையிலே புதைத்துப் பின்பு எடுத்துத் தினம் காசெடை தைலம் உட்கொள்ளவும்.

இத்தைலத்தால் குன்மவாதம், கிராணி, பித்தம், தீட்ச ரோகங்கள் முதலானவை தீரும்.

குறிப்பு:-

மேலே கொடுக்கப்பட்டிருக்கும் பொருள் உரைச்சுவடியில் உள்ளது.

## 107. அதிசாரம், கிராணிக்குக் கெங்காதர சூரணம்

பெருமரத்தின் பட்டைகோ ரைக்கிழங்கு
    வில்வமரப் பிஞ்சு சுக்கு
தருவிலுறு புளியங்கொட் டைத்தோலு
    மாங்கொட்டை தனிற்பருப்பு
முறமான காட்டாத்திப் பூலோத்திரம்
    வெட்பாலை யுடகண்டூலம்
மரிதான பொன்முசுட்டை யிலாமிச்சம்
    வேருமதி விடையத்தானே. (ரசு அ)

அதிவிடைய மிலவுபிசின் பன்மூன்று
வகையுஞ்சரி யாகக்கூட்டி
பதமாக யிடித்துவடி செய்துகங்கா
தரச்சூர்ணம் பண்பாந்தேனில்
விதமாகக் கொடுகாலை யந்தியுமே
யதிசார மேகுங்கிராணி
யதுமோடு யிச்சூர்ணந் தஞ்சைசர
பேந்திரனுண ரருளதாமே. (௱௬௯)

(இ-ள்)

பெருமரப்பட்டை
வில்வப்பிஞ்சு
புளியங்கொட்டைத்தோல்
காட்டாத்திப்பூ
வெட்பாலையரிசி
இலாமிச்சைவேர்
இலவம்பிசின்
கோரைக்கிழங்கு
சுக்கு
மாங்கொட்டை பருப்பு
வெள்ளிலோத்ரம் (விளா) பட்டை
பொன்முசுட்டைவேர்
அதிவிடையம்

இவைகளைச் சரியெடை யெடுத்து, நன்றாக உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனில் குழைத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

அதிசாரம், கிராணி முதலானவை தீரும்.

## 108. கிராணிக்குப் பலகரை பற்பம்

பலகரைபற் பமதுகால் வராகனெடை
யிந்துப்பப் படியேகூட்டி
நலமான தேனதிலே கலந்துகொடு
காலையந்தி நாளுமெட்டு

பலமான கிராணியது கடிதோடும்
 ரவிமுன்னின் பணியைப் போல
கலைவலர்கள் புகழ்சரபேந் திரணரு
 மவிழ்தமென கருத்திலெண்ணே. (௱எ௰)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சோழிபற்பம் | — ½ வராகனெடை | |
| இந்துப்பு | — | ,, |

இவைகளைத் தேனில் குழைத்துத் தினமும் காலையிலும் மாலையிலும் 8 நாள்களுக்கு உட்கொள்ளவும். கிராணிகள் தீரும்.

குறிப்பு: -

இது சுண்ணாம்பு சத்துள்ள மருந்தாகையால் நிதானித்துச் சாப்பிடவும்.

## 109. கிராணிகுல கடாயம்

இருபல முக்காவேளை
 யிசைந்தசுக் கதனிற்பாதி
யொருபடி தண்ணீரெட்டி
 லொன்றதாய்க் காய்ச்சிக்கொள்ளப்
பெருகிய கிராணி குன்மம்
 பெலத்திடு வாய்வுதானும்
யொருவது தேகம் விட்டுப்
 போமது திண்ணந்தானே. (௱எக)

(இ-ள்)

| | |
|---|---|
| முக்காவேளை | — 2பலம் |
| சுக்கு | — 1 ,, |

இவைகளை யிடித்து சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டூற வைத்து அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றாகும்வரை வற்ற வைத்து வடிக்கட்டி அருந்தவும். கிராணி, குன்மம், வாய்வு முதலானவை தீரும்.

# 110. சகல கிராணிக்கும் சூரணம்

சுத்தி செய்யு மிரதம்வரா கெனடையொன்று
காந்தநிறை செல்வேனாலு
நத்தும்வரா கனெடைகெந்த கமுமெட்டு
வராகனெடை நவிலிரும்பி
னுத்தவரப் பொடியுமீ ரெட்டுவராக
னெடையிதிலுறு கெந்தகத்தோ
டொத்தவரப் பொடிகாந்த மூன்றையுமே
சூரணஞ்செய் துடனேதானே. (௱எஉ)

சூரணத்தைக் குழித்திரதம் விட்டுகற்றா
ழைமணியிட் டுடனேமூடிப்
பாருபின்பு மூடினதைச் சூரணங்கொண்
டேமூடிப் பகர்சந்தான
சாரவதி லொருநாழி சென்றபின்பு
மதையெல்லாந் தானேகூட்டிச்
சூரணம்பண் ணியுமெடுத்து வைத்திடுவாய்
பீங்கானிற் றுருசாய்த்தானே. (௱எகூ)

துருசாக வைத்துகுட சப்பாலைப்
பட்டைதனைச் சூரணித்து
மருந்துமொரு பாத்திரத்தில் வைத்துளுக்குக்
கொளும்போது வண்மையாக
சரிசரியா யிரண்டையுமே கூட்டிநற்றே
னிலருந்தச் சகலகிராணி
யிரவிமுனின் பனியெனப்போம் பின்னொன்று
மாகாதென் றியம்பினாரே. (௱எச)

இயம்புவெந்நீர் தயிர்மோர்நெய் யேபோதுக்
கூட்டிக்கொள் ளிதமாய்நோயின்
பயன்பலனு மறிந்துகொடுச் சூரணத்தை
சிவபூசை பக்தியாக

நயம்பெறவே செய்துவொரு கோடிவிப்ரர்க்
கன்னதான மரிசித்தானங்
கயதானந் தனதான முதவுதஞ்சைச்
சரபேந்திரன் கருத்திதாமே. (௱எ௫)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த பாதரஸம் | —1 | வராகனெடை |
| ,, காந்தம் | —4 | ,, |
| ,, நெல்லிக்காய் } ,, கெந்தகம் } | —8 | ,, |
| ,, அரப்பொடி | —16 | ,, |

இவற்றுள் முதலில் கெந்தகம், காந்தம், அரப்பொடி இம் மூன்றையும் ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கொள்ளவும். பின்னர் அதில் ஒரு குழி செய்து பாதரஸத்தை ஊற்றி, கற்றாழைச்சாற்றையும் ஊற்றி ஷெ சூரணத்தை மேலே போட்டு மூடி ஒரு நாழி அப்படியே வைக்கவும். இம்மருந்தை நன்றாக அரைத்து ஒரு பீங்கானில் பத்திரப்படுத்தவும்.

வேண்டும்போது இச்சூரணத்தில் மூவிரல் கொள்ளுமள வெடுத்து அதற்குச் சமயெடை வெட்பாலைப் பட்டைச் சூர ணம் சேர்த்துத் தேனில் குழைத்து அருந்தவும். சகலவித கிராணிவகைகளுந் தீரும். உடம்பு பலத்தை யனுசரித்து இச் சூரணத்தை உட்கொள்ளவும்.

பத்தியம்:-

குளிர்ந்த ஜலம் ஆகாது, வெந்நீர் உட்கொள்ளவும்.

தயிர், மோர், நெய் இவைகளை வேண்டிய அளவு கூட்டவும்.

## 111. இரத்தக்கிராணி இரத்த பித்தத்திற்கு

ஓதியமரப் பட்டைகடா யங்காய்ச்சி
யெண்ணெய்சரி யுடனேகூட்டி
புதிதாக வல்வொதியம் பட்டைதனை
யரைத்துவதிற் போட்டுத்தானே

பதமாகக் காய்ச்சியொரு துட்டெடையும்
நக்கியதைப் பாரிரத்தம்
அதமாமிரத் தக்கிராணி ரத்தபித்த
மதுதீர்ந்தா ரோக்கியமாமே. (௱எசு)

(இ-ள்)

ஒதியமரப்பட்டை (1 சேர்) பச்சையாகக் கொண்டுவந்து இடித்து 8 மடங்கு சுத்தஜலம் விட்டு 1 சேராக வற்றவைத்துக் கஷாயம் இறக்கிக்கொள்ளவும். இத்துடன் சுத்தமான நல்லெண்ணெய் ஒரு சேர் விட்டு, ஒதியம்பட்டைக் கல்கம் (ஒருபலம்) எடுத்துக் குழப்பி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த எண்ணெய் ஒரு துட்டெடை உட்கொள்ள இரத்தக் கிராணிகள் இரத்தபித்தம் முதலானவை தீரும். சௌக்ய முண்டாகும்.

## 112. கிராணிக்கழிச்சல், இரத்தபித்த கழிச்சலுக்குக் கிரகணீகபாட மாத்திரை

மாதளையி னிலைவெட்பா லையினரிசி
யதன்பட்டை வாழைப்பூவும்
பூதலகோ ரைக்கிழங்கு பெருமரத்தின்
பட்டைபொன்மு சுட்டைவேரும்
பேதமில்லா வில்வவேர் சிறுநாஞ்சோறி
யின்வேரும் பிசகாமற்றா
னோதுமர சம்பட்டை பத்துங்கடா
யஞ்செய்யெட் டொன்றாய்த்தானே. (௱எஎ)

எட்டொன்றாய்க் காய்ச்சி நல சாதிலிங்கம்
வெங்கார மிலவம்பட்டை
மட்டவிழுஞ் சாதிக்காய் காட்டாத்திப்
பூவுமதி விடையத்தோடே
திட்டநீர் முள்ளிவிரை வெட்பாலை
யரிசிதிரி கடுகுங்கூட
கட்டமாயிப் பத்துவகைச் சரக்கும்
நிறுத்துயிதைச் சரியாய்க்கூட்டே. (௱எஅ)

சரிகூட்டி முன்சொன்ன கடாயம் விட்டுக்
 கல்வமதிற் றான்மைப்போல
ஒருநாளெ லாமரைத்து மிளகதுபோற்
 குளிகைபண்ணி யுலரவைத்து
வுரைதேனி லாதலிஞ்சிச் சாற்றினி
 லாகுதலோ ருண்டைதன்னை
யருளாகக் கொடுகாலைக் கோருண்டை
 யந்திக்கோ ருண்டைதானே. (௱௭௬)

உண்டையதை நாலைந்து நாட்கொள்ளக்
 கிராணியென்ப தொழிந்துபோகுஞ்
சண்டிசெய்யுங் கழிச்சலுட னிரத்தமெலா
 மரறுமிது தப்பாதென்றே
அண்டினரைக் கார்த்துபந்து ஜனபோஷ
 கஞ்செய்து வழகையாளு
மண்டலாதி பதிசர பேந்திரபூ
 பனுணர்ந்த வண்மையாமே. (௱௭௭)

(இ-ள்)

மாதளையிலை
வெட்பாலைப்பட்டை
கோரைக்கிழங்கு
பொன்முசுட்டைவேர்
சிறுகாஞ்சோறிவேர்
வெட்பாலையரிசி
வாழைப்பூ
பெருமரப் பட்டை
வில்வவேர்
அரசம் பட்டை

இச்சரக்குகளை (வகைக்கு I பலம் வீதமெடுத்து) நசுக்கி 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு எட்டிலொன்றாக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

சுத்திசெய்த சாதிலிங்கம்
இலவம்பட்டை
காட்டாத்திப் பூ

நீர்முள்ளி விரை
சுக்கு
மிளகு
பொரித்த வெங்காரம்
சாதிக்காய்
அதிவிடையம்
வெட்பாலையரிசி
திப்பிலி
இலவம்பிசின்

முதலான சரக்குகளை (வகைக்கு 1பலம் எடுத்து)ச் சூர ணித்து ஒரு கல்வத்திலிட்டு முன் சொன்ன கஷாயம் விட்டு நன்கு மைபோலரைக்கவும். நாள்முழுவதும் அரைக்கவும். மறு நாள் மிளகளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் காய வைக்கவும்.

இம்மாத்திரையைத் தேனிலோ அல்லது இஞ்சிச் சாற்றிலோ தினந்தோறும் காலையிலும் மாலையிலும் கொடுக்கவும் 4 அல்லது 5 நாட்களுக்குள் கிராணிகள் தீரும், கழிச்சல் இரத்த அதிசாரம் முதலானவைகளும் தீரும்.

## 113. சகல கிராணிகளுக்கும் உருண்டை

சாதிக்காய் சாதிப்பத் திரிகிராம்பு
மபின்கசக சாயிவைந்தும்
நீதப்பா மலொவ்வோர் வராகனெடை
யொன்றாக நிறுத்துக் கொண்டு
மாதளங்கா யைத்துளைத்து விதைதசையும்
போக்கியிந்த மருந்தைவைத்து
பேதித்தி டாமலெரு முட்டைபுடத்
திற்போட்ட பின்புதானே. (௱அக)

போட்டதுவும் வேகவிட்டு யெடுத்துவெந்நீர்
விட்டரைத்து பொருந்துமுண்டை
காட்டுக்கடுக் காயளவு செய்துவந்த
வுண்டையைக்கை யாலெடுத்து

நீட்டுவோ ருண்டைதயி ரினிற்குழப்பி
யொருவேளை நீயுங்கொள்ளு
மீட்டிடுங்கி ராணியெலாம் பறந்தோடுங்
கதிர்முன்மின் மினிபோலாமே. (ΠΙ அ௨)

ஆகுமிதற் குப்பத்தியஞ் சொல்வேன்கேள்
முள்ளிப்பிஞ் சாகுமல்லால்
வாகுளவா ழைக்கச்சல் தயிருடனே
சோறுங்கொள் வாயுசேர்ந்த
வேகுமிகுந் திடுபதார்த்தங் களொன்று
மாகாது விளம்புகின்ற
தேகனக மேருபுயன் தஞ்சைசர
பேந்திர னருள் செயலிதாமே. (ΠΙ அ௩)

(இ-ள்)

சாதிக்காய்
கிராம்பு
கசகசா
சாதிப்பத்திரி
அபின்

இவைகள் வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்துத் தூளாக்கி ஒரு முற்றிய மாதளங்காயின் விதையையும் சதையும் நீக்கியதற்குள் திணித்து அதிசாக்கிரதையாகப்புடம் போடவும். காய் வெந்தவுடன் அதை எடுத்துக் கல்வத்திலிட்டு வெந்நீர் விட்டு நன்றாக அரைக்கவும். காட்டுக் கடுக்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திக்கொள்ளவும்.

தினமும் காலை வேளையில் ஒரு உருண்டை தயிருடன் உட்கொள்ளவும். கிராணிகள் தீரும்.

பத்தியம்:-

முள்ளுக்கத்திரிப்பிஞ்சு, வாழைக்கச்சல், தயிர் சாதம் இவைகளை உட்கொள்ளவும். வாயு பதார்த்தங்கள் சேர்க்கலாகாது.

# 114. சங்கரக் கிராணிக்குக் கோடா சூழி மாத்திரை.

சங்கர கிராணிக்குக் கோடா சூளியின்
மாத்திரை தானுஞ் சொல்வேன்
பொங்கு நிர்விஷம் நாபியி ரதந்
தாளகங் கெந்திபொ ருந்துஞ் சாதி
லிங்கம் வெங்கா ரம்கௌரி பாஷாண
மெவட் சார மிரபிகூட
வுங்குதிரி கடுகு திரிபலை யுமக்கிராக்
காரஞ் சரியொக் கக்கூட்டே. (௱அச)

கூட்டியிந்த மருந்துகட்குச் சமபாகம்
நேர்வாளங் கூடக் கூட்டி
நாட்டில்கை யாந்தகரைச் சாறுவிட்டு
யிருபத்தோரு நாளரைத்து
கூட்டிகுன்றிப் பிரமாணங் குளிகைசெய்து
நிழலுலர்த்திக் கொண்டுவைத்து
நீட்டுகிரா ணிக்குகஞ்சி யுடனேயோ
ருண்டைதனை நீயீவாயே. (௱அரு)

வாய்ந்ததயி ருடனேகொ டுசங்கரக்
கிராணியது மாறிப்போந்
தாப்பிரிய வெலுமிச்சம் பழச்சாற்றில்
வயிற்றுவலி தனக்கு மீவாய்
கோப்பியமாய் வாய்வுக்குக் கோமூத்தி
ரந்தனிலே கொடுப்பாய் நீண்ட
காய்ப்புளியி லைச்சாற்றில் கொடுக்கக்கா
மாலையது கழன்றுபோமே. (௱அசு)

போகுமந்த நோய்வலுவுந் தேகவலு
வுங்கண்டு பொருந்தவேதா
ளாகுமனு பானவிசே டந்தனிலே
யெவ்வியாதிக் காகுந்தானே

நீகருத்தி னாலறிந்து பத்தியஞ்சொல்
சிவகிருபை நித்தியம் பெற்று
ஆகமசாஸ் திரமுணர்ந்த சரபேந்திர
பூபதியி னருளதாமே. (ரு அஎ)

(இ-ள்)

சுத்திசெய்த நிர்விஷம் (இருவி)
,, நாபி
,, பாதரஸம்
,, தாளகம்
,, கெந்தகம்
,, லிங்கம்
,, கௌரிபாஷாணம்
பொரித்த வெண்காரம்
எவட்சாரம்
சுக்கு
திப்பிலி
மிளகு
கடுக்காய்த்தோல்
நெல்லிவற்றல்
தான்றித்தோல்
அக்கிராக்காரம்

முதலான சரக்கு வகைகள் 1 வராகனெடை
சுத்திசெய்த நேர்வாளம் 16 ,,

இவைகளுள் இரஸத்தையும் கெந்தகத்தையும் ஒரு சுத்தமான கல்வத்திலிட்டு நன்றாகக் கருப்பாகும் வரை யரைத்துக் கஜ்ஜலி செய்து பின்பு மற்ற சரக்குகளை சூரணித்துப்போட்டுக் கையாந்தகரைச் சாறுவிட்டு அரைக்கவும். தினமும் புதிய சாறுவிட்டு 21 நாட்கள் அரைத்துக் குன்றிமணிப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

கிராணிகளுக்குக் கஞ்சியுடனே ஒரு குளிகை கொடுக்கவும். சங்கரக்கிராணிக்கெனில் தயிரில் இம்மாத்திரையை உட்கொள்ளவும். எலுமிச்சம்பழச் சாற்றில் சாப்பிடவயிற்று

வலி தீரும். வாயுவுக்குப் பசுமாட்டு மூத்திரத்தில் நல்கவும். புளியிலைச்சாற்றில் உட்கொண்டால் மஞ்சட்காமாலை நீங்கும்.

எந்நோய்களுக்கும் தக்க அனுபானத்தில் நோயாளியின் பல மறிந்து கொடுக்க நோய் அறவே ங்கும். நோய்க்குத் தக்க பத்தியமும் பிடிக்கவும்.

## 115. இரத்தக் கிராணிக்கு மாத்திரை

வெட்பாலைப் பட்டையொரு கூடைகொண்டு
வந்திரண்டு வேளான்பானை
தப்பாமற் கொண்டிரண்டு பானையிலொவ்
வோர்மரக்கால் ஜலத்தைவிட்டு
வொப்பாகக் காய்ச்சியரைப் படியாக
வடிக்கட்டியோர் பாத்திரத்தில்
மெய்ப்பாக வரைச்சேர்கா சுக்கட்டித்
தூள்போட்டு விளம்பக்கேளே. (௱அஅ)

கேளதையுங் கரண்டியினாற் றுளாவியது
தேன்பதத்திற் கீழிறக்கி
வாளவிரை போலவுண்டை யாக்கிநிழ
லுலர்த்தியதை வைத்துக்கொண்டு
தாளமுடி யாதிரத்தக் கிராணிக்கு
யெருமையுட தயிரிற்கொள்ள
மீளுமிரத் தக்கிராணி தப்பாமல்
தஞ்சைவிபு வியன்றதாமே. (௱அகூ)

(இ-ள்)

வெட்பாலைபட்டை ஒரு கூடை கொண்டுவந்து நைய இடித்து குசவன் பானை இரண்டில் தனித்தனியே போட்டு ஒவ்வொரு பானையிலும் இரண்டு மரக்கால் சுத்தஜலம்விட்டு ஊறவைத்து அடுப்பின்மேலேற்றி $\frac{1}{2}$ படியாகும் வரை வற்றக் காய்ச்சவும்.

பின்பு இதனையொரு பாத்திரத்தில் இறுத்துக் காசுக்கட்டி ½ சேர் சேர்த்து மறுபடியும் அடுப்பின்மேலேற்றித் துழாவி வரவும். இது தேன் பதமாகும்போது கீழேயிறக்கி தேர்வாள விதை அளவுள்ள உருண்டைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இம்மாத்திரையைத் தயிருடனே உட்கொள்ள அதிக இம்சைக்கொடுக்கும் இரத்தக் கிராணி நிற்கும்.

## 116. கிராணிக்கு நுணாக்காய் கடுகு

சுக்குமிள கோமந்திப் பிலிகடுகு
　　நாய்க்கடுகிந் துப்புசீரகம்
பக்குவமாம் வெந்தயத்தோ டாகவகை
　　யொன்பதுமே பலமேயொன்று
வொங்குமதி விடையமில வம்பிசின்வி
　　ளாம்பிசினோ டுயர்கிராம்பு
தக்கபெருங் காயம்நெல்லி முள்ளிசித்த
　　ரத்தையுடன் சாதிக்காயே. (௱௬௰)

சாதிப்பத் திரிமாங்கொட்டைப் பருப்பரத்தை
　　பொடுதலைக்காய் தன்னோடொக்க
வோதியவா மையினோடு கோழியவரை
　　பதினாலு வகைக்குத்தானே
நீதமுடன் வகையொன்றுக் கொவ்வோரு
　　வராகனெடை நிறுத்துக்கொண்டு
சாதகநு ணாப்பிஞ்சு மோர்சிரங்கை
　　மூவெட்டுத் தானுமாச்சே. (௱௬௧)

மூவெட்டு வகைமருந்து நுணாவிலைச்சா
　　றும்படியு முக்கால்விட்டு
பாவத்தோ டேயரைத்தச் சாறதனிற்
　　போட்டுயெண்ணெய் படியும்விட்டு
நீவைத்திட் டடுப்பிலன லிட்டுபதத்
　　தினிற்கடுகு நேமங்கண்டு
ஆவிக்கு மாவியந்த அரனைநினைந்
　　திறக்கிவைத்து யடைவாய்க்கேளே, (௱௬௨)

அடவுடனோர் புன்னைக்கா யளவெடுத்துக்
காலையுமே யந்தியுங்கொள்
திடமுற்ற தயிர்வாழைக் கச்சல்துவ
ரம்பருப்புஞ் சேர்த்துக்கொள்ளு
சுடவைத்த நீர்புழங்கு மிளகுநீருங்
கூட்டுதுடிப் பாங்கிராணி
மடங்கிப்போஞ் சிவகிருபை தன்னாலே
தஞ்சைவிபு வருளதாமே. (ՈՐகூஉ)

(இ-ள்)

சுக்கு
மிளகு
ஓமம்
திப்பிலி
கடுகு
நாய்க்கடுகு
இந்துப்பு
சீரகம்
வெந்தயம்

முதலான ஒன்பது சரக்குகளும் வகைக்கு ஒரு பலம்

அதிவிடையம்
விளாம்பிசின்
பெருங்காயம்
சித்தரத்தை
சாதிப்பத்திரி
பேரரத்தை
வெந்த ஆமையோடு
இலவம்பிசின்
கிராம்பு
நெல்லிமுள்ளி
சாதிக்காய்
மாங்கொட்டைப்பருப்பு
பொடுதலைக்காய்
கோழியாவரை

இவைகள் வகைக்கு ஒரு வராகனெடை

நுணாப்பிஞ்சு ஒரு சிறங்கை

ஷை சரக்குகளை இடித்து ஒரு பாத்திரத்தில் வைத்து அத னுடன் நுணா இலைச்சாறு $\frac{3}{4}$ படியும் விட்டுச் சுத்தமான நல்

லெண்ணெய் ஒரு படியும் சேர்த்து அடுப்பின்மேலேற்றி எரிக் கவும். சரக்குகள் வெந்து கடுகுபதமாக இருக்கையில் இறக்கி விடவும். இம்மருந்தில் ஒரு புன்னைக்காயளவெடுத்துத் தினந் தோரும் காலையிலும் மலையிலும் உட்கொள்ளவும்.

**பத்தியம்:-**

(எருமைத்) தயிர், வாழைக்கச்சல், துவரம்பருப்பு இவை களைக்கூட்டிக்கொள்ளவும். புழங்குவதற்கு வெந்நீர் உபயோ கிக்கவும். மிளகுரசம் சாப்பிடவும். கிராணிகள் தீரும்.

## 117. சக்கை சக்கையாகப் போகும் கிராணிகளுக்கு மருந்து

கஞ்சாவின் பொடிபலம்ரெண் டதிவிடைய
முயர்ந்தநெல்லிக் காய்கெந்தத்தோ
டஞ்சிலவம் பிசினிரத மைந்துமே
யெலுமிச்சம் பழச்சாறு விட்டு
அஞ்சாமல் மைப்போல வரைத்துநன்றாய்க்
களிப்பாக்கி னளவுதானே
மிஞ்சாம லுண்டை பண்ணி நிழலுலர்த்த
லாயுலர்த்தி வீட்டில்வையே. (ரகூச)

வைத்துயெலித் தலைநறுக்கி னாப்போலே
போங்கிராணி வகைக்கோருண்டை
நத்தேனி லிடுகடுத்துக் கழியிரத்துக்
காவிநெய்யில் நலமாயீய
வத்தர்சதா சிவனருளால் கிராணியெலா
மறுங்கடவு ளர்க்கன்பான
சத்திரபதி சோழதே சாதிபதி
சரபபதி தன்சொலீதே. (ரகூரு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| கஞ்சாயிலைத்தூள் | — | 2 பலம் |
| அதிவிடையம் | — | ,, |

சுத்திசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் — 2 பலம்
,, பாதரசம் — 2 ,,
இலவம் பிசின் — 2 ,,

முதலில் இரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக் கஜ்ஜலி செய்து பின்பு மற்ற சரக்குகளைப் போட்டு எலுமிச்சம் பழச்சாறு விட்டு நன்றாக ஒரு நாள் முழுவதும் அரைத்துக் களிபாக்குபோல் உருண்டை செய்யவும். (சுமார் 2 குன்றிநிறை) இதனை நிழலில் உலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

எலித்தலை நறுக்கினாப்போல் சக்கையுந் தண்ணீருமாய் போகும் கிராணி வகைக்கு ஒரு உருண்டையெடுத்துத் தேனில் கொடுக்கவும்.

கடுப்புடன் இரத்தாம் போகும் கிராணிக்குப் பசுவின் நெய்யில் கொடுக்கவும். இவை தீரும்.

## 118. கிராணிக்குப் பிலாவடை

கோரக்கர் மூலியிலைப் பறித்துபச்சை
யாகவதைக் கொண்டுவந்து
சாரமுள்ள சுக்குத்திப் பிலிமிளகு
மெண்ணெய்விட்டுத் தான்வறுத்து
ஊறவைத்த புழுங்கரிசி யொருபிடியுங்
கூட்டியரைத் துடனேநன்றாய்ச்
சோரமிலா வடுப்பில்சட்டி வைத்துபிலா
வடையும் நன்றாய்ச் சுட்டுத்தின்னே. (ராகசு)

சுட்டுத்தின் னஞ்சாறு வேளைதனிற்
கிராணியென்ப துடனேயோடுஞ்
செட்டியபெண் ணுக்குத்தா யாகிவந்த
சிவனுடைய செயலினாலே
மட்டில்லாக் கீர்த்திபெரு துரைதுளசேந்
திரனருளு மைந்தனிந்த
அட்டதிக்கு மன்னர்புகழ் மானுசர
பேந்திரனுட வருளதாமே. (ராகஎ)

(இ-ள்)

கஞ்சாயிலைப் பச்சையாகப்பறித்துக் கொண்டுவந்து அதனுடன் சரிநிறை சுக்கு, திப்பிலி, மிளகு, இவைகளைக் கூட்டி நல்லெண்ணெய் விட்டுப் பொன்வறுவலாக வறுத்துக்கொண்டு ஊறவைத்த புழுங்கரிசி ஒரு பிடியும் போட்டுக் கல்லுரலிலிட்டு நன்றாக அரைத்து வைத்துக்கொள்ளவும். இம்மாவை அடையாகச் சுட்டுத் தின்னவும். 5 அல்லது 6 வேளைக்குள் கிராணிகள் தீரும்.

## 119. கிராணிக்கு மருந்து

காட்டில் வெள்வேலம் பட்டைமேற் புராணி
கடுகவே போக்கிப் பசுவின்பால் விட்டு
நாட்டமா யோரெலு மிச்சங்காய் மாத்திரம்
நன்றாக வரைத்துபஞ் சத்திரவியந் தான்
வோட்டிய ரைத்தொரு சிறுபாக்க ளவுதானே
யொக்கவே குழப்பியரைப் படிபாலிற் றான்
கூட்டிய தைக்கொள்தீ ராக்கிராணி தீருங்
கொற்றவ னாந்தஞ்சை விபுவருள் தாமே. (ஈ௩அ)

(இ-ள்)

வெள்வேலம்பட்டையின் மேற்புராணியை நீக்கிவிட்டுச் சிறு சிறு துண்டுகளாக்கிப் பசுவின் பால்விட்டு அரைத்து ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணமெடுத்து அதனுடன் பஞ்சத்திரவியம் (ஏலக்காய், கிராம்பு, சீரகம், கோஷ்டம், ஜண்பகமொட்டு) இவைகளின் கல்கம் ஒரு சிறு பாக்களவு எடுத்து ஒன்றாகக் குழப்பிப் பசுவின் பால் ½ படியுடன் உட்கொள்ளவும். தீராத கிராணிகள் தீரும்.

## 120. கிராணிக்கு மருந்துகள்

பெருமரப் பட்டையை யிடித்துமா வதாக்கிப்
பிசைந்து பிட்டுச்சுட்டு அதுவெந்த வாறே
தருயில வம்பிசி னுடனேகா சுக்கட்டி
தன்னைப்பொடி யாக்கிப் பெருமரச் சாறன்னில்

கரைத்து வதிகால மதிற்குடிக்கக் கிராணி
கடிந்தோடுந் திருப்பிர மயித்திற் சாட்சி
யுரைத்துச் செட்டிப்பெண் துயரந்தீர்த் தயீசர்க்
கூரைத்த சரபேந்திர மானுரைத்த தாமே. (ாகூகூ)

(இ-ள்)

பெருமரப்பட்டையை இடித்துச் சூரணஞ் செய்து தண்ணீர் விட்டுப் பிசைந்து பிட்டாக்கி (ஆவியில் வேகவைத்து) அதனுடன் இலவம்பிசின், காசுக்கட்டி இவ்விரண்டையும் பொடிசெய்து பெருமரப்பட்டைச் சாற்றில் கரைத்து அதிகாலையில் குடிக்கவும். கிராணிகள் தீரும்.

## 121. குடல் கிராணி வாய்வுக்கு மருந்து

கடுக்காய் திப்பிலி பெருங்காயந் தானிக்
காய்சுக்கு வாய்விளங்க மோம மேழு
மிடுக்காக வரைத்து வஸ்திரகாயம் பண்ணி
மேலந்தி காலை பசுநெய்தேன் றன்னில்
வடிப்பமுட நக்க வரைமண்ட லந்தான்
வார்த்த குடற் கிராணி வாய்வுங்கூட
துடிப்பான சர்வகி ராணியுமே தீருஞ்
சொற்பிசகா தஞ்சைவிபு வருளதாமே. (உா)

(இ-ள்)

| | |
|---|---|
| கடுக்காய்த்தோல் | திப்பிலி |
| தான்றித்தோல் | பெருங்காயம் |
| சுக்கு | வாயுவிடங்கம் |
| ஓமம் | |

முதலானவைகளைச் சமமெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்து பத்திரப்படுத்தவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துக் காலையில் தேனுடனும் சாயங்காலத்தில் பசுவின் நெய்யுடனும் குழப்பி உட்கொள்ளவும். 20 நாட்களுள் குடல் கிராணிகள் தீரும். வாயு முதலானவைகளுந் தீரும்.

## 122. கிராணிக்கு இரதாதி மாத்திரை

இரதங் கெந்தகமு மப்பிரகம் நாபி
யிலவுபிசின் சத்திச்சா ரணைகடுக்காய்
சுரபியின் வெண்ணெயுஞ் சரியாய்க்கூட் டிக்கொண்டு
சுற்றெலு மிச்சம்பழச் சாறுகஞ்சாச்சாறு
முரமாகவிட்டு வரைத்தொரு சாமந்தா
னுற்றகுன் றிப்பிர மாணமுண்டை பண்ணி
அரிதான வுண்டை தனிலொன் றெடுத்து
ஆட்டின் மோர்தயிரி னிலேயடவாய்க் கொள்ளே. (உ௱க)

அடவுட னிப்படி யாகநா லைந்தாறு
நாளன் பாகக்கொள் பத்தியம்வாய் வதுசேர்ந்
திடுபண்ட மொன்றா காதிரு கிராணி
தீர்ந்துவிடுஞ் சிவகிரு பையதி னாலிந்தப்
படியா ளுந்துரை சத்தியநெறி நடத்தும்
பார்த்தன்துள சேந்திர னருள்பா லனெங்கோன்
றுடிகளி றேறிப் பவனி கொள்ளுந்
துரைசர பேந்திரன் னருளுமுண் டையாமே. (உ௱உ)

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம்
" நெல்லிக்காய் கெந்தகம்
" அப்பிரகம்
" நாபி
இலவம்பிசின்
சத்திச்சாரணைக் கிழங்கு
கடுக்காய்த்தோல்

இவைகளுள் முதலில் ரஸத்தையும் கெந்தகத்தையும் கல்வத்திலிட்டரைத்துக் கஜ்ஜலி செய்து பின்பு மற்ற சரக்குகளை இடித்துத் தூள்செய்து போட்டு எல்லாவற்றிற்கும் சமன் பசுவின் வெண்ணெய் கூட்டவும், இவற்றுடன் எலுமிச்சம்பழச் சாறு, கஞ்சாச்சாறு இவ்விரண்டையும் விட்டு ஒரு சாமம் அரைத்துக் குன்றிப்பிரமாணமுள்ள உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒன்று எடுத்து ஆட்டின்மோர், தயிர் இவைகளுளே தேனுமொன்றில் உட்கொள்ளவும். இவ்வாறு 4, அல்லது 5, அல்லது 6 நாட்கள் உட்கொள்ளக் கிராணிகள் தீரும்.

வாயு பதார்த்தங்களை நீக்கவும்.

## 123. கிராணிக்கு வங்கபற்பமும், அதற்கு அனுபானச் சூரணமும்

வங்கத்தைத் தகடாக்கி நிறுத்துக்கொண்டு
வகையான சட்டியினிற் போட்டுத்தானே
பொங்கமுடன் சிவந்தநா யுருவியெல்லாம்
பொடியாக்கிச் சற்றேயதிற் றூவிக்கொண்டு
சங்கையுள்ள வாமையோட்டின் றூளதன்னை
சற்றேசற்றே மேற்றூவி யிரும்பாற்செய்த
பங்கிடுள்ள கரண்டியின் கைப் புறத்தால்மத்திப்
பார்பற்ப மாமிதையும் பதனம்பண்ணே. (உ௱சு)

பதனஞ்செய் திதுக்கனுபான சூரணந்தான்
பகருவேன் மிளகுதிப் பிலியுஞ்சுக்கு
யிதமான சாதிக்காய் தான்றிக்காயு
மிலவுபிசின் கிராம்பபினப் பிரகங்கூட
வதிமயக்கக் கஞ்சாற்றூள் விளவின்பிஞ்சு
மசமதா கத்தோடே பன்னிரண்டும்
விதமாகச் சரிகூட்டிச் சூரணித்து
வீட்டிலுள பாத்திரத்திற் வைத்துக்கொள்ளே. (உ௱ச)

வைத்துக்கொண் டிச்சூர்ணந் தன்னிலேதான்
வகையாக விரண்டுபண விடையுமந்த
சத்துளபற் பம்பணவி டையுமொன்று
தான்கூட்டிற் றேனிலமற் றித்துக்கொள்ள
அத்தர்சிவ கிருபையினாற் கிராணிநோயு
மாதித்தன் முன்பனிபோ லகன்றேயோடும்
நத்திநடந் தவர்க்கன்பு செய்யுந்தஞ்சை
நகராளும் விபுவுணர்ந்த பற்பந்தானே. (உ௱ரு)

(இ-ள்)

சுத்திசெய்த வங்கத் (வெள்ளீயம்) தை ஈசலிறகுபோல் தகடாகத்தட்டி ஒரு பலம் நிறுத்துக்கொண்டு ஒரு சட்டியி லிட்டுச் செந்நாயுருவிச் சூரணம், ஆமையோடுச் சூரணம் இவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தூவி ஒரு இரும்புக் கரண்டியின் காம்பினால் துழாவி வரவும்.

சுத்தமான பற்பம் கிடைக்கும். இதற்கனுபானமாகக் கீழ்வரும் சூரணத்தையும்,

மிளகு
சுக்கு
தான்றித்தோல்
கஞ்சாவிலைத்தூள்
கிராம்பு
ஓமம்
திப்பிலி
சாதிக்காய்
இலவம்பிசின்
அப்பிரக நவனீதம்
விளாம்பிஞ்சு
அபினி

இவைகளைச் சமமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இச்சூரணம் $6\frac{1}{2}$ குன்றி நிறை, முன் சொன்ன வங்க பற்பம் 3 குன்றி எடையும் கூட்டித் தேனுடன் குழைத்துச் சாப்பிடவும். கிராணிகள் தீரும்.

## 124. கிராணிகளுக்கு உருண்டை

கருவேலம் பிசினிலவம் பிசின்கிராம்பு
கஞ்சாவி னிலைவிளாம்பி சின்சாதிக்கா
யரிதான வசுவாசி யபினோடெட்டு
மவ்வகைக்கோர் மூன்றுவரா கனெடைகூட்டி

உரமான கஞ்சாவி னிலைச்சாறுவிட்டு
வற்பனமாய் மைப்போல வரைத்துக்கொண்டு
ஒருசுண்டைக் காயளவு முண்டைசெய்து
வுற்றதேன திற்கொள்ளக் கிராணிபோமே. (உ௱சு)

(இ-ள்)

கருவேலம்பிசின்
கிராம்பு
விளாம்பிசின்
வேங்கைப்பிசின்
இலவம்பிசின்
கஞ்சாவிலை
சாதிக்காய்
அபின்

இவைகள் வகைக்கு 3 வராகனெடை வீதமெடுத்துக்கல் வத்திலிட்டுக் கஞ்சாயிலைச் சாறு விட்டு மைப்போலரைத்துக் கொண்டு சுண்டைக்காய் அளவுள்ள உருண்டைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இதனைத் தேனுடன் குழப்பி உட்கொள்ளக் கிராணிகள் தீரும்.

## 125. கிராணிக்கு உருண்டை

மாதளங்கா யையிரண்டா யறுத்துச்சட்டி
வகையாகக் காயவைத்து யெண்ணெய்விட்டு
நாதமுள வண்டோடு போல்வறுத்து
நலமான ஜாதிக்காய் கிராம்போடொக்க
வோதிலவம் பிசுனுமதி விடையத்தோடே
யுற்றவசு வாசியஞ்சில் வகையொன்றுக்கு
சாதகமா யிருகழஞ்சு கூட்டிமுன்சொல்
சட்டமிகு மாதளங்கா யதனைக்கூட்டே. (உ௱எ)

கூட்டிதயிர் வார்த்தரைத்து. மையைப்போலே
கொட்டைப்பாக் களவுண்டை செய்துலர்த்தி

நாட்டமிகுந் தேனதிலோ ருண்டைதன்னை
நலமாகக் கொள்ளதிகா லத்தில்தானே
கோட்டிசெய்யுங் கிராணியெல்லா மூரைவிட்டுக்
குடியோடும் நாவலருக் கன்புசெய்து
கேட்டபொரு ளீந்துவெகு கீர்த்திபெற்ற
கிரீடிதஞ்சை மானுவுண ருண்மைதானே. (உ௱அ)

(இ-ள்)

மாதளங்காயைக் கொண்டுவந்து இரண்டாகப் பிளந்து ஒரு சட்டியில் நல்லெண்ணெய் விட்டு அதனுடன் போட்டுப் பொன் வண்டு நிறமாக வறுக்கவும். பின்னர்,

சாதிக்காய்
இலவம்பிசின்
வேங்கைப்பிசின்
கிராம்பு
அதிவிடயம்

இவைகளை வகையொன்றுக்கு 2 கழஞ்சு வீதமெடுத்து இடித்து மேற்கூறிய மாதளங்காயையும் சேர்த்துக் கல்வத்திலிட்டுத் தயிர்விட்டு நன்றாக அரைத்துக் கொட்டைப் பாக்களவுள்ள உருண்டைகளாக உருட்டவும். அதிகாலையில் இதில் ஒரு உருண் டையைத் தேனுடன் உட்கொள்ளவும். கிராணிகள் தீரும்.

## 126. கிராணிக்கு உருண்டை

சுக்குதிப் பிலியோமஞ் சாதிக்காயுஞ்
சுகமான சீரகமுங் கடுக்காயாறும்
பக்குவமா யொவ்வோரு வகைக்குத்தானே
பலமொன்றி தற்குசரி கஞ்சாகூட்டி
இக்குவெல்லம் பதினைந்து மருந்தையெல்லா
மெள்ளெண்ணெய் வார்த்துவறுத் துப்பொடித்து
பக்குவமாய் வெல்லத்தைக் குழம்பதாகப்
பாகாக்கி யரைத்தமருந் ததையும்போடே, (உ௱கூ)

போட்டு கரண்டியினாலே கிண்டிக்கொண்டு
புதிதான கொட்டைப்பாக் களவுதானே
நாட்டமுட னுண்டை செய்து வுலர்த்திப்பத்து
நாட்காலை யந்தியுமே கொள்ளும்பத்தியங்
கூட்டுப்பு மாத்திரங்கைப் புப்புளிப்பு
கொள்ளாதே கிராணியுமத் தக்கடுப்பும்
வாட்டுமதி சாரத்தின் கழிச்சலோடே
மலக்கிராணி யென்பதுவு மகன்றுபோமே. (உகய)

(இ-ள்)

சுக்கு
ஓமம்
சீரகம்
திப்பிலி
சாதிக்காய்
கடுக்காய்

இவைகள் வகைக்கு 1 பலம்

| | | |
|---|---|---|
| சுத்திசெய்த கஞ்சா | — 6 | பலம் |
| வெல்லம் | — 15 | பலம் |

கடைச்சரக்குகளை யொரு சட்டியிலிட்டு நல்லெண்ணெய் சிறிது சேர்த்துப் பொன் வறுவலாக வறுத்து இடித்து வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும். பின்பு வெல்லத்தைப் பாகாக்கிச் சூரணங்களையிட்டு நன்றாகக் கிண்டிக் கொட்டைப்பாக்கள வுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்திப் பத்திரப் படுத்தவும்.

காலை மாலை ஒரு உருண்டை வீதம் 10 நாட்களுக்கு உட் கொள்ளவும்.

பத்தியம்:—

கைப்பு, புளிப்பு முதலான சுவையுள்ள பதார்த்தங்களை நீக்கவும். உப்பு கூட்டிக்கொள்ளலாம்.

கிராணிகள், மாந்தக்கடுப்பு, அதிசாரக்கழிச்சல், மலக்கி ராணிகள் தீரும்.

# 127. பெருவயிறுக்கிராணி, சுவாசகாசம், மூக்குநீர்ப்பாய்ச்சல், சூலை, அதிஸாரம், அசீரணம், முதலானவைக்குக் குழம்பு.

கூவிளத்தின் றசைசிற்ற மல்லிவேருங்
குணத்தாது மாதளையு முற்றக்காசு
மாவலுள பஞ்சாங்க மைந்திற்றானே
யுளவுடன்முப் பத்திரண்டு பலமுங்கொண்டு
காவிரியி னீர்தூணி விடுநாலொன்றாய்க்
காய்ச்சியதி லறுநாழி யிஞ்சிச்சாறுங்
காவிலுரை வறகாலிற் றயிரீநாழி
கருதுமதி நெய்யுமிரு நாழிதானே. (உகக)

ஆகுமிதை முந்தினக டாயந்தன்னி
லன்னேர மேபுகட்டுக் கற்கங்கேளு
வாகுபெறும் வரட்சுண்டி வேராத்திப்பூ
வளமான பெருங்காயம் பெருமரத்தோல்
வேககொடி வேலிவேர சமதாகம்
வேழத்திப் பிலிசிறுமூ லகமிந்துப்பு
மாகுமதி விடையமுடன் கருஞ்சீரத்தோ
டாகவகை பதினொன்றும் வகையொன்றுக்கே (உகஉ)

வகைக்குமிரு பதுபலமு மரைத்துப்போட்டு
வடுப்பேத்தி யெரித்துமதை வடித்துக்கொண்டு
தகைவுடனே பத்துநாள் பச்சைநெல்லிற்
றானியத்தின் புடம்வைத்தோர் துட்டின்மாத்திரம்
சுகமாகக் கொள்ளபெரு வயிறுகிராணி
சுவாசகா கமூக்கி நீரின்பாய்ச்ச
லிகல்சூலை யதிசார மசீரணங்குற்
றேவலட்ட பீலிகைப்பீ லிகையும்போமே (உகங)

பீலிகையு மட்டரோ கங்கள் தீரும்
பேசுகிறே னிதற்குப்பத் தியமுந்தானே
சீலமிலாப் புகையிலையும் புளிப்புந்தள்ளு
செய்யிதற்கு யிச்சாப்பத் தியமுந்தானே

ஆலமுண்ட சிவகிருபை யதனால்நோயு
மணுகாது வளமிகுந்த தஞ்சையாளுங்
கோலமிகு வெற்றிமலர் மாலைசூடுங்
கொற்றவனாஞ் சரபேந்திர னருளிதாமே. (உகச)

(இ-ள்)

வில்வச்சதை
மாதுளத்தாது
சிற்றாமல்லிவேர்
கோரைக்கிழங்கு

இவைகளை வகைக்கு 32 பலம் எடுத்து, சுத்த ஜலம் 4 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து நாலிலொன்றாகவற்ற வைக்கவும்.

இதனுடன் இஞ்சிச்சாறு 6 படி (30 சேர்)
ஆட்டுத் தயிர் 2 படி (10 சேர்)
ஆட்டு நெய் 2 படி (10 சேர்)

இவைகளை யொன்று கூட்டி

வரட்சுண்டிவேர்
பெருங்காயம்
கொடிவேலிவேர்
யானைத்திப்பிலி
இந்துப்பு
கருஞ்சீரகம்
ஆத்திப்பூ
பெருமரத்தோல்
ஓமம்
திப்பிலி
அதிவிடயம்

இவைகள் வகைக்கு 20 பலம் வீதமெடுத்துத் தண்ணீர் விட்டரைத்துச் சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்துக் குழம்புப் பதத்தில் இறக்கவும்.

இக்குழம்பை ஒரு ஜாடியிலிட்டு நெல்லிற்குள் 10 நாட்கள் புதைத்து வைக்கவும். பின்னர் ஒரு துட்டளவெடுத்து உட்

கொள்ளப் பெருவயிறு, கிராணிகள், சுவாசகாசம், மூக்கிலிருந்து நீரொழுகல் முதலானவை தீரும். மேலும் சூலை, அதிசாரம், அசீரணம், எட்டுவித பீலிகைகள், இவைகளுக்கும் நல்லது.

பத்தியம்:—

புகையிலை, புளிப்புப்பதார்த்தங்கள் முதலானவைகளைத் தள்ளவும். இச்சாப்பத்தியமிருக்கவும்.

குறிப்பு:—

68 நெ. சுவடியில் 20 பலம் என்பதற்கு பதில் ''2 பலம்' என்று காணப்படுகிறது.

## 128. உதர வியாதி சூலை கிராணிக்குத் தைலம் (கிருதம்)

சுக்குமே பலமுமிரு பதுமாயில்த்
தோல்பலமி ருபதும் போட்டு
மொக்கவு மிருதூணித் தண்ணியும்விட்டு
மெள்ளவேகு றுணியாய்க்காய்ச்சி
சுக்குமே மிளகுஞ்செவ்வி யமுடனிந்
துப்புதிப்பிலி பங்கம்பாளை
யொக்கவுஞ் சிறுமூலக முடனேயச
மோதகம் விழாலரிசியுமே. (உகரு)

அரிசியாத் திப்பூக் கொடிவேலி வேரு
மதிவிடையம்பெருங் குறும்பை
மரமஞ்சள் கருஞ்சீ ரகமுட னேயதி
மதுரமு முற்றக்காசுடனே
உரமிகுவசம்போ டிருபத்தி ரண்டு
மொவ்வரு வகையது தனக்கு
யிருகழஞ் சாவின் பாலிரு நாழி
யதனுட நெய்யது தானே. (உகசு)

நெய்யிரு நாழி கலந்ததை யெரித்து
　　நேருள பதந்தனில் வடித்து
அய்யமில் லாமற் காலையில் நக்கு
　　தரத்தினில் வியாதிகள் சூலை
செய்யுந் துர்நோயுங் கிராணியுந் தீருஞ்
　　செப்பிய தற்புத மிகுந்த
வையக மாளுஞ் சரபபூ பதியும்
　　வழுத்திய தித்தைல மதே. (உகஎ)

(இ-ள்)

சுக்கு 20 பலம்
ஆயில்பட்டை 20 பலம்

இவ்விரண்டையும் இடித்து ஒரு முடாவிலிட்டுச் சுத்தஜலம் 8 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு மரக்காலாகும் வரை வற்றவைக்கவும். பின்னர்,

சுக்கு
செவ்வியம்
திப்பிலி
சிறுமூலம்
விழலரிசி
கொடிவேலிவேர்
பெறுங்குறும்பை
கருஞ்சீரகம்
கோரைக்கிழங்கு
மிளகு
இந்துப்பு
ஆடுதீண்டாப்பாளை
ஓமம்
ஆத்திப்பூ
அதிவிடயம்
மரமஞ்சள்
அதிமதுரம்
வசம்பு

இவைகளை வகைக்கு 2 கழஞ்சுவீதமெடுத்துப் பசுவின் பால் விட்டு நன்றாக அரைத்துப்

பசுவின் பால் 2 படி
பசுவின் நெய் 2 படி

இவைகளுடன் கூட்டி முன் சொன்ன கஷாயத்தையும் சேர்த்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்நெய்யில் ஒரு துட்டெடையெடுத்துக் காலையில் உட்கொள்ளவும். வயிற்றுநோய்கள், சூலை. கிராணிகள் முதலானவை தீரும்.

குறிப்பு:—

செய்யுள் முறையில் சரக்குகள் 22 என்று காணப்படினும் 18 சரக்குகளே உள்ளன.

(2) செய்யுள் கடைசியில் ''தைலமிதே'' என்று தவறுதலாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

## 129. கிராணிக்கு மருந்து

முற்றல் நாரத்தங் காயிரண் டெருமை
மோரும்நா னாழியுந் தானே
சற்றுள கிராம்பு சீரகங் கடுகு
தன்னுடன் மிளகுதிப் பிலியுஞ்
சுற்ற வெட்பாலை யரிசிவெண் காயச்
சுக்குடன் மிளகதி விடையம்
நற்றிய கருஞ்சீ ரகமு மிந்துப்பும்
நாட்டிய பதினொரு வகையே. (உகஅ)

பதினொறு வகையி லொவ்வொரு வகைக்குப்
பாகமா யிருகழஞ் செடுத்து
யிதனிலன் மோரை வார்த்துமே யரைத்து
யியம்பிய காயதை யெடுத்துப்
பதமுடன் வளைய மாகவே யறுத்துப்
பக்குவத் தூள்தனைத் திணித்து
வதையுமே மோரை விட்டு வேவித்து
வன்புட னெடுத்தரைப் பாயே. (உகக)

எடுத்தரைத் ததனிற் பெரியகொட் டைப்பாக்
கெவ்வள வவ்வள வெடுத்து
வடிப்பமாய்க் கொள்ளக் கிராணியுந் தீரும்
வைசிறு காஞ்சோறி சுக்கு
திடத்துபொன் முசுட்டை வேர்முற்றக் காசு
செப்புமிந் நாலுமே போட்டுக்
குடிக்கும்நீர் காய்ச்சிக் கொண்டிடு பத்தியங்
கூறுவே னினியது கேளே (உஉ0)

இனியது கேளு புகையிலை புளிப்பு
மேதளி யத்தியின் பிஞ்சுங்
கனியுள வாழைப் பிஞ்சுட னெருமை
கறக்கும்பாற் றயிரதைக் கூட்டு
சினமிகுங் கிராணி தீர்ந்திடும் பரம
சிவனுட கிருபையி னாலே
மனமகிழ்ந் தன்ன சத்திர மிலகு
மற்புதற் றஞ்சைமா னுரையே. (உஉக)

(இ-ள்)

முற்றிய நாரத்தங்காய் 2 எடுத்துக்கொள்ளவும். இதை வளையமாக அறுத்துக்கொண்டு,

கிராம்பு
கடுகு
திப்பிலி
பால் பெருங்காயம்
கருஞ்சீரகம்
அதிவிடயம்
சீரகம்
மிளகு
வெட்பாலையரிசி
சுக்கு
இந்துப்பு

இவைகளை வகைக்கு 2 கழஞ்சு வீதமெடுத்து மோர் வார்த்தரைத்து அக்காய்க்குள் திணிக்கவும். பின்னர் ஒரு பாத்தி

ரத்தில் 4 படி மோர் விட்டு அதில் காய்களைப் போட்டு வேக வைத்தெடுக்கவும்.

இந்த நாரத்தங்காயை யரைத்த விழுது ஒரு பெருங்கொட்டைப்பாக்களவெடுத்து உட்கொள்ளவும். கிராணிகள் தீரும்.

இதனுடன்

சிறுகாஞ்சோறிவேர்
பொன்முசுட்டைவேர்
சுக்கு
கோரைக்கிழங்கு

இவைகளைச் சேர்த்துக் கஷாயம் வைத்து உட்கொள்ளவும்

**பத்தியம்:-**

புகையிலை, புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்கள் இவைகளை நீக்கவும். அத்திப்பிஞ்சு, வாழைக்கச்சல், எருமைப்பால் எருமைத்தயிர் முதலானவைகளை வேண்டிய அளவு கூட்டவும், கிராணிகள் தீரும்.

## 130. கிராணி, சோகை, பாண்டுக்கழிச்சல், நீராமை, குன்மம், வீக்கம் முதலானவைகளுக்கு இஞ்சிக் குழம்பு.

இஞ்சியின் குழம்பொன் றோதுவேன் கிராணி
யென்னுமே சோயது தனக்கு
யிஞ்சியும் நூறு பலமதுவைத்து
யிதனிற்சத்தா னதுபதக்கில்
விஞ்சையாம் பனையி னிறுகருப்புட்டி
விருப்பமா யைம்பது பலமும்
பஞ்சுபோல் நறுக்கிப் போட்டதை யெரித்துப்
பாகது நாழியாம் போதே. (உஉஉ)

போதினி விதற்குக் கற்கமு மிந்துப்
புமிள குடனேதிப் பிலியுந்
தீதிலா யேல மிலவங்க மத்தித்
திப்பிலி கற்கட சிங்கி
யேதுவாந் தான்றிக் காயுங்கல் லுப்பே
ரேலமூ லந்துவர் சிகையுங்
கோதிலாச் சிறுமூ லகஞ்சவுக் காரங்
கொடிவேலி வேருமட் டுப்பே. (உஉ௩)

உப்பதி விடயம் பச்சிலை யுங்கச்
சோலம்வா லுளுவையி னூடே
தப்பிலாக் கருஞ்சீ ரகமுட னசம
தாகமோ டிருபதி ரண்டுஞ்
செய்பிய வகைக்கோர் கழஞ்சது பொடிகள்
செய்ததிற் போட்டிரு நாழி
வொப்பிலாற்றேனும் விடுத்துமத் தித்து
வொவ்வொரு தினத்தில்முக் கழஞ்சே. (உஉ௪)

முக்கழஞ் செடுத்துக் காலையிற்கொள்ளு
முதிர்ந்திடு கிராணியுஞ் சோகை
குக்கியின் கழிச்சல் பாண்டுநீ ராமை
குன்மமு வீக்கமு மகலு
முக்கனிற் றேறல் பாய்வளச் செய்சூழ்
முக்கிய சோழநா டாளத்
தக்கவன் மிக்கோலை சர்க்கரை மொழியர்
சரபபூ பதியுணர் குழம்பே. (உஉ௫)

இ-ள்)

புரணிநீக்கிய இஞ்சி 100 பலம் எடுத்துப் பிழிந்த சாறு 2 மரக்காலுடன் பனைவெல்லம் 50 பலம் போட்டு எரித்துப் பாதுகாக்கவும். பின்னர்,

| | |
|---|---|
| இந்துப்பு | மிளகு |
| திப்பிலி | ஏலக்காய் |
| கிராம்பு | யானைத்திப்பிலி |
| கடுக்காய்ப்பூ | தான்றித்தோல் |
| கல்லுப்பு | பேரேலம் |

| | |
|---|---|
| பிஞ்சுக்கடுக்காய் | சிறுமூலம் |
| சவர்க்காரம் | கொடிவேலிவேர் |
| அட்டுப்பு | அதிவிடயம் |
| பச்சிலை | பூலாங்கிழங்கு |
| வாலுளுவையரிசி | கருஞ்சீரகம் |
| ஓமம் | சோத்துப்பு |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துப் பாகுடன் கலந்து வைத்துக் கொள்ளவும். இதனுடன் தேன் 2 படி விட்டுக் குழப்பவும்.

இக்குழம்பைத் தினமும் 3 கழஞ்சளவெடுத்துக் காலையில் உட்கொள்ளவும்.

கிராணி, சோகை, வயிற்றுக்கழிச்சல், பாண்டு, நீராமை, குன்மம், வீக்கம் முதலான ரோகங்கள் தீரும். கைகண்டது,

## 131. கிராணி, குன்மம், பொருமல், களைப்பு, சூலை, சோபத்திற்கு அஷ்ட சூரணம்

சுக்குடன்மிளகு திப்பிலி யுடனிந்
துப்புடன் சீரகமோம
மொக்கவுங் கருஞ்சீ ரகமுடனேழு
மோரள வாகவே நிறுத்து
முக்கிய நிறைக்கு நாலொரு பாக
முகிர்பெருங் காயமுங் கூட்டிச்
சிக்கிலா வம்மி தனிற்பொடி யாகச்
செய்துமே வடித்திடு வாயே, (உஉசு)

வடியதுகட்டி யெண்ணெயைக் காய்ச்சி
வளமுடன் குழைத்ததை நன்றாய்த்
திடமுள கொட்டைப் பாக்களவுண்ணத்
தீர்ந்திடும் வயிர்கள் களைப்புத்

131

துடிமிகுங் கிராணி குன்மமும் பொருமல்
சூலையு முற்றசோ பங்கள்
வடுமிதுவாதி சிவனரு ளாலே
விபுவுரை தானிது வாமே. (உஉா)

(இ-ள்)

சுக்கு
திப்பிலி
சீரகம்
கருஞ்சீரகம்
மிளகு
இந்துப்பு
ஓமம்

| | |
|---|---|
| இவைகள் வகைக்கு | — 1 பலம் |
| பெருங்காயம் | — ½ பலம் |

இவைகளை இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இச்சூரணத்தைக் காய்ச்சிய எண்ணெயுடன் குழைத்துக் கொட்டைப் பாக்களவு உட்கொள்ளவும்.

களகளைப்பு, கிராணி, குன்மம், பொருமல், சூலை, சோபங்கள் முதலானவை தீரும்.

குறிப்பு:-

இச்சூரணத்திற்கு "அஷ்ட சூரணம்" என்றும் பெயராகும். பெருங்காயம் 1 பலத்திற்கும் குறைவாகச் சேர்ப்பது பழக்கமாகும்.

## 132. கிராணி முதலானதற்கு "நாகபற்பம்"

நரகம் வேண்டியது கொண்டுமே வந்து
நறுக்கியே ரிகாலி பாலதன்னில்
வாகுட னரைத்து வில்லைசெய் தோட்டில்
வைத்துமே லோட்டினால் மூடிப்

பாகமாய்ச்சீலை மண்ணது செய்து
பதனமாய் கெசபுடம் போட
வாகுமே பற்ப மரைப்பண வெடைதேன்
வாவிநெய் யதனிலே கொள்ளே. (உஉஅ)

கொண்டிடக் கிராணி மூலமும் வாயுவுங்
குக்கியி நெரிவுநெஞ் செரிவு
ஓண்டிடா தோடும் பத்தியம் வியாதி
யுடவித மறிந்துசெய் யிந்த
மண்டல மன்பத் தாறுதே சத்து
மன்னவர் கிரீடியா முசிதற்
றண்டமி ழோர்கள் புகழ்சர பேந்திரன்
சாற்றிய நாகபற் பமதே. (உஉகூ)

(இ-ள்)

நாகம் ஒரு பலமெடுத்துச் சுத்தி செய்து எருக்கம் பால் விட்டு நன்றாக வரைத்து வில்லை செய்து ஓட்டில் வைத்து வேறொரு ஓட்டினால் மூடிச் சீலைமண் செய்யவும். நன்றாக உலர்ந்தபின் கெஜபுடம் இடவும். பற்பமாகும்.

இதில் $1\frac{1}{2}$ குன்றியளவெடுத்துத்தேன், பசுவின் நெய் இவைகளில் உட்கொள்ளவும். கிராணி, மூலம், வாயு, வயிற்றிலுள்ள எரிச்சல், நெஞ்செரிவு முதலானவை தீரும்.

பத்தியம் நோய்க்குத்தக்கபடி யிருக்கவும்.

## 133. கிராணி, சூதகவாயு, பாண்டு, மூலம், ரத்த காசம் முதலானவைகளுக்கு உருண்டை

மாசிக்காய் புளியங் கொட்டைத்தோ லபினு
மாதளை யொடுசா திக்காய்
காசுக் கட்டியு மிலவம்பி சினேமுங்
கணக்கதாய்ச் சரியெடை கூட்டி

யெசவ தாகக் கல்வம திட்டு
யெருமையின் றயிரதை விட்டு
நேசமா யரைத்துக் கரண்டியிற் றானே
நெருப்பினிற் கொதிக்கவைப் பாயே. (உ௬ய)

வைத்துயிப் படிக்கி யெழுவிசை தயிரை
வார்த்தரைத் தேமுன்சொற் படிசெய்
வித்துதேற் றானின் விரையது போல
வேயுருட் டியும்நிழ லுலர்த்திச்
சுத்தநெய் தேனிற் றயிறினிற் கொள்ள
சூசிக வாய்வுடன் கிராணி
பத்திடும் பித்த பாண்டுவின் மூல
மறும் ரத்த காசமும் போமே. (உ௬௧)

(இ-ள்)

மாசிக்காய்
அபின்
சாதிக்காய்
இலவம்பிசின்
புளியங்கொட்டைத்தோல்
மாதளையோடு
காசுக்கட்டி

முதலான சரக்குகள் வகைக்கு 1 பலம் வீதமெடுத்துத் தூள் செய்து கல்வத்திலிட்டு எருமைத்தயிர் விட்டு அரைத்துக் கரண்டியிலிட்டுக் கொதிக்கவைக்கவும். மறுநாள் மறுபடியும் எருமைத் தயிர் விட்டு அரைத்துக் கொதிக்கவைக்கவும். இவ்வாறு 7 தடவை திரும்பத்திரும்ப அரைத்துத் தேத்தாங் கொட்டைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

நெய், தேன், தயிர் முதலானவைகளுடன் உட்கொள்ள சூசிகவாயு, கிராணி, பித்தபாண்டு, மூலம், இரத்தகாசம் முதலானவை தீரும்.

# 134. சூதிகா கிராணிக்கு மருந்து

கெண்டைமீன் குஞ்சு கொண்டுமே வந்து
கிளறியுங் கிளறியே குடலு
மண்டிடா மலுமூன் றுவிசையுங் கழுவி
வாருதி யுப்பு மிடாமல்
கெண்டைமீ னெக்கவுத் தாமணி யிலையுங்
கேளெலு மிச்சங்கா யளவுங்
கண்டித மாகப் போட்டதை யவித்துக்
காலமே பகலுமந் தியுமே. (உகஉ)

அந்தியு மூன்று விசையதை நயமா
யருந்திடு கைப்புடன் புளிப்புஞ்
சிந்தையி னிளையா திருமொரு மூன்று
தினத்தினிற் சூதிகா கிராணி
யுந்தலலக் கெட்டு ரைவிட்டோடு
முமையொரு பாகம தமர்ந்த
சந்திர மௌலி யீசரைப் போற்றுஞ்
சரபபூ பதியுரை முறையே. (உகங)

(இ-ள்)

கெண்டைமீன் குஞ்சு கொண்டுவந்து குடலை நீக்கி விட்டு 3 தடவை சுத்த ஜலத்தில் கழுவி ஒரு பாத்திரத்திலிட்டு உத்தா மணி இலை ஒரு எலுமிச்சங்காயளவெடுத்து உப்பிடாமல் வேக வைத்துத் தினம் 3 வேளை (காலை, மத்தியானம், சாயங்காலம்) சாப்பிடவும்,

**பத்தியம்:-**

புளிப்பு, கைப்புச்சுவையுள்ள பதார்த்தங்களையும் தள்ளவும். 3 தினங்களுள் சூதிகா கிராணிகள் தீரும்.

சூதிகா கிராணி — பிரஸவித்த ஸ்திரீகளுக்கு உண்டாகும் கழிச்சல்.

# 135. சூதிகாகிராணி, அக்கினிமந்தம் வாய்வுக்கு ரசோன பிஷ்டி

மூலமுஞ் செவ்விய மிந்துப்பு கடுக்காய்
மிளகதி மதுரமுஞ் சித்திர
மூலமோ டேலஞ் சீரகம் நெல்லி
மிள்ளிவாய் விடங்கம் நாய்க்கடுகு
சீலகொத் தமலி யுடன்சிறு தேக்கு
திப்பிலி கடுகுரோ கணியுங்
கோலவெண் கடுகு நற்கடு குடனே
கூகைநீ ருடனின்னங் கேளே. (உகூச)

இன்னமுந் தான்றிக் காய்சத குப்பை
யியல்பெருங் காயமு மோமம்
நன்னிய சுக்குட னேகருஞ் சீரம்
நல்லதிப் பிலியொடு தானே
சொன்னயிவ் வகைக ளிருபத்தி யாறுந்
துரிசதால் வகைக்கொரு பலமு
முன்னித சாதிக் காயதின் பத்திரி
யோடுகிராம் பதிவிடை யமுமே. (உகூரு)

அதிவிடை யமும்நால் வகைமருந் தொன்றுக்
கரைப்பல மிதுவெலாம் பொடித்துப்
புதியதோ ருள்ளி மேனதின் றோலும்
போக்கியே முப்பது பலமும்
இதமதாய்ச் சிவக்க வறுத்துகீழ் பனையி
நேர்ப்பிடு வெல்லமுந் தானே
யதுபல முப்பத் தினுடன் சேர்த்து
மன்பொடு மிடித்திடு வாயே. (உகூசா)

இடித்து நன்றாகப் பிசைந்து கொட்டைப்பாக்
கெத்தனை யத்தனை தானே
யெடுத்துதை யத்தி லந்தியுங் கொள்ளு
மிதற்குத் தீர்ந் திடுவியா தியுங்கேள்

துடித்திடும் வாயுவு மக்கினி மந்தஞ்
சூதிகா கிராணியுந் தீரும்
படித்தவர்க் கன்பு செயுஞ்சர பேந்திரன்
பாருளோர்க் குரைத்ததிம் முறையே. (உ௬எ)

(இ-ள்)

| | |
|---|---|
| செவ்வியம் | இந்துப்பு |
| கடுக்காய் | மிளகு |
| அதிமதுரம் | சித்திரமூலம் |
| ஏலக்காய் | சீரகம் |
| நெல்லிமுள்ளி | வாயுவிடங்கம் |
| நாய்க்கடுகு | கொத்தமல்லி விதை |
| சிறுதேக்கு | திப்பிலி |
| கடுகுரோகிணி | வெள்ளைக்கடுகு |
| கடுகு | கூகைநீர் |
| தான்றிக்காய்த்தோல் | சதகுப்பை |
| பெருங்காயம் | ஓமம் |
| சுக்கு | கருஞ்சீரகம் |
| திப்பிலி | |

மொத்தத்தில் 25 சரக்குகள் தானுள்ளன. இச்சரக்குகள் வகைக்கு ஒரு பலம்

சாதிக்காய்
கிராம்பு
சாதிப்பத்திரி
அதிவிடயம்

இவைகள் வகைக்கு ½ பலம்

தோல் நீக்கிய உள்ளிப் பூண்டு — 30

மேற்சொல்லிய சரக்குகளை எல்லாம் பொன் வறுவலாக வறுக்கவும். பனைவெல்லம் 30 பலம் சேர்த்துக் கல்லுரலிலிட்டு நன்றாக இடிக்கவும். பின்னர் இம்மருந்தைப் பத்திரப்படுத்திக் கொட்டைப்பாக்களவெடுத்து தினந்தோறும் காலையிலும் மாலை

யிலும் உட்கொள்ளவும். வாயு, அக்னிமாந்தியம், சூதிகா கிராணி களுந் தீரும்.

குறிப்பு:-

"பூண்டு 12 பலம்" என்று 68 நெ. சுவடியில் காணப்படுகிறது.

## 136. சர்வ கிராணிக்கும் உருண்டை

சாதிக்காய் குடசப் பாலையின்வித்து
தன்னுடன் புளியங்கொட் டைத்தோல்
மாதளம்பிஞ்சு திப்பிலி மிளகு
மதிவிடை யம்விளாம் பிசினுங்
கோதிலா வாத்திப் பூவில்வப் பழமுங்
கோரையின் கிழங்குசீ ரகமும்
ஒதிய இலவம் பிசின்குரோ சானி
யோமமுஞ் சாதிப்பத் திரியே. (உ௬எ)

பத்திரி கிராம்பு மாகவுந் தானே
பதிறாறு வகைமருந் தொன்றுக்
குத்ததோர் வராக னெடையது தானொவ்
வொன்றதாய் நிறுத்துமே வாங்கி
சுத்தமா மபினிரண் டேவராக னெடை
தூக்கிகஞ் சாவிலைச் சாற்றை
நற்றுவமாய்விட் டரைத்துமைப் போல
நல்லமா தளையினிற் காயே. (உ௬அ)

மாதளங் காயை விரைதசை போக்கி
மருந்ததி லடைத்துமோர் சாணி
யேதட வித்தான் புடமது போட்டு
யெடுத்தரை மையது போல
தூது விளங்காய் மாத்திர முண்டைத்
துப்புற வாகவே செய்து
ஏதுவாம் நிழலி லுலர்த்தியே சிமிழி
லேயடைத் ததையும்வைப் பாயே. (உ௬௯)

வைத்த வுண்டையி லோருண் டையத்தா
　　னருளவா திகடாய மதாவ
சுத்தமாந் தயிர்நீர் தன்னிலே யாவ
　　தொவ்வொரு வேளையுங் கொள்ளு
மத்திடுங் கிராணி சகலமுந் தீரு
　　மாதினநா யகன்கிரு பையினால்
சத்திர சாலையி லங்கிய தஞ்சைச்
　　சரபபூ பதியுரை யிதுவே. (உசய)

(இ-ள்)

| | |
|---|---|
| சாதிக்காய் | குடசப்பாலையரிசி |
| புளியங்கொட்டைத்தோல் | மாதளம்பிஞ்சு |
| திப்பிலி | மிளகு |
| அதிவிடயம் | விளாம் பிசின் |
| அத்திப்பூ | வில்வப்பழச்சதை |
| கோரைக்கிழங்கு | சீரகம் |
| இலவம் பிசின் | குராசானியோமம் |
| சாதிப்பத்திரி | கிராம்பு |

இச்சரக்குகளை வகைக்கு 1 வராகனெடையும் அபின் 2 வராகனெடையும் மெடுத்துச் சூரணித்துக் கஞ்சா இலைச்சாறு விட்டு நன்றாக அரைத்துவைக்கவும். மாதளங்காயை நறுக்கி விரை, தசை, இவைகளைப் போக்கி அதற்குள் முன் விழுதை வைத்துச் சாணிதடவிப் புடம்போட்டு எடுத்து மைபோல ரைத்துத் தூதுவிளங்காய்ப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டவும்.

இதை நிழலில் உலர்த்திச் சிமிழில் பத்திரப்படுத்தவும். தயிர் நீர்தனிலோ, அல்லது அருளவாதிக் கஷாயத்திலோ ஒவ் வொரு வேளை உட்கொள்ளவும். கிராணிகள் தீரும்.

## 137. அதிஸாரம் கிராணிக்கு மருந்து

கானகக் குடசப் பாலையின் பட்டை
　　கிராம்பு சுக்கசம தாகமுமே
ஊனமிலசீ ரகமுட னைந்து
　　மொக்கவே சமனதாய்க் கொண்டு

தானத்தைப் பொடித்து யெண்ணெயைக் காய்ச்சிச்
சாற்றிய தூளதிற் குழைத்து
நீநய மாய்விழுங் கதி சாரம்
நீங்கிடுங் கிராணியும் போமே. (உ௪க)

(இ-ள்)

குடசப்பாலைப்பட்டை
சுக்கு
சீரகம்
கிராம்பு
ஓமம்

இச்சரக்குகளை வகைக்கு 1 பலம் எடுத்து நன்கு இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதில் ஒரு மூவிரல் கொள்ளுமளவு சூரணமெடுத்து காய்ச்சின எண்ணெயுடன் குழைத்து உட்கொள்ளவும். அதிசாரம், கிராணிகள் நீங்கும்.

## 138. இரத்த பித்தங்களுக்குக் கடாயம்

சம்பிர மான கடாய மொன்று
சாற்றுவேன் கிராணியாம் நோய்க்கு
அம்புவி கோரைக் கிழங்கதி மதுர
மற்புத நீர்வள்ளிக் கிழங்கு
இன்பமுந் திரிகைப் பழத்தோடு நாலு
மேசரி யாகவே கொண்டு
அன்புட னீர்விட் டெட்டொன்றாய்க் காய்ச்சி
யதைவடித் தெடுத்திடு வாயே. (உ௪உ)

எடுத்திடு கால்ச்சேர் தன்னில்சர்க் கரைதே
னிதுதனிற் குத்தியுந் தானே
குடித்திடு யிரண்டு வேளையு மிதற்குக்
குடிபுகு மிரத்தபித் தங்கள்
வடித்தபா வலர்க்கும் வேதியர் தமக்கு
மளவிலா கனகமீய்ந் தவரை
யடுத்தவர் தம்மைக் கார்க்குமன் புள்ள
வற்புத தஞ்சைமா னுரையே. (உ௪௩)

(இ-ள்)

கோரைக்கிழங்கு
தண்ணீர்விட்டான் கிழங்கு
அதிமதுரம்
திராட்சைப்பழம்

இவைகளைச் சரிகூட்டி ஒன்றிரண்டாயிடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி வடிக்கட்டவும்.

இக்கஷாயம் $\frac{1}{4}$ சேருடன் சர்க்கரை, தேன் இவைகளை விட்டு 2 வேளையும் பருகவும். இரத்தபித்தம், சிராணிகள் தீரும்.

## 139. இரத்தபித்தத்திற்குச் சூரணக்குடிநீர்

சகஸ்திர பேதி வெள்ளிலோத் திரமுஞ்
சட்டநீ லாஞ்ஜன மூன்று
கசரக் கதையுஞ் சரியது பொடித்து
வைத்துக்கொள் விதுக்கனு பானஞ்
சகத்தினி லாடர தோடையி னிலையைத்
தண்ணீர்விட் டெட்டொன்றாய்க் காய்ச்சி
சுகத்துசர்க் கரைதேன் கூட்டியே யதனிற்
சூரணம் போட்டிடு வாயே. (௬௨௪)

போட்டதை யிரண்டு வேளையு மருந்து
போய்விடும் ரத்தபித் தங்கள்
நாட்டமா யீச்சாப் பத்திய மாக
நாளது மூன்றுமே யருந்து
பாட்டினி னிசைக்கா யன்புகூர்ந்து துசிதப்
பாவைநாச் சியரிடந் தூது
ஆட்டிய பாதம் வந்தவே யீச
னருள்பெருந் தஞ்சைமா னுரையே. (௬௨௫)

(இ-ள்)

சகஸ்ரபேதி (கொடுக்காய்புளி)
நீலாஞ்ஜனம்
வெள்ளிலோத்திரம்

இவைகளைச் சரியெடுத்து இடித்துச் சூரணித்துக்கொள்ளவும். ஆடாதோடையிலைக் கஷாயத்துடன் சர்க்கரை, தேன் விட்டு ஷெ சூரணம் சேர்த்துப் பருகவும். இரண்டு வேளையில் இரத்தபித்தங்கள் தீரும்.

## 140. இரத்தபித்தங்களுக்குக் கடாயம்

அத்தியின் பிஞ்சு செம்பருத் தம்பிஞ்
சதுடன் முள்ளுக் கொழுஞ்சியின் வேர்
நத்திய மூன்றுங் கடாயமு மிட்டு
நல்ல தேன் சர்க்கரை கலந்து
மொத்த கடாயந் தன்னையே கொள்ளு
மோடிடும் ரத்த பித்தங்க
ளந்திடும் பத்திய மாகவுங் கொள்வா
யன்புள தஞ்சைமா னுரையே. (உசசு)

(இ-ள்

அத்திப்பிஞ்சு
கொழுஞ்சிவேர்
செம்பருத்திப்பிஞ்சு

இம்மூன்றையும் சமமெடுத்து இடித்து 8 மடங்கு நீர் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சவும். இதனுடன் தேனும் சர்க்கரையும் கூட்டிப் பருகவும். இரத்த பித்தங்கள் தீரும்.

## 141. சுவாசகாசம், கிராணி, மூலம், பாண்டு, ஜ்வரம், குன்மம், அருசி, மூலிகை, சூலை, பீனஸம், சூசிகவாயு, அக்கினி மந்தம், உளைவு, புளித்தேப்பம், உதர சல்லியபிரமேகம் முதலான நோய்களுக்குக் கடுக்காய் மருந்து

துவறுள கடுக்காய் நூறுகா டியினிற்
றோய்ந்திட வூறவும் போட்டுக்
கவனமாய் மூன்று நாளையிற் கொருக்கால்
கழுவியே யிப்படி யாக

வவைதனைப் பத்து விசைக்கழு வியுமே
வக்கடுக் காய்விரை போக்கி
புவனியிந் துப்பு நாலதி லொன்று
போட்டுவெள் ளாட்டுமோ ரினிலே. (உசஎ)

மோரினிற் கொதிக்க வைத்ததிற் றிப்பிலி
மூலமோ டானைதிப் பிலியுஞ்
சீருறு திப்பிலி செவியமும் நாலிற்
சேரிதில் வகைக்கரைப் பலமுஞ்
சாரிடு மிளகு மிந்துப்பு மசம
தாகமும் வகைக்கொரு பலமும்
நேருடனிடித்து வடியது கொண்டு
நீ செய்யும் வகையது கேளே. (உசஅ)

வகையது முன்கடுக் காயினி லடைத்து
வன்மையோர் கலசத்தி விட்டு
அகமகி ழெலுமிச் சம்பழச் சாறு
மதுவுரி யிஞ்சிச்சா றுரியுந்
துகையுடன் னிட்டு வேடது கட்டச்
சூரியன் முன்னதை வைத்து
பகலிரண்டான வுடனதை யெடுத்துப்
பத்திர மாகவும் வையே. (உசகூ)

பத்திரமாக வைத்தொரு கடுக்காய்
பக்குமஞ் சாகவே வெட்டி
யொத்திடு முதையந் தனில்ரெண்டு பங்கு
மொரு பங்கு மத்தியானத்தில்
மைத்தி ரண்டுள்ள பங்கு மந்திக்கி
வகையுட நாளொன்றுக் கொருகாய்
சுத்தமா யிச்சாப் பத்திய மாயுண்
சுவாசகா சங்களும் போமே. (உ௫0)

காசமும் குன்ம மருசியும் பீலி
கையொடு சூலைபீ னிசமு
மாசுசெ யுதர செவ்விய மக்கினி
மந்தமு மூலக்கி ராணி

சூசிக வாயு ராண்டுட னுளைவு
சுரம் புளித் தேப்பமும் வாத
மீசுர பிரமே கமுமறு மெனவே
விளம்பினர் தஞ்சைமா னிதையே. (உ௩௧)

(இ-ள்)

முற்றிய கடுக்காய் 100 எடுத்துக் காடியில் ஊறவைக்கவும். 3 நாட்களுக் கொருதடவை கடுக்காய்களை யெடுத்துக் கழுவி எடுத்துக் கொண்டு மறுபடியும் புதுக்காடியில் ஊறப் போடவும் 10 தடவை இவ்வாறு செய்யவும். பின்னர் அக்கடுக்காய்களை யெடுத்து உடைத்து விரைகளை நீக்கி அதன் நிறைக்கு நாலி லொன்று இந்துப்பு போட்டு வெள்ளாட்டு மோர் விட்டு அடுப் பின் மேலேற்றிக் கொதிக்கவைக்கவும்.

திப்பிலிமூலம்
திப்பிலி
யானைத்திப்பிலி
செவ்வியம்

இவைகள் வகைக்கு $\frac{1}{2}$ பலம்

மிளகு
ஓமம்
இந்துப்பு

இவைகள் வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து வஸ்திர காயஞ்செய்து கொண்டு முற்கூறிய கடுக்காயுடன் கூட்டி

எலுமிச்சம்பழச்சாறு — $\frac{1}{2}$ படியும்
இஞ்சிச்சாறு — $\frac{1}{2}$ படியும்

கூட்டி வெள்ளைத்துணியினால் வேடுகட்டி கடும் வெயிலில் 2 நாட்கள் வைக்கவும். சாறுவகைகள் நன்கு சுண்டி விட வேண்டும்.

பின்னர் இக்கடுக்காயி லொன்றை யெடுத்து ஐந்து பங்கு களாக்கிக் காலையில் 2 பங்கு, மத்தியானத்தில் 1 பங்கு, மாலை யில் 2 பங்கு வீதம் உட்கொள்ளவும்.

இச்சா பத்தியமிருக்கவும், சுவாசகாசங்கள், குன்மம், அருசி, பீலிகை, சூலை, பீனிஸம், உதரம், அக்னிமாந்த்யம். மூலக் கிராணி, சூசிகவாயு, பாண்டு, ஜ்வரம், புளித்தேப்பம், வாதப் பிரமேகம், சுரப்பிரமேகம் முதலானவை தீரும்.

## 142. கிராணி, குன்மம், வயிறு கடுப்பு, சோபம், சூலை, அதிஸாரத்திற்குச் சூரணம்.

இந்துப்பு மசம தாகமத் தித்திப்
பிலிசுக்கு கற்கட சிங்கி
இந்துவற் கடுக்கா யறுவகை மருந்து
மொக்கவே சரிநிறை யாக
தொந்தசூ ரணஞ்செய் தயிரினி லாதல்
சுடுவெந்நீ ராகுதற் குழைத்து
அந்தியுங் காலை கொண்டிட
யறும்வகை தன்னையுங் கேளே. (உ௫உ)

வகையுள கிராணி குன்மவா தனைகள்
வயிர்கடுப் புடனேமெய் சோபந்
துகையுள சூலை யுடனதி சாரஞ்
சூரியன் முன்பனி யெனவாய்ச்
சுகமதா மிச்சா பத்தியஞ் செய்நீ
சுயப்பிர காசரா மெங்க
ளகத்தினில் மேவுஞ் சிவனருள் பெருதென்
னடிகையின் விபுவுரை யிதுவே. (உ௫௩)

(இ-ள்)

இந்துப்பு
யானைத்திப்பிலி
கற்கடசிங்கி
ஓமம்
சுக்கு
கடுக்காய்த்தோல்

இவைகளைச் சரியெடை யெடுத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்யவும். இத்தூளில் 3 விரல் கொள்ளுமள வெடுத்துத் தயிரிலோ அல்லது வெந்நீரிலோ உட்கொள்ளவும். காலையிலும் மாலையிலும் உபயோகிக்கவும்.

கிராணிகள், குன்மம், வயிறு கடுப்பு, சோபம், சூலை, அதிசாரம் முதலானவை தீரும். இச்சா பத்தியமாயிருக்கவும்.

## 143. குன்மம், மூலம், கிராணி, பாண்டு, உதரக்கடுப்பு, வாய்நீரூறல், குடல்வாயு, பார்சவாயு, ஆனந்தவாயு முதலியவைகளுக்குப் பித்தளை பற்பம்.

பித்தளையைத் தகடுபண்ணித் தகட்டின்மேற்
காஞ்சிரையிற் பிறந்த வேரைச்
சத்துவமா யரைத்துவதிற் பூசியொரு
வோட்டில் வைத்துத் தானேமேலோர்
சுத்தமுள வோடுகொண்டு மூடிமண்ணின்
சீலையைச்செய் துலரவைத்து
பத்திரமாய் கஜபுடம்போ டதுபற்ப
மாமிதையும் பதனம்பண்ணே. (உ௬௪)

பதனமது பண்ணிநோய் வலுவறிந்து
கொடுத்திடனு பானம்நெய்தேன்
யிதிலுணத்தீ ரும்வியாதி கேள்குன்மங்
கிராணிபா ரிசத்தின்வாயு
பதமில்லாக் குடல்வாயு நீர்க்கடுப்பு
டன்மூலம் பாண்டினூடே
லிதமான வானந்த வாயுவுவாய்
நீரூறல் விட்டுப்போமே. (உ௬௫)

(இ-ள்)

பித்தளையை மெல்லிய தகடாகத் தட்டி அதன்மேல் காஞ்சோறி வேரையரைத்துப் பூசவும். இதையொரு ஓட்டில் வைத்து வேறொரு ஓடுகொண்டு மூடிச் சீலைமண்செய்து உலர வைக்கவும்.

பின்னர் கஜபுடம் (ஒரு கஜம் நீள அகலமுள்ளது) இடவும், பற்பமாகும். நோயின் பலத்தையறிந்து நெய், தேன், முதலிய அனுபான பேதங்களில் கொடுத்துவரக்

குன்மம், கிராணி, பார்சவாயு, குடல்வாயு, நீர்க்கடுப்பு, மூலம், ஆனந்தவாயு, வாயில் நீரூறல் முதலான பற்பல நோய்களும் தீரும்.

## 144. மூலக் கிராணிக்கு மருந்து (வலம் விடாத பேருக்கு மருந்து)

பேய்ப்பாச்சொத் தியின்கொழுந்து முனிமஞ்சள்
சற்றுமொரு பிடிகொணர்ந்து
வாய்ப்பான பொட்டணமுங் கட்டிதண்ணீ
ரிற்போட்டு வனலிற்றானே
நேர்ப்பாக வேகவைத்து வதன்கூட
மிளகுமுப்ப திரண்டுவுள்ளி
சேரப்பார் வம்மிதனி லோட்டியரை
மைப்போலத் திறமாய்த்தானே. (உ௫௬)

தானதையு மெருமையுட தயிரினிலே
கலந்து நன்றாய்த் தானேயுண்ணு
ஊனபுகை யிலைபுளியுந் தள்ளுமூ
லக்கிராணி யுடனேதீருந்
தானதவ மிகுந்துவளர் சோழவள
நாடாளுந் தருமவானா
மான்பான ஞானமிகுந் தஞ்சைசர
பேந்திரனருள் வைத்தியமீதே. (உ௫௭)

(இ-ள்)

பேய்ப்பாச்சோத்திக் கொழுந்து — ஒரு பிடி
பசுமஞ்சள் — ,,

இவ்விரண்டையும் நசுக்கிப் பொட்டணம் கட்டி ஒரு பாத்திரத்திலிட்டுத் தண்ணீர்விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து நன்கு வெந்தவுடன்,

| | |
|---|---|
| மிளகு | —30 |
| உள்ளி | —2பல்லு |

இவைகளையும் கூடச்சேர்த்து அம்மியில் வைத்து நன்றாக அரைத்து எருமைத் தயிருடன் கலந்து காலையில் உட்கொள்ளவும்.

புகையிலை, புளி முதலானவைகளை நீக்கவும். மூலக்கிராணிகள் தீரும்.

## 145. இரத்தக்கிராணி, மூலக்கிராணிக்குச் சுக்காதி கிருதம்

சுக்குபலம் நாலுசீர கம்பலநா
விதையும்நல்ல தூளாய்ச்செய்து
வொக்கபதி னாறுபடி தண்ணீர்விட்
டடுப்பில் வைத்தெட் டொன்றாய்க் காய்ச்சி
பக்குவமா யிரண்டுபடி யாயிறுத்து
பசுவின்பால் படியும்நாலு
தக்கபசு நெய்படிரெண் டிதிலூத்திக்
கற்கவகை சாதிக்காயே. (உ௫அ)

சாதிக்கா யோமஞ்சித் திரமூல
மகிற்பொடிவ சம்புமஞ்சள்
சீதக்கோ ரைக்கிழங்கு பெருங்காயம்
வாய்விளங்கஞ் சீரகத்தோ
டோதுச்செவ் வியமுமதி மதுரமதி
விடையமதி னொக்கத்தானே
கோதில்திரி கடுகுடனே பதினாறு
வகைமருந்துங் கொண்டிடாயே. (உ௫௬)

கொண்டுயிதி லொவ்வோரு வகைக்குநாற்
　　கழஞ்சதுவுங் கூட்டிச்சூர்ணங்
கண்டுகடா யம்பால்நெய் துளாவியதைக்
　　குறுகிவருங் காலைதன்னில்
பண்டுசெய்யுண் சூரணத்தைப் போட்டிரும்புக்
　　கரண்டியினாற் பதமதாக
வொண்டிவரத் துளாவிபதத் திறக்கியொரு
　　கரண்டிதனை யுட்கொள்வாயே. (உகூ௰)

கொள்ளிரண்டு வேளையுந்தப் பாமலிதற்
　　குபத்தியங் கூறக்கேளு
தெள்ளியவெந் நீர்புழுங்கு முறுதியா
　　யிச்சாப்பத் தியமதாக
துள்ளிடும்ரெத் தக்கிராணி யும்மூல
　　கிராணியுமே துலைந்தேபோகும்
வெள்ளிமலை யீசனருள் பெருஞ்சரபேந்
　　திரனிதையும் விளம்பும்வாறே. (உகூக)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | —4பலம் |
| சீரகம் | —4பலம் |

இவ்விரண்டையும் தூளாக்கி சுத்த ஜலம் 16 படி விட்டு ஒருநாள் வெயிலில் வைத்திருந்து மறுநாள் அடுப்பின் மேலேற்றி எரித்து 2 படியாகச் சுண்டவைத்து, அதனுடன்

| | |
|---|---|
| பசுவின் பால் | —4படியும் |
| ,, நெய் | —2 ,, |

விட்டு ஒன்று கலந்து,

சாதிக்காய்
சித்திரமூலம்
வசம்பு
கோரைக்கிழங்கு
வாய்விடங்கம்
செவ்வியம்

அதிவிடயம்
திப்பிலி
ஓமம்
அகில்கட்டைத்தூள்
மஞ்சள்
பெருங்காயம்
சீரகம்
அதிமதுரம்
சுக்கு
மிளகு

இவைகளை வகைக்கு 4 கழஞ்சு வீதம் எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். கஷாயம் கூட்டிய நெய்யை அடுப்பின்மேலேற்றிச் சிறுகச்சிறுக எரிக்கவும். அது குறுகி வரும் போது ஷை சூரணத்தையிட்டு இரும்புக் கரண்டியினால் துளாவி வரவும். பின்பு நெய்யைப் பதத்திலிறக்கி வடிக்கட்டிக்கொள்ள வும்.

ஒரு சிறு கரண்டியளவு இந்நெய்யெடுத்துத் தினம் காலை யிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

பத்தியம்:—

வெந்நீரையே எல்லாக் காரியங்களுக்கும் புழங்கவும். இச்சா பத்தியமிருக்கவும்.

தீரும் நோய்கள்:-

இரத்தக் கிராணி, மூலக்கிராணி முதலான ரோகங்கள் தீரும்.

## 146. தொந்தக்கிராணி மூலக்கிராணிக்கு நெய்

இந்துப்பு சாதிக்கா யோரொன்று
வகைக்கழஞ்சு மிதமாநெய்யி
லுந்தப்பா மற்காய்ச்சி வடித்துமொரு
காசிடையு முள்ளே கொள்ளு

யிந்தப்ப டியுமாகற் றவராமற்
கொள்ளுமிரு பதுநாள்தானே
தொந்தக்கிராணியுடன் மூலகிரா
ணியும்விட்டுச் சுகமதாமே. (உசுஉ)

(இ-ள்)

இந்துப்பு
சாதிக்காய்

இவ்விரண்டும் வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை எடுத்துத் தூளாக்கிப் பசுவின் நெய் 1 சேருடன் குழப்பிப் பதத்தில் காய்ச்சி வடிக்கவும். இந்நெய்யில் ஒரு வராகனெடை யளவெடுத்துப் பருகவும். 20 நாட்களுள் கிராணிகள், மூலக்கிராணிகள் முதலானவை நீங்கும்.

## 147. மூலக்கிராணிக்கு இருவித மருந்து

அடவிபிரண் டைக்கிழங்கும் புழுங்கலரி
சியுஞ்சரியா யரைத்தடைசுட்
டடவுடநெள் ளெண்ணெத னிற்துவைத்துத்
தின்றாலு மத்தூளைத்தான்
றிடமுடநா யுறுவிவேர்ப் பொடியுடநா
மணக்கெண்ணெய் தேனிலாதல்
துடியுடனே கொள்மூலக் கிராணியறுந்
தப்பாமற் சுகமுண்டாமே. (உசுங)

(இ-ள்)

காட்டிலுள்ள பிரண்டைக் கிழங்கு — 1 பங்கு
புழுங்கல் அரிசி — 1 ,,

போட்டுத் தண்ணிர்விட்டூறவைத்து, நன்றாக அரைத்து அடை செய்யவும். இதனை நல்லெண்ணெயில் தோய்த்து உட்கொள்ளவும்.

(2) பிரண்டைக்கிழங்குத் தூள்
நாயுருவிச்சமூலச் சூரணம்

நாட்டமுட னூத்தியது வெந்தவுட
னுள்ளுக்கும் நயமாய்க்கொள்ளே. (உசுரு)

நயமாகக் காலையந்தி சொன்னபடிக்
கேழுன்று நாளுக்கொள்ளு
பயமாமீ ரொன்பதுகி ராணியுட
கழிச்சலெல்லாம் பறந்தேயோடும்
மயமான நீரதுவும் பிடிபட்டா
லதற்குமொரு மாற்றுக்கேளு
வயணமாஞ் சங்குசுண்ணாம் புதேத்தான்
வித்தின்மாத் திரந்தானே. (உசுசு)

மாத்திரமுத் தினசீந்திற் றண்டுபுரோ
ணியைத்தள்ளி வகையதான
சாத்தம்மி தனிலிட்டு நறுக்கிபிரண்டு
துட்டிடையின் சாற்றிலேதான்
யேத்தசுண்ணாம் பையும்போட்டுக் கொள்காலின்
பெருவிரலி லேயும்பூசப்
பூத்தகொப்பூ ழிலும்பூசு நீர்விடுந்தப்
பாமலெனப் புகன்றவாறே. (உசுஎ)

(இ-ள்)

காட்டுமான் கொம்பையிழைத்த விழுதை வில்லைதட்டிக் காயவைக்கவும். 2 கோழி முட்டையின் வெள்ளைக்கருவை மாத்திரம் ஒரு சட்டியிலூற்றி, அதனுடன் முன்சொன்ன மான் கொம்புத்தூள், நல்லெண்ணெய் இவ்விரண்டையும் ஒரு உழக்கு விட்டு அடுப்பின் மேலேற்றி வேகவைத்து உட்கொள்ளவும்.

காலையிலும் மாலையிலும் 3 நாட்களுக்கு இவ்வாறு உட்கொள்வ 18 வித கிராணிகளும் தீரும்.

நீர்ச்சுருக்கு ஏற்பட்டால் சங்குச் சுண்ணாம்பு—தேத்தான் வித்துப் பிராமணம் எடுத்துப் புரோணி நீக்கிய சீந்திற்கொடியை நசுக்கிப் பிழிந்த சாறு 2 துட்டெடையுடன் கூட்டி உட்கொள்ளவும். காலின் பெருவிரலில் பூசவும். தொப்புளிலும் பூசவும். சிறுநீர் பிரியும்.

இவ்விரண்டையும் ஆமணக்கெண்ணெயிலோ அல்லது தேனிலோ சாப்பிடவும். மூலக்கிராணிகள் தீரும்.

## 148. மூலக்கிராணிக்குச் சூரணம்

காட்டுக்க ரணைக்கிழங்கு பிரண்டையுட
கிழங்குகர ணைக்கிழங்கு
நாட்டுமுள கொடிவேலி வேர்வகையொன்றுக்
குப்பலமும் நாலுங்கூட்டி
வாட்டியதைச் சூரணித்துக் காலையந்தித்
தேனதிலோ வகையாய்க்கொள்ள
வோட்டமெடுக் குமூலக் கிராணியது
தஞ்சைவிபு வுரைத்தவாறே. (உகூச)

(இ-ள்)

காட்டுக்கரணைக் கிழங்கு
பிரண்டைக் கிழங்கு
கருணைக் கிழங்கு
கொடிவேலி வேர்

இவைகள் வகைக்கு 4 பலம் எடுத்து வெட்டி உலர்த்திச் சூரணம் செய்யவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துக் காலையிலும் மாலையிலும் தேனில் உட்கொள்ளவும். மூலக் கிராணிகள் தீரும்.

## 149. பதினெட்டுக் கிராணிக்கு மருந்து

காட்டுமான் கோம்பிழைத்த விழுதையுமே
நன்றாகக் காயவைத்து
நாட்டினிற்கோ ழியுமிட்ட முட்டையின்வெள்
ளைக்கருவை நலமாஞ்சட்டி
யோட்டினிலே யூத்திவெரு கடிமான்கொம்
புத்தூளு முழக்குயெண்ணெய்

## 150. கிராணிக்கழிச்சல், வயிற்றுநோய்க்கு மருந்து

வேப்பம்வேர் பட்டையுரித் தேசுக்குச்
சமன்சேர்த்து வெருமையோடே
வாய்ப்புள்ள தயிற்றண்ணீர் விட்டுமெல்லி
சாகவுமே வரைத்துவந்த
தாப்பிரிய மாந்தயிரி லேகுழப்பிக்
கொள்கிராணி தன்கழிச்சல்
கூப்பிடா தோடும்வயிற் றின்வலியுந்
தீர்ந்துநோய் குணமதாமே. (உகூஅ)

(இ-ள்)

வேப்பமரத்தின் வேரின் மேல்தோல் — 1 பங்கு
சுக்கு — ,,

இவ்விரண்டையும் எருமைமோரின் தெளிவுநீர்விட்டு நன்றாகவரைத்து எருமைத்தயிருடன் குழப்பி உட்கொள்ளவும், கிராணிகள், கழிச்சல் முதலானவை தீரும். வயிற்று வலியும் நீங்கும்.

## 151. கிராணி, சுவாசகாசம், குன்மத்திற்குக் கிருதம்

சுக்காயிற் பட்டைரெண்டுஞ் சமன்சேர்த்து
ஜலம்விட்டுச் சுகமதாக
பிக்கியாது மில்லாம லெட்டொன்றாய்க்
காய்ச்சியதன் பின்புதானே
இக்கடா யத்துக்கு சமன்னெய்யுஞ்
சேர்த்துவிதிற் கற்கந்தானுஞ்
சுக்குதிப் பிலிமிளகு பொன்முசுட்டை
மஞ்சளுமிந் துப்புத்தானே. (உகூகூ)
இந்துப்பு சிறுதேக்கு திப்பிலிமூல
முடன்வாய்வி ளங்கமோமங்
கந்தக்கோ ரைக்கிழங்கு மதிவிடைய
மறல்கிழங்கு காட்டாத்திப்பூ

தந்தித்திப் பிலிமூங்கி லுப்புமதி
மதுரமும்வ சம்புசெவ்வியம்
கந்தச்சீ ரகத்தோடே யாகயிருபது
வகைமருந்துஞ் சரியாய்ச்சேரே. (௨எ௰)

சரியாக வகைக்கரை வராகனெடை
யிடித்துத்தூள் தானேபண்ணி
உரமான நெய்யினில்விட் டுக்காய்ச்சி
னோய்வலுவு முறுதிகண்டு
வரிசையுடன் கொள்கிராணி சுவாசகா
சங்குன்மம் வாங்குந்தானே
அருள்மிகுந்த சரபேந்திரன் மனதுணர்ந்த
கிருதமிது வன்பாய்ச் செய்யே. (௨எக)

(இ-ள்)
சுக்கு, ஆயிற்பட்டை

இவைகளை வகைக்கு 2 பலம் எடுத்து 8 மடங்கு தண்ணீர் விட்டு எட்டிலொன்றாக்கி இறக்கி வடிக்கட்டிக் கொள்ளவும்.

இதற்குச் சமனளவு பசுவின் நெய் சேர்த்து,

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | பொன்முசுட்டை வேர் |
| மஞ்சள் | இந்துப்பு |
| சிறுதேக்கு | திப்பிலிமூலம் |
| வாயுவிடங்கம் | ஓமம் |
| கோரைக்கிழங்கு | அதிவிடையம் |
| மருள்கிழங்கு | காட்டாத்திப்பூ |
| யானைத்திப்பிலி | மூங்கிலுப்பு |
| அதிமதுரம் | வசம்பு |
| செவ்வியம் | சீரகம் |

இவைகளை வகைக்கு ½ வராகனெடை வீதமெடுத்து இடித்துச் சூரணம் செய்து மேற்கூறிய கஷாயஞ்சேர்ந்த நெய் யுடனே சேர்த்துக் குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்து இறக்கவும்.

இதில் ஒரு ஸ்பூனவெடுத்து உட்கொண்டுவரக் கிராணி கள், சுவாசகாசம், குன்மம் முதலானவை தீரும்.

## 152. ஸ்திரீகளின் பிரதரம். அஸ்திஸ்ராவம், ருதுசூலை, சுக்கிலமேகம், மலட்டுக்கு ஐம்புவல்கல கிருதம்.

சம்புவர்க லமென்றோர் கிருதஞ்சொல்
வேநன்றாய்த் தானேகேளு
சம்புவெனும் நாவல்மரு தமிச்சி
யத்தியர சைந்துபட்டை
நம்புமா தளையோடு காட்டாத்திப்
பூவும்வகை நவிலுமேழி
லும்பிசகா மலைந்துபலம் நிறுத்துநீர்
நீர்விட்டெட் டொன்றாய்க்காய்ச்சே. (உஎஉ)

காய்ச்சிவடித் திடுகடாயத் துக்குச்சரி
யாநெய்க ணக்காய்ச் சேர்த்து
வாச்சாவின் பாலிளநீ ராடாதோடை
யுஞ்சதாவ ரிக்கிழங்கு
பாய்ச்சுவகை யொன்றினுக்கு மொருசேருங்
கற்கவகை பகரக்கேளு
தேர்ச்சுக்கு மதிமதுரம் பெருமரப்பட்
டைகாட்டாத் திப்பூத்தானே. (உஎங)

பூகொடிமிந் திரிப்பழஞ் செஞ்சந்தனஞ்சந்
தனமிலுப்பைப் பூகிராம்பு
வாகுபெரும் சாதிக்காய் பேரீச்சங்
காயுஞ்செவ் வலிக்கொடிமேல்
வேகமறுந் தாளீசபத் திரிதாம
ரைக்கிழங்கு வெட்டிவேரு
மாகுமிலா மிச்சம்வேர் வெட்பாலை
யுடன்பதினேழ் வகையுந்தானே. (உஎச)

வகையொன்றுக் கிரண்டுவரா கனெடைநிறுத்
தேயெடுத்து வடிக்கட்டிக்கொண்
டுகையான சாறுகடா யம்நெய்யிற்
றானேயித் தூளைப்போட்டுத்

தகையாமல் வடித்துக்கொண் டேயதற்கு
　　மென்பொடியுந் தான்கத்தூரி
சுகபச்சைக் கற்பூரம் வகைக்குமொரு
　　வராகனெடை தூக்கிக்கொள்ளே. (உஎரு)

தூக்கிக்கொண் டேயிரண்டும் பொடியாக்கிப்
　　போட்டுநோய் துருசுந்தேக
போக்கறிந்து வதற்குத்தக் கப்பிரமா
　　ணமாகப் பொழுதின்காலை
தாக்குடனே கொள்ளிதற்குப் பெண்பிளைக
　　ளுக்குப்பிர தரரோகம்போம்
நீக்குமஸ்தி ஸ்ராவம்ருது சூலை சுக்கி
　　லமேகம் நேராந்தானே. (உஎசு)

நேரான மங்கையற்குச் சந்ததியில்
　　லாவிடிலே நேரும்புத்திரன்
சீராகு மிம்முறையு மருந்தவத்தோர்
　　சொன்னதையுந் தேர்ந்தாராய்ந்து
பாராளுந் தஞ்சைதுள சேந்திரமகி
　　பாலனருள் பாக்யசாலி
யேராருங் குலவுபுயன் சரபேந்திர
　　நிர்ணயித்த திதுவுமாமே. (உஎஎ)

(இ-ள்)

நாகப்பட்டை
மருதம்பட்டை
இச்சிப்பட்டை
அத்திப்பட்டை
அரசம்பட்டை
மாதளையோடு
காட்டாத்திப்பூ

இவைகள் வகைக்கு 5 பலம் எடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும் வரை வற்றவைக்கவும்: இக்கஷாயத்திற்குச் சமன்

| | |
|---|---|
| பசுவின் நெய் ($1\frac{1}{4}$ சேர்) விட்டுப் | |
| பசுவின் பால் | —1 சேர் |
| இளநீர் | — ,, |
| ஆடாதோடைச்சாறு | — ,, |
| தண்ணீர்விட்டாங்கிழங்குச்சாறு | — ,, |

முதலானவைகளையும் சேர்த்து ஒன்று கலந்து வைத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| சுக்கு | அதிமதுரம் |
| பெருமரப்பட்டை | காட்டாத்திப்பூ |
| திராக்ஷப்பழம் | செஞ்சந்தனம் |
| சந்தனம் | இலுப்பைப்பூ |
| கிராம்பு | சாதிக்காய் |
| பேரீச்சங்காய் | செவ்வல்லிக்கொடி |
| தாளீசபத்திரி | தாமரைக்கிழங்கு |
| வெட்டிவேர் | இலாமிச்சம்வேர் |
| வெட்பாலையரிசி | |

இச்சரக்குகள் வகைக்கு 2 வராகனெடை எடுத்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இதனைச் சாறுகூட்டிய நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

நன்கு ஆறியபின்,

| | |
|---|---|
| கஸ்தூரி | —1வராகனெடையும் |
| பச்சைக்கல்பூரம் | — ,, |

நன்கு தூளாக்கிப் போட்டுக் குழப்பிக் கொள்ளவும். இதனை நோயின் பலமறிந்து காலை வேளையிற் உட்கொள்ளப்

பெண்களுக்கு ஏற்படும் பிரதர ரோகம், அஸ்திசிராவம் (வெள்ளை விழுதல்), ருதுசூலை, சுக்கிலமேகம் முதலானவை தீரும். குழந்தை இல்லாதவர்களுக்குப் புத்திரப்பேறு உண்டாகும். மிக்க நன்மை பயக்கும் ஔஷதமாகும்.

## 153. கிராணி, வெள்ளுடைப்புக் கழிச்சலுக்கு

பெருமரப்பட் டையும்புளியம் பட்டைமாம்பட்
டையும்பிச காமல்கான
நறுவழியின் பட்டையிந்நால் வகைக்குநிறு
பிசகாமற் நாற்களஞ்சு
யெருமையுட தயிரிலரைத் தேகொள்ளு
மலதுபிட்டா யேநீசுட்டு
வரிசையுடன் கொள்கிராணி வெள்ளடைப்புக்
கழிச்சலுமே வாங்கிப்போமே. (உ௭அ)

(இ-ள்)

பெருமரப்பட்டை
புளியம்பட்டை
மாம்பட்டை
நறுவலிப்பட்டை

இவைகளை வகைக்கு 4 கழஞ்சு வீதமெடுத்து நசுக்கி எருமைத்தயிருடன் அரைத்து உட்கொள்ளவும். அல்லது அரிசிமாவுடன் கலந்து பிட்டு சுட்டுத் தின்னவும். வெள்ளுடைப்புக் கழிச்சல் தீரும்.

## 154. கிராணிக்கு மருந்துத்தூள்

பிரண்டைசிறு கவுமறிந்து நீர்சுவறச்
சட்டியடுப் பினிலே வைத்து
வறுத்தசம தாசமும்வெச் செனப்பண்ணி
யிடித்துபின்பு வடியுங்கட்டி
பிரட்டு பின்னும் நல்லெண்ணெய் தனிற்சற்று
நேரமடுப் பினிலேதானே
உரைத்தபடி யெட்டு நாட்டி னிரண்டுசிறங்
கைகிராணி யுந்தான்போமே. (உ௭கூ)

(இ-ள்)

பிரண்டையைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு சட்டியிலிட்டு அடுப்பின் மேலேற்றி நீர் சுவற வறுக்கவும், இதனுடன்

பொன் வறுவலாக வறுத்த ஓமமும் சமனெடுத்து இடித்து வஸ்திர காயஞ் செய்து கொள்ளவும், பின்னர் இச்சூரணத்துடன் நல் லெண்ணெய் சிறிதுவிட்டு வறுத்துப் பத்திரப்படுத்தவும். இரண்டு சிறங்கையளவெடுத்து உட்கொள்ளக் கிராணிகள் தீரும்.

## 155. பழங்கிராணிக்கு மருந்து

(நூத்திருவது தடவை கழிகின்ற கிராணிகளுந்தீர)

சுக்குத்தே றொன் றுகழற் சிப்பருப்பு
வொன்றுடனே துவர்கடுக்கா
யுக்குள்விதை தள்ளிமூன்று வராகனெடை
யதுதூளுஞ் சேர்த்தே தான்
பக்குவமாய் மோர் வார்த்து வரைத்துமைப்போ
லாகிவிடும் பக்குவத்தி
லொக்கநல் லெண்ணெயிற்கொ திக்கவைத்து
மெழுகுபதத் துருசாய்த்தானே. (உ௮௰)

துருசுடனே யிறக்கியதைக் கொள்ளேழு
நாடனக்குச் சோறுமோரு
முரமிகுநல் லெண்ணெயுங்கூட் டிக்கொள்ளு
பழங்கிராணி யூர்விட்டோடும்
வரமிகுந்த சித்தர்சொன்ன முறைகளெல்லா
முணர்ந்து ணர்ந்து வாமதேவ
நருள்மிகுந்த தஞ்சை சரபோசிமகி
பாலனுரை யதுமிதாமே. (உ௮க)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | 1 தேறு (சின்ன துண்டு) |
| கழற்சிப்பருப்பு | 1 ,, |
| கடுக்காய்த்தோல் | 3 வராகனெடை |

இவைகளைப் (பசுவின்) மோர் விட்டு நன்றாக அரைத்து நல்லெண்ணெயுடன் ($1\frac{1}{2}$ சேர்) குழப்பி அடுப்பின் மேலேற்றிக் கொதிக்கவைத்து மெழுகுபதத்திலிறக்கவும்.

இந்த எண்ணெயை 7 நாட்களுக்கு உட்கொள்ளவும். மோர்சாதம், நல்லெண்ணெய் முதலானவைகளை வேண்டிய அளவு உட்கொள்ளக் கொடுக்கவும். நாட்சென்ற கிராணிகள் தீரும்.

## 156. கிராணி கடுப்பிற்குச் சாதிப்பத்திரி உருண்டை

சாதிப்பத் திரியிரண்டு வராகனெடை
யபின் மருந்து தானுங்கேளு
சாதகமா யொருவராக னிடைவிளாம்பி
சினுமோதா னுமூன்று
வோதுவரா கனெடையிது மூன்று மைப்போ
லரைத்தவிழு துண்டை பண்ணி
நீதிணிரண் டேபணவி னெடைதானு
மாதளையி னிலையின் சாற்றே. (உஅஉ)

சாத்தினிலே கொள்ளிரண்டு வேளையுந்தான்
நாள்மூன்று டனக்குத்தானே
ஆத்தமுடி யாக்கிராணிக் கடுப்பகலுந்
தயிறுஞ்சோ றதுவு முண்டை
சாத்திரிகள் சங்கம்பிர சங்கஞ் செய்
யும் பற்பல சமூகநாத
வீத்திருக்கு மீசனருள் பெருசரபேந்
திரனுணர்ந்த விதியிதாமே. (உஅங)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சாதிப்பத்திரி | 2 | வராகனெடை |
| விளாம்பிசின் | 3 | ,, |
| அபின் | 1 | ,, |

இம்மூன்றையும் கல்வத்திலிட்டு மைபோலரைத்து மிளகள வுள்ள உருண்டைகளாகச் செய்து நிழலில் உலர்த்தவும்.

மாதளையிலைச்சாறு 2 வராகனெடையுடன் தினந்தோறும் மாத்திரை காலையிலும் மாலையிலும் 3 நாட்களுக்கு உட்கொள்ளக் கொடுக்கவும். தீராத கிராணிகள், கடுப்பு, முதலாவை தீரும்.

(பத்தியம்)

தயிர் சாதம் சாப்பிடவும்.

## 157. கிராணி, கடுப்பிற்கும், சூட்டுக்கும் லேகியம்

திரிகடுகு வசம்புவெந் தயமூன்றுஞ்
சரியாகச் சேர்த்துக் கொள்ளு
விரைமிகுந்த சாதிக்காய் சாதிப்பத்
திரிகிராம்பு மேவகைக்கு
மொருவராக னெடையிந்த மருந்தெல்லாம்
நீர்வார்த்து வொருமையாக
வரையதைமைப் போலடுப்பி லனலிட்டுச்
சட்டியையும் வைத்துத்தானே. (உஅச)

சட்டிவைத்துப் பசுவின்நெய் சேர்முக்கால்
விட்டுக்காஞ் சதன் பிற்பாடு
சட்டமாய் விழுதைப்போட் டுக்கிளறி
யதன் பிறகு தானேகேளு
திட்டபழ வெல்லஞ்சே ரரைபோட்டுக்
கிளறியதிற் றேனுழக்கு
விட்டுமறு படிகிளறிப் பதந்தனிலே
யிறக்கிவைத்து விடுநீதானே. (உஅரு)

வைத்துகையாந் தரைச்சாறு சட்டிதனில்
நாலுபடி வகையாய்விட்டுச்
சுத்தரவி புடம்வைத்து வுலர்ந்ததூள்
சலம்வார்த்துத் துருசதாக
வொத்தவம்மி தனிற்கொட்டைப் பாக்களவு
முன்மருந்தி னுடன்கொட்டைப்பாக்
கத்தனையுங் கூட்டிமன்பத் தியாய்க்
கொள்காலை யந்திதானே. (உஅசா)

அந்தியிலுங் கொண்டிடக்கி ராணிக்கடுப்பு
மனலாறு மதற்குப்பத்திய
முந்தயிருஞ் சோறுங்கொள் கைலாசந்
தனில்மேவு முமையோர்பாக
நந்திவண் ணந்திக்கு முறைசெய்த
பிரையோக மதுவாராய்ந்து
சுகமாந்தஞ் சையின்மானு சரபேந்திர
னுரைத்ததிது சுகமதாமே. (உஅஎ)

பத்தியம்:- தயிர்சாதம் சாப்பிடவும்.

(இ-ள்)

| | |
|---|---|
| திப்பிலி | 1 பலம் |
| சுக்கு | ,, |
| மிளகு | ,, |
| வெந்தயம் | ,, |
| வசம்பு | ,, |
| சாதிக்காய் | 1 வராகனெடை |
| சாதிப்பத்திரி | ,, |
| கிராம்பு | ,, |

இவைகளை ஒன்றிரண்டாக இடித்துக் கல்வத்திலிட்டுச் சுத்த ஜலம் விட்டு நன்கு மைபோல் அரைத்து அடுப்பின்மேல் ஒரு சட்டிவைத்து அது காய்ந்தவுடன் பசுவின் நெய் $\frac{3}{4}$ சேர் விட்டு பிறகு விழுதையிட்டுக் காய்ச்சவும்.

பழைய வெல்லம் $\frac{1}{4}$ சேர் (பலம் 4) விட்டுக்கிளறி லேகிய பதத்தில் இறக்கிக்கொள்ளவும். நன்கு ஆறியபின் தேன் ஒரு உழக்கு விட்டுக் கிளறிக்கொள்ளவும். இதில் ஒரு பாக்களவு உட்கொள்ளக் கிராணிக்கடுப்புகள் தீரும். சரீரம் அனல் ஆறும்.

கையாந்தகரைச்சாறு ஒரு சட்டியில் 4 படி விட்டு வெயிலில் உலரவைக்கவும். மெல்லியதான தூள் கிடைக்கவும்.

இத்தூளில் ஒரு கொட்டைப்பாக் களவெடுத்துத் தண்ணீர் விட்டு அரைத்து விழுதாக்கி முன் கூறிய லேகியத்துடன் தினந் தோறும் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

## 158. சூதகவாயு, கிராணிக்கு லேகியம்

முடக்கொத்தா னிலைவட்டத் திருப்பிதிப்
பிலிசொல்லு மூன்றுந்தானே
திடத்துளவிஞ் சிச்சாற்றை விட்டரைத்து
யெண்ணெயுடன் சேர்த்தடுப்பில்
சடக்குடனெ வைத்துகடு காக்கிபெருங்
காயத்தூள் தானும்போட்டு
யெடுத்தொருபாக் களவுண்ணு சூதகவாய்
வுங்கிராணி யேகுந்தானே. (உஅஅ)

(இ-ள்)

முடக்கொத்தானிலை
வட்டத்திருப்பி
திப்பிலி

இம்மூன்றையுஞ் சமனெடுத்து நசுக்கிக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாறு விட்டு நன்றாக அரைத்து நல்லெண்ணெயுடன் ஒன்று கலந்து அடுப்பின்மேல் வைத்துக் காய்ச்சவும். கடுகானபின் அந்த எண்ணெயுடன் பெருங்காயத்தைத் தூள்செய்து போட்டுக் குழப்பிக் கொள்ளவும், இதில் ஒரு பாக்களவெடுத்து உட்கொள்ளவும். சூதகவாயு, கிராணிகள் தீரும். வாயுக்கிராணிகள் தீரும்,

## 159. கிராணிக்கும் பிரமியத்திற்கும் இரதாதி பற்பம்

இரதங்கெந் தகந்துத்த மிளகு சுக்கு
மிலவங்க மேலந்திப்பிலி
யுரையெட்டு வகைமருந்தில் மும்மூன்று
பலமும்நிறுத் துக்கொண்டே தான்
அரைபொடியு மாறுபலங் காந்தமது
வைந்துபல மம்மருந்தி
லிரதமொன்றை யும்நீக்கி மற்றதெல்லாம்
வெவ்வேறா யெடுத்துக்கொள்ளே. (உஅகூ)

எடுத்துவெவ்வே றாய்வறுத்துப் பொடிசெய்து
வைத்துக்கொண் டியல்பதான
வடுப்பிலொரு சட்டிவைத்துக் காரீய
மூன்றுபல மதிலேபோட்டுத்
தடக்கையினிற் கரண்டிகொண்டு கிளறிகறு
கினவாறே தான்முன்சொன்ன
வடித்தரசம் விட்டிரண்டு மொன்றின்வாற்
றபொடிவ கையாயச்செய்யே. (உகூ0)

பொடிசெய்து காந்தமுதற் றனிற்றனியே
தூளையெல்லாம் போட்டு நன்றாந்
துடியான வம்மிதனிற் பொடிசெய்து
சிமிழதனிற் சுகமாய்வைத்து
அடவுடனே யிரண்டுபண வெடைவரகா
லிற்றயிறி லன்பாயுண்ணு
கொடியகிரா ணியுந்தீருந் தேனிலிடப்
பிரமியமுங் குணமதாமே. (உகூக)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்தி செய்த பாதரஸம் | 3 பலம் |
| சுத்தி செய்த கெந்தகம் | ,, |
| சுத்தி செய்த துத்தம் | ,, |
| மிளகு | ,, |
| சுக்கு | ,, |
| கிராம்பு | ,, |
| ஏலக்காய் | ,, |
| திப்பிலி | ,, |
| சுத்தி செய்தி அரப்பொடி | 6 பலம் |
| சுத்தி செய்த காந்தம் | 5 பலம் |

இவைகளுள் பாதரஸம் தவிர்த்து மற்றசரக்குகளைச் சட்டியி லிட்டுத் தனித்தனியே வறுத்துக் கொள்ளவும். பின்பு சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு ஒருசட்டியை யடுப்பில் வைத்து அதில் காரீயம் (சுத்தி செய்தது) 3 பலம் போட்டுக் கரண்டியினால் கிளறி அதனுடன் ரஸத்தையும் விட்டுத் தொந்திக்கவும், இதனைக் கல்வத்திலிட்டுப் பொடி செய்து காந்தம்

முதலான மற்றசரக்குகளையும் போட்டுச் சூரணஞ் செய்து கொண்டு ஒரு சிமிழில் பத்திரப் படுத்தவும்.

இச்சூரணத்தில் 2 பணவெடை யெடுத்து (6 குன்றி) ஆட்டுத்தயிருடன் உட்கொள்ளவும் கிராணிகள் தீரும். தேனில் சாப்பிடப் பிரமியங்கள் நீங்கும்.

## 160. ஜ்வராதிஸாரத்திற்கு

வில்வப் பழமும் மாம்பட்டை
வீறுமுத்தம் நிலவேம்பு
சொல்லும் சுக்கு மாதளம்பூத்
தாக்கிநிறையைச் சரிகொண்டு
யொல்லும் படிநீ ரெட்டொன்றா
யூறக்காய்ச்சிக் கொடுத்தக்காற்
சொல்லுஞ் சுரமு மதிசாரங்
குணமாங் கணத்திற் குணமாமே. (உகூஉ)

(இ-ள்)

வில்வப்பழம்
கோரைக்கிழங்கு
சுக்கு
மாம்பட்டை
நிலவேம்பு
மாதளம்பூ

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி இறுத்துக்கொடுக்கவும். சுரம், அதிசாரம் முதலானவை தீரும்,

## 161. இரத்தக்கிராணிக்கு மருந்து

சுரபியின் பாலு மெள்ளினோ டெண்ணெய்ச்
சுகமுட னிரண்டையு மளந்து
சரியதாய் விட்டுக் கையினாற் சாரித்
ததையுமே மூன்றுநாட் கொள்ளு

உரமிகு மிரத்தக் கிராணியுந் தீரு
முன்னவன் கிருபையி னாலே
வரமிகுந் திடுமிற் றஞ்சையில் மானு
மன்புட னுணர்ந்துரைத் ததுவே. (உகூரு)

(இ-ள்)

| | |
|---|---|
| பசுவின் பால் | ½சேர் |
| சுத்தமான நல்லெண்ணெய் | ½சேர் |

இவ்விரண்டையும் நன்றாக ஒன்றாகும்படி ஆற்றி 3 நாட்கள் உட்கொள்ளவும். இரத்தக் கிராணிகள் தீரும்.

## 162. இரத்தக் கிராணிக்கு

திப்பிலிக் கடுக்கா யரத்தையிம் மூன்றுஞ்
சேர்த்துமே பொடியதாய்ப் பொடித்து
ஒப்புடன் தேனிற் குழைத்துநீ கொள்ளு
வோடிடு மிரத்தக் கிராணி
அற்புதக் கைலையான்கிரு பையினா
லளவிலாக் கீர்த்திகள் பெற்றப்
பொற்புள தஞ்சை விபுசர பேந்திரன்
புதுமையா யுரைத்ததிம் முறையே. (உகூச)

(இ-ள்)

திப்பிலி
கடுக்காய்
சிற்றரத்தை

இம்மூன்றையும் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து தேனுடன் குழைத்து உட்கொள்ளவும். இரத்தக் கிராணிகள் தீரும்.

## 163. இரத்தக்கிராணி உளைவிற்கு மருந்து

ஏலமில வங்கமில வங்கப் பத்திரி
யினி துளகி ராம்புயின்னாலுஞ்
சீலமாய் வகைக்கிரண் டேவராகனெடை
சேர்த்திடுதிப் பிலிதானும்
நாலுமே வராக னெடையது கூட்டு
நளினசர்க் கரையதி மதுரம்
கோலபே ரீச்சம் பழமுந்தி ரிப்பழ
முங்குண மதாய் வகை யதுநாலே. (உரு)

வகையதுக் கொவ்வோர் பலமது கூட்டி
வளமுடன் சூரணஞ்செய்து
துகையுடன் நெல்லிக் காயள வெடுத்து
சுப்பிரத் தேனதிற் பிசைந்து
சுகமுடன் காலை யந்தியுங் கொள்ளு
துடர்ந்திடு முளைவது தீரும்
இகல்செய்யு மிரத்தக் கிராணியுந் தீரும்
விதட்சண விபுவுரை யிதுவே. (உசுசு)

(இ-ள்)

ஏலக்காய்
இலவங்கப்பத்திரி
கிராம்பு
இலவங்கப்பட்டை

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்துத் திப்பிலி 4 வராகனெடையும் சேர்த்துக்கொள்ளவும்,

சர்க்கரை
பேரீச்சம்பழம்
அதிமதுரம்
திராக்ஷைப்பழம்

இவைகள் வகைக்கு 4 பலம்

ஷ சரக்குகளனைத்தையும் கல்லுரலிலிடித்து வைத்துக் கொண்டு, இதில் நெல்லிக்காயளவெடுத்துத் தேனுடன் பிசைந்து காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

வயிற்றுவலி, இரத்தக்கிராணிகள் தீரும்.

# 164 கிராணி, குன்மம், வாயுவிற்குச் சூரணம்

ஆடுதீண் டாத பாளைச மூல
மஞ்சட்டிப் பாலினிலிட்டு
நீடிய பாவை யுப்பதிற் கூட்டி
நேர்மையாய்ப் பிசறவும் பண்ணிக்
கூடியபஞ்ச லவணமுஞ் சுக்குங்
குணமிகு மிளகுதிப் பிலியும்
நாடிடு மெவட்சா ரமுஞ்சத்திட் சார
நவச்சார மின்னமுங் கேளே. (உகூஎ)

இன்னமுங் கேள்பெருங் காயமுஞ் சொன்ன
திவையெல்லாஞ் சூரணம் பண்ணி
நன்னய மாகத் கலந்ததை வைத்து
நாடியே வுழமணைக் கரைத்து
வன்னியிற் கொதிக்க வைத்தக டாய
மதிற்கொடு கிராணியுங் குன்மஞ்
சொன்னதல் லாமல் வாய்வது மகலுந்
துரிதமாய் நீயிதைச் செய்யே. (உகூஅ)

(இ-ள்)

ஆடுதீண்டாப்பாளையைச் சமூலமாகக் கொண்டுவந்து சிறு சிறு துண்டுகளாக்கி ஒரு சட்டியிலிட்டு. பசுவின்பால் விட்டு, அதனுடன் சோத்துப்பு கொஞ்சம் சேர்த்துப் பிசறவும். காய்ந்தவுடன், அதனுடன் மறுபடியும்,

இந்துப்பு
கல்லுப்பு
அட்டுப்பு
சோத்துப்பு
கறியுப்பு (கந்தக வாடையுள்ளது)
நவச்சாரம்
சுக்கு
மிளகு
திப்பிலி

யவச்சாரம்
சத்திச்சாரம்
பெருங்காயம்

இவைகளைச் சமனெடை எடுத்து இடித்துச் சூரணித்து வைத்துக்கொள்ளவும். உழமண்ணைக் கரைத்து அதன் தெளிவு நீரைக் கொதிக்கவைத்து அக்கஷாயத்தில் மேற்சொன்ன சூரணம் ஒரு மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொள்ளக் கிராணிகள், குன்மம் இவைகள் தீரும்.

## 165. கிராணி, வாயுவிற்கு உருண்டை

முக்கிய மிளகு சுண்ணாம்பு கல்யாண
முருக்கம்பட் டையுமத னுடனே
சுக்குதிப் பிலிமொட் டடையும்வெள் ளுள்ளி
சொல்லிய மருந்தது வேழும்
பக்குவ மாகச் சரியரைத் துருட்டி
பத்திய மாகவே கொள்ளு
சிக்குகள் செய்யுங் கிராணியும் வாயுவுந்
தீர்ந்திடுஞ் சுகமதுண் டாமே. (உசுசு)

(இ-ள்)

மிளகு
கல்யாண முருங்கப்பட்டை
திப்பிலி
வெள்ளைப்பூண்டு
சுண்ணாம்பு
சுக்கு
ஓட்டடை

இவைகளைச் சமனெடை யெடுத்துச் சூரணஞ் செய்து ஒரு கல்வத்திலிட்டுத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்து மிளகு பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டவும்.

இம்மாத்திரையிலொன்றை யெடுத்துப் பத்தியத்துடன் (உப்பு, புளிப்பு நீக்கி) உட்கொள்ளக் கிராணிகள், வாயு முதலானவை தீரும்.

## 166. கிராணிகள், குன்மம், வாயுவிற்குப் பிரண்டைச் சூரணம்

பிரண்டையை வறுத்துச் சூரணம் பணிதிப்
பிலிபெருங் காயமு மிளகும்
முரமிகுஞ் சுக்கு டன்கருஞ் சீர
மொடுநல்ல சீரகங் கூட
வருந்திடு மசம தாகமோ டேழு
வகையுமே பொய்வரை ரெண்டு
மருந்தெல்லாஞ் சரியா யரைத்துக்சூ ரணித்து
வடியது கட்டிநீ கொள்ளே. (௩௱)

கொண்டவற் றூளும் பிரண்டையின் றூளுங்
குணமதாய்ச் சரிசமன் சேர்த்து
வுண்டிடு மோரி லாகுதல் வெந்நீ
ருடனேயா குதல்கொளு காலை
யண்டிடு கிராணி குன்மமும் வாய்வு
மகன்றிடுஞ் சிவகிரு பையினால்
மண்ட லம்புகழ் தஞ்சையை யாளு
மானுவு முணர்மருந் திதுவே. (௩௰௧)

(இ-ள்)

பிரண்டை 7 பலம் எடுத்து அதனைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி, சட்டியிலிட்டு வறுத்து வைத்துக்கொள்ளவும்.

இதனுடன்,

திப்பிலி
பெருங்காயம்
மிளகு
சுக்கு
கருஞ்சீரகம்
ஓமம்

இவைகளையும் சமனெடுத்து (1 பலம்) சேர்த்து, இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து மோரிலோ அல்லது வெந்நீரிலோ காலையில் உட்கொள்ளவும். கிராணி, குன்மம், வாயு முதலானவை தீரும்.

## 167. கிராணி, கழிச்சல் சகல வாயுவுக்கும் உருண்டை

ஆற்கவும் வசுவா சியைப்பொடி செய்து
அவனியின் குப்பை மேனிச்சாறு
தாக்குடன் வார்த்து வரைத்துமைப் போலத்
தான் குன்றி மணியது போல
வாக்கியோ ருண்டை தயிரினி லாதல்
வல்லெள்ளி னெண்ணெயிலாதல்
தீர்க்கமாய்க் கொள்ளு கிராணியின் கழிச்சல்
தீரும்வாய் வதுமறுந் தானே. (௩௰௨)

(இ-ள்)

ஜாதிப்பத்திரியை நன்கு பொடித்து ஒரு கல்வத்திலிட்டுக் குப்பைமேனிச்சாறுவிட்டு மைபோலரைக்கவும். பின்னர்க் குன்றி மணி நிகருள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். இதனை தயிரிலோ, நல்லெண்ணெயிலோ உட் கொள்ளக் கிராணிகள், கழிச்சல், வாயு முதலானவை தீரும்.

## 168. வாயு, கிராணிக்குச் சூரணம்

சுக்குடன் மிளகு திப்பிலி கடுக்காய்
சூடுள வோமந் தானிக்காய்
பக்குவப் பஞ்ச லவணமுங் காயம்
பரிவுடன் சரிபொடி செய்து
நிற்குமா நெய்யி லாகுதற் றேனி
நீ கொளுக் காலையின் வாயு
முக்கிய நாலு வகைக்கி ராணியும்போ
முதல்வனு ணர்ந்திடு முறையே. (௩௰௩)

(இ-ள்)

சுக்கு
திப்பிலி
ஓமம்

இந்துப்பு
வளையலுப்பு
உழமண் உப்பு
மிளகு
கடுக்காய்த்தோல்
தான்றித்தோல்
கல்லுப்பு
சோத்துப்பு
பெருங்காயம்

இவைகளைச்சரி எடையெடுத்துச் சூரணஞ் செய்து பத்திரப்படுத்தி மூவிரல் கொள்ளுமள வெடுத்து நெய்யிலோ அல்லது தேனிலோ காலை நேரங்களில் உட்கொள்ளவும். வாயு, 4 வகைக்கிராணிகள் முதலானவை தீரும்.

## 169. பற்பல கிராணிகள் தீரத் "திருகடுகாதிச் சூரணம்"

திரிகடு கோஷ்டஞ் சித்திர மூலந்
திப்பிலி மூலம துடனே
உவறெவச் சாரஞ் சவட்சண லவண
மோமமு மதிவிடை யமுமே
பரிவுள சீர கம்பெருங் காயம்
பண்புமிந் துப்புடன் வசம்பு
மரியதோர் வாய்வி ளங்கமும் பன்மூன்
றாகிய வகைமருந் ததுவே. (௩௰௪)

அதுவெலா மரைத்துச் சூரணமாக்கி
அதற்குமேற் சரிகடுக் காய்த்தூள்
இதமுடன் கூட்டிக் கலந்து சுக்காத
விளவெந்நீ ராகுதற் கொள்ளு
நிதமதி காலை வயிறு செரியாம
லேகளி யிரத்தது சார
மிதமிலா மந்தாக் கினிபுளித் தேப்ப
மேகிடு மின்னமுங் கேளே. (௩௰௫)

இன்னமும் வயிறு மூதியே வெகுவா
யேகழி கிறதண்ட வாத
முன்னிய சுவாச காசமுங் கிராணி
மூலமோ டெவ்வியா திகளும்
இன்னவி தத்தால் வந்ததென் றறிந்து
மேகொடு மவிஷதமுந் தானே
மன்னர் கேசரி யாந்தஞ்சை யிற்சரப
மகிபதி யுணர்முறை யிதுவே, (௩௰௬)

(இ-ள்)

சுக்கு
மிளகு
சித்திரமூலம்
யவக்ஷாரம்
அதிவிடயம்
பெருங்காயம்
வசம்பு
திப்பிலி
கோஷ்டம்
திப்பிலிமூலம்
ஓமம்
சீரகம்
சௌவர்சலவணம்
இந்துப்பு
வாயுவிடங்கம்

இவைகளைச் சரியெடுத்து இடித்துச் சூரணிக்கவும், இச் சூரணத்திற்குச் சரியெடை கடுக்காய்த்தூள் சேர்த்து ஒன்று கலந்து வைக்கவும்.

தினந்தோறும் அதிகாலையில் சுக்குக்கஷாயத்துடனோ அல்லது வெதுவெதுப்பான வெந்நீருடனோ உட்கொள்ளவும்.

வயிறு செரியாமை, இரத்தாதிஸாரம், அக்கினி மாந்த்யம், புளித்தேப்பம் முதலானவை தீரும். வயிறு ஊதிக்கழிச்சல், அண்டவாதம், சுவாசகாசம் கிராணிகள், மூலம் முதலான நோய்கள் தீரத்தக்க அனுபான பேதங்களில் கொடுக்கவும்.

# 170. கிராணி, வெள்ளுடைப்புக் கழிச்சலுக்குச் சூரணம்

சாதிக் காய்புளி யங்கொட்டைத் தோலுமா
தளைமர வேரதின் பட்டை
மாதளம் பழத்தோல் விளாம்பிசி னுடனில
வம்பிசி னதிவிடை யமுமே
சாதிப் பத்திரி களிப்பாக்கு மாவிரையுந்
தான்றிக்காய் சீரக முடனே
சீதகூ வளத்தின் குடுக்கையத் திப்பூ
திரிகடு குடநெல்லிப் பருப்பே. (௩௰௭)

பருப்பில வம்பூ சீரகமோமம்
பதினெட்டு வகைமருந் ததையும்
திருத்தமாய்ச் சரிகூட் டியுமிடித் தேவஸ்த்
திரமதால் வடியது கட்டி
வருத்திடு மிரத்த சீதமாங் கழிச்சல்
வந்திடில் வடிதயி றினிலே
ஒருவெரு கடிதூள் தன்னையும் போட்டு
வுடனேநீ கொள்ளுமுள் ளுக்கே. (௩௰௮)

உள்ளது தேனி லொருவெரு கடிதூ
ளுண்டிடக் கிராணியும் போகும்
வெள்ளுடைப் பாக வயிறுகழி கிறது
மேகிடும் புளிப்புடன் கைப்புந்
தள்ளிடு மிந்தற் றரணியி லுயர்ந்த
தஞ்சையம் பதியதை யாண்டு
அள்ளிய செம்பொன் அந்தணர் பாவ
லர்க்கருள் தஞ்சைமா னுரையே. (௩௰௯)

(இ-ள்)

சாதிக்காய்
மாதளை மரவேர்ப்பட்டை

விளாம்பிசின்
அதிவிடையம்
களிப்பாக்கு
தான்றித்தோல்
வில்வப்பழ ஓடு
சுக்கு
மிளகு
இலவம்பூ
ஓமம்
புளியங்கொட்டைத்தோல்
மாதளைஓடு
இலவம்பிசின்
சாதிப்பத்திரி
மாம்பருப்பு
சீரகம்
அத்திப்பூ (இளம்பிஞ்சு)
திப்பிலி
நெல்லிப்பருப்பு
சீரகம் (கருஞ்)

இச்சரக்குகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து பத்திரப்படுத்தவும்.

இரத்தக்கழிச்சல், சீதபேதி இவைகளுக்கு மூவிரல் கொள்ளுமளவு சூரணம் எடுத்து தயிரில் உட்கொள்ளவும்.

வெருகடி தூயெடுத்துத் தேனில் குழைத்துச் சாப்பிட வெள்ளை வெள்ளையாகப் போகும் கழிச்சல் தீரும். கைகண்டது.

பத்தியம்:-

புளிப்புச் சுவையுள்ள பதார்த்தங்களையும், கைப்புச்சுவையுள்ள பண்டங்களையும் நீக்கவும்.

## 171. கிராணிக்கு வாய்வுக்குச் சுக்காதிக் கிருதம்

சுக்கது பலமா றாயிலின் பட்டை
  தூக்கது பலமுமா றிதுரெண்
டொக்கவுந் தட்டித் தண்ணியை விட்டொன்
  றொன்றதாய்க் காய்ச்சியே யிதற்குக்
கற்கமு மத்தித் திப்பிலி யுடன்வெண்
  காரமு மதிவிடை யமுமே
பக்குவ மாமிந் துப்புடன் மஞ்சள்
  பணவிழா லரிசியோ மமுமே. (௩௧0)

ஓமமோ டேதிரி கடுகயெட்டு
  மொவ்வொரு கழஞ்சது கூட்டி
நேமமா யரைத்து நல்லதோர் பசுவி
  நெய்யதும் நாழியும் விட்டு
மேமனத் தோடே யெரித்துநற் பதத்தில்
  மென்மையா யெரித்தொரு கரண்டி
நீமுனி வாகக் கொள்தினசரி
  நீங்கிடுங் கிராணிவாய் வதுவே. (௩௧௧)

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | 6 பலம் |
| ஆயில்யப்பட்டை | 6 பலம் |

இவ்விரண்டையும் ஒன்றிரண்டாக இடித்து 8 மடங்கு தண்ணீர்விட்டு அடுப்பின்மேல் வைத்து எட்டிலொன்றாகு மட்டு மெரித்து வடிகட்டிக் கொள்ளவும். இதனுடன்,

யானைத்திப்பிலி
அதிவிடையம்
மஞ்சள்
ஓமம்
திப்பிலி
வெங்கார
இந்துப்பும்

விழலரிசி
சுக்கு
மிளகு

இவைகளை வகைக்கு 1¼ வராகனெடை வீதமெடுத்துத் தண்ணீர் விட்டரைத்துப் பசுவின் நெய் 1 படி விட்டு ஷை கஷாயத்தையும் கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதில் ஒரு கரண்டியளவெடுத்துத் தினசரி 2 வேளை உட்கொள்ளவும்.

கிராணிகள், வாயு முதலானவை தீரும்.

## 172. கிராணிக் கடுப்புகளுக்குக் கடுகாதி கிருதம்

கடுகுமுன் னாழிமுன் னாழிமோ ரினிலே
 கணக்கதா யூறவும் போட்டு
திடமுட னஞ்சா நாடனி லிறுத்துத்
 திட்டமோ ரதையொன்றில் வைத்து
அடவுள வடுப்பிற் சட்டியை வைத்து
 வனலதை யிட்டெரித் துடனே
கடுகதைப் போட்டு நினைவது வாகக்
 கரண்டியி னால்வறுத் திடுமே. (௩௬௨)

வறுத்திடு மோரைத் தெளித்ததைத் தெளித்தே
 வக்கடு கினிலு மோர் சுவற
முருகிடா ததையும் வறுத்துசுக் குத்தோல்
 முனிவுடன் போக்கியே சரியாய்
வருத்திடு சுக்கு மிரண்டையுமே நன்றாய்
 மாவது போல்பொடி செய்து
திருத்தமாய் வைத்து வெந்தயம் வசுவா
 சிக்கிராம் புடனினங் கேளே. (௩௬௩)

இன்னமும் வெள்ளைக் குங்கிலி யத்தோ
 டேலமு மசமதா கமுமே
வன்னமாம் நாகப் பூச்சியி னூடே
 வன்பெருங் காயமோ ரெட்டும்

உன்னித வம்மி தனிற்பொடி யாக்கி
யுற்பன கோரக்கர் மூலி
தன்னிலே நாழி யீரவெங் காயந்
தன்னிமே நாழியுங் கூட்டே. (௫௧௪)

கூட்டிடு பழச்சா றதுவுமுன்னாழி
கொண்டபின் மருந்தொரு கழஞ்சு
கூட்டியே பிசைந்து ரவிதனில் வைத்துக்
கொண்டெடுத் திடுமதன் மேலே
நாட்டமா யாநெய் யுரியது விட்டுநன்
றாகவே விட்டதை யிறக்கி
யூட்டிடு வெருக டிப்பிர மாண
முற்பன கிராணியு மறுமே. (௫௧௫)

உற்பனச் சுக்கும் வேப்பந்தண் டிரண்டு
முழக்கதாய்க் காய்ச்சிமேல்க் கொள்ளு
செப்பிய படிக்கு நோயெலாந் தீருஞ்
சேருப்பு மாத்திரங் கூட்டு
தப்பிதப் புகையி னிலைபுளி தவிரு
சதாசிவன் கிருபையி னாலே
அற்புதத் தஞ்சை மானகர் சரப
அண்ணல்சொ லுன்னித மாமே. (௫௧௬)

(இ-ள்)

கடுகு — 3 படி (சின்னபடி $1\frac{1}{2}$)

பசுவின்மோர் 3 படி விட்டு ஊறவைத்து 5-வது நாளன்று அதை இறுத்து வைத்துக்கொண்டு கடுகை மாத்திரம் ஒரு வெறும் சட்டியிலிட்டு வறுத்துக்கொள்ளவும். பின்னர் இறுத்த மோரைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளித்து அக்கடுகில் நன்கு சுவறுமட்டும் முறுகாமல் வறுக்கவும். இம்மாதிரியே சுக்கையுஞ் சமமெடுத்து மேல்தோல் போக்கி இளவறுப்பாக வறுத்துக் கொள்ளவும். இவ்விரண்டையும் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்து,

வெந்தயம்
கிராம்பு
ஏலக்காய்

நாக்குப்பூச்சி
ஆடாதோடைவேர்
வெள்ளைக்குங்கிலியம்
ஓமம்
பெருங்காயம்

இவைகளையும் சமனெடுத்து இடித்துச் சூரணஞ் செய்யவும். பின்னர் கஞ்சாயிலை $1\frac{1}{4}$ வராகனெடையுடன் ஈரவெங்காயச் சாறு 1 படியும், எலுமிச்சம்பழச்சாறு 3 படியும் சேர்த்து, அபின் $1\frac{1}{4}$ வராகனெடையுங்கூட்டி முன்சொன்ன சூரணத்தையுமிட்டுப் பிசைந்து வெயிலில் வைக்கவும். நன்கு காய்த்தவுடன் நெய் $\frac{1}{2}$ படி விட்டு வறுத்து இறக்கவும்.

இச்சூரணத்தில் ஒரு வெருகடியளவெடுத்து உட்கொள்ளக் கிராணிகள் தீரும். இதற்கு சுக்கு, வேப்பந்தண்டு இவ்விரண்டையும் தட்டிக் கஷாயம் வைத்து அனுபானமாக உட்கொள்ளவும்.

பத்தியம்:

உப்பு சேர்த்துக்கொள்ளலாம். புளி புகையிலை இவைகளை நீக்கவும்.

குறிப்பு:—

62 ரெ. சுவடியில் அனுபானத்துடன் ''சாரணைவேரும்'' சேர்க்கப்பட்டிருக்கிறது.

## 173. அந்திரக் கிராணிக்குப் புளியாரை நெய்

அந்திரக் கிராணி வந்திடிலே புளி
யாரைநெய் யொன்றுரைப் பேன்கேள்
சுந்திரப் புளியா ரையின்ரசங் குறுணி
துடிமிகுந் தயிரும்நா னாழி
தொந்த நெய்யிரு நாழியுங் கலந்து
சொற்பெருங் காயஞ்சா திக்காய்
இந்துப்பு திப்பிலி மூலமுங் கிராம்பு
மிலவங்க மதிவிடை யமுமே. (௩௧௭)

அதிவிடை யந்திரி கடுகுவெட் பாலை
யரிசியோ டேயவட் சாரம்
இதமுள மாதனம் பூமர மஞ்ச
ளிவ்வகை பன்னிரண் டதிலே
சதிருட னொவ்வோர் வகைக்கரைக் கழஞ்சு
தானரைத் தேகலந் தடுப்பில்
லதைவும்வைத் தெரித்துப் பக்குவந் தன்னி
லன்புடன் வடித்திடு வாயே. (௩௧௮)

வடித்தநெய் யதனிற் துட்டெடை கொள்ளு
மண்டல மரையது தானே
துடித்திடு மந்திரக் கிராணியுந் தீருஞ்
சுகமதா மிதற்குப்பத் தியங்கேள்
கடுத்தபு கையிலை புளியுமே தள்ளு
கடல்கள் சூழ் புவியினிற்றானே
யடுத்தவர் தமக்கு மன்புசெய் சரப
யண்ணலு முணரும்நோ யிதுவே. (௩௧௯)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| புளியாரைச் சமூலச்சாறு | — | 1 மரக்கால் |
| தயிர் | — | 4 படி (பெரியபடி 1) |
| நெய் | — | 2 படி (பெரியபடி $\frac{1}{2}$) |

இவைகளை யொன்று கூட்டி,

| | |
|---|---|
| பெருங்காயம் | சாதிக்காய் |
| இந்துப்பு | திப்பிலிமூலம் |
| கிராம்பு | இலவங்கப்பட்டை |
| அதிவிடையம் | சுக்கு |
| திப்பிலி | மிளகு |
| வெட்பாலையரிசி | எவச்சாரம் |
| மாதளம்பூ | மரமஞ்சள் |

இவைகளை வகைக்கு $\frac{1}{2}$ கழஞ்சு ($\frac{5}{8}$ வராகனெடை) வீத மெடுத்து ஷை சாறு விட்டு நன்றாக அரைத்து ஷை சாறு கலந்து

நெய்யுடனே சேர்த்துப் பதத்தில் இறக்கி வடிகட்டிவைத்துக் கொள்ளவும்.

இதில் ஒரு துட்டெடையெடுத்து உட்கொள்ள அந்திரக் கிராணிகள் தீரும்.

**பத்தியம்:—**

புளி புகையிலை முதலானவைகளைத் தள்ளவும்.

குறிப்பு:—

6 கழஞ்சு என்று 68 நெ. சுவடியில் உள்ளது.

## 174. கிராணியினால் சீதமும் இரத்தமும் கழிகிறதற்கு மருந்து

சுக்கதி விடையம் புளியினிற் கொட்டைத்
தோலில வம்பிசின் மிளகு
பிக்கிலா லவங்கம் பருமரப் பட்டைதிப்
பிலியுமாங் கொட்டைமா வடுவும்
பக்குவக் கோரைக் கிழங்கபின் கழற்சிப்
பருப்புமூ மத்தையின் விதையும்
சக்கிய வில்வ வேர்விளாம் பிஞ்சுஞ்
சாதிக்காய் சடைகஞ்சா விலையே. (கூஉ0)

இலைபெருங் காரைப் பட்டைநீர்ப் பூலா
வின்பட்டை வேப்பம்பட் டையுமே
தலம்வளர் கீழ்காய் நெல்லியி னிலையுந்
தன்னுட னத்தியின் பிஞ்சு
நலமுட னிருபன் மூன்றுள மருந்தும்
நாடியே சரியதாய்ச் சேர்த்துக்
கலுதனில் நறுக்கி நல்லதோர் மாதுளங்
காய்விரை வாங்கியதுள்ளே. (கூஉக)

அதனுளே யடைத்துச் சாணியைப் பரப்பி
 யனலதிற் புடமது போட்டு
யிதமுட னரைத்துச் சுண்டைக்கா யளவு
 மேயுண்டை செய்துலர்த் தியுமே
ததியது வடித்திட் டதனிலோ ருண்டை
 தான்கொடு கிராணியி னாலே
வதிவித மாகச் சீதமு மிரத்த
 மாக்கழி யிறதும்விட் டிடுமே. (௩உ௩)

(இ-ள்)

சுக்கு
புளியங்கொட்டைத்தோல்
மிளகு
பெருமரப்பட்டை
மாம்பருப்பு
கோரைக்கிழங்கு
கழற்சிப்பருப்பு
வில்வவேர்
சாதிக்காய்
பெருங்காரைப்பட்டை
வேப்பம்பட்டை
அத்திப்பிஞ்சு
அதிவிடையம்
இலவம்பிசின்
கிராம்பு
திப்பிலி
மாவடு
அபின்
ஊமத்தைவிதை
விளாம்பிஞ்சு
கஞ்சாயிலை
நீர்ப்பூலாப்பட்டை
கீழாநெல்லியிலை

இவைகளைச் சமனெடை யெடுந்து இடித்துச் சூரணஞ் செய்து ஒரு மாதளம் பழத்தைக் குடைந்து விதைகளை

நீக்கி அதனுள் அடைக்கவும். பின்னர் சாணி பொதிந்து காய்ந்தபின் புடம் போடவும். பின்னர் மாதளம்பழத்தை எடுத்துச் சாம்பலை நீக்கிவிட்டுக் கல்வத்திலிட்டுத் தண்ணீர் விட்டு நன்றாக அரைத்துச் சுண்டைக்காயளவுள்ள மாத்திரை களாக உருட்டி வெயிலில் உலர்த்திவைக்கவும்.

ஒரு உருண்டை தயிர்தெளிவினுடனே கொடுக்கவும். சீதபேதி இரத்தபேதி நிற்கும்.

## 175. வலி கிராணிக்குக் குழம்பு

இரதமிந் துப்பு கெந்தக மூன்று
மேயொரு வகைக்குநாற் கழஞ்சு
அரப்பொடி வெற்றிலைச் சாறுசெருப் படிச்சா
றதுவும் வல்லாரைச் சாறதுவும்
தரையினில் வளரு முச்சித கையாந்
தகரையுங் காட்டுமல்லி கைச்சா
ருரையிரு மூன்றில் வகைக்கொரு சேரு
முறுமையாயிடித்தெடுத் திடுமே. (௩௨௩)

எடுத்து வெவ்வேறு பாத்திர மதனிலே
வைத்து புங்கம்வேர்ப் பட்டை
கடுகுட நாயின் பட்டையு மிளகுங்
கருவேம்பின் பட்டையி னுடனே
எடுத்துரை மருந்தி லஞ்சிலோர் வகைக்கு
மிருகழஞ் செடுத்துமே கொண்டு
தடித்தம் மிதனிலே முன்னுநாம் சொன்ன
சாறெலாம் விட்டரைத் திடுமே. (௩௨௪)

விட்டரைத் துக்கொள் செருப்படிச் சாற்றில்
மின்ரசந் தன்னையே முறித்து
சட்டமாய்ப் போட்டு யெருமைமோர் நாழி
தான்விடு நெய்யொரு சேரு
மிட்டிடு மெள்ளி னெண்ணெயோர் சேரு
மிதுகளெல் லாங்கலந் துக்கொண்
டட்டியில் லாம விரவியில் வைத்து
அன்று போய் மற்ற நாற் றானே. (௩௨௫)

தானதை யோர்களிப் பாக்கள வுண்ணு
சந்தியுங் காலையுந் தானே
வூனமே மிகும்பு கையிலை யும்புளி
யுமுண்டிட மனம்நினை யாதே
ஈனமாம் வலியின் கிராணியுந் தீரு
மெழில்மிகுந் தஞ்சைமா நகரிற்
றானமுந் தன்ம மிகுதியாய்ச் செய்யுஞ்
சரபபூ பதியுணர் குழம்பே. (கூஉகூ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுத்தி செய்த பாதரஸம் | — | 5 வராகனெடை |
| ,, கெந்தகம் | — | ,, |
| ,, அரப்பொடி | — | ,, |
| பொரித்த இந்துப்பு | — | ,, |

இவற்றைக் கல்வத்திலிட்டு நன்றாக அரைத்துக்கொள்ளவும். துளிர் வெற்றிலைச்சாறு, செருப்படிச்சாறு, வல்லாரைச் சாறு, கையாந்தகரைச்சாறு, காட்டு மல்லிகைச்சாறு. இவைகளை வகைக்கு 1 சேரெடுத்து வெவ்வேறு பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும். பின்னர்,

| | |
|---|---|
| புங்கம் வேர்ப்பட்டை | கடுகு |
| ஆயில்யப்பட்டை | * மிளகு |
| கருவேலம்பட்டை | |

இவைகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்து ஷை சாறுகளில் ஏதேனுமொன்றை விட்டு நன்றாக அரைத்துப் பின்பு சாறுகளைச் சேர்க்கவும். முதலில் தயார் செய்த கஜ்ஜலியில் செருப்படிச்சாறு விட்டு முறித்துக்கொண்டு, எல்லாவற்றையுமொன்றுகலந்து எருமை மோர் 1 நாழி, பசுவின் நெய் 1 சேர் நல்லெண்ணெய் 1 சேர் இவைகளையுஞ் சேர்த்து வெயிலில் வைக்கவும். மறுநாளும் அவ்வாறே செய்து, சாறுகள் வற்றிய பின், குழம்பு பதத்தில் ஒரு களிப்பாக்களவெடுத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

புகையிலை, புளி இவற்றை நீக்கவும்.
வலியுடன் கூடிய கிராணிகள் தீரும்.

---

* மிளகுக்குபதில் 68 நெ. சுவடியில் சுக்கு காணப்படுகிறது.

## 176. சோபக் கிராணிக்கு லேகியம்

சுக்குவெட் பாலை கொடிவேலி வேர்புறத்
    தோல்கரு வேப்பிலை யிந்துப்
பக்குவ மிளகு கழற்கொடி யுள்ளின்
    பருப்புயிஞ் சியுங்கருஞ் சீர
மொக்கவுஞ்சீர கம்பெருங் காய
    மொடுகடுக் காயும்நேர் வாள
சீகிலா சீனாக் கற்கண்டு நல்ல
    திப்பிலி யசமதா கமுமே. (௩உ௪)

அசமதா கத்தோ டீரெட்டு வகையு
    மளவுட னிருபலங் கூட்டி
இசைவுள வம்மி தன்னிலே யரைத்து
    யெண்ணெயு முழக்குநெய் யுழக்கு
வசம்பெறப் புகட்டி யடுப்பினிற் றானே
    வைத்துநீர் சுவறவுங் கிண்டி
சுசியுடன் கழற்சிக் காயள வுண்ணு
    சோபகி ராணியும் மறுந்தானே. (௩உ௫)

(இ-ள்)

சுக்கு
கொடிவேலி வேர்ப்பட்டை
இந்துப்பு
கழற்கொடிப் பருப்பு
கருஞ்சீரகம்
கடுக்காய்த் தோல்
சீனாக்கற்கண்டு
ஓமம்
வெட்பாலையரிசி
கருவேப்பிலை
மிளகு
இஞ்சி
பெருங்காயம்
சுத்தி செய்த நேர்வாளம்

திப்பிலி
சீரகம்

இவைகளை வகைக்கு 2 பலங்கள் வீதமெடுத்து நன்றாக அரைத்து,

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | — ஒரு உழக்கு |
| நெய் | — உழக்கு |

இவைகளை ஒன்று சேர்த்து, சிவக்க வறுத்து 2 மடங்கு வெல்லம் சேர்த்து லேகியம் செய்து வைத்துக்கொள்ளவும்.

இதில் ஒரு கழற்சியளவெடுத்து உட்கொள்ளச் சோபக் கிராணிகள் தீரும்.

## 177. வயிறு கழிச்சலுக்குச் சாதிலிங்காதிச் சூரணம் (வெட்டுப்பெருமாள் பற்பம்)

சாதிலிங் கங்கிராம் பதுவுங்கல் நார்குரா
சாணியோ மம்பொரிக் கார
சோதியாங் காந்த முடனேயா வாரை
சுட்டவே ரக்கிராக் காரம்
யேதுவா மசம தாகங்கல் மதத்தோ
டீரைந்து வகைக்கிரண் டுபலம்
நீதடைக் கட்டி மூன்றுநாள் ரவியி
நேருடன் காயவும் வையே. (கூஉகூ)

வைத்ததையம்மி தன்னிலே யரைத்து
வடியது கட்டிநன் றாகச்
சுத்தமாஞ் செம்பின் பாத்திரத் தடைத்து
சுகமுள தேனதிற் றானே
வைத்திடு பணவி னெடையொன்று தானும்
வயிற்றினிற் கழிச்சலுந் தீரு
மித்தர ணியிலே புகழ்பெருஞ் சரபோ
சேந்திர னுணருசூ ரணமே. (சஉஎ)

(இ-ள்)

சுத்தி செய்த சாதிலிங்கம்
கிராம்பு
சுத்தி செய்த கல்நார்
குராசாணி ஓமம்
பொரிக்காரம்
சுத்தி செய்த காந்தம்
ஆவாரம் வேர் (சுட்டது)
அக்கிராக்காரம்
ஓமம்
கல்மதம்

இவைகளை வகைக்கு 2 பலங்கள் வீதமெடுத்து வெயிலில் 3 நாட்களுக்குக் காயவைக்கவும். பின்னர் இவைகளை இடித்துச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இவ்வாறு தயாரித்த மருந்தை, ஒரு செம்புப் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும். இதில் 3 குன்றியளவு தூளெடுத்துக் குழைத்து உட்கொள்ளவும். வயிற்றுக்கழிச்சல் தீரும்.

## 178. வயிறு கழிச்சலுக்கு மருந்து

அடவியின் *சூளுவை வடக்கத்தின் வேர்மே
லதிற்புரோ ணியையுஞ் சீவி
திடமுட னரைத்து யெருமையின் றயிரின்
றினங்கொளுங் காலையிற் றானே
துடியுள வயிற்றின் கழிச்சலுந் தீர்ந்து
சுகமதாஞ் சிவகிறு பையினால்
படர்ந்திடுங் கீர்த்தி பெறுசர பேந்திரன்
பண்புட னுரைமருந் திதுவே. (கூஉஅ)

(இ-ள்)

சூளுவைச்செடியின் வடக்கு நோக்கிச்செல்லும் வேரின் மேல்தோலை எடுத்து எருமைத்தயிர்விட்டு நன்றாக அரைத்து 3 தினங்கள் அதிகாலையில் உட்கொள்ளவும். கழிச்சல் நிற்கும்.

* சூளுகை = யானைச்செவியடி என்று அகராதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## 179. வயிறு கழிச்சலும், வயிறு கழிச்சலுடன் கூடிய ஜ்வரத்திற்கும உருண்டை

திப்பிலி கிராம்பு சுக்குவில் வப்பி
சினிலவம் பிசின பினி
அற்புதச் சீரகங்கருஞ் சீர
மசமதா கமுடனிந் துப்பு
தப்பில காட்டாத்திப் பூவுமாங் கொட்டை
தன்னுட பருப்புயீ ரெட்டுஞ்
செப்பிய படிக்குச் சரியதாய்க் கூட்டிச்
சேர்த்தரை மோரினிற் றானே. (௫௨௧)

மோரினி லரைத்துச் சுண்டவே காய்ச்சி
முருகிடா ததையிறக் கிக்கொள்
நேருள சுண்டைக் காயள வுருட்டி
நிழலுலர்த் தியதை யுலர்த்தி
ஒருண்டை தயிர்பந் நீரிலே கொடுக்க
வொழுகிடுங் கழிச்சலுந் தீருங்
கூறுள சுரத்தின் குணமுமுண் டானால்
கூறுவே னிளவெந்நீர் தனிலே. (௫௫௰)

இளவெந்நீர் தனிலோ ருண்டையைக் கரைந்து
மேகொடு காலையந் தியுமே
சலமிகுஞ் சுரமும் விடும்புளிதள்ளு
சாதக மாய்சவுக் கியமாம்
வளமிகுந் தஞ்சை நகர்தனை சக்கிர
வர்த்திநன் னீதிகள் செலுத்து
மளமிகு மலங்க லணசர பேந்திரள்
மனமுணர்ந் திடுமருந் திதுவே. (௫௫௧)

**(இ-ள்)**

திப்பிலி
சுக்கு
இலவம்பிசின்
சீரகம்

ஓமம்
காட்டாத்திப்பூ
கிராம்பு
வில்வப்பிசின்
அபின்
கருஞ்சீரகம்
இந்துப்பு
மாங்கொட்டைப் பருப்பு

முதலான சரக்குகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துச் சூரணித்து மோருடனரைத்துச் சுண்டக்காய்ச்சவும். அதிக மாய் முறுகக்கூடாது. பின்னர் இதைக் கல்வத்திலிட்டு நேக அரைக்கவும். இவைகளைச் சுண்டைக்காயளவுள்ள மாத்திரை களாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இதிலொரு உருண்டையை யெடுத்துத் தயிர் தெளிவிலோ அல்லது பந்நீரிலோ உட்கொள்ளக் கொடுக்கவும்.

அதிகமான கழிச்சல் நிற்கும். சுரத்துடன் கூடியிருந்தால் இதில் ஒரு உருண்டையை இளவெந்நீரில் கரைத்துக் காலை, மாலை உபயோகிக்கவும்.

**பத்தியம்:-**

புளி நீக்கவும். குணமுண்டாகும்.

குறிப்பு:-

செய்யுளில் 16 சரக்குகள் என்று கூறப்பட்டிருப்பினும் 12 சரக்குகளே உள்ளன.

## 180. திரி சுரத்திற்கு மாத்திரை (அனுபானம வெவ்வேறு)

இரதமு மெலிப்பா ஷாணமுங் காந்த
மியல்மனோ சிலைநவச் சாரம்
முரமிகுங் கெந்த கமரிதார
மொவ்வொரு கழஞ்சு கூட்டி

விரகுடன் சுத்தி பண்ணியே கொண்டு
மேவுமூ மத்தைச்சாற் றாலுந்
தரைவளர் மிதிபாகி லைரசத் தாலுந்
தானரை மையது போலே. (௫௫௨)

மையதா யரைத்து வுளுந்துபோ லுருட்டி
வகையுட னிழலுலர்த் துலர்த்து
செய்யநற் பரணி தன்னிலே யடைத்துத்
தீதுறு வாதத்தின் சுரத்துக்
கையுறு மிஞ்சிச் சாற்றினில் பித்தங்
கனத்திடு சுரமது வானால்
துய்யசர்க் கரையிற் கொடுத்திடு சேத்தும
சுரத்திற்குத் திப்பிலி தேனே. (௫௫௫)

தேனதிற் கொடுநீ நாலுநாள் மாற்று
சேர்சுர மதுக்காடா தோடை
தானதிற் சாற்றிற் கொடுதிரி சுரமுஞ்
சந்திரன் முன்னிரு ளதுவாம்
வூனமாஞ் சுரத்தி னுளவறிந் தேநீ
யுண்டிடு பத்தியந் தானே
ஞானவான் றஞ்சை நகர்சர பேந்திர
னன்புட னுணர்முறை யாமே. (௫௫௪)

(இ-ள்)

சுத்திசெய்த பாதரஸம்
,, எலிப்பாஷாணம்
,, காந்தம்
,, மனோசிலை
,, நெல்லிக்காய் கெந்தகம்
,, அரிதாரம்
பொரித்த நவச்சாரம்

இவைகளை வகைக்கு 1½ வராகனெடை யளவெடுத்துக் கொள்ளவும். ஒரு சுத்தமான கல்வத்தில் இரசத்தையும், கெந்தகத்தையும் இட்டு நன்றாகக் கருப்பாகும்வரை அரைத்துக்கஜ்ஜலியாக்கிப்பின்னர் மற்ற சரக்குகளைச்சேர்த்து ஊமத்தையிலைச்

சாறுவிட்டு அரைக்கவும். மறுநாள் மிதிபாகல் இலைச்சாறு விட்டு நன்றாக மைபோலரைக்கவும். இம்மருந்தை உளுந்தள வுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

இதனையொரு ஜாடியில் பத்திரப்படுத்தி வாத சுரமாகில் இஞ்சுச் சாற்றிலும், பித்த ஜ்வரமானால் சர்க்கரையுடனும், கப ஜ்வரத்தில் திப்பிலிச்சூரணம், தேன் இவைகளிலும் கொடுக்கவும். முறை ஜ்வரத்திற்கு ஆடாதோடைச் சாற்றில் கொடுக்கவும்.

பத்தியமாயிருக்கவும்.

குறிப்பு:—

பால் சாதம், முருங்கைக்காய்ச்சாறு, சுரையிலைச்சாறு இவை சேர்க்கலாம்.

## 181. கிராணிக் கழிச்சல், கிராணிக்கழிச்சலுடன் கூடிய ஜ்வரம் இவைகளுக்கு

மாதளையோடு பெருமரப் பட்டை
மாங்கொட்டைக் கிராம்பதி விடையம்
சாதக வில்வச் சதைதிரி கடுகு
சாஸ்திர வேதியிந் துப்பு
சாதிபத் திரியும் பொன்முசுட் டையின்வேர்
தக்கோல மிலவங்கப் பட்டை
சாதிக்காய் புளியங் கொட்டைசீ ரகமுந்
தரைவளர் கோரையின் கிழங்கே. (கூகூரு)

கோரையின் மூலந் துவர்காசுக் கட்டி
குணமுள துடவையாத் திப்பூ
சேரிந்த பத்தொன் பதுவகை மருந்துத்
திறமுடன் சரியதாய் நிறுத்துச்
சீருள சட்டி யடுப்பினில் வைத்துச்
சிவக்கவும் லறுத்ததைப் பொடித்து
சீலையால் வடிகொண் டுச்சித மான
சிமிழ்தனில் வைத்திடு வாயே. (கூகூசு)

வைத்தொரு காசி னெடைகொம்புத் தேனில்
வகையுட னிரண்டுவே ளையுந்தான்
தத்துவ மாய்க்கொள் கிராணியின் கழிச்சல்
நாடிய சுரமகன் றிடுமே
சுத்தமாய்ச் சுரமில் லாவிடிற் றயிரிற்
றோய்த்தகைக் கொடுமதி சார
மத்திடு மாதி சிவன்கிரு பையினா
லன்புள தஞ்சைமா னுரையே. (௩௩௭)

(இ-ள்)

மாதளை ஒடு
மாங்கொட்டைப்பருப்பு
அதிவிடயம்
சுக்கு
பெருமரப்பட்டை
கிராம்பு
வில்வச்சதை
திப்பிலி
மிளகு
இந்துப்பு
பொன்முசுட்டை வேர்
இலவங்கப்பட்டை
புளியங்கொட்டைத் தோல்
கோரைக்கிழங்கு
காட்டு ஆத்திப்பூ
சாஸ்திர வேதி
சாதிப்பத்திரி
தக்கோலம்
சாதிக்காய்
சீரகம்
காசுக்கட்டி

இவைகளை வகைக்கு ½ பலம் வீதமெடுத்துச் சிறுசிறு துண்டுகளாக்கிச் சிவக்க வறுக்கவும். இவைகளைக் கல்லுரலி லிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும்.

இதில் ஒரு காசளவு சூர்ணம் எடுத்துத் தினம் 2 வேளை கொம்புத் தேனில் உட்கொள்ளவும்.

கிராணிக்கழிச்சல், ஜ்வரம் முதலானவை தீரும். ஜ்வரம் இல்லாவிடில் தயிருடன் இச்சூரணத்தைக் கொடுக்கவும். அதிசாரமும் தீரும்.

## 182. கிராணிக் கழிச்சலுக்கு "இந்துப்பாதி உருண்டை"

இந்துப்பு கடுக்காய் தான்றிக்காய் கஞ்சா
யிலவினிற் பிசினபின் சுக்கு
கந்தச்சா திக்காய் குராசானி யோமங்
கிராம்புதிப் பிலிசா ரடையும்
விந்தையா மசம தாகம துடனே
விதபன் மூன்றும்ம ருந்துந்தான்
சந்தவெள் ளெருக்கின் சாறுவார்த் தரைத்துத்
தானுண்டை செய்யும்பாக் களவே. (௬௬அ)

பாக்களவு வுண்டை செய்துலர்த் தியுநற்
பக்குவம் றயிறிலோ ருண்டை
தாக்கிடு காலை கிராணியின் கழிச்சற்
றான்விடு மிதற்குப்பத் தியமே
தேக்கிடற் றயிருஞ் சேர்த்துட னுண்ணு
தீர்ந்திடுஞ் சிவகிரு பையினால்
பாக்கிய யோக்கிய சௌரிய மிகுந்த
பார்த்திபன் றஞ்சைமா னுரையே. (௬௬௯)

(இ-ள்)

பொரித்த இந்துப்பு
கடுக்காய்த்தோல்
இலவம்பிசின்
சாதிக்காய்
கிராம்பு
சாரடை வேர்

சுத்திசெய்த அபினி
தான்றிக்காய்த் தோல்
கஞ்சா (சுத்தியானது)
சுக்கு
குராசானி ஓமம்
திப்பிலி
ஓமம்

இவைகளைச் சரியெடையெடுத்துச் தூள்செய்து கல்வத்தி லிட்டு வெள்ளெருக்கஞ் சாறுவிட்டு நன்கு அரைத்து பாக்களவுள்ள உருண்டைகளாகச் செய்யவும். இதிலொரு உருண்டையை எருமைத் தயிருடன் காலையில் உட்கொள்ளவும்.

கிராணிகள், கழிச்சல் முதலானவை தீரும்.

பத்தியம்:—

தயிர் சாதம் உட்கொள்ளவும்.

## 183. கிராணி, அதிசாரத்தினால், பலவிதமாய்க் கழிச்சலுக்கு மருந்து

முட்டையை யுடைத்தாற் போற்கரி போலு
முளைத்தபச் சிலையது போலுங்
கெட்டபால் போலுந் திறுகின தேங்காய்க்
கிணையயிறு கழிகிற தற்குச்
சட்டமா மருந்தொன் றுண்மைய தாகச்
சாற்றுவே னற்புத மாகத்
திட்டமா மீரவெங் காயமு மொன்று
சிவந்திடு மவரையி னிலையே. (௩சமி)

இலையுமுத் தாமணி யிலையுங்கூட்டி
யெருமையின் வெண்ணெயு முழக்கு
பலமுள இருப்புக் கரண்டியிற் போட்டுப்
பாங்குட னெரித்ததை யிறக்கி

நலமுள மங்கைப் பாலதிற் குத்தி
நாலுநா ளிரண்டு வேளையுங் கொள்
சொல்லுமந்த நோயும் பருதிமுன் பனிபோற்
றொத்திடு மிதுவும்நீ செய்யே. (ருசக)

(இ-ள்)

முட்டை உடைந்து வெண்கரு வெளிவரல் போலும், கரு நிறமாகவும், பச்சிலையைப்போல் பசுமையாகவும், முறிந்த பால் போலும், தேங்காய்த்திறுகல் போலும் வயிறு கழிந்தால் அதற்கு மருந்து.

| | |
|---|---|
| ஈர வெங்காயம் (பூண்டு) | ஒன்று |
| சிவந்த அவரையிலை | 5 |
| உத்தாமணி இலை | 5 |
| எருமை வெண்ணெய் ஒரு உழக்கு | |

இவைகளை ஒரு இரும்புக்கரண்டியிலிட்டு நெருப்பில் வைத்து நன்கு வவக்கவும். பின்னர் முலைப்பால் விட்டு கசக்கி உட்கொள்ளவும்.

இவ்வாறு 4 நாட்கள் இரண்டுவேளையிலும் உட்கொள்ளவும். முற்கூறிய நோய்கள் தீரும்.

## 184. கழிச்சலுக்கு "விடத்தேரி எண்ணெய்"

விடத்தே ரின்பட்டை நரிப்பயத் திலைகுரு
விச்சிலை வறட்சுண்டி நாவல்
லடம்புபஞ் சாங்கம் பாலையுங் கருவே
லம்மான்பச் சரிசி வறட்பூலா
அடர்சிறு புள்ளடி யோரிலைத் தாம
ரையிலை நீர்பூலா விலையுந்
திடமுள வப்பைக் கிழங்குடன் பதிநால்
செப்பிய வகைக்குப்பாக் களவே. (ருசஉ)

அளவுடன் பஞ்சத் திரவியம் வசம்பு
மாமுள்ளி மூன்றுமோர் வகைக்கு
மளவது வராக னெடையது மொன்று
மரைத்தரைப் படியும்நல் லெண்ணெய்
வளமுடன் கூட்டித் தீயினிற் காய்ச்சி
வடித்துவோர் கரண்டியும் புகட்டு
மணமிகும் விடத்தே ரெண்ணெயுங் கழிச்சல்
வாங்கியே சௌக்கியமுமாமே.

(௲௬௲)

(இ-ள்)

விடத்தேரிப்பட்டை
நரிப்பயிற்றம் இலை
குருவிச்சியிலை
வரட்சுண்டியிலை
நாவல்
அடம்பின் பட்டை, வேர், இலை, பூ, காய்
பாலை
கருவேலம் இலை
அம்மான் பச்சரிசி
வரட்பூலா
சிறுபுள்ளடி
ஓரிலைத்தாமரையிலை
நீர்ப்பூலா இலை
அப்பைக்கிழங்கு

இச்சரக்குகளை வகைக்கு ஒரு பாக்களவெடுத்துக்கொண்டு பஞ்சத்திரவியம் (ஏலக்காய், சண்பகமொட்டு, கிராம்பு, சீரகம், இலவங்கப்பட்டை) வசம்பு, பூண்டு இச்சரக்குகள் வகைக்கு ஒரு வராகனெடை எடுத்து நன்கு அரைத்து நல்லெண்ணெய் $\frac{1}{2}$ படி ($2\frac{1}{2}$ சேர்) விட்டு அடுப்பின்மேலேற்றிப் பக்குவமாக எரித்து வடிக்கட்டிக்கொண்டு ஒரு கரண்டி உட்கொள்ளவும்.

இது கழிச்சலை நிவர்ளத்ஷம்குாயமுறைகும்திதஒக்

## 185. கழிச்சலுக்குக் "கடாயம்"

சீரகமிளகு சுக்குள்ளி யோமந்
 தினிசுமொவ் வொன்றுக்குத் தானே
சேரிரு வராக னெடையது வறுத்துச்
 செம்மையாய்க் காற்படி மோரும்
நீரது முக்காற் படிவிட்டுக் காய்ச்சந்
 நீரது காற்படி கொள்ளு
கோரமாங் கழிச்சல் நின்றிடுந் தஞ்சைக்
 குரிசிலாம் விபுவரு ளிதுவே. (௲௪௪)

(இ-ள்)

| | |
|---|---|
| சீரகம் | மிளகு |
| சுக்கு | பூண்டு |
| ஓமம் | |

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து பொன்வறுவலாக வறுத்து மோர் விட்டரைத்துக்கொண்டு, காற்படி மோருக்கு முக்கால்படி தண்ணீர்விட்டு அதனுடன் குழம்பி அடுப்பின்மேலேற்றிக் காற்படியாகும் வரை வற்ற வைக்கவும். இதை உட்கொள்ளக் கழிச்சல் தீரும்.

## 186. வயிறு கழிச்சலுக்கு மருந்து

எருக்கிலைப் பட்டை பொன்முசுட் டையின்வே
 ரேத்திடுந் துத்திவேர் சரியா
யொருபடி தண்ணீர் விட்டுதிப் பிலியு
 முரைமிள குடனேசுக் கதுவுந
திருக்கிலாற் றுணியிற் பொட்டணங் கட்டி
 செப்பிய தண்ணியிற் போட்டு
வருக்கமா மடுப்பி லேற்றியே யுழக்காய்
 வற்றுமப் போதிறக் கிடுமே. (௲௫௪)

இடுகிழிக் கட்டிப் போட்டிடு மருந்தை
யெடுத்தரைத் தேயதிற் கலக்கி
இடுவதிகாலை மூன்றுநா டன்னிட
வேவயிறு கழிகிற தும்போம்
வடகைகலை யில்வாழ் சாம்புவ மூர்த்தி
வரத்தினால் மிகுந்தகீர்த் திகளும்
படகும்நற் றஞ்சை மாநகர் சரப
பார்த்திப னுணர்கடா யமுமே. (௱௪௯)

இ-ள்)

எருக்கிலை
பொன்முசுட்டை வேர்
எருக்கம்வேர்ப்பட்டை
துத்திவேர்

இவைகளையிடித்து ஒருபடி சுத்த ஜலம் விட்டு,

திப்பிலி
சுக்கு
மிளகு

இம்மூன்றையுஞ் சரியெடையெடுத்து இடித்து ஒரு துணியில் வைத்துப் பொட்டணங்கட்டி ஷெ கஷாயத்துடன் போட்டு ஒரு உழக்காகும் வரை வற்றவைக்கவும். பின்னர் முடிச்சை யவிழ்த்து மருந்துகளை அம்மியில் வைத்தரைத்து கஷாயத்துடன் கலந்து அருந்தவும்.

இவ்வாறு மூன்று நாட்கள் உட்கொள்ள வயிறு கழிச்சல் நிற்கும்.

## 187. கழிச்சலுக்கு மருந்து

கோழிமுட்டையிலே மிளகதின் மாத்திரங்
கொண்டபின் மருந்தையுங் கலந்து
சூழடை யாக நெய்யது தெரித்துச்
சுட்டதை மூன்றுநா ளுண்ணு

கோழைபோற் கழியுங் கழிச்சலும் நின்றுங்
 குணமதாஞ் சிவகிரு பையினா
லாழிசூ ழுலகி னரசர்கள் பணியு
 மன்புள்ள தஞ்சைமா னுரையே. (௬௭)

(இ-ள்)

கோழி முட்டையை யுடைத்து அதன் வெள்ளைக்கருவை ஒரு இருப்புக் கல்வத்திலிட்டு அதனுடன் ஒரு மிளகளவு சுத்தி செய்த அபின் கூடச்சேர்த்து நெய்விட்டு அடுப்பின்மேலேற்றி வைக்க அடைபோலாகும். இதனை உட்கொள்ளவும். இவ் வாறு மூன்று நாட்கள் செய்யவும்.

கோழைபோல் வெளியாகும் கழிச்சல் குணமாகும்.

## 188. கழிச்சலுக்கு மருந்து

சங்கம்வேர் செப்பு நெருஞ்சியின் வேருஞ்
 சீரிய தாய்க்கூட்டி யாப்பாலிற்
சங்கையில் லாமல் மூன்றுநாட் குடிக்கத்
 தானறுங் கிராணியின் கழிச்சல்
பங்கமாம் பருதி முன்பனி யெனவே
 யந்திடுஞ் சிவகிரு பையினால்
செங்கன்மால் சரபோ சேந்திர னுணர்ந்த
 திம்முறை வண்மை யதாமே. (௬௮)

(இ-ள்)

சங்கம் வேர்
செப்புநெருஞ்சியின் வேர்

இவ்விரண்டையுஞ் சமமெடுத்துப் பசுவின் பாலுடன் அரைத்துக் குடிக்கவும். இவ்வாறு மூன்று நாட்கள் செய்யக் கிராணிகள், கழிச்சல் முதலானவை தீரும்.

## 189. கழிச்சலுக்கு மருந்து

ஆவாரைப் பூவு மதனுட கொழுந்து
மற்புத வாழைப்பூ மடலிற்
பாவக மாய்வைத்து மியின்காந்த லிலே
பக்குவ மாகவே புதைத்து
ஆவிபட் டதுவும் வெந்தவா றெடுத்து
வரைத்துநன் மோரினிற் குடித்து
வாவினிற் பாலும் நெய்யுமே தவிரு
மவ்வயிற் கழிச்சலு மறுமே. (கசசு)

(இ-ள்)

ஆவாரம்பூ, ஆவாரங்கொழுந்து இவ்விரண்டையும் தனித் தனி சுமார் எலுமிச்சையளவெடுத்து வாழைப்பூ மடலிற்குள் வைத்துக்கட்டி உமிக்காந்தலில் புதைத்துத் தீயிடவும். அது நன்கு வெந்த பின்னர் எடுத்துப் பசுவின் மோர் விட்டரைத்துப் பருகவும்.

**பத்தியம்:—**

பசுவின்பால், நெய் இவற்றைத் தவிர்க்கவும். வயிறு கழிச்சல் நிற்கும்.

## 190. கழிச்சலுக்கு மருந்து

கூவிளங் காயின் புளிப்பதை யெடுத்து
கொட்டைப்பாக் களவுதா னரைத்து
ஆவலாய்க் கஞ்சாப் பொடியுந்தேற் றாங்கா
யளவரைத் திரண்டையுங் கலந்து
நாவினிற் போட்டு விழுங்கிடக் கழிச்சல்
நகன்றிடுங் குழந்தைக ளானாற்
றாவிய யெருமை மோரினிற் கொடுக்கச்
சந்திர முன்னிரு ளாமே. (கூ௫ய)

(இ-ள்)

வில்வப்பழச்சதை ஒரு கொட்டைப்பாக்களவெடுத்து, கஞ்சா யிலைச் சூரணம் தேற்றாங் கொட்டையளவு சேர்த்து ஒன்று கலந்து விழுங்கிவிடவும். கழிச்சல் நிற்கும்.

சிறு குழந்தைகளுக்கெனில் எருமை மோரில் குழப்பிக் கொடுக்கவும். கைகண்டது.

## 191. கிராணி அதிசாரத்திற்கு சூரணம்

மாதளம்பிஞ்சு பெருமரப் பட்டை
மாங்கொட்டை விளாம்பழத் தோடு
சாதக வில்வப் பழச்சதை யோமந்
தன்னுடன் சுக்கதி விடயந்
தாதவி மூாத்திப் பூவெள்ளி லோத்திரஞ்
சற்றுள புளியங்கொட் டைத்தோல்
சீதளச் சீர கங்கருஞ் சீரந்
திறவில்வப் பிசினதைக் கூட்டே. (௫௰௧)

கூட்டுவெட் பாலை யரிசியும் நல்ல
குணமிகு பொன்முசுட் டையின்வேர்
நாட்டினில் முத்தக் காசுடன் மூவேழ்
நவில்வதைச் சரியதாய்க் கூட்டி
வோட்டினில் வடித்து வார்க்கவும் பொடிசெய்
துணவெரு கடியதி லெடுத்து
வாட்டிடு பிளவெந் நீர்தயிர் நீரில்
வண்மையா யுண்டிடு வாயே. (௫௰௨)

உண்டிடச் சர்வ கிராணியின் கழிச்ச
லும்மதி சாரமுந் தீரும்
வண்ணமா மிளகாய் முதலுமெக்கார
மாற்றிடு பத்திய மாக

பண்ணிய தவத்தாற் றுளசரா சேந்திரன்
பாலனாய் வந்தவ தரித்து
வண்ணமாந் தஞ்சை நகர்சர பேந்திரன்
வழுத்திய சூரணந் தானே. (௫௫)

(இ-ள்)

மாதளம் பிஞ்சு
மாங்கொட்டைப்பருப்பு
வில்வப்பழச்சதை
சுக்கு
ஆத்திப்பூ
புளியங்கொட்டைத்தோல்
கருஞ்சீரகம்
வெட்பாலையரிசி
கோரைக்கிழங்கு
பெருமரப்பட்டை
விளாம்பழ ஓடு
ஓமம்
அதிவிடயம்
வெள்ளிலோத்திரம்
சீரகம்
இலவம்பிசின்
பொன்முசுட்டைவேர்

இச்சரக்குகளைச் சமனெடையெடுத்துக் காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து, இள வெந்நீர், தயிர்த்தெளிவு இவற்றில் உட்கொள்ளவும். கிராணி கழிச்சல் முதலானவை நிற்கும்.

**பத்தியம்;—**

மிளகாய் முதல் எவ்விதமான கார வகைகளும் உதவாது.

குறிப்பு:—

செய்யுளில் 21 சரக்குகள் என்று கூறப்பட்டிருப்பினும் 17 சரக்குகளே உள்ளன.

## 192. ஸர்வ கிராணிக்கு "சாதிக்காயாதி சூரணம்"

சாதிக்கா யத்தித் திப்பிலி கிராம்பு
தன்னுடன் கழற்கொடிப் பருப்பு
மாதளம் பிஞ்சு கொழுந்துவேர்ப் பட்டை
மாம்பழக் கொட்டையின் பருப்பு
சாதிபத் திரிகூ விளம்பழக் குடுக்கை
சத்துள மிளகுதிப் பிலியுஞ்
சாதக வில்வப் பிசினதி விடையஞ்
சம்பிரமச் சுக்கதுதானே. (கூடுச)

தானுமீ ரெட்டு வகைமருந் தெல்லாஞ்
சரியதாய்த் தனித்தனி யேதான்
வூனமில் லாம விளவறுப் பாக
வொற்றிட வறுத்ததைப் பொடித்து
யேனம தொன்றில் வஸ்திர காய
மிட்டொரு வெருகடி தூளைற்
றேனில் வெந்நீரிற் றயிறினிர் கொள்ளத்
தீர்ந்திடுஞ் சர்வகி ராணியுமே. (சடுடு)

(இ-ள்)

சாதிக்காய்
கிராம்பு
மாதளம்பிஞ்சு
மாதளவேர்ப்பட்டை
சாதிப்பத்திரி
மிளகு
இலவம்பிசின்
சுக்கு
யானைத்திப்பிலி
கழற்கொடிப்பருப்பு
மாதளங்கொழுந்து
மாம்பழத்தின்பருப்பு
வில்வப்பழக்குடுக்கை
திப்பிலி

அதிவிடையம்
மாதளம்பட்டை

ஆக இச்சரக்குகளைத் தனித்தனியெடுத்து இளவறுப்பாக வறுத்துக் கல்லுரலிலிட்டித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து வெந்நீரிலோ அல்லது தயிரிலோ உட்கொள்ளவும். பற்பல கிராணிகளுந் தீரும்.

## 193. வயிறு கழிச்சலுக்குத் 'தூள்'

சீரகஞ் சாதிக் காயில வங்கந்
தினிசது மூன்றுமே சரியாய்ப்
பாரதிற் பாதி பச்சையா கவுமே
பாதியே வறுத்ததைப் பொடித்து
சீருடன் வெருகடி தூளதிலெடுத்து
தேனதிற் குழைத்துண்டு பாரு
பூரணச் சந்திரன் முன்னிரு ளெனவே
போகிடு வயிர்கழிச் சலுமே. (௩௫௬)

(இ-ள்)

சீரகம் சாதிக்காய்
கிராம்பு

இவைகளைச் சமமெடுத்துப் பாதியளவைப் பச்சையாகவும், மற்ற பாதியை இளவறுப்பாக வறுத்தெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்யவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனுடனே குழைத்து உட்கொள்ளவும். வயிறு கழிச்சல் தீரும்.

## 194. கழிச்சலுக்கு உருண்டை

ஓதியிலை புழுங்க லரிசியி ரண்டு
மொக்கவே பதமதாய் வறுத்து
பதக்குநீர் வார்த்து வேகவும் வைத்துப்
பதத்தினிற் பிழிந்தநீர் தன்னில்

அதிவிடை யஞ்சுக் குடன்களிப் பாக்கு
மசமதா கமுமிள குடனே
பதமிகுங் காசுக் கட்டியுங் கருவேல்ப்
பட்டையும் நல்லவெல் லமுமே. (ருடுஎ)

வெல்லமோ டெட்டு கொட்டைப் பாக்கு
மெல்வள வவ்வள வரைத்து
சொல்லு கடாயந் தன்னிலே போட்டு
சுண்டவுங் காய்ச்சியே யிறக்கி
வல்லதூ துவிளங் காயதின் மாத்திர
மாத்திரை செய்துவோ ருண்டை
நல்லனு பானவி சேடம தனிலே
நக்கிடக் கழிச்சலு மறுமே. (ருடுஅ)

(இ-ள்)

ஓதியிலை
புழுங்கலரிசி

இவ்விரண்டையும் சமமெடுத்து தனித்தனி வறுத்துக் கொண்டு 2 மரக்கால் சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி வேகவைக்கவும். பின்னர் கஷாயத்தை இறுத்துக்கொண்டு அதனுடன்,

அதிவிடையம்
களிப்பாக்கு
மிளகு
கருவேலம்பட்டை
சுக்கு
ஓமம்
காசுக்கட்டி
வெல்லம்

இவைகளை வகைக்கு ஒரு கொட்டைப்பாக்களவெடுத்து இடித்து, ஷெ கஷாயத்துடன் சேர்த்து நன்றாக வற்றவைக்கவும்.

பின்னர், இதைக் கல்வத்திலிட்டு நன்றாகவரைத்துத் தூது வளங்காய்ப் பிரமாணமுள்ள மாத்திரைகளாகச் செய்யவும். அனுபான விசேஷத்தில் உட்கொள்ளவும், கழிச்சல் மாறும்.

## 195. கழிச்சலுக்கு மருந்து

துளசியை யெருமைத் தயிரைவிட் டரைத்து
சுகமுள தயிறினிற் றானே
வளமுடன் காலை மூன்றுநாட் குடிக்க
வடர்செயுங் கிராணியி னாலே
சளமிகு மிரத்தக் கழிச்சலுந் தீருஞ்
சதாசிவன் கிருபையி னாலே
யளவிலாக் கீர்த்தி பெற்றிடு தஞ்சை
யண்ணலு முணர்ந்திடு மருந்தே (௯.௫௬)

(இ-ள்)

துளசியை எருமைத்தயிர் விட்டரைத்துத் தயிரிலேயே குழப்பிக் காலை நேரங்களில் குடிக்கவும். இவ்வாறு 3 நாட்கள் சாப்பிடக் கிராணிகள், இரத்தக் கழிச்சல் முதலானவை தீரும்.

## 196. இரத்தக் கழிச்சலுக்கு

மாமரப்பட்டை துவைத்தெரு மையின்மோர்
வார்த்துமே பிசைந்ததைப் பிழிந்து
நேமமாய் வடித்து மிளகது நாலும்
நேருள யெண்ணெயோர் துள்ளி
யாமதில் விட்டுக் கொதிக்கவும் வைத்து
வந்தியுங் காலையுங் கொள்ளு
போமிதுக் கிரத்தக் கழிச்சலுந் தானே
பொருந்திடச் செய்திதைப் பாரே. (௯௫௰)

(இ-ள்)

மரமரப்பட்டையை நசுக்கி எருமைமோர் வார்த்துப் பிசைந்து பிழிந்துகொள்ளவும். இதன் சாற்றுடன் மிளகு 4 (எண்ணிக்கையில்) நல்லெண்ணெய் ஒரு துளி இவைகளை விட்டுக் கொதிக்கவைத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். இரத்தக் கழிச்சல் தீரும்.

## 197. இரத்தக் கழிச்சலுக்கு மருந்து

அரசினிற் கொழுந்திற் றண்ணியை விட்டொன்
றாகவே காய்ச்சிநன்றாக
உரமுடன் காலை யந்தியுங் கொள்ளு
வொவ்வொரு வேளையி லரைச்சேர்
இரத்தமாங் கழிச்ச லூரைவிட் டோடு
மீசனார் கிருபையி னாலே
வரமிகுந் திடுந்தென் றஞ்சைமா னகரில்
வாழ்ந்திடும் விபுவுரை யாமே. (கூசுகூ)

(இ-ள்)

அரசங்கொழுந்துடன் தண்ணீர் எட்டுமடங்குவிட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகுமட்டும் காய்ச்சி வேளைக்கு ½ சேர் காலையிலும், மாலையிலும் உட்கொள்ளவும். இரத்தம் கழியும் கழிச்சலாக இருந்தாலும் தீரும்.

## 198. இரத்தக் கழிச்சலுக்கு மருந்து

முற்றின இலந்தைப் பட்டையைத் துவைத்து
முதிரெரு மைத்தயிர் கலந்து
நற்றுவ மாயதி காலையிற் றானே
நாலஞ்சு நாளுமே கொள்ளு
சற்றுள விரத்தக் கழிச்சலுந் தீருஞ்
சதாசிவன் கிருபையி னாலே
பற்றலர் மார்பில் ரணிதென் றஞ்சைப்
பதிநகர் மானுவின் முறையே. கூசுஉ)

(இ-ள்)

முற்றிய இலந்தைப்பட்டையைக் கல்வத்திலிட்டு நசுக்கி எருமைத்தயிர் விட்டுக்குழப்பி அதிகாலையில் உட்கொள்ளவும். 4 அல்லது 5 நாட்கள் உபயோகிக்க இரத்தக் கழிச்சல் தீரும்.

## 199. கழிச்சலுக்குக் குடிநீர்

ஒருபலஞ் சுக்கு காவட்டம் புல்லு
மொள்ளிய வேளைவேர் நாலு
முரமுட நறுக்கிமுன்னாழிநீர் விட்டுழு
வுழக்கதாய்க் காய்ச்சியே யிறக்கி
வரிசையாய்க் காய்ச்சியே யிறக்கி
வளமுட னெட்டுநாட் கொள்ளு
பகுதிமுன் பனிபோல் கிராணியின் கழிச்சல்
பரந்திடு முண்மையி தாமே. (௯௧௯)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுக்கு | — 1 | கலம் |
| காவட்டம்பில் | 1 | பலம் |
| வேளைவேர் | — 4 | பலம் |

இவைகளை நறுக்கி சுத்த ஜலம் * 3 படி விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகக் காய்ச்சி வடிக்கட்டிக்கொண்டு தினம் 3 வேளை 8 நாட்கள் உட்கொள்ளவும்.

கிராணி, கழிச்சல் முதலானவை தீரும்.

## 200. சலக்கழிச்சல் மலக்கழிச்சலுக்கு மருந்து

நாட்டி னுடசுக்கு பழங்கடுக் காய்ரெண்டும்
நன்றாகச் சுட்டுப் பொடிசெய்து கொண்டு
வாட்ட மிலாதெருமை யுடதயிரிற் கொள்ளு
வகையாக வைத்துநாட் காலை தன்னில்
மூட்டுசலக் கழிச்சல் மலக்கழிச்ச லெல்லா
முதிர்ந்தோடும் பரம சிவனருளினாலே
பாட்டி னிசையறிந்து தஞ்சைநகரை யாளும்
பார்த்திபன் சரபேந்திர னுணர்மருந் திதாமே.

(௯௬௪)

* ''பதக்கு நீர்விட்டு'' என்று 65 நெ. சுவடியில் உள்ளது.

சுக்கு
கடுக்காய்த் தோல்

இவ்விரண்டையும் அடுப்பிலிட்டுச் சுட்டுப் பொடி செய்து கொள்ளவும். இதனைக் கெட்டியான எருமைத் தயிர் விட்டுக் காலை நேரங்களில் உட்கொள்ளவும். தண்ணீராய்க் கழிதல், மலப்போக்கு முதலானவை தீரும்.

## 201. வயிறு கழிச்சலுக்கு மருந்து

துண்டமாய் சற்றுலனை வேரை வெட்டித்
துடியான பழமோரை விட்டுநன்றாய்க்
கண்டிதமாய் வேகவைத்து வதிலேசுக்குங்
கரிமிளகு மசம தாகமுமிம் மூன்றுந்
துண்டமதில் முடிந்து வதிற்போட்டுக் காய்ச்சித்
துருசாகப் பொட்டணத்தை யெடுத்தே தேனி
லண்டவே யரைத்துண்ணு நாலு வேளைக்
கதற்குமலங் கழிந்துமலங் கட்டுந்தானே. (௩௬௰)

(இ-ள்)

சத்துலன் வேரை வெட்டிக்கொண்டுவந்து, புளித்த மோரை விட்டு அரைத்து வேகவைக்கவும்.

சுக்கு
மிளகு
ஓமம்

இம் மூன்றையும் தூள் செய்து ஒரு துணியில் முடிந்து மேற் கூறிய மோரில் போட்டுக் காய்ச்சவும். பின்னர் இப் பொட்டணத்தை யெடுத்துத் தேன் விட்டரைத்துச் சாப்பிடவும். நான்கு வேளை மலம் கழிந்து பின்னர் மலம் கட்டும்.

## 202. வயிறு கழிச்சலுக்கு மருந்து

கடுக்காய்த்தோல் சுட்டகரி காசுக்கட்டி
கழற்கொடிப் பருப்புயிந் துப்பு க்காய
மிடுக்காகப் பொரித்தேவெண் காரமாறு
மென்மையுடன் சரியாக நிறுத்துக் கொண்டு

தடிப்பான மோரைவிட்டு யெரித்து யெண்ணெய்
தான்வார்த்து கொதிப்பித்துச் சாப்பிட்டாலே
தடுத்துவிடு மெந்தவித பேதியாகிற்
றப்பாமற் றிரைகடலுந் தாண்டுந்தானே. (௫௬௬)

(இ-ள்)

கடுக்காய்த் தோல் சுட்ட கரி
காசுக்கட்டி
கழற்சிப் பருப்பு
இந்துப்பு
பெருங்காயம்
பொரித்த வெங்காரம்

இவைகளைச் சமனெடை யெடுத்துச் சூரணித்துத் தண்ணீர் கலப்பில்லாத மோர் விட்டு நன்றாகக் கொதிக்கவைத்து, சிறிது நல்லெண்ணெய் வார்த்து மறுபடியும் அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைக்கவும், எப்பேர்ப்பட்ட பேதியும் நிற்கும்.

குறிப்பு:-

68-ம் நெ, சுவடியில் "சுக்கும்," சேர்க்கப்பட்டிருக்கிறது.

## 203. வயிறு கழிச்சலுக்கு உருண்டை

கையாந்த கரைசங்கு குப்பைமேனி
கானத்தூ துவளைவே லிப்பருத்தி
செய்யாகும் பொதலையு முத்தெருக்கஞ்
செவியுடனே செருப்படியிவ் வெட்டுந்தானே
மெய்யாக வொன்றாகப் போட்டுடித்து
மேலான வாவின்கோ மியத்தில் நாழி
கையாலே தண்ணீரும் நாழி வார்த்துக்
கனலிட்டு வடுப்பினிலே ஏத்திடாயே. (௫௬௭)

ஏத்தியந்தத் தண்ணியெல்லாங் குறுகும்வாறே
யினியசுக்குத் திப்பிலியு மிளகும் மூன்றும்
சாத்தம்மி தனிற்சரியா யரைத்துப் போட்டு
சதிராமெள் ளெண்ணெயிட்டுக் கிளறிக்கொண்டு

சாத்திரத்தின் படிகொட்டைப் பாக்கின் மாத்திரந்
தானுண்டை செய்துவோ ருண்டைதன்னை
நேத்தியுள்ள தேனதிலே கொள்ளு பேதி
நிற்குமிது தப்பாது செய்துபாரே. (ரு௬அ)

(இ-ள்)

கையாந்தகரை
சங்கிலை
குப்பைமேனியிலை
காட்டுத் தூதுவேளை
வேலிப்பருத்தி
பொடுதலை
முத்தெருக்கஞ்செவி (நிலக்கடம்பு)
(சிறு) செருப்படி

இவைகளைச் சமமெடுத்து இடித்துப் பசுமாட்டு மூத்திரம் ஒரு படியும், சுத்த ஜலம் 1 படியும் விட்டு அடுப்பின் மேலேற்றி ஜலம் வற்றும் வரை கொதிக்க வைக்கவும். பின்பு சுக்கு, திப்பிலி, மிளகு இம்மூன்றையும் சமமெடுத்து அம்மியின்மேல் வைத்து நன்கு அரைத்து ஷை பச்சிலைகளுடன் கலந்து நல்லெண்ணெயும் சிறிது விட்டுக் கிளறிக் கொட்டைப்பாக்குப் பிரமாணமுள்ள உருண்டைகளாக உருட்டிப் பத்திரப்படுத்தி வேளைக்கு ஒரு உருண்டை தேனில் உட்கொள்ளவும். பேதிகள் நிற்கும்.

## 204. வயிறு கழிச்சலுக்குத் துவளைப் பூச்சு மருந்து

காட்டினிநன் னாரிவேர்ந றுக்கிச் சுக்குங்
கரி மிளகுங் கடுக்காயுந் தட்டிப்போட்டு
கூட்டத்திலோர் நாழிநீர் விட்டுழக்காய்க்
குறுகவே காய்ச்சிநீ கொள்ளிதல்லால்
வாட்டமிலாச் சாரடைவே லிப்பருத்தி
வளமான குருந்துடனே மூக்குறட்டை
போட்டிந்த யிலைநாலுஞ் சாரணைச்சாறு
புதிய வெவ்வ ழுநீராத லுந்தான்வாறே. (ரு௬௯)

வார்த்து துவைத் தேகுறுணிச் சாறுதன்னை
வாங்கியுள்ளி வசம்புமதிற் றட்டிப்போட்டு
சாத்திரத்தின் படியிழையக் காய்ச்சி யுச்சி
தலையிலுடம் பிலிறங்கப் பூசுநன்றா
யாத்த முடி யாதவயிற் கழிச்சல் தீரு
மழகையா ளிக்கும்பொற் கண்ணேயீய்ந்து
மாத்தியணி பெருவிடைய யீசர்பாத
மர்ச்சனைசெய் சரபேந்திர னருளினாரே. (௩௭)

(இ-ள்)

காட்டு நன்னாரி வேர்
சுக்கு
மிளகு
கடுக்காய்த் தோல்

இவைகளை வகைக்கு (12 வராகனெடையளவு) எடுத்துச் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு எட்டிலொன்றாக்கி வடிக்கட்டி உட்கொள்ளவும்.

2. சாரணையிலை வேலிப் பருத்தியிலை
குருந்து இலை மூக்கரட்டை இலை

இந்நான்கு பச்சிலைகளையும் எடுத்துக்கொண்டு சாரணைச் சாறு விட்டு மறுபடியும் இடித்த சாறு ஒரு மரக்காலுடன்,

பூண்டு வசம்பு

இவ்விரண்டையும் நசுக்கிப்போட்டு அடுப்பின்மேலேற்றி நன்றாக வற்றவைத்துத் தலை, உடம்பு முதலான இடங்களில் பூசிக்கொள்ளவும். அதிகமான வயிற்றுக் கழிச்சல் தீரும்.

## 205. கழிச்சல் அதிசாரத்திற்கு உருண்டை

ஊமத்தங் காயையுள் ளேதோண்டிக் கொட்டி
யுள்ளடியிற் சாதிக் காய்ப் பொடியைப் மபாட்டு
நேமத்தோ டேயபின் நடுவே வைத்து
நீயதின் மேற்சாதிக் காய்ப்பொடியைப் போட்டு

மூமத்தங் காயின் முன் னம்நறுக்கு மோட்டால்
மூடியே சேலை மண்ணுஞ் செய்து சாணி
யேமனத் தோடொரு விரல்பிரமா ணங்கட்டி
விசைந்த வணல்தனி லதைப்புடத்தைப்போடே.
(நாக)

புடம்போட்டு வெந்தபின்பு சாணிபேத்து
பொருந்திவைத் தமண் சேலைதனையும் பேத்து
திடத்துடனே மைப்போல வரைத்துக் கொண்டு
செம்மையாங் களிப்பாக்கி னளவுமுண்டை
அடவுடனே செய்துமோ ருண்டை தன்னை
யனுபான மாநெய்யி லுண்டாயானால்
சடுத்தஞ்செய் கழிச்சலும்போ மதி சாரங்கள்
தரியாது ரவிகண்ட பனிபோற் போமே.

(இ-ள்)

ஒரு முற்றிய ஊமத்தங்காயை யெடுத்து, அதன் காம்புப் பக்கத்தில் காலணா அளவுள்ள வில்லையாக அறுத்து உள்ளிருக்கும் விதைகளை கொட்டிவிடவும். அதற்குள் $\frac{1}{2}$ வாசி சாதிக்காய்த் தூள் போட்டு அதன் நடுவில் சுத்தி செய்த அபின் வைத்து மேலும் சாதிக்காய்த்தூள்விட்டு நிரப்பி முன்னமே எடுத்து வைத்த ஓட்டைக்கொண்டு மூடிச் சேலை மண் செய்யவும். அது காய்ந்தபின் அதை ஒரு விரல் கனத்தில் சாணிக்குள் புதைத்து வைத்து மறுபடியும் உலர்த்தவும். பின்னர் இதற்கு அனலிடவும். ஊமத்தங்காய் வெந்த பின்னர் சாணியை நீக்கி விட்டுச் சீலை மண்ணையும் உடைத்துவிடவும்.

காயைமாத்திரம் சாக்கிரதையாக எடுத்து அம்மிதனிலிட்டுத் (தண்ணீர் விட்டு) நன்கு அரைத்து களிப்பாக்களவுள்ள உருண்டையாக உருட்டி பத்திரப்படுத்தவும்.

வேண்டும்போது இதிலொரு உருண்டையெடுத்து நெய்யு டனே குழைத்து உட்கொள்ளவும். கழிச்சல், அதிசாரம் முத லானவைகள் தீரும்.

## 206. வயிறு கழிச்சலுக்கு உருண்டை (கட்டு வங்காதி குளிகை)

பெருமரப் பட்டையும் வட்டத்தி ருப்பிசுக்கும்
பச்சைய றுகம்புல்லின் பூவுங்கூட
தருவான யிலவு பிசின்கூவி ளத்தின்
றசையாறும் பழச்சாற்றி னாலரைத்து
மருந்துவ கையொன்றுக் கும்நாலி தொன்று
மபின்கூட்டிக் கஞ்சாவி னிலைச்சாறு விட்டு
அரைத்துக் குன்றிப்பிர மாணமுண் டைபண்ணி
யதைத்தேனிற் கொள்ளவயிறு கழிச்சல்போமே.

(கூ.௶)

(இ-ள்)

பெருமரப்பட்டை
சுக்கு
இலவம்பிசின்
வட்டத்திருப்பி
அருகம்புல்லின் பூ
வில்வப்பழச்சதை

இவைகளைச் சமனெடை யெடுத்துக் கல்வத்திலிட்டு எலு மிச்சம்பழச்சாறுவிட்டு நன்றாகவரைத்து ஷை மருந்துகளின் மொத்த யெடைக்கு நாலிலொன்று சுத்திசெய்த அபின் சேர்க் கவும். பின்னர் மறுபடியும் கஞ்சாயிலைச் சாறுவிட்டு நன்கு அரைத்துக் குன்றியளவுள்ள உருண்டைகளாக உருட்டிவைத் துக்கொள்ளவும். வேண்டும்போது ஒரு மாத்திரையைத் தேனில் குழைத்து உட்கொள்ளவும். வயிறு கழிச்சல் நிற்கும்.

## 207. வயிறு கழிச்சலுக்கு மருந்து

ஈரவெங்காய மூன்றுபூண்டு தன்னை
யேவறுத்து மைப்போல வரைத்துக்கொண்டு
சாருபுழுங்க லரிசி தீட்டுகின்ற
தவிடதனிலே பிறட்டியஞ் சாறுநாளும்

சீருட னேயிரண்டு வேளையு மேகொள்ளு
சிலுகுசெய்யும் வயிறுகழிச்ச லூர்விட்டோடுந்
தாரணியும் புயனயில் வாள்கையி லேந்துஞ்
சரபேந்திரன் நிர்ணயித்த முறையிதாமே. (எசகூ)

(இ-ள்)

ஈரவெங்காயம் —3
பூண்டு —3

இவற்றைச் சட்டியிலிட்டு வதக்கி அம்மியின்மேல்வைத்து மைப்போலரைத்து, புழுங்கரிசித் தவிட்டுடன் பிசறி 5 அல்லது 6 நாட்கள் காலையிலும் மாலையிலும் விழுங்கவும், வயிறு கழிச்சல் நிற்கும்.

## 208. வயிறு கழிச்சலுக்கு மருந்து

சீரகங்காற் பலமதனின் பழுதுபோக்கி
தெரிவையர்கள் தனப்பாலை விட்டுமைப்போல்
சாரவரைத் தேயுண்டை யாக்கித் தீட்டுந்
தவிடதனிற் புறட்டியஞ்சு நாளுந்தானே
நேரமிரண் டுமுண்ணு வயிறு கழிச்சல்
நின்றுபோங் குன்றைவில்லி கிருபையாலே
பூரணசந் திரவதனஞ் சரபோ சேந்திரன்
பூமிமனுக் காயிதுதிட் சயித்ததாமே. (கூஎரு)

(இ-ள்)

சீரகம் காற்பலம் எடுத்துத் தூசிமுதலானவைகளைப் போக்கி, ஒரு கல்வத்திலிட்டு முலைப்பால்விட்டு மைப்போல வரைத்து உருண்டையாகச் செய்து, தீட்டிய தவிட்டுடன் புறட்டி 5 நாட்களுக்குத் தினம் 2 வேளை உட்கொள்ளவும். வயிறு கழிச்சல் தீரும்.

## 209. வயிறு கழிச்சலுக்கு மருந்து

ஆவரையின் விரையுழக்கு வாப்பால் வார்த்து
வரைத்துசர்க்க ரைதேனு மதிற்கலந்து
ஆவினுட பால்நாழி தனிற் கலக்கி
யதிகால மேகொள்ளு மஞ்சு நாளும்

நீ வருந்தும் வயிறுகழிச்சல் தீருந்தானே
நீரின்மேற் றாகமது வாகிற் கேளு
ஆவரையின் பட்டைகட லிறஞ்சிப் பட்டை
யதிரண்டும் நீர்விட்டுக் காய்ச்சிக் கூட்டே. (௬௭௬)

(இ-ள்)

ஆவரை விரை—ஒரு உழக்கு எடுத்துப் பசுவின் பால் விட்டு நன்றாக வரைத்துச் சர்க்கரை, தேன் இவற்றை விட்டுப் பசுவின் பால் ஒரு படியுடன் சேர்த்துப் பருகவும், அதிகாலையில்சாப்பிடவும். இவ்வாறு 5 நாட்கள் உட்கொள்ள வயிறு கழிச்சல் தீரும்.

அதிகமான தாகம் உண்டானால், ஆவாரைப்பட்டை, கடலறஞ்சிப்பட்டை இவ்விரண்டையும் சேர்த்துக் கஷாயம் செய்து பருகவும்.

## 201. வயிறு கழிச்சலுக்கு மருந்து

ஆவரையி னிலையும் புண்ணாக்கும் போட்டு
மதைப்புழுக்கி நல்லெண்ணெய் வார்த்துக்கொண்டு
பாவகத் தோடொரு வேளையுண் ணிதற்கும்
பத்தியம் பால்தயி ரத்திக்காய் வாழைக்காய்
கூவும்வரக் காலியி னுப்புகண்ட மெண்ணெய்
கூட்டியுண்ணு தாகமெடுத்து தானாற்
றாவுமெரு மைமோரிற் பொட்டிலுப்பைத் தான்
போட்டுக்காய்ச் சியதை யாத்தியுண்ணே. (௭௭௭)

(இ-ள்)

ஆவரையின் இலை
புண்ணாக்கு

இவ்விரண்டையும் தண்ணீர் விட்டுப் புழுக்கிக்கொண்டு நல்லெண்ணெய் விட்டுப்பிசைந்து ஒரு வேளை உட்கொள்ளவும்.

பத்தியம்:—

பால், தயிர், அத்திக்காய், வாழைக்காய், வெள்ளாட்டு உப்புகண்டம், எண்ணெய் முதலானவைகளை நிரம்ப உட்கொள்ளவும்.

தாகம் உண்டானால், எருமைமோரில் பொட்டிலுப்பைச் சேர்த்துக் காய்ச்சி ஆற்றிச் சாப்பிடவும்.

## 211. வயிறு கழிச்சலுக்கு மருந்து

சிவந்தகுன்றி யிலைத்தூளும் வங்காளத்தின்
சீனியா நெய்மூன்று மொவ்வொன்றுக்கு
பவந்தமுட னோருவெரு கடிப்பிரமாணம்
பாவகமாய்ச் சரியாக யெடுத்துக்கொண்டு
நவமான பேயன்வா ழைப்பழத்தில்
நாலஞ்சு கொள்ளதிகா லையிலேதானே
அவதிசெயுஞ் சகலவயிறு கழிச்சல் தீரு
மன்பான தஞ்சைவிபு வருளும்வாறே. (௩௭௮)

(இ-ள்)

சிவப்புக் குன்றிமணிக்கொடியின் இலைத்தூள்— மூவிரல் கொள்ளுமளவு

வங்காளச் சர்க்கரை, ,,

நெய் ,,

இவைகளை ஒன்றுபடப் பிசைந்து, பேயன் வாழைப்பழத்துடன் சேர்த்து 4 அல்லது 5 நாட்கள் அதிகாலையில் உட்கொள்ளவும். சகலவிதமான வயிறு கழிச்சலும் தீரும்.

## 212. வயிறு கழிச்சலுக்கு மருந்து

எருமைவெண்ணெ யிற்றேற்றான் வேரரைத்து
இருட்டோடே காலையிற்கொள் குடிநீர்கேளு
திருந்தும்வா வரையிலையிற் றண்ணீர் விட்டுத்
திறமாகக் காய்ச்சியதின் மேலேதானே

உரமாக வஞ்சாறு நாளுங் கொள்ளு
வோடிவிடுஞ் சகலவயிறு கழிச்சலுந்தான்
அருந்தவத்தோர் சொன்னதையுஞ் சரபபூபன்
அனுதினமு முணர்ந்துரைத்த முறையிதாமே. (௩௭௬)

(இ-ள்)

எருமை வெண்ணெயுடன் தேற்றான் வேர் அரைத்து அதிகாலையில் இருட்டிருக்கும்போதே உட்கொள்ளவும். பின்னர் ஆவாரை இலையில் தண்ணீர் விட்டுக் கொதிக்கவைத்து வடிக்கட்டிப் பருகவும். இவ்வாறு 5 அல்லது 6 நாட்கள் சாப்பிடவும். வயிறு கழிச்சல் தீரும்.

குறிப்பு:—

''வல்லாரை இலைக்குடி நீர்ப் பருகவும்'' என்று 68 நெ. சுவடியில் உள்ளது.

## 213. வயிறு கழிச்சலுக்கு மருந்து

முதிர்ந்தாவா ரம்பட்டை சீவிக்கொண்டு
முத்தினவே லாவேருஞ் சீவியேதா
னிரண்டுஞ் சரியாக வரைத்து நல்ல
வெருமைகட்டித் தூக்குத்தயிர் தனிற்குழைத்து
அதிகாலை யிலுமுண்ணு நம்பியேநீ
யஞ்சாறு நாளில்ரெத்தக் கழிச்சல்தீரும்
சதுரனது லனொன்னார் மார்பிலாணி
சரபேந்திர மகராச னருளிதாமே. (௩௭௰)

(இ-ள்)

முற்றிய ஆவாரம்பட்டையை யெடுத்துச் சிறுசிறுதுண்டுகளாகச்சீவி, முற்றிய வேலாவேரையும் சீவி, இவ்விரண்டையும் சரியெடையெடுத்து, எருமைத்தயிரை ஒருதுணியில் முடிந்து பிழிந்து அந்தக் கட்டித்தயிருடன் குழைத்து அதிகாலையில் உட்கொள்ளவும். 5 அல்லது 6 நாட்களுக்குள் இரத்தக் கழிச்சல் தீரும்.

## 214. இரத்தக் கழிச்சலுக்கு மருந்து

கொட்டைப்பாக் களவுமின்பு ராவேருங்
கொண்டுவசம் புள்ளியுட னேயரைத்து
சட்டமுடன் மூன்றுநாட் காலையந்தி
தான்கொள்ளு ரெத்தத்தின் கழிச்சல் தீரும்
வட்டமதி ளரணலங்கஞ் சூழுந்தஞ்ச
மானகரா ளும்வள்ளல் துளசராசன்
இட்டமிகு புத்திரசிகா மணியாம் நல்ல
யெழில்மிகுந்த சரபேந்தர னருளிதாமே. (௩-அக)

(இ-ள்)

இம்புராவேர் *ஒரு கொட்டைப்பாக்களவு எடுத்துக் கொண்டு அதனுடன். பூண்டு, வசம்பு இவ்விரண்டையும் சரி எடை சேர்த்து அம்மியின் மேல்வைத்துத் தண்ணீர் விட்டரைத்து 3 நாட்கள் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். இரத்தக் கழிச்சல் தீரும்.

## 215. இரத்தக் கழிச்சலுக்கு மருந்து

கிலுகிலுப்பை வேரைவாய் பேசாமற்றான்
கிளறியே பிடுங்கியுள்ளி வசம்புகூட்டி
அலகுதிற வாமலதை யரைத்துக் கொள்ளு
மந்தியுங்கா லையுமிரண்டு வேளையுந்தான்
நலமுடனே யுறுதியாகத் தானஞ்சு நாட்
கொள்ளவயிற் றின்ரெத்தக் கழிச்சல்தீரும்
மலக்கழிச்சல் போகுந்தண்ணீ ரிற்குளித்து
பண்பான மோருஞ்சோ றுண்ணுதானே. (௩-அ௨)

* இரண்டு, மூன்று கொட்டைப்பாக்களவென்றிருக்கிறது.

(இ-ள்)

கிலுகிலுப்பை வேரை வாய்பேசாமற் பிடுங்கிவந்து பூண்டு, வசம்பு இவைகளையுஞ் சேர்த்துத் தண்ணீர் விட்டு நன்றாக வரைத்துக் காலையிலும் மாலையிலும் 5 நாட்கள் சாப்பிடவும். வயிறு கழிச்சல். இரத்தக் கழிச்சல் முதலானவை தீரும். சுத்த ஜலத்தில் ஸ்நானஞ்செய்து மோர்சாதம் சாப்பிடவும்.

## 216. இரத்தக் கழிச்சலுக்கு மருந்து

புளிச்சைக்கொடி வேரெலுமிச் சங்காய் மாத்திரம்
பலமாக வரைத்துமைப்போ லெடுத்துக்கொண்டு
களங்கமில்லா யெருமையுட தயிரிற்றானே
கலக்கியதி காலையினில் மூன்றுநாளும்
வளப்பமுட னுண்டுபார் நெடுநாள் ரெத்த
வயிறுகழிச்சல் நில்லாமல் வாங்குமோங்கி
விளங்குகை லைக்கடவுள் பாதம்போற்றும்
விபுசரபேந் திரனுணர்ந்த மருந்திதாமே. (௩-அ௩)

(இ-ள்)

புளிச்சைக்கொடியின் வேர் ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் எடுத்துக்கொண்டு நன்றாக மைப்போல் அரைத்து எருமைத் தயிருடன் குழப்பி அதிகாலையில் 3 நாட்கள் உட்கொள்ளவும். நெடுநாளாக இருக்கும் வயிறு கழிச்சல் தீரும்.

## 217. இரத்தக் கழிச்சலுக்கு எண்ணெய்

வனத்தி நறு வளிவேரு புத்தில்நிற்கும்
வடக்கேபோம் வேரதனை வெட்டிவாங்கி
தனத்தபுளிப் பட்டைமாம் பட்டைகூடக்
கடுகவே வெட்டிவந்து வயல் கரந்தை
தினப்புடனே கொண்டுவந்து சரியதாக
நீள்வசம்பு யுள்ளி ரெண்டுங் கூட்டித்தானே
மனத்துடனே நறுக்கிவேப் பெண்ணெய்தன்னை
வார்த்துமதை யடுப்பதனி லேத்திடாயே. (௩-அ௪)

(இ-ள்)

புத்தின்மேல் வளரும் நருவிலியின் வடக்கே போகும் வேரை வெட்டிக்கொண்டுவந்து, அதனுடன் புளியம்பட்டை, மாம்பட்டை, வயல் கரந்தை, பூண்டு, வசம்பு இவைகளையும் சரிடையயெடுத்து நறுக்கி வேப்பெண்ணய் 1 சேருடன் ஒன்று கலந்து அடுப்பின் மேல் வைத்து எரித்து இறக்கவும்.

ஏத்தியெடுத் துத்தலியிற் கொஞ்சம் வார்த்து
இரண்டுகா சத்தனையு முள்ளுக்குங் கொள்
சாத்துதொப் புளினிட்டு விரலிட்டுத்
தன்னைவலம் புரியிடம்பு ரியாச்சுத்தி
வார்த்துவிடு நாலைந்து நாளிற்றானே
வாங்கிப்போ மிரத்தத்தின் கழிச்சல்தானே
சாத்திரத்தை நாடோறு முணர்ந்துணர்ந்த
சரபேந்திர னிட்சயித்த எண்ணெயாமே. (௩௮௫)

(இ-ள்)

இத்தைலத்தைத் தலையில் தேய்த்துக்கொண்டு, 2 காசளவு உள்ளுக்கும் கொடுக்கவும். தொப்பிளினுள்ளே வலப்புறமாகவும் இடப்புறமாகவும் சுற்றவும். 4 அல்லது 5 நாட்களுள் இரத்தக் கழிச்சல் நிற்கும்,

## 218. வயிறு கழிச்சலுக்கு உருண்டை

சாதிலிங்கம் வசுவாசி யபின்கிராம்பு
சாதிக்காய் அப்பிரக மழிஞ்சில்பட்டை
சோதியிர தங்குடச்ப் பாலைப்பட்டை
சொல்லேல மிலவங்கம் பதினொன்றுந்தான்
நீதியுடன் வகைக்கோரு கழஞ்சுகூட்டி
நிலத்தின்குப்பை மேனியிலைச் சாறுவாத்து
தேகமில் லாமலரைத் துக்கழற்சிப்
பிரமாண முண்டைபண்ணி வைத்திடாயே. (௩௮௬)

வைத்துவோ ருண்டை தன்னை தயிரிற்காலை
வளமாக வுண்மூன்று நாலுநாளே
யத்திக்கா யுடனேயிளம் வாழைக்கச்ச
லதுவும்முறைப் பில்லாமற் கூட்டிக்கொள்ளு
சத்துருவாம் வயிறுகழிச்சல் நிற்குமாதி
சதாசிவனா ரருளாலே தப்பாமற்றான்
மித்துருபரி பாலனாஞ்ச ரபோசேந்திரன்
வெகுநாளா யுணர்ந்திந்த முறையுந்தானே. (௫அ௭)

(இ-ள்)

சாதிலிங்கம்
அபினி
சாதிக்காய்
அழிஞ்சில் பட்டை
குடசப்பாலைப் பட்டை
இலவங்கப்பட்டை
ஆடாதோடை
கிராம்பு
சுத்திசெய்த அப்பிரகம்
" பாதரஸம்
ஏலக்காய்

இவைகள் வகைக்கு ஒரு கழஞ்சு கூட்டிக் கல்வத்திலிட்டுக் குப்பைமேனி இலைச்சாறு விட்டு நன்றாக வரைத்துக் கழற்சிக் கொட்டையளவுள்ள மாத்ரைகளாக உருட்டிக் காயவைக்கவும்.

இதில் ஒரு மாத்திரை யெடுத்துத் தயிருடன் காலை நேரங்களில் 4 நாட்கள் உட்கொள்ளவும்.

அத்திக்காய், இளம் வாழைக்கச்சல் முதலானவைகளை உறைப்பில்லாமல் சேர்த்துக் கெள்ளவும். வயிறு கழிச்சல் நிற்கும்.

## 218. வயிறு கழிச்சலுக்கு மருந்து

இலவிலுப்பை மாம்பட்டை மூன்றுந்தானே
யிடித்தெருமைப் பால்நாழி தனிற்கலந்து
நலமுடனே வடிக்கட்டிச் சுண்ணம்போடே
நாள்மூன்று காலையிற்கொள் கழிச்சல்தீரும்

உலகிலுரை மாந்தர்வயிறு கழிச்சலாலே
யும்வேதைப் படுவருத்தம் கண்டுயிந்தத்
தலமாளுஞ் சரபேந்திரன் நிட்சயித்த
தகுமான மருந்திதுவுந் தான்நீயுண்ணே. (௬௮௮)

(இ-ள்)

இலவம்பட்டை
இலுப்பைப்பட்டை
மாம்பட்டை

இம்மூன்றையும் சமனெடையெடுத்து இடித்து எருமைப் பால் ஒரு நாழியுடன் கலந்து வடிக்கட்டிக் கொள்ளவும். பின்னர் அதில் கொஞ்சம் சுண்ணாம்பு ஒரு சிட்டிகை கலந்து அதிகாலையில் 3 நாட்களுக்கு உட்கொள்ளவும். கழிச்சல் தீரும்.

## 220. வயிறு கழிச்சல், கடுப்பு, இரத்தக் கழிச் சலுக்கு மருந்து

அத்தி யொதி கருவேலால் பட்டைநாலு
மதுசரியாய்க் கூட்டியிரு நாழிநீர்விட்
டுத்திறமா யுழக்காக வேகாய்ச்சிகொண்
டுறுதியுட னதற்குமேன் பொடியைக்கேளு
சத்துளநெல் விமுள்ளி களிப்பாக்கோடே
சாதகக்கா சுக்கட்டி மூன்றையுந்தான்
சத்தில்லா மற்பொடித்துப் போட்டுத்தானே
தண்ணீருங் குறுகினவா ரிறக்கிக்கொள்ளே. (௬௮௯)

கொண்டெருமைத் தயிருமது வுழக்கிலேதான்
கூடவே கலந்துநாள் மூன்றுங்கொள்ளு
பண்டையுற்ற கடுப்பிரத்த கழிச்சலெல்லாம்
பருதிமுன்னின் பனியதுபோல் விலகிப்போகும்
முண்டிடெரு மைத்தயிருஞ் சோறுந்தானு
முலகத்துக் காயுணர்ந்திம் முறையைத்தானே
அண்டினரைக் கார்க்குந்தஞ்சை நகரையாளு
மண்ணல்சர பேந்திரனிட் சயித்ததாமே. (௬௯௰)

(இ-ள்)

அத்திப்பட்டை
ஓதியம்பட்டை
கருவேலம்பட்டை
ஆலம்பட்டை

இந்நான்கு வகைகளையுஞ் சரியாகக் கூட்டி இடித்து 2 படி சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி ஒரு உழக்காக வற்ற வைத்து இறக்கிக் கொள்ளவும். இதனுடன்

நெல்லிமுள்ளி
களிபாக்கு
காசுக்கட்டி

இம் மூன்றையும் பொடி செய்து போட்டு மறுபடியும் கொதிக்கவைத்து, எருமைத்தயிர் ஒரு உழக்கு விட்டு 3 நாள்கள் சாப்பிடவும். கடுப்பு, இரத்தக் கழிச்சல், முதலானவை தீரும்.

## 221. இரத்தக் கழிச்சலுக்கு மருந்து

வசுவாசி பருத்திப்பிஞ் சசமதாக
மணமிகுந்த சாதிக்காய் கிராம்போடைந்தும்
நிசமாக வகைக்குவரா கனெடைதானே
நிறுத்துத்தம் பலமும்வரா கனெடைரெண்டு
இசைவுடனே கூட்டியரைத் தேநற்றேனி
லேகொள்ளு நாலஞ்சு நாளுந்தானே
நசையிரத்தக் கழிச்சல்முத லானதெல்லாம்
நாடாம லோடிவிடும் நம்பிச்செய்யே. (நூகூகு)

(இ-ள்)

ஆடாதோடை
ஓமம்
கிராம்பு
பருத்திப்பிஞ்சு
சாதிக்காய்

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதமெடுத்து இவற்றுடன் வெற்றிலைச்சாறு 2 வராகனெடை வீதமும் எடுத்து நன்றாக அரைத்துத் தேனுடனே குழப்பி 4 அல்லது 5 நாட்கள் உட்கொள்ளவும். இரத்தக் கழிச்சல் தீரும்.

## 222. கிராணி, இரத்தக் கடுப்பு, இரத்தக் கழிச்சலுக்கு மருந்து

நெல்லிமுள்ளி இலவுபிசின் காசுக்கட்டி
  நேரரன சீரகத்தோ டிந்தநாலுஞ்
மெல்லியதோர் படிசமன்கொண் டெருமைப்பாலைத்
  தோய்த்ததயி ரினிற்கொள்ளு மஞ்சுநாளே
அல்லல்செயுங் கிராணிரெத்தக் கடுப்புந்தீரு
  மல்லாமல் கழிச்சல்நிற்கு மதுதப்பாமல்
வல்லவனாஞ் சரபோசி மகராசன்றான்
  வகையுடனே யுரைத்ததிந்த மருந்துதானே. (உகஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| நெல்லிமுள்ளி | இலவம்பிசின் |
| காசுக்கட்டி | சீரகம் |

இவைகளை வகைக்கு 2 வராகனெடை வீதமெடுத்து எருமைப்பாலைத் தோய்த்த தயிருடன் 5 நாட்கள் உட்கொள்ளவும். கிராணிகள், இரத்தக் கடுப்பு, கழிச்சல், முதலானவை தீரும்.

## 223. வயிறு கழிச்சலுக்கு மருந்து

செந்நாயி னுருவிவேர் மையதாகத்
  திறமாக வரைத்துகொட்டைப் பாக்கின்மாத்திரம்
நன்றாகத் தயிருழக்க தனிலேயுண்ணு
  நாளஞ்சாறு தன்னில்வயிற் கழிச்சல்தீரும்
யென்னாசொன் னேனென்றெண் ணாதேதக்கோ
  ரியல்பாகச் சொன்னமுறை யிதையுந்தானே
சன்னாகஞ் சூழகளிற் நடத்துமெங்கள்
  சரபேந்திரன் நிர்ணயித்த முறையிதாமே. (உகரு)

(இ-ள்)

செந்நாயுருவி வேரை மைபோலரைத்துக் கொட்டைப்பாக் களவெடுத்துத் தயிருடன் கூட்டி உட்கொள்ளவும், 4 அல்லது 5 நாட்களுள் வயிறு கழிச்சல் நிற்கும்.

## 224. சலக்கழிச்சலுக்குக் குறுவைக்களி

இதமான குறுவைபச்சை யரிசிதன்னை
யிடித்துரிய மாவுமொரு படியெடுத்து
சதமான வருகுநன்றாய்த் துவைத்துமாவு
தனிற்போட்டு ரேகிக்கத் துவைத்துநன்றாய்ப்
பதமான பழந்தண்ணீர் விட்டுத்தானே
பணுக்குடனே களியாகக் கிளறிக்கொண்டுச்
சிதமான பனைக்கருப்புக் கட்டிகூட்டித்
தின்னிரண்டு வேளையுந்தான் களியைத்தானே. (௩கூச)

களியையஞ்சாறு நாளுண்ணு பாருநீரின்
கழிச்சல்முத லானதெல்லாம் நின்றுபோகுஞ்
சலமான கழிக்சல்நின்ற வுடனேமூலி
தனைவிட்டு விடுநன்மை தானேயாகும்
அளிபாடுந் தண்டலைசூழ் சோழநாட்டுக்
கதிபதனென்னுர்க் கதுலமமுக் கனிதேன்பாய்ந்து
வளமான சென்னல்வளர் தஞ்சையாளு
மகராஜன் சரபேந்திர னுணர்ந்ததாமே. (௩கூ௫)

(இ-ள்)

குறுவையரிசி (பச்சரிசி)யை இடித்து மாவாக்கி அதனுடன் அருகம்பில், மாவுக்குச் சரியளவு எடுத்துத் தண்ணீர் விட்டு அடுப் பின் மேலேற்றிச் சூடு இருக்கையில் பனைவெல்லம் சேர்த்து காலை, மாலை, இருவேளையிலும் உட்கொள்ளவும். இவ்வாறு 5 அல்லது 6 நாட்கள் சாப்பிடவும், சலக்கழிச்சல் தீரும்.

## 225. சலக்கழிச்சலுக்கு மருந்து

ஆவார மொக்குக்குள் ளிருக்குமல்லி
யரிசியெடுத் தேபசுவின் மோருதன்னை
யேவார்த்துப் பிட்டவிய லாயவித்து
மேயரைத்த விழுதும்விளாங் காயம்மாத்திரந்
தாவுமெரு மைத்தயிரைக் கட்டிதூக்குந்
தயிரிலே குழப்பியுந்தான் காலையந்தி
நீவாயி னாலுண்ணு மஞ்சாறு நாளும்
நெடுநாளின் சலக்கழிசல் தீருந்தானே. (ருகூசு)

தீருமிதற் குப்பத்தியம் நெல்லிக்காயைத்
திறமான பசுவின்மோர் தனிலவித்து
சீருடனே கறிபண்ணி யுண்ணுநன்றாந்
திரைகடலி னுப்புடனே புளிப்புந்தள்ளு
பாருலகோ ருக்காக முனிவோர்சொன்ன
பண்டுள நூல் பலவுமிக நுணுக்கமாகக்
கூருடனே யுணர்ந்துதஞ்சை நகரையாளுங்
கொற்றவனாஞ் சரபேந்திர னுணர்ந்ததாமே. (ருகூஎ)

(இ-ள்)

ஆவாரை மொட்டுக்குள்ளிருக்கும். மல்லி போன்ற அரிசியை யெடுத்துப் பசுவின் மோர்விட்டுப் புட்டவியலாக அவித்து அரைத்த விழுது ஒரு விளாங்காய்ப் பிரமாணமெடுத்துக் கொள்ளவும். எருமைத் தயிரை ஒரு துணியின்மேல் வைத்து வடிக்கட்டிக் கெட்டியான திப்பியுடன் மேற்சொன்ன விழுதைக் குழப்பித் தினம் இரு வேளை காலையிலும் மாலையிலும் 5 அல்லது 6 நாட்கள் சாப்பிடவும், நாட்பட்ட சலக்கழிச்சல் தீரும்.

பத்தியம்:—

நெல்லிக்காயைப் பசுவின் மோரில் அவித்துக் கறி பண்ணிச் சாப்பிடவும். உப்பு, புளி முதலானவைகளைத் தள்ளவும்.

## 226. சலப்பிளவை, சலக்கழிச்சல், நீர், பிணம் நாற்றம், ஈ யெரும்பு மொய்த்தல், சுண்ணாம்பு நீர் போலிறங்குதல், முதலானவைகளுக்கு கிறுதம், எண்ணெய் வகைகள்.

வன்னியா சாலொதியுங் கிளுவையத்தி
யாத்திபிலா மருதுநாவல்
கொன்னைபரு மரம்விளாமா கருவேலம்
கடலறஞ்சி கூவிளத்தோ
டுன்னுநீ ராம்பலடம் புஞ்செவ்வ
கத்திலத்தோ டுத்தபட்டை
சொன்னயிரு பதுவகையும் வகைக்கிரண்டு
பலமதுவுந் துகையாய்க் கூட்டே. (௫௯௮)

கூட்டுகீழ் காய் நெல்லிகறுக் கும்வாய்நெல்
லிநல்ல குண நன்னாரி
நாட்டிநா ரத்தைநாய் முசுட்டையுட
னேகதித்த நாரத்தம்வேர்
தேட்டிடிந்த வகைவேரும் வகைக்கிரண்டு
பலம்நிறுத்தும் சேர்த்துக் கொள்ளு
வாட்டமில்லா தண்ணிவிட்டான் கிழங்கும்வா
ழைக்கிழங்கும் வகையொன்றுக்கே. (௫௯௯)

வகையொன்றுக் குமிரண்டு பலமுத்தக்
காசுடனே மஞ்சள் ரெண்டுந்
துகையுடனே யதுவுமிரண் டேபலமா
மாகமுப்ப துவகையாச்சு
அகமகிழு மாதளையி னிலையுமப்
பூவும்பல மதுவேரெண்டு
சகமகிழு மாதளையின் பழம்பத்து
யத்திக்காய் சாத்தக்கேளே. (௬௦௦)

சாத்துபல மைந்திந்த முப்பத்தி
நாலுவகை தான் மருந்து
மேத்தபடி சிறுசிறு கத்தரித்தோ
நிதானமொன்று மிதற்குச்சொல்வேன்
சாத்திரத்தின் படிநாழிப் பொடிக்குநா
லுமரக்கால் தண்ணீர்விட்டு
ஏத்தியடுப் பினிலெரித்து நாழியாகக்
காய்ச்சிப்ப டிக்குத்தானே. (சாக)

இந்தவள வுப்படிக்கு யெத்தனைதூ
ளிருந்தாலிப் படிநீர்விட்டு
தொந்தமுட னொன்றாக யிரண்டுபடி
யளந்து கற்கஞ் சொல்வேன்கேளு
விந்தையபின் கழஞ்சிரண்டு சாதிக்கா
யைந்துடனே மிகுதியான
கந்தமிகுஞ் சாதிபத் திரியுந்திப்
பிலியிலவங் கப்பட்டையே. (சாஉ)

பட்டையுட னதிமதுரம் வராகனெடை
யாறுவகை யாகும்பச்சை
வெட்டுச்சந் தனமுஞ்செஞ் சந்தனமும்
பலமரையாம் வீதந்தானே
சட்டமிகும் புனுகுபண வெடைபத்துங்
கதலிகனி தானுங்கேளு
திட்டமா யன்பதுகு மும்புப்பா
லும்பதக்குச் சேர்த்துக்கொள்ளே. (சாங.)

சேர்த்துக்கடைச் சரக்கெல்லாங் கடாயம்விட்
டேமைப்போல் சீரதாகச்
சேர்த்தரைத்து நல்லெண்ணெய் பதக்குவிட்டெல்
லாங்கலக்கித் தீயையிட்டு
போத்திசிவ பூசைசெய்து யிறக்கிக்கொள்
நன்றாய்ப்பொன் னிறமதாக
யேத்தபடி மெழுகுபதங் கண்டிறக்கித்
தெளியவைத்து இறுத்துக் கொள்ளே. (சாச)

கொண்டுகடு குண்டான தினீலேயரை
விராகனெடை கொள்ளேழாநா
ளுண்டபின்பு முன்னிறுத்த யெண்ணெய்தனை
யெடுத்தேழுக் கூட்டாகத்தான்
அண்டியேவார்த் தேழுநா ளும்புளிபு
கையிலையு மறந்துபோடு
கண்டிதமாய்க் கிரந்தியில்லாக் கறிகூட்டு
வெந்நீரும் கலந்துகொள்ளே. (சா௫)

கலந்துகொள் ளெட்டுநாட் கொருக்காலுந்
தலையைமுழு கதற்குத்தானே
சலப்பிளவை முதலான நீர்விழுத
லந்நீரைத் தானேயோட்டில்
நலத்துடனே வாங்கியதை முகரில்பிணம்
நாறுதல்சுண் ணாம்புபோலே
கலக்கி விழு தலெறும்பு மீயொய்த்த
லெல்லாம கன்றுபோமே. (சா௬)

(இ-ள்)

| | |
|---|---|
| வன்னி | அரசு |
| ஆல் | ஓதியம் |
| கிளுவை | அத்தி |
| ஆத்தி | பிலா |
| மருது | நாவல் |
| கொன்னை | பெருமரம் |
| விளா | மாமரம் |
| கருவேல் | கடலிறஞ்சி |
| வில்வம் | நீராம்பல் |
| அடம்பு | செவ்வகத்தி (செவ்வகநிலப்பட்டை) |

இவைகளின் பட்டை வகைக்கு 2 பலம்

| | |
|---|---|
| கீழாநெல்லி | நெல்லி |
| நன்னாரிவேர் | நாரத்தை |
| நாய்முசுட்டை | நாரத்தம்வேர் |

இவைகளின் வேர்கள் வகைக்கு 2 பலம் நிறுத்தெடுத்துக் கொள்ளவும்.

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான் கிழங்கு | வாழைக் கிழங்கு |
| கோரைக் கிழங்கு | மஞ்சள் |

இவைகளும் வகைக்கு 2 பலம்

| | |
|---|---|
| மாதுளையிலை | — 2 பலம் |
| மாதளம்பழம் | — 10 |
| மாதுளம்பூ | — 2 பலம் |
| அத்திக்காய் | — 5 பலம் |

இந்த 34 வகைச் சரக்குகளையம் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வைத்துகொள்ளவும். கத்தரித்து தூள் 1 படிக்கு 4 மரக்கால் வீதம் எல்லாவற்றிற்கும் தக்க அளவு சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றாகும் வரை எரித்து வைத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| சுத்திசெய்த அபினி | — 2 கழஞ்சு |
| சாதிக்காய் | — 5 |
| சாதிப்பத்திரி | — 6 வராகனெடை |
| திப்பிலி | ,, |
| இலவங்கப்பட்டை | ,, |
| அதிமதுரம் | ,, |
| சந்தனவிழுது | — ½ பலம் |
| செஞ்சந்தனவிழுது | — ½ பலம் |
| புனுகு | — 33 குன்றியெடை |
| வாழைப்பழம் (கனிந்தது) | — 50 (எண்ணிக்கையில்) |
| பசுவின் பால் | — மரக்கால் |

இவைகளுள் கடைச் சரக்குகளை எல்லாம் தனியாக வெடுத்து முன் சொன்ன கஷாயம் விட்டு நன்றாக வரைந்து நல்லெண்ணெய் 2 மரக்காலும் (20 சேர்) விட்டு எல்லாவற்றை யும் ஒன்று கலந்து அடுப்பின்மேலேற்றி எரித்துப் பொன்னிற மானவுடன் அதாவது கல்கம் மெழுகு பதமானபின் இறக்கித் தெளியவைத்துவிடவும்.

நோயாளி இதன் கடுகைத் தனியாயெடுத்து $\frac{1}{2}$ வராக னெடை அளவு 7 நாட்கள் உட்கொள்ளவும்.

எண்ணெயை (நெய், ஆமணக்கெண்ணெய்) இவைகளுடன் சேர்த்து முக்கூட்டாக்கி? 7 நாட்கள் தலைமுழுகவும்.

**பத்தியம்:—**

புளி. புகையிலை, முதலியவற்றை நீக்கவும். கரப்பான் இல்லாத கறிவகைகளைக் கூட்டவும். வெந்நீர் சேர்த்துக் கொள்ளவும். 8 நாட்களுக்கொருதடவை எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்யவும்.

**தீரும் நோய்கள்: —**

சலப்பிளவை, நீர்விழுதல், பிணம் நாற்றம், சுண்ணாம்புக் காரம் முதலான நெடியுடன் கூடிய கழிச்சல் தீரும்.

கிரந்தி. கரப்பான் பதார்த்தங்கள்:— கத்தரிக்காய், சாமை முதலியவை.

## 227. வங்கபற்பம் நீர்க்கழிச்சல், நீரிழிவுக்கு

சசடமுள்ள வெள்வங்கம் நறுக்கிப்போட்
டடுப்பினிலே சட்டிவைத்து
வட்டத்துத் தியின்வேரைக் குறுகநறுக்
குந்தூளை வயணமாகச்
சட்டியினிற் றூவியெண்ணெய்க் கரண்டியினால்
பத்திக்கத் தானேபற்பந்
திட்டமதாம் பற்பமதைச் சட்டிதனி
லேகுவித்துச் செய்யக்கேளே. (சாஎ)

செய்யக்கேள் மருதம்பட் டையைப்பசுமை
யாகபொடி செய்தேயந்த
துய்யபற்பத் திநடுவே மருதம்பட்
டையினுடைய தூளைப்போட்டு

ஐயமில்லா மலுமந்தப் பற்பத்தால்
மூடிசட்டி யதைக்கவிழ்த்துப்
பய்யவொரு சாமமெரி பொடிபோட்டுச்
செந்தூரம் பார்க்கலாமே. (சாஅ)

ஆமதையு மெடுத்துப்பர ணியிலடக்கிக்
கல்மதங்கொன் றைக்கொழுந்தும்
பூமிவள ராவாரைக் கொழுந்துவிரை
யதுநாலும் புகலக்கேளு
நேமமுட னொவ்வோரு பலமிடத்து
வடிக்கட்டி நீவைத்துக்கொ
ளாமிந்தத் தூளில்கழஞ் செடுத்துக்கொள்
சிந்தூர மதிலுந்தானே. (சாகூ)

சிந்தூரந் தன்னிலொரு பணவெடையும்
பசுவின் வெண்ணெய்ச் சேர்த்துக்காலை
யுந்தானே கொள்ளிதற்குக் குடிநீரும்
வரள்குன்றி லுடனேதானே
சுந்தரநற் பூவரசம் பட்டையும்நீர்
நாழிவிட்டுச் சுறுக்காய்த்தானே
யுந்தணலை விட்டுழக்காய்க் காய்ச்சிமேற்
கொள்ளுமிது வுண்மைதானே. (சுய)

தானிதையுங் காலையந்தி ஐந்தாறு
நாட்கொள்ளு கணக்கதாக
மானிடர்க்கும் வரும்நீரின் கழிச்சல்முதல்
நீரிழிவும் வாங்கிப் போகும்
நாநிலத்தி லெறும்புகடை யானைதனல
யானவுயிர் தன்னைக்கார்க்கு
மானிடமேந் திக்கிறுபை பெற்றதஞ்சை
விபுவுணர்ந்து வருளினாரே. (சுகக)

(இ-ள்)

வெள்வங்கம் ஒரு பலமெடுத்துச் சுத்தி செய்து வைத்துக் கொள்ளவும். ஒரு அடுப்பின்மேல் சட்டியை வைத்து, வட்டத் துத்தியின் வேரைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி இடித்த

தூளையும், வெள் வங்கத்தையுமிட்டு எண்ணெய்க் கரண்டியி னால் மத்தித்து வரவும். சிறிது நேரத்தில் பற்பமாகும். இதனைச் சட்டியின் நடுவில் குவித்துக்கொண்டு மருதம்பட்டையைப் பசுமையாக பொடி செய்து பற்பத்தின் நடுவில் வைத்து மேற் படி பற்பத்தினால் மூடி அதன் வாய்க்குத்தக்க வேறு சட்டியால் மூடி மறுபடியும் ஒருசாமம் எரிக்கவும். நன்கு செந்தூரமாகும்.

இதனையொரு ஜாடியில் பத்திரப்படுத்திக்

கல்மதம்
ஆவாரங்கொழுந்து
கொன்றைக்கொழுந்து
ஆவாரைவிரை

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டு இடித்து வஸ்திரகாயம் செய்யவும். ஷை சூர ணம் $1\frac{1}{4}$ வராகனெடைக்கு வெள்வங்கபற்பம் $3\frac{1}{8}$ குன்றியும் பசுவின் வெண்ணெயும் சேர்த்துக் குழைத்து உட்கொள்ளவும். இதற்கு அனுபானமாக

வரள்குன்றி
பூவரசம்பட்டை

இவ்விரண்டையும் வகைக்கு 1 பலமெடுத்து இடித்து ஒரு படி தண்ணீர் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகக் காய்ச்சிப் பருகவும்.

இம்மாதிரி 5 அல்லது 6 நாட்கள் சாப்பிடவும். நீர்க் கழிச் சலும், நீரிழிவும் தீரும்.

## 228. சலக்கழிச்சலுக்கு மருந்து

சலக்கழிச்ச லுக்கும்பே ராமுட்டி
வேரிலைச்ச மூலங்கொண்டு
முலர்த்தியிடித் துத்தெள்ளித் தெள்ளியமா
வதுவுமுழக் கதுவுங் கூட்டி
நலப்புண்ணாக் குமிடித்து வடிக்சட்டுந்
தூளுழக்கு நாடிக்கூட்டி
திலத்தெண்ணெ யுழக்கதனில் விட்டுக்கலந்
தைந்தாறு தினமுங் கொள்ளே. (சகஉ)

தினங்கொள்ளு மதிகாலை யந்தியுமே
வெருகடிதூள் தின்னிதற்கு
மினித்தீரும் வியாதிசலக் கழிச்சலுட
னேபோகு மினியதான
வனப்புமிகுந் தஞ்சைநகர் தனையாளுந்
துரையொன்னார் மார்பிலாணி
நினைத்தபடி முடிக்கும்வள்ளல் சரபேந்திர
மகிபதிநிச் சயித்ததாமே. (௨௬௩)

(இ-ள்)

பேராமுட்டிவேர், இலை இவைகளைக் கொண்டுவந்து நன்றாக உலர்த்தி இடித்து வஸ்திரகாயஞ் செய்த தூள் ஒரு உழக்கு எடுத்துக்கொள்ளவும். இதனுடன், எள்ளுப் புண்ணாக்குத் தூள் (வடிக்கட்டினது) ஒரு உழக்கும் எடுத்து ஒன்றுகலந்து 5 அல்லது 6 நாட்கள் உட்கொள்ளவும். தினமும் காலையிலும் மாலையிலும் மூவிரல் கொள்ளுமளவெடுத்துச் சாப்பிடவும். சலக்கழிச்சல் தீரும்.

## 229. சலக்கழிச்சலுக்கு "வடகம்"

செங்கழுநீர்க் கத்தரிக்காய் பத்துவெல்லம்
பலம்பத்துச் சேர்த்தெள்ளெண்ணெய்
யுங்கடுகின் பிண்ணாக்கும் பலம்பத்து
செஞ்சோள மும்மாவாக்கி
பங்கிடாய் நாலுவகை யுமிடித்தோர்
கலசத்திற் பதனம்பண்ணி
பொங்கயெலு மிச்சங்கா யளவுண்ணச்
சலக்கழிச்சல் போகுந்தானே. (௪௬௪)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| செங்கழுநீர்க்கத்தரிக்காய் | — | பத்து |
| வெல்லம் | — | பத்து பலம் |
| எள்ளுப்பிண்ணாக்கு | — | ,, |
| செஞ்சோளமாவு | — | ,, |

இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்து ஒரு கலசத்திலிட்டுப் பத்திரப்படுத்தவும். இதில் ஒரு எலுமிச்சங்காயளவெடுத்து உட்கொள்ளவும். சலக்கழிச்சல் நிற்கும்.

குறிப்பு:—

செங்கழுநீர்க் கத்தரிக்காய் — நீலநிறமுள்ள கத்திரிக்காய்.

## 230. சலக்கழிச்சலுக்குச் சூரணம்

தென்னம்பா ளையும்சோளப் பொரியாவா
ரம்விரையூதிக் கழக்கொழுந்து
வன்னவெள்ளைக் குங்கிலிய காசுக்கட்
டியுமோமம் வளமதாகச்
சொன்னதலாற் பிண்ணாக்கி னிலைமருந்து
யொன்பதையுந் தூளதாக்கிப்
புன்னைக்கா யளவுகொம்புற் றேனிலுண்ண
சலக்கழிச்சல் போகுந்தானே. (சகடு)

(இ-ள்)

| | |
|---|---|
| தென்னம்பாளை | ஆவாரம்பூ |
| சோளப்பொரி | வெள்ளைக்குங்கிலியம் |
| ஆவாரம் விரை | காசுக்கட்டி |
| ஓமம் | ஆவாரங் கொழுந்து |
| பிண்ணாக்கிக் கீரையின் இலை | |

இவைகளைக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ்செய்து பத்திரப் படுத்தவும். இத் தூளில் புன்னைக் காயளவெடுத்துத் தேனில் குழைத்து உட்கொள்ளவும். சலக் கழிச்சல் தீரும்.

## 231. சலக்கழிச்சலுக்கு மருந்து

கருகவருத் தாவார மிலையைப்பொடி
செய்துமிரு கழஞ்சுதானே
தருமிலவம் பிசினாஞ்சரி பொடிசெய்து
கலந்துதேன் றனிலேகொள்ளு

மிருநேர மைந்தாறு நாளதனிற்
சலக்கழிச்ச லேகும்பாரு
திருமாது வளர்மார்பன் றஞ்சைவிபு
சரபேந்திரன் செப்பும்வாறே. (சகசு)

(இ-ள்)

ஆவாரம் இலையை ஒரு சட்டியிலிட்டுக் கருக வறுத்து, இடித்து 2 கழஞ்சளவெடுத்துச் சரிஎடை இலவம்பிசின் பொடித்துச் சேர்த்துத் தேனுடன் குழைத்துத் தினம் காலையிலும் மாலையிலும் 5 அல்லது 6 நாட்கள் சாப்பிடச் சலக்கழிச்சல் நிற்கும்.

## 232. சலக்கழிச்சலுக்கு வேறு

ஆவாரஞ் சாற்றில்பொன்னாங் கணிவேரு
முருக்க மொட்டு மரைத்தாப்பாலி
லேவாய்ப்பாய் குழப்பியதி காலையிற்கொள்
சலக்கழிச்சல் நில்லாதோடும்
மாவாரணப் பவனிவரும் ரதத்திதனி
லனந்தன் வலத் தோள்தான் விட்
டேவாங்கி யிடத்தோளிற் றாங்குமுர
மிகுமானு மியம்பும்வாறே. (சகஎ)

(இ-ள்)

ஆவாரம் இலைச்சாற்றுடன் பொன்னாங்காணி வேர், முருக்க மொட்டு இவற்றை நன்றாக அரைத்துப் பசுவின் பாலுடன் குழப்பி அதிகாலையில் உட்கொள்ளவும், சலச்கழிச்சல் தீரும்.

## 233. சலக்கழிச்சலுக்கு மருந்து

ஆவாரம் விரைப்பொடியு முழக்குவேர்ப்
பொடியதுவு மழக்குக்கூட்டி
யேவாய்ந்த யெருமைமோ ரினிநனைத்து
மறுநாளு மெடுத்தரைத்து

தூவுமென் பொடியாகக் காந்தமதைப்
பொடித்துகலந் துடனே கொள்ளு
ஆவலுடன் சலபாதை தீர்க்குமுன்னே
சலக்கழிச்ச லகலுந்தானே. (சகஅ)

(இ-ள்)

ஆவாரம் விரைச்சூரணம் — ஒரு உழக்கு,
ஆவாரம் வேர் சூரணம் — இரண்டு உழக்கு,

இவ்விரண்டையும் எருமை மோரில் நனைத்து ஒரு நாளைக்கு ஊறவைத்து மறுநாள் இதையரைத்து, இதனுடன் சுத்திசெய்த காந்தத்தைச் சூரணித்துக்கலந்து சலபாதை போவதற்குமுன் உட்கொள்ளவும், சலக்கழிச்சல் தீரும்.

## 234. சலக்கழிச்சலுக்கு மருந்து

உப்பிலிவேர் புறந்தோலும் பருத்திக்கொட்
டையின் பருப்பு முசிதமான
தப்பிலாச் சருக்கரையு மோரொன்றுக்
குமெலுமிச் சங்காய்மாத்திர
மொப்புடனே யரைத்துப்ப ழந்தண்ணீரிற்
கொள்காலை யுந்தான் வாயாற்
செப்புசலக் கழிச்சலறுஞ் சிவகிருபை
தன்னாலே சகத்திற்றானே. ( சகூ )

(இ-ள்)

| | | |
|---|---|---|
| உப்பிலாங்கொடி வேரின் மேல்தோல் | — | ஒரு எலுமிச்சங்காய் அளவு |
| பருத்திக்கொட்டைப் பருப்பு | — | ,, |
| சர்க்கரை | — | ,, |

இவைகளை அம்மியின் மேல்வைத்துப் பழய தண்ணீர் விட்டு அரைத்து அதிகாலையில் உட்கொள்ளவும். சலக்கழிச்சல் நீங்கும்.

# 235. சலக்கழிச்சலுக்குச் சூரணம்

ஆவாரம்வேர்ப் பட்டையொரு சிறங்கை கட
    லிறஞ்சிப்பருப் பதுதோற் போக்கித்
தேவையிரண் டேபலமுங் களிப்பாக்கு
    மேழுபலஞ் சேர்த்துக் கொள்ளு
பூவரசம் பட்டையொரு சிரங்கையதி
    மதுரமது புதியதாக
வாவலுட னேழுபல முங்காசு
    கட்டியுமவ் வகைபோலாறே. (சஉ0)

வகையுடனே யறுமருந்து முலர்த்திச்சூ
    ரணஞ்செய்து வடிக்கட்டிக் கொள்
திகழ்பருத்தி யிலைச்சாறு தன் சாறாய்
    நானாழிச் சீரதாகத்
துகையுடனே பிழிந்துவொரு சட்டிதனிற்
    பொடிபோட்டுத் துரிசதாகற்
றகையுளசாத் தையும்விட்டுப் பிசறிரவி
    தன்னில்வைத்துத் தானுலர்த்தே. (சஉக)

தானுலர்த்தி வைத்துக்கொள் முகிழ்விரியா
    தாவாரந் தன்கொழுந்தைத்
தானேயொரு பிடிகொண்டு வந்தோர்பா
    னைக்குள்தண் ணீரைவார்த்து
நீனயமாங் கொழுந்திலெரு மைமோரி
    னிற்பிசறி நேமத்தோடே
யானபிட்டு சுட்டுவெந்த கொழுந்திலுரி
    யாப்பாக்கி னளவுதானே. (சஉஉ)

பாக்கினள வுமரைத்து முன்றூளிற்
    சமன்சேர்த்துப் பண்பாய்த்தானே
தாக்குமொரு சிரங்கையெரு மைமோரி
    னிற்கரைத்துத் தானேகொள்ளு
நீக்கறிய சலக்கழிச்சல் தியாகியைக்கா
    ணுங்கலிபோல் நீங்கியோடுந்
தாக்குதண்ணீர் தாகம்வரிற் றூளதனிற்
    காசளவு தானும்போடே. (சஉங)

காசளவு போட்டுவுரி மோரினிலே
கொள்தாகங் கனமாய்த்திரு
மாசையுடன் பொன்னாங்க ணிக்கீரை
சிறுக்கீரை யத்திக்காயும்
பாசமுடன் வாழையுட கச்சலெரு
மைமோரும் பத்தியங்கொள்
தேசமதிற் புகழ்பெற்ற தஞ்சைசர
பேந்திரனுணர்ந் திதுவுமாமே. (சஉச)

(இ-ள்)

| | |
|---|---|
| ஆவாரம் வேர்ப்பட்டை | — ஒரு சிறங்கை |
| கடலிறஞ்சிப்பருப்பு (தோல் நீக்கியது) | — 2 பலம் (சிறங்கை) |
| களிப்பாக்கு | — 7 ,, |
| பூவரசம்பட்டை | — ஒரு சிறங்கை |
| புதிய அதிமதுரம் | — 7 பலம் |
| காசுக்கட்டி | — 6 ,, |

இவைகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் காயவைத்து, கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, ஒரு பாத்திரத்திலிட்டுப் பருத்தியிலைச்சாறு 4 படிவிட்டுப் பிசறி வெயிலில் வைக்கவும். இலைவிரியாத ஆவாரங்கொழுந்து ஒரு பிடிகொண்டு வந்து வைத்துக்கொள்ளவும். அதை ஒரு பானையி லிட்டுத் தண்ணீர் வார்த்து, வேடு கட்டி அதன்மேல் எருமை மோர் விட்டுப்பிசறிய ஆவாரங் கொழுந்தை மறுபடியும் வைத்து மறுசட்டி கொண்டு மூடி அடுப்பின் மேலேற்றிப் பிட்டு மாதிரி சுடவும். பின்னர் வெந்த இக்கொழுந்தில் ஒரு பாக் களவும், முன் கூறிய சூரணம் ஒரு பாக்களவும் எடுத்து நன்கு அரைத்து, எருமைமோர் ஒரு சிறங்கையுடன் குழப்பி உட் கொள்ளவும். சலக்கழிச்சல் தீரும்.

அதிகமான தண்ணீர் தாகம் ஏற்பட்டால் முன் கூறிய தூள் 1 வராகனெடை இடவும். மோர் $\frac{1}{2}$ படி சேர்க்கவும்.

பத்தியம்:

பொன்னாங்காணிக்கீரை, சிறுகீரை, அத்திக்காய், வாழைக் கச்சல், எருமைமோர் இவைகள் கூட்டிக்கொள்ளலாம்.

## 236. சலக்கழிச்சலுக்குக் "கதலிபஞ்சாங்க மாத்திரை"

கதலிபஞ்சாங்க மாத்திரை சொல்வேன்
மானிடர்க்குசலக் கழிச்சலுக்கு
இதமான கருவாழைக் காய்பிஞ்சு
பூகிழங்கு யிதுவகைக்கு
விதமாக வைந்துபலங் கானில்வளர்
ராவாரை விரையுந்தானே
பதமாகச் சிரங்கைரெண்டு யுசிதமாங்
கடலிறஞ்சிப் பட்டைதானே. (சஉரு)

பட்டை கல்மத மிரண்டும் வகைக்கு
பலமஞ் சிதெல்லாம் பங்கிடாக
சட்ட கறுவாழைக் குள்குறுத் தேழுக்
குள்வைத் துத்தான் சுருட்டி
கட்டிமண் சீலையுஞ் செய்துயெ ருமுட்டை
யடுக்கிப் புடக்கனலிற் போட்டு
கட்டுமண் ணுங்கறு கினவாறே யெடுத்து
வம்மண லைக்கழட் டிப்போடே. (சஉசு)

போட்டெரு மைத்தயிர் வார்த்துவ ரைத்துப்
புன்னைக் காயளவு போலுமுண்டை
நாட்ட முடன்செய்து வதைக்கூ ரெள்ளி
னெண்ணெய் தனில் நாழி விட்டு
போட்டிடித் தவுண்டை யதில்வேடு கட்டி
வுரியத ஙிற்பொருந் தவைத்து
மூட்டி டதிகாலை யினிலோ ருண்டை
யெண்ணெயொ ருமுட்டை தானே. (சஉஎ)

ஒரு முட்டை யெண்ணெயு மேற்கொள் ளிதற்குப்
பத்திய முமொண் பிண்ணாக்குந்
தருவி லுருமத் தியின்பிஞ் சுங்கறு
வாழைப்பிஞ் சுந்தானே கூட்டு

திருகு செய்யுஞ் சலக்கழிச்சல் முதலான
கழிச்ச லெல்லாந்தீர்ந் தேபோகு
மருவ லர்கள் மார்பர ணிதஞ்சை
சரபேந் திரனுணர் மருந்திதாமே. (சஉஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| கறுவாழைக்காய் | கறுவாழைப் பூ |
| கறுவாழைப் பிஞ்சு | ,, கிழங்கு |

இவைகளை வகைக்கு 5 பலம் வீதம் எடுத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| ஆவாரம் விதை | —2 சிறங்கை |
| கடலிறஞ்சிப் பட்டை | —5 பலம் |
| கல்மதம் | — ,, |

இவைகளைச் சூரணித்து வாழைக் குறுத்துக்குள் பரவலாக இட்டுச் சுருட்டிச் சீலைமண் செய்து காயவைத்து எருமுட்டை யடுக்கி அதற்குள் வைத்துப் புடமிடவும். கவசம் செய்த மண் கருகியவுடன் புடத்தை அணைத்துத் தனியாகப்பிரித்து அக் குருத்தை யெடுத்து எருமைத் தயிர்விட்டு நன்கு அரைத்துப் புன்னைக்காயளவுள்ள மாத்திரை உருட்டி, நல்லெண்ணெய் 1 படி விட்டு அதிலிட்டு ஊறவைத்துக் கொள்ளவும். தினந் தோறும் காலையில் ஒரு உருண்டையும் ஒரு கரண்டி எண்ணெயு மெடுத்து உட்கொள்ளவும்.

**பத்தியம்:-**

அத்திப்பிஞ்சு, கறுவாழைப்பிஞ்சு இவைகளைக் கூட்டவும். சலக்கழிச்சல் தீரும்.

## 237. செரியாமல் சோறு சோறாய்ப்போதல், வாயு, இரைச்சல், பொருமல், கழிச்சல் முதலானவைகளுக்கு மருந்து

முருங்கையினீர்க் குங்கொழிஞ்சி வேருஞ்சா
ரணைவேரு மிளகுந்தானே
கரங்களினா லொருபிடியுஞ் சுக்குத்தே
றஞ்சுவுள்ளி கணக்கு மூன்று

மருந்தாறும் நறுக்கியொரு படிதண்ணீர்
சட்டிதனில் வார்த்துழக்காய்
வருமட்டுங் காய்ச்சியதி காலையிற்கொள்
மூன்றுநாள் வரைக்குந்தானே. (சஉசு)

தானே நீ கொள்ளிதற்கு வுண்டிடுஞ்சோ
றுஞ்சோறாய் சமியாமல் தான்
வூனமுறு வாய்வினா விரைந்துபொரு
முங்கழிச்ச லுடனேதீருந்
தானதர்ம மிகுந்தன்ன சத்திரமு
மிலங்குதயா பரனாமின்ப
மான்பான ஞானபரன் றஞ்சைவிபு
சரபேந்திரன் மனுவிதாமே. (சஉஎ)

(இ-ள்)

முருங்கையீர்க்கு
கொழுஞ்சி வேர்
சாரணை வேர்
மிளகு இவைகள் வகைக்கு ஒரு பிடி

| | |
|---|---|
| சுக்குத் தேறு | — 5 பிடி |
| உள்ளிப் பருப்பு | — 3 ,, |

இவைகளைக் கல்லுரலிலிட்டு நசுக்கி ஒரு சட்டியிலிட்டுச் சுத்த ஜலம் 1 படி (5 சேர்) விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி இறக்கவும்.

இக்கஷாயத்தைத் தினம் அதிகாலையில் பருகவும். இவ்வாறு 3 நாட்கள் செய்யவும்.

சோறு சோறாய் மலம் வெளியாதல், வாயுவினால் இரைந்து வெளியில் போகுதல், பொருமலுடன் கூடிய கழிச்சல் முதலானவைகள் தீரும்.

## 238 வயிறு கழிச்சலுக்குச் "சுக்கு மருந்து"

வாயுவினா லுட்டினத்தால் செவ்வலாய்
சோறு சோறாய் வயிறுகழிந்து
சாயுமதுக் கோர்மருந்து சுக்குத்தேறு
மேற்றோலைத் தானேசீவி
யேயுப்பிற் புடமிட்டு யெடுத்தரைத்து
மறுபடியிப் படியேதானு
பாயமாய்ப் புடமிட்டு வுண்மூன்று
நாள் கழிச்சல் பறக்குந்தானே. (௨௩௧)

(இ-ள்)

சுக்கின் (முற்றித் தேறிய) மேல் தோலைச் சுறண்டிவிட்டு உப்புஜலம் விட்டு ஊறவைத்து அடுப்பிலிட்டுச் சுட்டு விடவும். மறுபடியும் உப்புஜலம் விட்டூறவைத்து அடுப்பிலிட்டுக் கருகி விடாமல் சுடவும். இதனைச் சூரணித்து வைத்துக்கொண்டு 3 நாட்கள் ஒரு வெருகடியள வெடுத்து உட்கொள்ளக் கழிச்சல் நிற்கும்.

## 239. வாயுவால், வெள்ளுடைப்பாயரைத்த சோறு போலே வயிறு கழிகிறதற்கு மருந்து

வெந்தயமோர் சிறங்கைநல்ல வசம்புமொரு
விரல்நீளம் வெள்வெங்காயஞ்
சந்தேக மில்லாம லொருபூண்டு
பெருங்காயந் தானுங் கேளு
விந்தையதாந் தேத்தான்வித் தளவிந்த
நாலுவகை விதமருந்தில்
வெந்தயத்தைச் சிவந்தவர்ண மாய்வறுத்துக்
கருகிவரும் வேளைதானே. (௨௩௨)

வேளைதனில் மூன்றுமருந் தையும்போட்டோர்
படிதண்ணீர் விட்டுத்தானே
கேளுமொரு சிரங்கையாகக் காய்ச்சிக்கா
லையந்திக் கிணிதமாக

நாளுமொரு மூன்றதுகொள் வாயுவினால்
வெள்ளுடைப்பாய் நகர்கழிச்சல்
வீளுரது மரைத்தசோறு போலேவயிறு
கழிகிறது மீளுந்தானே. (௨௩௩)

(இ-ள்)

| | |
|---|---|
| வெந்தயம் | — ஒரு சிறங்கை |
| வசம்பு | — ஒரு விரல் நீளம் |
| வெள்வெங்காயம் | – ஒரு பருப்பு |
| பெருங்காயம் | — தேத்தாங்கொட்டைப் பிரமாணம். |

முதலில் வெந்தயத்தைப் பொன்னிறமாக வறுத்துக்கொண்டு, கறுகும் சமயத்தில் மற்ற சரக்குகளையு மிட்டு, தண்ணீர் ஒரு படி சேர்த்து ($1\frac{1}{4}$ சேர்) ஒரு சிறங்கையாகுமட்டும் எரித்துக் காலையிலும் மாலையிலும் 3 நாட்களுக்கு உட்கொள்ளவும். வாயுக் கழிச்சல், வெள்ளுடைப்புக் கழிச்சல், அரைத்த சாதம் போல் உண்டாகும் வயிறுகழிச்சல் முதலானவை தீரும்.

## 240. வாயுவினால் அதிசாரக் கழிச்சலுக்குச் சூரணம்

பச்சைகரு வேப்பிலையும் பொடுதலையும்
வகைக்கோர்பிடி பறித்துவந்து
வச்சமில் லாமல்நாலு நாட்டுசுக்
குத்தோலை யதுவுஞ்சீவி
யிச்சையுள்ள மிளகொருவ ராகனெடை
சட்டிதனி லேவறுத்து
வுச்சிதமாய்ப் பொன்னிறமாய்க் கறுகாம
லிறக்கிப்பொடி யுஞ்செய்வாயே. (௨௩௪)

எருமையுட தயிர்கட்டித் தூக்கியது
பதுநாழி யேயாம்வாறே
துருசுடனே வெருகடி தூள் தயிரினிலே
நன்றாய்மத் தித்துத்தானே

யிருவேளை நாலஞ்சு நாட்கொள்ளு
வாயுவினா லேமென்மேலும்
வருமதிசா ரத்தினுட கழிச்சலெல்லாம்
மிது மன்பாய்ச்செய்யே. (௨௬௫)

(இ-ள்)

| | |
|---|---|
| பச்சைக் கருவேப்பிலை | — ஒரு பிடி |
| பொடுதலை | — ,, |
| தோல் நீக்கிய சுக்குத் தேறு | — 4 |
| மிளகு | — 1 வராகனெடை |

இவைகளையொரு புதுச்சட்டியிலிட்டுப் பொன்னிறமாகும் வரை வறுத்துப் பொடி செய்து வைத்துக்கொள்ளவும். எருமைத் தயிரை ஒரு துணியிலிட்டுக் கட்டி அதன் நீரெல்லாம் வெளியாகும்படி ஒரு நாள் முழுதும் தொங்கவிடவும்.

மறு நாள் ஷெ தயிரில், மூவிரல் கொள்ளுமளவுள்ள தூளை யிட்டுக் குழப்பித் தினம் 2 வேளை வீதம், 4 அல்லது 5 நாட்கள் உட்கொள்ளவும்.

வாயுவினாலேற்பட்ட அதிசாரம், கழிச்சல் முதலானவை நிற்கும்.

## 241. வாயுவினால் வயிறு பொருமிக் கழிச்சலுக்கு மருந்து

வாயுவால் வயிறுபொருமி வெள்ளுடைப்பாய்க்
கழிகிறது மதுக்கொன்றுங் கேள்
நாயுருவி யிலையுமொரு பிடியுள்ளி
பலமொன்று நல்வசம்பு
தாயகமாங் கரிமிளகு மொன்றிதெலா
மரைத்துவுண்டை தானேசெய்து
நீயுதையு மூன்றுநாட்டுண் ணெந்தக்க
ழிச்சலுமே நீங்கிப்போமே. (௨௬௬)

(இ-ள்)

| | |
|---|---|
| நாயுருவி இலை | — ஒரு பிடி |
| பூண்டு | — 1பலம் |
| வசம்பு | — ,, |
| மிளகு | — ,, |

இவைகளை அம்மியின்மேல் வைத்து நன்கு அரைத்து உருண்டைகளாகச் செய்து 3 நாட்கள் உட்கொள்ளவும். கழிச்சல் நீங்கும்.

## 242. வாயு வெள்ளுடைப்புக் கழிச்சல் முதலானவைகளுக்கு மருந்து

குங்கிலியம் வெள்வெங்கா யமிரண்டும்
பொடிசெய்து கொண்டுநன்றா
மிங்கிதெரு மைத்தயிரை வடிக்கட்டி
யழக்குத்தூ ளிதனிற் போட்டு
தங்கையினிற் குழப்பியதி காலையிற்கொள்
ளந்திக்குந் தானேநொச்சி
யிங்கொழுந்து மேழுமிள கும்போட்டு
மோரதுவார்த் தெரித்திடாயே. (சகூஎ)

எரித்துவெந்த வாறுரைத்துக் கலக்கியுமந்
திக்கிக்கொள் ளெட்டுநாளே
உரத்திடுவாய் வதினாலே வெள்ளுடைப்பாய்க்
கழிகிறது மூர்விட்டோடுந்
திருத்தியநூல் க்ஷத்திரியர்சொல் முறைசித்தர்
முறையெல்லாந் தேர்ந்துணந்து
உரைத்தரிந்த மருந்ததனைத் தஞ்சையில்வாழ்
சரபேந்திர னுணர்ந்ததாமே. (சகூஅ)

(இ-ள்)

சுத்திசெய்த குங்கிலியம்
வெள் வெங்காயம்

இவ்விரண்டையும் நன்றாக அரைத்து வடிக்கட்டிய எருமைத்தயிர் விட்டரைத்துக் கையில் குழைத்து அதிகாலையில் உட்கொள்ளவும். சாயங்கால வேளையில்

| | |
|---|---|
| நொச்சிக் கொழுந்து | —7 |
| மிளகு | —7 |

இவ்விரண்டையும் மோர்விட்டு நன்கு வேகவைத்து உட்கொள்ளவும்.

இவ்வாறு 8 நாட்கள் உபயோகிக்க வெள்ளுடைப்புக் கழிச்சல் நிற்கும்.

## 243. வெள்ளுடைப்பாய், உஷ்ண வாயுவினால் வயிறு கழிவதற்கு மருந்து

வெள்ளுடைப்ப தாயுட்டிண வாயுமேவி
யேநல்வயி ருங்கழிந்திடில்
வெள்ளையாட்டின் பாலாழக்கெ லுமிச்சமின்
பழத்திநற்சா றும்மழக்குங்கொள்
தள்ளிடுமந் தவுட்டிண வாயுவை
தானேநிற்கும் வயிர்கழிச் சலது
துள்ளுமா விற்பவ னிவரு மெங்கள்
துரைசரபமகீ பனருளிதே. (சாடசு)

(இ-ள்)

வெள்ளை வெள்ளையாகவும், உஷ்ண வாயுவினாலும் வயிறு கழிந்தால்

| | |
|---|---|
| வெள்ளாட்டுப் பால் | — ஒரு ஆழாக்கு |
| எலுமிச்சம்பழச்சாறு | — ,, |

இவற்றையொன்று கலந்து உட்கொள்ளவும், உஷ்ணவாயு, வயிறு கழிச்சல் நிற்கும்.

## 244. வயிறு கழிச்சலுக்கு வடை

துடிமிகுந்த வசமதா கத்தையே
சொற்சம்பீரப் பழச்சாறை வார்த்தரைத்
தடையுந்தட்டி யேயுச்சித மாகிய
வாவிநெய்யைக் கரண்டியி லூத்தியே
தடையிலாம லெரித்தது வெந்தபின்
றானெடுத்துணு காலையு மந்தியும்
விடும்வயிற்றில்க ழிச்சலும் நன்மையாம்
விபு வுணர்ந்துவு ரைத்த முறையிதே. (௨௪௰)

(இ-ள்)

ஓமத்தை எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்றாக வரைத்து அடையாகத் தட்டிக்கொள்ளவும். பசுவின் நெய்யை ஒரு கரண்டியில்விட்டு அதிலிட்டு நன்றாக வெந்தபின் இதனைக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். கழிச்சல் நிற்கும்.

## 245. கழிச்சல், வாந்தி, பித்தத்திற்குக் கஷாயம்

கொத்தமல்லி விரையு மொருபிடி
கொண்டுவந்ததைப் பொன்னிற மாய்வறுத்
துத்தமஞ்ஞைஞயிற குக்கண்ணாலஞ்சு
சுட்டுச் சாம்பலு மாக்கியே வைத்துக்கொள்
சுத்தநீருமரைப்படி விட்டதைச்
சுண்டக் காய்ச்சியே கொண்டிட வாந்தியும்
பித்த தாகங் கழிச்சலுந் தீர்ந்திடும்
பிர்ம தேவர்க் குரைத்தன ரீசனே. (௨௪௪)

(இ-ள்)

கொத்தமல்லி விதை 1 பிடி கொண்டுவந்து அதைப் பொன் னிறமாக வறுத்துக்கொள்ளவும். மயிலிறகு (கண்போன்ற தோகை) 5 எடுத்துச் சுட்டுச் சாம்பலாக்கி வைத்துக்கொண்டு, மல்லியையுமிட்டு இடித்து ஒரு பானைதனிலிட்டுச் சுத்த ஜலம் அரைப்படி விட்டு அடுப்பின்மேலேற்றி எட்டில் ஒன்றாகுமட் டும் வற்றவைத்துக் கொள்ளவும். பித்தம், தாகம், கழிச்சல் முதலானவை தீரும்.

## 246. கழிச்சலுக்கு மருந்து

சிலந்திக்கூட்டை யெடுத்துநன் றாகிய
சீலையில் முடிந்தே கண்டந்தன்னிலே
செலும்படிக்கதைக் கட்டிடச் சத்தியுந்
தீர்ந்திடுமிதைத் தானே யரையினிற்
கலந்து கட்டிடு குக்கியிலுற்றிடு
கழிச்சலும் விடு முன்னவர் சொல்முறை
நலந்தரப்பல நூல்களும் பார்த்துணர்
நரபதிசர பேந்திர னருளிதே. (சசஉ)

(இ-ள்)

சிலந்திக்கூட்டை யெடுத்து ஒரு வெள்ளைத்துணியில் முடிந்து நோயாளியின் கழுத்தில் கட்டிவிடவும், வாந்திகள் தீரும். இம் முடிச்சை இடுப்பில் கட்டிக்கொள்ள வயிறு கழிச்சல் நிற்கும்.

## 247. செரியாமை, வயிறு கழிச்சலுக்கும், சாகிறது பிழைக்கிறதற்கும் அஞ்ஜனம்

துத்தம் சங்கரி தாரம் பொரிக்காரந்
துருசியிந் துப்பு மைந்தில் வகையொன்றுக்
குத்திடு மோர்வரா கனெடை சுக்கு
முண்மிள கும்வரா கனெடை ரெண்டு
சுத்த மாகிய தும்பை ரஸத்தினில்
தொட்ட ரைத்துக் கயறது பண்ணியே
வைத்திடு செரியா மைக்கும் சத்திக்கும்
வயிர்கழிச்ச லதுக்கும்வெந் நீரிலே. (சசங)

வெந்நீர் தன்னிலு ரைத்துக் கண்ணிலிட
மெத்த நோயுமுன் சொன்னதுந் தீருமே
இன்னு மொன்றிதிற் சோதனை காட்டுவே
னேதென் றாலதிற் சுக்கது கூட்டியே
நன்ன யத்துட னேயுரைத் தஞ்சனம்
நாட்ட மீதினிற் போட்டிடச் சாத்திய
வன்னி சுட்டது போலே சுரீலென்று
மரணமாகிய வர்க்கொன்று மில்லையே. (சசச)

(இ-ள்)

சுத்தி செய்த துத்தம்
,, சங்கு
,, தாளகம்
,, துருசு
பொரித்த பொரிக்காரம்
,, இந்துப்பு

இவைகள் வகைக்கு ஒரு வராகனெடை
சுக்கு — 2 வராகனெடை
மிளகு — 2 ,,

இவைகளை சுத்தமான கல்வத்தினில் வைத்துத் தும்பை இலைச்சாறுவிட்டு நன்றாக 2 நாட்கள் மைபோல் அரைக்கவும். பின்னர் இதனை நீண்ட மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

அன்னம் செரியாமை, வாந்தி, வயிறு கழிச்சல் முதலானவைகளுக்கு வெந்நீரில் உரைத்துக் கண்களில் அஞ்ஜனமாக (அரைப்பயறளவு) பிரயோகிக்கவும்.

இதனுடன் சுக்கையும் சேர்த்துரைத்துக் கண்களிலிட்ட போது அது சுரீலென்று எரியும். இறந்தவர்களுக்கோ ஒன்றுமேயிராது.

## 248. வயிற்றில் கடகடப்பை, குடல்வாதம், இசிவிற்கு மருந்து

காட்டினி நறுந் தாளியிலையதைக்
கடுக வேயெலும் பிச்சங்கா யத்தனை
நாட்டமாய்ப் பசு வெண்ணெயிற் காலையிற்
நாலு மஞ்சு நாட் கொண்டிடு குக்கியில்
வாட்டி யகட கடப்பையு மேகுடல்
வாத மும்வயிற் றினிசைவு மறும்
நாட்டி லேபுகழ் பெற்றிடுந் தஞ்சை வாழ்
நரபதி சர பேந்திர னருளிதே. (சசரு)

(இ-ள்)

காட்டில் விளையும் நறுந்தாளியிலையை எலுமிச்சங்காய்ப் பிரமாணம் கொண்டுவந்து அரைத்துப் பசுவெண்ணெய் கூட்டி காலையில் 4 அல்லது 5 நாட்கள் உட்கொள்ளவும்.

வயிற்றிலேற்படும் இரைச்சல், குடல் வாதம், இசிவுமுதலானவை மாறும்.

## 249. சோபக் கழிச்சலுக்குக் குழம்பு

சித்த மல்லியும் வட்டத் திருப்பிவேர்
சிறுவழுத லைவேரும் நெருஞ்சிவேர்
முத்தக் காசுட னேகண்டங் கத்திரி
முன்னை பாதிரி கூவிளை வேருட
னொத்த பேர்மல்லி யுடனே பத்து
மொவ்வோ ருவகைக் கேயிரண் டேபலஞ்
சுத்த நீர்விட்ட ரைத்ததிற் றண்ணியுந்
தூணி விட்டெரி நாழிய தாகவே. (சசசு)

ஆகுஞ் சர்க்கரை யுமதி லேகலந்து
யற்புத யிஞ்சிச் சாறுங் குறுணியு
மாக விட்டெரித் தேகுழம் பாகவே
வரச்சே மென்பொடி யேல மிலவங்கம்
வாகு சீரகம் பச்சிலை திப்பிலி
வளம தாமிள குமில வம்பிசின்
யூக மாமகு விகற தட்டியிட
னுடனச மதாகத்துடன் சுக்கதே. (சசஎ)

சுக்குட னிந்த வகையது மொன்றுக்கு
சொல்லுவேன் முக்கழஞ் சும்பொடி செய்து
பக்குவத்துடன் மென்பொடி தூவியே
பதத்தி லேவரச் சேகுழம் பாகவே
சிக்கென வேவதை யிறக்கிச் சதாசிவ
னைப்போற் றியேகொம் பதின் றேனிலே
நக்க சோபக் கழிச்சலுந் தீருமே
நாளுமொன் றுக்குமொவ் வோர்க ரண்டியே. (சசஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| சித்தாமல்லி வேர் | வட்டத்திருப்பி வேர் |
| சிறுவழுதலை வேர் | நெருஞ்சி வேர் |
| கோரைக் கிழங்கு | கண்டங்கத்திரி |
| முன்னை வேர் | பாதிரி வேர் |
| வில்வ வேர் | பேராமல்லி வேர் |

இவைகள் வகைக்கு 2 பலம். இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் 4 மரக்கால் சேர்த்து அடுப்பின் மேலேற்றி ஒரு படியாகும்மட்டும் எரிக்கவும். இக்கஷாயத்துடன்,

இஞ்சிச்சாறு, 1 மரக்காலும் விட்டு சர்க்கரை (1 வீசை) சேர்த்து அடுப்பின்மேலேற்றி குழம்பாக்கிக்கொண்டு,

| | |
|---|---|
| ஏலக்காய் | கிராம்பு |
| சீரகம் | பச்சிலை |
| திப்பிலி | மிளகு |
| இலவம்பிசின் | ஓமம் |
| சுக்கு | |

முதலான சரக்குகளை வகைக்கு 3 கழஞ்சுகள் வீதம் எடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து முன் கூறிய பாகிலிட்டுக் குழம்பாக்கவும். இதனுடன் தேன் கூட்டி ஒரு கரண்டி வீதம் நக்கிவர வீக்கத்துடன் கூடிய கழிச்சல் தீரும்.

## 250. வயிறு கழிச்சலுக்குச் சூரணம்

சாதி லிங்கங் கிராம்புட னேகுரோ
சானி யோமமுட னக்கிராக் காரமு
மீத லாற்பொரிக் காரமும் காந்தமு
மிசைந்திடுங் கல்நார் கல்மதத் துடன்
பேதமில் லாதச மதாகத் துடன்
பின்னு மாவரை சுட்டதூள் பத்ததும்
ஆதவன் முன்னே மூன்றுநாட் காயவைத்
ததைய ரைத்துப் பொடியது செய்திடே. (சசகூ)

பொடியுஞ் செப்பிலே பத்திர மாகவைப்
புதிய தேனிலே வெருகடி தூள்கலந்
திடுமு தையத்திலு மந்தி தன்னிலு
மிரண்டு வேளையுந் தான்பத்து நாளுமே
துடிய தாம்வயி றின்கழிச் சலது
தோத்து மூரைவிட் டேகிடுமற்புதம்
படகும் நற்சடையீசன் கிருபையால்
பத்தி யாயிதைச் செய்தறி யுண்மையே. (சநிய)

(இ-ள்)

சுத்திசெய்த சாதிலிங்கம்
கிராம்பு
குராசாணி ஓமம்
அக்கிராக்காரம்
பொரித்த பொரிக்காரம்
சுத்திசெய்த காந்தம்
,, கல்நார்
,, கல்மதம்
ஓமம்
ஆவாரை விதைச் சுட்ட தூள்

இவைகளை வகைக்கு 2 பலம் வீதமெடுத்து 3 நாட்கள் வெயிலில் காயவைக்கவும். பின்னர் இவைகளைக் கல்லுரலிலிட் டிடித்து வஸ்திரகாயஞ் செய்து வேளைக்கு 3 விரல் கொள்ளு மளவெடுத்துத் தேனுடன் காலையிலும் மாலையிலும் உட் கொள்ளவும். இவ்வாறு 10 நாட்கள் செய்யவும், வயிறு கழிச்சல் தீரும்.

## 251. பெரு வயிற்றுக்குக் "களி"

அடுப்பிற் சட்டியைக் காயவைத் தேயதி
லாமணக் கெண்ணெ யூத்தியே காய்ந்தபின்
திடத்து டன்வெள்ளைப் பூண்டை யுரித்துமே
சீரதாக நறுக்கியும் போட்டு மேல்

வடிப்ப மாயஞ்சு கோழிமுட் டைக்கரு
வார்த்து மேகிள றக்களி யாமது
யெடுத்து வைத்துக்கொண் டேகாலை யந்தியு
மிரண்டு நேரமு முண்டிடச் சொல்வையே. (உருக)

சொல்லு நாலஞ்சு நாளிதைக் கொண்டிடு
சோறுடன் றயிறு மிதுக் குண்டிடு
சல்ல யஞ்செப்ப குவயி றானது
தானுடைந் துகுண மது வாகுமே
கல்ல தாகிய பெண்ண கிலியரி
காலின் றூள்பட பெண்ணது வாகிய
வல்லமை மிகுந் தஞ்ச நகரில் வாழ்
வள்ளலாஞ்சர பேந்திர னருளிதே. (உருஉ)

(இ-ள்)

அடுப்பின் மேல் ஒரு புதுச்சட்டியை வைத்து அதில் ஆமணக் கெண்ணெய் விட்டுக் கொதிக்கவைத்து அதனுடன் வெள்ளைப் பூண்டை உரித்துச் சிறுசிறு துண்டுகளாக நறுக்கிப்போட்டு அதனுடன் கோழிமுட்டை ஐந்தினுடைய வெள்ளைக்கருவை யிட்டுக் களிப்பக்குவமாயிறக்கி வைத்துக்கொள்ளவும்.

இதனைக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். 4 அல்லது 5 நாட்களும் வயிறு வாடும். தயிர் சாதம் சாப்பிடவும்

## 252. பெருவயிறு, அகுவைக்கு இலைக் கள்ளிக் கடுகு

வெதுப்பி யேயிலைக் கள்ளிக் கொழுந்தை
மெதுவ தாகமு றுக்கிப் பிழிந்தசா
றதனிற் காற்படி சுத்தமாம் நல்லெண்ணெய்
யரைப்ப டிசிறு நீரிரண் டுபடி
பதக்கு வெள்ளையாட் டுக்கோ மியமது
பாரிற் பேயுன்மத் தஞ்சாறு படியொன்றுங்
கொதிக்க வைத்துப்ப டியொன்ற தாகவே
குறுகும் வாரினி யோதுவேன் கற்கமே. (உருரு)

கற்கங் கேளுக டுக்கா யரைப்படி
காரெள் காற்படி சுக்கும ரைப்படி
யொக்கவுந் தின மிளகும ரைப்படி
யுற்ற நாலும ருந்தும்பொ டிசெய்து
பக்கு வத்துடன் போட்டுக் கிளறியே
பகரும் நற்கடு கின்பதந் தன்னிலே
இடுக்க டுகும ரைவரா கனெடை
யேகொளு மந்தி காலையுந் தானுமே. (௨௫௪)

தானே கொண்டிடு மண்டல மொன்றுதான்
சமுச யமுமில் லாமல் சுவையு
மின மானப றுவயி றானது
மேயு டைந்தூப ழையப டியாதாந்
தேன துதிற ளாக வொழுகிய
சீர்பெ ரும்பல சோலைகள் சூழ்ந்திடும்
வான மட்டும ளாவும திள்தஞ்சை
வள்ள லாஞ்சர பேந்திர னருளிதே. (௨௫௫)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| இலைக்கள்ளிக் கொழுந்தை ஒரு சட்டியி லிட்டு வதக்கிப்பிழிந்த சாறு | — | $\frac{1}{4}$ படி |
| சுத்தமான எள்ளெண்ணெய் | — | $\frac{1}{2}$ படி |
| உலக வாஸனையறியாத குழந்தையின் சிறுநீர் | — | 2 ,, |
| வெள்ளாட்டு மூத்திரம் | — | 2 மரக்கால் |
| பேயூமத்தஞ்சாறு | — | 1 படி |

இவைகளை யடுப்பின் மேலேற்றி எரித்து ஒரு படியளவாக வற்றும்போது,

| | | |
|---|---|---|
| கடுக்காய்த்தூள் | — | $\frac{1}{2}$ படி |
| எள்ளு | — | $\frac{1}{4}$ ,, |
| சுக்குச் சூரணம் | — | $\frac{1}{2}$ ,, |
| மிளகுச் சூரணம் | — | $\frac{1}{2}$ ,, |

இவைகளையிட்டு ஷை கஷாயத்திலிட்டுப் பக்குவமாகக் கிளறிக் கடுகு பதத்தில் இறக்கவும்.

இதில் ½ வராகனெடையெடுத்துக் காலையிலும் மாலையிலுமாக 40 நாட்கள் உட்கொள்ளவும்.

பெருவயிறு வாடிவிடும். கை கண்டது.

## 253. பெருவயிறுக்கு மருந்து

மூவிரற் பருமன் கருவேலக் கழிமுள்
ளுநீக்கிச் சிறுகத் தரித்ததை
நீவி சாலமாம் பானையி லிட்டுத்தண்
ணீர்பதக் கதில்விட் டடுப் பேத்தியே
தூவிடு கடுக்காய்ப் பொடி நாழியு
வேயிரண் டுபடி யாக்கியே
நீவியத் துணியா லேவடிக் கொண்டு
நீயதைப் பின்னடுப்பினில் வைத்திடே. (௨௫௬)

அடுப்பில் வைத்தது வெச்சென வானபின்
னதனிலேகடுக் காய்பொடி நாழியும்
விடுத்து மேயொன்று பாதியாய்க் காய்ச்சியே
மீளவும் வெச்சென்ன வடுப்பினில்
திடத்துடன் வைத்து முன்போல் பொடிதூவிச்
சீருடன் கலக்கி யதைக் கொண்டிடு
வடித்தி வயிறு போகுமி தற்குமே
வண்மையாம்வயிறு போம்விதஞ் சொல்வனே. (௨௫௭)

சொல்லுமுத் துக்கழுவினதண்ணி போல்
சோறவே கழியுமி ரண்டாவது
நல்ல மஞ்சள் சுண்ணாம்புங் கரைத்திடு
நற்றணீர் போலசிவந் தேயிறங் கிடும்
வல்ல மஞ்சள்போ வாகுமூன் றாவது
வயிறும்போ கிமுது கோடே யோட்டுமே
நல்ல தண்ணீரு மூலையெ டுத்திடில்
நயமாநீர் முள்ளிசுட் டதன் சாம்பலே. (௨௫௮)

சாம்பலை யெடுத்தே யொருசீ லையிற்றண்ணீர்
வார்த்தொரு சட்டியைக் கீழ்வைத்து
காம்பிரி யத்துட னதையும் வடிக்கட்டு
மூன்று விசையந்தத் தண்ணீயை

சோம்பி டாமலே யுண்டிடு குக்கியுஞ்
சோர்ந்து யிங்கித மாகுமி துண்மைய
தாம்பல் மலர்சோ லைசூழ் தஞ்சையி
லண்ணலாஞ்சர பேந்திர னருளிதே. (சருசு)

(இ-ள்)

மூவிரல் பருமனுள்ள கருவேலங் குச்சியைக்கொண்டு வந்து முட்களை நீக்கிச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு பானைதனிலிட்டுச் சுத்த ஜலம் 2 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி அதனுடன் கடுக்காய்த்தூள் ஒரு நாழிபோட்டு 2படியாகும் வற்றவைத்து வடிக்கட்டிக்கொள்ளவும்.

அக்கஷாயத்துடன் பின்னர் கடுக்காய்த் தூள் மறுபடியும் ஒரு நாழி சேர்த்து மறுபடியும் 1 படியாகச் சுண்டக் காய்ச்சவும். அதை வடிக்கட்டிக்கொண்டு குளிர்ந்தபின் மறுபடியும் கடுக்காய்த்தூள் சேர்த்து அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்து ஆறியபின் உட்கொள்ளவும். நன்கு பேதியாகும். முதல் தடவை முத்து கழுவின தண்ணீர் போலவும், பின்பு மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்தாற்போலவும் (சிவப்பாக.) கடைசியில் மஞ்சள் நிறமாகவும் பேதியாகும். வயிறு முதுகுடன் ஒட்டியதுபோல ஆகும். தண்ணீர் தாகம் எடுத்தால் நீர்முள்ளி சுட்ட சாம்பலைத் தண்ணீரில் கரைத்து 3 தடவை வடிக்கட்டவும். இதனை உட்கொள்ள சோர்வு நீங்கும்.

## 254. உஷ்ணவாயு, வாயு வயிறிரைந்து கழிகிறதற்கு மருந்து

மாதளை யிலைவிளா விலைகாட்டினா
வாரை யினிலை பருத்திக்காய் நாலையுஞ்
சாத கத்துட னொவ்வோர் பிடியெடு
தண்ணீர் விட்டத்திப் பட்டையை யுந்துவைத்
தேதக குமெரு மைத்தயிர் தன்னையு
மிழுக்கில் லாமல் வடிக்கட்டி யேத்தி
லோது மூன்றிலைக் காயையு மேயரைத்
துப்பி சைந்து வடிக்கட்டிக் கொண்டிடே. (சசுயி)

கொண்டு மேயந்தத் தண்ணியைக் காலையிற்
கொள்ளு நாலஞ்சு நாளிலே யேகமாய்
மண்டி யேவயி றுமிரைந் துட்டிண
வாயு வாய்க்கழி கின்றதும் நின்றிடுந்
தண்ட லைமது தானே வழிந்துபாய்
தண்வய லதுசூ ழுந்தஞ் சாபுரி
மண்டலாதி பதிசர பேந்திரன்
வள்ள லாய்ந்துணர்ந் தோதும ருந்திதே. (சசுக)

(இ-ள்)

| | |
|---|---|
| மாதளை இலை | விளாவிலை |
| காட்டு ஆவாரை இலை | பருத்திக்காய் |

இவைகளை வகைக்கு ஒரு பிடி எடுத்துக்கொள்ளவும். அத்திப் பட்டை சிறு துண்டெடுத்துத் தயிர்விட்டரைத்து ஒரு துணியிலிட்டுப் பிழிந்துகொண்டு, அதனுடன் முன் சொன்ன 4 வகைச் சரக்குகளையும் சேர்த்தரைத்து வடிக்கட்டிக்கொள்ளவும். இதன் சாற்றை அதிகாலையில் 4 அல்லது 5 நாட்கள் உட்கொள்ளவும்.

வயிறு இரைச்சல், உஷ்ணவாயு, வயிறு கழிச்சல் முதலானவை தீரும்.

## 255. சீதக்கழிச்சலுக்குக் மருந்து

வாகை யினிலைச் சாறும்நல் லெண்ணெயும்
வகையது சரிகட் டியேவைத் துக்கொள்
வாகுட னுள்ளிப் பூண்டொன் றரைத்துமே
வண்மையாகக் கலந்ததை மூன்று நாள்
நீ கொள் காலையில் மூன்றுநா டன்னிலே
நிற்கும் சீதக் கழிச்சலு மூரைவிட்
டேகிடு மிதுகை கண்ட தோர்முறை
யிதைய ருந்தவர்க் கீசனு ரைத்ததே. (சசுஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| வாகையிலைச்சாறு | — $\frac{1}{8}$ சேர் |
| நல்லெண்ணெய் | — ,, |

உள்ளிப்பூண்டு ஒன்றும் எடுத்து அரைத்து, இவைகளையொன்று கலந்து காலை வேளையில் 3 நாட்கள் உட்கொள்ளவும். சீதக்கழிச்சல் நிற்கும்.

## 256. சீதக்கழிச்சலுக்குச் "சங்கம்வேர்ச் சூரணம்

சுடலையில் வடக்கே போறசங் கம்வேர்
சுறுக்குடன் வெட்டிக் கொண்டுவந் தேயதை
யடவுடன் மேற்புர ணியைச்சீ விப்போட்
டதுடனே மிளகும் பலம்ரெண்டும் போட
டிடமுட னிடித்தே வடிக் கட்டியே
தேவி பூசை யுஞ்செய்துநீ யன்புட
நடி பணிந்துநீ மூவிரற் கொண்டதூ
ளதை யெடுத்து செயும்வகை சொல்வனே. (௪௬௩)

சொல்லுவேன் கிழக்கு முகமாய் நின்று
சுருக்க தாய்ப்பசு நெய்யிற் குழப்பியே
வல்ல மையுடன் கொள்ளுமஞ் சாறுநாள்
வகையுட னந்தி காலையுந் தானுமே
அல்லல் செய்திடுஞ் சீதக் கழிச்சலு
மகன்றிடும் வாயுவு மத்திடு முண்மையாஞ்
செல்ல பொன்னி வளஞ்சூழ்த் தஞ்சாபுரி
தீரனாஞ் சர பேந்திர னருளிதே. (௪௬௪)

(இ-ள்)

சுடுகாட்டிலுள்ள சங்கம் செடியின் வடக்கே செல்லும் வேரைக்கெண்டுவந்து அதன்மேலுள்ள புறணியைச் சீவிவிட்டு அதனுடன் மிளகு 2 பலம் சேர்த்துக் கல்லுரலிலிட்டிடித்து வஸ்திரகாயஞ்செய்துகொள்ளவும். இச்சூரணத்தில் மூவிரல் கொண்ட அளவு எடுத்துக்கொண்டு, கிழக்குத் திக்கை நோக்கி இருந்து பசுநெய் விட்டுக் குழப்பவும். இதனை 5 அல்லது 6 நாட்கள் சாப்பிடவும். காலையிலும் சாயங்காலத்திலும் உட்கொள்ளவும். சீதக்கழிச்சல், வாயு முதலானவைகள் தீரும்.

## 257. வாயுக் கழிச்சலுக்குக் கடுகு

அகத்தியி னிலைச்சா றுமுக் கால்படி
அல்ல துத்தா மணிரச மப்படி
சகத்தி லாமணக் கெண்ணெய்முக் காற்படி
தனிற் கலந்துவ டுப்பினிற் காய்ச்சியே
தகைத்தி ருகுகள் ளிப்பாலு மூன்றுகா
சளவு விட்டுயி றக்கி வடித்ததிற்
றிகைப்பி லாமலே ரெண்டுகா சத்தனைத்
தினமுங் காலையிற் கொண்டிடு பாகமே. (௬௱௫)

பாகமா யதற் கேவயிறு போகிடும்
பத்தியஞ் சொலக் கேளுநம் பிக்கையாய்
வாகுடன் றயிறுஞ்சோறு முண்டிடு
வாயுவின்கழிச் சலது விட்டிடும்
நாகரீக மிகுந்திடுந் தஞ்சைமா
நகரை நீதிதப் பாமலே யாண்டிடும்
வாகுளப் புயனாஞ்சர பேந்திர
வள்ள லாய்ந்துணர் நன்முறை யாமிதே. (௬௱௬)

(இ-ள்)

| | |
|---|---|
| அகத்தியிலைச் சாறு | — $\frac{3}{4}$ படி |
| உத்தாமணிச் சாறு | — $\frac{3}{4}$ படி |
| ஆமணக்கெண்ணெய் | — $\frac{3}{4}$ படி |

இவைகளையொன்று கலந்து அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சவும். பதத்தில் திருகுகள்ளிப்பால் 3 காசளவு விட்டு இறக்கவும்.

இந்த எண்ணெயில் 2 காசளவெடுத்து ($2\frac{1}{2}$ வராகனெடை) காலையில் உட்கொள்ளவும். நன்கு பேதியாகும்.

**பத்தியம்:-**

தயிர் சாதம் சாப்பிடவும், வாயுக்கழிச்சல் நீங்கும்.

## 258. வாயுக் கழிச்சலுக்கு மருந்து

சட்டி தன்னை யடுப்பினிற் காயவைத்
 ததனிற் காற்பலங் கொச்சி மிளகுதா
னிட்டு மத்தினா லேகடைந் தேபசு
 வின்பால் நாழிவிட் டுக்காய்ச்சி மூன்றுநாள்
திட்ட மாய்க்கொள் வாய்வுக் கழிச்சலுந்
 தீரு மாதி சிவன்பதம் பூசனைக்
கிஷ்ட னன்பர் தமக்கருள் தஞ்சைவா
 ழிறைவ னாஞ்சர பேந்திர னருளிதே. (௪௬௭)

(இ-ள்)

ஒரு சட்டியையெடுத்து அடுப்பின்மேல் வைத்து அதில் ¼ பலம் மிளகையிட்டுக் கறுக்கி ஒரு மத்தினால் கடைந்து பசுவின் பால் ஒரு படி விட்டுக் காய்ச்சவும். இம்மாதிரி 3 நாட்கள் உட்கொள்ளவும். வாய்வுக் கழிச்சல் தீரும்.

## 259. ஜ்வரத்தின்மேல் கழிச்சல், வாந்தி வயிற்று நோய்க்கு ஏலாதி மருந்து

ஏலம் நெற்பொரி யிலவங்கப் பட்டையு
 மிலவி னிற்பிசின் கிராம்புடன் பச்சிலை
சீல மாய்ச்சரி யாகவுங் கொம்பினிற்
 றேனதும் விட்டு வம்மியில் மையது
போலவே யரைத் தேயந்தி காலையும்
 புசித்திடு கொட்டைப் பாக்கின் மாத்திரஞ்
சோலி செய்சுரக் கழிச்சலும் வாந்தியுஞ்
 சுத்தமாம் வயிற்றின் நோயும் போகுமே. (௪௬௮)

(இ-ள்)

ஏலக்காய்
நெற்பொரி

இலவங்கப்பட்டை
இலவம்பிசின்
கிராம்பு
பச்சிலை

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கொண்டு கல்வத்திலிட்டுத் தேன்விட்டு நன்கு அரைத்து, கொட்டைப்பாக்களவெடுத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

ஜ்வரத்துடன் கூடிய கழிச்சல், வாந்தி முதலானவை தீரும்.

## 260. கழிச்சலுடன் ஜ்வரத்திற்கு மருந்து

சீரக மோமம் கழற்சியின் பருப்பு
திரிகடு குடனேசா திக்காய்
சாரமாங் கிராம்பு விளாம்பிசின் வில்வத்
தரு பிசி னிலவினிற் பிசினுஞ்
சீருள மாதளம் பிஞ்சுகற் கடக
சிங்கியிருந் துப்பதி விடயங்
கூருள வில்வச் சதை விளாம்பிஞ்சு
குணமிகுந் திடுஞ்சிறு தேக்கே. (௬௯௬)

தேக்குட னாகப் பதினாறு வகையுஞ்
சேர்நிறை யுஞ்சரி யாக
தாக்குள நல்லெண் ணெயிலதை மணக்கத்
தான்வறுத் தேதயிர்த் தண்ணீர்
தேக்கிடவிட்டு வரைத்துப்பாக் களவு
தின்றிடு வடிதயிர் தன்னில்
சீக்கிர மாகக் கழிச்சலுங் காய்ச்சல்
தீர்ந்திடு மிதுவிபு வுரையே. (௬௭0)

(இ-ள்)

| | |
|---|---|
| சீரகம் | ஓமம் |
| கழற்சிப்பருப்பு | சுக்கு |
| திப்பிலி | மிளகு |

| | |
|---|---|
| சாதிக்காய் | கிராம்பு |
| விளாம்பிசின் | வில்வப்பிசின் |
| மாதளம்பிஞ்சு | கற்கடசிங்கி |
| இந்துப்பு | அதிவிடயம் |
| வில்வச்சதை | விளாம்பிஞ்சு |
| சிறுதேக்கு | இலவம்பிஞ்சு |

இவைகளை வகைக்குச் சரி எடையெடுத்துச் சிறு சிறு துண்டுகளாக்கி ஒரு சட்டியிலிட்டு நல்லெண்ணெய்விட்டு பொன் வறுவலாக வறுக்கவும். பின்னர் இதனைக் கல்வத்திலிட்டு தயிர்த்தெளிவு விட்டு அரைத்துப் பாக்களவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். இம்மாத்திரை தயிர்த் தண்ணீருடன் உட்கொள்ளக் கழிச்சல், காய்ச்சல் முதலானவை தீரும்.

## 261. கடுப்பு, கழிச்சலுக்குப் பிட்டு

விடத்தேரி னிலையை வாய்கள்பே சாமல்
வெகு சுருக் காகவே யிரண்டு
பிடிப்பறித் திதற்கு சமனரி சியே
பேதமில் லாமலே யிடித்து
வடித்திடு மாவைப் பிட்டது சுட்டு
வல்லகூ ரெண்ணெயும் வெல்லந்
திடத்துடன் பிசைந்து மூன்று நாட் டின்னத்
தீர்ந்திடுங் கழிச்சலின் கடுப்பே.

(சூாக)

(இ-ள்)

விடத்தேர் இலையை வாய்பேசாமல் வெகு சீக்கிரமாக 2 பிடி பறித்து, இதற்குச் சமனளவு அரிசியை யெடுத்து ஊற வைத்து இடித்துப் பிட்டாகச் சுட்டுக்கொள்ளவும். இதனுடன் வெல்லமும் நல்லெண்ணெயும் கூட்டிப் பிசைந்து 3 நாட்கள் சாப்பிடக் கழிச்சல், கடுப்பு முதலானவை தீரும்.

## 262. கடுப்பு, கழிச்சலுக்கு மருந்து

சீரகம் பொறுக்கி யிளவரை யாகத்
 தீயினில் வெதுப்பியே பொடித்துச்
சாரமாஞ் சீனி சரியது கூட்டி
 சற்றுள பசுவிநெய் யதனில்
சீருடன் குழப்பி யொருவிளாங் காய்மாத்
 திரமது மூன்றுநா ளிரண்டு
நேரமுங் கொள்ளு கடுப்புள கழிச்சல்
 நின்றிடுந் தஞ்சைமா னுரையே. (சஎரு)

(இ-ள்)

சீரகத்தை ஒரு சட்டியிலிட்டு இளவறுப்பாக வறுத்துப் பொடி செய்து சரி அளவு சீனி சேர்த்துப் பசுவின் நெய்யுடன் குழப்பி ஒரு விளாங்காய் பிரமாணம் 3 நாட்கள் 2 வேளையும் உட்கொள்ளவும். கடுப்பு, கழிச்சல் முதலானவை தீரும்.

## 263. கடுப்பு, காய்ச்சலுக்குச் சூரணம்

அதிவிடை யங்கார்த் திகைக்கிழங் குடனே
 யபின்கு ராசானி யோமத்தோ
டிதமுள சாதிக் காய்வசு வாசி
 யிலவினிற் பிசினுடன் கிராம்பு
துதிபெறும் வெள்ளைக் குங்கிலி யத்தோ
 டுற்றிடுங் காசுநற் கட்டி
யிதுவகை பத்துஞ் சரியதாய்க் கூட்டி
 யிடித்து செய் சூரணமதுவே. (சஎசு)

சூரணஞ் செய்த தூள்சரி யாகச்
 சுக்கது வெதுப்பிச்சூ ரணித்து
நேருடன் வைத்தோர் கழஞ்சதின் மாத்திரம்
 ரெண்டிலு மெடுத்துமே கலந்துச்

சீருள வெருமைற் றயிரினிற் கொள்ளு
    தினமதி காலையிற் றானே
கோரமாங் கடுப்புக் காய்ச்சலுந் தீர்ந்து
    குணமதா மானுவி னருளே. (சஎச)

(இ-ள்)

| | |
|---|---|
| அதிவிடயம் | சுத்திசெய்த கலப்பைக் கிழங்கு |
| சுத்திசெய்த அபின் | குராசானி ஓமம் |
| சாதிக்காய் | ஆடாதோடை வேர் |
| இலவம் பிசின் | கிராம்பு |
| வெள்ளைக் குங்கிலியம் | காசுக்கட்டி |

இவைகளைச் சமனெடுத்து இடித்துச் சூரணஞ் செய்யவும், இதற்குச் சமன் சுக்கை இளவறுப்பாக வறுத்து இடித்த சூரணம் சேர்த்து வேளைக்கு ஒரு சுழஞ்சளவெடுத்து எருமைத் தயிருடன் தினந்தோறும் அதிகாலையில் உட்கொள்ளவும். கடுப்பு, காய்ச்சல் முதலானவை தீரும்.

குறிப்பு,—

இதில் கலப்பைக்கிழங்கு சேர்ந்திருப்பதால் வெகு குறைந்த அளவில் உட்கொள்ளவும்.

## 264. வயிறு களகளப்பு, கிராணி, அதிசாரம், கழிச்சல், வாயு, மூலவாயு, சோறுசோறாய் கழிதல் இவைகளுக்கு உருண்டை

சாதிக்காய் சுக்கு வசம்பதி விடையஞ்
    சாதிபத் திரியுடன் கிராம்பு
மோதிய வாறு வகைசரி யாக
    வும்பொடித் தேபழம் பனையின்
நேதுள வெல்லங் கூட்டியே பிசைந்து
    மேயுண்டை செய்ததை யுலர்த்தி
நீதமாய்க் காலை யந்தியுந் தானே
    நீ கொளு முண்டைய தொன்றே. (சஎரு)

உண்டைய தொன்று கொண்டிடக் கிராணி
யுடனதி சாரத்தின் கழிச்சல்
மண்டிடு மூல வாய்வினால் சோறு
வயற்றி னிலேசெறி யாமற்
சண்டி செய்தேவயிற் றினிற்கள களப்புந்
தான்விடுஞ் சிவகிரு பையினால்
மண்டலா திபதி தஞ்சை வாழ் சரப
மன்னர்கோ னருளிய முறையே. (௨௭௬)

(இ.ள்)

| | |
|---|---|
| சாதிக்காய் | சுக்கு |
| வசம்பு | அதிவிடயம் |
| சாதிப்பத்திரி | கிராம்பு |

இவைகளைச் சரியெடுத்து இடித்துச் சூரணஞ் செய்து, பனைவெல்லம் கூட்டிப் பிசைந்து உருண்டைகளாகச் செய்து கொண்டு காலையிலும் மாலையிலும் ஒரு உருண்டை (சுண்டை யளவு) உட்கொள்ளவும்.

கிராணி, அதிஸாரம், கழிச்சல், மூலவாயு, உண்டசோறு செரியாமை, வயிற்றுவலி முதலானவைகள் தீரும்.

## 265. தபனம் (எரிச்சல்) தாகம், ஜ்வரம், வயிறு உப்பிசம் கழிச்சல் முதலானவைகளுக்குக் கஷாயம்

அவுரியி னிலையும் வசம்புள்ளி புழுங்க
லரிசியிந் நான்கையுங் கறுக்கி
கவனமாய் நாழி நீரது விட்டுக்
காய்ச்சியே யிரண்டுநே ரமுங்கொள்
தபனமுந் தாகஞ் சுரமொடு வயிற்றின்
றானது வுப்பியே கழிச்சல்
விலையெலாந் தீருஞ் சிவகிரு பைக்கு
மிசைந்திடு மானுவின் முறையே. (௨௭௭)

(இ.ள்)

அவுரியிலை　　　　வசம்பு
பூண்டு　　　　புழுங்கரிசி

இந்நான்கையும் சட்டியிலிட்டு அடுப்பின் மேலேற்றிக் கறுக்கி ஒருபடி தண்ணீர்விட்டு எட்டிலொன்றாக்கித் தினம் 2 வேளை உட்கொள்ளவும்.

உடலெரிச்சல், தாகம், ஜ்வரம், வயிறு உப்பிசம், கழிச்சல் முதலியன தீரும்.

## 266. தாகம், ஜ்வரம், வயிறுப்பிசம், கழிச்சல் இதற்குக் கஷாயம்

வெந்தயங் குளவிக் கூட்டுமண் ணிலத்தின்
　　விளாவிலை குளத்துமண் ணோமம்
விந்தையாம் பனையி னோலையி வையாறு
　　மேசரி யாகவே கொண்டு
முந்தவே சட்டி யடுப்பினில் வைத்து
　　முன்மருந் தையுமதிற் போட்டு
நைந்திட நெருப்புப் பறக்கவே வறுத்து
　　நவிலிலை யதினிலே போடே.　　(சஎஅ)

போட்டதைக் கறுக்கி நீரது விட்டுப்
　　புதுமையாய்ச் சுண்டவுங் காய்ச்சி
தாட்டிக மாக யிரண்டுவே ளையுந்
　　தாகமுஞ் சுரம்வயிற் றுப்பல்
மீட்டிடுங் கழிச்ச லிதுவெலாங் கயிலை
　　விமலனா ரருளது பெற்று
நாட்டினிற் கீர்த்தி பெருசர பேந்திர
　　நரபதி யுணர்ந்திடு முறையே.　　(சஎகூ

(இ.ள்)

வெந்தயம்　　　　குளவிக்கூடு மண்
நிலாவாரை யிலை　　　　குளத்துமண்
ஓமம்　　　　பனையோலை

இவைகளைச் சரியளவெடுத்து ஒரு சட்டியிலிட்டு நெருப்புப் பறக்க வறுக்கவும். பின்னர், விளா இலையையதனுடன் போட்டுக் கறுக்கிச் சுத்த ஜலம் ஒருபடி விட்டு எட்டிலொன்றாக வற்றவைக்கவும். இக்கஷாயத்தை இரு வேளையிலும் பருகிவரத் தாகம், ஜ்வரம், வயிற்றுப்பல், கழிச்சல், முதலானவை தீரும்.

## 267. ஜ்வரத்தில் தாகம் வயிறு உப்பிக் கழிச்சல் முதலானவைகளுக்கு (வேறு) கஷாயம்

குட்டிவி ளாவேர் தட்டியே பட்டை
 குறிப்புடன் போக்கியவ் வேரைத்
தட்டிநெற் பொரியு மொருபிடி சுக்கின்
 றன்னுட னேகிராம் பதுவு
மிட்டதிற் றண்ணீர் விட்டு கடாய
 மேசெய்து கேட்டபோ தெல்லாந்
திட்டமாய் கொடுக்கச் சுரத்துடன் றாகஞ்
 சேருப்பல் கழிச்சலும் போமே. (சஅம)

(இ-ள்)

குட்டிவிளா வேரைத்தட்டி அதின் பட்டையை நீக்கி விட்டு, அதனுடன் ஒருபிடி நெற்பொரி, சுக்கு ஒரு பிடியும், கிராம்பு ஒரு பிடியும் சேர்த்துத் தண்ணீர்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைத்துக் கஷாயஞ் செய்து இறக்கி, வேண்டும்போதெல்லாம் பருகிவர ஜ்வரத்துடன் இருக்கும் தாகம், வயிறு உப்பல், கழிச்சல் முதலானவை தீரும்.

## 268. வயிறு கடுப்பினால் இரத்தமும் சீதமுமாகவும், வெள்ளுடைப்பாகவும், கழிவதற்குக் கஷாயம்

முள்ளில வரசு கூவளை மாவு
 முந்தநாற் பட்டையி தல்லால்
லொள்ளிய பொன்னின் முசுட்டைவே ரைந்து
 மொக்கவே சரியிரு நாழி

தெள்ளிய நீர்விட் டுழக்கதாய்க் காய்ச்சி
திப்பிலி சுக்கதி விடைய
முள்ளுள விளவின் பிசின்மிள குடனே
முக்கிய விலவினிற் பிசினே. (சஅக)

இலவினிற் பிசினோ டறுவகை மருந்து
மிளவரை கொண்டதைப் பொடித்து
நலவெரு கடிதூள் தூவியே யைந்து
நாட்கொளு மிரண்டுவே ளையுமே
வலிவயிறு கடுப்பி ரத்தமுஞ் சீத
மாய்க்கழி கிறதும்வெள் ளுடைப்பா
யுலையுறு கழிச்ச லிதுவெலாம் போமே
யுன்னித மானவிம் முறையே. (சஅஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| முள்ளிலவம்பட்டை | அரசம்பட்டை |
| வில்வப்பட்டை | மாம்பட்டை |
| பொன்முசுட்டைவேர் | |

இவைகளைச் சரி யெடையெடுத்து நசுக்கி 2 படி சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகவற்றவைத்துத்

| | |
|---|---|
| திப்பிலி | சுக்கு |
| அதிவிடையம் | முள்ளிலவம்பிசின் |
| விளாம்பிசின் | மிளகு |

இவைகளை ஒரு சட்டியிலிட்டு இளவறுப்பாக வரைத்துச் சூரணித்து, மூவிரல் கொள்ளுமளவுள்ள சூரணமெடுத்து ஷை கஷாயத்துடன் கலந்து தினமும் காலையிலும் மாலையிலுமாக 5 நாட்கள் உட்கொள்ளவும்.

வயிற்றுவலி, கடுப்பு, இரத்தம் போதல், சீதமாய் கழிதல், வெள்ளுடைப்புக் கழிச்சல் முதலான ரோகங்கள் தீரும்.

269. அதிசாரத்தால் கிராணியால் மலம் பெருகி வாயு தடுக்காய் நறுகண் குழிந்து, பல் உடல் தளர்ந்து, கைகால் குளிர்ததாக ஆன சோபக் கழிச்சலுக்கு மருந்து

கூவளைப் பிஞ்சு மத்தியின் பிஞ்சுங்
குணமுடன் வகைக்குப்ப லங்கால்
பாவமாய் நாழி நீரதில் விட்டுப்
பதமுட னுழக்கதாய்க் காய்ச்சி
தீவுர மாக விரண்டுவே ளையுங்கொள்
தீர்ந்திடும் வியாதிகே ளுணர்வாய்
மேலதி சாரத் தால்வரும் விதத்தை
விளம்புவேன் வலம்பெரு கவுமே. (௪அ௩)

வலமது பெருகி வயிறுகழி யிரதும்
வாயு தடதுவற ளுரதும்
பலவித மாகக் கண்குழி கிறதும்
பல்லுடல் தளர்ந்திருப் பதுவுஞ்
சலமதாய்க் கால்கை குளிர்ந் திருப்பதுந்
தாகமுஞ் சோபமும் போமே
பலகலை யுணர்ந்த பாவலர் திறமை
பண்பறி தஞ்சைமா னருளே. (௪அ௪)

(இ-ள்)

வில்வப் பிஞ்சு
அத்திப்பிஞ்சு

இவை வகைக்கு ¼ பலம் எடுத்து, நசுக்கி, ஒரு படி சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைக்கவும்.

இக்கஷாயத்தைத் தினம் 2 வேளை காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

நீர் நன்கு இறங்கி வயிறுகழிச்சல், வாயு. நாவறட்சி கண் குழி விழுதல், உடல் தளர்ச்சி, கைகால் சில்லிடுதல், வீக்கம் முதலானவை தீரும்.

## 270. அதிசாரத்தின் கழிச்சலுக்குக் கஷாயம்

கானி நன்னாரி வேர்முற்றக் காசுங்
சணக்குடன் சரிநிறை யாகத்
தானதை நறுக்கி நாழிநீர் விட்டொன்
றாகவே காய்ச்சியே கொள்ளு
வூனமா மதிசா ரத்தினின் கழிச்ச
லூரைவிட் டோடுமப் பொழுதே
ஞானவிற் பன்ன மிகுசரபேந்திர
நவின்றிடு கடாயமி தாமே. (சஅரு)

(இ-ள்)

நன்னாரிவேர்
கோரைக் கிழங்கு

இவ்விரண்டையும் சரியனவெடுத்து நறுக்கி (1 பலம்) ஒரு நாழி (1¼ சேர்) சுத்த ஜலம் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சிப் பருகவும். அதிசாரக் கழிச்சல் தீரும். கைகண்டது.

## 271. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

அதிமது ரப்பட் டையும்நல்ல வெல்ல
மதுடனே புழுங்கலி னரிசி
யதுமுழக் குத்தும் பையினிலை நாலு
மரைத்துநற் பசுவிநெய் யுழக்குஞ்
சதிருடன் கலந்து வேகவும் வைத்துத்
தான் கொடு யிரண்டுவே ளையுமே
யிதுவுண வயிற்றின் கடுப்பதுந் தீரு
மின்பமாஞ் தஞ்சைமா னுரையே. (சஅசு)

(இ-ள்)

| | |
|---|---|
| அதிமதுரம் | — 4 உழக்கு |
| நல்லவெல்லம் | — ,, |
| புழுங்கரிசி | — 1 உழக்கு |
| கௌதும்பையிலை | — ,, |
| பசுவின் நெய் | — ,, |

இவைகளை யொன்றுகலந்து இடித்து அடுப்பின்மேலேற்றிச் சிறிது தண்ணீருற்றி வேகவைத்து 2 வேளைகள் உட்கொள்ள வயிற்றுக்கடுப்பு தீரும்.

## 272. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

மிளகது வறுத்து நல்லெண்ணெய் வார்த்து
மெத்தன வரைத்துமைப் போல
வளமுட னந்தி காலையும் விழுங்க
வயிற்றினிற் கடுப்புடன் சகல
சளமெலாந் தீரும் நாலைந்து நாளிற்
றபனன் முன் பனியது போல
இளமதி யணியுங் கடவுளர் பூசைக்
கிசைந்திடுந் தஞ்சைமா னுரையே. (அ௭)

(இ-ள்)

மிளகை வறுத்து நல்லெண்ணெய் வார்த்து நன்கு அரைக்கவும். அதை மெழுகுபோல் குழைத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். நாலைந்து நாட்களுள் வயிற்றுக்கடுப்புத் தீரும்.

## 273. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

மங்கையர் பாலி லின்புரா வேரை
வம்மியி லரைத்து நன்றாகச்
சங்கையில் லாமற் காலையு மந்தி
றான்கொளும் வனிதையர் பாலிற்

சங்கடஞ் செய்யும் வயிற்றினிற் கடுப்புந்
தான்விடு மடுவில்யா னையையு
மங்கறா விடுத்த பாவனை போல
வற்புத மானுவின் முறையே. (சஅஅ)

(இ-ள்)

தாய்ப்பால் விட்டு இம்புரா வேரையரைத்துக் காலையிலும் மாலையிலும் தாய்ப்பாலுடனே உட்கொள்ளவும். வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 274. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

ஆமையி னோடும் வனத்தின் பானாங்க
திரண்டுஞ் சுட்டு நன்றாக
நேமமாய் மிளகும் வறுத்தரைத் தேதண்
ணீர்தனிற் கரைத்த திகாலை
தாமத மில்லா மலுமதைக் கொள்ளு
மட்சணத் தினிவயிறு கடுப்பகலும்
பூமியை யாளுந் துரைசா பேந்திரன்
புனிதமா யுரைத்த திம்முறையே. (சஅகூ)

(இ-ள்)

ஆமையோடு, பானாங்கிழங்கு இவ்விரண்டையும் அனலி லிட்டு வறுத்து, இதனுடன் வறுத்த மிளகுஞ் சேர்த்துத் தண் ணீரில் போட்டு நன்றாகவரைத்து அதிகாலையில் பருகவும். வயிறுகடுப்பு அக்கணமே தீரும்.

## 275. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

மாதுளங் காய்க்குள் கழஞ்சதி விடயம்
வளமுடன் பொடிசெய்து வைத்து
நீதமாய் மூடி யுமியின்காந் தலிலே
நீபுதைத் ததுவெந்த வுடனே

சாதக வம்மி தனிலரைத் தெருமைற்
றயிரினிற் குழப்பியே கொள்ளு
வேதனை செய்யும் வயிறுகடுப் பதுவும்
விலகிடு முண்மைய தாமே. (சுகம)

(இ-ள்)

மாதுளங்காயைக் குடைந்து விதைகளை நீக்கிவிட்டு அத னுள் அதிவிடையச் சூரணம் 40 குன்றி நிறை வைத்து மூடி உமிக் காந்தலில் புதைத்துத் தீயிடவும். அது நன்கு வெந்த வுடன் அம்மியின்மேல் வைத்து நன்றாக அரைத்துத் தயிர் விட்டுக் குழப்பி உட்கொள்ளவும். வயிற்று கடுப்பு தீரும்.

## 276. வயிற்றுக் கடுப்பு, கழிச்சலுக்கு மருந்து

கல்லின் சுண்ணாம்பு மொட்டடை யுடனே
கறுத்த குங்கிலிய மிம்மூன்றும்
வல்லமை யாக வரைத்தத்திப் பாலில்
ளமுட னிடக்கடுப் புடனே
செல்லிடுங் கழிச்சல் பருதிமுன் பனிபோல்
தீர்ந்திடும் வெகுசுறுக் கிதுவும்
வல்லவர் புகழு மால்சர பேந்திரன்
வழுத்திய ரசிதமா மருந்தே. (சுகூக)

(இ-ள்)

கல்சுண்ணாம்பு
கருங் குங்கிலியம்
ஒட்டடை

இவைகளைக் கல்வத்திலிட்டு அத்திப்பால் விட்டரைத்து உட்கொள்ளக் கடுப்புகள், கழிச்சல் முதலானவை தீரும்.

## 277. வயிற்றுக் கழிச்சலுக்கு மருந்து

இந்துப்பு சுக்கு திப்பிலி கிராம்பு
யிலவினிற் பிசினுமாங் கொட்டை
நந்தன வில்வச் சதையுங்காட் டாத்தி
நல்லதோ ரசமதா கத்தோ

டிந்தவொன் பதுவ கையுஞ்சரி யாக
யெடுத்தரைத் தெருமைமோ ரினிலே
அந்தியுங் காலை யுண்டிட வயிற்றி
னதின் கழிச் சலுமகன் றிடுமே. (சஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| இந்துப்பு | சுக்கு |
| திப்பிலி | கிராம்பு |
| இலவம்பிசின் | மாங்கொட்டைப்பருப்பு |
| வில்வச்சதை | காட்டாத்திப்பூ |
| ஓமம் | |

இவைகளைச் சரியளவெடுத்து நன்கு அரைத்து எருமை மோருடன் குழப்பிக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளக் கழிச்சல் நீங்கும்.

## 278. இரத்தக் கடுப்பிற்கு

கோரையின் கிழங்கை யிடித்து நன் றாகக்
குணமிகும் பிட்டதாய்ச் சுட்டு
யேர்வணி தமாய்ப் பிழிந்தசா றதனி
லிதற்குமுன் கவியதிற் சொன்ன
சீருள மருந்தை யரைத் ததிற் கலந்து
தின்றிடி லிரத்தத்தின் கடுப்பு
மூரைவிட் டோடுஞ் சிவகிறு பையினா
லுற்றிடு தஞ்சைமா னுரையே. (சிஈஈ)

(இ-ள்)

கோரைக்கிழங்கை இடித்துத் தண்ணீர் விட்டுப் பிட்டாகச் சுட்டுச் சாப்பிடவும். முன் செய்யுளில் கூறப்பட்ட மருந்தையும் இதனுடன் சேர்த்து உட்கொள்ளலாம். இரத்தக் கடுப்புகள் தீரும்.

## 279. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

உதயகாலத்திற் கருவேலங் கொழுந்தை
யுடன் பரித் தெலுமிச்சங் காயி
நதனள வரைத்து யெருமைப் பால் தண்ணீ
ரதுவிடா மற்றுவை தயிறி
லிதமுடன் குழைத்துக் காலையிற் கொள்வ
யிற்றினிற் கடுப்பகன் றிடுமி
ரதகஜ துரக பதாதிகள் சூழும்
நரபதி தஞ்சைமா னுரையே. (சுகூசு)

(இ-ள்)

விடியற்காலை வேளையில் கருவேலங் கொழுந்தை பரித்து எலுமிச்சங்காயள வெடுத்துத் தண்ணீர் விடாத எருமைப்பாலில் துவைத்த தயிருடன் அரைத்துக் குழைத்து உட்கொள்ளவும். வயிற்றுக்கடுப்புகள் தீரும்.

## 280. வயிற்றுக் கடுப்பிற்கு

முத்தக்கா சுந்தோல் சீவியோர் நாழி
முதிறவே யிடித்துப்பிட் டாக
நத்துவ மாய்ச்சுட் டுழக்குச் சாறுபிழிந்தி
லவம்பிசி னதிவிடை யமுமே
வொத்திடுங் களிப்பாக் குங்காசுக் கட்டி
வோர்குன்றி யளவுசுண் ணாம்பு
இத்தனை மருந்துஞ் சரியது வாக
வேயரைத் திடுகல்வ மதிலே. (சுகூரு)

அரைத்தந்த ரசத்திற்க லந்துநல் லெண்ணெய்
யது கலந் தந்திக்கா லையுமே
உரைத்திடு படிக்கி நாலுநாட் கொள்ள
வோடிடு மேவயிற் கடுப்பு
முரத்தினில் மிகுந்த யானையின் றோலை
யுரித்திடு மீசர்தாள் போற்றும்
வரத்தினி லுயர்ந்த தஞ்சமா நகரில்
வாழ்சர பேந்திர னருளே. (சகூசு)

(இ-ள்)

கோரைக் கிழங்கின் தோலைச் சீவிவிட்டு நாழியளவெடுத்து இடித்து வேட்டிலிட்டுப் பிட்டாக்கிச் சுட்டுச் சாறு பிழிந்து கொள்ளவும். அதனுடன்,

| | |
|---|---|
| இலவம்பிசின் | அதிவிடையம் |
| களிப்பாக்கு | காசுக்கட்டி |

இவைகளை வகைக்கு ($\frac{1}{2}$ பலமும்) சுண்ணாம்பு ஒரு குன்றி யளவும் சேர்த்து நன்கு கல்வத்திலிட்டு ஷை ரசத்துடன் கூட்டி நல்லெண்ணெய் சேர்த்துக் காலையிலும், மாலையிலும் சாப்பிடவும்.

இம்மாதிரி 4 நாட்கள் உட்கொள்ளவும். வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 281. வயிற்றுக் கடுப்பிற்கு மாத்திரை

அதிமது ரஞ்சுக் கோமமுங் கோட்ட
 மாத்தியின் பூவும்வெங் கார
மதிவிடை யங்கிராம் புடன்விளாம் பிசினு
 மபினுடன் சாஸ்திர வேதி
மதுமத்தம் வித்து சாதிக்காய் கடுகு
 வாசமாஞ் சாதிபத் திரியும்
பதமதா மிளகு நீர்முள்ளி விரையும்
 பாரினிற் பெருவிலவம் பிசினே. (சகூஎ)

பிசினுடன் பத்தொன் பதுவகை மருந்து
 பேதமில் லாமலே சரியா
யிசைவதாய் நிறுத்தோர் சாமங் கஞ்சாவி
 னிலைரசம் விடுத்தரைத் தப்பா
லசவதாய்க் களிப்பாக் கதுசில சீவி
 யப்பிலே காய்ச்சும் நீ ரழக்கு
வுசிதமாய் விட்டோர் சாமமு ரைத்து
 வுருட்டொரு பயறுமாத் திரமே. (சகஅ)

மாத்திர முண்டை தனைநிழ லுலர்த்தி
வைத்தொரு வுருண்டையை யெடுத்து
மேத்திடும் பனைமட் டையின்ரசந் தன்னிலே
யிரண்டுவே ளையுங்கரைத் துக்கொள்
சாத்திரப் படிக்கிச் சொன்னவிம் முறையைச்
சரபபூ பதிநித முணர்ந்து
கீர்த்திகள் பெறவே சொன்னதை நீயுங்
கேள்வயிறு கடுப்பதும் போமே. (சகூகூ)

(இ-ள்)

| | |
|---|---|
| அதிமதுரம் | சுக்கு |
| ஓமம் | கோஷ்டம் |
| ஆத்திப்பூ | வெங்காரம் |
| அதிவிடையம் | கிராம்பு |
| இலவம்பிசின் | அபின் |
| சாஸ்திரவேதி | ஊமத்தம் விதை |
| சாதிக்காய் | கடுகு |
| சாதிப்பத்திரி | ஓமம் (அசமதா) |
| மிளகு | நீர்முள்ளி விதை |
| விளாம்பிசின் | |

இவைகளைச் சரியளவெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து கல்வத்திலிட்டுக் கஞ்சாயிலைச் சாறுவிட்டு ஒரு சாமம் வரை நன்றாக வரைக்கவும். பின்னர் களிப்பாக்குக் கஷாயம் ஒரு உழக்கு விட்டு ஒரு சாமமும் அரைத்துப் பயறளவுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும்.

இதிலொரு உருண்டையையெடுத்துப் பனைமட்டைச் சாறுடன் 2 வேளையும் உட்கொள்ளவும். வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 282. வயிற்றுக் கடுப்பிற்கு உருண்டை

துவற்மடுக் காயின் விரையதைத் தள்ளித்
தோலொடு பலமெடுத் துக்கொள்
நவமுள்ள வெந்தய மும்பல மொன்று
மிராத்திரிக் கூறவும் வைத்து

மிவைதனைக் கால மேயரைத் ததனில்
மிஞ்சிய தண்ணியிற் குழப்பி
கவனமா யடுப்பில் வைத்தொரு பனையின்
கருப்புட்டி யதனிலே போடே. (௩௭)

போடதி னோடே காலரைக் கால்ச்சேர்
புதியவா நெய்யது விட்டு
நாடியே கொட்டைப் பாக்கள வுண்டை
நலமுடன் பணிநிழ லுலர்த்தி
ஆடவர் தமக்கு வயிறுகடுப் புற்றா
லந்தியுங் காலையுங் கொள்ளு
வாடிடும் வயிற்றின் கடுப்பதுந் தீரும்
மன்னர்கோன் றஞ்சைமா னுரையே. (௩௭௧)

(இ-ள்)

கடுக்காயின் கொட்டைகளை நீக்கிவிட்டுத் தோலை ஒரு பலமெடுத்துக்கொண்டு வெந்தயம் ஒரு பலமும் எடுத்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் விட்டு இரவு முழுவதும் ஊறவைக்கவும். இதனை மறுநாட் காலையில் அரைத்து, மிகுந்த தண்ணீருடன் கலந்து அடுப்பின்மேலேற்றி, பனங்கருப்புட்டி போட்டுப் பாகாக்கவும். அதனுடன் காலேயரைக்கால் சேர் பசுவின் நெய் விட்டுக் கொட்டைப் பாக்களவுள்ள உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். இவைகளை நிழலில் உலர்த்திவைத்து வயிற்றுக் கடுப்பிற்குக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

## 283. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

சுடச் சுடச் சாதஞ் சட்டியிற் போட்டுத்
தொட்டொரு வுப்புக்கல் லதிலே
யடவுடன் போட்டுக் கறிமிள கதுவு
மரைவரா கனெடை யும்நுணுக்கித்
திடமுள நெய்யுங் காற்பலம் விட்டுத்
தின்னொரு நாலுநாள் வயிற்றின்
கடுப்பது வகலுஞ் சிவகிரு பையினாற்
கனம்பெருந் தஞ்சைமா னுரையே. (௩௭௨)

(இ.ள்)

ஒரு சட்டியில் சாதத்தைச் சுடச் சுடப் போட்டு அதில் ஒரு உப்புக்கல்விட்டு, மிளகு ½ வராகனிடை நுணுக்கிப் போட்டு ¼ பலம் நெய்விட்டுப் பிசைந்து 4 நாட்கள் உட்கொள்ளவும். 4 நாட்களுள் வயிற்றுக் கடுப்பு அகலும்.

## 284. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

காட்டினின் வரப்பூ லாவின்வே ரரைத்துக்
கனத்தெரு மையின்றயி ரதனிற்
றாட்டிகமாகக் குழப்பியே காலை
தன்னிலே நாலைந்து நாட்கொள்
கூட்டிடுந் தயிருஞ் சோறது முண்ணு
குணமதாம் வயிற்றினிற் கடுப்பும்
பாட்டினிக் கிசைந்த துரைசர பேந்திரன்
பண்புட னுரைத்ததிம் முறையே. (நாக)

(இ.ள்)

வரப்பூலாவேர் கொண்டுவந்து, எருமைத் தயிர்விட்டு நன்கு அரைத்துக் குழப்பிக் காலை வேலையில் 4 நாளைக்கு உட்கொள்ளவும்.

தயிர் சாதம் சாப்பிடவும் வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 285. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

எருமையின் றயிரில் வெள்வேலாம் பட்டை
யேயரைத்த தனிலே குழப்பி
வரிசையாய் மூன்று நாளதி காலை
வளமுடன் கொள்வயிறு கடுப்பும்
பருதி முன் பனிபோற் பறந்திடுந் தயிரும்
பார்த்துமே கொள்வள மிகுந்த
உரமுள தஞ்சைத் துரைசர பேந்திர
னுணர்ந்திடு முறையிது வாமே. (நாச)

(இ-ள்)

எருமைத் தயிருடன் வெள்வேலம்பட்டையை நன்கு அரைத்து, அதனுடன் குழப்பி, சேர்ந்தாப்போல் 3 நாட்கள் அதிகாலையில் உட்கொள்ளவும்.

வயிற்றுக் கடுப்புகள் தீரும். தயிர் சாதம் சாப்பிடவும்.

## 286. வயிற்றுக் கடுப்பு, கழிச்சலுக்குக் களி

சீரகமிளகு முள்ளிவேர் மூன்றுந்
திறமையா யரைத்தொரு பாக்கி
நேரரைத் தொன்றாய்க் கூட்டியே யெள்ளி
னெண்ணெயை விட்டதைக் கிளறிக்
கூறுடனந்தி காலையுந் தானே
கொண்டிட வயிற்றினிற் கடுப்பு
மூரைவிட் டோடுங் கழிச்சல்க னெல்லா
முற்றம் விபுவுணர் முறையே. (நாரு)

(இ-ள்)

சீரகம்
முள்ளிவேர்
மிளகு

இவைகளை வகைக்கு ஒரு பாக்களவு எடுத்து, நன்கு அரைத்து. நல்லெண்ணெய்விட்டுக் கிளறிக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். கழிச்சல், வயிற்றுக்கடுப்புகள் தீரும்

## 287. வயிற்றுக் கடுப்பு, கழிச்சலுக்கு மருந்து

அத்தியின் பிஞ்சு விளாம்பிசி னுடனில
வம்பிசின் மாவடு நாலுஞ்
சுத்தமா மெருமைற் றயிர்வடி கொண்ட
தொருதண்ணீர் வார்த்தரைத் ததனை

யத்தயி றன்னிற் குழப்பி கொள்வயி
றுதின கடுப்புடன் கழிச்சலுமே
சுத்தமாய்த் தீரும் நாலைந்து நாளிற்
றுடுமிகுந் தஞ்சைமா னுரையே. (௩௭௬)

(இ-ள்)

அத்திப்பிஞ்சு
இலவம்பிசின்
விளாம்பிசின்
மாவடு

இவைகளையெருமைத் தயிரின் தெளிவை விட்டு நன்கு அரைத்துத் தயிருடன் குழப்பி உட்கொள்ளவும்.

வயிறு கழிச்சல் 4 அல்லது 5 நாட்களுள் தீரும்.

## 288. வயிற்றுக் கடுப்பிற்கு உருண்டை

ஏலமி லவங்க மதுரமுங் கோட்ட
மிலவினிற் பிசினபின் கிராம்பு
கோலமாங் காசுக் கட்டிசா திக்காய்க்
குணமிகுஞ் செண்பகப் பூவுஞ்
சீலமா மருந்து வகையது பத்துஞ்
சேர்சரி யாகவே கொண்டு
மேலுமே முற்றல் மாதளங் காயின்
விரையது வாங்கியும் போடே. (௩௭௭)

விரையதை வாங்கி முன்மருந் தெல்லா
மிட்டதிற் சாணியை யப்பி
எரிபுட மிட்டு யெடுத்து கஞ்சாவி
னிலையிலே தண்ணியை விட்டு
வுரமுடன் காய்ச்சுங் கடாயத்திற் சாம
முமரைத் தேவளத் தேற்றான்
விரையதின் மாத்திர முண்டையுஞ் செய்து
மேசெய்யும் வகையது கேளே. (௩௭௮)

வகையது கொட்டாங் கச்சிநீர் தனிலும்
வளமெரு மையின்றயிர் தனிலுஞ்
சுகமுள மோரை வார்த்துமே காட்டின்
சூரையி னிலையதைத் துவைத்து
அகங்கையாற் பிழிந்த சாற்றிலு மெதிலு
மன்புடன் கொண்டிட வயிற்றி
நிகல்செய்யுங் கடுப்புந் தீர்ந்திடு மிதுவு
மினமதாய் காலையிற் கொள்ளே. (நுាகூ)

## பாட பேதச் செய்யுள்

அதிமதுரங் கோட்டமில வங்கங் கிராம்பு
யபிநேல மிலவும்பிசின் காசுக்கட்டி
யிதமான சாதிக்காய் செண்பகப்பூ
யிதுபத்துஞ் சரிநிறையாய் நிறுத்துக்கொண்டு
பதமான மாதளங்காய் விரையை வாங்கி
பண்பான மருந்து பத்து மடைத்துமூடி
சதமான சாணிதப்பிப் புடமும் போட்டுத்
தப்பாமற் கஞ்சாவி னிலையைத்தானே. (நுகW)

கஞ்சாவி னிலைவேக வைத்திருந்தக்
கடாயம்விட் டரைத்து நன்றா மையதாக
வஞ்சாமற் றேற்றான்விற் றுப்பிரமாண
மடவுடனே வுண்டைசெய்து வைத்துக்கொண்டு
மஞ்சாறு நாடனுக்குக் கொட்டாங் கச்சி
யதன்சாறா குதலெருமைற் றயிரிலாதல்
மஞ்சாறுங் கானிறகு ரையிலை தன்னில்
வார்த்தெருமை மோரதனைப் பிசைந்துதானே. (நுகக)

பிசைந்து பிழிந் திடுசாற்றி லாகுதல்தான்
பிசகாம லிம்மூன்று சாற்றிலெந்த
யிசைவான சாறதிலே காலைதன்னி
லேகொள்ளு வம்பிகையாள் பாதம்போற்றிக்
கசிந்தவயிறு கடுப்புடனே கழிச்ச லேசெங்
கழநீரோ டைகள் சூழ்ந்த வளமாரூரில்
அசைந்தசைந்து வசந்தனில்வந் தாடும்தியாகர்க்
கன்பான நஞ்சைவிபு வுணர்ந்ததாமே (நுகஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | இலவங்கப்பட்டை |
| அதிமதுரம் | கோஷ்டம் |
| இலவம்பிசின் | அபின் |
| கிராம்பு | காசுக்கட்டி |
| சாதிக்காய் | செண்பகப்பூ |

இந்தச் சரக்கு வகைகளை சரியெடையெடுத்து இடித்து வஸ் திரகாயஞ் செய்துகொள்ளவும். முற்றலான மாதளங்காயைக் கொண்டுவந்து அதனைக் குடைந்து உள்ளிருக்கும் விரையை நீக்கிவிட்டு முன் சூரணத்தை யதனுள்ளடைத்து அவ்வாயில் சாணியையப்பிக் காய்ந்தபின் புடம் இடவும். புடம் எரிந்து பழம் வெந்தபின்னர் அதனை எடுத்து வைத்துக்கொண்டு கஞ் சாக் கஷாயம் விட்டு ஒரு சாமம் அரைக்கவும். பின்னர் தேற் றாங் கொட்டைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவும். வேண்டும்போது இளநீரிலோ, எருமைத் தயிரிலோ, காட்டுச் சூரையிலையில் மோர்விட்டு இடித்துப் பிழிந்த சாற்றிலோ உட்கொள்ள வயிற்றுக் கடுப்புகள் தீரும். இதனைக் காலை வேளையில் உபயோகிக்கவும்.

## 289. கிராணிக் கடுப்பிற்கு மருந்து

பொரித்திடு மிளகை யரைத்திடு பொடியை
போடுகாய்ந் திடுநல் லெண்ணெயிலே
முருகிடா தெடுத்துள் ளங்கையில் விட்டு
மூன்றுநாட் காலை யந்தியுந்தான்
சரியதாய்க் கொள்ளு கிராணியின் கடுப்புந்
தான்விடுஞ் சிவகிரு பையினால்
வரமிகுன்றஞ்சை நகர்சர பேந்திர
வள்ளலு முணர்ந்திடு முறையே. (ருகரு)

(இ-ள்)

மிளகைப் பொன்வறுவலாக வறுத்துச் சூரணம் செய்து நல்லெண்ணெயுடன் கூட்டி முறுகிவிடாமல் வறுத்து, இதனை நன்றாகக் குழப்பி, உள்ளங்கையில் விட்டு 3 நாட்களுக்குக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

கிராணிக் கடுப்புகள் தீரும்.

## 290. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

உப்பொரு சேரை மிளகொரு சேரை
யுடன்சுக்குத் தேரொன்றி ரண்டு
செப்புமிம் மூன்றும் வறுத்தம்மி தன்னிற்
சிறக்கவே பொடி செய்து கொண்டு
வொப்புடன் சுட்ட சோற்றினிற்றானே
யொருபிடி மூன்றுபங் காய்ச்செய்
தப்பிலாப் பொடியைப் போட்டுநன் றாகத்
தானதைப் பிசைந்திடு வாயே. (௫கச)

பிசைந்துநல் லெண்ணெய் வார்த்துமே மூன்று
பிடிதின்னு நாலைந்து நாளும்
நசையுறு வயிற்றின் கடுப்பது மகலும்
ஞாயிறு முன்பனி போலத்
திசையது மாறிப் போய்விடு மாதி
சிவனுட கிருபையி னாலோ
இசைவுள தஞ்சை நகர் சரபேந்திர
னின்பமா யுணர்ந்திடு முறையே. (௫க௫)

(இ-ள்)

உப்பு ஒரு சேரை (ஒரு கை கொண்டது)
மிளகு ,,
சுக்குத்தேரு ஒன்று அல்லது இரண்டு

இம்மூன்றையும் ஒரு சட்டியிலிட்டுப் பொன் வறுவலாக வறுத்துச் சூரணித்து வைத்துக்கொள்ளவும். இதை மூன்று பங்குகளாக்கி 3 பிடி சாதத்துடன் சேர்த்து நல்லெண்ணெய் விட்டு நன்கு பிசைந்து 3 அல்லது 4 நாட்கள் சாப்பிடவும். வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 291. வயிற்றுக் கடுப்பிற்குச் சாதிக்காயுருண்டை

சாதிக்காய் கிராம்பு மிரண்டதில் வகைக்குத்
தானிரண் டேபண வெடையு
போதிய சர்க்க ரையுமபின் மருந்து
மூன்றுநற் பணவெடை தானே

கோதிலா வாலம் விழுதுடன் காணக்
குளப்பாலை வேரும்நாற் பணமே
ஈதெலாங் கருவூ மத்தின்சாறு வார்த்து
வியல்புடனரைத்திடு வாயே. (ருகசு)

அரைத்து மைப்போல விலந்தையின் கொட்டை
யளவுதா னுண்டையுஞ் செய்து
திருத்தமா யுலர்த்தித் தயிரிலோ ருண்டை
தின்னதி காலையிற் றானே
வருந்திடு வயிற்றின் கடுப்பதுந் தீரு
மாதிநா தன்கிறு பையினால்
திருக்கள்நிர்த் தனஞ்செய் தஞ்சைவாழ் சரப
தீரனு மருளிய முறையே. (ருகஎ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சாதிக்காய்<br>கிராம்பு | இவை வகைக்கு 2 | பணவெடை |
| சர்க்கரை | 3 | ,, |
| அபின் | 3 | ,, |
| ஆலம் விழுது | 4 | ,, |
| காட்டுக்குளப்பாலை வேர் | 4 | ,, |

இவைகளைக் கல்வத்திட்டு கருவூமத்தஞ் சாறுவிட்டு நன்கு அரைக்கவும். நன்றாக மையானபின் இவற்றைக்கொட்டையள வுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும். இதில் ஒன்றை எடுத்துத் தயிரில் குழப்பிக் காலையில் உட்கொள்ளவும்.

வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 292. வயிற்றுக் கடுப்பிற்கு உருண்டை

சாதிக்கா யபின்வசு வாசியிம் மூன்றுஞ்
சரிகழஞ் சாகவே கொண்டு
யேதுவா மூமத் தையிலைச் சாற்றை
யேவிடுத் தரைத்து நன்றாக

வோதிய பாவட் டங்காயி னளவு
முண்டை செய் தேநிழ துலர்த்தித்
தீதிலா முத்தக் காசதைக் காடி
தெள்ளிய நாழிநீர் வாறே: (ருகஅ)

வார்த்தழை யுழக்காய்க் காய்ச்சியோருண்டை
வளமுடன் கரைத்ததி காலை
சாத்திய வந்தி தன்னிலுங் கொள்ளு
சண்டிசெய் வயிறுகடுப் பகலும்
பாத்திரா பாத்திர மறியும்விற் பன்ன
பலகலை நூலுணரு சிதங்
கீர்த்திகள் பெற்ற தஞ்சையில் வாழுந்
தீரனு மருளிய முறையே. (ருகக)

(இ-ள்)

சாதிக்காய்
ஆடாதோடை
அபினி

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துக் கல்வத்திலிட்டு ஊமத்தையிலைச்சாற்றை விட்டு நன்றாக வரைத்துப் பாவட்டங்காயளவுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும்.

கோரைக் கிழங்கை இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, காடி ஒரு படி வார்த்தரைத்து அடுப்பின்மேலற்றி ஒரு உழக்காக வற்ற வைக்கவும். இதனுடன் காலையிலும் மாலையிலும் ஒரு உருண்டை உட்கொள்ளவும். வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 293. வயிற்றின் கடுப்பிற்குச் சீரகக் கற்கம்

சீரகந் தன்னை யிளவறுப் பாகச்
சிவக்கவே வறுத்துசூ ரணித்து
நேருள சீனிச் சர்க்கரை யாவி
நெய்யதிற் சாரித்து விழுங்க

கோரமாம் வயிற்றின் கடுப்பது மகன்று
குணமதாஞ் சிவகிரு பையினால்
காரெனச் சிறந்தக் கணமும் பொழியுங்
கனமிகுந் தஞ்சைமா னுரையே. (௫உ௰)

(இ-ள்)

சீரகத்தை இளவறுப்பாக (சிவக்கும்படி) வறுத்துச் சூரணஞ் செய்து, சீனியும், நெய்யும் சேர்த்துக் குழைத்து உட்கொள்ளவும். வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 294. வயிற்றுச் கடுப்பிற்கு மருந்து

நெல்லியின் முள்ளி யிளவரை கொண்டு
நேருடன் பொடியது செய்து
வல்லகோ ழியுமுட்டை வெள்ளைக் கருவை
வளமுடன் பொரித்ததைத் தானே
சொல்லிய படிக்கிக் கொண்டிடக் கடுப்புஞ்
சுத்தமா யற்றுமே போகும்
வல்லவர் கைலை நாதரைப் போற்றி
மன்புள தஞ்சைமா னுரையே. (௫உக)

(இ-ள்)

நெல்லி முள்ளியை ஒரு சட்டியிலிட்டு இளவறுப்பாக வறுத்துப் பொடிசெய்து அதனுடன் கோழிமுட்டையின் வெள்ளைக்கருவைப் பொறித்து ஒன்றாக்கிச் சாப்பிடவும்.

வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 295. வயிற்றுக் கடுப்புக்குச் சுக்காதி மருந்து

சுக்கிரு கழஞ்சு கொண்ட
திற்கழற் பருப்பு மஞ்சு
நற்குண வட்டொன்றோடே
யரைத்துநல் லெண்ணெய் வார்த்து

இக்கருப் புறவறுத்து
　　யெண்ணெயிற் றிரிதினங்கொள்
கைக்கறாக் கடுப்பி ரத்தஞ்
　　சீதமுங் கடுகப் போமே. (ருஉஉ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுக்கு | —2½ | வராகனெடை |
| கழற்சிப்பருப்பு | —5 | ,, |
| பனைவெல்லம் | —1 | ,, |

இவைகளை இடித்து நல்லெண்ணெய் விட்டு நன்கு கருப்பு நிறமாகும்படி வறுத்து அந்த எண்ணெயுடனே 3 நாட்கள் உட்கொள்ளவும். இரத்தக்கடுப்பு, சீதக்கடுப்புகள் தீரும்.

## 296. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

மாமரத்தின் பிசினுமதிற் சிவந்த பட்டை
　　வகையான களிப்பாக்கிம் மூன்றுந்தானே
வாமபசு வின்பாலில் நறுக்கி நன்றாய்
　　அதிகாலை யிற்கொள்ளு மரைச்சேர்தானே
ஆமமுத லானவயிற் றின்கடுப்பு
　　மகன்றுபோ மாதிசிவன் கிருபையாலே
பூமிதனக் காதார மான தஞ்சைப்
　　புரவலர் கோன் சரபேந்திர னருளிதாமே. (ருஉ௩)

(இ-ள்)

மாம்பிசின்
களிப்பாக்கு
மாம்பட்டை

இவைகளைச் சமனெடுத்து நறுக்கிப் பசுவின் பாலில் ஊற வைத்து அதிகாலையில் உட்கொள்ளவும். சுமார் ½ சேர் சாப்பிடவும். வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 297 வயிற்றுக் கடுப்பிற்குத் துவளை

மங்களவா ரத்திற்சிறு காஞ்சோ றிக்கும்
வளமான திராணிக்கும் நறுவளிக்கும்
பொங்கமுடன் மஞ்சள்காப் பதுவுங் கட்டிப்
பொட்டெனவே வேர்வெட்டிக் குளிசங் கட்டி
பங்கமிலாச் சிறுபுள்ளடி யிலைச்சாறு தன்னைப்
பாங்குடனே துவளையிட வயிறுகடுப்புஞ்
செங்கதிர்முன் பனிபோலப் பறந்தே யோடுஞ்
சிந்தையுகந் திம்முறையைச் செய்துபாரே. (ருஉச)

(இ-ள்)

செவ்வாய்க்கிழமையன்று சிறுகாஞ்சோறிக்கும், திராணிக்கும், நறுவளிக்கும் மஞ்சள் நூலைக்கொண்டு காப்புக்கட்டி அதன் வேரைப் "பொட்" டென வெட்டிக் குளிசமாக்கவும் (மோதிரமாக்கவும்,). சிறு புள்ளடிச் சாற்றில் குளிசத்தைப் போட்டு நோயாளியின் வயிற்றின் மேல் துவளையிடவும்.

வயிறு கடுப்புகள் தீரும்.

## 298. வயிற்றுக் கடுப்பு, பித்தக்கடுப்பு, மேகக் கடுப்பிற்குக் கடாயம்

பத்துமிள குமொருகா செடையாஞ் சாதிப்
பத்திரியும் வரப்பூலாக் கொழுந்திம் மூன்றுஞ்
சித்தமுள்ள மோர்நாழி வார்த்து மூக்காய்த்
துருசுடனே காய்ச்சியிறுத் தந்த நீரில்
வைத்தரைத்துக் கரைத்துமதி காலையிற்கொள்
வயிறுகடுப்பு மிரத்தத்தின் கடுப்பு மல்லாமல்
பத்துமே கக்கடுப்புந் தீரும் பாரு
பலமான மருந்திதுவுஞ் செய்துபாரே. (ருஉரு)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| மிளகு | — 10 | |
| சாதிப்பத்திரி | — 1 | காசெடை |
| வரப்பூலாக்கொழுந்து | — 1 | ,, |

இம்மூன்றையும் ஒரு கல்வத்திலிட்டு நசுக்கிப் பசுவின் மோர் ஒரு படி விட்டு அடுப்பின்மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைக்கவும். மருந்துச் சரக்குகளை நன்றாயரைத்து அதனுடன் குழப்பி அதிகாலையில் சாப்பிடவும். வயிறு கடுப்பு, இரத்தக் கடுப்புகள் தீரும்.

## 299. வயிற்றுக் கடுப்பிற்குச் சீதரத்தத்திற்குக் கடுக்காயுருண்டை

கடுக்காயு மைந்துதன்னைப் பொடிகள் பண்ணி
கருகாமல் சிவக்காமல் நெ வார்த்து
மிடுக்காக வேகவைத்து வுண்டை யாக
விழுங்கிரண்டு வேளையுமே யிம்மருந்தை
துடிப்பாக வயிறுகடுப்புஞ் சீதரத்தஞ்
சோலிசெய்யா தோடிவிடுந் தப்பா மற்றான்
வடிப்பமுள்ள தஞ்சைநக ரன்னை யாளு
மகராசன் சரபேந்திர னுணர்ந்த தாமே. (ருஉசூ)

(இ-ள்)

கடுக்காய் 5 (எண்ணிக்கையில்) எடுத்துத் தூள் செய்து கருக்காமலும் அல்லது சிவக்காமலும் நெய்யைவிட்டு வறுத்து 2 வேளை உருண்டையாக்கி உட்கொள்ளவும்.

வயிறு கடுப்பு, சீதக்கடுப்பு, இரத்தக்கடுப்பு முதலியவைகள் தீரும்.

## 300. வயிற்றுக் கடுப்பிற்குச் சாதிலிங்க மாத்திரை

சாதிலிங்கஞ் செங்கழுநீர் கோஷ்டங் கிராம்புந்
தப்பாமற் களிப்பாக்குங் காசுக்கட்டி
வோதுமபின் வகையாறுஞ் சரியாய்க் கூட்டி
யுன்மத்தின் சாறுவிட்டு மரைத்துத்தானே

சாதகமா மிளகளவு முண்டை பண்ணித்
தானுலர்த்தி யெலுமிச்சம் பழரசத்தில்
நீதமுட னோருண்டை காலையந்தி
நீகொள்வயிற் றின்கடுப்பு நிற்குந்தானே. (ருஉஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| சுத்திசெய்த லிங்கம் | களிப்பாக்கு |
| செங்கழுநீர்க்கிழங்கு | காசுக்கட்டி |
| கோஷ்டம் | சுத்திசெய்த அபின் |
| கிராம்பு | |

இவைகளைச் சமனெடையெடுத்துக் கல்வத்திலிட்டு ஊமத்தையிலைச் சாறு விட்டு நன்றாகவரைத்து, மிளகளவுள்ள மாத்திரைகளாகச் செய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதில் ஒரு உருண்டையெடுத்து எலுமிச்சம் பழச்சாற்றுடன் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். வயிறு கடுப்புகள் தீரும்.

## 301. வயிற்றுக் கடுப்பிற்குச் சாதிக்காய் மாத்திரை

சாதிக்கா யபின்கிராம்பு கஞ்சாத் தூளுஞ்
சாதிப்பத் திரியைந்துஞ் சரியாய்க்கூட்டி
சாதகமா யம்மிதனில் மையதாகத்
தானரைத்துத் தேத்தான்வித் துப்பிரமாண
மேதகுமாத் திரைகள் செய்து நிழலுலர்த்தி
விடிகாலை யந்திரண்டு வேளையுந்தான்
நோதுமதி லோருண்டை தேனிற் கொள்ள
வூரைவிட்டு வயிறுகடுப்பு மோடுந்தானே. (உஅரு)

(இ-ள்)

சாதிக்காய்
கிராம்பு
சாதிப்பத்திரி
சுத்திசெய்த அபினி
,, கஞ்சாத்தூள்

இவைகளைச் சரியளவெடுத்துக் கல்வத்திலிட்டுச் சுத்தஜலம் விட்டு நன்றாகவரைத்துத் தேத்தாங்கொட்டைப் பிரமாண முள்ள மாத்திரைகளாக உருட்டி, காலையிலும் மாலையிலும் ஒரு உருண்டை தேனுடனே உட்கொள்ளவும்,

வயிறு கடுப்புகள் தீரும்.

## 302. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

கொடியாட்டுப் பாலதனைக் கொண்டுவந்து
குழம்பாகக் காய்ச்சிநன்றா யாறவைத்து
துடியிலவம் பிஞ்சுபொடி செய்து போட்டு
சுகமாகக் கொள்ளுமதி காலையிற்றான்
அடவுடைய வயிற்றிலுற்ற கடுப்ப துந்தா
னஞ்சாறு நாடதன்னி லகலும் பாரு
வடிவுடைய பரமசிவன் கிறுபை பெற்ற
மகராசன் சரபேந்திர னுணர்ந்ததாமே. (ருஉகூ)

(இ-ள்)

வெள்ளாட்டுப்பாலை அடுப்பின்மேலேற்றிக் குழம்பாகக் காய்ச்சி ஆறவைத்து, காய்ந்த இலவம் பிஞ்சைத் தூள்செய்து போட்டு அதிகாலையில் பருகவும். வயிறு கடுப்புகள் தீரும். இவ்வாறு 5 அல்லது 6 நாட்கள் கொடுக்கவும்.

## 303. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

புளிநரளைக் கிழங்குவரப் பூலா வேரும்
பிசகாம லரைப்பாக்கி னளவரைத்து
வளமுடைய வெங்கார மபினி ரண்டில்
வகைக்குமொரு பணவெடையு மெருமைமோரி
னுளிற் போட்டுக் காய்ச்சியதி காலைதன்னி
லுங்கொள்ளு வயிறு கடுப்பு முடனேதீரு
மளிபாடுந் தண்டலைசூழ் வள மிகுந்த
வளகைவிபு சரபேந்திர னருளதாமே. (ருகூ0)

(இ-ள்)

புளிநரளைக்கிழங்கு
வரப்பூலாவேர்

இவைகளை வகைக்கு ½ பாக்களவரைத்துக்கொள்ளவும். இதனுடன் வெங்காரம், அபினி இவ்விரண்டும் வகைக்கு 3½ குன்றியளவெடுத்து, எருமை மோர்விட்டு அரைத்து அம் மோரிலேயே (1 நாழி) குழப்பி அடுப்பின்மேலேற்றிக் காய்ச்சவும். இதனை அதிகாலையில் உட்கொள்ள வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 304. மூலக்கடுப்பு, வரைக்கடுப்பிற்குச் சூரணம்

இலவுபிசின் விளாம்பிசின்மா தளையினோடு
மிலவங்கஞ் சாதிக்காய் சாதிப்பத்திரி
நல்சீர கத்தோடே யெழுமருந்தும்
நன்றாகச் சரிகொண்டு பொடியும் பண்ணி
வலுவான பொன்முசுட்டை வேர் நறுக்கி
வளமான தண்ணீர்விட் டொன்றாய்க் காய்ச்சி
கலிங்கமதால் வடிகட்டி முன்னேசொன்ன
கைபாகத் தூள்மருந்தைப் போட்டியே. (௫௩௧)

போடுநீ மூவிரற் கொள் தூள்தன்னை
போட்டுகலக் கிக்காலை யந்தியுந்தான்
நாடியும்நீ நாலைந்து நாளுங் கொள்ளு
நாடுமூ லக்கடுப்பும் வயிறுகடுப்பு
மோடிவிடுஞ் சிங்கத்தைக் கண்ட யானை
யொப்பனையாய் சிவகிருபை யதனாலிந்த
நாடுதஞ்ச நகராளுந் துரையா மெங்கள்
நரபதி கோன் சரபேந்திர ரருளிதாமே. (௫௩௨)

(இ-ள்)

இலவம்பிசின்
மாதளம்ஓடு
சாதிக்காய்

சீரகம்
விளாம்பிசின்
கிராம்பு
சாதிப்பத்திரி

இவைகளைச் சரியெடையெடுத்துப் பொடிசெய்து வைத்துக்கொள்ளவும். பொன்முசுட்டைவேர் (1 பலம்) நறுக்கி 8 மடங்கு சுத்தஜலம் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சிய கஷாயத்துடன் முன்சொன்ன தூளை மூவிரல் கொள்ளுமளவுப் போட்டுக் கலக்கிக் காலையிலும் மாலையிலுமாக 4 அல்லது 5 நாட்கள் பருகவும். மூலக்கடுப்பு, வயிறுக் கடுப்புகள் தீரும். கைகண்டது.

## 305. வயிற்றுக் கடுப்பிற்கு மருந்து

கடுக்காயைத் தூள் செய்து வடியுங்கட்டி
கனத்தெருமைத் தயிரிலாகு தல்நீகொள்ளு
மிடுக்கான வெள்ளாட்டின் பாலிலாதல்
விள்ளிரண்டி லொன்றினிலே யிரண்டுவேளை
கொடுவயிற்றின் கடுப்பகலு மதிகமாகக்
கொள்ளாதே மருந்ததன்னை நிறுத்திப்போடு
துடிப்பான களிறேறிற் றஞ்சையாளுந்
துரைசரபேந் திரனுணர்ந்த முறையதாமே. (௩௩௩)

(இ-ள்)

கடுக்காய்த்தூளை வஸ்திரகாயஞ் செய்துகொண்டு, எருமைத்தயிரிலோ அல்லது வெள்ளாட்டுப்பாலிலோ காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும், 3 பொழுதுகள் உட்கொள்ளவும்.

வயிறு கடுப்புகள் தீரும். இம்மருந்தை அதிகம் சாப்பிடக்கூடாது,

## 306. வயிற்றுக் கடுப்பிற்குக் குழம்பு

அத்திப்பிஞ்சு மதிவிடைய
மசமதாக மதிமதுரஞ்
சத்தாமுள்ளிசீரகமுஞ்
சதிராமிளகு சரிகொண்டு

முத்தல் நாவல் பட்டை ரச
    மூற்றியரைத்துக் குழம்புபண்ணி
பத்தா நெய்யில் வெந்துகொள்ளப்
    பதறிக் கடுப்பும் போய்விடுமே. (ருகூச)

(இ-ள்)

| | |
|---|---|
| அத்திப்பிஞ்சு | அதிவிடையம் |
| ஓமம் | அதிமதுரம் |
| உள்ளி | சீரகம் |
| மிளகு | |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து, முற்றிய நாகப் பட்டையின்சாறு விட்டு நன்றாகவரைத்துக் குழம்பாக்கிப் பசுவின்நெய் கூட்டி அடுப்பின்மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனையுட்கொள்ள வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 307. வயிற்றுக் கடுப்பு, கழிச்சலுக்கு மருந்து

சுக்கரைத்து வடையாகத் தட்டிக்கொண்டு
    துடியான பெருங்காய மிளகின் மாத்திரம்
பக்குவமாய் வைத்துமதைச் சுருட்டித் தானே
    பாரில்களி மண்ணைசெப்பு போலேசெய்து
மிக்கசுண்ணாம் பைத்தடவி மருந்தை வைத்து
    மேல்மூடி யடுப்பினிலே சுட்டெடுத்து
வொக்கதயி ரிற்குழைத்துத் தின்னுபாரு
    வோடிவிடும் வயிறுகடுப்புக் கழிச்சல்தானே. (ருகூரு)

(இ-ள்)

சுக்கைத் தண்ணீர் விட்டுக் கெட்டியாகவரைத்து வடையாகத் தட்டிக்கொண்டு, பெருங்காயம் ஒரு மிளகளவெடுத்துச் சுருட்டவும், ஒரு களிமண் செப்பிற்குள் சுண்ணாம்பு தடவிக் காயவைத்து அதனுள் முன் கூறிய மருந்தைவைத்து மூடி அடுப்பிலிட்டுசுட்டு விடவும். பின்னர், செப்பையுடைத்து மருந்தைத்தயிருடன் குழப்பி உட்கொள்ளவும். வயிற்றுக் கடுப்பு, கழிச்சல் முதலானவை தீரும்.

## 308. வயிற்றுக் கடுப்பு, கழிச்சலுக்கு மருந்து

செங்கலைப் பொடிசெய்து வடியுங்கட்டி
சேர்த்துக்கொள் புளியங்கொட்டைத்தூள் ரெண்டும்
வங்கணமாய்ச் சரிகூட்டி யெருமையோடே
வளமான தயிறன்னிற் குழைத்துக்காலை
யுங்கொள்ளு மூன்றுநா டன்னிலேதான்
ஓடிவிடும் வயிறுகடுப்பு கழிச்சலெல்லாம்
மங்களமாங் கயிலாச நாதர்பாத
மர்ச்சிக்குஞ் சரபேந்திர னருளிதாமே. (ரு௱௬)

(இ-ள்)

செங்கலை இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு அதற்குச்சரி எடை புளியங்கொட்டைத்தூள் சேர்த்து எருமைத் தயிருடன் குழைத்துக் காலை நேரங்களில் உட்கொள்ளவும்.

3 நாட்களுள் வயிற்றுக்கடுப்பு, கழிச்சல் முதலானவை தீரும்.

## 309. வயிற்றில் வாயுவினாலாதல், குன்மத்தினாலாதல், வயிறு கடுப்பு, வயிறு வலி, கழிச்சலுக்கு வாதமடக்கி மருந்து

வாதமடக் கியும்வேளை குப்பைமேனி
வளமான நொச்சிகச்சந் திராயினூடே
பேதமிலா முருங்கையினீர்க் குடன்வேப் பீர்க்கும்
பலமான கண்டங்கத் தரியின் வேருஞ்
சாதகச்சா ரணைக்கிழங்கிம் மருந்து மொன்ப
தகைசரியா யொருமரக்காற் றண்ணீர்விட்டு
மேதணலில் வைத்துமரைப் படிகாய்க் காய்ச்சி
மென்பொடியாங் கடைச்சரக்கின் வகையைக்கேளே.
(ரு௱எ)

வகையோமஞ் சோமனாதி காயம்திப் பிலி
வளமுள்வி மிளகுகிராம் புடனேயாகத்
துகையாறு மருந்துவறுத் தேபொடித்த
தூளுடனே பனைவெல்லங் கூடப்போட்டு

தருமெள்ளி னெண்ணெயரைப் படியும்விட்டுத்
தானேநீ கரண்டியினாற் கிளறி நல்ல
சுகபதங்கண் டேயிறக்கிச் சிவனைப் போற்றி
தோற்கொட்டைப் பாக்கினள வீய்ந்திடாயே. (ருஅ)

ஈய்ந்திடதி காலையந்தி யிரண்டுநேர
மிதற்குபுளிப் பும்புகையி னிலையுமாகா
தோய்ந்தவயிற் றில்வாயுவி னாதல்மற்றோர்
தோஷத்தா லாவதுகுன் மத்தினாலே
வாய்ந்தவயிற் றினில்வலியு மிரவிகண்ட
வன்பனிபோ லோடிவிடுஞ் சிவனார்பாதஞ்
சாந்தகந்த மலரற்சித் தருளேபெற்ற
சரபோசி மகராச னருளிதாமே. (ருகூ)

(இ-ள்)

| | |
|---|---|
| வாதமடக்கி | வேளை |
| குப்பைமேனி | நொச்சி |
| திராய் | முருங்கையீர்க்கு |
| வேப்பீர்க்கு | கண்டங்கத்திரிவேர் |
| சாரணைக்கிழங்கு | |

இவைகள் வகைக்கு 1 சேர் வீதமெடுத்துச் சிறுசிறுதுண்டு களாக்கிச் *சுத்தஜலம் ஒரு மரக்கால் சேர்த்து அடுப்பின் மேலேற்றி $\frac{1}{2}$ படியாகுமட்டும் வற்றக்காய்ச்சவும். பின்பு,

ஓமம்
திப்பிலி
மிளகு
சோமனாதிகாயம்
பூண்டு
கிராம்பு

இவைகளை வகைக்கு (1 பலம்) வீதமெடுத்து வறுத்துச் சூரணஞ் செய்து வேண்டிய அளவு பனைவெல்லம் இட்டுக்கஷா

* 64 நெ. சுவடியில் ''காட்டு மருந்தெல்லாந் துவைத்து ஒண்ணரைப்படிச் சாற்றை $\frac{1}{2}$ படியாகக் காய்ச்சி'' என்று காணப்படுகிறது.

யத்தையும் சேர்த்து நல்லெண்ணெய் ½ படியும் விட்டுக் கரண்டியினால் துழாவி வரவும். நன்குலேகிய பதமானபின் இறக்கிவிடவும்.

இந்தலேகியத்தில் ஒரு கொட்டைப்பாக்களவெடுத்து உட்கொள்ளவும்.

காலையிலும் மாலையிலும் உட்கொண்டுவரவும்.

பத்தியம்:—

புளி, புகையிலை இவற்றைத்தள்ளவும்.

உபயோகம்:—

வயிற்றில் வாயு, குன்மம், வயிற்றுவலி முதலானவை தீரும்.

## 310. உளைப்பிற்குக் கட்டு மருந்து

சீதேவிசெங் கழுநீரெ ழுத்தாணிப்பூண்
டொன்றுசிறந் தசைவின
றாதாருங் கையாந்த கரையும் வரச்
சுண்டியின்னால் சரியாய்க்கூட்டி
நீதானே நறுக்கியுளைப் புறுமிடத்திற்
கட்டுமது நில்லாதோடு
மாதாவி லுயர்ந்ததயை பெற்றசர
பேந்திரனுணர் மருந்திதாமே. (ருசய)

(இ·ள்)

சீதேவிச்செங்கழுநீர்
கையாந்தகரை
எழுத்தாணிப்பூண்டு
வரட்சுண்டி

இவைகளைச் சரியெடையெடுத்து நசுக்கி *உளைப்பு இருக்குமிடத்தில் வைத்துக்கட்டவும். அது தீரும்.

---

* உளைப்பு=வலி

## 311. வயிற்றெரிவுக்கும் உளைப்பிற்கும் மருந்து

கடலுப்பு தனைமோரிற் போட்டுகலக்
 கியுமுறியக் காய்ச்சியேதான்
குடித்தாலு நெல்லியரைத் தெருமைமோர்
 தனிற்கலக்கிக் கொண்டிட்டாலும்
மடவுடனே மூன்றுநா டனிற்றீரு
 முளைப்பும்வயி றதனில்வந்து
யிடர்செய்யு மெரிவதுவுந் தென்னழகை
 விபுவுணர்ந்த திதுவுமாமே. (ருசுக)

(இ-ள்)

கடலுப்பை மோரில் கலக்கி அடுப்பின் மேலேற்றிக் காய்ச்சித் தண்ணீர் கலந்து பருகவும்.

2, நெல்லிக்காயை எருமைமோரில் அரைத்து உட்கொண்டாலும் 3 நாட்களுள் வயிற்றுவலி, உளைப்பு, எரிச்சல் முதலானவை தீரும்.

## 312. வயிறு கடுப்பிற்கு மருந்து

செங்கழுநீர் கோஷ்டமுடன் கடுக்காயுந்
 தின்மிளகுச் சிதமதான
புங்கினுடதளிரின்னரல் வகை மருந்து
 மரைத்துதயிர் புதியநீரி
லுங்கொள்ளு மதிகாலை யுதரத்தின்
 கடுப்பகலு முண்மையானச்
செங்கழுநீர் கோஷ்டமருந் திதையுணர்ந்து
 தஞ்சைவிபு செப்பலாமே. (ருசுஉ)

(இ-ள்)

செங்கழுநீர்க்கிழங்கு
கடுக்காய்
புங்கந்தளிர்

கோஷ்டம்
மிளகு

இவைகளைச் சரியளவெடுத்துத் தயிரின்மேல் தெளிவை விட்டு நன்றாகவரைத்து அதிகாலையில் உட்கொள்ளவும்.

வயிறு கடுப்புகள் இரத்தம் விழுதல் முதலானவை தீரும்.

## 313. இரத்த சீதக் கடுப்பிற்குக் கடாயம்

கொத்தமலி யுங்கடுக்காய் பூவுந் தான்றிக்
காய்சுக்கொ டுசெங் கோட்ட
மத்துமிலா மிச்சம்வே ரிலவங்கப்
பட்டையதி மதுரத்தோடு
நத்துபற்ப டகமிந்த வகையொன்ப
துஞ்சரியாய் நயந்தெடுத்து
இத்தையெல்லாம் வறுக்காமல் நீர்விட்டு
மிதமாய்க் காய்ச்சே. (நிசஈ)

காய்ச்சியெட்டொன் றாயிறுத்துத் துணியதனால்
வடிக்கட்டுங் கடாயந்தன்னை
ஆச்சியபி ராமிதனைப் போற்றியதி
காலையிலு மந்தியுங் கொள்
பாச்சிடிரத் தமுஞ்சீதக் கடுப்பதுவும்
விட்டகலு மந்தியுங்கொள்
வாச்சுதென்று செய்து மருள் பெற்றசர
பேந்திரனருள் வன்மையாமே, (நிசச)

(இ-ள்)

கொத்தமல்லி
தான்றித்தோல்
செங்கோஷ்டம்
இலவங்கப்பட்டை
பற்பாடகம்
கடுக்காய்ப்பூ
சுக்கு

விளாமிச்சம்வேர்
அதிமதுரம்

இவைகளைச் சரியெடையெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி இறுத்து வடிகட்டிக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். சீதக்கடுப்புகள் தீரும். இரத்தகடுப்பும்தீரும்.

## 314. வயிறு களகளப்பு, இரத்தஞ் சீதத்திற்கு மருந்து

விடத்தேரி லையுங்கொழுந்துங் கழற்கொடி
யிலைக் கொழுந்தும் விபுலைதன்னிற்
கடுக்காயின் பருப்புகரும் பூலாவி
னிலைதுவாரங் காசுக்கட்டி
திடத்திலவம் பிசினோமம் வெதுப்படக்கி
முச்சிறச்சீ ரகமிதெலா
மிடுக்காக வரைத்தெருமைற் றயிரோடே
கலந்துமதை விளம்பக்கேளே. (நிசரு)

விளம்பக்கே ளதிகாலை நாலைந்து
நாட்கொளு மிரத்தஞ் சீதங்
களகளப்பு மிரைச்சல் முதல் வயிற்றினிநோ
யென்பதெல்லாங் கழிந்தே போகும்
இளம்பிறையுங் கங்கையறு காவுகடுக்
கையுமணியு மீசன்பாதம்
வளம்பெறவே பூசனைசெய் சரபேந்திர
மன்னவர்கோன் வழுத்தும் வாறே. (நிசசு)

(இ-ள்)

| | |
|---|---|
| விடத்தேரிலை | விடத்தேரிக்கொழுந்து |
| கழற்கொடியிலை | கழற்கொடிக்கொழுந்து |
| கடுக்காய்ப்பருப்பு | கரும்பூலாவிலை |
| காசுக்கட்டி | இலவம்பிசின் |
| ஓமம் | வெதுப்படக்கி |
| சீரகம் | |

இவைகளைச் சரியெடையெடுத்து எருமைத்தயிர்விட்டு நன்றாகவரைத்துத் தயிருடனே கலந்து அதிகாலையில் 4 அல்லது 5 நாட்கள் உட்கொள்ளவும். இரத்தக்கடுப்பு, சீதக்கடுப்பு, களகளப்பு, இரைச்சல், வயிற்றுநோய் முதலானவை தீரும்.

## 315. வயிறு கடுத்து, இரத்தம் விழுகிறதற்கு மருந்து

உதையகா லத்திலழிஞ் சிலின்வேரைக்
கொண்டுவந்து வுறுதியாக
யிதின்மேவின் புரோணியதைப் புன்னைக்கா
யளவரைத்து மிளவெந்நீரு
மதன்மேலே குடிக்கமத் தியானமந்
திக்குமப் படியேதானே
விதமாகக் கழியுமிளைப் பாகிடிலே
மோர்நாழி மேவியுண்ணே. (௩௪எ)

உண்ணுபின்பு குளிர்ந்ததண்ணீ ரிற்குளித்துக்
கோழியதை யுடனடித்து
பண்ணியசா ரதையுண்ணு பின்புகறி
சோறசனம் பண்ணினாலே
எண்ணறிய வயிறுகடுத் திரத்தம்விழு
கிறதெல்லா மேகும்பாரு
பண்ணறிய சிவபூசை செய்சரப
பூபனுணர் பண்பிதாமே. (௩௪அ)

(இ-ள்)

சூரியோதய காலத்தில் அழிஞ்சில் மரத்தின் வேரைக் கொண்டுவந்து அதன் மேல் புரணியை நீக்கிவிட்டு புன்னைக் காயளவெடுத்துச் சுத்த ஜலம் விட்டரைத்து வெதுவெதுப்பான வெந்நீருடன் உட்கொள்ளவும். காலையிலும் மாலையிலும் நன்கு பேதியாகும். அதிகமான கழிச்சலேற்பட்டுச்சோர்வு உண்டாகில் மோர்சாதம் சாப்பிடவும். பின்னர் குளிர்ந்த ஜலத்தில் குளிக்கவும். கோழியை அப்போதே அடித்து கறியாக்கி சாதத்துடன் சாப்பிடவும். வயிற்றுக்கடுப்பு, இரத்தம் விழுதல் முதலானவை தீரும்.

## 316. வயிறுகடுப்பு, இரத்தத்திற்கு அடை

குக்குலொட்டி யிலையுடனே வெங்காய
மிளகுஞ்சுக் கோடிவ்வைந்தும்
பக்குவநெல் லரிசியுட னேயிடித்து
வடைசுட்டுப் பதிகாலத்தி
லக்கரையா யந்தியிலுங் கொள்வயிற்றின்
கடுப்புமிரத் தமுமே மாறு
திக்குகளெல் லாம்புகழுஞ் சரபேந்திர
னுணர்ந்ததெனச் செப்பலாமே. (௫௪௬)

(இ-ள்)

| | |
|---|---|
| குக்கிலொட்டி இலை | வெங்காயம் |
| மிளகு | சுக்கு |

இவைகளைச் சரியளவெடுத்துத் தண்ணீர்விட்டு நெல்லரிசி யிடன்இடித்து, அடையாகத்தட்டிக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். கடுப்பு, இரத்தம் வீழல் முதலானவை தீரும்.

## 317. வயிறுகடுப்பினால் இரத்தம் கழிகிறதற்குச் சாதிக்காய் உருண்டை

சாதிக்காய பினிகழற்கோ டிப்பருப்பு
மிதுமூன்றுஞ் சமனாய்க் கூட்டி
கோதில்கஞ்சா விலைச்சாறு வார்த்தரைத்து
மைப்போலக் குணமதான
தூதுவிளங் காயளவு முண்டைபண்ணிற்
றயிரதல்மூன் றுந்நாளுண்ணு
சூதுசெய்யும் வயிறுகடுப்பு மிரத்தமறுந்
தப்பாமற் சுரமானாலே. (௫௫௰)

சுரமானா லறுளாதிக் கடாயமதி
லேயுண்ணு சுரமில்லாட்டால்
உரமான எருமையுட தயிர்சோறு
நன்றாக வுண்டுபாரு

இருடிசித்தர் சொன்னமுறை சாத்திரத்தை
யுணர்ந்துணர்ந்து மின்பமான
முருகாருஞ் சாதிக்கா யுண்டையிது
சரபேந்திரன் மொழியிதாமே. (ருரு௧)

(இ-ள்)

சாதிக்காய்
கழற்கோடிப்பருப்பு
அபினி

இம்மூன்றையுஞ் சமமெடுத்துக் கஞ்சாவிலைச்சாறு விட்டு நன்கு மைபோலரைத்துத் தூதுவிளங்காய்ப் பிரமாணம் உருண்டை செய்து வைத்துக்கொள்ளவும். இதனைத் தயிருடன் 3 நாட்கள் சாப்பிடவும். வயிறு கடுப்பு இரத்தம் வீழல் முதலியவை தீரும். சுரத்துடனேற்பட்டால் அறுவாதிக் கஷாயத்துடன் சாப்பிடவும். சுரமில்லையெனில் எருமைத்தயிர் விட்டுச் சாப்பிடவும்.

## 318. இரத்தக்கழிச்சலுக்குச் சித்தேல உருண்டை

சித்தேலம் நீர்முள்ளி விரையபினி
கிராம்புசாதிக் காய்திப்பிலி
வித்தாரச் சமுத்திராச்சோ கிவிரையூ
மத்தம்விரை யிவ்வெட்டு
முத்தேசப் படிசரியாய் கஞ்சாவி
னிலைச் சாற்றா லுமரைத்து
சத்தான வுண்டைபண்ணி யறுள்வாதிக்
கடாயமதிற் றானுண்பாயே. (ருரு௨)

தானுண்ணு பத்துநாள் நக்கிதற்குப்
பத்தியந் தயிறுஞ் சோறுந்
தானுண்ணு மிரத்தத்தின் கழிச்சலது
மூரைவிட்டுத் தானே யோடும்

மீன மில்லாச் சிற்றேல வாதியுண்டை
யிதின் குணமு மின்பமாக்குந்
தானதர்ம மிகுந்த தஞ்சை விபுவுணர்ந்த
முறையிதனைற் றானீசெய்யே. (ருருக)

(இ-ள்)

| | |
|---|---|
| சிற்றேலம் | நீர்முள்ளிவிதை |
| அபினி | கிராம்பு |
| சாதிக்காய் | திப்பிலி |
| சமுத்திராச்சோகிவிதை | ஊமத்தைவிதை |

இவைகளைச் சரியளவெடுத்துச் கல்வத்திலிட்டுக் கஞ்சாவிலைச் சாறுவிட்டு நன்றாகவரைத்து உருண்டைகளாகச்செய்து அருள் வாதிக் கடாயத்துடன் சாப்பிடவும். 10 நாட்களுள் இரத்தக் கழிச்சல் நிற்கும். தயிர்சாதம் சாப்பிடவும்.

## 319. இரத்தக் கடுப்பு முதலான வயிற்று நோய்க்கு மருந்து

காட்டில் வளர்நீர்ப் பூலாவே ரதனை
மூன்றுபாக் களவு தானே
நாட்டினி லேபுளித்த மோர்விட் டரைத்து
நன்றாம் நல்லெண்ணெய் தன்னிற்
கூட்டிய தைக்குழைத் துமதி காலைதனி
லுறுதியு டன்கொண்டா யானால்
வாட்டிடு ரத்தக் கடுப்பு முதலான்
வயிற்றினில் நோய்வாங்குந் தானே. (ருருச)

(இ-ள்)

நீர்ப்பூலா வேரைக் கொண்டுவந்து 3 பாக்களவெடுத்துப் புளித்த மோர்விட்டு நன்றாக அரைக்கவும். இதனுடன் நல்லெண்ணெய்விட்டுக் குழைத்து அதிகாலையில் உட்கொள்ளவும். இரத்தக் கடுப்புகள் தீரும். வழுப்பு முதலியவை தீரும்.

## 320. வயிறு கடுப்பாய், வெள்ளுடைப்பாய் கழிகிற திற்கு சிறுகறுக்காயிலைக் களி

அடவிசிறு கறுக்காயி னிலையதுவும்
நெல்லினுட வரிசிகூட்டி
யிடிமாவை நன்ன களிகிண்டி
யதிகாலை யினிலே கொள்ளு
துடிமிகுந்த வயிறுகடுப்பும் வெள்ளுடைப்பாய்
கழிகிறதுஞ் சூரியன்முன்
படருபனி போலோடுஞ் சிறுகறுக்கா
யிலைக்களியைப் பண்பாய்ச் செய்யே. (ருரு)

(இ-ள்)

சிறுகறுக்காய் இலை
அரிசி மாவு

இவ்விரண்டையுஞ் சேர்த்துத் தண்ணீர் விட்டுறவைத்து இடித்துக் களி கிண்டவும். இதனை அதிகாலையில் உட்கொள்ளவும், வயிறு கடுப்பும், வெள்ளுடைப்புக் கழிச்சலும் தீரும்.

## 321. வயிறு கழிச்சலுக்கு மருந்து

பேய்ப்பாச்சோத் தியினிலையுங் கழற்கொடி
யிலையிரண்டு பெருகீராழி
வாய்ப்பான நீரதுவிட் டுரியாகக்
காய்ச்சியதை வளமதாகக்
கொப்பாகப் பிசைந்துபிழிந் திடுசாத்தில்
தின்னுமிள கோடுசுக்குஞ்
செப்பாய்நாய் வேளைவேர் கழற்கொடிப்
பருப்புமினஞ் செப்புவேனே, (ருசு)

செப்புகரு வேப்பிலையு மசமதா
கத்துடனே சேர்த்திவ்வாறு
மொப்புளம ருந்துதனைப் பழமோர்விட்
டரைத்துமந்த வுறியமோரை

மெய்ப்புளசட் டியிற்காய்ச்சி யெள்ளெண்ணெய்
குத்தியதை வேரோர்சட்டி
யிற்பாய்ச்சி யேயதையுந் துளாவியதி
காலையினி லேயுண்பாயே. (௫௫எ)

காலையினி லைந்துநாட் கொள்ளவே
வயிற்றினுட கழிச்சலோட
பாலதுபோல் வெள்ளுடைப்பாய்க் கழிகிறதும்
பருதியின்முன் பனிபோல்தீரு
சீலபதஞ் சலிபிருங்கர் வியாக்கிரம
ரும்பணியுஞ் சிவனார் பாதங்
கோலமல ரற்சனைசெய் யருள்பெற்ற
தஞ்சைவிபு கூறலாமே. (௫௫அ)

(இ-ள்)

பேய்ப்பாய்ச்சோற்றியிலை
கழற்கொடியிலை

இரண்டையும் இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 2 படி சுத்த ஜலம் விட்டு ½ படியாகும் வரை வற்றவைத்துச் சக்கையைப் பிழிந்து கஷாயத்தையிறுத்து அதனுடன்

மிளகு
நாய்வேளைவேர்
கருவேப்பிலை
சுக்கு
கழற்கொடிப்பருப்பு
ஓமம்

இவைகளைப் புளித்த மோர்விட்டு நன்றாயரைத்துக் கலந்து, சுத்தமான நல்லெண்ணெய் விட்டு மற்றோர் சட்டியிலூற்றி அதனுடன் துழாவிக் கொதிக்கவைத்துப் பக்குவமாக்கி இறக்கவும். இந்த எண்ணெயை 5 நாட்கள் அதிகாலையில் பருகவும்

வயிற்றுக்கழிச்சல், பால்போல் கழிதல், வெள்ளுடைப் பாய்க்கழிதல் முதலானவைதீரும்.

## 322. வயிற்றுக் கடுப்பிற்கும் வெள்ளுடைப்புக் கழிச்சலுக்கும் மருந்து

விடத்தேரி லையின்நெல்லின் பொரியரிசி
யுங்காட்டின் விளாம்பிசினும்
விடுத்தொருசட் டியில்வறுத்து யிடித்துத்தூ
ளாக்கியதை விடிந்தகாலை
மிடுக்குடைய வனுபான மருந்துண்ணு
வயிறுகடுப்பும் வெள்ளுடைப்புந்
துடித்தோடுந் தியாகியைக்கண் டிடுகலியோர்
தஞ்சைவிபு சொல்லிதாமே. (௫௫௬)

(இள்)

விடத்தேரிலை
பொரியரிசி
விளாம்பிசின்

இவைகளை ஒரு சட்டியிலிட்டுப் பொன்வறுவலாக வறுத்து இடித்துச் சூரணித்து அதிகாலையில் தக்க அனுபானத்துடனுட் கொள்ளவும்.

வயிற்றுக்கடுப்பு, வெள்ளுடைப்புக்கழிச்சல் முதலானவை தீரும்.

## 323. வயிற்றுக்கடுப்பு, வெள்ளுடைப்புக்குக் களி

துவைத்தநறுந் தாளியிலை ரசமெடுத்து
விளாம்பிசினுஞ் சுகமதாக
விவைதனையுந் தூளாக்கிப் புழுங்கலரி
சியும்பொரித்து விதுமிடித்து
நவமான வேம்பினுட பிசினுமிடித்
தேகலந்து நன்மையாக
வவித்தகளி கிண்டியுண்ண வயிறு கடுப்பும்
வெள்ளுடைப்பு மகலுந்தானே. (௫௬௰)

(இ-ள்)

நறுந்தாளியிலை ரசத்துடன் விளாம்பிசின் சேர்த்து, புழுங்க லரிசியை வறுத்து இடித்து அதனுடன் சேர்த்து, புதிய வேப்பம் பிசினும் கூட்டித் தண்ணீர்விட்டுக் களியாகக் கிண்டி உட் கொள்ளவும்.

வயிற்றுக்கடுப்பு, வெள்ளுடைப்புக் கழிச்சல் நீங்கும்.

## 324. வயிற்றுக்கடுப்பு, வெள்ளுடைப்பிற்குச் சுக்காதி மருந்து

சுக்கின்மேற் றோர்சீவி யிந்துப்பை
 யெருமைப்பால் தோய்த்து நல்ல
பக்குவமாந் தயிரதனி லரைத்துச்சுக்கின்
 மேற்பூசிப் பருதிமுன்வைத்
தக்கணமே யுலர்த்தியெரு மைத்தயிரி
 லேகுழப்பி யப்போதுண்ணு
சிக்குசெய்யும் வயிற்றினுட கடுப்புமிகும்
 வெள்ளுடைப்புந் தீருந்தானே. (ருசுக)

(இ-ள்)

சுக்கின் மேற்றோலைச்சீவிக்கொண்டு, எருமைப்பாலைத் தோய்த்துத் தயிருடன் இந்துப்பையரைத்து அதன் மேலே பூசி வெயிலில் உலர்த்தவும். பின்னர் அதை எருமைத் தயிருடன் குழப்பி உட்கொள்ளவும். வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 325. பேதி, வயிற்றுக்கடுப்பு, அதிஸாரம், கிராணிக்குக் கெந்தக பற்பம்

வெந்நீரைச் சுடவைத்து வதிலேகெந்த
 கந்தன்னை மேவப்போட்டு
தன்னிலே வைத்தொருராத் திரிமட்டு
 மதையெடுத்துத் தானே கேளு

உன்னிதமா னக்கொழுஞ்சிப் பழச்சாற்றி
விரண்டுமு ளுதிறஞ்சாய்த்து
நன்னயமாந் தண்ணீரிற் கழுவிப்போட்
டுப்பிலிச்சாற் நலமாய்வாறே. (ருசுஉ)

நலமாக வார்த்துமொரு சாமமரைத்
தேவில்லை நன்றாய்த் தட்டி
அவனிதனிற் காயவைத்த பின்புமே
யாலிலையி னாலேசுத்தி
வலுவாகக் கட்டிசட்டி தனிநாலு
விரற்கெடையு மணலைப்போட்டு
வலமாக வில்லையதன் மேல்வைத்து
வதன்மேலு மணலைப்போடே. (ருசுங)

போட்டுமேல் மண்சூடு காணுமட்டு
மெரித்தெடுத்துப் புத்தியாக
நாட்டமுடன் முன்செய்த படிக்கியின்னோர்
விசைசெய்து நலமதாகக்
காட்டிலுப்பை யிலையுமதிற் பாதியொதி
யிலையிரண்டுங் கடுகத்தானே
போட்டிடித்துச் சாறுபிழிந்து வில்லைதனிற்
விட்டுமதைப் பொருந்தத்தானே. (ருசுச)

பொருந்தவொரு சாமமரைத் தேவில்லை
தட்டியதைப் புதியதான
திருந்துபுளி யம்புரணிச் சாம்பலிலா
குதலதைவைத் தேயில்லாட்டால்
வருந்துதணற் புடமாகி லும்போடு
பற்பமதா மதையெடுத்து
பரிந்துசிமி ளதில்வைத்துத் தேனிலொரு
காசெடையும் பற்பந்தானே, (ருசுரு)

பற்பமதைக் குழப்பியந்தி காலையுமே
கெந்தகபற் பத்தையீந்தால்
செப்பமுடி யாப்பேதி வயிற்றுக்கடுப்பும்
மதிசாரந் தீரும்பாரு

அற்புதமி குந்தஞ்சைக் கரசன்சோ
முநாட்டுக் கதிபன்பூவி
லொப்பிலாகக் கீர்த்திபெரு சரபேந்திர
பூபனுண ருசிதந்தானே.

(இ-ள்)

தண்ணீரைச் சுடவைத்து அதனுடன் சுத்திசெய்த கெந்தகத்தைப்போட்டு ஒரு இரவு முழுவதும் ஊறவைக்கவும். மறுநாள் இக்கெந்தகத்தை யெடுத்து உருக்கிக் கொழுஞ்சிப்பழச் சாற்றில் சாய்க்கவும். இவ்வாறு 2 அல்லது 3 தடவை செய்யவும். பின்னர் தண்ணீர் விட்டுக் கழுவிவிட்டு, உப்பிலாக்கொடிச் சாற்றில் மேற்கூறியபடி செய்யவும். ஷை சாறைவிட்டு ஒரு சாமம் அரைத்து வில்லைகளாகத்தட்டவும். (காலணா அளவுள்ளவை) வில்லைகள் காய்ந்தவுடன் அவைகளை ஒரு ஆல் இலைக்குள் சுருட்டி நன்றாக நூல்கொண்டு கட்டவும். பின்னர் ஒரு வாயகலச் சட்டிக்குள் 4விரட்கெடையளவு மணலைப் பரப்பி அதன் மேல் வில்லையை வைத்துத் திருப்பவும் மணல்போடவும். மேல் மண் சூடுகாணும் வரை எரிக்கவும். மறுநாள் இதேமாதிரி இன்னொரு தடவை எரித்து வில்லையை யெடுத்துக் கல்வத்தி விட்டு இலுப்பையிலை 2 பங்கு, ஒதிய இலை 1 பங்கு இவ் விரண்டையும் சேர்த்திடித்துச் சாறுபிழிந்து, அதனால் ஒரு சாமம்வரை யரைக்கவும், வில்லைதட்டிக் காயவைத்துப் புளியம் புராணிக்குள் வைத்தோ அல்லது தணல் புடமாகவோ போடப் பற்பமாகும்.

பற்பத்தை ஒரு சிமிழில் வைத்து வேண்டும்போது ஒரு காசெடை பற்பத்தைத் தேனுடன் குழைத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

தீராதபேதி, வயிற்றுக் கடுப்பு, அதிசாரம் முதலானவை தீரும்.

## 326. வைசூரியினால் வந்த கடுப்பிற்கு மருந்து

மாதளையின் கொழுந்துதுவ ரைக்கொழுந்து
சீரகமு மத்திப்பிஞ்சு
சாதகவி டத்தகரை யின்கொழுந்து
மிளகுடநாறுந் தப்பாமற்றா

நேதகவொன் றாய்க்கூட்டி யெருமைமோர்
வார்த்தரைத்து நீதான்காலை
யேதவிரா மற்கொள்ள வைசூரியின்மேல்
வந்தகடுப் பேகுந்தானே. (ருசுஎ)

(இ-ள்)

மாதளைக்கொழுந்து
சீரகம்
விடத்தகரைக்கொழுந்து
துவரங்கொழுந்து
அத்திப்பிஞ்சு
மிளகு

இவைகளை யொன்றாகக்கூட்டி எருமை மோர் விட்டு நன்றாகவரைத்துக் காலை நேரங்களில் சாப்பிடவும். அம்மைக்குப் பின்னேற்பட்ட வயிற்றுக் கடுப்புகள் தீரும்.

## 327. வைசூரி மேல்வந்த கடுப்பிற்கு மருந்து

மாதளங்காய் விரைவாங்கிப் போட்டேலங்
கிராம்புமதி மதுரங்கோஷ்டம்
சாதிக்கா யுடனாறுஞ் சரியாகப்
பொடிபண்ணித் தானடைத்து
சாதகமண் சீலைசெய்து ரவிதனிலே
வைத்துமதைச் சற்றுலர்த்தி
பேதகமில் லாமலதை யெருதனிலே
நன்றாகப் புடத்தைப் போடே. (ருசுஅ)

புடம்போட்டு யெருமையுட மோரினிலா
குதல்கானிற் பேதமில்லா
திடமான வில்வவேர் கடாயத்தி
லாகுதல்நீ தினமேகாலை
யுடனந்தி யிலுங்கொள்ளு வைசூரிமேல்
வந்தகடுப் புடனே தீருந்
தடவிநட கெம்பீரக் களிறேறுந்
தஞ்சைவிபு சாற்றும்வா்றே. (ருசுகூ)

(இ-ள்)

விரை நீக்கிய மாதளங்காய்க்குள்,
ஏலக்காய்
கிராம்பு
கோஷ்டம்
அதிமதுரம்
சாதிக்காய்

இவைகளைச் சமனெடையெடுத்து இடித்து வஸ்திர காயஞ் செய்த தூளை அடைத்துச் சீலைமண் செய்து வெயிலில் உலர வைக்கவும். இதை எருமுட்டைக்குள் வைத்துப் புடமிடவும். பின்னர் இதை எருமை மோரிலோ அல்லது வில்வக் கஷாயத்திலோ காலையிலும் மாலையிலும் அரைத்து உட்கொள்ளவும்.

வைசூரிமேல் வந்த கடுப்புகள் தீரும்.

## 328. வைசூரிமேல் வந்த கடுப்பிற்குக் கஷாயம்

அம்மான்பச் சரிசிதென்னங் குறும்பைநலு
வளிக்கொழுந்து பதுகள் மூன்றில்
செம்மையாய் வகைக்குவொரு பிடிவதக்கிப்
படிநீருஞ் சேரவே வார்த்
தும்மழக்காய்க் காய்ச்சியிறுத் தேயிதற்கு
மென்பொடியுஞ் சொல்லக் கேளு
கம்முகந்த சாதிக்காய் கிராம்புசீர
கமூவ கையும் பொரித்தே. (நஎம)

பொரித்தரைத்துத் தூளாக்கி தூவியக்க
டாயமதைப் பொருத்திக்கொள்ளு
வருத்தமுற்ற வைசூரியின்மேல் வருங்கடுப்பு
முடனேதான் வாங்கிப்போகுந்
திருக்கள்நிர்த்த மிடுந்தஞ்சை நகர்க்கதிப
னுயர்பரம சிவனைப்போற்றி
வரைக்குள்மிகு கீர்த்திபெற்ற சரபேந்திர
பூபதியும் வழுத்தும் வாறே. (நகஅ)

(இ-ள்)

அம்மான் பச்சரிசி
நறுவளிக்கொழுந்து
தென்னங்குரும்பை

இவைகள் வகைக்குச் சீவியதூள் ஒருபிடி எடுத்து வதக்கிக் கொள்ளவும். இதனுடன் ஒரு படி சுத்த ஜலம் சேர்த்து எட்டி லொன்றாக்கி இறக்கவும். இக்கஷாயத்துடன்,

சாதிக்காய்
சீரகம்
கிராம்பு

இம்மூன்றையும் வறுத்து இடித்த சூரணத்தையிட்டுப் பருகவும். வைசூரியினால் ஏற்பட்ட கடுப்புகள் தீரும்.

## 329. அதிசாரக் கடுப்பிற்குக் கொத்தமல்லியாதி சூரணம்

கொத்தமலி யெட்டுசீ ரகமாறு
கொச்சிமிள கும்மோவொன்ப
துத்தத்தா ளிசபத்திரி யுமைந்து
கிராம்பொன்று தோல்பூதன்னிற்
சத்தேல மூன்று சிறு நாகப்பூ
ரெண்டுதிப்பி லிதானுங்கேளு
பத்துசுக்கு முப்பத்தி ரண்டிலவங்
கத்தினுட பத்திரிநாலே. (ருஎஉ)

நாலுகுண மாமமுக் கிராக்கிழங்கு
மறுபத்தி நாலிதெல்லாங்
கோலவரா கனெடைசருக் கரையுமோ
சேரொன்று கூட்டித்தானே
சூலசூர ணஞ்செய்து காலையந்தி
வெருகடிதூள் தின்னுபாரு
வோலமிடு மதிசாரக் கடுப்பகலுந்
தப்பாம லுண்மைதானே. (ருஎங)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| கொத்தமல்லி | 8 | வராகனெடை |
| சீரகம் | 6 | ,, |
| மிளகு | 9 | ,, |
| தாளீசபத்திரி | 5 | ,, |
| கிராம்பு | 1 | ,, |
| ஏலக்காய் | 8 | ,, |
| சிறுநாகப்பூ | 2 | ,, |
| திப்பிலி | 10 | ,, |
| சுக்கு | 32 | ,, |
| லவங்கப்பத்திரி | 4 | ,, |
| அமுக்கிராக்கிழங்கு | 64 | ,, |
| சர்க்கரை | 1 | சேர் |

இவைகளைக் கல்லுரலிலிட்டு நன்கு இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொள்ளவும். இச்சூரணத்தைக் காலையிலும் மாலையிலும் மூவிரல் கொள்ளுமளவெடுத்து உட்கொள்ளவும். அதிஸாரக் கடுப்புகள் தீரும்.

## 330. அதிஸாரத்திற்குச் சூரணம்

சித்தமுட்டி வேர்பேரா முட்டிவேர்
நிலக்குமிழ்வேர் சிறந்தபூவி
லுத்திடுகோ ரைக்கிழங்கு நெருஞ்சிவேர்
நல்லதிம துரமுங் கோட்டங்
கொத்தமலி குங்குமப்பூ செண்பகப்பூ
வுடனேலங் கூகைநீருங்
கத்தூரி மஞ்சள்கோ ரோசனைதிப்
பிலிசிறுநா கப்பூத்தானே. (௩௪௪)

தானுண்ணு மிளகுசுக்கு லங்கப்பத்
திரியுடன்தா ளிசபத்திரி
யானசீர கம்லவங்கப் பட்டையிரு
பத்திரண்டு மாமருந்தும்

நீநயமாய்ச் சூரணித்து வடிக்கட்டிக்
கொண்டதிலே நெடுங்கரும்பின்
வூனதுவாஞ் சர்க்கரையு மரைச்சேருங்
கூட்டிதை யுண்ணக்கேளே. (நிஎரு)

உண்ணிடொரு வெருகடிதூள் அந்திசந்தி
யுந்தானு முட்கொண்டாலே
எண்ணறிய வதிசார மென்பதெல்லா
மூரைவிட் டேகும்பாரு
பண்ணறிய சிவபூசை பண்ணிமெத்த
பாலன்பெற்ற பாக்கியசாலி
யண்ணல்சர பேந்திரசிந்தா மணியுணர்ந்த
சூரணமி தறிநீதானே. (நிஎசு)

(இ-ன்)

| | |
|---|---|
| சித்தாமுட்டிவேர் | பேராமுட்டிவேர் |
| நிலக்குமிழ்வேர் | கோரைக்கிழங்கு |
| நெருஞ்சில்வேர் | அதிமதுரம் |
| கோஷ்டம் | கொத்தமல்லி விதை |
| குங்குமப்பூ | செண்பகப்பூ |
| ஏலக்காய் | கூகைநீர் |
| கஸ்தூரிமஞ்சள் | கோரோசனை |
| திப்பிலி | சிறுநாகப்பூ |
| மிளகு | சுக்கு |
| லவங்கப்பத்திரி | தாளீசபத்திரி |
| சீரகம் | இலவங்கப்பட்டை |

இவைகளைச் சரி எடை எடுத்துக் காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்துகொண்டு சர்க்கரை ½ சேர் கலந்து இதனை மூவிரல் கொள்ளுமளவெடுத்துக் காலையிலும் மாலை யிலும் சாப்பிடவும். அதிசாரங்கள் தீரும்.

குறிப்பு:—

குங்குமப்பூ, கோரோசனை இவ்விரண்டும் வகைக்கு வராக னெடை கால் என்று காணப்படுகிறது.

## 331. அதிஸாரக் கழிச்சலுக்குக் கஷாயம்

அத்தியிலை மாதளந்தோற் கூவளையி
　　னிலையுடனே யாடாதோடை
சுத்தநீர் விட்டுழக்காய்க் காய்ச்சியிறுத்
　　தேயதையுந் துருசாய்த்தானே
வத்திரத்தால் வடிக்கட்டி யிரண்டுவேளை
　　யுமுண்ண மனிதர்க்குத்தான்
மெத்தவருத் ததிசாரக் கழிச்சலறுந்
　　தப்பாமல் மேவிச்செய்யே. (ருஎஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| அத்தியிலை | மாதள் ஓடு |
| வில்வயிலை | ஆடாதோடை வேர் |

இவைகளை வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்து 8 பங்கு ஜலம் விட்டு ஒரு உழக்காகக் காய்ச்சி வடிக்கட்டிக் கொண்டு, காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். அதிஸாரக் கழிச்சல் நிற்கும்.

## 332. இரத்தக் கழிச்சல், மலக்கழிச்சல், அன்னமுண்ணாமல் தண்ணீர் தாகம் நெஞ்சடைப்பிற்கு

கதலியின்பூ மண்பூசிப் புடமிட்டுப்
　　பிழிந்திடதைக் கையினாலே
பதமான வதிவிடையம் நுணுக்கியதிற்
　　போட்டுக்கொள் பத்தியந்தான்
யிதமான துவர்க்காய்கள் கறிபண்ணி
　　யுண்ணிதற்கு மேகும் நோய் கேள்
ளுதிரத்தின் கழிச்சல் வலக் கழிச்சலுட
　　னேயன்ன முண்ணொட்டாதே. (ருஎஅ)

ஒட்டாது சரீரம்வெளுக் குந்தண்ணீர்
தாகமெத்த வுண்டாந்தானே
வுட்டான நெஞ்சடைக்கு மிந்தவியா
திகளெல்லா மகன்றேபோகும்
இஷ்டர்களுக் கனுகூலன் றமிழறியும்
விற்பன்ன னெழில்மிகுந்த
மட்டாரு மாலையணி சரபேந்திர
னுணர்ந்த மருந்துதானே. (ருஎகூ)

(இ-ள்)

வாழைப்பூவிற்கு மண் பூசிக் காயவைத்து எருவின் மத்தியில் வைத்துப் புடமிட்டுக் கல்லுரலிலிட்டு இடித்துப் பிழிந்து கொள்ளவும், இதனிடன் அதிவிடயம் சூரணித்துப்போட்டு உட்கொள்ளவும்.

பத்தியம்:-

துவர்ப்புச் சுவையுள்ள காய்கறிகள் கூட்டவும்.

இரத்தக் கழிச்சல், மலக்கழிச்சல் தீரும். ஆகாரத்தைத் தள்ளுதல், உடம்பு வெளுத்தல், தண்ணீர் தாகமெடுத்தல், நெஞ்சடைப்பு முதலான வியாதிகளுந் தீரும்.

## 333. அதிசாரத்திற்குக் கடாயம்

முத்தல்நறு வளிப்பட்டை யிலவங்கப்
பட்டைபல மோதானொன்றுஞ்
சத்துவமாய்த் தட்டியிரு நாழிநீர்
வார்த்ததையுந் தணலில்வைத்து
வத்தவுழக் காய்க்காய்ச்சி வுழக்குவிடு
வதுதனிலே வற்காலிப்பா
லொத்தவதி விடையமதைத் தூள்செய்து
மென்பொடியா யுந்தான்போடே. (ருஅ0)

போட்டுநன்றாய்க் கலக்கியதி காலையிலு
மந்தியிலும் பொருந்திக்கொள்ளு
வாட்டுமதி சாரத்தால் வருதுன்ப
மத்தனையும் வாங்கிப்போகும்
காட்டினிற்கல் லாயிருந்த பெண்ணுருவாய்
செய்தகா குத்தன்றஞ்சை
நாட்டரசன் சரபேந்திர துரையுணர்ந்த
முறையிதுவும் நம்பிச்செய்யே. (ரு௮௧)

(இ-ள்)

முற்றிய நறுவளிப்பட்டை — 1 பலம்
இலவங்கப்பட்டை — ,,

இவ்விரண்டையும் ஒன்றிரண்டாக இடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்தஜலம் $\frac{1}{2}$ படி வார்த்து, ஒரு உழக்காகுமட்டும் எரித்து வடிக்கட்டிக்கொண்டு, ஆட்டுப்பால் ஒரு உழக்குஞ் சேர்த்து அதிவிடயத்தூள் ஒரு குத்தளவு போட்டு, அதிகாலையிலும், மாலையிலும் உட்கொள்ளவும். அதிசாரங்கள் தீரும். கைகண்டது.

## 334. அதிசாரத்திற்குக் குடிநீர்

இருவேலி வேரதிவி டையமுத்தக்
காசுடனே யிலாமிச்சம்வேர்
மரமஞ்சள் வெட்பாலை தோலும்நா
யுருவிவேர் வளமதான
உரசிறுகாஞ் சோறியிந்த யெட்டுமருந்
தும்வகைக்கு மோர்கழஞ்சு
யிருநாழி நீர்விட்டு வுழக்காகக்
காய்ச்சியதை யேகொள்வாயே. (ரு௮௨)

கொண்டிடிதற் குப்பிணியின் வலுவறிந்து
மென்பொடியுங் கூட்டியேதான்
உண்டிடதி காலையிலு மாலையிலு
மதிசார மோடும்பாரு

அண்டினரை யீடேத்து மனதாத
தயைமாதர் அன்பேயுள்ள
தண்டாணி புகழ்சரப பூபதிசிந்
தாமணியுஞ் சாற்றும்வாறே. (ருஅரு)

(இ-ள்)

| | |
|---|---|
| வெட்டிவேர் | அதிவிடையம் |
| கோரைக்கிழங்கு | இலாமிச்சம்வேர் |
| மரமஞ்சள்தோல் | வெட்பாலைப்பட்டை |
| நாயுருவிவேர் | சிறுகாஞ்சோறிவேர் |

இவைகள் வகைக்கு ஒரு கழஞ்சு வீதமெடுத்து ஒன்றிரண்டாக இடித்துச் சுத்தஜலம் 2 படி (பட்டணம் படி $\frac{1}{2}$) விட்டு அடுப்பின்மேலேற்றி ஒரு உழக்காக வற்றவைக்கவும், இதனை வடிகட்டி, மென்பொடி அதிவிடையச் சூரணம் இட்டுக் காலையிலும் மாலையிலும் பருகவும். அதிசாரங்கள் தீரும்.

## 335. ஏழுநாட் சென்ற ஜ்வரத்திற்கும் அதிசாரத்திற்கும் ஜ்வராதிஸாரத்திற்கும் ஆனந்த பைரவி ரஸம்

பச்சநாபி யுமொரு கழஞ்சுகோ
மூத்திரத்திற் பதியவைத்து
யிச்சையுள மிளகுதிப் பிலிவெண்கா
ரஞ்சாதி லிங்கம்நாலும்
வச்சிடொரு வகைக்குமுக் களஞ்செலுமிச்
சம்பழச்சாறு வார்த்தரைத்து
அச்சமிலா மற்றுவரைப் பிரமாண
முருட்டிநிழ லதுமுலர்த்தே. (ருஅசு)

அதையுலர்த்தி யேழுநாட் சென்றசுரத்
துக்கிஞ்சி யப்பிலேதா
நிதிலேயொரு வுண்டையுரைத் திடுமூன்று
நாளில்சுர மேகும்பாரு

அதிசார மதன்மேலே சுரமானால்
நாட்டுச்சுக் கதுகளஞ்சில்
சதமாக வறுபதுநா ழிகைசென்ற
வெள்ளாட்டுத் தயிரிற்றானே. (ருஅரு)

தானரைத்துச் சுண்டாங்கி யாய்த்தட்டி
வைத்தறுவாட் டனலில்வைத்து
வானபிற கதுவெந்து கறுப்புநிற
மானவா றேயெடுத்து
நீநயமா மம்மியிலே கொட்டிமுன்சொற்
றயிர்வார்த்து நேகத்தானே
வூனமிலா மலரைத்து முன்போலே
சுட்டுமூன்று விசைதானே. (ருஅசா)

மட்டளவு பொரித்து முன்செய் யானந்த
வைரவத்தின் மாத்திரை யொன்றுஞ்
சட்டமுட னுரைத்துவெள்ளாட் டுற்றயிரிற்
றானுண்ண சகத்தில்மெத்த
கொட்டமிடு மதிசாரஞ் சுராதிசா
ரங்களெல்லாங் குணமதாமே. (ருஅஎ)

(இ-ள்)

நாபி $1\frac{1}{2}$ வராகனெடை எடுத்துக் கோமூத்திரத்தில் (ஒரு நாள்) ஊறவைத்து அலம்பிக்கொள்ளவும். அதனுடன்.

| | |
|---|---|
| மிளகு | $3\frac{3}{4}$ வராகனெடை |
| திப்பிலி | ,, |
| பொரித்த வெங்காரம் | ,, |
| சுத்திசெய்த லிங்கம் | ,, |

இவைகளையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு நன்றாகவரைத்து அவரைக்கொட்டைப் பிரமாணமுள்ள மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தவும். இதிலொரு மாத்திரையெடுத்து இஞ்சிச் சாற்றில் உட்கொள்ளவும். 7 நாட்களுக்கொருமுறை வரும் ஜ்வரம் (3 நாட்களில்) தீரும்.

அதிஸார ஜ்வரமானால்,

நாட்டுச் சுக்கு ஒரு கழஞ்சுடன், ஒரு நாள் வைத்திருந்த வெள்ளாட்டுத் தயிர்விட்டு நன்றாக அரைத்து வில்லைகளாகத் தட்டி ஒரு சட்டியில் அப்பி அடுப்பின்மேலேற்றிக் கறுப்பு நிறமாகும் வரை வைத்து, அம்மியின்மேல் வைத்து, மறுபடியும் தயிர்விட்டு நன்றாகவரைத்து, முன்போல்சுடவும். இவ்வாறு 3 முறை சுட்டுச் சூரணித்து வைத்துக்கொள்ளவும். இச் சூரணத்துடன் முன் தயார் செய்த ஆனந்த பைரவ மாத்திரை ஒன்று வைத்து, வெள்ளாட்டுத் தயிருடன் உட்கொள்ளவும். அதிசாரம், ஜ்வராதிசாரம் முதலியவை குணமாகும்.

## 336. கிராணி அதிசாரத்திற்கு "இந்துப்பாதிச் சூரணம்"

இந்துப்பு வில்வப் பிஞ்சசமதா
    கங்காட்டாத் திப்பூசுக்கு
கந்தக்கிராம்பி லவம்பிசி னுமாங்கொட்
    டையுடன் கருஞ்சீர கந்தா
னுந்திப்பி லியும்பத் துஞ்சரி யிடித்து
    வெருகடி தூளுட்கொண் டாலே
யெந்தக் கிராணி யதிசார மும்போ
    மன்புடனே யிதனைச் செய்யே. (நி-அ-அ)

(இ-ள்)

| | |
|---|---|
| இந்துப்பு | வில்வப்பிஞ்சு |
| ஓமம் | காட்டாத்திப்பூ |
| சுக்கு | கிராம்பு |
| இலவம்பிசின் | மாங்கொட்டை |
| கருஞ்சீரகம் | திப்பிலி |

இவைகளைச் சரியெடை எடுத்து, இடித்து, வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு, மூவிரல் கொள்ளுமளவெடுத்துக் காலை மாலை இரு வேளைகளிலும் மோருடன் உட்கொள்ளவும். கிராணிகள், அதிஸாரங்கள் தீரும்.

## 337. அதிஸாரம், கிராணி முதலானவைகளுக்கு அரளுவாதிச் சூரணம்

அரளுவா திச்சூர ணமது வொன்று
மதிசாரக் கிராணி யென்பதுக்கு
பெருமரப் பட்டை லோத்திரம் வில்வப்
பிஞ்சதி விடையமாங் கொட்டை
பருப்புகாட் டாத்திப் பூவுட னேவெட்
பாலையி னரிசிபொன் முசுட்டை
தருவினிற் புளியங் கொட்டையின் றேலுந்
தப்பிலா யிலவினிற் பிசினே. (நுஅகூ)

பிசினுடன் கோரைக் கிழங்கிலா மிச்சம்
பேசுசுக் குடன்பதி மூன்றும்
வசமதாய் சமபா கமுமது கூட்டி
வம்மியிற் பொடியது செய்து
பசுவினற்றயிரி லாகுதல் தேனில்
பண்புட னேயதைக் கொடுக்க
நிசமதா மதிசா ரத்துடன் கிராணி
நீங்கிடு முண்மையா மிதுவே. (சுகூ௰)

(இ-ள்)

| | |
|---|---|
| பெருமரப்பட்டை | லோத்ரப்பட்டை |
| வில்வப்பிஞ்சு | அதிவிடையம் |
| மாங்கொட்டைப்பருப்பு | காட்டாத்திப்பூ |
| வெட்பாலையரிசி | பொன்முசுட்டை |
| புளியங்கொட்டைத்தோல் | இலவம்பிசின் |
| கோரைக்கிழங்கு | இலாமிச்சம்வேர் |
| சுக்கு | |

இவைகளைச் சமனெடுத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து வைத்துக்கொண்டு, பசுவின் தயிரிலோ அல்லது தேனிலோ உட்கொள்ளவும். அதிசாரம், கிராணி முதலியவைகள் தீரும்.

(அரளு = பெருமரப்பட்டை)

## 338. அதிசாரம், இரத்தாதிசாரம், ஆமாதி சாரத்திற்கு வச்சகாதி சூரணம்

வச்சகவாதிச் சூரணஞ் சொல்வேன்
வச்சகம் வெட்பாலை யரிசி
யிச்சையாங் கோரைக் கிழங்குவில் வப்பிஞ்
சிலாமிச்சம் வேரதிவிடையங்
கொச்சியின் மிளகும் பொன்முசுட் டையுஞ்சுக்
குடனேமாங் கொட்டையின் பருப்பு
நிச்சய லோத்திர மோமாங்காட் டாத்தி
நிலம்வள ரிலவினிற் பிசினே. (நிகூக)

இலவினுற் பிசினோ டொருபதிமூன்று
மிவைசரி பாகமாய்க் கொண்டு
நலமதாஞ் சூரணம் பணிவெரு கடி தூள்
நற்பசுற் றயிரிலே கொள்ளு
அலையதி சாரமா மமிரத்த
முத்ததி சாரமுங் கிராணி
துலைபடுஞ் சித்தர் சொன்ன நூலாய்ந்த
துரைசர பேந்திர னருளே. (நிகூஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| வெட்பாலையரிசி | கோரைக்கிழங்கு |
| வில்வப்பிஞ்சு | இலாமிச்சம்வேர் |
| அதிவிடையம் | கொச்சிமிளகு |
| பொன்முசுட்டைவேர் | சுக்கு |
| மாங்கொட்டைப்பருப்பு | லோத்திரப்பட்டை |
| ஓமம் | காட்டாத்திப்பூ |
| இலவப்பிசின் | |

இப்பதிமூன்று சரக்குகளையும் சரியெடையெடுத்து இடித்து வஸ்திரகாரஞ்செய்து கொள்ளவும். இதில் வெருகடியளவு

(மூவிரல் கொள்ளுமளவு) சூரணம் எடுத்துப் பசுவின் தயிருடனே கூட்டி உட்கொள்ளவும்.

அதிசாரம், இரத்த அதிஸாரம், கிராணி முதலியவை தீரும்.

குறிப்பு:—

வச்சகவாதி என்பது வத்ஸகாதியின் திரிபு.

**339. இரத்தமூலம், கிராணி, பாண்டு, பெரும்பாடு, அக்கினி மந்தம், சூடு, மேகசூலை, பயித்தியத்திற்குத் தாடிமாதி உருண்டை**

சாதகத்தாடி மாதியி னுண்டைத்
தானிது தாடிமமெனும் பெயர்
மாதளம் பிஞ்ச தின்விளாம் பிஞ்சு
மாங்கொட்டைப் பருப்புதிப் பிலியுஞ்
சாதிபத் திரியு மிலவினிற் பிஞ்சு
தன்னுடன் மிளகுசுக் கோமந்
நீதில்கூ வளையின் பிசினாவற் பட்டை
சீரகம் நீர்முள்ளி விரையே. (௫௩௩)

விரைகருங் காலிப் பிசின்கழற் கொடி
விரைபுளி யம்விரைத் தோலும்
கருநிறச் சீரகம் யானைத் திப்பிலி
காட்டாத்திப் பூவுமிந் துப்பு
பெருமரப் பட்டை வெட்பாலை யரிசி
பேசிய வகையது தானு
மிருபது ரண்டுஞ் சரியது வாக
யிடித்ததூள் வடியது கட்டே. (௫௩௪)

வடியது கட்டி விளாம்பழத் தாலே
வளமுட னரைத்துமைப் போல
துடியுள கொட்டைப் பாக்கள வுண்டை
துரிசுடன் செய்ததை யுலர்த்தித்
திடமுள யெருமைத் தயிரிலே யரைத்து
நேரின் பசுத்தயி ராத
லடவுநே ருண்டை யுமதி லெடுத்து
வன்புடன் கலக்கியுண் பாயே. (௫௩௫)

உண்ணுகா லையிலே பத்துநா டனிலே
யுலர்த்திடுங் கிராணியும் பாண்டு
மெண்ணிலா யிரத்த மூலமும் பெரும்பா
டிகமிலா வக்கினி மாந்தியங்
கண்ணினிற் சூடு மேகசூ லைகளுங்
கடுத்திடு பயித்திய மாமம்
பண்ணிய பாவ மதில்வரும் வியாதி
பறந்திடு மிதுவறிந் துண்ணே. (நிசுசஉ)

(இ-ள்)

| | |
|---|---|
| மாதளம்பிஞ்சு | விளாம்பிஞ்சு |
| மாங்கொட்டைப்பருப்பு | திப்பிலி |
| சாதிப்பத்திரி | * இலவம்பிஞ்சு |
| மிளகு | சுக்கு |
| ஓமம் | வில்வப்பிசின் |
| நாகப்பட்டை | (இலவம் பிசின்) |
| நீர்முள்ளிவிதை | சீரகம் |
| கழக்கோடிவிதை | கருங்காலிப்பிசின் |
| கருஞ்சீரகம் | புளியங்கொட்டைத் தோல் |
| யானைத்திப்பிலி | இந்துப்பு |
| காட்டாத்திப்பூ | வெட்பாலையரிசி |
| பெருமரப்பட்டை | |

இவைகளைச் சரியெடுத்து இடித்து, வஸ்திரகாயஞ் செய்து விளாம்பழத்தையும் கூடச் சேர்த்து, நன்றாக மைபோலரைத்துக் கொட்டைப்பாக்களவுள்ள உருண்டைகளாக உருட்டி, வெயிலில் காயவைக்கவும்.

இதில் ஒரு மாத்திரையெடுத்து எருமைத்தயிரிலோ, அல்லது பசுந்தயிரிலோ, உட்கொள்ளவும். இவ்வாறு 10 நாட்கள் சாப்பிடக் கிராணிகள், பாண்டு, இரத்தமூலம், பெரும்பாடு, அக்கினி மாந்தியம், கண்களின் சூடு, மேகசூலை, பயித்தியம், ஆமம் முதலானவைகள் தீரும்.

---

* 68 நெ. சுவடியில் வில்வப்பிஞ்சு என்று காணப்படுகிறது.

## 340. அதிஸாரம், கிராணி, சோபத்திற்கு நெய்

புங்கம்வேர் வட்டத் திருப்பிவே ரோமம்
பொருந்திய திப்பிலி கடுக்கா
யிங்குலியங் கருஞ் சீரகத் தோடே
யெழுவகை மருந்து மாறுபலம்
பங்கமில் நாட்டுச் சுக்கது தான்முப்
பதுபல மிதுகளை யிடித்துச்
சங்கையிலாம னீரெட்டு மரக்கால்
தான்விட்டு நாலொன்றாய்க் காய்ச்சே. (ருசுஎ)

காய்ச்சியே வடித்துத் தயிரது குறுணி
கசடிலா நெய்யது நாழி
சாய்த்ததை யடுப்பில் வைத்துமேன் பொடியுஞ்
சாற்றுவேன் திப்பிலி மூலம்
வீச்சிடு வட்டத் திருப்பிசீ ரகமும்
வில்வத்தின் காய்பறுந் திப்பிலி
தாச்சியில் லரத்தை மரத்தினின் மஞ்சட்
தன்னுட னத்தித்திப் பிலியே. (ருசுஅ)

அத்தித்திப் பிலிவெட் பாலையினரிசி
யதிமது ரம்பதி னொன்று
மித்தனை வகைக்கு மாறுவ ராக
னெடையது கூட்டியே யரைத்துச்
சுத்தமாய் வடியுங் கட்டியே தூவித்
துரிசுட னிறக்கியே நக்க
அத்திடுங் கிராணி யும்மதி சார
மறுங் குன்ம சோபமும் போமே. (ருசுசு)

(இ.ள்)

| | |
|---|---|
| புங்கம் வேர் | வட்டத்திருப்பிவேர் |
| ஓமம் | திப்பிலி |
| கடுக்காய்த்தோல் | பெருங்காயம் |
| கருஞ்சீரகம் | |

இவை வகைக்கு 6 பலம்.

சுக்கு —30 பலம்

இவைகளை யிடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் 8 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாக்கி இறக்கவும். இக்கஷாயத்துடன்

தயிர் ஒரு குறுணி
பசுவின் நெய் ஒரு படி (5 சேர்)

இவ்விரண்டையும் ஒன்று கலந்து,

திப்பிலிமூலம்
சீரகம்
திப்பிலி
மரமஞ்சள்
வெட்பாலையரிசி
இலவங்கப்பத்திரி
வட்டத்திருப்பி
வில்வக்காய்
சிற்றரத்தை
யானைத்திப்பிலி
அதிமதுரம்

இவைகளை வகைக்கு 6 வராகனெடை வீதமெடுத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து தூவி, எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இந்த நெய்யில் ஒரு ஸ்பூன் எடுத்துப் பசுவின் பாலுடன் உட்கொள்ளவும்.

கிராணிகள், அதிசாரம், குன்மம், வீக்கம் முதலானவை தீரும்.

## 341. வயிற்றுவலி, சோகை, பாண்டு, அதிஸாரமுருக்குவலி முதலியவைகளுக்குச் சுக்காதி கிருதம்

சுக்கது பலம்பத் தாயிலின் பட்டைத்
துகையுடன் பலமிரு பதுவு
மொக்கவு முரலி லிடித்துநன் றாக
முக்குறு ணித்தண்ணீர் விட்டுப்

பக்குவமாக நாலொன்றாய்க் காய்ச்சிப்
பண்புள தயிரிநீ ரதுதா
நோக்கவு மிரண்டு மரைப்படிவிட்டு
வோமமுந் திரிகடு கதுவே. (சூ௱)

திரிகடு குடன்பெருங் காயமு மத்தித்
திப்பிலி திப்பிலி மூல
முரமுள செவ்விய முமெவட் சார
முறை வகை யேழினிற்றானே
சரியோ ரொன்றுக் கிரண்டது கழஞ்சு
தான்பொடி செய்ததிற் போட்டு
எரியதுயிட்டுப் பதமது கண்டு
மிறக்கியே வடித்திடு வாயே. (சூ௱க)

வடித்ததி காலை தன்னில்முக் கழஞ்சு
வளமுடன் கொண்டிடக் கிராணி
துடித்திடும் வயிற்றின் வலியுடன் பாண்டு
சோகையி னுடனதி சார
மெடுத்திடு முறுக்கு வலியது வெல்லா
மேகிடு மண்டலந் தனிலே
துடித்திடும் பன்னி கோழிமோர் தயிருஞ்
சுகமிகும் பாலதுங் கொள்ளே. (சூ௱உ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சுக்கு | — | 10 பலம் |
| ஆயில்யப்பட்டை | — | 20 ,, |

இவ்விரண்டையும் இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 3 மரக்கால் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாக்கி இறக்கி, தயிரின் தெளிவு நீர் $2\frac{1}{2}$ படியும் விட்டு

ஓமம்
சுக்கு
பெருங்காயம்
திப்பிலி மூலம்
எவச்சாரம்
திப்பிலி
மிளகு
யானைத்திப்பிலி
சவ்வியம்

இவைகளை வகைக்கு 2½ வராகனெடை வீதமெடுத்துத் தூள் செய்து போட்டு எரித்துப் பதத்தில் இறக்கி வடிக்கட்டவும்.

அதிகாலையில் இந்நெய்யில் 3 கழஞ்சு (3¾ வராகனெடை) எடுத்து உட்கொள்ளவும்.

கிராணிகள், வயிற்றுவலி, பாண்டு, அதிஸாரம், முறுக்கித் திருகிப் பிழிதல் போன்ற வலியுடன் கூடிய வயிற்றுவலி முதலியவைகள் 45 நாட்களுள் தீரும்.

பத்தியம்:—

பன்றிக்கறி, கோழிக்கறி, மோர், தயிர், பால் முதலானவைகளை வேண்டியவரைக் கூட்டுக்கொள்ளவும்.

### 342. எலும்புருக்கி, கிராணிகள், பெரும்பாடு, இரத்தப் பித்தம், அதிஸாரம், வெள்ளுடைப்பிற்கு ஜம்பு இறுதம்

நாவலின் பட்டை யறுபது பலத்தை
நலமுட னுலர்த்தியே யிடித்து
வாவிநீர் குறுணி யுமதில் விட்டு
வளமுடன் நாலொன்றாய்க் காய்ச்சி
ஆவலாய்ப்பிசைந்து சீலையால் வடித்து
வதுக்கு மேன் மருந்தது கேளு
நாவலின் கொட்டைத் தாமரைத் தாது
நல்லதி மதுரமு மாமே. (௬௱௩)

மதுரமு மிலவம் பிசுனுவிளாம் பிசினு
மாதளம் பிஞ்சுக்கூ கையினீர்
பதமுள முந்தரிப் பழமும்பே ரீச்சம்
பலமொந்தம் வாழையின் கிழங்கும்
புதியதா மரையின் வளையங் காட்டாத்திப்
பூவும்வெட் பாலையி னரிசி
யிதமுத்தக் காசுங் கொட்டியின் கிழங்கு
மெழில் வெள்ளி லோத்திரந் தானே. (௬௱௪)

லோத்திரஞ் செங்கழு நீர்க்கிழங் குடனே
நுவல்விழா லரிசியுங் கூட
சாத்திய வரட்சுண் டியும்பங்கம் பாளை
தப்பிலா வசமதா கத்தோ
டேத்திடும் மருந்தி ருபத்தி யொன்று
மெடுமதில் வகைக்குநாற் பலமும்
வாய்த்தக டாயம் விட்டதை யரைத்து
வளமுடன் கலந்திடு வாயே. (சுாரு)

கலந்துமுந் நாழி நெய்யது விட்டுக்
கனலிலே மூன்று நாள் வெந்து
நல்பதங் கண்டு வடித்துநோய் வலுவி
நற்றுவங் கண்டிதைக் கொள்ள
எலும்புருக் கியுங்கிரா ணியும்பெரும் பாடு
மிரத்தபித் தமுமதி சாரம்
வலமும்வெள் ளுடைப்பாய்க் கழிகிற நோய்போ
மன்புள சம்புகி றுதம்மே. (சுாசு)

(இ-ள்)

நாகப்பட்டை 60 பலம் எடுத்துச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கியுலர்த்திச் சுத்த ஜலம் 8 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி நான்கிலொன்றாக்கித் துணியில் வடிகட்டவும். இதனுடன்

| | |
|---|---|
| நாகக்கொட்டை | ஓமம் |
| அதிமதுரம் | தாமரைத்தாது |
| விளாம்பிசின் | இலவம்பிசின் |
| கூகைநீர் | மாதளம் பிஞ்சு |
| பேரீச்சம்பழம் | முந்திரிப்பழம் |
| தாமரைவளையம் (இலைச்சுருள்) | மொந்தம் வாழைக்கிழங்கு |
| | காட்டாத்திப்பூ |
| வெட்பாலையரிசி | கோரைக்கிழங்கு |
| கொட்டிக்கிழங்கு | வெள்ளிலோத்திரம் |
| செங்கழுநீர்க்கிழங்கு | விழலரிசி |
| வரட்சுண்டி | ஆடுதீண்டாப்பாளை |

இவ்வகைச் சுரக்குகளை வகைக்கு 4 பலம் வீதமெடுத்து ஷ்டி கஷாயத்தைவிட்டு நன்றாக வரைத்துக் குழப்பிப் பசுவின் நெய் 3 படியும் விட்டு 3 நாட்கள் எரித்துப் பதங்கண்டு இறக்கவும்.

நோயின் பலமறிந்து உட்கொள்ள, எலும்புருக்கி, கிராணிகள், பெரும்பாடு, இரத்தபித்தம், அதிசாரம், வெள்ளுடைப் பாய் கழிதல் முதலான நோய்கள் தீரும்.

இது "சம்பு" கிருதமாகும்

## 343. அதிசாரத்திற்கு "முத்தக்காசு கடாயம்"

கோரையின் மூலம் பெருமரப் பட்டை
கூவிள வேர்நில வேம்பு
சாரமா தளையி னேடுமாம் பட்டை
தன்னுடன் சுக்கிவை யேழும்
நேருடன் சரிகொண் டுரிதண்ணீர் விட்டு
நெருங்கிட வழக்கதாய்க் காய்ச்சி
வாரிருமுன்னே சொன்னதி சார
மகன்றிடு மைந்துநா டனிலே. (சுாா)

(இ-ள்)

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | பெருமரப்பட்டை |
| வில்வவேர் | நிலவேம்பு |
| மாதளையோடு | மாம்பட்டை |
| சுக்கு | |

இவைகளை வகைக்கு 1 வராகனெடை வீதம் விட்டு, சுத்தி ஜலம் சின்னபடி ½ விட்டு, எட்டிலொன்றாகுமட்டும் வற்ற வைக்கவும். இதனையுட்கொள்ள அதிசாரங்கள் தீரும்.

## 344. அதிசாரத்திற்கு மாதளை மொட்டாதிக் கடாயம்

மாதள மொட்டுமத் தம்வே ருமில
வம்பிசி னாட்டினிற் சுக்கு
சாதிக்கா யுடன்வெட் பாலையி னரிசி
தன்னுட னறுவகை மருந்தும்
நீதவ றாமற் சமனது கொண்டு
நீருரி விட்டுழக் காக்கிச்
சாதகமாகக் கொள்ளதி சாரஞ்
சஞ்சலஞ் செய்யும்நோய் போமே. (கூIIஅ)

(இ-ள்)

| | |
|---|---|
| மாதளைமொட்டு | ஊமத்தைவேர் |
| இலவம்பிசின் | சுக்கு |
| சாதிக்காய் | வெட்பாலையரிசி |

இவைகளை ஒரு வாரகனெடை வீதமெடுத்துச் சுத்த ஜலம் சின்னபடி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகுமட்டும் வற்றவைக்கவும்.

இதனை உட்கொள்ள அதிசாரங்கள் தீரும்.

## 345. சகலவித அதிசாரத்திற்கும் வேர்க்கொம்பு நெய்

சுக்கொரு நூறு பலமது தட்டி
சுத்தநீ ரிரண்டது மரக்கால்
பக்குவ மாய்விட் டனலிலே வைத்துப்
பார்த்ததை நாலொன்றாய்க் காய்ச்சி
யொக்கவும் நெய்யு மொருபடி பாலு
மொருபடி விட்டுமேன் மருந்து
சக்கிய கிராம்பு திப்பிலி மூலஞ்
சாதிக்காய் சாதிப்பத் திரியே. (கூIIகூ)

பத்திரி யானைத் திப்பிலி யிந்துப்
பதிமது ரம்புங்கு முள்ளி
கத்தரி வேருங் கடுகுட னேபெருங்
காயும்நா யுருவியு மிளகும்
புத்தபொன் முசுட்டை யுடனேகாட் டாத்திப்
பூசிறு தேக்குவாய் விளங்கஞ்
சத்துள யெவட்சா ரமும் நெல்லி முள்ளி
தன்னுடன் பத்துமொன் பதுவே. (சுகய)

பதமுடன் வகையொன் றதுவது நிறையும்
பகருவே ணிரண்டுவ ராக
நிதமுடன் நிறுத்து யரைத்ததிற் றூவி
யெரித்துநற் பதமதி லிறக்கி
நிதமொரு துட்டி னிடையது ரெண்டு
நேரமுங் கொண்டிடு நீதா
னிதுவும்வேர்க் கொம்பு நெய்யுமாஞ் சகல
விதவதி சாரமும் போமே. (சுகக)

(இ-ள்)

சுக்கு 100 பலமெடுத்து நசுக்கி ஒரு பாத்திரத்திலிட்டுத் தண்ணீர் 2 மரக்கால் விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன் றாகு மட்டும் எரிக்கவும். இதனுடன்,

| | |
|---|---|
| பசுவின் நெய் | — 1 படி |
| ,, பால் | — 1 ,, |

விட்டுக் கலந்து,

| | |
|---|---|
| கிராம்பு | திப்பிலிமூலம் |
| சாதிக்காய் | சாதிப்பத்திரி |
| யானைத்திப்பிலி | இந்துப்பு |
| அதிமதுரம் | புங்கு |
| முள்ளி | முள்ளு கத்தரிவேர் |
| கடுகு | பெருங்காயம் |
| நாயுருவி | மிளகு |
| பொன்முசுட்டைவேர் | காட்டாத்திப்பூ |

| | |
|---|---|
| சிறுதேக்கு | வாயுவிடங்கம் |
| எவட்சாரம்* | நெல்லிமுள்ளி |

இவைகளை வகைக்கு 2 வராகனெடைகள் வீதம் எடுத்து நிறுத்துச் சூரணம் செய்து, கஷாயம் கூட்டிய நெய்யுடனே குழப்பிப் பதத்தில் எரித்து இறக்கவும்.

தினந்தோறும் ஒரு துட்டெடை எடுத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். சகலவித அதிசாரங்களும் தீரும்.

குறிப்பு:—

* இச் சரக்குகளுடன் 68 நெ. சுவடியில் ''ஆயில்யப் பட்டை'' சேர்க்கப்பட்டிருக்கிறது.

## 346. தோஷவதிஸாரத்திற்குக் கூவிளை வேராதிக் கடாயம்

கூவிளை வேர்க்கஞ் சாநில வேம்பு
கோரையின்கிழங்கதி விடையந்
தாவிய சீந்திற் கொடிசிற்ற மல்லி
தானும்வெட் பாலையி னரிசி
சீவிய சுக்கு மொன்பதுந் தட்டித்
திறமுட நாலொன்றாய்க் காய்ச்சி
ஆவலாய் மூன்று நாட்கொளத் தோஷ
வதிசார மென்பதும் போமே. (௬௪௨)

(இ-ள்)

| | |
|---|---|
| வில்வவேர் | கஞ்சா |
| நிலவேம்பு | கோரைக்கிழங்கு |
| அதிவிடையம் | சீந்திற்கொடி |
| சிற்றாமல்லி | வெட்பாலையரிசி |
| சுக்கு | |

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக விடித்துத் தண்ணீர் சின்னபடி $\frac{1}{2}$ விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி இறக்கவும்.

இக்கஷாயத்தை 3 நாட்கள் சாப்பிடவும், அதிசாரங்கள் தீரும்.

## 347. ஜ்வராதிசாரத்திற்குச் சீந்திற் கொடிக் குடிநீர்

சீந்திலின் கொடிசுக் குடநில வேம்பு
சிறந்தகோ ரைக்கிழங் குடனே
பாந்ததி விடைய முடனேநற் குடசப்
பாலையிவ் வறுவகை மருந்தும்
யேந்திய திராசி னெடைசமன் கூட்டி
யெட்டொன்றாய்க் காய்ச்சியே கொள்ள
போந்திடுஞ் சுரத்தின் மேலதிசாரம்
புனிதநற் றஞ்சைமா னுரையே. (௬௬௧)

(இ-ள்)

சீந்திற்கொடி
நிலவேம்பு
அதிவிடையம்
சுக்கு
கோரைக்கிழங்கு
வெட்பாலையரிசி

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்து ஒன்றிரண்டாக விடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து, எட்டிலொன்றாக்கி, இறக்கி உட்கொள்ளவும். சுரத்துடன் கூடிய அதிசாரம் தீரும்.

## 348. ஜ்வராதிஸாரத்திற்குச் சாதி பத்திரிக் குடிநீர்

சாதிபத் தரிவெட் பாலையி னரிசி
சாற்றிய கடம்பினிற் பட்டை
பூதலச் சீந்திற் கொடியுங்காட் டாத்திப்
பூவதி விடையமுஞ் சுக்கு

வோதிய முன்மூன்று வகையின்ம ருந்து
    மொருநிறை யாகவே போட்டுச்
சூதறக் காய்ச்சி யிரண்டுநே ரமுங்கொள்
    சுரவதி ஸாரமும் போமே. (சுகச)

(இ-ள்)

| | |
|---|---|
| சாதிப்பத்திரி | வெட்பாலையரிசி |
| கடம்பம்பட்டை | சீந்திற்கொடி |
| காட்டாத்திப்பூ | அதிவிடையம் |
| சுக்கு | |

இவைகளைச் சரியெடையெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன் றிரண்டாயிடித்து ஒரு பாத்திரத்திலிட்டுச் சுத்த ஜலம் சின்னப் படி ½ விட்டு, அடுப்பின் மேலேற்றி, ஒரு உழக்காக வற்ற வைக்கவும்.

இதனை இரு நேரமும் உட்கொள்ளவும். ஜ்வரத்துடன் கூடிய அதிஸாரம் நீங்கும்.

## 349. பித்தவதிசாரத்திற்குக் குடிநீர்

பித்ததி சார மதுக்குமோர் குடிநீர்
    பேசுவேன் கேளுறு தியதாய்
சுத்தமாஞ் சுக்கு கோரையின் மூலந்
    துவர்புளிப் புள்ளநெல் லிமுள்ளி
முத்தலாஞ் சீந்திற் கொடியிவை நாலு
    முறையுட நாழிநீர் விட்டு
வத்தநா லொன்றாய்க் காய்ச்சியே கொள்ள
    வலரிமுன் பனியெனப் போமே. (சுகரு)

(இ-ள்)

சுக்கு
நெல்லிமுள்ளி
கோரைக்கிழங்கு
சீந்திற்கொடி

இவைகளைச் சின்னப்படி (1 வராகனெடை) இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி நாலி லொன்றாக வற்றவைத்துப் பருகவும்.

பித்த அதிஸாரங்கள் தீரும்.

## 350. பித்தவதி சாரத்திற்குச் சூரணம்

முத்தக்கா சிலவம் பிசினுடன் லோத்திர
முதிர்ந்தகாட் டாத்தியின் பூவு
முத்தகூ வளையின் பிசினுடன் கானின்
முளைத்த கொட் பாலையின் விரையு
மித்தனை மிகுந்துஞ் சரியது கூட்டி
யிதையுமே காயவம் நன்றாய்
வைத்தெடுத் திடித்து வெருகடி தூளும்
வளவெல்ல மொருகொட்டைப் பாக்கே. சுகசு)

கொட்டைப்பாக் களவு வெல்லமுந் தூளுங்
குணமிகு மெருமைமோ ரினிலே
விட்டதைக் கரைத்துக் காலையிற் கொள்ளு
மிதற்குமே பித்ததி சாரம்
விட்டிடு மைந்தாறு நாடனிற் கைலை
மேவிய கடவுளைப் போற்றி
சட்டமாந் தஞ்சை நகர்தனை யாளுஞ்
சரபபூ பதியுணர்ந் ததுவே. (சுகஎ)

(இ-ள்)

கோரைக்கிழங்கு
லோத்திரப்பட்டை
வில்வப்பிசின்
இலவம்பிசின்
காட்டாத்திப்பூ
கொட்பாலை விதை

இவைகளைச் சரியெடையெடுத்துக் காயவைத்துக் கல்லுரலி லிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்யவும். இதில் மூவிரல் கொள் ளுமளவு சூரணம் எடுத்து, வெல்லம் ஒரு கொட்டைப்பாக்களவு கூட்டி, எருமை மோருடன் குழப்பிப் பருகவும். தினந்தோறும் காலையில் உட்கொள்ளப் பித்த அதிசாரங்கள் 5 அல்லது 6 நாட்களுள் தீரும்.

## 351. பித்த அதிஸாரத்திற்கு மாவீர்க்காதிக் கடாயம்

மாவினி வீர்க்கில் செந்தொட்டி வேரு
மாவீர்க்கில் கோரையின் மூலம்
நாவலி னீர்க்கில் குறுந்தொட்டி வேரும்
நல்லபற் பாடகத் துடனே
தாவியும் வளர்குரு விச்சவே ருடனே
சரிவகை யொன்பதிற் றண்ணீர்
மேவவே விட்டுக் கடாயம தாக்கி
மேன்மருந் தோதுவேன் கேளே. (சுகஅ)

ஒத்ததி விடையஞ் சாதிக்காய் கிராம்பு
வோமமுஞ் சாதிபத் திரியு
மீதஞ்சுஞ் சரியாய்ப் பொட்டணங் கட்டி
யிடுகடா யத்தினிற் றானே
வூதது வெந்த பிறகதை யெடுத்து
யுற்றக டாயம்விட் டரைத்து
சாதகமாயுண் பித்ததி சாரந்
தான்விடு மிதுவிபு வுரையே. (சுகசு)

(இ-ள்)

| | |
|---|---|
| மாவிலை யீர்க்கு | கோரைக்கிழங்கு |
| செந்தொட்டி வேர் | நாகலிலையீர்க்கு |
| குருந்தொட்டி வேர் | பற்பாடகம் |
| குருவிச்சம் வேர் | |

* (1 வராகனெடை)

* இதனுடன் ஆல் ஈர்க்கும், சுக்கும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இவைகளைச்சரி யெடையெடுத்து, இடித்து, ஒரு பாத்தி ரத்திலிட்டுச் சுத்த ஜலம் ½ படி விட்டு, அடுப்பின் மேலேற்றி, இதனுடன்

அதிவிடையம் சாதிக்காய்
கிராம்பு ஓமம்
சாதிபத்திரி

இவைகளையும் சமனெடுத்து ஒன்றிரண்டாக இடித்து ஒரு துணியில் முடிந்து கொதிக்கவைத்து, வெந்தபின்னர் இறக்கவும். மருந்துகளையெடுத்துக் கஷாயம் விட்டரைத்து உட்கொள்ள வும். பித்த அதிஸாரங்கள் தீரும்.

## 352. பித்த அதிஸார ஜ்வரத்திற்குக் கடாயம்

நெல்லியின் பருப்புங்கோரையின் கிழங்கு
நேருள சுக்குடன் மூன்றுஞ்
செல்லநீர் விட்டு நாலொன்றாய்க் காய்ச்சித்
தினமந்தி காலையி லுண்ண
வல்லபித் தத்தின் மேலதி ஸாரம்
வருஞ்சுர மென்பதும் போகும்
நல்லவர் போற்று மால்சர பேந்திர
நராதிப னுணர்கடா யமதே. (சுஉ௰)

(இ-ள்)

நெல்லிப் பருப்பு
சுக்கு
கோரைக்கிழங்கு

இம்மூன்றையும் சரியெடை (7 வராகனெடை) யெடுத்துச் சின்னபடி ½ சுத்த ஜலம் விட்டு, அடுப்பின் மேலேற்றி நாலி லொன்றாக்கி இறக்கித் தினம், காலையிலும் மாலையிலும் உட் கொள்ளவும். பித்த அதிஸாரம் தீரும்.

## 353. பித்த அதிஸார ஜ்வரத்திற்குக் கூடாயம்

சுக்குநா ரத்தம் பட்டைபேய்ப் புடலுஞ்
சுரமனும் விட்டுணு கிராந்தி
அக்குரு விச்சி வேருட னேதா
னைந்தையுஞ் சரிநிறை கூட்டி
யொக்கவும் நாழி நீரது விட்டு
வுழக்கதாய்க் காய்ச்சியே கொள்ளு
சிக்கிய பித்ததி சாரத்தின் சுரமுந்
தீர்ந்திடு மிதுவிபு வுரையே. (சுஉக,

(இ-ள்)

சுக்கு
பேய்ப்புடல்
குருவிச்சி வேர்
நாரத்தை மரப்பட்டை
விஷ்ணுக்ராந்தி

இவைகளைச் சரியெடை (1 வராகனெடை) எடுத்துச் சுத்த ஜலம் சின்னபடி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி, எட்டிலொன் றாக்கி இறக்கவும். இதனை உட்கொள்ளப் பித்த அதிஸாரம், ஜ்வரம் முதலானவை தீரும்.

## 354. பித்தத்தின் மேல் வருகிற அதிஸாரத்தின் குணமும், இதற்குக் குடிநீரும்

பித்தத்தி னுடனே வருமதி ஸாரப்
பலனது கூறுவேன் கேளு
மெத்தவோக் காளம் வாந்தியும் மூர்ச்சைமே
லுடம்புடன் முகமது வெளுக்குஞ்

சத்தியு மெடுக்கு மயக்கமு மெத்தத்
    தானிது பித்ததி சார
முத்ததென் றறிந்து யிதற்கொரு குடிநீர்
    மொழியவுங் கேளுசந் தனமே. (சூ௨௨)

சந்தனம் வெட்டி வேருடன் ரெண்டு
    சாந்தமாய்க் கோரையின் மூல
முந்திரிப் பழங்கள் நாரிவேர் கூட
    முறுகுயர் லாமிச்சம் வேரு
மிந்தனு வகையுஞ் சரியெடைபோட்டு
    யிதமுட நாழிநீர் விட்டுத்
தந்திர மாகவு மூக்கதாய்க் காய்ச்சித்
    தானதைக் குளிரரு மாத்தே. (சூ௨௩)

ஆத்தியே யாதி காலையுந் தானே
    யந்தியுங் கொண்டிட முன்னே
சாத்திய பித்ததி சாரத்தல் கிண்ணதி
    சாரமும் போய்நல மாகும்
போற்றியே சிவனை யற்சனை செய்து
    புண்ணிய வானெனும் பெயருங்
கீர்த்தியும் பெற்ற சரபபூ பாலன்
    செப்புக டாயமி தாமே. (சூ௨௪)

(இ-ள்)

ஓக்காளம், வாந்தி, மூர்ச்சை, உடம்பு வெளுத்துப் போதல் முகம் வெளுத்தல், அதிகமான மயக்கம் முதலான குறிகள் அதிசாரத்துடனேற்படில் அது ''பித்த அதிஸார'' மாகும். இதற்குச்

சந்தனம்
கோரைக்கிழங்கு
நன்னாரிவேர்
வெட்டிவேர்
திராக்ஷைப் பழம்
இலாமிச்சைவேர்

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை யெடுத்துச் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு, அடுப்பின் மேலேற்றி ஒரு உழக் காகுமட்டும் எரித்து, வடிகட்டிக் குளிர்ச்சியாகும்படி நன்றாக ஆற்றவும். இதனைக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ள வும். பித்த அதிஸாரங்கள் தீரும்.

## 355. பித்த அதிஸாரம், உழலை, தாபம், சன்னி வாதம், பயித்தியம், பிரமம் இவற்றிற்குக் கடாயம்

அதிமது ரஞ்சந் தனமிலுப் பைப்பூ
யடவிநன் னாரிவே ருடனே
யிதமுள முந்திரிப் பழமுஞ்செங் கழுநீ
ரின்கிழங் குடநிலா மிச்சு
பதமுட னீச்சங் குருத்துட னெட்டும்
பார்த்ததைச் சரிநிறை யாக
யுதகமும் நாழி விட்டதைக் காய்ச்சி
யுழக்கதா யிறக்கியுங் கொள்ளே. (கூஉரு)

கொண்டதை யாற்றிச் சர்க்கரை கலந்து
கொள் ரெண்டு வேளையுந் தானே
மண்டிய வுழலை தாபமுஞ் சன்னி
வாதமும் பயித்தியம் பிரமை
கண்டிடும் பித்த வதிசார மெல்லாங்
கதிரவன் முன்பனி போல்போந்
தண்டரணி யினிலே புகழ்பெரு மெங்கள்
சரபபூ பதிமுறை யிதுவே. (கூஉகூ)

(இ-ள்)

| | |
|---|---|
| அதிமதுரம் | சந்தனம் |
| இலுப்பைப்பூ | நன்னாரிவேர் |
| திராக்ஷைப்பழம் | செங்கழுநீர்க் கிழங்கு |
| ஈச்சங் குருத்து | இலாமிச்சம்வேர் |

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடையெடுத்து ஒன்றி ரண்டாக இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி, எட்டிலொன்றாக்கி இறக்கவும். இதை ஆற்றிச் சர்க்கரை கலந்து, காலையிலும் மாலையிலும் உட்கொள் ளவும்.

உழலை, தாபம், ஜன்னி, வாதம், பயித்தியம், மயக்கம், பித்த அதிஸாரம் முதலானவை தீரும்.

## 356. பித்த அதிஸாரத்திற்குக் கடாயம்

கோரையின் மூலம் வெட்டிவேர் நற்சுக்
குடனேசந் தனத்துட தூளுஞ்
சாரயிலாமிச் சதினுட வேருஞ்
சற்றுபற் பாடகத் துடனே
நேருடனாறு வகைசரி நிறையாய்
நிறுத்துக டாயம திட்டு
சீருடன் கொள்ளப் பித்ததி சாரந்
தீர்ந்துமா ரோக்கிய மாமே. (சஉஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| கோரைக்கிழங்கு | வெட்டிவேர் |
| சுக்கு | சந்தனத்தூள் |
| இலாமிச்சை வேர் | பற்பாடகம் |

இச்சரக்குகளை வகைக்கு 1 வராகனெடையளவெடுத்து ஒன்றிரண்டாக இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு, அடுப்பின் மேலேற்றி, எட்டிலொன்றாக்கி, இறக்கி உட்கொள் ளவும். பித்த அதிஸாரங்கள் தீரும்.

## 357. அதிஸாரத்திற்கு மாதுலுங்காதிச் சூரணம்

மாதளந்தோலும் அத்தியின் பிஞ்சு
மாங்கொட்டைப் பருப்புகுங் கிலியஞ்
சாதிக்காய் வெள்ளி லோத்திர மசம
தாகம்வெட் பாலையி னரிசி

சாதிப்பத் திரிசீர கமும்வில் வப்பிஞ்
சதிவிடை யமும்விளாம் பிசினுஞ்
சூதிலுந் துப்புப் புளியங்கொட் டைத்தோல்
சுக்கானைத் திப்பிலி யிரும்பே. (சஉஅ)

இரும்பு டன்கழற் சிநீர் முள்ளி
யின்விரை பொன்முசுட் டையின்வேர்
பெருமரப் பட்டைகோ ரோசனை யிலவின்
பிசின்கருஞ் சீரந்திப் பிலியுங்
கருவேப்பி னிலைகோ ரைக்கிழங் குடனே
காசுக் கட்டியுங் கடுகாக
வரும்வகை முப்ப துஞ்சரி யாக
வாங்கியே சூரண மாக்கே. (சஉகூ)

சூரண மாக்கி வடியது கொண்டு
சுத்தபாத் திரந்தனில் வைத்து
சாரமாய் வெருகடி தூளதைத் தேனின்
றன்னிலா வதுயிலா விட்டால்
தாரணி யெருமைற் றயிரினி லாதற்
றான்கொளு காலை யந்தியிலுங்
கோரமா மதிசா ரத்தினி நோயுங்
குணமதாந் தஞ்சைமா னுரையே. (சுங்ய)

(இ-ள்)

| | |
|---|---|
| மாதளந்தோல் | அத்திப்பிஞ்சு |
| மாங்கொட்டைப் பருப்பு | குங்கிலியத்தூள் |
| சாதிக்காய் | வெள்ளிலோத்திரம் |
| ஓமம் | வெட்பாலையரிசி |
| சாதிப்பத்திரி | சீரகம் |
| வில்வப்பிஞ்சு | அதிவிடயம் |
| விளாம்பிஞ்சு | இந்துப்பு |
| புளியங்கொட்டைத்தோல் | சுக்கு |
| யானைத்திப்பிலி | இரும்புத்தூள் |
| கழற்சி | நீர்முள்ளி விதை |
| பொன்முசுட்டைவேர் | பெருமரப்பட்டை |
| கோரோசனை | இலவம்பிசின் |

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | திப்பிலி |
| கருவேப்பிலை | கோரைக்கிழங்கு |
| காசுக்கட்டி | கடுகு |

இவைகளைச் சமனெடுத்துக் காயவைத்துக் கல்லுரலிலிட்டிடித்து, வஸ்திரகாயஞ் செய்து, பத்திரப்படுத்தவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்துத் தேனிலோ அல்லது எருமைத் தயிரிலோ அதிகாலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

அதிஸாரங்கள் தீரும்.

## 358. கிராணி அதிஸார குன்மத்திற்கு "இஞ்சி நெய்"

இஞ்சிச்சாறு பதக்கு நெய்யும் நானாழி
யினபா லதுவும் நானாழி
யுஞ்சுக்கு மிளகு திப்பிலி யுமிந்
துப்பதி விடையமும் வசம்பு
மஞ்சளாத் திப்பூ பெருங்குரும் பையுமதி
மதுரம தோடுசிறு தேக்கு
விஞ்சையாம் பங்கம் பாளைவேர் சவ்வியம்
விழாலரி சியுமுத்தக் காசே. (சுநகு)

காசதி விடையஞ் சீரக மசமதா
கத்துட னேபெருங் காயம்
விசியவுத் தாமணி யின்வேர்பு ரந்தோல்
விளம்பிய சிறுமூல கமுமே
மீசுர மருந்து யிருபது வகைக்கு
மேயொரு வகைக்கிரு கழஞ்சு
கூசிடா தரைத்து வடியது கட்டிக்
கொண்டுமேன் பொடியதாய்த் தூவே. (சுநஉ)

பொடியதைத் தூவி யெரித்துநற் பதத்திற்
பொட்டென விறக்கியே வைத்துக்
கடிமிகுஞ் சாணக் கடவுளைப் போற்றிக்
காலையு மந்தியுந் தானே

துடிமிகும் வியாதி பலமறிந் துண்ணு
துற்குணக் கிராணியென் பதுவு
மடாதி சாரங் குணமதா மனுக்கு
மன்புள தஞ்சைமா னுரையே. (கூகூ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| இஞ்சிச்சாறு | — 2 மரக்கால் | |
| நெய் | — 4 படி | |
| பசுவின் பால் | — 4 ,, | |
| சுக்கு | | திப்பிலி |
| மிளகு | | இந்துப்பு |
| அதிவிடையம் | | வசம்பு |
| மஞ்சள் | | ஆத்திப்பூ |
| பெருங்குறும்பை | | அதிமதுரம் |
| சிறுதேக்கு | | ஆடுதீண்டாப்பாளை வேர் |
| சவ்வியம் | | விழாலரிசி |
| கோரைக்கிழங்கு | | சீரகம் |
| ஓமம் | | பெருங்காயம் |
| * உத்தாமணிவேர்த்தோல் | | சிறுமூலகம் |

இச்சரக்குகளை வகைக்கு $2\frac{1}{2}$ வராகனெடை வீதமெடுத்துச் சூரணித்து சாறுகூட்டிய நெய்யுடனே கலந்து அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கவும். இந்த நெய்யில் ஒரு கரண்டியளவெடுத்துக் காலையிலும் மாலையிலும் வியாதியின் பலத்தையறிந்து உட்கொள்ளக் கொடுக்கவும்.

குன்மங்கள், கிராணிகள், அதிசாரங்கள் முதலானவை தீரும்.

## 359. திரிகுணவாயு, மயக்கம், பித்தம், படபடப்பு, தாகம், நாவறட்சி, முதலானவை களுக்கு ஏலாதிச் சூரணம்

ஏலம்வெங் காரம் கற்கட சிங்கி
யிந்துப்பு கோஷ்டஞ்சா திக்காய்
சீலதி மதுர மிலவங்கஞ் சுக்குச்
சீரக மிளகுடன் செவியங்

* 68-ம் நெ. சுவடியில் இதற்குப் பதில் கொடிவேலி வேர்ப் பட்டை சேர்க்கவும் என்றிருக்கிறது.

கோலதி விடையத் துடன்சிறு தேக்குங்
குணமதாஞ் சாதிபத் திரியு
மேலுமே கிராம்பு மசமதா கமுமே
விளம்பிய பதினேழு வகையே. (௬௩௪)

வகைக்கொரு வராக னெடையிதி நிறைக்கு
வளமுள திப்பிலி கூட்டுந்
துகையது நின்ற நிறைக்குச்சர்க் கரையுந்
தூக்கியே வைத்துசி தமதாந்
தகையுமிம் மருந்தை யிளவறுப் பாகத்
தான்வறுத் தரைத்துநன் றாகத்
துகையுடன் வடியுங் கட்டிசர்க் கரையுந்
தூளுமே கலந்திடு வாயே. (௬௩௫)

கலந்தொரு கலசந் தன்னிலே வைத்து
கையினால் வெருகடி யளவு
முலரும்வெந் நீரிற் கொண்டிடத் திரிகுண
முற்றிடும் வாயுவும் பக்கம்
நலந்தரும் பித்தப் படப்புடன் றாகம்
நாவரட் சியுமுடன் றீரும்
பலந்தருந் தஞ்சை நகர்ச்சர பேந்திர
பற்குண விற்பன்ன னருளே. (௬௩௬)

(இ-ள்)

| | |
|---|---|
| ஏலக்காய் | வெங்காரம் |
| கற்கடசிங்கி | இந்துப்பு |
| கோஷ்டம் | சாதிக்காய் |
| அதிமதுரம் | கிராம்பு |
| சுக்கு | சீரகம் |
| மிளகு | சவ்வியம் |
| அதிவிடையம் | சிறுதேக்கு |
| சாதிப்பத்திரி | இலவங்கப்பத்திரி |
| ஓமம் | |

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடை வீதமெடுத்துத் திப்பிலி எல்லாவற்றிற்கும் சமனளவெடுத்து, இவைகளுக்குச் சரி நிறை சர்க்கரையும் கூட்டி இடித்துக்கொள்ளவும், சரக்கு

களைப் பொன் வருவலாக வறுத்து இடிக்கவும். இச்சூரணத்தில் மூவிரல்கொள்ளுமளவெடுத்து, வெந்நீருடன் உட்கொள்ளவும்.

வாயு, பித்தப் படப்பு, தாகம், நாவறட்சி முதலான ரோகங்கள் தீரும்.

## 360. அதிஸாரம், அஜீர்ணபேதிக்கு "ஸைந்தவாதி சூரணம்"

இந்துப்பு கடுக்கா யசமதா கழுந்திப்
 பிலியுடன் கற்கட சிங்கி
யைந்தையு மிளவறுப் பாகவே வறுத்து
 யரைத்ததைச் சூரண மாக்கி
யிந்தயிந் துப்புச் சூரண மதனி
 லேயொரு வெருகடி தூளை
யந்தியுங் காலை தனிலெரு மையின்மோ
 ரதனிலே கொண்டிடு வாயே. (கூகூஎ)

கொண்டிடு மெருகை மோரினி லாதல்
 கொடுவெந்நீர் தன்னிலே யாதல்
மிண்டதி ஸார வசீரண பேதி
 விடுஞ்சிவ கிறுபையி னாலே
மண்டல மாளுந் துளசபூ பாலன்
 மைந்தநற் றஞ்சையை யாண்டு
மண்டினோர் தமக்கு மருள்செயு சரப
 அண்ணலு முணர்ந்திடு முறையே. (கூகூஅ)

(இ-ள்)

இந்துப்பு
ஓமம்
கற்கடசிங்கி
கடுக்காய்த் தோல்
திப்பிலி

இவைகளைச் சமனெடுத்து, அடுப்பின்மேலேற்றிப் பொன் வறுவலாக வறுத்து, இடித்து வஸ்திரகாயஞ் செய்து வைத்துக்

கொள்ளவும். இதில் ஒரு மூவிரல் கொள்ளுமளவுள்ள சூரணத்தையெடுத்து எருமை மோரில் குழப்பியோ அல்லது வெந்நீரிலோ குழப்பி உட்கொள்ளவும்.

அஜீர்ண பேதிகள் தீரும்.

## 361. சேத்தும ஜ்வரத்தின் மேல் பேதிக்குக் கஷாயம்

தாதுமா தளைவேர் கூவளை வேர்பட்
டையதைப் போக்கியே சுக்குஞ்
சாதக முத்தக் காசு நாலுஞ்
சரியதாய்க் கொண்டதைத் தட்டி
சீதள நீரிரு நாழியும் விட்டுத்
தீயினின் வைத்துழக் காக்கி
யோதுதிப் பிலிபோய் வரையது கொண்டு
வறுத்துட னேபொடி யாக்கே. (சுஙசு)

பொடியது வாக்கி யுதையகா லத்திற்
பொருந்திடக் கொள்ளுநீ தானே
துடிமிதஞ் சேற்றுமச் சுரத்தின்மேற் பேதி
சூரியன் முன்பனி போலே
விடுமிது முன்னோ ருரைத்தசாத் திரத்தை
மெத்தவு மனுதின முணர்ந்த
வடிவமழ குள்ள தஞ்சைமா நகரின்
மன்னவன் புகழ் கடாயமிதுவே. (சுசஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| மாதளைவேர்ப் பட்டை | வில்வவேர்ப் பட்டை |
| சுக்கு | கோரைக் கிழங்கு |

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து ஒன்றிரண்டாக விடித்துச் சுத்த ஜலம் 2 படி (சின்னப் படி 1) விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காக வற்ற வைத்து, அதனுடன் வறுத்த திப்பிலியின் சூரணம் ஒரு மூவிரல் கொள்ளுமளவு சேர்த்துக் காலை நேரங்களில் உட்கொள்ளவும்.

கபாதிஸாரங்கள் தீரும்.

## 362. கடுப்பு, பொருமல், அதிஸாரம். கிராணி, கழிச்சலுக்குச் சாதிக்காய் மாத்திரை

சாதிக்காய் யூமத்தம் விரையும் வெளுத்
தப்பிசின் கிராம் புமாங் கொட்டை
கோதிலா விரைவிளாம் பிசினதி விடையங்
கூறிய வாறும்நாற் கழஞ்சு
வீதமாய்ப் பருமரப் பட்டையைங் கழஞ்சு
மிந்துப்பு களஞ்சுமே யாறு
வோதிய வபினுங் களஞ்சதி ரெண்டு
முன்மத்தஞ் சாற்றைவிட் டரையே. (சுசுக)

அரைத்துமைப் போல நாட்டினிற் கடலை
யளவுண்டை பண்ணியே யுலர்த்தி
உரைத்துநற் றேனி லாகுத லெருமை
யுடதயிர் தன்னிலே யாதற்
றிருத்தமா யெட்டு நாளது கொள்ளுஞ்
செப்பிய கடுப்புடன் பொரும
லுரத்திடு மதிசா ரத்துட கிராணி
யொழுகிய கழிச்சலும் போமே. (சுசுஉ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| சாதிக்காய் | ஊமத்தை விதை | |
| வெளுச்சைப்பிசின் | கிராம்பு | |
| மாங்கொட்டைப் பருப்பு | விளாம்பிசின் | |
| அதிவிடையம் | | |
| இவைகள் வகைக்கு | 5 வராகனெடை | |
| பெருமரப்பட்டை | — $6\frac{1}{4}$ | ,, |
| இந்துப்பு | — $7\frac{1}{2}$ | ,, |
| அபின் | — $2\frac{1}{2}$ | ,, |

இவைகளைக் கல்வத்திலிட்டு நசுக்கி ஊமத்தஞ் சாற்றை விட்டு நன்றாகவரைத்துக் கடலைப் பிரமாணமுள்ள மாத்திரை களாக உருட்டவும்.

இவைகளை நிழலில் உலர்த்தித் தேனிலோ, அல்லது எருமைத் தயிரிலோ 8 நாட்கள் உட்கொள்ளவும்.

கடுப்புகள், பொருமல், அதிஸாரம், கிராணிகள், கழிச்சல் முதலியவை தீரும்.

## 363. அதிஸாரம், கிராணி, விழுசிக்குச் சீரகாதி மருந்து

சீரக மிளகு சுக்குமாங் கொட்டை
திப்பிலி கூவிளம் பிஞ்சு
வாரியி னுப்பு மோமமாத் திப்பூ
வகையது வொன்பதுஞ் சரியாய்ச்
சேரவே பொடித்து வடியது கட்டித்
திடமுள வெருமைமோ ரினிலே
சாரித்து விழுங்கதி சாரம்வி சூசி
தன்னுடன் கிராணியும் போமே. (௬௪௯)

(இ-ள்)

| | |
|---|---|
| சீரகம் | மிளகு |
| சுக்கு | மாங்கொட்டைப் பருப்பு |
| திப்பிலி | வில்வப்பிஞ்சு |
| சோத்துப்பு | ஓமம் |
| ஆத்திப்பூ | |

இவைகளை நன்றாகக் காயவைத்து இடித்து வஸ்திரகாயஞ் செய்து, மூவிரல் கொள்ளுமளவெடுத்து எருமை மோரிலிட்டு அருந்தவும்.

அதிஸாரம், விஷூசி, கிராணிகள் தீரும்.

## 364. வாத அதிஸாரத்திற்கு "ஆத்திப்பு கடாயம்"

ஆத்திப்பூ வில்வ வேருடன் சிறுமூ
லகம்வரட் சுண்டியுஞ் சுக்கு
சாத்திய வைந்தும் வகைக்கிரு கழஞ்சு
தன்னிலே நீரது நாழி

வாத்துழக் காகக் காய்ச்சியே கொள்ள
வாததி சாரமுந் தீரும்
போத்தியே யானை யருள்பெருஞ் சரப
பூபதி யுணர்க டாயமதே. (௩௪௪)

(இ-ள்)

| | |
|---|---|
| ஆத்திப்பூ | வில்வவேர் |
| திப்பிலி | வரட்சுண்டி |
| சுக்கு | |

இவைகள் வகைக்கு * 2½ வராகனெடை யெடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி ஒரு உழக்காகக் காய்ச்சி உட்கொள்ளவும்.

வாத அதிஸாரங்கள் தீரும்.

## 365. அதிஸாரத்திற்குக் குடிநீர்

சிற்றம்மான்பச்ச ரிசிதென்னங் குறும்பை
சிறுபுள்ள டியுஞ்செப்பு நெருஞ்சி
சத்துள தேங்காய்ப் பாசியோ டைந்துஞ்
சரியதா யொவ்வொரு பிடியும்
நற்றுவ மாயோர் பானையிற் போட்டு
நல்ல நீர் படியது மாறுவிட்
டுற்றிட விரண்டு படியதாய்க் காய்ச்சி
யுமமந்த வடுப்பினில் வைத்தே. (௩௪௫)

வைத்துகூ டதுவும் வாங்கிடா மலுமே
வகையரைக் கால்படி யிறுத்து
சத்துள கிராம்பு சீரகத் துடனே
சாதிக்காய் மூன்றையும் வறுத்துச்
சுத்தமாய் நுணுக்கி யேயதிற் போட்டு
துலக்கவே கலக்கியே கொள்ளு

* 12 கழஞ்சு என்றும் 68 நெ. சுவடியில் உள்ளது.

முத்திடு மதிசா ரங்களுந் திரு
முறுதியாய் செய்திதைப் பாரே. (௬௪௬)

(இ-ள்)

சிறு அம்மான் பச்சரிசி
சிறு புள்ளடி
தேங்காய்ப்பாசி
தென்னங்குறும்பை
செப்பு நெருஞ்சி

இவைகள் வகைக்கு ஒரு பிடி எடுத்து ஒரு பானையில் இட்டுச் சுத்த ஜலம் 6 படி விட்டு அடுப்பின் மேலேற்றி, 2 படியாகும் வரை வற்றவைக்கவும். இதனை வடிக்கட்டி மறுபடியும் அடுப்பின் மேலேற்றிச் சூடு ஆறாமல் வைத்து, இதில் $\frac{1}{8}$ படி கஷாயம் இறுத்து அதனுடன் கிராம்பு, சீரகம், சாதிக்காய் இம் மூன்றையும் வறுத்துத் தூளாக்கிப் போட்டு உட்கொள்ளவும்.

அதிஸாரங்கள் தீரும்.

## 366. இரத்த அதிசாரத்திற்குக் கொத்தமல்லியாதிக் குடிநீர்

கொத்தமல் லியும்பற் பாடகஞ் சந்தங்
கோரையின் மூலம்நன் னாரி
யுத்தவேர் கஞ்சாங் கோரைவே ருடனிரு
வேலிவே ரிலாமிச்சம் வேரு
மொத்திடு முன்னிச் சமூலமும் பத்து
மொக்கவுஞ் சரியதாய்க் கூட்டி
வைத்தடை குடிநீ ராகவுந் தானே
யமத்திடு மடுப்பினிற் றானே. (௬சீ௫)

அடுப்பினில் வைத்துக் குளிர்ந்திடா மலுமே
அதையுமே வெச்சென வைத்து
திடத்துட னந்தி காலையுந் தானே
சீருட னிறுத்ததி லுழக்கு

வடிப்பமா யெட்டு நாளதுங்கொள்ள
 வருந்திய விருத்ததி சாரந்
துடித்தது வோடுஞ் சூரியன் முன்னே
 சூழ்பனி யென்னவும் போமே. (சுஅச)

(இ-ள்)

| | |
|---|---|
| கொத்தமல்லி | பற்பாடகம் |
| கோரைக்கிழங்கு | நன்னாரிவேர் |
| கஞ்சாங்கோரை வேர் | வெட்டிவேர் |
| இலாமிச்சம் வேர் | முன்னை சமூலம் |
| சந்தனம் | * பொன்னாங்காணி வேர் |

இவைகளைச் சரியெடை யெடுத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக விடித்து 8 மடங்கு ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக்கி வடிக்கட்டிச் சூடாக இருக்கும் போதே காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

இவ்வாறு 8 நாட்கள் ஒரு உழக்கு வீதம் சாப்பிட்டு வர இரத்தாதிசாரங்கள் தீரும்.

## 367. ஜன்னி, ஜ்வரக் கழிச்சலுக்குச் சீந்திற்றண்டு கடாயம்

சீந்திற் றண்டு நிலவேம்புஞ்
 சிறந்த முற்றஞ் சுக்குடனே
வாய்ந்த கஞ்சா விரை வில்வம்
 வந்த பழமு மதிவிடையம்
போந்தப் படிநீர் வார்த்துழக்காய்
 பொருந்தக் காய்ச்சிக் குடித்திடவே
சேர்ந்த சன்னி ஜ்வரங் கழிச்சல்
 தீரு மயனார் செப்பியதே. (சுசகூ)

---

* செய்யுளில் காணப்படாவிடினும் 68 நெ. சுவடியில் உள்ளது.

(இ-ள்)

சீந்திற்றண்டு நிலவேம்பு
கோரைக்கிழங்கு சுக்கு
கஞ்சாவிதை வில்வப்பழம்
அதிவிடையம்

இவைகள் வகைக்கு 1 வராகனெடையளவெடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாக்கி இறக்கவும். இதனை உட்கொள்ள

சன்னிகள், ஜ்வரங்கள், கழிச்சல், முதலாவை தீரும்.

## 368. அதிஸாரத்தின்மேல் வயிற்றுவலிக்குக் கடாயம்

முருங்கை மரத் தடிப்பட்டை யோமத் தோடே
முதிர்ந்தகருஞ் சீரகமும் வெள்ளைப் பூண்டு
மருந் தைந்துஞ் சரியாக நிறுத்துத் தண்ணீர்
வார்த்தெட்டி லொன்றாகச் சுண்டக் காய்ச்சி
திருந்துகடா யத்திலதி விடையஞ் சுக்கு
திறகோரைக் கிழங்குமிந் துப்புங்கூட
உரங்குடசப் பாலையைந்துந் தட்டிப் போட்டு
யூறவே யெட்டிலொன்றா யதையுங் காய்ச்சே. (சூருய)

காய்ச்சியே நன்றாக வாற வைத்து
காலையந்தி தன்னிலும்நீ கொண்டா யானால்
வாச்சவதி சாரத்தின் மேலே தானே
வயிறுவலித் தாலுமது மாறிப் போகு
மாச்சிகெள மாரியபி ராமி யந்த
வம்பலத்திற் சிவனுடனே நடனமாடு
சூச்சிமகிழ் பரமசிவ னருளே பெற்ற
துரை சரபேந் திரனுணர்க டாயமாமே. (சூருக)

(இ-ள்)

முருங்கை மரத்தின் அடிப்பட்டை
ஓமம்
கருஞ்சீரகம்
வெள்ளைப்பூண்டு
* சுக்கு

இவைகளை வகைக்கு ஒரு வராகனெடையெடுத்து நசுக்கி 8 மடங்கு சுத்த ஜலம்விட்டு, அடுப்பின் மேலேற்றி, எட்டி லொன்றாக்கி வடிக்கட்டவும். பின்னர் சுக்குக் கஷாயத்தில் அதிவிடயம், சுக்கு, கோரைக்கிழங்கு, இந்துப்பு, வெட்பாலை யரிசி முதலான சரக்குகளையும் வகைக்கு ஒரு வராகனெடை யளவெடுத்துச் சூரணித்துப் போட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைக்கவும். இக்கஷாயத்தை ஆறவைத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

அதிஸாரம், வயிற்றுவலி, முதலானவை தீரும்.

## 369. சேத்துமவதிசாரம், பித்தாதிஸாரம், வாத அதிஸாரம், அஜீரண அதிஸாரம், முதலானவைகளுக்குச் "சூரணம்"

அதிமதுரங் காட்டாத்திப் பூவினோடே
    யடவிபெரு மரப்பட்டை புளியம்வித்துச்
சிதமான யிலவுபிசின் லோத்திரம் வட்டத்
    திருப்பிகொட் பாலைவிரை யெட்டுந்தானே
சதமாக வோர்நிறையாய்ச் சூரணித்துத்
    தானேவடிக் கட்டியந்தச் சூரணத்தி
லிதமாக வெருகடிதூள் வெல்லந்தன்னி
    லெருமை தயிர் பச்சரிசி கழுநீர்தானே. (சூ௫௨)

---

* 68 வது மந. சுவடியில் உள்ளது.

பச்சரிசிக் கழுநீரிற் கலந்துகொள்ள
பலமான சேத்துமவாதி சாரத்தோடே
மிச்சமுள்ள பித்தவதி சாரம் வாத
மேற்கொண்ட வதிசாரங் கிராணியோடு
மச்சீர்ண வதிசார மெல்லாந் தீரும்
மாதிசிவன் கிருபையினா லகிலமெல்லா
மெச்சபுகழ் படைத்துதஞ்சை நகரை யாளும்
விபுசரபேந் திரனுணர்ந்த சூர்ணமாமே. (சுங்ரு)

(இ-ள்)

| | |
|---|---|
| * அதிமதுரம் | காட்டாத்திப்பூ |
| காட்டுப்பெருமரப்பட்டை | புளியங்கொட்டை |
| இலவம்பிசின் | விளாம்பட்டை (லோத்திப்பட்டை) |
| வட்டத்திருப்பி | கொட்பாலை விதை |

இவைகளை வகைக்கு ஒரு பலம் வீதமெடுத்துக் கல்லுரலி லிட்டு இடித்துச் சூரணம் செய்து வைத்துக்கொள்ளவும். இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து வெல்லத்திலோ, எருமைத் தயிருடனோ, பச்சரிசிக் கழுநீரிலோ கலந்து உட்கொள்ளவும்.

கபாதிஸாரங்கள் தீரும். பித்த அதிஸாரம், வாத அதிஸா ரங்கள், கிராணிகள், அசீர்ணபேதி முதலான ரோகங்கள் தீரும்.

## 370. அதிஸாரம், கிராணிகளுக்குக் குடிநீர்

சுக்குவட்டத் திருப்பியின் வேர் நல்முற்றக்கா
சுங்கூவி ளம்வேரின் பட்டை போக்கி
வொக்கவிரு நாழிநீர் விட்டுத் தானே
வுழக்காகக் காய்ச்சிதிப் பிலியைத் தானே
பக்குவமாய்ப் போய்வரைகொண் டந்தத் தூளைப்
பாங்காகத் தூவிரண்டு வேளையுங் கொள்
சிக்கு செய்யு மதிசாரக் கிராணி யென்ப
தெல்லாம்போம் வல்லோர்க ளுரைத்ததாமே.
(சுங்சு)

* 68-வது நெம்பர் சுவடியில் அதிமதுரத்திற்குப் பதில் அதி விடயம் எனக் காணப்படுகிறது.

(இ-ள்)

| | |
|---|---|
| சுக்கு | வட்டத்திருப்பிவேர் |
| கோரைக்கிழங்கு | வில்வவேர்ப்பட்டை |

இவைகளை வகைக்கு 2 பலம் வீதமெடுத்து, இடித்துச் சுத்த ஜலம் சின்னபடி ஒன்றுவிட்டு அடுப்பின் மேலேற்றி, ஒரு உழக் காகும் வரை வற்றக் காய்ச்சவும். இதனுடன் வறுத்த திப்பி லிச் சூரணமிட்டுக் காலையிலும் மாலையிலும் பருகவும்.

அதிஸாரம், கிராணி முதலானவைகள் தீரும்.

## 371. விழுசிக்கு இந்துப்பாதிக் குடிநீர்

இந்துப்பு மாங்கொட்டைப் பருப்புசுக்கு
மினியசீ ரகம்பில்வப் பிஞ்சுவோம
மந்தந்திப் பிலிகாட்டாத் திப்பூவும்
வகையெட்டுஞ் சரியாக நிறுத்துக் கொண்டு
சிந்துவினி நாழிவிட்டு முழக்காய்க் காய்ச்சித்
தினமந்தி காலையுமே யுண்டானால்
வந்தவிழு சியுந்தீர்ந்து சவுக்கியமாகு
மன்னவர்கோன் சரபேந்திர னருளிதாமே. (சுரு௫)

(இ-ள்)

| | |
|---|---|
| இந்துப்பு | மாங்கொட்டைப் பருப்பு |
| சுக்கு | சீரகம் |
| வில்வப்பிஞ்சு | ஓமம் |
| திப்பிலி | காட்டாத்திப்பூ |

இவைகளைச் சமனெடையெடுத்து இடித்து ஒரு பாத்திரத்தி லிட்டுத் தண்ணீர் சின்னப்படி $\frac{1}{2}$ விட்டு, அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகுமட்டும் எரித்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

விஷூசிகள் (காலரா) தீரும்.

## 372. விழுசிமேல் ஜ்வரத்திற்கு மருந்து

மூக்கரட்டை வேரதனைக் கொண்டுவந்து
மோர்விட்டு நன்றாக வரைத்துக்கொண்டு
தாக்கியமோ ரினிற்குழப்பிக் காலைதன்னிற்
றான்கொண்டு பாரிதற்குத் தீரும்வியாதி
ஆக்கமதின் விழுசியின் மேல் ஜ்வரமுந்தீரு
மரனார்தன் பாதமதி லர்ச்சனை செய்
பாக்கியவான் றுளசேந்திர பூபனீன்ற
பாலன்சர பேந்திரனுண ருசிதமாமே. (௬௫)

(இ-ள்)

மூக்கரட்டை வேரைக் கொண்டுவந்து நன்றாக இடித்துக் கல்வத்திலிட்டுப் பசுவின் மோர்விட்டு நன்றாக வரைத்துக் காலையில் உட்கொள்ளவும்.

ஜ்வரத்துடன் கூடிய காலரா தீரும்.

## 373. விழுசிக்கு மருந்து

சீரகமுங் கருஞ்சீர மிரண்டுந் தானே
சேர்த்தரைத்துக் கொட்டைப்பாக் கின்மாத்திரை
நேருடனே வதினளவு கறுத்த வேப்பி
னிலையரைத்துற் றனியாக வைத்துக்கொண்டு
ஈரவெங்கா யப்பூண்டு மூன்று ரெண்டு
யினிளகிராம் புங்கூட்டி யரைத்துக்கொண்டு
சீரெருமைத் தயிருமுரி தனிற்கலந்து
தினமுண்ணு மதிகாலை தன்னிற்றானே. (௬௭)

காலைதன்னிற் பத்தாநா டனக்குங் கொள்ளு
கருதுவேன் றயிர்மோர்நா ரத்தங்காயுஞ்
சாலமுருங் கையின்சாறுவிட் டசனம் பண்ணு
தப்பாம லுப்பிசமாய் விசூழி தன்னால்

சோலஞ்செய் நோய்தீர்த்து தப்பாமற்றான்
குணமாகுஞ் சிவகிறுபை யதனாலிந்த
ஞாலமதில் முனிவோர்க ளுரைத்தநூலை
நலமாக விபுவுணர்ந்த முறையிதாமே. (கூ௫௮)

(இ-ள்)

சீரகம்
கருஞ்சீரகம்

இவ்விரண்டையும் சேர்த்து அரைத்த விழுது ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் எடுத்துக்கொண்டு

இதனுடன்,

| | | |
|---|---|---|
| கருவேப்பிலை விழுது | — | ஒரு கொட்டைப்பாக்களவு |
| வெங்காயம் | — | ,, |
| வெள்ளைப்பூண்டு | — | (3 பூண்டு) |
| கிராம்பு | — | (2 கிராம்பு) |

இவைகளை யொன்றுகலந்து, எருமைத் தயிர் ½ படியுடன் கூட்டி நன்றாகவரைத்து, அதிகாலையில் உட்கொள்ளவும். இவ்வாறு 10 நாட்கள் செய்யவும்.

**பத்தியம்:—**

தயிர், மோர், நாரத்தங்காய், முருங்கை முதலிய பதார்த்தங்களைக் கூட்டவும்.

வயிறு உப்பிசம், விழுசி முதலியவைகள் தீரும்.

## 374. விஷூசிக்குக் கடாயம்

கூவிளையின் பழுத்தபழத் தோடுநல்ல
குணமாம்நெற் பொரிபயத்தம் பருப்புந்தானே
ஆவலுட னின்வெந்நீர் வார்த்தரைத்து
அமுதம்விட்டே நாலிலொன்றாய்க் காய்ச்சியேதா

நீவயண மாகவந்தி காலையுங்கொள்
நிச்சயமாய் விழுசியது நிற்கும்பாரு
பூவுலகுக் காய்நன்னூ லுணர்ந்தா ராய்ந்து
பொற்புளதஞ் சையின்மானு வருளிதாமே. (௩௭௪)

(இ-ள்)

வில்வப்பழ ஓடு
நெற்பொரி
பயத்தம்பருப்பு

இவைகளைச் சமனெடுத்து வெந்நீர் விட்டு நன்றாக வரைத்துத் தண்ணீர் 8 மடங்கு விட்டு அடுப்பின் மேலேற்றி நாலிலொன்றாக்கிக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

நிச்சயமாக விழுசிகள் நிற்கும்.

## 375. சத்தியின் மேல் விழுசி கண்டாலதற்கு மருந்து

கற்றாழை மடலையுமிக் காந்த றன்னிற்
கருகாமற் சொறுகியதை வேகவைத்து
சத்துநே ரத்திலதை யெடுத்துத்தானே
சதிராகப் பிழிந்துவொரு பாத்திரத்தில்
வைத்துநன்றாய் வடிக்கட்டி யிலவங்கத்தை
வகையாகப் பொடிசெய்து கூட்டிக்கொள்ளு
சத்தியுடன் விழுசியது தீருங்கண்டாய்
தப்பாத விபுவுணர்ந்த முறையதாமே. (௩௭௫)

(இ-ள்)

கற்றாழை மடலை உமியில் சொறுகி கறுகிவிடாமல் வேகவைக்கவும். பின்னர் இதனை நசுக்கிச் சாறு பிழிந்து ஒரு பாத்திரத்திலிட்டு வடிக்கட்டிக்கொள்ளவும். இதனுடன் கிராம்புத் தூள் சேர்த்து உட்கொள்ளவும்.

விழுசிகள் தீரும், வாந்தியும் தீரும்.

# 376. மகோதரம், குன்மவாயு. விழுசிக்குப் பெருங்காயச் சூரணம்

பெருங்காயந் தானொன்று வசம்பிரண்டு
பிடலவண மூன்றுடனே சுக்குநாலு
வருஞ்சீர கமைந்து கடுக்கா யாறு
வனகொடுவே லியுமேழு கோட்டமெட்டு
உரையெட்டு மருந்தில்கணக் காகத்தானு
முப்பத்தி யாறுவரா கனெடைதானே
அரைபொடியாய் நன்றாக வடிக்கட்டிக்கொண்
டப்புரந்தான் செய்யும்வகை தன்னைக்கேளே. (சுசுக)

செய்யும்வகை கேளிந்தச் சூரணத்தை
தீயில் வைத்த வெந்நீரி லந்திகாலை
பய்யவே கொள்ளுநீ பத்தியமாக
பத்துநா டனிலேதீர் நோயைக்கேளு
வெய்யமகோ தரங்குன்மம் வாயுவினோடே
விழுசியென்ற நோயிவைகள் தீரும்பாரு
வையகமெ லாம்புகழுஞ் சரபதீர
மானுவுணர் பெருங்காயச் சூர்ணமாமே. (சுசுஉ)

(இ-ள்)

| | | |
|---|---|---|
| பெருங்காயம் | —1 | வராகனெடை |
| பிடலவணம் | —3 | ,, |
| சீரகம் | —5 | ,, |
| கொடிவேலிவேர் | —7 | ,, |
| வசம்பு | —2 | ,, |
| சுக்கு | —4 | ,, |
| கடுக்காய் | —6 | ,, |
| கோஷ்டம் | —8 | ,, |

இவைகளை நன்றாக உலர்த்திச் சூரணித்து வஸ்திரகாயஞ் செய்யவும்.

இதில் மூவிரல் கொள்ளுமளவெடுத்து வெந்நீருடன் காலை யிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

இச்சா பத்தியமாக இருக்கவும்.

மகோதரம், குன்மம், வாயு, விழுசிகள் முதலான ரோகங் கள் தீரும்.

## 377. படுவன்மேல் விழுசிக்குக் கூடாயம்

சட்டிதனைக் காயவைத்து முருங்கைப் பட்டை
தனைப்போட்டுக் கறுகவதை வறுத்துக்கொண்டு
சட்டமுடன் வெறுகடிப்பிர மாணமும்வெந்
தயம்போட்டு பொரியுரபோ துந்தான்கேளு
திட்டமுட னொருபடிநீர் விட்டுழக்காய்த்
தீயினிலே காய்ச்சிரண்டு வேளையுங்கொள்
கொட்டபடு வன்மேல்வி ழுசிதீருங்
கெடிமன்னன் தஞ்சைவிபு வுணர்ந்ததாமே. (சுசுகூ)

(இ-ள்)

சட்டியை அனல்மேல் வைத்து, முருங்கைப் பட்டையைப் போட்டுக் கறுக வறுத்துக்கொள்ளவும். இதனுடன் மூவிரல் கொள்ளுமளவு வெந்தயம் இட்டு, அது நன்கு பொரியும்போது சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு எட்டிலொன்றாக்கி இறக்க வும். இதனைக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

படுவனுடன் சேர்ந்த விழுசிகள் தீரும்.

## 378. படுவன் மேல் விழுசிக்குக் கூடாயம்

உத்தாமதா ளிக்கொடியி னுடனேதானே
உகந்தகரு வேப்பிலையின் காம்புங்கூட
சத்துளவோ மமுந்தானோர் பிடியும் போட்டுத்
தானேயிம் மூன்றுங்கருக வும்வறுத்து

உத்தநீர் நாழிவிட்டுத் தீயைப்போட்டு
வுழக்காகக் காய்ச்சிரண்டு போதுங்கொள்ளு
பத்துபடு வன்விழுசி யுமேதீரும்
பண்பான நாதர்முறை தான்கண்டாயே. (சுசுச)

(இ-ள்)

உத்தாமணிக் கொடி
கருவேப்பிலைக் காம்பு
ஓமம்

இவைகளை வகைக்கு ஒருபிடி எடுத்து, ஒரு சட்டியிலிட்டு நன்கு கறுப்பாகும் வரை வறுக்கவும். இதனுடன் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு ஒரு உழக்காகுமட்டும் வற்றவைக்கவும், இதனைக் காலையிலும் மாலையிலும் பருகக் கொடுக்க, படுவன் மேல் வந்த விழுசிகள் தீரும்.

## 379. வயிறு இரைச்சலுக்கு மருந்து

தென்னம்வேர் கொண்டுவந்து பசுவினோடே
தீன்பாலை விட்டுமையைப் போலரைத்து
உன்னிதசர்க் கரைபோட்டுப் பசுவின்பாலி
லுறக்குழைத்துக் காலைதனிற் கொண்டுபாரு
என்னேரம் வயிறிரைச்ச லுடனே தீரு
மெழில்முனிவ ருரைத்ததொரு வைத்தியத்தி
நந்நூலைநா டோறுமுணர்ந் தாராய்ந்த
நரபதிதஞ் சைச்சரபேந் திரன்சொல்லாமே. (சுசுரு)

(இ-ள்)

தென்னம் வேரைக் கொண்டுவந்து நசுக்கிப் பசுவின் பாலை விட்டு நன்றாக வரைத்துச் சர்க்கரை சேர்த்து அப்பாலுடனே குழப்பிக் காலை நேரங்களில் உட்கொள்ளவும்.

வயிற்று இரைச்சல் தீரும்.

## 380. அன்னஞ் செரியாமை, வயிறு இரைச்சல், பொருமல் ஜ்வரம், அசீர்ணத்திற்கு நீலியாதிக் கடாயம்

வன்னஞ்செய் யவுரிவுள்ளிப் பூண்டு மோமம்
வசம்புடனே வகைநாலுங் கறுக்கிற் றண்ணீர்
நன்னயமாய் விட்டுமெட் டொன்றாய்க் காய்ச்சி
சதமாக விரண்டுவே ளையுந்தான் கொள்ளு
அன்னமுமே செரியாமல் வயிறிரைச்ச
லதுவும் வயிறு பொருமல் ஜ்வர மசீர்ணந்தீரும்
சொன்னவகத் தியர்நூலின் முறைமைதன்னை
துரைசரபேந் திரனுணர்க டாயமாமே. (௩௩௩)

(இ-ள்)

| | |
|---|---|
| அவுரிவேர் | உள்ளிப்பூண்டு |
| ஓமம் | வசம்பு |

இவைகளையொரு சட்டியிலிட்டு நன்கு கறுக்கிச் சுத்த ஜலம் 8 மடங்கு விட்டு, அடுப்பின்மேலேற்றி எட்டிலொன்றாக்கிக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

சாப்பாடு செரியாமை, வயிறு இரைச்சல், பொருமல் ஜ்வரம், அசீர்ணங்கள் முதலானவை தீரும்.

## 381. வயிறு பொருமலுக்குக் கடாயம்

காவளையி னிலைவேப்பி னிலையுமுப்புங்
கடுகுவெதுப் படக்கிநுணா விலையினூடே
வேவசம தாகமுட னெழுமருந்து
மேகறுக்கி நீர்விட்டுக் குறுகக் காய்ச்சி
நாவலனை நினைந்தந்தி காலையுங் கொள்
நல்வயிறின் பொருமலும்போம் நம்பிச்செய்யே
மேவுகயி லரசருட பாதம் போற்றி
விபுசரபேந் திரனுணர்க டாயமாமே. (௩௩௪)

(இ-ள்)

காய்வேளையின் இலை
உப்பு
வெதுப்படக்கி
ஓமம்
வேப்பிலை
கடுகு
நுணா இலை

இவைகளை ஒரு சட்டியிலிட்டு நன்றாகக் கறுக்கிச் சுத்த ஜலம் எட்டு மடங்குவிட்டு, எட்டிலொன்றாக்கிக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

வயிற்றுப் பொருமல் தீரும்.

## 382. உதர தோஷத்திற்குக் கடுகு

சுக்கு மிளகு திப்பிலியுஞ்
சோம னுப்பு வெள்ளுள்ளி
தக்க கடுக்கா யிவையுடனே
சாத்திர வேதிக் கிழங்குநீர்
மிக்க தளவேப் பெண்ணெயிலே
மீராக் கூழ்போ லெரித்தருந்த
துக்க மறவே யறாமல்முந்
தோன்றாதுதான் தோஷமுமே. (சுசுஅ)

(இ-ள்)

சுக்கு
திப்பிலி
வெள்ளுள்ளி
மிளகு
இந்துப்பு
கடுக்காய்
சாஸ்திரவேதிச்சாறு (கொடுக்காப்புளி)

இவைகளை நன்கு அரைத்து வேப்பெண்ணெயுடன் கலந்து கூழ்போலக் காய்ச்சி இறக்கவும்.

இதனை உட்கொள்ள, உதர தோஷங்கள் தீரும்.

## 383. வழும்புத்திரத்திற்கு மருந்து

தெங்கும் பாளை முத்தமொடு
திகழும் வாழைப் பூவுடனே
துங்க மாக யிடிப்பித்துச்
சொன்ன படியே நீர்பிழிந்து
எங்க மொத்த யிலவுபிசி
னிதுவும் விடைய மேல்விசறித்
தங்க வொன்றாய் வழும்புதிரந்
தப்பா தினிமேல் வாராதே. (௩௯௯)

(இ-ள்)

தென்னம்பாளை
வாழைப்பூ
பச்சையான கோரைக்கிழங்கு

இவைகளைக் கல்லுரலிலிட்டிடித்துச் சாறு பிழிந்து, அதிவிடையம், இலவம்பிசின் இவற்றின் சூரணத்தைப் போட்டு உட்கொள்ள வழும்புகள், உதிரம் வெளியாதல் முதலானவை தீரும்.

## 384. குன்மம், பொருமல், வயிற்றுவலி, வாயுவினால் வயிறு இரைச்சல் முதலியவைகளுக்கு ஈர வெங்காயக் கடுகு

ஈரவெங் காயப் பூண்டது நாழியு
மேயுரித்து நறுக்கிவேப் பெண்ணெயிற்
சாரவேயதிற் போட்டு நன்றாகவே
தானே வேகவும் வைத்து மனஸிலே
ஆரணியமதில் மருக்கா ரையி
னருங்கிழங்கு விளாங்காய் மாத்திரம்
நீரதைவிட் டரைத்ததிற் போட்டுமே
நீயதைக் கடுகாக யிறக்கிடே. (௩௭0)

கடுகி னிற்பதங் கண்டுமிறக்கியே
காலையந்தியுந் தோற்பாக்கின் மாத்திரம்
வடகைலை நாதரைப் போற்றியே வளமுடன்
கொள்ளத் தீரும் வியாதிகேள்
இடரு செய்திடுங் குன்மம் பொருமலு
மினிய குக்கி வலியுடன் வாயுவி
நுடநிரைச் சலுப்போகுமன் னான்முக
நுண்மையா கமுனி வாக்கு ரைத்ததே. (கூஎக)

(இ-ள்)

ஈர வெங்காயம் சின்னப்படி ½ எடுத்து நன்றாக உரித்துச் சிறுக நறுக்கி வேப்பெண் ணெய் விட்டு அடுப்பின் மேலேற்றி வேக வைக்கவும், இதனுடன் மருக்காரைக் கிழங்கு விளாங்காய் பிரமாணமெடுத்துச் சுத்த ஜலம் விட்டு நன்றாக வரைத்துக் கலந்து கடுகு பதங்கண்டு இறக்கவும். இதில் ஒரு கொட்டைப் பாக்களவெடுத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

குன்மம், பொருமல், வயிற்றுவலிகள், வாயுவினாலேற்பட்ட இரைச்சல் முதலானவை தீரும்.

## 385. அன்னம் செரியாமை, வயிறு இரைச்சல், முதலானவை தீரக் கடுகு

சத்திசா ரணைக் கொழுந்துட னுத்தம
தாளி யின்கொழுந் தஞ்சிலை நொச்சியி
நுத்திடுங் கொழுந்து மூன்று தன்னிலே
ஒவ்வோ ருவகைக் குமிரண் டுபிடி
நத்து வமிள குங்கடு குள்ளியும்
நனைத்த ரைத்திரு நாழியோர் தன்னிலே
சித்திர பானுவில் வைத்தெரித் தேயதை
செய்திடும் வகை கேளு மறிஞரே. (கூஎஉ)

கேளு நீரது சுண்டிய பக்குவமா
    கியபரு வமது கண்டி றக்கியே
தாளிதஞ் செய்து தெட்சணா மூர்த்தியின்
    றன்னையும் நினைந்தே யந்திகாலையும்
நாளதைந் துண்வயிற் றிலன்பது
    நாட்க டோறுஞ் செரியாம லும்பின்னு
மீளு மேயுதரத் தினிரைச் சலு
    மேகிடு மிதைச் செய்திடு வீர்களே. (௩௭௩)

(இ-ள்)

சத்திச்சாரணைக் கொழுந்து
அஞ்சிலை நொச்சி
உத்தாமணிக் கொழுந்து

இவைகளை வகைக்கு 2 பிடி வீதமெடுத்து, மிளகு, கடுகு, வெள்ளைப்பூண்டு இவைகளையும் கூட்டி அரைத்து, நல்ல மோர் 2 படியுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றிக் கொதிக்க வைத்துக் கெட்டியான பின்னர் இதனையிறக்கவும். இதில் ஒரு கொட்டைப்பாக்களவெடுத்துக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும்.

அன்னம் செரியாமை, வயிறு இரைச்சல் முதலானவை தீரும்.

## 386. செரியாமல் கழிச்சலுக்குச் சத்திச் சாறணையாதி வடை

சத்திச் சாறணை வேலிப் பருத்திநற்
    சாறணை யிந்த மூன்றுவே ருஞ்சரி
யுத்திடுங் கடுகு மிளகு மரைத்
    துண்மையாக வடையது தட்டியே
வைத்துச் சட்டிய டுப்பினி லேயந்த
    வடையைச் சுட்டதி காலையிற் கொண்டிடில்
சுத்த மாயன முஞ்செரி யாமலுந்
    தொல்லை செய்யுங் கழிச்சலும் போகுமே. (௩௭௪)

(இ-ள்)

சத்திச்சாறணைக் கிழங்கு
நல்சாறணைக்கிழங்கு
வேலிப்பருத்தி

இவைகள் வகைக்கு 1 பலம்
கடுகு ,,
மிளகு ,,

இவைகளை ஊறவைத்து நன்றாக வரைத்து, வடைதட்டி ஒரு சட்டியிலிட்டுச் சுட்டு அதிகாலையில் உட்கொள்ளவும்.

அன்னம் செரியாமை, கழிச்சல் முதலியவை தீரும்.

## 387. செரியாமல் கழிச்சலுக்குக் கடாயம்

ஆடு தின்னாத பாளையும் வெந்தய
மதுயிரண்டும் வகைக்கு மொருபிடி
தேடியேயதில் நாழித்தண் ணீர்விட்டுத்
தீயை விட்டுரி யாகவும் காய்ச்சியே
நாடி யந்தியுங் காலையுங் கொள்ளவே
நாளு மைந்தினி லேசெறி யாமலே
வோடி டுங்கழிச் சல்களு மற்றிடு
முண்மை யாமிது செய்திடு வீர்களே. (கூஎரு)

(இ-ள்)

ஆடுதீண்டாப்பாளை
வெந்தயம்

இவைகளை வகைக்கு ஒரு பிடியெடுத்து இடித்துச் சுத்த ஜலம் சின்னப்படி ½ விட்டு, அடுப்பின் மேலேற்றிப் பாதியாக்கிக் காலையிலும் மாலையிலும் உட்கொள்ளவும். 5 நாட்களுள் அன்னம் செறியாமை, கழிச்சல் முதலானவை தீரும்.

## 388. வாயுவினால் செறியாமலுக்கு ஆவாரையாதிக் குடிநீர்

ஆவாரை யிலைபருத்தி யிலையும்பா
வட்டையினி லையுஞ்சுரை யின்பழுப்
பால துத்தமதாளியி லைகடம்
பானாவி னிலைதும்பை யிலையதுங்
காவிற் சாறடை யிலையும் பொடுதலை
கருது மொன்பதி லுஞ்சரி யாகவே
சாவ தானம தாகவே நீர்விட்டுத்
தானெரியதை நாலிலொன் றாகவே. (கூஎகூ)

நால தொன்றதாய்ச் சுண்டி வாச்சந்த
நாழி யேயிறுத் தேகுடி யந்தியுங்
காலை தன்னிலு முண்செறி யாமலுங்
கனத்திடும் வயிறு வாயுவுந் தீர்ந்திடும்
ஞால மீதினில் மானிடர் மெத்தவும்
நசலி னால்மெலிந் தேபடும் வேதனைக்
கோலங் கண்டுதஞ் சாபுரி தன்னில்வாழ்
கொத்த வன்சர பேந்திர னுணர்ந்ததே. (கூஎஎ)

(இ-ள்)

| | |
|---|---|
| ஆவாரையிலை | பருத்தியிலை |
| பாவட்டையிலை | சுரைப்பழுப்பு |
| உத்தாமணியிலை | கடப்பானாவிலை |
| தும்பையிலை | சாறடையிலை |
| பொடுதலையிலை | |

இவைகளை வகைக்கு ஒரு பிடியளவெடுத்து 8 மடங்குச் சுத்த ஜலத்துடன் கூட்டி, அடுப்பின் மேலேற்றி, நான்கிலொன் றாக்கி இறக்கவும். இக்கஷாயத்தில் சின்னப்படி ½ எடுத்து உட் கொள்ளவும். இதனைக் காலையிலும் மாலையிலும் குடித்துவர அன்னம் செறியாமை, வாயு முதலானவை தீரும்.

## 389. பொருமல், செறியாமை, முதலியவை களுக்கு வெந்தய எண்ணெய்

வெந்தயமும் பெருங் காயமுந் திப்பிலி
வெங்காரஞ் சீனக்கா ரமிவட் சாரம்
இந்துப்புக் கடுரோக ணீநேர் வாள
மிளகுசீர கமும்நல் லசுக்குடன்
கொந்துலா வுக்கழ லின்பருப் புடன்
கூடவு மசம தாகமாகவும்
விந்தையாம் பதி நாலு வகையது
மேதுவாக வகைக்கோர் கழஞ்சதே. (கூஎஅ)

ஒரு கழஞ்சு வகைக்கு நிறுத்துக்கொண்
டொக்கவும் வெண்கார வுள்ளியு மோர்பலந்
தருநல் லாமணக் கெண்ணெயும் நாழியின்
றன்னில் விட்டு மெரித்து வடித்துண்ண
பொரும லும்வயி றுஞ்செரி யாமலும்
போகுமந்த வியாதியுந் தீருமே
மருவ லார்கள் பணிதஞ்ச மானகர்
மன்னர் கோன்சர பேந்திர னருளிதே. (கூஎகூ)

(இ-ள்)

| | |
|---|---|
| வெந்தயம் | பெருங்காயம் |
| திப்பிலி | வெங்காரம் |
| சீனாக்காரம் | எவட்சாரம் |
| இந்துப்பு | கடுகரோகிணி |
| சுத்திசெய்தவாளம் | மிளகு |
| சீரகம் | சுக்கு |
| கழற்சிப்பருப்பு | ஓமம் |

இவைகளை வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்துக் கொள்ளவும். இவைகளையரைத்து, இதனுடன்,

வெங்காரம்
உள்ளி

இவைகள் வகைக்கு 1 பலமும் எடுத்து, ஆமணக்கெண்ணெய் சின்னபடி ½ விட்டு அடுப்பின் மேலேற்றி, எரித்துப் பதத்தில் இறக்கவும்.

இதனை ஒரு ஸ்பூனளவெடுத்து உட்கொள்ள வயிற்றுப் பொருமல், செறியாமை முதலானவை தீரும்.

## 390. அன்னஞ் செறியாமைக்கும், வயிற்றுப் பொருமலுக்கும் மருந்து

சுக்குமூ மத்தை யிலையிலுப் பைக்கட்டி
துவர்கடுக் காய்வசம் புயிதைந்துமே
சக்கிய மாயோர் வகைக்கொரு பாக்கதின்
றன்னவே யரைத் தரி தாரமு
மொக்க வேயிரண் டேபண வின்னெடை
யும்மரைத் தொன்பதுண் டையுஞ் செய்யதை
முக்கிய மாயதி காலையிற் கொண்டிட
முன்ன னஞ்செறி யாமையுந் தீருமே. (சூ அ௰)

தீரும வாயல் பொருமலும் பத்தியஞ்
செப்புவேன் றுவரம் பருப்பும் நல்
சீருள முருங்கை யில்லக்கா யதைத்தின்னு
கோழிக் கறியுந் தினந்தினம்
பேருபெற்ற பொதிகைக் குடமுனி
பிரிய மான வயித்திய நூடனை
கூறுட னேயறிந் துணர்தஞ் சையின்
கொற்றவன் சரபேந் திரனரு ளினதே. (சூ அக)

(இ-ள்)

சுக்கு
அரப்பு
வசம்பு
ஊமத்தையிலை
கடுக்காய்த்தோல்

இவைகளையொரு பாக்களவு வீதமெடுத்து நன்கு அரைத்துக் கொள்ளவும். இதனுடன் சுத்திசெய்த தாளகம் 6⅔ குன்றி நிறையெடுத்துச் சேர்த்து நன்றாகவரைத்து 9 உருண்டைகளாகச் செய்து தினமும் அதிகாலையில் உட்கொள்ளச் சாதம் ஜீரணியாமை தீரும்.

பத்தியம்: —

துவரம்பருப்பு, முருங்கைக்காய், முருங்கையிலை, கோழிக்கறி முதலானவைகளைக் கூட்டிக்கொள்ளவும்.

## 391. வயிறு நோய்களுக்கு அரீதகீ நெய்

கடுக்காய் நாற்பது வெள்ளுள்ளி சுக்குத்தேர்
காட்டிற் சாறணைக் கிழங்குட னேநல்ல
அடவி யற்குரு விச்சுவு மேயிந்த
வைந்தை யுமிரு நாழிப் பசுவின் மோர்
யிடுநன் றாகவே சட்டியி லூறவைத்
தேயது வுமே யூறின வாறேதா
னெடுத்ததை நறுக்கியதி நொச்சிச்சாறிரு
நாழி கொன்னைப் பட்டையின் சாறதே, (சுஅஉ)

சாரிரு நாழியெல் லாமடுப் பினிலே
தானே வைத்தது சுண்டிவ ரும்போது
சீருள்ள பசுநெய்யு முரியதுஞ் செய்ய
யெள்ளெண் ணெயு முரிவிட் டதில்
நாரத் தங்கா யரிந்ததிற் போட்டுமே
நன்றாய் வேகவைத் தேயது நாலுநாள்
சார வைத்ததைக் கொள்வயிற்றி லுள்ள
சகல துன்பவி யாதியும் போகுமே. (சுஅங)

(இ-ள்)

கடுக்காய் 40
வெள்ளுள்ளி
சுக்குத்தேர்
சாறணைக்கிழங்கு
குருவிச்சம் வேர்

இவைகளைச் சரியெடையெடுத்து யிடித்து ஒரு பாத்திரத்தி லிட்டுப் பசுவின் மோர் சின்னப்படி 1 விட்டு ஊறவைக்கவும், மறுநாள் இதனுடன்,

| | |
|---|---|
| நொச்சிச்சாறு | — சின்னப்படி 1 |
| கொன்னைப்பட்டைச்சாறு | — ,, ,, |

இவைகளைச் சேர்த்து அடுப்பின் மேலேற்றிக் கொதித்து வருகையில்,

| | |
|---|---|
| பசுவின் நெய் | — சின்னப்படி $\frac{1}{2}$ |
| நல்லெண்ணெய் | — ,, ,, |

இவ்விரண்டையும் சேர்த்து, நாரத்தங்காய் ஒன்றையும் சிறு சிறு துண்டுகளாக அரிந்துபோட்டுக் கொதிக்கவைத்துப் பதத்தில் இறக்கவும்,

4 நாட்கள் சென்றபின்னர் இந்த மருந்தை உபயோகிக்கயும், வயிறு நோய்களெல்லாம் தீரும்.

## 392. இரத்தம் விழுகிறதற்கும், வயிற்றின் வியாதிகளுக்கும் மருந்து

நல்லவேளை யிலையத ரைப்பிடி
　　நாட்டினின்மிள குமரைக் காசெடை
வல்லவுள்ளி யொருபல்லு மூன்றுமே
　　வலுவுட னரைத் தேயிள வெந்நீரிற்
சொல்லிய படிக் காலையு மந்தியுஞ்
　　சொகுசுடன் கொளி ரத்தமறுங் கைப்புஞ்
சல்லியஞ் செய்புளிப் புந்தவிர்ந்திடு
　　சகல குக்கி வியாதியுந் தீருமே. (கூஅச)

இ-ள்)

| | |
|---|---|
| நல்லவேலையிலை | — $\frac{1}{2}$ பிடி |
| மிளகு | — 20 குன்றிமணி |
| உள்ளிப்பூண்டு | — ஒரு பல்லு |

இவைகளை யரைத்து இளவெந்நீருடன் கலந்து காலையி லும் மாலையிலும் பருகவும். இரத்தம் வெளியாதல் நிற்கும்.

கசப்புச் சுவையுள்ள பண்டங்கள், புளிப்புச் சுவையுள்ள பண்டங்கள் முதலானவைகளை நீக்கிவிடவும்.

வயிறு வியாதிகள் தீரும்.

## 393. இரத்தம் விழுதல் நிற்பதற்கு மிளகெண்ணெய்

நல்ல யெள்ளினி னெண்ணெய் யொருபடி
நாடுங் கொச்சி மிளகிரண் டேபலஞ்
சொல்லியமிள கைப்பொடி யாக்கிய
தூளை யெண்ணெயிற் போட்டூற வைத்துமே
வல்லப மாயெண் ணெய்விட் டொருநாள்
வாய்ப்புட னதைத் தேய்த்து முழுகிட
தொல்லை செய்துமி ரத்தம் விழுகிற
துன்பமும் விட்டு மின்பமாகுமே. (சூ௮நி)

(இ-ள்)

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | — 1படி |
| மிளகு | — 2பலம் |

எடுத்து நன்றாகப் பொடி செய்து போட்டு ஊறவைத்துத் தலையில் தேய்த்து முழுகவும். இரத்தம் விழுதல் நிற்கும்.

## 394. வெள்ளுடைப்பு, வாய் மூக்கினால் இரத்தம் விழுகிறதற்குக் கண்டங்கத்திரி நெய்

கண்டங் கத்திரிவேர் சிற்ற மல்லிவேர்
கானகீழா நெல்லிவேரி லாமிச்சம்வேர்
பண்டைநெல்லிப் பருப்புட னேவேப்பம்
பட்டையுஞ்சிறு தேக்குமுருக் கம்பூ

வுண்டிடும் பேரீச் சம்பழம் கோட்டமோ
டுற்றமுந்திரிப் பழங்கடு ரோகிணி
துண்டமாஞ் சிறுதேக் கத்தித் திப்பிலி
சொல்லி யவகை யும்பதி நாலுமே. (சு அசு)

பத்துட னொரு நாலு மருந்ததும்
பார்வ கைக்குமூன் றேவரா கனெடை
யொத்த வம்மியி லேயரைத் தேயதை
யுற்ற நெய்யொரு நாழியி லேகரை
நத்தி யேயெரித் தேவடி நெய்யையும்
நக்கிரண்டுநே ரம்வெள் ளுடைப்பதும்
பத்துமூக் கினில் வா யினிலிரத் தங்கள்
வருவதும் போமிது வுங்கை கண்டதே. (சு அ௭)

(இ-ள்)

| | |
|---|---|
| கண்டங்கத்திரிவேர் | சிற்றாமல்லிவேர் |
| கீழாநெல்லிவேர் | இலாமிச்சம்வேர் |
| நெல்லிப் பருப்பு | வேப்பம் பட்டை |
| *சிறு தேக்கு | முருக்கம்பூ |
| பேரீச்சம்பழம் | கோஷ்டம் |
| திராக்ஷைப்பழம் | கடுகரோகிணி |
| சிறுதேக்கு | யானைத்திப்பிலி |

இவைகள் வகைக்கு 3 வராகனெடையளவெடுத்துத் தண்ணீர் விட்டு அம்மியின்மேல் வைத்து நன்றாகவரைத்துப் பசுவின் நெய் 1 நாழியுடன் குழப்பி, அடுப்பின் மேலேற்றி எரித்துப் பக்குவமாக்கவும். இதனை வடிக்கட்டித் தினமும் 2 வேளை உட்கொள்ளவும்.

வெள்ளுடைப்புக் கழிச்சல், வாய், மூக்கு முதலான இடங்களிலிருந்து வரும் இரத்தப் பெருக்கு முதலானவை தீரும்.

---

* இதற்குப்பதில் ''அதிவிடையம்'' என்று 68 நெ. சுவடியில் காணப்படுகிறது.

## 395. இரத்தம் விழுகிறதற்கு மருந்து

நிலக்குமி ழந்தழை யைப்பழை யதோர்
நீரிலேபிசைந் தேபிசைந் தேநன்றா
பிலந்து மேபிழிந் தேயெரிந் தண்ணீரைப்
பிசிகில் லாமற் குடியொரு சேருமே
நலந்தரும் குக்கியில் ரெத்த மானதும்
நாலு நாளிலே நின்றிடும் முண்மையாய்
கலக்கடம் மானவோசை களார் தஞ்சைக்
காவலன்சர பேந்திர னருளிதே. (கூ அ அ)

(இ-ள்)

நிலக்குமிழந் தழையைக் கொண்டுவந்து, தண்ணீர்விட்டு 4 அல்லது 5 தடவை பிசைந்து அத்தண்ணீரையொரு பாத்திரத்திலூற்றிக்கொள்ளவும். இதில் ஒரு சேரெடுத்துக் குடிக்க இரத்த அதிசாரங்கள் 4 நாட்ளுள் தீரும். கைகண்டது.

## 396. உறுப்பிற்கு மருந்து

சந்திர பானுவு லாவிய பூமியிற்
றான்வறுத் துமுறுப்பிப் பிணியினால்
சிந்தை மெத்த வருத்துவ துங்கண்டு
செல்வர் தஞ்சை நகர்சர பேந்திரன்
தந்திர மாய்வேறு நூல்களா ராய்ந்துமே
தானே கண்ட திதுவோர் பிரயோக
மிந்துப் பைப்பொடி செய்து முறுப்பினி
லேதட விடவுள் ளுக்கு வாங்குமே. (கூ அகூ)

(இ-ள்)

உறுப்பி ரோகத்தினால் கஷ்டப்பட்டால் அதற்கு இந்துப்பைப் பொடி செய்து மேலே போட அது உள்ளே சுறுங்கும்.

குறிப்பு:-

உறுப்பி என்பது மூலந் தள்ளல் என்ற நோயாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. (ஆஸனம் வெளிவரல்)

## 397. வயிற்றிலிருந்தோ, ஆண்குறியிலிருந்தோ இரத்தம் விழுகிறதற்கு மருந்து

பசுவின் பாலிநீர் வள்ளிக் கிழங்கதை
    பக்கு வத்தோ டுரித்ததைப் போட்டுமே
யிசவ தாகவுங் காய்ச்சி யுழக்கானா
    லேயிறக் கியன் நாறை யெடுத்தெரி
பசுவி நெய்யு முழக்கதி லேவிட்டுப்
    பருகிடவு மிலிங்கம் வயிற்றினாற்
தசையி லுற்றயி ரத்தம் விழுகிற
    தத்துவங் கண்டு சௌக்கிய மாகுமே. (௩௱௯௰௭)

(இ-ள்)

பசுவின் பாலுடன் தண்ணீர் விட்டான் கிழங்கையுரித்துப் போட்டு நன்றாக வடுப்பின்மேலேற்றி ஒரு உழக்காக் காய்ச்சவும். பின்னர் அத்துண்டுகளை நீக்கிவிட்டுப் பசுவின் நெய் ஒரு உழக்குவிட்டு உட்கொள்ளவும்.

வயிற்றிலிருந்தும், ஆண் குறியிலிருந்தும் வெளியாகும் இரத்தம் நிற்கும்.

## முடிவுரை

சீருஞ் செல்வமி குந்தஞ்சை மானகர்
    செல்வ மால்சர பேந்திர னருளினால்
கூறு கின்றவி ரேசன மாதியாய்க்
    குக்கியி னில்வந் துற்றவி யாதிகள்
தீரவும் நெய்குழம் புகடா யமாத்
    திரைகள் பற்பஞ்செந் தூரம் பலவகை
பாரதி யருள் பெற்றவே லாயுதப்
    பாவலன் சொற்றொடர் பிரித்தறி வோமே.

# சரபேந்திர வைத்ய முறைகள்

## பேதி முறை, அதிஸார சிகித்ஸை முறைகளிலுள்ள மருந்துகளின்

## அகராதி அட்டவணை

(குறிப்பு:— பிறைக்குறிகளுள் காணப்படும் பெயர்கள் முறையே, மருந்துகளின் முதல் சரக்கைக் குறிப்பன.)


பக்க எண்கள்

1. (அகத்தியிலைக்) கடுகு (வாயுக் கழிச்சலுக்கு) 261
2. அதிமதுரக் கடாயம் (பித்த அதிஸாரம், உழலை, தாபம், சந்நிபாதம், பயித்தியம், பிரமம் இவற்றிற்கு) 345
3. அதிவிடையாதிச் சூரணம் (கடுப்புக் காய்ச்சலுக்கு) 265
4. அதிமதுரப்பிட்டு (வயிறு கடுப்பிற்கு) 272
5. (அதிமதுரக் கபாட) மாத்திரை (வயிறு கடுப்பிற்கு) 278
6. (அதிமதுராதிச்) சூரணம். (சேத்துமவதிஸாரம், பித்தாதிஸாரம். வாதாதிஸாரம், அசீர்ணவதிஸாரம், முதலியவைகளுக்கு) 359
7. (அத்திப்பட்டைத்) தயிர் கஷாயம் (வயிறு கழிச்சல், கடுப்பு, இரத்தக் கழிச்சலுக்கு) 223
8. (அத்திப்பிஞ்சுக்) கல்கம் (வயிறுகடுப்பு, கழிச்சலுக்கு) 282
9. (அத்திப்பட்டைக்) குழம்பு (வயிறு கடுப்பிற்கு) 296
10. (அத்தியிலைக்) கஷாயம் (அதிஸாரக் கழிச்சலுக்கு) 319
11. அம்மான் பச்சரிசிக் கஷாயம். (வைசூரிமேல் வந்த கடுப்பிற்கு) 315
12. அரசங்கொழுந்து கஷாயம் (இரத்தக் கழிச்சலுக்கு) 207
13. அரளுவாதிச் சூரணம் (அதிஸாரம், கிராணிக்கு) 325
14. (அரீதகீ) வடகம் (வயிறு கடுப்பிற்கு) 279
15. அரீதகீ நெய் (வயிறு நோய்களுக்கு) 377
16. அர்க்காதி கஷாயம் (வயிறு கழிச்சலுக்கு) 50
17. அவிபத்திச் சூரணம் (விரேசனத்திற்கு) 197

18. அவுரியிலைக் கறுக்குக் கஷாயம் (தபனம், தாகம், ஜ்வரம், வயிறு உப்பிசம், கழிச்சலுக்கு) 267
19. அழிஞ்சில் உருண்டை (கிராணிக்கு) 78
20. அழிஞ்சில் வேர்க்கல்கம் (வயிறு, கடுத்து, இரத்தம் விழுகிறதற்கு) 304
21. அஷ்ட சூரணம் (கிராணி, குன்மம், பொருமல், களைப்பு, சூலை, சோபத்திற்கு) 130
22. (ஆடு தீண்டாப்பாளையுப்புச்) சூரணம் (கிராணி, குன்மம், வாயுவிற்கு) 168
23. (ஆடு தீண்டாப்பாளையாதிக்) கஷாயம் (செரியாமல் கழிச்சலுக்கு) 373
24. (ஆட்டுப்பால்) மருந்து (வெள்ளுடைப்பாய், உஷ்ண வாயுவினால் வயிறு கழிகிறதற்கு) 248
25. (ஆமையோடு பானா) மருந்து (வயிறு கடுப்பிற்கு) 274
26. ஆத்திப்பூக் கடாயம் (செரியாமல் கழிச்சலுக்கு) 354
27. (ஆவாரைப்) புட்டவியல். (கழிச்சலுக்கு) 200
28. (ஆவாரை விரை) மருந்து (வயிறு கழிச்சலுக்கு) 215
29. (ஆவாரையிலைப்) புண்ணாக்கு (வயிறு கழிச்சலுக்கு) 216
30. (ஆவாரை வேர்க்) கல்கம் (வயிறு கழிச்சலுக்கு) 218
31. (ஆவாரை யரிசிக்) களி (சலக்கழிச்சலுக்கு) 227
32. (ஆவாரையிலைச்) சூரணம் (சலக்கழிச்சலுக்கு) 236
33. (ஆவாரையிலைப்) பால் (சலக்கழிச்சல் தீர) 237
34. (ஆவாரை) ஊறல் (சலக்கழிச்சலுக்கு) 237
35. (ஆவாரம்) பிட்டு (சலக்கழிச்சலுக்கு) 239
36. (ஆவாரைக்) குடிநீர் (வாயுவினால் செரியாமலுக்கு) 374
37. ஆனந்த பைரவ ரஸம் (7 நாட்கள் சென்ற ஜ்வரத்திற்கும், அதிஸாரத்திற்கும், ஜ்வராதிஸாரத்திற்கும்) 354
38. இச்சாபேதி குளிகை (தண்ணீரில் விரேசனம்) 35
39. இச்சாபேதி (விரேசனத்திற்கு) வேறு 40
40. (இஞ்சி) மருந்து (வயிற்றுக் கடுப்பிற்கு) 59
41. இஞ்சிக் குழம்பு (கிராணி, சோகை, பாண்டு, கழிச்சல் நீராமை, குன்மம், வீக்கம் முதலானவைகளுக்கு) 128
42. இஞ்சி நெய் (கிராணி, அதிஸார குன்மத்திற்கு) 348
43. (இஞ்சிக்) குழம்பு (சோபக் கழிச்சலுக்கு) 252
44. இந்துப்பாதிச் சூரணம் (கிராணி அதிஸாரத்திற்கு) 324
45. இந்துப்புச் சூரணம் (உறுப்பிற்கு) 381
46. இந்துப்பாதி உருண்டை (கிராணிக் கழிச்சலுக்கு) 193

47. இந்துப்பாதிக் குடிநீர் (விழூசிக்கு) 361
48. (இம்புரா) மருந்து (வயிறு கடுப்பிற்கு) 273
49. (இம்புரா வேர்க்) கல்கம் (இரத்தக் கழிச்சலுக்கு) 219
50. (இரஸாதி) மாத்திரை (விரேசனத்திற்கு) 11
51. (இரஸாதி) குளிகை (விரேசனத்திற்கு) 36
52. (இரஸாதி) சூரணம் (சகல கிராணிகளுக்கும்) 101
53. (இரதாதி) மாத்திரை (கிராணிக்கு) 116
54. (இரதாதி) பற்பம் (கிராணிக்கும் பிரமியத்திற்கும்) 163
55. இரஸாதிக் குழம்பு (வலிக்கிராணிக்கு) 183
56. (இராததி) மாத்திரை (திரிசுரத்திற்கு) 189
57. (இலந்தைப் பட்டைக்) கல்கம் (இரத்தக் கழிச்சலுக்கு) 207
58. (இலவம்பட்டைப்) பால் (வயிறு கழிச்சலுக்கு) 222
59. (இலவம் பிசினிச்) சூரணம் (மூலக்கடுப்பு, வரைக் கடுப்பிற்கு) 295
60. (இலிங்க மாத்திரை) பேதிக்கு 31
61. இலைக்கள்ளிக் கடுகு (பெருவயிறு, அகுவைக்கு) 255
62. (இலுப்பைப்பூ) மாத்திரை (பேதிக்கு) 44
63. இலுப்பைப்பூ மாத்திரை (விரேசனத்திற்கு) 67
64. (ஈரவெங்காய) வதக்கல் (கிராணி, அதிஸாரம் பலவித கழிச்சலுக்கு) 194
65. (ஈரவெங்காய) வதக்கல் (வயிறு கழிச்சலுக்கு) 214
66. (ஈரவெங்காயக்) கடுகு (குன்மம், பொருமல், வயிற்று வலி, வாயுவினால் வயிறு இரைச்சல் முதலியவை களுக்கு) 370
67. உசீராதிக் குடிநீர் (அதிஸாரத்திற்கு) 321
68. (உதும்பரக்) கஷாயம் (இரத்த பித்தத்திற்கு) 141
69. (உத்தாமணிக்) கறுக்கு (படுவன்மேல் விழூசிக்கு) 366
70. (உப்பிலாங் கொடிக்) கல்கம் (சலக்கழிச்சலுக்கு) 238
71. (உப்புச்) சூரணம், (வயிற்றெரிவிற்கும், உளைப்பிற்கும்) 301
72. உன்மத்தாதி உருண்டை, (ஆனந்த பைரவன்) கிராணிக்கு 84
73. ஊமந்தை)க் குழம்பு (பேதிக்கு) 9
74. (ஊமத்தை) யுருண்டை (கழிச்சல், அதிசாரத்திற்கு) 212
75. (ஊமத்தை ஓமச்) சூரணம் (கிருமிக்கு) 71
76. (ஏலாதி)ச் சூரணம், (பேதிக்கு) 43

77. (ஏலாதி) வடகம், (இரத்தக்கிராணி, உளைவிற்கு) 167

78. ஏலாதி மருந்து (ஜ்வரத்தின் மேல் கழிச்சல், வாந்தி, வயிற்று நோய்க்கு) 262

79. ஏலாதிச் சூரணம் (திரிகுணவாயு, மயக்கம், பித்தம், படபடப்பு, தாகம், நாவறட்சி முதலானவைகளுக்கு) 349

80. (ஓதியம் பட்டைத்) தைலம், இரத்தக்கிராணி, (இரத்த பித்தத்திற்கு) 102

81. (ஓதியம்) உருண்டை (கழிச்சலுக்கு) 204

82. (ஓம) வடை (வயிறு கழிச்சலுக்கு) 249

83. கங்காதரச் சூரணம் (அதிஸாரம், கிராணிக்கு) 98

84. (கஞ்சா) வடகம் (கிராணிக்கு உருண்டை) 120

85. (கஞ்சா) உருண்டை (சக்கை சக்கையாகப் போகும் கிராணிகளுக்கு) 112

86. கடுகரோகிணிச் சூரணம் (விரேசனத்திற்கு) 2

87. (கடுக்காய்க்) குடிநீர் (பேதிக்கு) 12

88. கடுரோகிணியாதி உருண்டை (பேதிக்கு) 39

89. கடுத்ரய சூரணம் (விரேசனத்திற்கு) 52

90. கடுக்காய்-சீயக்காய் கஷாயம், (மலசலக் கட்டிற்கு) 57

91. (கடுக்காய்ச்) சூரணம் (குடல்; கிராணி வாயுவுக்கு) 115

92. (கடுக்காய்) மருந்து (சுவாசகாசம், கிராணி, மூலம், பாண்டு, ஜ்வரம், குன்மம், அருசி, பீலிகை, சூலை, பீனஸம், சூசிகவாயு, அக்னிமந்தம், உளைவு, புளித் தேப்பம், உதரசல்லியப் பிரமேகம் முதலான நோய்களுக்கு) 141

93. கடுகாதி கிருதம் (கிராணி, கடுப்புகளுக்கு) 177

94. (கடுக்காய் மோர்க்) கஷாயம் (வயிறு கழிச்சலுக்கு) 209

95. கடுக்காயுருண்டை (வயிறு கடுப்பிற்கு, சீதரத்தத்திற்கு) 292

96. (கடுக்காய்ச்) சூரணம் (வயிறு கடுப்பிற்கு) 296

97. (கட்டுவாதி) மாத்திரை (வயிறு கழிச்சலும் வயிறு கழிச்சலுடன் கூடிய ஜ்வரத்திற்கும்) 188

98. (கட்டு வங்காதி)க் குளிகை (வயிறு கழிச்சலுக்கு) 214

99. கண்டங்கத்திரி நெய் (வெள்ளுடைப்பு, வாய் மூக்கினால் இரத்தம் விழுகிறதற்கு) 379

100. கதலிப்பஞ்சாங்க மாத்திரை (சலக்கழிச்சலுக்கு) 241

101. கத்தரி வடகம் (சலக்கழிச்சலுக்கு) 235

102. கந்தக பற்பம் (பேதி, வயிறுக் கடுப்பு. அதிஸாரம் கிராணிக்கு) 311
103. கந்தகச் சூரணம் (கிராணிக்கு) 72
104. கந்தகத் தைலம் (கிராணிக்கு) 89
105. கந்தகத் தைலம் (சந்நி, வாதக்கிராணி, சத்தி குன்மம், வாதகுன்மம், அஷ்டகுன்மம், வாயு ஜ்வரம், முதலானதற்கு) 91
106. (கபாட) உருண்டை (கிராணிகளுக்கு) 118
107. (கருவேலங் கொழுந்து) கல்கம் (வயிறு கடுப்பிற்கு) 277
108. (கருவேப்பிலைச்) சூரணம் (வாயுவினால், அதிசாரக் கழிச்சலுக்கு) 245
109. (கருவேலங் குச்சிக் கடுக்காய்க்) கஷாயம் பெரு வயிறுக்கு) 257
110. கல் சுண்ணாம்பு மருந்து (வயிறு கடுப்பு, கழிச்சலுக்கு) 275
111. (கழற்சிப் பருப்புச்) சூரணம் (பேதிக்கு) 48
112. (கள்ளிப்பால்) சூரணம் முதலியன (கிருமிகள் விழ) 63
113. கள்ளிப்பால் வடகம் (விரேசனத்திற்கு) 13
114. (கள்ளிப்பால்) குழம்பு (பேதிக்கு) 47
115. (கள்ளிப்பால் திப்பிலி) மாத்திரை (நாக்குப்பூச்சி விழ) 64
116. (கற்றாழை மருந்து) சத்தியின்மேல் விழூசி கண்டாலதற்கு) 364
117. கற்றாழம்சாறு எண்ணெய் (பேதிக்கு) 52
118. (காட்டுக் கருணைச்) சூரணம் (மூலக்கிராணிக்கு) 151
119. (காட்டு நன்னாரி வேர்) கஷாயமும் பூச்சு மருந்தும் (கழிச்சலுக்கு) 211
120. (காய்வேளை யாதிக்) கறுக்கு (வயிறு பொருமலுக்கு) 368
121. கிரகணீ குல கடாயம் 100
122. கிரகணீ கபாட மாத்திரை (கிராணிக் கழிச்சல் இரத்த பித்தக் கழிச்சலுக்கு) 103
123. (கிலு கிலுப்பைக்) கல்கம் (இரத்தக் கழிச்சலுக்கு) 219
124. (குக்குலொட்டியிலை) அடை (வயிறு கடுப்பு, இரத்தத்திற்கு) 305
125. (குடஜ) ரஸக்கிரியை (இரத்தக் கிராணிக்கு) 109
126. (குடஜாதி) சூரணம் (அதிஸாரம், கிராணிக்கு) 138
127. (குங்கிலிய) மருந்து (வாயு, வெள்ளுடைப்புக் கழிச்சல் முதலியவைகளுக்கு) 247

128. (குட்டி விளாக்) கஷாயம் (ஜ்வரத்தில் தாகம், வயிறு உப்பிசம், கழிச்சலுக்கு) 269
129. குறுவைக்களி, (சலக் கழிச்சலுக்கு) 226
130. கூவிளை வேராதிக் கடாயம் (தோஷவதிஸாரத்திற்கு) 337
131. (கையாந்தகரையாதி) உருண்டை (வயிறு கழிச்சலுக்கு) 210
132. (கொட்டைப்பாக்குக்) கஷாயம் (பேதிக்கு) 54
133. (கொத்தமல்லியாதிச்) சூரணம் (அதிஸாரக் கடுப்பிற்கு) 316
134. (கொத்தமல்லியாதிக்) கஷாயம் (இரத்த சீதக் கடுப்பிற்கு) 302
135. கொத்தமல்லியாதிக் குடிநீர் (இரத்த அதிஸாரத்திற்கு) 356
136. (கொத்தமல்லி விதைக்) கஷாயம் (கழிச்சல், வாந்தி, பித்தத்திற்கு) 249
137. (கோழி முட்டை) மருந்து (கழிச்சலுக்கு) 198
138. (கோரைக் கிழங்குப்) பிட்டு (இரத்தக் கடுப்பிற்கு) 276
139. கோமூத்ர அரீதகீ (விரேசனத்திற்கு) 52
140. கோடாசூழி மாத்திரை (சங்கரக் கிராணிக்கு) 107
141. (கோஷ்டாதி) மாத்திரை (பேதிக்கு) 48
142. (சகஸ்ர பேதிச்) சூரணம் (இரத்த பித்தத்திற்கு) 140
143. (சங்கம் வேர்க்) கல்கம் (கழிச்சலுக்கு) 199
144. சங்கம் வேர்ச் சூரணம், (சீதக் கழிச்சலுக்கு) 260
145. (சத்துலன் வேர்க்) கல்கம் (வயிறு கழிச்சலுக்கு) 209
146. (சத்திச் சாரணைக்) கடுகு (அன்னம் செரியாமை, வயிறு இரைச்சலுக்கு) 371
147. (சத்திச்சாறணையாதி) வடை (செரியாமல் கழிச்சலுக்கு) 372
148. சந்தனாதி கஷாயம் (பித்த அதிஸாரக் குறிகளுடன்) 343
149. சாதிப்பத்திரி உருண்டை (கிராணி, கடுப்பிற்கு) 160
150. (சாதிப்பத்திரி) உருண்டை (கிராணி, கழிச்சல், சகல வாயுவிற்கும்) 171
151. சாதிலிங்காதிச் சூரணம் அல்லது வெட்டுப் பெருமாள் பற்பம் (வயிறு கழிச்சலுக்கு) 186
152. சாதிக்காயாதிச் சூரணம் (ஸர்வ கிராணிக்கும்) 203
153. (சாதிலிங்காதி) சூரணம் (வயிறு கழிச்சலுக்கு) 253
154. (சாதீபலாதி) உருண்டை (சகல கிராணிகளுக்கும்) 105

155. (சாதிலிங்காதி) உருண்டை (வயிறு கழிச்சலுக்கு) 221

156. (சாதிக்கா) யுருண்டை (வயிறு கடுப்பிற்கு) 286

157. (சாதிக்கா) யுருண்டை (வயிறு கடுப்பிற்கு) வேறு 287

158. (சாதிப்பத்திரி மோர்க்) கஷாயம் (வயிறு கடுப்பு, பித்தக்கடுப்பு, மேகக் கடுப்பிற்கு) 291

159. சாதிலிங்க மாத்திரை (வயிறு கடுப்பிற்கு) 292

160. சாதிலிங்க மாத்திரை (சகல கிராணிக்கும்) 76

161. சாதிக்காய் மாத்திரை (வயிறு கடுப்பிற்கு) 293

162. சாதிக்காய் உருண்டை (வயிறு கடுப்பினால் இரத்தம் கழிகிறதற்கு) 305

163. சாதிப்பத்திரிக் குடிநீர் (ஜ்வராதிஸாரத்திற்கு) 338

164. சாதிக்காய் மாத்திரை (கடுப்பு, பொருமல், அதிசாரம், கிராணி, கழிச்சலுக்கு) 353

165. (சாதீ பலாதி) வடகம் (வயிறு களகளப்பு, கிராணி, அதிசாரம், கழிச்சல், வாயு, மூலவாயு, சோறு சோறாய்க்கழிதல் முதலியவைகளுக்கு) 266

166. (சாதீ பலாதி) சூரணம் (கிராணி, வெள்ளுடைப் பாய்க் கழிச்சலுக்கு) 174

167. (சாதீ பலாதி) கஷாயம் (பித்தக்கிராணி, கபக் கிராணி, வாதக்கிராணி, பழங்கிராணி (அதிசாரத்திற்கு) 72

168. (சாதீ பலாதி) உருண்டை (ரத்தக்கிராணி, ஈன்று கிராணி, முறுக்கு கிராணி முதலான சகல கிராணிகளுக்கும்) 81

169. (சாதீ பலாதி) உருண்டை (சகல கிராணிகளுக்கும்) 105

170. (சாறடை) வெண்ணெய் (விரேசனத்திற்கு) 7

171. (சித்திர மூலத்) தைலம் (வயிற்றிரைச்சல், வயிற்று வலி, சங்கர கிராணிக்கு) 68

172. (சிலந்திக்கூடு) தாயத்து (கழிச்சலுக்கு) 250

173. (சிவப்புக் குன்றித்தூள்) பஞ்சாமிர்தம் (வயிறு கழிச்சலுக்கு) 217

174. (சிவதைச்) சூரணம் (பேதிக்கு) 26

175. (சிவதைச்) சூரணம் (வயிறு கழிய, வாயுவிற்கு) 55

176. சித்தாமுட்டிவேர்ச் சூரணம் (அதிஸாரத்திற்கு) 317

177. சித்தேல உருண்டை (இரத்தக் கழிச்சலுக்கு) 306

178. (சித்திரமூல) தைலம் (வயிற்று இரைச்சல், வயிற்று வலி, சங்கரக்கிராணிக்கு) 68

179. சிந்தாமணி (பேதிக்கு) 23

180. சிறு குறட்டைச் சூரணம் (குளிர்ந்த நீர் பேதி) 40
181. சிறு கறுக்காயிலைக் களி (வயிறு கடுப்பாய், வெள் ளுடைப்பாய்க் கழிகிறதற்கு) 308
182. (சிறு அம்மான் பச்சரிசியாதி) க் குடி நீர் அதிஸாரத் திற்கு) 355
183. (ஸ்ரீதேவிச் செங்கழுநீர்) கட்டு மருந்து (உளைப்பிற்கு) 300
184. சீந்திற்கொடிக் (ஜ்வராதிஸாரத்திற்கு) 338
185. (சீந்திற்றண்டுக்) கடாயம் (ஜன்னி, ஜ்வரக் கழிச் சலுக்கு) 357
186. சீரகாதி மருந்து (அதிஸாரம், கிராணி, விழுசிக்கு) 354
187. (சீரகாதிக்) கல்கம் (விழுசிக்கு) 362
188. (சீரக மோர்க்) கடாயம் (கழிச்சலுக்கு) 197
189. (சீரகாதித்) தூள் (வயிறு கடுப்பு, கழிச்சலுக்கு) 204
190. (சீரகக்) களி (வயிறு கடுப்பு கழிச்சலுக்கு) 282
191. (சீரக) மருந்து (வயிறு கழிச்சலுக்கு) 215
192. (சீரகாதி) உருண்டை (கழிச்சலுடன் ஜ்வரத்திற்கு) 263
193. (சீரகாதி) சூரணம் (கடுப்புக் கழிச்சலுக்கு) 265
194. சீரகக் கற்கம் (வயிறு கடுப்பிற்கு) 288
195. சுக விரேசனம் 6
196. சுகபேதிக்கு உருண்டை 16
197. சுக்காதிகிருதம் (இரத்த கிராணி, மூலக் கிராணிக்கு) 147
198. சுக்காதி கிருதம் (கிராணி வாயுவுக்கு) 176
199. சுக்கு மருந்து (வயிறு கழிச்சலுக்கு) 244
200. சுகபேதித் தைலம் 28
201. (சுக்குக்) கல்கம் (சீதம், இரத்தக்கடுப்பு, வயிற்று வலிக்கு) 58
202. (சுக்காதிக்) கடாயம் (அதிஸாரம், கிராணிக்கு) 360
203. (சுக்காதிக்) கடுகு (உதர தோஷத்திற்கு) 369
204. சுக்காதி மருந்து (வயிறுகடுப்பிற்கு) 289
205. (சுக்கு) வடை (வயிறு கடுப்பு, கழிச்சலுக்கு) 297
206. சுக்காதி மருந்து (வயிறுகடுப்பு, வெள்ளுடைப்பிற்கு) 311
207. (சுக்காதி) நெய் (அதிஸாரம், கிராணி, சோபத்திற்கு) 329
208. சுக்காதி கிருதம் (வயிற்றுவலி, சோகை, பாண்டு, அதிஸாரம், முறுக்குவலி, முதலியவைகளுக்கு) 330
209. (சுக்காதிக்) குடிநீர் (பித்தவதிஸாரத்திற்கு) 339
210. (சுக்காதிக்) கடாயம் (பித்தவதிஸார ஜ்வரத்திற்கு) 343
211. (சுக்குக்) கல்கம் (சலக்கழிச்சல், மலக்கழிச்சலுக்கு) 208

212. (சுண்ட்யாதிச்) சூரணம் (பேதிக்கு) 12
213. சுண்ட்யாதிக் கழுநீர் (பேதிக்கு) 32
214. சுண்ட்யாதி உருண்டை (சகல கிராணிகளுக்கும்) 80
215. (சுண்ட்யாதி) கிருதம் (உதரவியாதி, சூலை, கிரா ணிக்கு) 124
216. (சுண்ட்யாதி) கிருதம் (கிராணி, ச்வாஸகாஸம், குன் மத்திற்கு) 153
217. (சுண்ட்யாதி) தைலம் (பழங்கிராணி, 101 தடவை கழிகின்றதற்கும்) 159
218. (சுண்ட்யாதி) சூரணம் (வாயு, கிராணிக்கு) 171
219. (சுண்ட்யாதி) லேகியம் (சோபக்கிராணிக்கு) 185
220. (சுண்ட்யாதிக்)குடிநீர் (கழிச்சலுக்கு) 208
221. (சூளுவைக்) கல்கம் (வயிறு கழிச்சலுக்கு) 187
222. (செங்கல் தூள்) மருந்து (வயிறு கடுப்பு, கழிச் சலுக்கு) 298
223. (செங்கழுநீர்க்) கல்கம் (வயிறு கடுப்பிற்கு) 301
224. (செந்நாயுருவி) மருந்து (வயிறு கழிச்சலுக்கு) 225
225. (செருப்படி) எண்ணெய் (பேதிக்கு) 31
226. (சேவல் எச்ச இளநீர்க்) கஷாயம் முதலியன மல சலக்கட்டுவிட 57
227. (சைந்தவாதி) சூரணம் (வயிறு கழிச்சலுக்கு) 275
228. (சைந்தவாதி) சூரணம் (கிராணி, குன்மம், வயிறு கடுப்பு, சோபம், சூலை, அதிஸாரத்திற்கு) 144
229. (சைந்தவாதி) கிருதம் (தொந்தக் கிராணி, மூலக் கிராணிக்கு) 147
230. (சைந்தவாதிச்) சூரணம் (அதிஸாரம், அசீர்ண பேதிக்கு) 351
231. சோதித் தைலம் (குன்மம், குஷ்டம், கிராணி, பித் தம் முதலானதற்கு) 96
232. தண்ணீர் விட்டான் கிழங்கு நெய் (வயிற்றி லிருந்தோ ஆண் குறியிலிந்தோ இரத்தம் விழு கிறதற்கு) 382
233. தயிர்க் கடுகு (சகல கிராணிக்கும்) 74
234. (தயிர்ச் சுண்டி) எண்ணெய் (கிராணிக்கும், அதி ஸாரத்திற்கும்) 70
235. (தாடிமாதி) உருண்டை (கிராணிக்கு) 119
236. (தாடிமாதி) உருண்டை (சர்வ கிராணிக்கு) 137

237. தாடிமாதி வடகம் (கிராணியினால் சீதமும், இரத்த
முங் கழிகிறதற்கு மருந்து) 181
238. (தாடிமாதி) சூரணம் (கிராணிக் கழிச்சல், கிராணிக்
கழிச்சலுடன் கூடிய ஜ்வரம் முதலியவை
களுக்கு) 191
239. (தாடிமாதி) சூரணம் (கிராணி அதிஸாரத்திற்கு) 201
240. (தாடிமாதி) உருண்டை (வயிறு கடுப்பிற்கு) 283
241. (தாடிமாதி) உருண்டை (வைசூரியினால் வந்த கடுப்
பிற்கு) 313
242. (தாடிமாதி) உருண்டை (வைசூரியினால் வந்த கடுப்
பிற்கு) 314
243. தாடிமாதி உருண்டை (இரத்த மூலம், கிராணி,
பாண்டு, பெரும்பாடு, அக்கினிமந்தம், சூடு,
மேகச்சூலை, பயித்தியத்திற்கு) 327
244. (தாடிமாதி) கஷாயம் (சேத்ம ஜ்வரத்தின்மேல்
பேதிக்கு) 352
245. (தாளக) உருண்டை (அன்னம் செறியாமலுக்கும்
வயிற்றுப் பொருமலுக்கும்) 376
246. திப்பிலி மூலாதிச் சூரணம் (சுகபேதிக்கு) 19
247. (திப்பில் யாதி)ச் சூரணம் (இரத்தக்கிராணிக்கு) 166
248. திரிகடாதிச் சூரணம் (வேறு) 26
249. (திரிகடு) லேகியம் (கிராணி, கடுப்பிற்கும், சூட்டுக்
கும்) 161
250. திருகடுகாதிச் சூரணம் (பற்பல கிராணிகள்தீர) 172
251. திருகுக்கள்ளிச் சூரணம் (பேதிக்கு) 38
252. (துத்தாதி) அஞ்சனம் (செரியாமை, வயிற்றுக்
கழிச்சலுக்கும், சாகிறது பிழைக்கிறதற்கும்) 250
253. துவளையும் குளிசமும் (வயிறு கடுப்பிற்கு) 291
254. (துளசிக்) கல்கம் (கழிச்சலுக்கு) 206
255. (தூதுவேளைச்) சாதம் (திருமேனிப்புழுவிழ) 66
256. தெசசாராக்கினி (சகல கிராணிகளுக்கும்) 92
257. (தென்னம்பாளைச்சாறு) மருந்து (வழும்புதிரத்
திற்கு) 370
258. (தென்னம் வேர்ப்) பால் (வயிறு இரைச்சலுக்கு) 367
259. (தென்னம்பாளைச்) சூரணம் (சலக்கழிச்சலுக்கு) 236
260. (தேங்காய் வெங்காய) எண்ணெய் (சலமலக்கட்டு
விட) 62
261. தேத்தான் வெண்ணெய் (வயிறு கழிச்சலுக்கு) 217

262. (நறுவளிப்பட்டைக் கஷாயம் (அதிஸாரத்திற்கு) 320
263. (நறுந்தாளியிலைக்) களி (வயிறு கடுப்பு, வெள்ளுடைப்பிற்கு) 310
264. (நறுந்தாளி) வெண்ணெய் (வயிற்றில் கடகடப்பை, குடல் வாதம், இசிவிற்கு) 251
265. (நறுவிலி) எண்ணெய் (இரத்தக் கழிச்சலுக்கு) 220
266. நன்னாரி கோரைக் கஷாயம் (அதிஸாரத்தின் கழிச்சலுக்கு) 272
267. நாகபற்பம் (கிராணி முதலானதற்கு) 131
268. (நாயுருவியுப்புக்) காடி (மலசலக் கட்டுகளுக்கு) 63
269. (நாயுருவி) யாதி உருண்டை (வாயுவினால், வயிறு பொருமிக் கழிச்சலுக்கு) 246
270. நாரத்தை வளையம் (கிராணிக்கு) 126
271. நிர்க்குண்டிக் கஷாயம் (ஆபத்திற்கு) 56
272. (நிலக்குமிழ்) சீத கஷாயம் (இரத்தம் விழுகிறதற்கு) 381
273. (நீர்ப்பூலாவேர்க்) கல்கம் (இரத்தக்கடுப்பு, முதலான வயிறு நோய்க்கு) 307
274. நீலியாதிக் கடாயம் (அன்னஞ்செரியாமை, வயிறு இரைச்சல், பொருமல், ஜ்வரம், அசீர்ணத்திற்கு) 368
275. நுணாக்காய்க் கடுகு (கிராணிக்கு) 110
276. (நெரிஞ்சிக்காய்க்) கல்கம் (வயிற்றிலிருக்கும் புழு விழ) 66
277. நெல்லிப்பருப்பாதிக் கஷாயம் (பித்த அதிஸார ஜ்வரத்திற்கு) 342
278. (நெல்லிமுள்ளியாதிச்) சூரணம் (கிராணி, இரத்தக் கடுப்பு, இரத்தக் கழிச்சலுக்கு மருந்து) 225
279. (நெல்லிமுள்ளி) மருந்து (வயிறு கடுப்பிற்கு) 289
280. பலகரை பற்பம் (கிராணிக்கு) 99
281. பாக்கெண்ணெய் (விரேசனத்திற்கு) 55
282. (பால் நல்லெண்ணெய்) மருந்து (இரத்த கிராணிக்கு) 165
283. பித்தளை பற்பம் (குன்மம், மூலம், கிராணி, பாண்டு, உதிரக்கடுப்பு, வாய் நீரூறல், குடல் வாயு, பார்சவாயு, ஆனந்த வாயு முதலியவைகளுக்கு) 145
284. (பிராய் வேராதிச்) சூரணம் (வயிற்றிற் கிருமி விழ) 68
285. (பிரண்டைச்) சூரணம் (கிராணிக்கு) 158
286. பிரண்டைச் சூரணம் (கிராணிகள், குன்மம், வாயுவிற்கு) 170

287. (பிரண்டை) அடை (மூலக்கிராணிக்கு) 150
288. பிரமிய வழுக்கைக் கஷாயம் (விரேசனத்திற்கு) 25
289. பிலாவடை (கிராணிக்கு) 113
290. புட்பவிரேசனம் 16
291. புட்பவிரேசனம் (வேறு) 17
292. (புரசம் விதைக்) கல்கம் (புழுவிழ) 64
293. புளிச்சைக்கொடிக் கல்கம் (இரத்தக் கழிச்சலுக்கு 220
294. புளியாரை நெய் (கிராணிகளுக்கு) 85
295. புளியாரை நெய் (அந்தரக் கிராணிகளுக்கு) 179
296. (புளிநரளையாதிக்) கல்கம் (வயிறுக் கடுப்பிற்கு) 294
297. (பூண்டுக்) களி (பெரு வயிறுக்கு) 254
298. (பூண்டு) எண்ணெய் முதலியவை, (மலசலக் கட்டு விட) 59
299. (பெருமரப்பட்டையாதிச்) சூரணம் (கிராணிக்கு) 78
300. (பெருமரப்பட்டைப்) பிட்டு (கிராணிக்கு) 114
301. (பெருமரப்பட்டை) மருந்து (கிராணி, வெள்ளு டைப்புக் கழிச்சலுக்கு) 158
302. பெருங்காயச் சூரணம் (மகோதரம், குன்மவாயு, விழூசிக்கு) 365
303. பேதிகஜாங்குசம் (விரேசனத்திற்கு) 21
304. (பேதி ஜ்வராங்குசம்) (பேதிக்கு) 34
305. பேய்க்கொமட்டி யுப்பு (விரேசனத்திற்கு) 25
306. (பேய்ப்பாச்சோத்தி) மருந்து (மூலக் கிராணிக்கு வலம் விடாத பேர்களுக்கு) 146
307. பேய்ப் பீர்க்கம் விதைப் பூச்சு (சுகவிரேசனம்) 41
308. (பேய்ப்பாச் சோத்தி) எண்ணெய் (வயிறு கழிச்ச லுக்கு) 308
309. (பேராமுட்டிப் புண்ணாக்குச்) சூரணம் (சலக்கழிச் சலுக்கு) 234
310. மணிமந்தாதிச் சூரணம் (விரேசனத்திற்கு) 49
311. மரிசாதி உருண்டை (கிராணி, வாயுவிற்கு) 169
312. (மதுபுஷ்பாதி உருண்டை (பேதிக்கு) 24
313. (மாசீபலாதி) உருண்டை (கிராணி, சூசிகவாயு, பாண்டு, மூலம், ரத்தகாசம் முதலியவைகளுக்கு) 132
314. (மாதளையிலைத்) தயிர் (உஷ்ணவாயு. வாயு, வயி றிரைந்து கழிகிறதற்கு மருந்து) 258
315. (மாதளைப்) புட்டவியல் (வயிறு கடுப்பிற்கு) 274

316. மாதளை மொட்டாதிக் கடாயம் (அதிஸாரத்திற்கு) 335
317. மாதுலுங்காதிச் சூரணம் (அதிஸாரத்திற்கு) 346
318. (மாம்பட்டைக்) கல்கம் (இரத்தக் கழிச்சலுக்கு) 206
319. (மாம்பிசின்) மருந்து (வயிறு கடுப்பிற்கு) 290
320. மாவீர்க்காதிக் கடாயம் (பித்த அதிஸாரத்திற்கு) 341
321. (மான் கொம்பு) மருந்து (பதினெட்டுக் கிராணிக்கும்) 151
322. (மதிபாகல் சாறு) மருந்து (விரேசனத்திற்கு) 51
323. (மிளகெண்) ணெய் (இரத்தம் விழுதல் நிற்க) 379
324. (மிளகுப்) பால் (வாயுக் கழிச்சலுக்கு) 262
325. (மிளகு) மருந்து (வயிறு கடுப்பிற்கு) 273
326. (மிளகுச்) சாதம் (வயிறு கடுப்பிற்கு) 280
327. (மிளகுச்) சாதம் (வயிறு கடுப்பிற்கு) 286
328. (மிளகுச்) சூரணம் (கிராணிக் கடுப்பிற்கு) 285
329. (மீன்) மருந்து (சூதிகா கிராணிக்கு) 134
330. (முடக்கித்தான்) கடுகுலேகியம் (சூதிகவாயு கிராணிக்கு) 163
331. (முடக்கித்தான்) எண்ணெய் (பேதிக்கு) 14
332. முத்தக்காசுக் கடாயம் (அதிஸாரத்திற்கு) 334
333. (முருங்கையீர்க்குக்) கஷாயம் (மலசலக்கட்டிற்கு) 60
334. (முருங்கையிலை) வேது (முதலியன) (மலசலக்கட்டுவிட) 61
335. (முருங்கையீர்க்குக்) கஷாயம் (செரியாமல், சோறு சோறாய்ப் போதல், வாயு, இரைச்சல், பொருமல், கழிச்சலுக்கு) 242
336. முருங்கைப்பட்டைக் குடிநீர் (அதிஸாரத்தின் மேல் வயிற்றுவலிக்குக் கஷாயம்) 358
337. (முருங்கைப்பட்டைக்) கடாயம் (படுவன்மேல் விழுசிக்கு) 366
338. (முஸ்தாதிச்) சூரணம் (வாத, பித்த, கபக் கிராணிகள், ஆமக்கிராணி முதலானவைகளுக்கு) 73
339. (முஸ்தாதிச்) சூரணம் (பித்த அதிஸாரத்திற்கு) 340
340. (முஸ்தாதிக்) கடாயம் (இரத்தபித்தங்களுக்கு) 139
341. (முஸ்தாதிக்) கஷாயம் (பித்த அதிஸாரத்திற்கு) 346
342. (முள்ளிலவு கஷாயமும் சூரணமும், வயிறுகடுப்பினால் (இரத்தமும், சீதமுமாகவும், வெள்ளுடைப்பாகவும் கழிவதற்கு) 269

343. (மூக்கரட்டைக்) கல்கம் விழுசிக்குமேல் ஜ்வரத்திற்கு) 362
344. மேகநாதகுளிகை (விரேசனத்திற்கு) 32
345. ரசோனபிஷ்டி (சூதிகாகிராணி, அக்னிமந்தம், (வாயுக்கு) 135
346. வங்கபற்பமும் அதற்கு அனுமானச்சூரணமும் (கிராணிக்கு) 117
347. வங்கபற்பம் (நீர்க்கழிச்சல், நீரிழிவுக்கு) 232
348. (வசு வாசிச்) சூரணம். (இரத்தக்கழிச்சலுக்கு) 224
349. வடவானல மாத்திரை (இரத்ததிஸாரம், பித்த சிலேத்ம அதிஸாரம், அசீர்ணக்கிராணி, மாந்தக் கிராணி, மூலக்கிராணி முதலானவைகளுக்கு) 86
350. வத்ஸகாதிச் சூரணம் (அதிஸாரம், இரத்ததிஸாரம், ஆமாதிஸாரத்திற்கு) 326
351. (வளையலுப்புக்) கரைசல் முதலியன 62
352, வாகையிலைச்சாறெண்ணெய் (சீதக்கழிச்சலுக்கு) 259
353. வாதமடக்கி மருந்து (வயிற்றில், வாயுவினால், குன்மத்தினால், வயிறுகடுப்பு, வயிறுவலி, கழிச்சலுக்கு) 298
354. வாழைப்பூப் புட்டவியல் (இரத்தக்கழிச்சல், மலக் கழிச்சல், அன்னமுண்ணாமல் தண்ணீர்தாகம் நெஞ்சடைப்பிற்கு) 319
355. (வாழைப்பழக்) கடுகு (சலப்பிலவை, சலக்கழிச் சல், நீர் பிணநாற்றம், ஈயெறும்பு மொய்த்தல், சுண்ணாம்புநீர் போலிறங்குதல் முதலியவைகளுக்கு 228
356. (வாளஅழிஞ்சில்) மருந்து (முகர) 8
357. வாள வெண்ணெய் (விரேசனத்திற்கு) 1
358. வாள வெண்ணெய் (பேதிக்கு) 7
359. (வாள அரிதாரக்) குளிகை (விரேசனத்திற்கு) 45
360. (வாள ரஸாதி) எண்ணெய் (நாபியிற்றடவ) 4
361. (வாள ரஸ) சூரணம் (விரேசனத்திற்கு) 22
362. (வாள ரஸாதி) மாத்திரை (குளிர்ந்தநீரில் விரேசனம்) 42
363. (வாள ரஸக்) குளிகை (விரேசனத்திற்கு) 44
364. (வாள கடுகுரோகிணி) மாத்திரை (பேதிக்கு) 14
365. (வாள நாபி) மாத்திரை (பேதிக்கு) 20

366. (வாள லிங்க) மாத்திரை (பேதிக்கு) 42
367. (வாள (சுக்காதி) (பேதி உருண்டை) 46
368. (வாள) மாத்திரை (விரேசனத்திற்கு) 10
369. (வாள) மாத்திரை (பேதிக்கு) 15
370. (வாள) மாத்திரை (பேதிக்கு) 18
371. ,, ,, ,, (வேறு) 18
372. வாள மாத்திரை (பேதிக்கு) 37
373. வாள மருந்து (பேதிக்கு) 30
374. (விடத்தேரிப்) பிட்டு (கடுப்பு, கழிச்சலுக்கு) 264
375. (விடத்தேரிலைக்) கல்கம் (வயிறு களகளப்பு, இரத்தம் சீதத்திற்கு) 303
376. (விடத்தேரிலைச்) சூரணம் (வயிறுகழிச்சலுக்கும் வெள்ளுடைப்புக் கழிச்சலுக்கும்) 310
377. விடத்தேரி எண்ணெய் (கழிச்சலுக்கு) 105
378. வில்வாதி கஷாயம் (விஷூசிக்கு) 363
379. (வில்வாதிக்) குழம்பு (பெருவயிறு, கிராணி, சுவாச காசம், மூக்குநீர்ப்பாய்ச்சல். சூலை, அதிஸாரம், அசீர்ணம் முதலியவைகளுக்கு) 122
380. (வில்வாதி) கஷாயம் (ஜ்வராதிஸாரத்திற்கு) 165
381. (வில்வப் பழச்சதை) மருந்து (கழிச்சலுக்கு) 224
382. (வில்வ அத்திப்பிஞ்சு) கஷாயம் (அதிஸாரத்தால். கிராணியால், மலம் பெருகி, வாயு தடுக்காய். நறு, கண்குழிந்து, பல் உடல் தளர்ந்து, கைகால் குளிர்ந்ததாக ஆன சோபக்கழிச்சலுக்கு) 271
383. விரேசன உருண்டை 8
384. விரேசனத்தைலம் 27
385. விரேசன லேகியம் (பேதிக்கு) 29
386. (வெந்தய) கஷாயம் (வாயுவினால், வெள்ளுடைப் பாய், அரைத்த சோறுபோல் வயிறு கழிகிற தற்கு) 244
387. வெந்தய எண்ணெய் (பொருமல், செரியாமை முதலியவைகளுக்கு) 375
388. (வெந்தயக்) கறுக்கு (தாகம், ஜ்வரம், வயிறுப்பிசம், கழிச்சல் இவைகளுக்கு) 268
389. (வெற்றிலைக் காம்பு) மருந்து (கர்ப்பப்புழு விழ) 65
390. (வெள்ளைக் காக்கணக்) கல்கம் (பேதிக்கு) 46

391. (வெள்வேலம் பட்டைக்) கல்கம் (வயிறு கடுப்பிற்கு) 281

292. (வெள்ளாட்டுப்) பால் மருந்து (வயிறு கடுப்பிற்கு) 294

393. (வேப்பம் பட்டை) மருந்து (கிராணிக் கழிச்சல், வயிறு நோய்க்கு) 153

394. வேர்க்கொம்பு நெய் (சகலவித அதிஸாரத்திற்கு) 335

395. வேலம்பட்டை மருந்து (கிராணிக்கு) 114

396. வேளைக்கல்கம் (இரத்தம் விழுகிறதற்கும், வயிற்றின் வியாதிகளுக்கும்) 376

397. ஜம்பு வல்கல கிருதம் (ஸ்திரீகளுக்கு ஏற்படும் பிரதரம், அஸ்திஸ்ராவம், ருதுசூலை, சுக்கில மேகம், மலட்டிற்கு) 155

398. ஜம்பு கிருதம் (எலும்புருக்கி, கிராணிகள், பெரும்பாடு, இரத்தபித்தம், அதிஸாரம், வெள்ளுடைப்பிற்கு) 332


T. 9102